# பண்டைத் தமிழர் தொழில்கள்

யாதும் ஊரே யாவரும் கேளிர்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

டாக்டர் வி. சி. சசிவல்லி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

# பண்டைத் தமிழர் தொழில்கள்

டாக்டர் வி. சி. சசிவல்லி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
டி. டி. டி. ஐ. அஞ்சல், தரமணி, சென்னை-600 113.

# BIBLIOGRAPHICAL DATA


| | |
|---|---|
| Title of the Book | Pantait Tamilar Tolilkal |
| Author | Dr. V.C. Sasivalli<br>Senior Fellow<br>International Institute of<br>Tamil Studies<br>Madras-600 113 |
| Publisher | International Institute of<br>Tamil Studies<br>T. T. T. I. Taramani<br>Madras-600 113 |
| Publication Number | 145 |
| Language | Tamil |
| Edition | First |
| Date of Publication | Nov. 1989 |
| Paper used | 16 Kg. D/Dy Cream Wove. |
| Size of the Book | 14×21 cms. |
| Printing type used | 10 pt. Tamil |
| Number of pages | 328+Viii |
| Number of Copies | 1200 |
| Price | Rs. 45 |
| Printers | Niraimozhi Achagam<br>124, Velachery Salai,<br>Madras-600 015. |
| Binding | Card Board |
| Subject | Vocations of Ancient Tamils |

டாக்டர் சிலம்பொலி சு. செல்லப்பன்
இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை - 600 113.

# பதிப்புரை

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் தமிழர் தொடர்பாக இது வரை பலநூல்களை வெளியிட்டுள்ளது. தமிழர் ஆடைகள், தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், தமிழர் கண்ட மனம், தமிழர் உணவு, தமிழர் எண்ணங்கள் போன்றவை குறிப்பிடத் தக்கன. இப்போது வருகின்ற நூல் பண்டைத் தமிழர் தொழில்கள் பற்றிய நூலாக அமைகிறது. ஏற்கனவே பழந்தமிழர் தொழில்கள் பற்றிச் சில கட்டுரைகள் வந்துள்ளன. தனி நூலாக இதுவரை வரவில்லை. சங்க கால நூல்களின் துணைகொண்டு பண்டைத் தமிழர் செய்த தொழில்களை இந்நூல் விவரிக்கின்றது.

இந்நிறுவனச் செயல்கள் அனைத்திற்கும் ஆக்கமும், ஊக்கமும் தருகின்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகனார் அவர்கட்கு எங்கள் நன்றி என்றும் உரித்தாகுக.

இந்நூலினைச் சிறப்பாக அச்சிட்டுத் தந்த 'நிறைமொழி' அச்சக உரிமையாளருக்கு எங்கள் நன்றி.

சென்னை
11-10-1989

அன்புள்ள,
சு. செல்லப்பன்

# முன்னுரை

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல். (குறள். 505)

பண்டைக் காலத்து நானில இயல்புகளும், மக்கள் ஒழுகலாறும் அரசியல், வாணிகம், உழவு முதலிய தொழிற்றுறை இயல்புகளும், மக்களின் வாழ்க்கைப் பண்பாடும், அவர்கள் கையாண்ட கருவி களின் இயல்பும் பிறவும் அறிதற்குச் சங்க காலப் பழந்தமிழ் நூல களான பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் நல்ல சான்றுகளைத் தம்பாற் பொதிந்துகொண்டுள்ளன. இவற்றை ஆதாரமாகக் கொண்டு பண்டைத் தமிழரின் அரசியல், சமுதாய வாழ்வியலைப் பற்றிய பல அரிய நூல்கள் அறிஞர் பலரால் எழுதப்பட்டுள்ளன. எனினும் வாழ்வியல் சிறக்க அடிப்படைக் காரணமாய் விளங்கும் தொழில்கள் பற்றிய எண்ணமே இங்கு ஒரு நூலாக எழுந்தது. மக்கள் வாழ்வு சிறக்கப் பொருள் வேண்டும். பொருள் பெருகத் தொழில் சிறக்க வேண்டும். சங்ககாலப் பொருளாதாரம் பெரும்பா லும் தன்னிறைவுடையதாய்க் காணப்படுகிறது. மக்கள் தொழில் முயற்சி உடையவராயும், செல்வம் ஈட்டி நல்வாழ்க்கை வாழ்தலில் நம்பிக்கை உடையவராயும் இருந்தனர்.

'வினையே ஆடவர்க்கு உயிரே' எனவரும் குறுந்தொகை பாடல் இவ்வுலகியல் நடத்தற்கு இன்றியமையாதது தொழில் நலனே ஆதலின், ஒவ்வோர் ஆடவனும் அத் தொழிற்றுறையை உயிராகப் போற்றி ஒழுக வேண்டும் என்று ஆடவர் கடமையை அழகாக உணர்த்துகின்றது.

இதுவல்லாமல் 'உள்ளது சிதைப்போர் உளரெனப் படார்' என்று மற்றொரு குறுந்தொகைப் பாடல் கூறுகிறது. மக்கள் தம் முன்னோர் ஈட்டிய செல்வம் உடையவராய் இருந்தாலும் அச் செல்வத்தை முதலாகக் கொண்டு தொழில் செய்து, பொருளீட்டிச் செலவு செய்வர். அவர்களே 'உளர்' எனக் கருதப்பட்டனர். இதனின்றும் பழந்தமிழர் ஒவ்வொருவரும் தத்தம் தகுதிக்கு ஏற்ற வாறு தொழிலில் ஈடுபட்டனர் என்பது பெறப்படும். உழைப்பு

என்பது ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது என்பதே இவற்றின் அடிப்படைக் கருத்தாகும்.

இன்றுபோல் அன்றும் செல்வந்தரும், வறியவரும், இவர்களுக்கு இடைப்பட்ட நிலையில் உள்ளவர்களும் இருந்தனர். பழந்தமிழ்ச் சமுதாயத்தில் பெரும்பாலோர் உழவர்கள், கைத்தொழில் செய்வோர், வேட்டுவர், இடையர், மீனவர், வணிகர், அரசியல்பணி செய்பவர்களாக இருந்தனர். கூலிப்படையினர், ஆறலை கள்வர் போன்றோர் சமூகத்தின் பிற்பகுதியினராக இருந்தனர். ஒரு நாட்டின் வெவ்வேறு நிலப்பகுதிகளில் வாழ்ந்த வெவ்வேறு பிரிவினரது உணவு, உடை, தொழில், பழக்க வழக்கங்கள், பெயர்கள் ஆகியவை சூழ்நிலையால் வேறுபட்டன.

பழந்தமிழ்ச் சமுதாயத்தின் பொருளாதார அளவுகோலின் செல்வக்கோடியில் இருந்தவன் அரசன். அரசனுக்கு அவன் அரசாண்ட நிலப்பரப்பு உடைமை. அளவு கோலின் மறுகோடியில் யாதொரு உடைமையும் பெற்றிராத பாணர், கூத்தர் போன்ற எளியோர் வாழ்ந்தனர். இவ்விரு முனைகளுக்கும் இடையே பொருளாதாரச் சீர்மையின் பல்வேறு நிலைகளிலிருந்த பல தொழில் திறத்தோர் இருந்தனர். என்றாலும் இவர்கள் அனைவரும் கலந்து வாழ்ந்த சமுதாயத்தின் பொருளாதாரநிலை சிறப்புற விளங்க உழவும் வணிகமுமாகிய இருதொழில்களும் கண்ணேபோல் போற்றப்பட்டன. தமிழ்நாட்டின் இயற்கைச் செல்வங்களான கருமுத்தும் (மிளகு) வெண்முத்தும், சில வினைத் திறம் மிளிரும் கைவினைப் பொருள்களும் வெளிநாட்டு வாணிகம் செழிக்க வழிகோலின. அதனால் கப்பல் கட்டுதல், துறைமுகம் அமைத்தல், பண்டசாலை நிறுவுதல் போன்ற செயற்பாடுகளும் வெளிநாட்டு வாணிகத்தை நிலைநாட்ட வளர்ந்தன.

பண்டைக் காலத்தில் வழக்கிலிருந்த தொழில்களுள் பெரும்பாலானவை கைத்தொழில்களேயாவன. பஞ்சை நூலாக்கித் துணிநெய்தல், இரும்பை உருக்கிக் கருவிகள் செய்தல் போன்றவை இவற்றிலடங்கும். இவை பெருமளவு மனித முயற்சிகளாகவே இருந்தன. இவற்றிற்குப் பயன்பட்ட கருவிகளும் எளிய அமைப்பினை உடையவை. ஒரு தொழில் செய்பவனே தான் செய்யும் தொழிலுக்கு உரிமை உடையவனாகவும் இருந்தான். அவரவர் வாழ்ந்த நிலத்திற்கு ஏற்றவகையில் அவர்களது தொழிலை மேற்கொண்டனர். இவற்றால் அக்காலத்தில் தொழில் செய்வதில் கடும் உழைப்பு, பொறுப்புணர்ச்சி, சுதந்திர மனப்பான்மை,

ஆர்வம், தேவை இருந்தமையால் தொழில்கள் நேர்மையுடன் நேர்த்தியாகவும் செய்யப்பட்டன.

உழவு, வாணிகம், கைத்தொழில்கள் மலிந்திருந்ததோடு பண்டைத் தமிழரால் நுண்கலைகளும் போற்றப்பட்டன. அழகுக் கலையும் தொழிலும் ஒன்றோடொன்று இணைந்து இயங்கக் கூடியவை. அழகுக் கலையில் தொழிலின் சாயல் இல்லை என்றோ, திறமையாகக் கையாள்கின்ற தொழிலில் அழகு இல்லை என்றோ கூறிவிட முடியாது. தச்சன் ஒரு தொழிலாளனே என்றாலும் சிறந்த கலைஞனும் ஆவான். இக் கூற்றினைப் புறநானூற்றுப் பாடலொன்று தெளிவுபடுத்தும்.

**.........வைகல்**
**எண்தேர் செய்யும் தச்சன்**
**திங்கள் வலித்த காலன் னோனே**

என்ற பகுதியினால் ஒருநாளில் எட்டுத் தேர்களைச் செய்யக்கூடிய தச்சன் ஒரு மாதம் முயன்று மிகுந்த கவனத்துடன் ஒரு தேர்க் காலை உருவாக்கினான் என்பது பெறப்படுகின்றது. தச்சனது இயல்பான தொழிற்றிறம் முற்பகுதியிலும், அவனே முயன்று கலைப்பண்புடன் அமைக்கும் கலைப்படைப்பு பிற்பகுதியிலும் கூறப்பட்டிருத்தலைக் காணலாம். 'அழகுக் கலைத்திறன்' என்ற நூலில் வைத்தியலிங்கன் என்பார் கலையானது அழகினைப் பொருந்தி நின்று உழைப்பால் உலகியல் பயனுக்குப் பெரிதும் துணை நிற்கையில் அதனை **வன்கலை** அல்லது **தொழில்** என்று கூறுவர்.

**கலைவளர்ப்போம் கொல்லர் உலைவளர்ப்போம்**
**ஓவியம் செய்வோம் நல்ல ஊசிகள் செய்வோம்**
**உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்வோம்**

எனப் பாரதியார் பாடியது போல நாடு நலம்பெறக் கலையையும் தொழிலையும் செழிக்கச் செய்தல் வேண்டும் இவற்றிற்கு வழி காட்டிகளாய்த் திகழ்ந்தவர் பண்டைத் தமிழரே ஆவர். அன்று அவர்களால் விதைக்கப்பட்ட நலவித்துக்களே காலப்போக்கில் பல்கிப் பெருகித் தழைத்து வளர்ச்சி அடைந்து காணப்படுகின்றன.

'பண்டைத் தமிழர் தொழில்கள்' என்ற இந்நூலின் முதல் இயலில் பழந்தமிழ் இலக்கண நூலாய் விளங்கும் தொல்காப்பியத்தில் தாழில் என்ற சொல்லுக்கு ஆசிரியர்தரும் விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன. அதை அடுத்து பழந்தமிழர் வாழ்ந்த நிலங்களைப் பற்றிச் 'சங்க இலக்கியத்தில் நிலம்' என்ற தலைப்பில்

எழுதப்பட்டுள்ளது. மூன்றாம் இயலான 'தொழில்கள்' என்பதில் தொழில் என்பதற்கு வரையறை; தொழில்களின் வகைப்பாடுகள் கூறப்பட்டுள்ளன. பழந்தமிழரிடையே பழக்கத்திலிருந்த தொழில்கள் எவை? அவை எவ்வாறு யாரால் செய்யப்பட்டன என்பதைச் சங்க இலக்கியப் பாடற்கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

சங்க காலச் சமுதாயத்தில் வாழ்ந்த மகளிர் தமக்கே உரிய இல்லறப்பணிகள், விருந்தோம்பல் ஆகியவற்றோடு ஈடுபட்ட பிறதொழில்கள் பற்றிய செய்திகள் நான்காம் இயலான 'மகளிர் தொழில்கள்' என்பதில் இடம்பெற்றுள்ளன. இவற்றுடன் நல்ல தொரு சமுதாயத்திற்கு ஒவ்வாதவை என்றாலும் வாழும்வழி தேடி ஒரு சிலரால் செய்யப்பட்ட ஆறலைக்கும் தொழிலும், கணிகைத் தொழிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. தொழில் சார்புடைய சொற்கள் மட்டும் சொல்லடைவில் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன Old is gold என்று ஆங்கிலத்தில் சொல்வது போல பழந்தமிழ் மக்கள் அக்காலத்திலேயே எந்த அளவு பல்வேறு தொழிற்றிறம் விளங்கப் பெற்றவராய் வாழ்ந்தனர் என்பதை அறியும்போது வியப்பின் எல்லையை அடைகின்றோம்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வெளியீடுகளான தமிழர் ஆடைகள், தமிழர் அளவை, தமிழர் இசை என்ற தொடரில் தமிழர் தொழில்கள் என்ற தலைப்பில் ஆய்வு நூல் எழுதும் பணி எனக்கு அளிக்கப்பட்டது. அதில் ஒரு பகுதியாகப் பழந்தமிழ்ச் சமுதாயத்தில் செய்யப்பட்ட தொழில்கள் மட்டும் 'பண்டைத் தமிழர் தொழில்கள்' என்ற தலைப்பில் எழுதி முடிக்கப்பட்டது. இந்நூல் வெளிவரக் காரணமாயிருந்த முன்னாள் இயக்குநர் அமரர் டாக்டர் க. த. திருநாவுக்கரசு அவர்கட்கு என் நன்றியைக் காணிக்கை யாக்குகின்றேன்.

இந்நூல் தொடர்ந்து அச்சிடப்பெற்று வெளிவர உதவிய இந் நிறுவன இயக்குநர் டாக்டர் சிலம்பொலி. சு. செல்லப்பன் அவர் கட்கு என் உளம் நிறைந்த நன்றியைக் கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலின் ஒரு சில பகுதிகளின் மெய்ப்புகளைத் திருத்தி உதவிய செல்வி. பி. வெ. சுசிலா எம்.ஏ., எம்.ஃபில் அவர்கட்கும், இந்நூலினைச் செம்மையாக அச்சிட்டு உதவிய நிறைமொழி அச்சக உரிமையாளருக்கும் என் மனங்கனிந்த நன்றி உரித்தாகும்.

சென்னை
11-10-1989

**வி. சி. சசிவல்லி**

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| *இயல் 1* | *தொல்காப்பியச் செய்தி* | *1* |
| *இயல் 2* | *சங்க இலக்கியத்தில் நிலம்* | *13* |
| *இயல் 3* | *தொழில்கள்* | *36* |
| *இயல் 4* | *மகளிர் தொழில்கள்* | *268* |
| *சொல்லடைவு* | | **319** |

இயல் ஒன்று

# தொல்காப்பியச் செய்தி

தமிழ் மொழியில் கிடைத்திருக்கும் நூல்களுள் பழமையானது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலாகும். இந்நூல் இற்றைக்கு இரண்டாயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது. இந்நூல் தமிழர் நெடுங்காலமாக இல்வாழ்க்கை, அரசியல், பண்பாடு முதலியவற்றில் சிறப்புடன் திகழ்ந்தனர் என்னும் உண்மையினை உள்ளவாறே உணர்தற்கு உரிய பெருநூல் ஆகும். தொல்காப்பியத்திற்குச் சிறப்புப் பாயிரம் இயற்றிய பனம்பாரனார், தொல்காப்பியருடன் பயின்ற ஒருசாலை மாணாக்கர் என்பது பெறப்படும். பனம்பாரனார் இயற்றிய தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்தில் வரும்

**வடவேங்கடம் தென்குமரி**
**ஆயிடைத்**
**தமிழ்கூறு நல்லுலகம்**

என்ற அடிகளால் தொல்காப்பியர் வாழ்ந்த காலத்தில், தமிழ் நாட்டின் வடஎல்லை வேங்கடமலைத் தொடராகவும், தென் எல்லை குமரி ஆறாகவும் அமைந்திருந்தன என்பது விளங்கும். தொல்காப்பியர் தமிழகத்தில் அமைந்த உலக வழக்கு, செய்யுள் வழக்கு ஆகிய இருவகை வழக்குகளையும் அடிப்படையாகக் கொண்டு, அவ்விரு வகை வழக்கிலும் அமைந்த இலக்கணங்களை எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களாகத் தொல் காப்பியத்துள் தொகுத்துக் கூறியுள்ளார் என்பது புலனாகும்.

தொல்காப்பியர் காலத்து மக்கள் நாகரிகமும் பண்பாடும் அவருடைய நூலால் நன்கு விளங்கும். மக்களை வழிநடத்த அரசர் இருந்தனர். போர் வாழ்க்கையும், இன்பவாழ்க்கையும், சமயவாழ்க்கையும் வழக்கிலிருந்தன. இல்லறமும், துறவறமும்,

கல்வியும் சிறந்து விளங்கின. மக்களிடையே தொழிற் பாகுபாடுகள் இருந்தன.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் ஆசிரியர் சொற்களால் உணர்த்தப்படும் பொருள்களின் இலக்கணங்களை விரித்துரைக்கின்றார். இவ்வதிகாரத்தில் கூறப்படும் பொருள்கள் அகப்பொருள், புறப்பொருள் என இருவகைப்படும். அவற்றுள் அகம் என்பது புறத்தார்க்கு உரைக்கப்படாத காதல். திணை என்பது ஒழுக்கம். ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உளதாய காதல் ஒழுக்கமே அகத்திணை எனப்படும். அது பண்டைத்தமிழரால் ஒத்த காதல், ஒருபாற் காதல், ஒவ்வாக்காதல் என்று முத்திறச் சார்பாய ஒழுக்கங்களாகப் பகுக்கப்பட்டது. ஒவ்வொரு பகுதியும் திணை என்று பெயர் பெறுதலின் அவை சேர்ந்து ஐந்திணை எனப்பட்டது. ஒருபாற் காதல் கைக்கிளை என்றும், ஒவ்வாக் காதல் பெருந்திணை என்றும் வரையறுக்கப்பட்டு அகவொழுக்கம் என்பது ஏழுதிணைகளை உடையதாய்ப் பகுக்கப்பட்டது.

## ஐந்திணை

ஆசிரியர் பொருளதிகாரத்தில் உலகில் உள்ள காட்சிப் பொருள், கருத்துப் பொருள் ஆகிய அனைத்தையும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்று வகையாகப் பகுத்துக் கொண்டு மக்களின் வாழ்க்கை முறைகளை வகுத்துரைத்துள்ளனர்.[1]

நிலம், காலம் என்னும் இரண்டும் முதற்பொருள் எனப்படும் ஐந்திணைக்குரிய ஐவகை நிலங்களுள்ளும் 'பாலை' என்பது பிற நான்கு நிலங்களுக்கும் பொதுவானதொன்றாதலின் அதனை ஆசிரியர் 'நடுவணது' என்றார்.[2] ஐவகை நிலத்துள் நால்வகை

---

1. முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே

2. அவற்றுள்
நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே (தொல். பொருள் . 2, 3)

நிலமே தனித்தனி சிறப்பனவாகலின் நிலவுலகத்தை நானிலம் என்று கூறும் மரபு ஏற்பட்டது. அகத்திணையியலுள் ஆசிரியர் நால்வகை நிலத்திற்குரிய முதல், கரு, உரிப்பொருள்களைக் கூறியபின் பொதுவாகிய பாலைக்குரியவற்றைக் கூறுவதைக் காணலாம். எனவே நிலம் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகையாகப் பகுக்கப்பட்டிருந்தன என்பதை அறியலாம். அவற்றுள் காடுங் காடு சார்ந்த இடமும் முல்லை எனப்படும். மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி எனப்படும். வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் எனவும் கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனவும்படும். பாலை என்பது,

**முல்லையுங் குறிஞ்சியு முறைமையில் திரிந்து**
**நல்லியல் பழிந்து நடுங்குதுயர் உறுத்துப்**
**பாலை என்பதோர் படிவங் கொள்ளும்**[3]

என்று கூறப்பட்டது. இதனாலேதான் தமிழகம் நானிலம் எனப் பட்டது. முதலில் நால்வகை நிலங்களுக்குப் பெயர்கள் அவ்வந் நிலத்திலுள்ள மலரின் பெயராகவே அமைந்தன. பின்னர் அவற்றில் நிகழும் ஒழுக்கத்திற்கும் அப்பெயர்களே வழங்கலாயின. தொல்காப்பியர் இயற்கை நிலத்தையும் இயற்கைப் பொழுதையுமே முதற்பொருள் என்றனர். ஒரு வினை நிகழ்வதற்கு இடமும் பொழுதுந் துணைக்காரணங்கள் ஆவன எனினும், அவற்றின் இன்றியமையாமை நோக்கி, அவையே முதற்பொருள் எனப் பட்டன.

காலம் பெரும்பொழுது, சிறுபொழுது என இரண்டுவகை ஆகும். ஓர் ஆண்டிற்கு உரிய பருவங்கள் பெரும்பொழுதுகள் எனப்படும். அவை கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என ஆறுவகையாகும். ஒரு நாளுக்கு உரிய பொழுதுகள் சிறு பொழுதுகள் எனப்படும். அவை மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல், எற்பாடு என ஆறு வகைப்பட்டன.

---

3. சிலப் . காடு . 64-66

## முதற் பொருள்

| நிலம் | இடம் | பெரும் பொழுது | சிறு பொழுது |
|---|---|---|---|
| முல்லை | காடும், காடு சார்ந்த இடமும் | கார் | மாலை |
| குறிஞ்சி | மலையும், மலை சார்ந்த இடமும் | கூதிர், முன்பனி | யாமம் |
| பாலை | முல்லையும், குறிஞ்சியும் திரிந்த நிலம் | இளவேனில் முதுவேனில் பின்பனி | நண்பகல் |
| மருதம் | வயலும், வயல் சார்ந்த இடமும் | ஆறு பொழுதும் | வைகறை விடியல் |
| நெய்தல் | கடலும், கடல் சார்ந்த இடமும் | ஆறு பொழுதும் | எற்பாடு |

முதற்பொருளாகிய நிலமுங் காலமும் பற்றித் தோன்றி யியங்கும் இயற்கை, செயற்கைப் பொருள்கள் அனைத்தும் கருப் பொருள் எனப்பட்டன.

**தெய்வம் உணாவே மாமரம் புள்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப**
**(தொல் . பொருள் . அகத் . 18)**

இவற்றுள் தெய்வ வழிபாட்டின் இன்றியமையாமை பற்றி முதற் பொருளாகிய நிலத்தைக் கூறுமிடத்தே அந்நிலத்திற்குரிய தெய்வமும் உடன் கூறப்பட்டது. பிற கருப்பொருள்கள் உணவு,

விலங்கு, பறவை, மரம், மலர், தொழில், யாழ், பறை, நீர், ஊர் என்பன. மக்கள் தொழில் என்பது உணவு தேடுதல் முதலிய செய்கைகளா . மேற்குறிப்பிட்ட தொல்காப்பிய நூற்பாவில் தொழில் **செய்தி** என்ற சொல்லால் குறிக்கப்பட்டுள்ளது.

முல்லை நிலத்தில் உள்ள மக்கள்தொழில் ஆடுமாடு மேய்த்தலும், புன்செய்ப்பயிர் செய்தலுமாகும். குறிஞ்சி நிலமக்கள் ஐவனநெல், தினை ஆகியவற்றைப் பயிரிட்டனர். தேனெடுத்தல்; கிழங்குகளை அகழ்ந்தெடுத்தல்; தினைப்புனங்களைக் காத்தல் ஆகிய தொழில்களையும் செய்தனர். மருத நிலத்தார் தொழில் நெற்பயிரிடுதலும், நெல்லரிதலுமாம். நெய்தல் நில மக்கள் தொழில் மீன் பிடித்தலும், உப்பு விளைவித்தலுமாகும். பாலை நிலத்தில் வாழ்ந்தவர்கள் வழிப்போக்கர்களுடைய பொருளைப் பறித்துப் பிழைத்தனர். அதுவே அவர்கள் தொழிலுமாம்.

ஐவகை நிலங்களுக்கும் உரிய கருப்பொருள்களை நோக்கும் பொழுது பண்டைத் தமிழர் வழிபட்ட கடவுளர், நில அடிப்படையில் மக்கள் மேற்கொண்ட தொழில்கள், அந்தந்த நிலங்களில் தோன்றிய பொருள்கள் ஆகியவை புலப்படும். ஐவகை நிலங்களிலும் வாழ்மக்கள் தலைமக்கள் என்றும், பொதுமக்கள் என்றும் இரண்டு வகைப்படுவர். ஒருவனது பெயர் கேட்டவுடன் அவன் இந்த நிலத்துத் தலைமகன் என்றேனும், பொதுமக்களுள் ஒருவன் என்றேனும் அறிதற்கு ஏற்ற முறையில் அவர்களின் 'பெயர்கள் அமைந்திருந்தன. அந்நாளில் மக்கள் தொழில்கள் பெரும்பாலும் உணவு தேடுதலை ஒட்டியே அமைந்தன எனலாம். அத்தொழில்களை வைத்தே மக்கள் வேறுபாடு ஆதியிலிருந்தது என்றுங் கூறலாம்.

## *தொல்காப்பியர் கால மக்கட்பிரிவு*

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமிழ்நாட்டில் மக்களிடையே பலவிதப் பிரிவுகள் இருந்தன. குறிப்பாக அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற பிரிவுகள் இருந்தன. இவை யாவும் அவர்கள் செய்யும் தொழிலினால் ஏற்பட்ட பிரிவுகளாகும். இவர்களைத் தவிரப் பாணர், கூத்தர், பொருநர், அடியோர், வினைவலர் போன்ற பல பிரிவுகளும் இருந்தன.

பொதுநிலையில் பண்டைத் தமிழர் இடம்பற்றி வேட்டுவர், ஆயர், உழவர், நுளையர், எயினர் எனவும்; அகவொழுக்கம் பற்றி வெற்பன், அண்ணல், மகிழ்நன், துறைவன், விடலை எனவும்; தொழில்பற்றி அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், அடியோர், வினைவலர் எனவும் மூன்று பிரிவாகப் பகுக்கப் பட்டனர். வேட்டுவர், ஆயர் என்னும் நிலமக்களே அந்தணர், அரசர் முதலிய அறுவருமாவர். உலகியலுக்கு ஏற்ற வகையில் பலவகைப்பட்ட தொழில் செய்துவந்த மக்களிடையே நிகழும் பழக்க வழக்கங்களைக் கொண்டு அம்மக்களை — நிலமக்கள், தலைமக்கள் எனவும்; அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் எனவும்; அடியோர், வினைவலர் எனவும்; பெருநில மன்னர், குறுநில மன்னர்; உழுவித்துண்ணும் வேளாளர், உழுதுண்ணும் வேளாளர் எனவும் வகுத்தும்; அனைவரையும் கிளவித் தலைவர் எனத்தொகுத்தும் ஆசிரியர் தொல்காப்பியர் இலக்கணஞ் செய் துள்ளனர். குறிஞ்சி, முல்லை எனப்பட்ட ஐந்நில மக்களில் பெரும்பான்மையானவர் எத்தொழிற்கும் ஆதாரமாய் விளங்கும் உழவுத் தொழிலே செய்து வந்தனர்.

உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத உழவுத்தொழில் செய்து வந்தவரை வேளாளர் எனவும்; கொண்டு கொடுத்து வந்தவரை வணிகர் எனவும்; நாடு காத்து வந்தவரை அரசர் எனவும்; ஒழுக்கநெறி கற்பித்து வந்தவரை அந்தணர் எனவும் வழங்கினர். இவை தொழில் பற்றியமைந்த பெயர்கள். உழவுத் தொழில் மற்ற எல்லாத் தொழில்களின் முதலும், இன்றியமையாச் சிறப் புடையதுமானதால் தலைமை பற்றி வேளாளர் என்று சொல்லப் பட்டாலும் பிறதொழிலாளரும் அடங்குவர். அந்தணர், அரசர், வணிகர் அல்லாத மற்றை யாவரும் வேளாளரே ஆவர். எனவே இந்நான்கு பிரிவுகளும் தொழில் பற்றிச் சிறப்பு வகையால் கூறப் பட்டனவே அன்றிப் பிறப்பு வகையால் கூறப்பட்டனவல்ல.

எத்தொழிற்கும் தூண்டுகோலாய் அமையும் அறிவும், ஒழுக்கமும் இன்றியமையாச் சிறப்பினவாகலானும் அந்தணர் முதலிலும்; தொழில் செய்வோர் அச்சமின்றி வாழவும், தொழில் நன்கு நடைபெற அரசர் காத்தலானும்; வணிகர் அந்தணர்க்கும் அரசர்க்கும் கொண்டு கொடுத்தலோடு, அரசியற்குப் பொருளீட்டித்

தருதலானும், வேளாளர் விளைவிக்கும் பொருள்களைக் கொள்வ தோடு, அவர்க்கு வேண்டுவன கொண்டு கொடுத்தலானும் அரசர், வணிகர் ஆகியவரை இடையில் வைத்து, அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என முறைப்படுத்தினரே அன்றி இவர் களுக்குள் ஏற்றத்தாழ்வு இல்லை.

## *அந்தணர்*

அறிவு, நல்லொழுக்கம், தன்னலமற்ற தன்மையாகிய பண்பு டையார் அந்தணர் எனப்பட்டனர். எல்லா உயிர்களிடத்தும் அருளுடையவராய் அறநெறியில் வாழ்வோர் அந்தணர். அரசரை நல்வழிப் படுத்தலும், மக்கள் நல்வாழ்விற்காகத் தொண்டாற்ற லும் இவர்கள் கடமைகளாகும்.

**காமஞ் சான்ற கடைக்கோட் காலை**
**ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி**
**அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியும்**
**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே! (கற். 51)**

இதுவே அந்தணர் தோற்றம் எனலாம். பொதுப்படக் கூறினும், அறிவும் பொதுநல ஆர்வமும் உடைய இல்லற நீத்த பெரியோர் களே அந்தணர் நிலையில் பொதுநலம் புரிந்து வாழ்ந்தனர். இவர்களில் ஒருசிலர் தவவாழ்க்கை மேற்கொண்டனர். இது 'நாலிரு வழக்கில் தாபதர் பக்கமும்' (புறத். 20) என்பதால் விளங்கும். இத்தகையாரைத் தொல்காப்பியர் நிறைமொழி மாந்தர் என்ற சொல்லாலும் குறிப்பிடுகின்றார். எனவே அந்தணர் என்பார் அரசர் முதலிய ஏனைய வகுப்பினரில் இல்லற முற்றிய பெரியோரே அன்றித் தனி வகுப்பினர் அல்லர் எனலாம். இவர்கள் பெரும்பாலும் ஓரிடத்தில் நிலையாகத் தங்கியிராமல் புலவர்கள் போன்று ஊர்தோறுஞ் சென்று நாட்டு மக்கட்கு நன்னெறி புகட்டி வந்தனர். எனவே வழிச்செலவுக்குத் துணையாக ஊன்றுகோலும் தண்ணீர்க் கமண்டலம், ஆசனம் போன்றவற்றை உடையராய் இருந்தனர்.

**நூலே கரகம் முக்கோல் மனையே**
**ஆயுங் காலை அந்தணர்க் குரிய. (மரபி. 70. இளம்.)**

அரசர் போர் முதலியவற்றிற்காக நகரை விட்டுச் சென்ற போது, வணிகரும் வேளாளரும் உடன்செல்வராகலின், அப்பொழுது அரசை நடத்த வேண்டிய பொறுப்பு அந்தணப் பெரியோர்களுக்கு உரியதாயிற்று.

**அந்த ணாளர்க்கு அரசுவரை வின்றே (மரபி. 83. இளம்.)**

என்ற நூற்பா இதனை உணர்த்துகின்றது.

## *அரசர்*

தமிழகத்தில் ஆட்சிமுறை என்று ஏற்பட்டதோ அன்றிலிருந்து தமிழகம் முடியுடை மூவேந்தர் என்று சிறப்பித்துக் கூறப்படும் சேர, சோழ, பாண்டியர் என்னும் வேந்தர்களால் ஆளப்பட்டு வந்தது. இவர்களை 'வண்புகழ் மூவர்' என்பர் தொல்காப்பியர். இப்பெருநில மன்னரும் இவர்கட்கு உட்பட்ட குறுநில மன்னரும் அரசர் எனப்பட்டனர். பேரரசரால் சிறப்புப் பெற்ற வணிகரும் வேளாளரும் சிற்றரசர் ஆவர். படை, கொடி, குடை, முரசு, குதிரை, யானை, தேர், த்ார், முடி போன்றன அரசர்க்கு உரியவை. இக்கருத்து,

**படையும் கொடியும் குடையும் முரசும்**
**நடைநவில் புரவியும் களிறுந் தேரும்**
**தாரும் முடியும் நேர்வன பிறவும்**
**தெரிவுகொள் செங்கோல் அரசர்க்குரிய (மரபி. 72)**

என்ற நூற்பாவால் புலப்படும். வில், வேல், வாள், கழல், கண்ணி, தார் என்பன சிற்றரசர்க்கு உரிய சிறப்புகளாகும்.[4] மூவேந்தரில் இன்னார்க்கு உரியர் என்பது தெரிய அடையாளப் பூச்சூடும் வழக்கம் இருந்தது.

**வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப்**
**போந்தை வேம்பே ஆரென வரூஉம்**
**மாபெருந் தானையர் மலைந்த பூவும் (புறத். 5)**

என்றதனால் அறியலாம்.

---

4. வில்லும் வேலும் கழலும் கண்ணியும்
தாரும் ஆரமும் தேரும் மாவும்
மன்பெறு மரபின் ஏனோர்க்குரிய... (மரபி. 84)

அரசர்க்குரிய தொழில் கட்டுப்பாட்டுடன் ஆட்சிபுரிதலாகும். தொல்காப்பியர் 'தெரிவுகொள் செங்கோல் அரசர்' என்று சிறப்பித்ததால் பழந்தமிழ் அரசர்கள் முறை பிறழாது செங்கோற் செலுத்தியமை புலனாகும்.

## வணிகர்

வாணிகம் செய்யும் தொழிலை வைசியன் பெறுவான் என்று தொல்காப்பியம் கூறுகின்றது.

**'வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை'** (மரபி. 78. இளம்.)

என்பது தொல்காப்பிய நூற்பா. வணிகர்கள் உள்நாட்டு, வெளிநாட்டு வாணிகத்துடன் தானியங்களை விளைவிக்கும் தொழிலையும் மேற்கொள்வர். இதனை

**மெய்தெரி வகையின் எண்வகை உணவின்**
**செய்தியும் வரையார் அப்பா லான** (மரபி. 79. இளம்.)

என்ற நூற்பாவால் அறியலாம். பொருள் தெரிந்த வகையான் எண்வகைக் கூலமும் (பயறு, உளுந்து, கடுகு, கடலை, எள், கொள், அவரை, துவரை) செய்யில் விளைவித்தலும் அவர்கள் தொழிலாகும். இதுவும் வாணிகத்துடன் தொடர்புடைய தொழிலாதலின், வணிகரும் நிலவுரிமை உடையவராய் இருந்தமை பெறப்படும். மேலும் எல்லாப் பொருள் வாணிகமும் செய்து, எங்கும் ஒரே தன்மையுள்ள வாழ்வு நடைபெறும்படி செய்து வந்த பெருமை வணிகரையே சாரும். பேரரசரால் சிறப்புப் பெற்ற வணிகர் சிற்றரசராவர். பெருவணிகர்கள் அரசரால் படை, கண்ணி முதலிய சிறப்புச் செய்யப்படுவர்.

**கண்ணியும் தாரும் எண்ணினர் ஆண்டே** (மரபி. 80)

என்ற நூற்பாவால் அறியலாம்.

## வேளாளர்

வேளாளர் என்பார் பெரும்பாலும் உழவுத் தொழிலே செய்து மக்களை வாழ்வித்து வரும் பெருந்தகையாளர்கள். தொல்காப்பியர்,

**வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது**
**இல்லை எனமொழிப பிறவகை நிகழ்ச்சி (மரபி. 81)**

என்றனர். பல்வகைத் தொழிலாளர்களும் வேளாளரே ஆவர்.

தலைமை பற்றி உழவுத் தொழிலே சிறப்பித்துச் சொல்லப் பட்டது. இவர்களுள் உழுதுண்ணும் வேளாளர், உழுவித்துண்ணும் வேளாளர் என இருவகைப்படுவர். உழுதுண்ணும் வேளாளர் உழவுத் தொழில் ஒன்றையே செய்தனர். உழுவித்துண்ணும் வேளாளர் உழவுத் தொழிலோடு, அரசரால் படை, கண்ணி முதலிய சிறப்புக்கள் பெற்றுப் படைத்தலைவராகவும், சிற்றரச ராகவும் வாழ்ந்தனர்.

**வேந்துவிடு தொழிலிற் படையுங் கண்ணியும்**
**வாய்ந்தன ரென்ப அவர்பெறும் பொருளே.**
**(மரபி. 82. இளம்.)**

## அடியோர், வினைவலர்

ஐந்திணை ஒழுக்கத்தில் தலைமக்களாய் விளங்குபவர்கள் அறிவும், செல்வமுமுடைய நன்மரபினராவர். அன்னோர் கைக்கிளை, பெருந்திணை ஒழுக்கங்களில் ஈடுபடுதல் பொருந் தாமை பற்றி அவ்வொழுக்கங்களில் (கைக்கிளை, பெருந்திணை) தலைமக்களாய்ப் பாடப்படுவோர் ஏவுந்தொழில் செய்யும் மரபினரும், அடிமை புரிவோராய் வாழ்வோருமே ஆவர்.

**அடியோர் பாங்கினும் வினைவல பாங்கினும்**
**கடிவரை இலபுறத் தென்மனார் புலவர் (அகத். 23)**

**அடியோர்** என்பவர் தமக்கென நிலையான பொருளோ, தொழிலோ இன்றிச் செல்வரிடத்திருந்து அங்கேயே உண்டுடுத்தோ அல்லது நாட்கூலி பெற்றோ அச்செல்வர் தொழிலுக்கு அடிப் படையாய் இருப்பவர். கிளைகளைத் தாங்கும் அடிமரம் போலிருந்து அச்செல்வர் தொழிலை முடிப்பர்.

**வினைவலர்** என்பார் ஆண்டுக்கூலிகளாய் செல்வந்தர்களிட மிருந்து தொழில் செய்வோராவர். அந்நாளில் ஆண், பெண் இருபாலாரினும் அடியார், வினைவலர் இருந்தனர்.

## தொழில்

தொல்காப்பியர் கூறும் புறத்திணை ஏழனுள் ஒன்று வாகைத் திணையாகும். இது 'வலியும் வருத்தமுமின்றி, குறையாத முயற்சியையுடைய ஒவ்வொருவரும் தத்தம் தொழிலையும் ஒழுக்கத்தையும் பலபடியாகச் சிறப்பித்துக் கூறுதல் வாகைத்திணை என வழங்கப் பெறும்.

புறத்திணையியல் நூற்பா ஒன்றில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், அறிவர், தாபதர், பொருநர் எனப்பட்ட எழுவர் தொழில்களும் சிறப்பித்துச் சொல்லப்பட்டுள்ளன.

**அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்**
**ஐவகை மரபின் அரசர் பக்கமும்**
**இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்**
**மறுவில் செய்தி மூவகைக் காலமும்**
**நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்**
**நாலிரு வழக்கில் தாபதப் பக்கமும்**
**பாலறி மரபில் பொருநர் கண்ணும்**
**அனைநிலை வகையோடு ஆங்கெழு வகையால்**
**தொகைநிலை பெற்றது என்மனார் புலவர் (புறத். 20)**

என்ற நூற்பாவால் இதனை அறியலாம். 1. அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம்; ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் அறுவகைத் தொழிலும் பார்ப்பாருக் குரியவை. 2. ஐவகை மரபின் அரசர் பக்கம்: ஓதல், வேட்டல், ஈதல், படை வழங்குதல், குடியோம்புதல் ஆகிய ஐந்தும் அரசர்க் குரியவை. 3. இருமூன்று மரபின் ஏனோர் பக்கம்: ஏனோர் வணிகரும் வேளாளரும். ஓதல், வேட்டல், ஈதல், உழவு, வாணிகம், நிரையோம்பல் ஆகிய ஆறும் வணிகர்க்குரியவை. உழவு உழவொழிந்த தொழில், விருந்தோம்பல், பகடு புறந் தருதல், வழிபாடு, வேதம் ஒழிந்த கல்வி ஆகிய ஆறும் வேளாளர்க் குரியவை. ''இனி வேளாளர்க்கு வழிபாடு கொள்ளாது, அரசர் இவரிடம் பெண்கோடல்பற்றி வேட்டல் உளதென்று வேட்டலைக் கூட்டி ஆறென்றும், அரசரால் அச் சிறப்பெய்தாத வேளாளர்க்கே

வழிபாடு உரித்தென்றும் கூறுவாரும் உளர்'' என்பர் நச்சினார்க்கினியர். 4. மூவகைக் காலமும் நெறியினாற்றிய அறிவன் தேயம்; மழையும் பனியும் வெயிலுமாகிய மூவகைக் காலத்தினையும் நெறியினால் அமைத்த முழுதுணர்வுடைய அறிவர் பகுதி. ''அறிவன் என்றது கணியனை. மூவகைக் காலமும் நெறியினால் ஆற்றுதலாவது, பகலும் இரவும் இடைவிடாமல் ஆகாயத்தைப் பார்த்து ஆண்டு நிகழும் வில்லும் மின்னும் ஊர்கோளும் தூமமும் மீன் வீழ்வும் கோள்நிலையும் மழை நிலையும் பிறவும் பார்த்துப் பயன் கூறல்'' என்பர் இளம்பூரணர். 5. நாலிரு வழக்கில் தாபத பக்கம்: எட்டுவகைப்பட்ட நெறிகளில் தவம் புரியும் முனிவர் பகுதி. நீராடல், நிலத்திடை கிடத்தல், தோலுடுத்தல், சடை புனைதல், எரியோம்பல், ஊரடையாமை, காட்டிலுள்ள உணவு கோடல், தெய்வ பூசையும், அதிதி பூசையும் செய்தல் என்ற எட்டையும் அவர்களது நெறிகளாகக் கூறுவர் இளம்பூரணர். நச்சினார்க்கினியர் இவற்றைத் தவம் புரிவார்க்கு உரியனவும் என இருவகைய என்று கூறுவர். 6. பாலறி மரபிற் பொருநர்: வாளானும் தோளானும் பொருதலும் வென்றி கூறுதலும் ஆகும். முறையோடு போர்த்தொழில் கூறுபாட்டை அறிந்த மறவர் சிறப்பும் என்பதால் போர்த் தொழிலில் ஈடுபடல் இவரது தொழிலாகும்.

இங்ஙனம் இன்னார் தொழில் இன்னது என்று கூறுமளவிற்குப் பண்டைத் தமிழர் ஒவ்வொருவரும் தத்தம் தொழிலைச் சிறப்புறச் செய்து, பல்வகைத் தொழிலையும் முன்னேற்றமுறச் செய்து சிறப்புடன் வாழ்ந்தனர். இவர்களது மனமுயற்சியும், மெய்ம் முயற்சியும் போற்றுதற்குரியன.

★

இயல் இரண்டு

# சங்க இலக்கியத்தில் நிலம்

## சங்க இலக்கியம்

பழந்தமிழ் நாட்டில் மூன்று சங்கங்கள் இருந்தன என்றும், மதுரையிலும், கபாடபுரத்திலும் இருந்த முதல் இரண்டு சங்கங்கள் மறைந்த பிறகு மூன்றாம் தமிழ்ச் சங்கம் மதுரையில் அமைந்து நடந்தது என்றும் கருதப்பட்டது. இம்மூன்றாம் தமிழ்ச் சங்கத்து நூல்களே 'எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும்' என வகுக்கப்பட்டு, அவற்றைச் 'சங்க இலக்கியம்' என்று குறிப்பிடும் வழக்கம் ஏற்பட்டது. அவை 'சங்கத் தொகை நூல்கள்' என்றுங் குறிப்பிடப் பட்டன. சங்க இலக்கியப் பாடல்கள் காதல் பற்றிய அகம் என்றும் வீரம், புகழ், கொடை, போர் முதலிய வாழ்க்கைத் துறைகளைப் பற்றிய புறம் என்றும் இரண்டு பிரிவாகப் பகுக்கப் பட்டன.

சங்க அகப்பாடல்களில் கற்பனைத் தலைவன், தலைவியின் காதல் சித்திரிக்கப்பட்டது. புறப்பாடல்களில் நாட்டை ஆளும் தலைவனுடைய வீரச்செயல்களும் கொடைப்பண்பும், வள்ளல்கள், குடிமக்களுள் சிறந்தவர்களின் அருமை பெருமைகளும், பிறவும் பாடப்பட்டன. மலை, கடல், வயல், காடு ஆகியவற்றின் இயற்கை அழகும் சிறப்பும் அகப்புறப் பாடல்களுக்குப் பின்னணி யாக அமைந்தன. இடந்தோறும் இயற்கைப் பொருள்களும், பழக்கவழக்கங்களும், தொழில்களும் வெவ்வேறாக இருந்தமையால் சங்க இலக்கியப் பாடல்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணைப் பாடல்களாக அமைந்தன. சங்கப் புலவர்களால் பாடப்பட்ட ஐந்திணைப் பாடல்கள் முழுவதும் கிடைக்கவில்லை என்பர். 'தொகை நூல்களாகத் தொகுக்கப் பட்டுள்ள நூல்களுள் அகப்பாட்டுக்கள் ஏறக்குறைய 1800 கிடைத்

துள்ளன.'[1] சங்க இலக்கியப் புறப்பாடல்கள் அக்காலத்து மன்னர்கள், தலைவர்கள் ஆகியோரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை விளக்குவனவாக, வரலாற்றுக்குப் பயன்படுவனவாக உள்ளன. அவற்றுள் கற்பனை அமையவில்லை. போர் நிகழ்ச்சி முதலியவற்றைப் பாடும் பாட்டுக்களில் ஏழுதிணையாகப் பாகுபாடு செய்து பாடும் மரபு இருந்தது. பகைவரின் பசுக்களைக் கவர்ந்து போருக்குத் தொடக்கம் செய்வது வெட்சித்திணை; பகைவர் நாட்டின் மேல் படையெடுத்துச் செல்வது வஞ்சி; பகைவரின் மதிலை முற்றுகை இடுதல் உழிஞை; ஓரிடம் குறித்து அங்கு இருவர் படையும் எதிர்ப்பட்டு, போர் செய்தல் தும்பை; வெற்றி பெறுதல் வாகை; புகழ்ந்து பாடுதல் பாடாண்; உலகவாழ்வின் நிலையாமை பாடுதல் காஞ்சி என ஏழுதிணைகளாகப் பகுக்கப் பட்டன.

அகப்பொருள் பாடல்களில் காதல் பற்றிய ஐந்து திணைகளோடு கைக்கிளை, பெருந்திணை என்ற இரண்டுஞ் சேர்ந்து ஏழுதிணைகளாகும் என்பர். இவ்வாறு அமைந்த அகத்திணை ஏழும், புறத்திணை ஏழும் பற்றியே சங்க இலக்கியப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

## எட்டுத் தொகை

எட்டுத்தொகை நூல்களுள் ஐந்து நூல்கள் அகப்பொருள் பற்றி மட்டுமே பாடப்பட்டவை. அவற்றுள் 3 அடிமுதல் 5 அடி வரையில் உள்ள ஐந்நூறு பாடல்களை **ஐங்குறுநூறு** என்றும்; 4 அடி முதல் 8 அடி வரையில் உள்ள நானூறு பாடல்கள் **குறுந்தொகை** என்றும்; 9 அடி முதல் 12 அடிவரையில் உள்ளவை நானூறு தொகுத்து **நற்றிணை** என்றும்; 13 அடி முதல் 31 அடி வரையில் உள்ள பாடல்கள் நானூறு **அகநானூறு** என்றுந் தொகுக்கப்பட்டுள்ளன. **கலித்தொகை** என்பது இனிய ஓசைநயம் அமைந்த கலிப்பா என்னுஞ் செய்யுள் வகையில் அமைந்த 150 பாடல்களைக் கொண்டு தொகுக்கப்பட்டது.

---

1. வரதராசன். மு, தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, ப 30.

**பதிற்றுப் பத்து** என்பது சேர நாட்டு அரசர் பதின்மரைப் பற்றிப் பத்துப்பத்தாகப் பாடப்பட்ட நூறு பாடல்களடங்கிய தொகை நூல். **புறநானூறு** என்பது தமிழ்நாட்டு மன்னர்கள், சிற்றரசர்கள், வள்ளல்கள், மேன்மக்கள் முதலானோரின் பெருஞ் செயல்களும், அரும்பண்புகளும் அமையப் பாடிய நானூறு பாட்டுக்கள் அடங்கிய நூலாகும். **பரிபாடல்** என்பதும் இனிய ஓசைநயம் அமைந்த எழுபது பாடல்கள் கொண்ட தொகை நூலாகும்.

## *பத்துப்பாட்டு*

பத்துப்பாட்டில் உள்ள பாட்டுக்கள் ஒவ்வொன்றும் மிகப்பல அடிகள் உடையவை. பத்துப்பாட்டுக்களுள் நான்கு அகப் பொருள் பற்றியவை. ஆறு புறப்பொருள் பற்றியவை. பத்துப் பாட்டு நூல்கள் இவையிவை என்பதை,

**முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை**
**பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய**
**கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்**
**பாலை கடாத்தொடும் பத்து.**

என்னும் வெண்பா தெரிவிக்கின்றது.

## *திருமுருகாற்றுப்படை*

இந்நூல் புலவராற்றுப்படை எனவும் 'திருமுருகு' எனவும் வழங்கப்பெறுகின்றது. திருமுருகாற்றுப்படை என்பது முருகக் கடவுளின் அருளைப் பெற்றவர் ஒருவர் அந்த அருளை நாடும் மற்றவர்க்கு வழிகாட்டுவதாகப் புலவர் நக்கீரர் பாடிய பாட்டாகும். 317 அடிகளால் அமைந்த இந்நூலே சங்க காலத்தில் பக்தி உணர்ச்சி நிரம்பிய முழுநூல் எனலாம்.

இந்நூல் முருகக் கடவுள் எழுந்தருளியிருக்கும் திருப்பரங் குன்றம், திருச்சீரலைவாய் முதலாகிய ஆறுபடை வீடுகளைப் பாராட்டும் ஆறு பகுதிகளாக அமைக்கப் பெற்றுள்ளது, அக் காலத்திலிருந்தே முருகன் கோயில்களைப் பற்றியும், வழிபாட்டு முறைகளைப் பற்றியும் இதில் கூறப்பட்டுள்ளன.

## பொருநராற்றுப் படை

பரிசில் பெறக்கருதிய ஒரு பொருநனைப் பரிசில் பெற்றான் ஒருவன் சோழன் கரிகால் பெருவளத்தானிடம் ஆற்றுப்படுத்திய தாக முடத்தாமக் கண்ணியார் பாடியது. இந்நூல் 248 அடிகளைக் கொண்டது. சோழன் கரிகாலன் சிறப்பும், அவன் கலைஞர் களிடம் கொண்ட அன்பும், காவிரியாற்றின் பெருமையும், இப் பாட்டால் விளங்குகின்றன. பொருநர்கள் பாலைநில வழியாகச் செல்லும் பொழுது, ஆறலை கள்வர்கள் வந்துவிடுவார்களானால் யாழை எடுத்து இனிய ஓசை எழுப்பினால் அக்கள்வர்களின் மனமும் மாறிவிடும் என்றும், அவர்கள் தம்கொலைத் தொழிலையும் மறந்துவிடுவார்கள் என்றுங் கூறி இனிய இசையின் சிறப்பை இந்நூல் இனிதே எடுத்தியம்புகிறது.

## சிறுபாணாற்றுப் படை

இந்நூல் 269 அடிகளைக் கொண்டது; பாணர் என்னும் இசைக்கலைஞர் பற்றிய பாட்டாக அமைவது; பரிசில் பெறக் கருதிய பாணனொருவனைப் பரிசில் பெற்றான் ஒருவன் ஓய்மா நாட்டு நல்லியக்கோடனிடத்தே ஆற்றுப்படுத்தியதாக அந்நல்லியக் கோடனை இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது. இந்நூலில் ஒரு பாணர் குடும்பத்தின் வறுமை சொல்லோவிய மாக்கப்பட்டுள்ளது. நல்லியக் கோடனின் முன்னோர் பெருமையும் நாட்டின் இயற்கை வளமும் கூறப்பட்டுள்ளன.

## பெரும்பாணாற்றுப் படை

இந்நூல் ஐந்நூறு அடிகளைக் கொண்டது. பரிசில் பெறுதற் குரிய பெரும்பாணனொருவனைப் பரிசில் பெற்றான் ஒருவன் காஞ்சி மாநகரத்தில் ஆண்டுகொண்டிருந்த தொண்டைமான் இளந்திரையனிடத்தே ஆற்றுப்படுத்தியதாக அவ்விளந்திரை யனைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியது. அரசனின் ஆட்சிச் சிறப்புப் பற்றியும், கடற்கரை பட்டினம் பற்றியும், மலை வளம் பற்றியும், அரசன் கலைஞர்களுக்கு உணவளித்து உபசரிக்கும் சிறப்புப் பற்றியும் இந்நூலினின்றும் அறியலாம்.

## முல்லைப் பாட்டு

பத்துப்பாட்டு நூல்களுள் ஐந்தாவதாக விளங்கும் இந்நூல் 103 அடிகளைக் கொண்ட சிறிய நூலாகும். பத்துப்பாட்டிலமைந்த அகப்பாடல்களுள் ஒன்றாகும். காதலன் போர்க் கடமையை மேற்கொண்டு பிரிந்து சென்ற போது அவன் வெற்றியோடு திரும்பி வருதலை எதிர்பார்த்துக் காதலி தன் வீட்டில் பொறுமையுடன் ஆற்றியிருத்தலே முல்லைத்திணை என்று கூறப்படும். பிரிந்து சென்ற தலைவன் மழைக்காலத்துக்குள் போரை முடித்துத் திரும்ப வேண்டும். இப்பாட்டில் மழைக்காலத்தில் காட்டு நிலங்கள் பெறும் புதிய அழகு நன்றாக வருணிக்கப்பட்டுள்ளது. முல்லைநில ஒழுக்கத்தின் அடிப்படையில் இந்நூல் அமைந்துள்ளதால் 'முல்லைப்பாட்டு' எனப்பட்டது.

## மதுரைக் காஞ்சி

பத்துப்பாட்டுள் ஆறாவதாக அமையும் மதுரைக்காஞ்சி 782 அடிகளைக் கொண்ட மிகநீண்ட பாட்டாக அமைவதாகும். இதில் புகழப்படும் அரசன் பாண்டியன் நெடுஞ்செழியன். வாழ்க்கையின் நிலையாமையைக் கூறி நல்வழியை வற்புறுத்துவது காஞ்சித் திணை. மதுரையில் வாழும் தலைவனுக்கு எடுத்துக் கூறிய காஞ்சி ஆகையால் 'மதுரைக்காஞ்சி' எனப் பெயர் பெற்றது. இந்நூலில் பாண்டிய மரபு, பாண்டிய நாடு, நெடுஞ்செழியனுடைய முன்னோரின் அருமை பெருமைகள், மதுரை மாநகரின் சிறப்பு ஆகியவை வருணிக்கப்பட்டுள்ளன. 354 அடிகளில் ஒருவர் ஒருநாள் காலையில் தொடங்கி மறுநாள் விடியல் வரை நகரத்தைச் சுற்றிவந்து கண்டவற்றை முறைப்படக் கூறுவதுபோல் மதுரை நகர வருணனை அமைந்துள்ளது. இப்பாட்டின் பிற்பகுதியில் நெடுஞ்செழியன் நாட்காலையில் வீரர்களுக்கும், பாணர் போன்றார்க்கும் களிறு முதலியவற்றைப் பரிசாக வழங்கும் நிகழ்ச்சியும், வீரர்கள் ஆற்றிய பல்வகை வீரச்செயல்களும் கூறப்பட்டுள்ளன.

## நெடுநல்வாடை

இப்பாட்டு 188 அடிகளை உடையது. காதல் பற்றி மிகச் சிறந்த முறையில் பாடிய பாடலாகும். பகைமேற் சென்ற

பாண்டியன் நெடுஞ்செழியனைப் பிரிந்து வருந்தும் தலைவியின் துயர் தீரும் வகையில் மன்னன் போரில் விரைவில் வெற்றிபெற்றுத் திரும்புமாறு அருளவேண்டும் எனப் போர்த்தெய்வமாகிய கொற்றவையை அரண்மனை மகளிர் வேண்டுவதே இந்நூலின் மையக் கருத்தாய் அமைந்துள்ளது. இப்பாட்டில் பாண்டிமாதேவியின் அரண்மனை வருணனையும், மன்னன் இருந்த பாசறை வருணனையும் இவை இரண்டையும் ஊடுருவிச் செல்லும் வாடைக் காற்றின் வருணனையும் சிறப்பாக அமைந்துள்ளன. இடையிடையே கூறப்படும் செய்திகளால் மலர் மலர்வதன் மூலம் பொழுதை அறியும் வழக்கமும், மகளிர் மாலைக் காலத்தைக் கொண்டாடும் செயலும், மனைவகுக்கும் முறையும் அறியப் பெறுகின்றன.

## குறிஞ்சிப் பாட்டு

இந்நூல் 261 அடிகளால் அமைந்தது. இதில் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றவழிக் கூறும் கூற்றாக ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ்ச்சுவை அறிவுறுத்தற் பொருட்டுக் கபிலரால் பாடப்பெற்றது. இந்நூலில் குறிஞ்சித் திணைக்குரிய இயற்கைப்புணர்ச்சியும், பின்னர் நிகழும் புணர்ச்சிகளுக்கு நிமித் தங்களும் கூறப் பெறுதலின் இப்பெயர் பெற்றது.

## பட்டினப்பாலை

இந்நூல் பத்துப்பாட்டிலுள்ள மற்றோர் அகப்பாடலாகும். இப்பாட்டு 301 அடிகளை உடையது. இந்தப் பாட்டில் காதலர் பிரிவாகிய பாலைத்திணை என்னும் பொருள் பற்றியும்; சோழன் கரிகாலன் பெருமையும் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பும் கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் பாடப்பட்டுள்ளன.

## மலைபடுகடாம்

இந்நூல் பத்துப்பாட்டுள் இறுதியாக விளங்கும். 583 அடிகளைக்கொண்டது. பரிசில் பெறவரும் கூத்தன் ஒருவனைப் பரிசில் பெற்றவன் தன்னனிடம் ஆற்றுப்படுத்துவதாக அந்நன்னனைப்

பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடியது. இது கூத்த ராற்றுப்படை எனவும் வழங்கப்பெறும். ஒருமலையில் பிறக்கும் பலவகை ஓசைகள் இதில் கூறப்பட்டுள்ளன. அந்தமலை ஒரு யானையாக உருவகம் செய்யப்பட்டு, மலையில் எதிரொலிக்கும் பல்வேறு ஓசைகளும் அந்த யானையின் மதம் போன்றவை என்று விளக்கப்படுவதால், மலைபடுகடாம் என்ற அந்தப்பெயர் கற்பனை நயம் வாய்ந்ததாக உள்ளது. மேலும் இந்நூலில் கூத்தருடைய இசைக்கருவிகளும், கலைவாழ்க்கையும் சித்திரிக்கப்பட்டுள்ளன.

# நிலங்கள்

## குறிஞ்சி

பழந்தமிழர் நிலத்தை நான்கு வகையாகப் பிரித்து நானிலம் எனப் பெயரிட்டனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனப்படும். இவற்றுள் முல்லையும் குறிஞ்சியும் தத்தமக் குரிய நீர்வளத்தினின்றுங் குறைந்து, மக்கள் குடியிருப்புக்கேலாமல் முறைமை திரிந்து, அச்சுறுத்தும் வெப்பமுடையவையானால் அப்பகுதி பாலையெனப் பெறும். ஆகவே பாலையைச் சேர்த்து ஐவகை நிலமாகக் கூறுவர். இவற்றுள் 'குறிஞ்சி' என்பது மலையும் மலைசார்ந்த இடமுமாகும். மலைப்பகுதியிலே குறிஞ்சி மலர் சிறந்து காணப்படுவதால் அப்பெயர் பெற்றது.

குறிஞ்சி நிலத்தலைவன் வெற்பன், பொருப்பன், சிலம்பன், நாடன் எனப்பெறுவான்; தலைவி கொடிச்சி எனப்பட்டாள். இந்நிலக் குடிமக்கள் கானவர், வேட்டுவர், குன்றுவர், புனவன், வேட்டுவித்தியர், குறத்தி, குன்றுவித்தியர் எனப்பெறுவர். இந்நில மக்களின் உணவு ஐவனநெல், தினை, மூங்கிலரிசி, கிழங்கு, தேன் முதலியன. இவர்கள் தொழில் தினை முதலியன விளைவித் தலும், தினைக் காவலும், தேனழித்தலும்,[2] கிழங்கு அகழ்தலும், வேட்டையாடுதலும் போல்வன.

---

2. ..................................சாரல்
கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும்... (குறுந். 3)

குறிஞ்சி நிலத்தவர் மரங்களை வெட்டி அவற்றைச் சுட்ட பின்னர் அந்நிலத்தில் தினை, ஐவனம் முதலியவற்றை விதைத்து அருவி நீர்ப்பாய்ச்சி விளைவிப்பார்கள். தினையோடு பருத்தி, அவரை என்பவற்றையும் இடையிட்டு விளைவிப்பதும் உண்டு. தாம் விளைவிக்கும் பயிர்களை மகளிரும், ஆடவரும் காப்பர். மகளிர் தினைப்புனத்தைக் கிளி, குருவி ஆகிய பறவைகள் அழித்த லினின்றுங் காப்பர். குறவன் தினையை உண்ணவரும் யானை யைக் கவண் எறிந்து விரட்டுவான். இராக் காலங்களில் கொள்ளிக் கட்டையை அருகில் வைத்துக் கொண்டிருப்பான். பலாப்பழங் களைக் குரங்குகள் கவராமல் மரந்தோறும் வலைகள் மாட்டிக் காப்பர்.

குறிஞ்சி நிலத்து வேட்டுவர் மான் முதலியவற்றை வேட்டை யாடுவர். கற்களை வீசியும், சீழ்க்கை அடித்தும், புதர்களில் மறைந்துள்ள விலங்கினங்களை எழுப்பி அலைத்து வேட்டை யாடுவர்.

குறிஞ்சி நிலத்தவர் கவலைக் கிழங்கை அகழ்ந்துண்பர். அங்ஙனம் அகழ்ந்த குழியில் ஒரு கானவன் மணியைப் பெற்ற செய்தி ஒருபாடலில் காணப் பெறுகிறது.

**'கவலைக் கெண்டிய அகல்வாய்ச் சிறுகுழி' (குறுந். 233:1)**

மலைச்சாரல்களில் தேன் மிகுதியாகக் காணப்படும். உயர்ந்த இடங்களிலுள்ள தேனை ஒற்றை மூங்கிலையே ஏணியாகக் கொண்டு ஏறி எடுப்பர். அந்த ஏணியைக் **'கண்ணேணி'** என்பர். இது **'மால்பு'** என்ற சொல்லால் சங்க இலக்கியத்தில் குறிக்கப் பட்டுள்ளது. மூங்கிலின் கணுவைக் கழியாமல் கால் வைக்கும்படி செப்பஞ்செய்து சார்த்தி அக்கணுவையே படியாகக் கொண்டு ஏறுவது, பக்க மலைகளில் தேனடை மிகுந்து காணப்பட்டது சங்கப் பாடல்கள் பலவற்றுள் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பிரசந் தூங்குமலை (குறுந். 392.8**

**தேன் தூங்கு உயர்சிமைய மலை (மது.3:4)**

மால்பில் ஏறித் தேன் எடுத்தலை,

**கலைகை யற்ற காண்பி ணெடுவரை**
**நிலைபெய் திட்ட மால்புநெறி யாகப்**
**பெரும்பயன் தொகுத்த தேங்கொள் கொள்ளை**
**(மலைபடு.315-17)**

எனப்பட்டது. மலைத்தேனைப் பெருந்தேன் என்றும் வழங்குவர். யானைத் தந்தத்தை விற்று அதற்கு ஈடாக உணவுப் பொருளைப் பெற்று மலைவாழ் மக்கள் உண்பர். குறவர் முருகனை வழிபடுவர். முருகனுக்கு வெறியாட்டெடுப்பர். தம்முடைய புனத்தில் விளைந்த முதற்கதிரைக் கடவுளுக்கு இட்டபின்னரே உண்பர். அவ்வாறு இறைவனுக்குப் படைத்தலின் '**கடியுண் கடவுள்**' (புதியதை உண்ணும் கடவுள்) என்று அத் தெய்வத்தை ஒரு புலவர் குறிப்பிட்டுள்ளார். இதனைக் குறுந்தொகை,

**புனவன் துடவைப் பொன்போல் சிறுதினைக்**
**கடியுண் கடவுட் கிட்ட செழுங் குரல்**
**அறியா துண்ட மஞ்ஞை ஆடுமகள்**
**வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கும் (105)**

என்று குறிப்பிடுகிறது. கடம்ப மரத்தை வைத்து அங்கு மேடையமைத்து அக்கடம்பையே கடவுளாகப் போற்றுவதுமுண்டு. அவ்விடத்திற்கு மன்றம் என்று பெயர். அத்தெய்வத்தின் மேல் ஆணையிட்டுச் சூள் உரைப்பர். குறிஞ்சிநில மக்கள் தம் சிறார்களுக்குப் புலிப்பல் தாலியை அணிவிப்பர். குறிஞ்சி நிலத்து ஊர்கள் சிறுகுடி என்றும், பாக்கம் என்றும் வழங்கப்பட்டுள்ளன.

### முல்லை

காடும் காட்டைச் சார்ந்த இடமும் முல்லைநிலம் எனப்பகுக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் செம்மண் பரந்திருத்தலின் இந்நிலத்தைச் **செம்புலம்** என்பர். இந்நிலம் கார்ப்பருவத்தில் வளம் பெற்று விளங்கும். இந்நிலத்திற்குரிய முல்லை மலரைப் பற்றிய செய்திகள் பல காணப்படுகின்றன. சங்க இலக்கியங்களுள் நப்பூதனார் என்னும் நல்லிசைப் புலவரால் முல்லைத்திணை பற்றி எழுதப்பட்ட 'முல்லைப்பாட்டு' என்ற ஒரு தனிநூலே அமைந்

துள்ளது. இப்புலவர் முல்லைத்திணைக்குரிய கார்காலம், அந்தி மாலை ஆகிய பெரும்பொழுது, சிறுபொழுதுகளையும் அந்நிலத் தெய்வமாகிய திருமாலையும், அந்நிலக் கருப் பொருளாகிய ஆன்களையும், கன்றுகளையும், அந்நிலத்துவாழ் மக்களாகிய ஆயர், ஆய்ச்சியரையும், அவர்கள் செய்தொழிலாகிய ஆநிரை களைக் காத்தலையும் முல்லைப் பாட்டின் தொடக்கத்திலேயே அழகுறக் கூறியுள்ளார்.

இடைச்சேரியிலே பன்னிற மணிகளை நிரல்படக் கோத்தாங்குச் சிறிய தாமணியிலே தொடுக்கப்பட்ட பன்னிற ஆன்கன்றுகள் நிற்கின்ற அழகும், அவற்றின்பால் அன்புகொண்ட ஆய்மகள், 'நுந்தாயர் இன்னே வருகுவர் வருந்த வேண்டா' என ஆறுதல் கூறும் அழகும், பெருமழை பொழிந்த சிறுபுன்மாலைப் போதா கலான் அவள்தன் கைகளைத் தோளிற் கட்டிக்கொண்டு நிற்கும் அழகும் சித்திரிக்கப்பட்டுள்ளன. இக்கருத்தமைந்த பாடலடிகள் பின்வருமாறு:

பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை
... ... ... ...
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்
நடுங்குசுவ லசைத்த கையள் கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
இன்னே வருகுவர் தாயர் என்போள் **(முல்லை. 6-16)**

கோவலர் இருக்கையைக் குறித்துப் பெரும்பாணாற்றுப்படை,

குளகரை யாத்த குறுங்காற் குரம்பைச்
செற்றை வாயிற் செறிகழிக் கதவிற்
கற்றை வேய்ந்த கழித்தலைச் சாம்பின்
அதளோன் துஞ்சுங் காப்பின் உதள
நெடுந்தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றில்
கொடுமுகத் துருவையொடு வெள்ளை சேக்கும்
**(பெரும். 148-53)**

என்று வருணித்துள்ளது. இத்தகைய இல்லத்தில் வாழும் ஆயர் மகளிர் செறிந்த இருள் புலர்கின்ற விடியலிலே எழுந்து தன்

கடமைமேற் சென்று, புலிபோலும் முழக்கத்தினையுடைய மத்தினை ஆரவாரிக்கும்படி கயிற்றை வலித்து, குடைக்காளானின் முகிழ் போலும் முகிழையுடைய உறையிட்டு இறுகிய தயிரைக் கடைந்து, தலையின் மேலே மெல்லிய சுமட்டின்கண் அம்மோர்ப் பானையை ஏற்றிச் சென்று விற்று, அம்மோர் விற்றுப் பெற்றுவந்த நெல் முதலியவற்றாலே சுற்றத்தார் எல்லோரையும் உண்பிப்பாள்.

முல்லை நிலத்து ஆண்மகனோ, செருப்பு விடாமல் அணிந்ததனால் வடுவழுந்தின வலிய அடியினையும், ஆனிரைகளுக்கு வருத்தஞ் செய்யும் கோலை ஊன்றிய கோடரித் தழும்பிருந்த வலிய கையினையும், இருதலைகளினும் உறிகளையுடைய காக்கள் மேலே இருந்ததனால் உண்டாகிய தழும்பு மிக்க தோள்களையும், மேன்மையுடைய ஆன்பாலைத் தழுவிய மயிரினையும், ஒற்றை ஆடையினையும் உடைய பாற்சோற்றை உண்ணும் இடையனாவான். இதேபோல், அகப்பாடல் ஒன்று இடைமகன் ஓவியத்தை,

> கடைகோற் சிறுதீ யடைய மாட்டித்
> திண்கால் உறியன் பானையன் அகலன்
> நுண்பஃ றுவலை பொருதிற நனைப்பத்
> தண்டுகால் ஊன்றிய தனிநிலை இடையன்
> (அகம். 247: 5-8)

எனச் சித்திரித்துள்ளது.

இவ்விடையர்கள் கன்றுகளும், ஆனிரைகளும் உண்ணும் வகையில் அவற்றைப் புல்நிறைந்த நிலத்திற்கு ஓட்டிச் செல்வர். காட்டுப் பகுதிகளில் பசுத்திரள்களுடன் தங்குவர். அப்பொழுது அழகிய நுண்புகை கமழும்படி ஞெலிகோலிடத்தே கையாலே கடைந்துகொண்ட கடைக்கொள்ளியாலே துளையிடப்பட்ட குழலை ஊதி எழுப்பின பாலை என்னும் பண்ணை நுகர்ந்து அதனை வெறுத்த பொழுது, குமிழினது உள்துளை பொருந்திய கோட்டை வளைத்துக் கட்டின மரலின் கயிறாகிய நரம்பையுடைய வில் போன்ற யாழிலே குறிஞ்சிப் பண்ணை விரலாலே தெறித்து எழுப்புவர்.

முல்லைநில மக்கள் வாழும் சீறூரில் முள்ளுடைய உயிர் வேலியிட்டு ஆன்முதலிய மேயவிடாமல் தடைசெய்யப்பட்ட நிலத்தில் பெண்யானைகள் நின்றாற் போன்று வரகு முதலிய நிறைந்து நிற்கும் குதிர்களையுடைய முன்றிலையும், யானையினது காலை ஒக்கும் வரகு திரிகை நட்டு நிற்கும் பந்தரினையும், கொட்டில் களையும் கொண்ட கார்கால மேகங்கள் போன்ற வரகு வைக்கோலால் வேயப்பட்ட குடியிருப்புகளும் நிறைந்து விளங்கின.

இச்சீறூரில் வாழ்வோரின் விருந்தோம்பற் சிறப்பினைக் கூறும் பெரும்பாணாற்றுப்படை ஆசிரியர், 'நெடிய கொத்தினையுடைய சிறுபூளையினது பூவை ஒத்த குறிய தாளினையுடைய வரகினது சிறிய பருக்கைகளாகிய சோற்றை, வேங்கை மலரை ஒத்த அவரை விதையினது நன்றாகிய பருப்பை மிகவிட்டுத் துழாவுதலாலே இனிய சுவையுடைத்தாகிய மூரலுடன் அளிப்பர்' என்றார்.

## மருதம்

வயலும், வயல் சார்ந்த இடமும் மருதமாகும். மருதநிலத் தலைவன் ஊரன், மகிழ்நன் எனப்படுவான். நீர்வளம் மிக்க நிலப் பரப்பில் வாழ்வோர் உழவர், உழத்தியர், கடையர், கடைசியர் முதலியோராவர். சங்க இலக்கிய நூல்களாகிய பெரும் பாணாற்றுப்படை, மலைபடுகடாம், மதுரைக்காஞ்சி போன்ற வற்றில் மருதநில மக்களின் வாழ்க்கை முறை, அவர்களது பண்பு, தொழில முதலியன விரிவாகக் கூறப்படுகின்றன.

வேளாண்மை இந்நில மக்களின் இன்றியமையாத் தொழிலாய் அமைந்தது. இவ்வுழவர்கள் தம்தொழிலில் சோம்பியிராதவர் என்பதனைப் பெரும்பாணாற்றுப்படை 'மடியா வினைஞர்' என்ற தொடரால் சிறப்பித்துக் கூறுகிறது. வயல்களில் வேலை செய்யும் உழவர்கள் தம் குடில்களை மருதநிலத்து வயல் வரம்புகளிலே புதிய வைக்கோலால் வேய்ந்து அமைத்து வாழ்ந்தனர். மேலும் இவ்வுழவர்களுள் ஒருசாரார் வாழ்ந்த நல்ல இல்லங்களின் சிறப்பும் போற்றப்பட்டுள்ளன. எருதோடு கூடிய ஆன்கள் ஈன்ற வளைந்த காலையுடைய கன்றுகள் கட்டப்பட்ட தாமணியாகிய நெடுந்தாம்புகள் கட்டின முளைகளையுடைய பக்கத்தினையும்,

ஏணிகளுக்கும் எட்டாத நெடிய வடிவினையும், பழைய நெல்லாகிய உணவினையும் உடைய முதிர்ந்த நெற்கூடுகள் உள்ள உயர்ந்த நல்ல இல்லங்களும் காணப்பட்டன.

இவ்வுழவர்களுடைய அழகிய பிள்ளைகள் முள்ளியினது கரிய மலரைப் பறித்து மாலையாகத் தொடுத்து தலைநிறையும்படி சூடிக் கொண்டு, மேலும் கண்பினது காயை முறித்து அதன் சுண்ணத்தைத் தம் மார்பிலே, பொன்னுரை காணும் உரைகல் போல் தோன்றும்படி அடித்து அப்பிக்கொண்டு வரும், இரும்பைத் தகடாக்கினாற் போன்ற சுருக்கமற்ற மெல்லிய தோலையுடைய ராய் அழகுடன் திகழ்வர். (பெரும். 214-23)

## நெய்தல்

கடலும் கடலைச் சார்ந்த இடமும் நெய்தல் நிலமாகும். நெய்தல் நிலத்தலைமக்கள் கொண்கன், சேர்ப்பன், துறைவன், புலம்பன் என்னும் பெயர்களால் வழங்கப்பட்டனர். நெய்தற்கு மக்கட்பெயர் நுளையர், திமிலர், பரதவர், நுளைத்தியர், பரத்தியர் எனப்பட்டது.

கடற்கரையிலுள்ள மணல்மேட்டில் குடிலமைத்து வாழ்வார் பரதவர் எனப்படுவர். இவர்கள் வாழ்ந்த குடில் 'மூங்கிற் கோலை நிரல்படச் சார்த்தி, வெள்ளிய மரக்கொம்புகளை இடையிடையே கலந்து தாழை நாராலே வலித்துக் கட்டி, மேலே தருப்பைப் புல்லாலே வேயப்பட்ட குறுகிய இறப்பையுடையதாய் விளங்கும். மீனை வாரி எடுக்கும் பறிகள் அம்முற்றத்தில் அசைந்து கொண் டிருந்தன. குடிசையை ஒட்டி வளைந்த காலையுடைய புன்னை களின் கொம்புகளை வெட்டியிடப்பட்ட சிறிய பந்தல் உள்ளது. அதில் சுரை போன்ற பசிய காய்கள் தொங்கின. பரந்த மணலை யுடைய அப்பந்தரிலே வயதில் இளையவர்களும், முதியவர்களும் சுற்றத்தாருடன் நிறைந்திருந்து பின்னர் புலால் நாறும் முனை யினையுடைய அம்பையும், வில்லையும் ஒப்பச் சிவந்த வரியினை யுடைய கயல்களோடே பசிய இறாமீன்கள் விளங்கும் கருமை யுடைய பெரிய ஆழ்ந்த குளங்களினின்றும் பிள்ளைகளோடே உலாவி மீனைப் பிடிப்பர்'. (பெரும். 263-72)

பரதர் படகிற் சென்றும் மீன் வேட்டை ஆடுவர். அப்படகு 'திமில்' என்றழைக்கப்படும். சில சமயங்களில் சுறாமீன் பரதவரைத் தன் கொம்பாலும், வாலாலும் எறிந்து புண்படுத்தி விடும். அப்பொழுது அவர்கள் புண் ஆறும் வரையில் வீட்டிலிருந்து புண்ஆறிய பின் மீண்டும் மீன்வேட்டைக்குச் செல்வர். அவனது மனைவி உடனிருந்து அவனைப் பாதுகாப்பாள். பின்னரே அவளும் தனக்குரிய வேலையில் ஈடுபடுவாள் என்பதனைக் குறுந் தொகைப் பாடலொன்று,

**வயச்சுறா எறிந்த புண்தணிந்து எந்தையும்**
**நீனிறப் பெருங்கடல் புக்கனன் யாயும்**
**உப்பை மாறி வெண்ணெல் தரீஇய**
**உப்புவிளை கழனிச் சென்றனள் (குறுந். 269:3-6)**

பரதவ மாக்கள் மீன்பிடித்தலையே தலையாய தொழிலாகக் கொண்டவர். எனினும் உப்பு விளைவிப்பதும் அவர் தொழிலாகும், இவற்றால் வரும் பொருளைக் கொண்டே அவர்கள் வாழ்க்கையை நடத்தி வருவர்.

இப்பரதவ மக்கள் கட்டான உடலமைப்பு உள்ளவர்கள். முறுக்கேறிய தசையினையும், குன்றெனத் திரண்ட தோள்களையும் உடையவர்கள். அஞ்சாத நெஞ்சமும், ஆற்றலும் கொண்டவர்கள். அவர்களைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார்,

**படலைக் கண்ணிப் பருஏர் எறுழ்த் திணிதோள்**
**முடலை யாக்கை முழுவலி மாக்கள் (பெரும். 60-61)**

என்றனர். இவர்களைப் பற்றிய செய்திகளைச் சங்கப் புலவர்கள் பலவிடங்களில் குறிப்பிட்டுள்ளனர். இவர்கள் மீன்வேட்டைக்குச் செல்லாத நாட்களில்கூட இவர்களது துள்ளும் மனமும் துடிக்கும் கரமும் அடங்கி இரா. எனவே இவர்கள், 'வரிமணல் பரந்த மணல்மேடுகளில் தங்கள் சுற்றத்தார்களுடன் குழுமிக் கையாலும், படைக்கலங்களாலும் குத்தியும், குதித்தும் விளையாட்டாகப் போரிட்டு மகிழ்ச்சியடைவர். அதோடல்லாமல் உள்ளத்தே எழும் செருக்கினால் தருக்கிப் பக்கத்தில் உள்ள பனைமரங்களிலே இலக்கு வைத்துக் கற்களை எறிந்து தங்கள் ஆற்றலை அளந்து ஆரவாரமிட்டுக் களிப்பர்.' இதனைப் பட்டினப்பாலை

வரிமணல் அகன்திட்டை
இருங்கிளை இனன்ஒக்கல்
கருந்தொழில் கலிமாக்கள்
கடல் இறவின் சூடுதின்றும்
வயல் ஆமைப் புழுக்குண்டும்
வறள் அடும்பின் மலர்மலைந்தும்
புனல் ஆம்பல் பூச்சூடியும்
நீல்நிற விசும்பில் வலன்ஏர்பு திரிதரும்
நாள்மீன் விராஅய கோள்மீன் போல
மலர்தலை மன்றத்துப் பலர்உடன் குழீஇக்
கையிலும் கலத்திலும் மெய்உறத் தீண்டி
பெருஞ்சினத்தில் புறங்கொடாஅது
இருஞ்செருவின் இகல்மொய்ம்பினோர்
கல்எறியும் கவண்வெரீஇப்
புள்இரியும் புகர்ப்போங்கை (பட். 60-73)

வெறியூட்டும் கள்ளினை அளவு கடந்து அருந்திக் குரவைக் கூத்தாடிக் குதூகலிப்பர்.

திண்திமில் வன்பரதவர்
வெப்புடைய மட்டுண்டு
தண்குரவைச் சீர்தூக்குந்து (புறம். 24:4-6)

இப்பரதவ மக்கள் புலர்காலையில் எழுந்து தங்கள் திமில்களில் ஏறி காலத்துக்கும், கடலுக்கும் ஏற்ற வலைகளை நிரப்பிக் கொண்டு, கருங்கடலில் வேட்டைமேற் செல்வர். அவர்கள் **கதிர்** என்னுங் கருவிகொண்டு நூல் இழைகளை முறுக்கிக் கயிறு திரித்து புதிதாய்ச் சிறுசிறு வலைத்துண்டுகள் முடித்துப்பின் அவற்றை நன்கு இணைத்து ஒன்றாக்கி முழுவலையாகச் செப்பஞ் செய்வர். முறுக்கிய நூலைக் கொண்டு மீன்கள் கிழித்தமையால் பழுதடைந்த வலைகளையும் சீர்படுத்துவர்.

வடிக்கதிர் திரித்த வல்ஞாண் பெருவலை (நற். 74:1)

பரதவர் குடும்பங்களில் கணவன் மனைவியாகிய இருவருமே உழைத்தனர். இளமகளிரும் மீன் விற்றல், உப்பு விற்றல் ஆகிய

தொழிலை மேற்கொண்டனர். பரதவர் தம் பிள்ளைகளைச் சிறு வயது முதற்கொண்டே குலத் தொழிலில் பழக்குவர். இவர்கள் மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல் ஆகியவற்றையே தலையாய தொழில்களாகக் கொண்டிருந்தனரேனும் முத்துச் சிப்பிகள் நிறைந்த கடற்கரைப் பகுதியில் வாழ்ந்தவர் முத்துக் குளிக்கும் தொழிலிலும், சங்கெடுக்கும் தொழிலிலும் ஈடுபட்டனர்.

பரதவர் முழுமதி நாட்களில் மீன்வேட்டைக்குச் செல்வதில்லை முழுமதி நாளன்று கடல் பொங்கிக் கொந்தளிப்பதால் மீன்பாடும் வாய்க்காது. அன்று தாழையின் கீழ்க் காணப்படும் வெண்டாளி யின் தண்மலரால் மாலை தொடுத்து அணிந்து, கருவுற்ற சுறா மீனின் கூரிய வாள் அரம் போன்ற கொம்பினைக் கடற்கரையிலே நட்டு, அதன்கண் தம் மனைத் தெய்வமாகிய வருணனை வருவித்து, அதற்குத் தாழை மலர் சூட்டிப் பனையின் கள்ளையும், பிற பலியுணவினையும் படைத்துத் தழையுடுத்தத் தம் பெண்டி ரோடும், மக்களோடும் வணங்கி வழிபட்டு வேண்டிய உணவு சமைத்து மனம்போல் ஆடி மகிழ்வர். இதனை நற்றிணை

**திங்களும் திகழ்வான் ஏர்தரும்; இமிழ்நீர்ப்**
**பொங்குதிரைப் புணரியும் பாடுஓ வாதே**
**ஒலிசிறந்து ஓதமும் பெயரும் (335:1-3)**

என்றும்;

**வீழ்த் தாழைத் தாட்தாழ்ந்த**
**வெண்கூ தாளத்துத் தண்பூங் கோதையர்**
**சினைச் சுறவின் கோடுநட்டு**
**மனைச் சேர்த்திய வல்அணங்கினான்**
**மடல் தாழை மலர் மலைந்தும்**
**பிணர்ப் பெண்ணைப் பிழிமகிழ்ந்தும்**
**புன்தலை இரும்பரதவர்**
**பைந்தழைமா மகளிரொடு**
**பாய்இரும் பனிக்கடல் வேட்டம் செல்லாது**
**உவவுமடிந்து உண்டு ஆடியும் (பட். 84-93)**

பரதவ மக்கள் விருந்தினரை அன்புடன் வரவேற்று, இனிது பேணிப்பகுத்துண்டு வாழும் பண்புடையவர். நற்றிணைப் பாடலொன்று, 'காய்கின்ற கதிர் வாட்டும் கடும்பகற் பொழுது; விருந்தினரை உபசரிப்பதில் ஆர்வமிக்குடைய மகளிர் செல்வங் கொழிக்கும் தம் சீர்மிகு மனையில் கொக்கின் நகம் போன்ற சோறு சமைத்து முற்றத்தில் குவித்து வைப்பர்; முதலில் காக்கைக்குப் படைத்துப் பின்னர் வரும் விருந்தினரை மகிழ்வுடன் உண்பிப்பர்' எனக்குறிப்பிட்டுள்ளது.

**கதிர்கால் வெம்பக் கல்காய் ஞாயிற்றுத்**
**திருவுடை வியல்நகர் வருவிருந்து அயர்மார்**
**பொற்றொடி மகளிர் புறங்கடை உகுத்த**
**கொக்கு உகிர் நிமிரல் மாந்தி எற்பட**
**அகலங் காடி அசைநிழற் குவித்த**
**பச்சிறாக் கவர்ந்த பசுங்கண் காக்கை (நற். 258: 3-8)**

காக்கைக்குச் சோறு படைக்கும் வழக்கம் அக்காலத்திலேயே பரதவ சமுதாயத்தினரிடம் இருந்திருப்பதை உணரலாம்.

பரதவ மகளிர் விருந்தினரைப் பேணுவதில் பேரார்வங் கொண்டவர். விருந்தினரைக் கணவரோடிருந்து எதிர்கொண்டழைத்து இன்முகங்காட்டி உண்பித்து மகிழ்வர் என்பது

**மதிஏக் கறூஉம் மாசுஅறு திருமுகத்து**
**நுதிவேல் நோக்கின் நுளைமகள் அரித்த**
**பழம்படு தேறல் பரதவர் மடுப்ப**
**... ... ... ...**
**வறற்குழற் சூட்டின் வயின்வயின் பெறுகுவீர்**
**(சிறு. 157-63)**

எனவரும் பாடலடிகளால் உணரற்பாலது.

இத்தகு நலஞ்சான்ற பரதவர்கள் கடல்வாணிகம் நடைபெற இன்றியமையாதவராய்த் திகழ்ந்தனர். பரதவர்கள் கடலில் கலம் செலுத்தும் பணியாளர்களாய் இருந்தவர்கள் மட்டுமல்லாமல் வணிக உரிமையாளர்களாகவும் இருந்துள்ளனர். பரதவர்கள்

முத்துக் குளித்தலில் ஈடுபட்டு அவ்வாணிகத்தில் உரிமை பெற்று விளங்கிய செய்திகள் பல உள்ளன. அவர்கள் சிற்றரசர்களாகவும்; குறுநிலமன்னர்களாகவும் விளங்கினர் என்பதற்கான சான்றுகளும் உள்ளன. பாண்டிய, சோழப் பேரரசர்களும் பரதவர்களின் வன்மையும், திண்மையும், படைவலிமையும் கண்டு பலகால் பெருங்கவலை கொண்ட செய்தியை மதுரை மாங்குடி மருதனார்,

**செற்ற தெவ்வர் கலங்கத் தலைச்சென்று**
**அஞ்சுவரத் தட்கும் அணங்குடைத் துப்பின்**
**கோழூஉன் குறைக் கொழுவல்சி**
**புலவுவில் பொலி கூவை,**
**ஒன்றுமொழி, ஒலிஇருப்பின்**
**தென்பரதவர்** மது. (139-44)

எனப்பாடுகிறார். பரதவர்கள் சங்க காலத்திலேயே கடற்கரையில் பேராதிக்கம் கொண்டு வாழ்ந்தவர்கள் என்பது சங்கப்பாடல்களி னின்றும் பெறப்படுகிறது. பரதவர்கள் செல்வமும் செல்வாக்கும் படைத்த தலைவர்களாய், கடல் வாணிகத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. பல்வேறு வகைப்பட்ட பண்டங் களையும் கலன்களின்வழி ஏற்றுமதி இறக்குமதி செய்தலாகிய வணிகத்தொழிலில் ஈடுபட்ட பரதவர்களைச் சங்கப் பாடல்கள் பின்வருமாறு போற்றுகின்றன.

முழங்கு கடல்தந்த விளங்குகதிர் முத்தம்
அரம்போழ்ந் தறுத்த கண்ணேர், இலங்குவளை
பரதர் தந்த பல்வேறு கூலம் (மது. 315-17)

என்றும்,

நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை
மாட மோங்கிய மணன்மலி மறுகின்
பரதர் மலிந்த பல்வேறு தெரு (பெரும். 321-23)

என்றும் பாராட்டுகின்றன.

## பாலை

குறிஞ்சியும் முல்லையும் வேனிலின் வெம்மையால் தம் இயல்பு திரிதலின் பாலைநிலம் உண்டாகும் என்பர். பாலை நிலத்தில் வெம்மை மிகுதியினால் நீர்நிலைகள் வற்றி உலர்ந்தும், மரம் முதலியன தீய்ந்தும் உலர்ந்தும், பொலிவிழந்து காணப்படுகின்றன. நிழலும் நீருமின்றி வெம்மையும் தனிமையும் உடையதாய் இருத்தலின் பாலைநிலம் 'இன்னா வைப்பு' என்றும் கூறப்படும்.

இன்னா வைப்பிற் சுரன் (குறுந். 314-6.)

மேலும் நீரில் வைப்பும், புலர்ந்த சுனையும், அறுசுனையும் பாலைநிலத்தின் நிலையைப் புலப்படுத்துகின்றன. 'நிழல் அடங்கி அற்றுப்போன, சிறிதும் நீரில்லாத கடத்தற்கரிய பாலை நிலம்' எனப் பொருள்படக் குறுந்தொகை

நிழல்ஆன்று அவிந்த நீரில் ஆரிடை (356: 1)

என்றது.

இத்தகைய பாலைநிலத்தும் மிக அருமையாகச் சிலவிடங்களில் மட்டும் சிறிதளவு நீர் சிறுபள்ளங்களில் தங்கியிருக்கும். அந்நீரும் மிகவும் கலங்கியும் மிக்க வெம்மையுற்றும் இருக்கும்.

அறுசுனை மருங்கின் மறுகுபு வெந்த
வெவ்வெங் கலுழி (குறுந்.356: 3-4)

மற்றொரு பாடல் அருகிலுள்ள செடியின் மலர்கள் விழுந்து அழுகிப்போன சிறிதளவு நீருள்ளதொரு பள்ளத்தைப் பற்றிக் கூறுகிறது. அத்தகைய கொடிய பாலை நிலத்தில் வழிப்போவாரது உயிரைத் தாங்குதற்குரிய அறத்தைச் செய்யும் நெல்லி மரத்தினது அழகிய பசிய காய்கள் உதிர்ந்து கிடக்கும். (குறுந். 209). சங்க இலக்கியப் பாடல்களினின்றும் பாலை வழிச் செல்வோர் ஒரு துணையுமின்றிப் பருந்தின் ஒலியை உசாத்துணையாகக் கொள்வர் என்றும்; உப்பு வாணிகர் கூட்டமாகச் சேர்ந்து உப்பு வண்டிகளை இந்நிலத்தின் வழியாக ஓட்டிச் செல்வர் என்றும், பொருள் தேடச் செல்லும் தலைவன் பாலைநிலத்தின் வழியாகச் செல்வான் என்றும், உடன்போக்கில் தலைவனுடன் தலைவியும்

யும் கொடிய பாலைநிலத்தைக் கடந்து செல்வாள் என்றும் அறிய முடிகின்றது. பாலைநிலத் தலைவன் பெயர்கள் 'காளை, விடலை' எனக் குறிக்கப்பட்டுள்ளன.

பாலை நிலத்தில் வாழ்ந்தவர் 'எயினர்' எனப்பட்டனர். அவர்தம் தொழில் ஆறலைத்து உண்ணலாகும். அவர்கள் தொழிலைப் பெரும்பாணாற்றுப்படை 'வழிப் போவாரைக் கதறும்படி வெட்டி, அவர்கள் கையிலுள்ள பொருளைக் கைக் கொள்ளும் களவே உழவுபோலும் இல்வாழ்க்கைத் தொழிலாக உடைய கொடுமையுடையோர்' எனப் பொருள் தரும் வகையில்,

> **அத்தம் செல்வோர் அலறத் தாக்கிக்**
> **கைப்பொருள் வெளவுங் களவேர் வாழ்க்கைக்**
> **கொடியோர்.........** (39-41)

என்றும்

> **..............சாத்தெறிந்து**
> **அதர்கூட் டுண்ணும் அணங்குடைப் பகழிக்**
> **கொடுவில் ஆடவர்** (167:7-9)

என்று அகநானூற்றுப் பாடலும் சித்திரிக்கின்றன. இதனால் இவர்கள் ஆறலை கள்வர் எனப்பட்டனர். இவர்கள் துவர்த்த நிறத்தையுடைய ஆடையையும், செவ்விய அம்புத் தொடையை யும் உடையவர். 'துவர்செய் ஆடைச் செந்தொடை மறவர்' (நற் 33) எனப்பட்டனர். பலமுறை வழிப்போவாரை எய்து மழுங்குவதால் அம்பினைச் செப்பஞ் செய்வர். கொல்லனது உலைக்களத்துள்ள பட்டடைக் கல்லைப் போன்ற வெம்மை யுடைய பாறைமேல் ஏறி எயினர் தம் அம்புகளைத் தீட்டுவர். பின்னர் தம்முடைய நகத்திற் புரட்டிக் கூர்மை பார்ப்பர்.

> **..............கள்வர்தம்**
> **பொன்புனை பகழி செப்பங் கொண்மார்**
> **உகிர்நுதி புரட்டும்** (குறுந். 16:1-3)

இவர்கள் எப்பொழுதும் கூற்றுவனைப் போன்ற கொலைத் தொழிலைச் செய்யும் மறச்சாதியாராவர். இவர்கள் வழிப் போவாரைத் தாக்கிக்கொன்று அவர்களிடமுள்ள பொருள்களைக்

கவர்ந்துசெல்வர். இவ்வாறு எயினமறவர் கொன்றமையால் இறந்துபட்டவர் தசையைப் பருந்து விரும்பி உண்ணும். 'சில சமயம் பாலைநிலத்தில் செல்வாரை அந்நிலத்திலுள்ள ஆறலை கள்வர் கொன்று அவர்கள் உடல்களைத் தழைக்குவியலால் மூடி விடுதல் வழக்கம். (குறுந். 77)

பாலைநிலத்தில் செல்லும் வணிகர் கூட்டத்தை எதிர்த்து அவரது பொருளைக் கைக்கொள்ளல் ஆறலைகள்வர்க்கு இயல்பு. அப்பொழுது தண்ணுமையை முழக்குவர்.

**வேற்றுமுனை வெம்மையிற் சாத்துவந் திறுத்தென**
**வளையணி நெடுவேல் ஏந்தி**
**மிளைவந்து பெயருந் தண்ணுமைக் குரலே**
**(குறுந். 390:3-5)**

**வேட்டக் கள்வர் விசியுறு கடுங்கட்**
**சேக்கோ ளறையுந் தண்ணுமை (அகம். 63: 17-18)**

எனவரும் பாடலடிகள் காட்டாக அமைவன.

## கணந்துள் பறவை

கொடிய பாலை நிலத்தின் வழியே செல்கையில் வழிப் போவார்க்குக் கணந்துள்பறவை ஆறலை கள்வர் வருவதை அறிந்து ஒலிக்கும். அதை உணர்ந்து வம்பலர் பிழைத்துச் செல்வர். குறுந்தொகைப் பாடலொன்று, வழியின் அயலிலே இருந்த பெரிய தொகுதியாகிய அழகிய சிறகுகளையும், நெடிய காலையும் உடைய கணந்துட்பறவைகள், தமக்கு ஊறுவிளைவிக்கும் வேட்டுவ மக்க ளுண்மையை அறிவுறுத்தி, வழிப்போகும் பிரயாணிகளது படைத் திரளை இடத்தினின்று நீங்கச் செய்யும்.

**ஆற்றய லிருந்த விருந்தோட் டஞ்சிறை**
**நெடுங்காற் கணந்துள் ஆளறி வுறீஇ**
**ஆறுசெல் வம்பலர் படைதலை பெயர்க்கும்**
**(குறுந். 350: 4-6)**

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்ஙனம் கொலைவெங் கொள்கைக் கொடுந்தொழில் மறவ ராகிய ஆறலைகள்வர்—கடுங்கண் மறவர் (அகம்.87:7); கொலை வில் ஆடவர் (அகம். 97:6) கொலைவில் எயினர் (ஐங்.363:1) எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## கருப் பொருள்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| நிலம் | தெய்வம் | உணவு | விலங்கு | மரம் | பறவை |
| முல்லை | மாயோன் | வரகு<br>சாமை<br>முதிரை | மான்<br>முயல் | கொன்றை<br>குருந்து | காட்டுக்<br>கோழி<br>கவுதாரி |
| குறிஞ்சி | முருகன் | ஐவன<br>நெல்<br>திணை<br>மூங்கில்<br>அரிசி | யானை<br>புலி<br>பன்றி<br>கரடி | அகில்<br>சந்தனம்<br>தேக்கு<br>வேங்கை | மயில்<br>கிளி |
| பாலை | கொற்றவை | ஆறலைத்தலால்<br>கிடைக்கும்<br>பொருள் | வலியழிந்த<br>யானை,<br>புலி, செந்நாய் | பாலை<br>இருப்பை<br>கள்ளி<br>சூரை | பருந்து<br>புறா<br>கழுகு |
| மருதம் | இந்திரன் | செந்நெல்<br>வெண்ணெல் | எருமை<br>நீர்நாய் | வஞ்சி<br>காஞ்சி<br>மருதம் | நீர்க்கோழி<br>தாரா |
| நெய்தல் | வருணன் | மீனும்<br>உப்பும்<br>விற்பதால்<br>கிடைக்கும்<br>பொருள் | உமண்<br>பகடு | புன்னை<br>ஞாழல் | கடற்<br>காக்கை<br>அன்னம்<br>அன்றில் |

| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|
| பறை | தொழில் | யாழ் | பூ | நீர் | ஊர் |
| ஏறுகோட் பறை | நிரை மேய்த்தல் வரகு களை கட்டல் கடா விடுதல் | முல்லை யாழ் | முல்லை பிடவு தளவு தோன்றி | கான்யாறு | பாடி, சேரி பள்ளி |
| தொண்டகப்பறை வெறி யாட்டுப் பறை | தேன் எடுத்தல் கிழங்கு அகழ்தல் தினை விதைத்தல் புனங் காத்தல் | குறிஞ்சி யாழ் | குறிஞ்சி வேங்கை காந்தள் | அருவி சுனை | சிறுகுடி குறிச்சி |
| நிரை கோட் பறை | வழிப் பறித்தல் கெரிள்ளை கொள்ளு தல் | பாலை யாழ் | மரா குரா பாதிரி | அறுநீர்க் கூவல் அறுநீர்ச் சுனை | பறந்தலை |
| நெல்லரி பறை மணமுழவு | உழவு | மருதயாழ் | தாமரை கழுநீர் | ஆறு பொய்கை கிணறு | ஊர் |
| மீன்கோட் பறை | மீன் பிடித்தல் உப்பு விளைவித் தல் அவற்றை விற்றல் | நெய்தல் யாழ் | நெய்தல் கைதை | மணற் கேணி கடல் | பட் பர |

## இயல் மூன்று

# தொழில்கள்

## தொழில்கள்-ஒரு வரையறை

பண்டைத் தமிழகத்தில் வழக்கிலிருந்த தொழில்கள் குறித்து அறியுமுன்னர், தொழில் என்பதற்கு ஒரு வரையறை காண்போம். உழைப்பு என்பது பெயர்ச்சொல்லாக ஒரு செயல் அல்லது தொழிலைக் குறிக்கும். உழைத்தல் என்பது வினைச்சொல்லாகத் தொழில் செய்தலைக் குறிக்கும். உழைப்பவர் இனம் என்பது பொதுவாகத் தொழிலாளர்களைக் குறிக்கும்.

பொருளியல் பேரறிஞராகிய மார்சல் உழைப்பிற்குப் பின்வரும் இலக்கணம் கூறுகிறார். "உழைப்பு என்பது மூளையையோ உடலையோ முழுவதுமாகவோ பகுதியாகவோ வருத்தி ஏதோ ஒன்றைப் படைப்பதற்காகச் செய்கின்ற செயலைக் குறிக்கும். ஆனால் அந்தச் செயலிலிருந்து கிடைக்கும் மகிழ்ச்சியை உழைப்பு உள்ளடக்காது. இவ்விலக்கணத்தின்படி உழைப்பு எல்லா வகையான தொழில் திறமைகளையும் உள்ளடக்கும். கல்வி அறிவில்லாத தொழிலாளர்களின் உற்பத்தி முயற்சிகளும், கைத் தொழில் கலைஞர்கள், கல்வியாளர்கள், ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், நீதிபதிகள், எழுத்தாளர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள், வணிகர்கள், நுண்கலைஞர்கள், இலக்கிய அறிஞர்கள், மருத்துவர்கள், அறிவியல் வல்லுநர்கள், நிருவாகிகள் ஆகி

யோரின் பணி முயற்சிகளும் மார்சலின் உழைப்பு இலக்கணத்தினுள் அடங்குகின்றன''.[1]

இவ்வாறாக உழைப்பு என்பதனுள் அடங்கும் தொழில் திறமைகள் அனைத்தையும் தற்காலத் தொழில் வல்லுநர்கள் பல்வேறு விதமாக வகைப்படுத்திக் கூறுகின்றனர். எனினும் பண்டைத் தமிழர் செய்த தொழில்களை அவர்கள் வாழ்ந்த சமுதாய நிலைக்கு ஏற்றவாறு பின்வருமாறு வகைப்படுத்திக் கூறலாம்.

அ. தொழில்

- வாழ்வியல் தொழில்
- போர்த் தொழில்
- வாணிகத் தொழில்
- கலையியல் தொழில்

ஆ. தொழில்

- கைத் தொழில்
- போர்த் தொழில்
- இயந்திரத் தொழில்
- வாணிகத் தொழில்

இ. தொழில்

- உடல் உழைப்புத் தொழில்
- அறிவு உழைப்புத் தொழில்

இவ்வகைப்பாடுகளுள் முதல் வகையைப் பின்பற்றித் தொழில்கள் என்ற இவ்வியல் அமைந்துள்ளது. பழந்தமிழர் செய்த தொழில்கள் எவை என்பதைக் கண்டறியப் பயன்பட்டவை சங்க கால இலக்கியங்களாகிய பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும்

---

1. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி ஐந்து, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1987, (பக். 342.)

ஆவன. சங்க கால மக்களின் வாழ்வியலைக் குறித்து எழுதப்பட்ட நூல்களும், அக்காலத் தமிழகத்தைப் பற்றிய பிறநாட்டு அறிஞர் களின் குறிப்புகளும் தமிழரின் தொழில்திறங்குறித்து அறியத் துணைநின்றன. இவ்வாறு கிடைத்த தொழில்கள் பற்றிய செய்தி களுள் ஒரு சில தொழில்கள் நீங்கலாகப் பெரும்பாலானவை செய்யுட்களில் உவமைகளாகக் காட்டப்படும் இடங்களிலேயே அமைந்துள்ளன. என்றாலும் அக்குறிப்புகளைக் கொண்டு இன்ன வகையில் ஒவ்வொரு தொழிலையும் செய்திருத்தல் வேண்டும் எனக் கணித்துக் கூறப்பட்டுள்ளது.

## அ. பிரிவு

| I | II | III | IV |
|---|---|---|---|
| வாழ்வியல் தொழில்கள் | போர்த்தொழில் | வாணிகத் தொழில் | கலையியல் தொழில் |

# I. வாழ்வியல் தொழில்கள்

மக்களின் வளமான வாழ்விற்கும் வசதிக்கும் பயன்படும் தொழில்கள் அனைத்தும் வாழ்வியல் தொழில்கள் என்ற பிரிவில் அடங்குவன. எனினும் அவற்றை 1. கைத்தொழில் 2. நிலஞ் சார் தொழில் 3. கைவினைத் தொழில் 4. பிறதொழில் 5. அறிவு சார் தொழில் எனப் பிரித்துக் காணின் மேலும் தெளிவு பெறும். எனவே இம்முறையில் வாழ்வியல் தொழில்கள் பின்வருமாறு வகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளன.

## 1. கைத்தொழில்கள்

பயிர்த்தொழில் — நெசவுத்தொழில் — தச்சுத்தொழில்
மட்கலத்தொழில் — கொல்லுத்தொழில் — உலோகத்தொழில்
அணிகலத்தொழில்—தோல்தொழில்

## 2. நிலஞ்சார் தொழில்கள்

கால்நடை பேணல் — வேட்டையாடுதல் — ஆறலைத்தல்
மீன்வேட்டம் — உப்பு விளைவித்தல்—முத்துக்குளித்தல்

## 3. கைவினைத் தொழில்

ஓலைத்தொழில் — பொம்மை செய்தல் — சாயப்பாக்கு,
சுண்ணம் தயாரித்தல் — கயிறு திரித்தல் — நூல்தொழில்

## 4. பிற தொழில்கள்

கள் அடுதல் — சலவைத் தொழில் — அட்டிற்றொழில்
கூவலர் — வேலன் — காரோடன் — விறகுவெட்டி
யானைப்பாகன் — தேர் ஓட்டுபவன் — துடியன் — இழிசினன்

## 5. அறிவுசார் தொழில்கள்

அந்தணர் — அரசர் — அமைச்சர் — ஒற்றர் — தூதுவர்
புரோகிதர் — காவலர் — அறங்கூறவையத்தார்
அறிவர் — ஆசிரியர் — ஆவணமாக்கள் — கணியன்
நாழிகைக்கணக்கர் — புலவர் — மருத்துவர்

# பயிர்த் தொழில்

மனித வாழ்விற்கு அடிப்படையானது உணவு. ஒவ்வொரு வரது பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் அவரவரது கருமமே கட்டளைக்கல்லாய் அமையும். ஒருவர் சிறந்த பண்பினைப் பெற அடிப்படையாய் இருக்க வேண்டியது வறுமையின்மை. உணவு இன்றேல் பண்பாடும் இல்லை; பழம் பெருமையும் இல்லை. ஆதலின் உணவுப் பொருளின் இன்றியமையாமையை உணர்ந்து அவற்றைப் பெருக்கினர். உழவுத்தொழில் தலைமைத் தொழிலாக, உயிர்த் தொழிலாகப் போற்றப்பட்டது.

கால அடிப்படையில் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் வேளாண்மை தோன்றி வளர்ச்சியடைந்த நிலையினை அறிய சிறந்த ஆதாரங்களைத் தருகின்றன. பண்டைத் தமிழர் இயற்கை யோடு ஒன்றி வாழ்ந்த வாழ்வியலைச் சித்திரிக்கும் இலக்கியங்கள் பயிர்த்தொழில் பற்றிய குறிப்புகளை விளக்கமாகத் தருகின்றன. பயிர்த்தொழில் பன்னெடுங் காலமாகத் தமிழரது தொழிலாக அமைந்தது எனினும் இதற்கான முதல் சான்றினைத் தருவது பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியமாகும். அக் காலத்தில் உழவர்கள் வேளாண் மாந்தர் எனப்பட்டனர். அவர் களது அடிப்படைத் தொழில் பயிர்த்தொழிலை ஓம்பிக் காத்து, நல்ல விளைவினைப் பெருக்குவதாகும். அவர்களது முழுக் கவனமும் பயிர்த்தொழில் செய்வதிலேயே இருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. இக்கருத்தினைத் தொல்காப்பியம்

**வேளாண் மாந்தர்க் குழுதூண் அல்லது**
**இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி**
**(தொல். பொருள். மரபு.81)**

எனக் குறிப்பிடுகின்றது.

சங்க இலக்கியங்களில் **வேளாண்** என்ற சொல் இரண்டு இடங் களிலும், **வேளாண்மை** என்ற சொல் ஓரிடத்தும் இடம் பெற் றுள்ளது. **வேளாளர்** என்ற சொல்,

**தொடர்ந்தேம் எருது தொழில் செய்யா தோட**
**விடுங்கடன் வேளாளர்க் கின்று (20: 63-64)**

எனவரும் பரிபாடல் அடிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பொது வாகத் தொல்காப்பியர் காலந்தொடங்கி சங்ககாலம், சங்க மருவிய காலம் முடிய வேளாண்மை என்னுஞ்சொல் பெரும்பான்மை **உதவி** என்ற பொருளிலும் சிறுபான்மை **உழவுத்தொழில்** என்ற பொரு ளிலும் ஆளப்பட்டுள்ளது.

இலக்கண நூலார் **வேளாண்** என்னுஞ் சொல்லை வேள்+ஆள் எனப்பிரிப்பர். வேள் என்னும் வேர்ச்சொல்லுக்கு **மண்**

என்று ஒருபொருள் உண்டு. வேளாண் — மண்ணை ஆளுதல் என்ற பொருளைத் தரும். மண்ணைப் பண்படுத்தி ஆள்பவன் வேளாண் எனப்பட்டான்.

மறைமலை அடிகளார் 'வேளாளர் நாகரிகம்' என்ற தமது நூலில் வேளாண்மை என்னுஞ் சொல்லுக்குத் தெளிவான விளக்கம் தந்துள்ளார். 'ஈகைக்குப் பெயரான வேளாண்மை என்னுஞ் சொல், அவ்வீகைக்குக் கருவியான பயிர்த்தொழிலுக்குப் பெயரா யிற்று. பின்னர் அவ்விரண்டு தொழில்களையும் ஆள்பவரான வேளாளர்க்குப் பெயராயிற்று'[2] என்பர்.

அறிவியல் நோக்கில் வேளாண்மை என்ற சொல்லுக்குப் பொருள்காண்கையில், அச்சொல் பயிர்செய்தல், கால்நடைகள் வளர்த்தல், மரம் வளர்த்தல், மனித சமுதாயத்திற்குப் பயன் படும் ஒவ்வொரு பயிரையும், மற்றும் உயிர்களையும் வளர்த்தல் கோழிப்பண்ணை, பால்பண்ணை எனப் பொருள்படும் அறிவியல் பெருஞ் சொல்லாக விளங்குகின்றது.

''வேளாண்மை என்பதை ஒரு கலை என்றும், ஓர் அறிவியல் என்றும் கூறலாம். வேளாண்மை என்பது பொருளாதார வளர்ச் சிக்காகப் பயிர்களையும், கால்நடைகளையும் கொண்டு செய்யப் படும் தொழிலாகும். இவ்வேளாண்மைத் தொழிலில் பயிர் உற்பத்தி, கால்நடைப் பராமரிப்பு, தோட்டக்கலை, பால் பண்ணை, காடுவளர்ப்பு, மீன்வளம், மற்றும் வேளாண், பொறி யியல் போன்ற பிரிவுகள் அடங்கும்.[3]''

பண்டைத் தமிழரின் வாழ்வியலைச் சித்திரிக்கும் சங்க இலக்கியங்கள் பயிர்த்தொழிலைப் பற்றிய செய்திகளைப் பல்வேறு நிலைகளில் விளக்கமாகத் தருகின்றன. சங்க காலத்தில் உழவுத்

---

2. மறைமலை அடிகளார், வேளாளர் நாகரிகம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1963, ப. 3.

3. கந்தசாமி, இல. செ., தமிழர் வேளாண்மை மரபுகள் — சங்க காலம். பிஎச்.டி. ஆய்வேடு, ப 28.

தொழில் உயிர் காக்கும் தொழிலாகப் போற்றப்பட்டது. அத் தொழிலுக்குத் தேவையான யாவும் பெற்றுச் சிறந்து விளங்கியது. வேளாண்மைக்கு அடித்தளமாய் அமைவன நிலமும் நீரும். இவற்றின் இயைபே உணவுப் பொருள்களின் ஆக்கமாகும். 'உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே' (புறம். 18:21) எனப்பட்டது.

## விளை நிலம்

பண்டைத் தமிழர் நிலத்தினை இயற்கை அமைப்பிற்கு ஏற்ப நான்கு வகைகளாக முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனப் பிரித்தனர்.

## குறிஞ்சி நிலம்

இது மலையும் மலைசார்ந்த இடமாகும். குறிஞ்சி நிலத்து மண் சிறுசிறு குன்றுகளும் மண்ணும் கலந்த பகுதியாக இருக்கும். இந்நிலத்தில் பயிர்த் தொழிலுக்காகப் பயன்படுத்தப்பட்ட நிலப் பகுதிகளுள்ளும் வெவ்வேறு இயல்பு கருதி வெவ்வேறு பெயர்கள் வழங்கப்பட்டதைச் சங்கப் பாடல்களினின்றும் அறிய முடிகின்றது. காட்டாக, குறிஞ்சி நிலத்துப் புன்செய் நிலத்தைத் **துடவை** (குறுந். 105:1) என்றும்; மரங்களை அழித்து விளைநிலமாக்கப் படும் புதிய புனத்தை **இதை** (அகம். 394:3) என்றும்; பழமையான விளைநிலத்தை **முதைபுனம்** (குறுந். 105:1) என்றும் குறித்தனர்.

காடும் காடு சார்ந்த இடமும் முல்லை நிலம் எனப்பட்டது. முல்லைநிலம் செம்மண் பரப்பை உடையது. இம்முல்லை நிலத்தில் பயிரின்றித் தரிசாய்க் கிடந்த இடத்தைக் **கொல்லை** (அகம். 89:17) என்றும்; மரங்கள் நிறைந்த முல்லைப் பகுதியைப் **புறவு** (சிறு. 169) **கானம்** (குறுந். 21:4) என்ற சொற்களாலும் குறிப்பிட்டனர்.

வயலும் வயல்சார்ந்த இடமும் மருதநிலமாகும். நீர்வளம் நிறைந்த பகுதியாகும். வான்பொய்ப்பினுந் தான்பொய்யாக் காவிரி பாயும் நிலவளஞ்சான்ற கழனிகள் மருதநிலத்திற்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாவன. மருதநிலப்பகுதிகள் **கழனி**, பழனம்,

வயல், செறு என்ற சொற்களால் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் கழனி என்பது சேற்று வயலையும்,[4] பழனம் என்பது நெல் வயலையும்[5] குறிக்கும். மருதநில விளைநிலங்களை வயல் என்ற சொல்லால் குறித்தனர்.

நெய்தல் நிலம் என்பது கடலும் கடல் சார்ந்த இடமாகும். நெய்தல் நிலத்தில் மழை பொழிந்தால் நெல் விளையும், மழை பொய்ப்பின் உப்பு விளையும் என்பதை,

**பெயினே, விடுமான் உழையினம் வெறுப்புத் தோன்றி**
**இருங்கதிர் நெல்லின் யாணர் அஃதோ**
**வறப்பின், மாநீர் முண்டகம் தாஅய்ச்சேறு புலர்ந்து**
**இருகழிச் செறுவின் வெள்ளுப்பு விளையும் (311:1-4)**

என்ற நற்றிணைப் பாடல் உணர்த்தும்.

இந்நானிலங்களுள்ளும் மண்வளமும், நீர்வளமும் குறைந்த பகுதியை வன்புலம் என்பர். முல்லையும், குறிஞ்சியும் வன்புலம் என்ற பிரிவில் அடங்குவன. இதற்கு மாறாக, மண்வளமும் நீர் வளமும் நிறைந்த இடத்தை மென்புலம் என்பர். மருதமும் நெய்தல் நிலமும் இப்பிரிவில் அடங்குவன.

**வன்புலக் கேளிர்க்கு வருவிருந்து அயரும்**
**மென்புல வைப்பின் நன்னாட்டுப் பொருந**
**(புறம்.42:17-18)**

தினை, வரகு முதலாய புன்செய் பயிர் விளையும் நிலங்களையும், விதைத்துவிட்டு வான்நோக்கும் வறட்சியான நிலங்களையும் புன்புலம் என்றனர்.

**வித்தி வான்நோக்கும் புன்புலம் (புறம்.18)**

---

4. தமிழ்ப் பேரகராதி, தொகுதி இரண்டு, ப. 799.
5. மேற்படி, தொகுதி நான்கு, ப. 2547.

இவ்வாறாகப் பயிர்த்தொழிலுக்கு ஏற்ற நிலப்பகுதிகள் நீங்க, விளைவின்றி விடப்பட்ட நிலப்பகுதியைக் கால்நடைகளின் மேய்ச்சலுக்கென விடுவர். இவ்வாறு விடப்பட்ட நிலம் விடுநிலம் எனப் பட்டது. வேளாண்மைக்குப் பயன்பட்ட இடங்களுக்கு ஏற்றவாறு பெயரிட்டழைத்தது போலவே பயன்படாத நிலத்தையும் பிரித்தறிந்து பெயரிட்டிருந்தனர். சங்க கால இலக்கியங்கள் இத்தகைய பயன்படா நிலங்களைக் கரம்பை, முரம்பு என்ற பெயர்களால் குறிப்பிட்டுள்ளன. பயிர்த் தொழிலுக்குப் பயன்படாது புல்வகை வளர்ந்து கால்நடை மேயுமாறு விடப்பட்ட கரம்பு நிலம் விடுநிலக் கரம்பு (விடுநிலக் கரம்பை, பதி. 28:7) எனப்பட்டது.

## நீர்நிலை

பயிர்த் தொழிலுக்கு நிலத்தை அடுத்து நீர்வளம் இன்றியமையாததாகின்றது. ஒரு நாட்டின் வளமும் நலமும் நீர்வளத்தைக் கொண்டே அமையும். அதனால் பண்டைக் காலந்தொட்டே மக்கள் பயிர்த்தொழிலுக்குக் குறைவிலா நீர்வளம் தேவை என்பதை உணர்ந்திருந்தனர். இத்தகைய நீர்நிலைகளை அமைத்துக்கொடுப்பது அரசனின் கடமையாகவும் கருதப்பட்டது. அதனால் அவனே உடம்பையும் உயிரையும் படைத்தவனாகவும் கருதப்பட்டான்.

**நீரும் நிலமும் புணரியோர் ஈண்டு**
**உடம்பும் உயிரும் படைத்திசி னோரே**

**... ... ... ...**

**நிலனெளி மருங்கின் நீர்நிலை பெருகத்**
**தட்டோர் அம்ம இவண்தட் டோரே**
**தள்ளா தோர்இவண் தள்ளா தோரே** (புறம். 18:22-30)

என்றது ஒரு புறப்பாடல். கரிகால் சோழன் காடுகளை அழித்து நாடாக்கிக் குளந்தொட்டு வளம் பெருக்கினான் எனப் பட்டினப் பாலை (283-84) கூறுகிறது.

பருவத்தே பயிர்செய்வதே பயிர்த்தொழிலுக்கு ஏற்றது. மழை பெய்யும் காலத்தில் பயிர் செய்தனர். பயிர்த்தொழிலுக்கு

உதவும் வகையில் பெய்யும் மழையைத் 'தொழில் மழை' என்ற தொடரால் அகநானூற்றுப் பாடல் (252:11) குறிப்பிடுகின்றது. எனினும் நீர்வளம் எக்காலத்தும் இருக்கக்கூடிய வகையில் ஏரி, குளம் கிணறுகளை அமைத்தனர்.

பண்டைத் தமிழர் நீர்நிலைகளை அமைக்கும் இடங்களைத் தேர்ந்தெடுப்பதிலும் சிறந்திருந்தனர். பள்ளமான பகுதிகளே அன்றி அறைகளையும் பொறைகளையும் இடையிடையே கரையாக அமையுமாறு பிறைவடிவில் குளம் அமைத்தனர்.

**அறையும் பொறையும் மணந்த தலைய**
**எண்ணாள் திங்கள் அனைய கொடுங்கரைத்**
**தெண்ணீர் சிறுகுளம்.............. (புறம். 118:1-3)**

குளங்களுள் சிறு குளம், பெருங் குளம் என இரண்டுவகை கூறப் படுகிறது. இவற்றுள் சிறுகுளத்து நீர் குடிப்பதற்கும், பெருங் குளத்துநீர் பயிர்த்தொழிலுக்கும் பயன்பட்டது. நீர்நிறைந்த குளத்தைப் பாதுகாக்க காவலர் இருந்தனர். பெய்த மழை பயிர்த் தொழிலுக்கு ஏற்றமழை எனின் அதனைப் பயன்படுத்திக் கொண்ட தோடு, எஞ்சிய நீரைக் குளத்தில் தேக்கி வைத்து மழைபெய்யாக் காலத்து அதனைப் பயன்படுத்திக் கொண்டனர் என்பதையும் அறிய முடிகின்றது

பருவம் தொடங்குமுன் மழைபெய்யும் வாய்ப்பினை மேகத்தி தின் இயக்கத்தைக் கொண்டு அறிந்தனர். அதற்கேற்பத் தம் பயிர்த்தொழில்களை அமைத்துக் கொள்வர்.

**பன்மர உயர்சினை மின்மினி விளக்கத்துச்**
**செல்மழை இயக்கங் காணும் (நற். 44: 10-11**

குறிஞ்சி நிலமக்கள் உரியபருவத்தில் மழைபெய்யாவிடின் ஒன்றுகூடி மழைவேண்டிக் கடவுளரைப் பாடுவர். இதனை,

**குன்றக் குறவன் ஆர்ப்பின் எழிலி**
**நுண்பல அழிதுளி பொழியும் (ஐங். 251: 1-2)**

என்றும், மிகுமழை பெய்தால் அதனைத் தடுத்து நிறுத்துவதற்கும் கடவுளைப் பரவுவர் என்பதனை,

**மலைவான் கொள்கென உயர்பலி தூஉய்**
**மாரியான்று, மழைமேக்கு உயர்கெனக்**
**கடவுட் பேணிய குறவர் மாக்கள்**
**பெயல்கண் மாறிய உவகையர்** (புறம். 143: 1-4)

என்றதாலும் உணரலாம்.

குறிஞ்சி நிலத்தில் மலையினின்றும் வீழும் அருவியும், மலையில் அமைந்த சுனையும் குறிஞ்சியின் இயற்கை நீர்நிலையாகும். அருவிநீரும், சுனைநீரும் பயிர்த்தொழிலுக்குப் பயன் படுத்தப்பட்டன என்பதை,

**மைபடு சிலம்பின் ஐவனம் வித்தி**
**அருவியின் விளைக்கும்** (குறுந். 371: 1-2)

**அகல்வாய்ப் பைஞ்சுனைப் பயிர்கால் யாப்ப** (நற். 5: 2)

என்ற பாடலடிகளினின்றும் அறியலாம்.

'இவ்வுலகை விட்டே மாய்ந்து போன பழம்பெரும் நாகரிகங்களுள் பண்டைய அமெரிக்க நாகரிகமும் ஒன்றாகும். அங்கு ஆண்டியர்கள் இன்கா என்றதோர் பேரரசை நிறுவினர். இந்த இன்கா மக்கள் விவசாயத்தில் சிறந்த முன்னேற்றமடைந்திருந்தனர். உள்நாட்டுப் பகுதிகளில் செழிப்பான நிலங்களில் மழை நீரைக்கொண்டும், ஏரி, ஆறு இவற்றிலிருந்து கால்வாய்கள் மூலம் கொண்டுவரப்பட்ட நீரைக்கொண்டும் முப்போகம் விளைவிக்கப் பட்டது.'[6]

---

6. பண்டைய நாகரிகங்களின் வரலாறு, ப. 240.

## உழவியல் முறைகள்

உழவுத் தொழிலை மேற்கொள்வார் உழவர் எனப்பட்டனர். உழத்தல் என்பது இடைவிடாது முயலும் மெய்ம்முயற்சியைக் குறிக்கும் சொல்லாகும். இடைவிடாது உழைக்கும் மெய்ம்முயற்சி பயிர்த்தொழிலுக்கு வேண்டப்படுதலின் இத்தொழிலை உழவு என்ற சொல்லால் பண்டையோர் வழங்கினர் போலும். பழந்தமிழ் இலக்கியங்கள் உழவுத் தொழிலின் மேன்மையையும், உழவரின் சிறப்பையும் எடுத்தியம்புவது போல உழவு செய் முறைகளையும், அதற்குப் பயன்பட்ட கருவிகளையும், இவை தொடர்பான பிற செய்திகளையும் விரிவாகக் கூறுகின்றன.

உழுதொழில் என்பது உழுதல், உரமிடுதல், நீர்ப்பாய்ச்சுதல், விதைத்தல், களை கட்டல், காத்தல், அறுவடை, பதப்படுத்தல் எனப் பல கூறுகளாய் அமைவது. இம்முறைகளைச் சங்கப் பாடல்களின் வழிநின்று அறிந்து பண்டைத் தமிழரின் உழுதொழில் திறனைக் காண்போம்.

### உழுதல்

நிலத்தைப் பண்படுத்தலாகும். பயிர்த்தொழிலுக்குப் பருவம் பார்த்துப் பயிர்செய்தல் இன்றியமையாதது எனினும் நன்செய்ப் பயிர்கள் நீர்வளம் மிக்கிருக்கும் பகுதிகளில் ஆண்டு முழுமையும் விளைவிக்கப்பட்டது. [விளைவு அறா வியன் கழனி. பட்.8] வயல்களில் நாற்று நடுவதற்கு முன் நிலத்தைப் பலமுறை உழுவர். பெரும்பாணாற்றுப்படை எனும் நூலில் ஆசிரியர் உருத்திரங் கண்ணனார் சிறுசிறு அடைமொழிகள் மூலம் உழும் வகையைக் குறிப்பிடுவது நோக்குதற்குரியது.

**குடிநிறை வல்சிச் செஞ்சால் உழவர்**
**நடைநவில் பெரும்பகடு புதவிற் பூட்டிப்**
**பிடிவாயன்ன மடிவாய் நாஞ்சில்**
**உடுப்புமுக முகக்கொழு மூழ்க ஊன்றித்**
**தொடுப்பெறிந்து உழுத துளர்படு துடவை. (196-200)**

எனவரும் பாடலடிகளில் இவ்வுழவர்கள் ஏற்கனவே நிரம்ப வளம் உள்ளவர்கள் என்பதைக் குறிக்க 'குடிநிறை வல்சி' என்ற தொடரால் குறிப்பிட்டு, அப்படி இருப்பினும் அவர்கள் செய்யும் உழவுத் தொழிலைச் சிறப்பாகச் செய்வர் என்பதைக் குறிப்பிட, 'செஞ்சால்உழவர்' என்றார். உழவர்கள் நிலத்தை ஒருமுறை உழுதலை ஒருசாலுழவு என்றும், இருமுறை உழுதலை இருசாலுழவு என்றுங் குறிப்பிடுவர். இங்கு செஞ்சால் என்றதால் பலமுறை உழப்பட்டதைக் குறிப்பிடுவர். மேலும் நிலத்தை உழும் பொழுது இரண்டு எருதுகளும் ஓடாமலும், மெல்லப் போகாமலும் ஒத்து நடத்தலே பயன் தருவது என்பதை 'நன்னடை பயின்ற நடைநவில் எருதுகள்' என்றும்; சிறிய எருதுகளின் உழவாலே நிலம் நன்கு பண்படாதாகலின் பெரும்பகடு என்றும்; அகல உழுவதை ஆழ உழு என்பதற்கேற்ப 'உடுப்புமுக முழுக்கொழு மூழ்க ஊன்றி' என்றுங்கூறி உழவர்கள் நிலத்தை ஆழவுழுதற் சிறப்பை நெறிபடக் கூறியுள்ளார்.

மேற்கூறியவாறே பண்டைக் காலத்தில் பிறநாடுகளிலும் பயிர்த்தொழிலுக்கு முக்கியத்துவங் கொடுத்து உழுதொழிலைச் சிறப்புறச் செய்ததற்கான குறிப்புகள் சில வரலாற்று நூல்களினின்றும் கிடைக்கின்றன. பண்டைய அமெரிக்க 'இன்கா மக்களுள் கலப்பையை ஆண்களும் பெண்களும் சேர்ந்து இழுக்க உழவர்கள் நிலங்களை ஆழ உழுதனர். ஒரு சிலர் மண்ணாங் கட்டிகளை உடைத்துத் தூள் செய்துகொண்டே சென்றனர்'.[7]

சுமேரியர் நிலத்தை உழுவதற்கு எருதுகளைப் பயன்படுத்தினர். விதைவிதைப்பதற்கு முக்கோணமான ஒரு கருவியைப் பயன்படுத்தினர். பாரசீக மக்கள் மரத்தாலான கலப்பையை உழவுக்குப் பயன்படுத்தினர். அதன் கொழு முனை உலோகத்தால் செய்யப்பட்டிருந்தது. இவர்கள் எருதுகளைக் கலப்பையில் பூட்டியே நிலங்களை உழுதனர். பாபிலோனியர் ஏரில் பொருத்தப் பட்ட ஒரு குழாயின் மூலம் விதைகளை விதைத்தனர்.[8]

---

7. பண்டைக் கால நாகரிகங்களின் வரலாறு ப. 240
8. மேற்படி, ப. 73.

பண்டைய தமிழர் நிலத்தை உழுவதற்கு எருதுகளையன்றி எருமைகளையும் பயன்படுத்தினர். (எருமை உழவ- நற். 60:2) நன்செய்யில் களையாக முளைத்திருந்த கோரை, நெய்தல் போன்றவற்றைக் களைந்தெறிவர். இவ்வாறு பலமுறை உழுத பின்னர், தாம்பு என்ற கருவிகொண்டு வயலிலுள்ள மேடு பள்ளங்களைச் சமன்படுத்துவர்.

**மலங்குமிளிர் செறுவின் தளம்பு தடிந்திட்ட (புறம். 61:3)**

எனவரும் பாடலடி இக்கருத்தினை விளக்கும்.

மழை பெய்தவுடன் பலமுறை நன்றாக உழப்பட்ட வயலினது செம்மண் நன்கு நெகிழ்ந்து கொடுக்கும். இக்கருத்தை

**............உறுபெயல்**
**தண்துளிக்கு ஏற்ற பலவுழு செஞ்செய்**
**மண்போல் நெகிழ்ந்து............ (அகம். 26:23-25)**

என்ற அடிகள் உணர்த்தும்.

## எரு விடுதல்

விளைநிலங்களில் நல்ல உரமிட்டால் நல்ல விளைவைப் பெறலாம் என்பதை உழவர்கள் அறிந்திருந்தனர். அக்காலத்தில் எருவாகப் பயன்படுத்தப்பட்டவை கால்நடைகளின் சாணமும், உலர்ந்து விழுந்த இலைதழைகளும் ஆகும். கால்நடைகளின் சாணத்தைத் **தாதெரு** என்றனர். எருக்களைக் கொட்டி வைப்பதற்கென்றே விடப்பட்ட மன்றங்களில் அவற்றைச் சேர்த்து வைப்பர். (தாதெரு மன்றம் கலி. 108:60). பண்டைய அமெரிக்க இன்கா மக்கள் கடற்பறவைகளின் எச்சங்களை எருவாகப் பயன்படுத்தினர்.

## நீர் பாய்ச்சுதல்

நன்செய் நெல்வயல்களில் பரவலாக நீர்நிறைந்து இருக்கும்படி பாய்ச்சுவர். (நீர்பரந்த செறுவில் - புறம். 338:2.) இவ்

வயல்களுக்குக் குளத்திலிருந்தும் கிணற்றிலிருந்தும் நீரிறைத்துப் பாய்ச்சப் பெற்றது. நீரிறைப்போர் பாடிக்கொண்டே இறைப்பர். நீரினை முகந்திறைக்கின்றவர் வரிசையாக நின்று இறைக் கின்றனர். இதனை மதுரைக்காஞ்சி,

நீர்ந்தெவ்வு நிரைத்தொழுவர்
பாடுசிலம்பு மிசையேற்றத்
தோடுவழங்கும் அகலாம்பியிற்
கயன்அகைய வயல்நிறைக்கும் (89-92)

என்றது.

## நாற்று நடுதல்

பலமுறை நன்றாக உழப்பட்டு, களைநீக்கி, உரமிட்டு, நீர் பாய்ச்சப்பெற்ற வயல்களில் நாற்றுகளை நன்றாக அழுந்த நடுவர் என்பதை,

முடிநா றழுத்திய நெடுநீர்ச் செறுவில் (பெரும். 212)
நீருறு செறுவில் நாறுமுடி யழுத்த (நற். 60:7)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. மலைபடுகடாம் என்ற நூலில் நெற்பயிர் நன்கு பருத்து முதிர்வதற்கு நல்ல காற்று இன்றியமையாதாகலின் நான்கு திசைக் காற்றும் ஊடறுத்து வீசப் பெற்றமையால் நன்கு விளைந்தன எனக் காற்றின் இயக்கத்தைக் காரணமாக்கி,

பால்வார்பு கெழீஇப் பல்கவர் வளிபோழ்வு
வாலிதின் விளைந்தன ஐவனம் வெண்ணெல் (114-15)

எனக்கூறப்பட்டுள்ளதைக் காணலாம். நாற்று நடும்போதே நான்கு பக்கமும் காற்று ஊடறுத்துச் செல்லுமாறு இடைவெளி விட்டு நட்டனர். அவ்விடை வெளியினால் பயிர்கள் கிளைத்துச் செழித்துப் பால்கட்டி வளர்ந்தன. நெல்லின் அரிசி முதிர்வதற்கு முன்னர்ப் பால் உருவத்தே இருத்தல் இயல்பு. இப்பால் மிகுதி யாக இருந்தால் நெல் பருத்திருக்கும். இக்காலத்திலும் உழவுத் தொழிலாளர்களுக்கு அறிவுரை கூறும்போது பயிர்களின் ஊடே

காற்று நன்கு புகுந்து இயங்கும்படி நடுகை செய்யுமாறு அறிவுறுத்தலைக் காணலாம்.

## காத்தல்

நெல் வயல்களில் தொழில் செய்யும் உழவர்கள் இடையிடையே தோன்றும் களைகளைக் களைந்தெறிவர். களைகளேயன்றிப் பிற உயிர்களாலும் பயிர்கட்கு இடையூறுகள் உண்டாகும். நாற்று நடும்போதே அவற்றை நண்டுகள் அழித்து விடுவதுண்டு. விளைந்தபின் எலிகள் கதிர்களை அறுத்துச் சென்றுவிடுவதுண்டு. (புறம். 190); மயில்கள் கதிர்களில் உள்ள நெல் மணிகளைக் கொத்தி விடுதலும் உண்டு. (புறம். 344). இவ்வாறாகப் பயிர்களுக்குப் பலவகையாலும் வரும் அழிவைத் தடுக்க உழவர்கள் விளைநிலத்தைக் கண்ணெனக் காத்தனர்.

## அறுவடை

நெற்கதிர்கள் நன்றாக விளைந்து பின்னிப் பிணைந்து வரப்பை உரசிக் கொண்டு கிடக்கின்ற காட்சி சங்கப் புலவர்களால் பல்வேறு அழகிய உவமைகளால் வருணிக்கப்பட்டுள்ளது. நெல் வயல்களில் அறுவடை செய்யத் தொடங்குமுன் வயல்களில் கூடமைத்து வாழும் பறவைகளை ஓட்டும் வகையில் தண்ணுமை எனப்பட்ட ஒருவகை இசைக்கருவியை முழக்குவர். இதனை,

> **கழிசுற்றிய விளைகழனி அரிப்பறையாற் புள்ளோப்பும்**
> **(புறம். 396)**

என மாங்குடி கிழாரும்;

> **வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇப்**
> **பழனப் பல்புள் இரிய (நற். 350)**

எனப் பரணரும் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். இச்செயல் உழவர்கள் பிறவுயிர்களிடத்துக் கொண்டிருந்த இரக்க உணர்வினைக் காட்டுவதாக உள்ளது. நெல் அரிவாளைக் குயம் (பொருந. 242) என்பர். அதன் கூர்மை குறையுமாயின் அந்நெல்

வயல்களில் புதையுண்டு கிடக்கும் ஆமை ஓட்டில் அதனைத் தீட்டிக் கொள்வர் (புறம். 379:3-5). [சுமேரிய நாட்டு மக்கள் அறுவடைக்கு மரத்தால் ஆன அரிவாளைப் பயன்படுததினர்.]

அவ்வாறு அரிந்தவற்றைப் பாம்புகள் கிடக்கின்ற மருதமரங் களின நிழலில் அகன்ற இடங்கள் நிறையும்படி போராகக் குவித்து வைப்பர். பின்னர் அநநெற்போர்களினுடைய அடியை எடுத்து விரித்து, கடாவிடுவர் பின்னர் நெல்லினின்றும் குற்றமறும்படி வைக்கோலையும் கூளத்தையும் நீக்கி உலரவைப்பர். அவை உலர்ந்த பின்னர் மேல்காற்றிலே தூற்றி நெல்லைக் குவிப்பர். அந்நெற்குவியல் வடதிசையிலுள்ள மேருமலையினும் சிறப்புற்றுத் தோன்றும் (பெரும். 232-42). இத்தகு தலையாய தொழில் செய்த உழவாகள வளங்கெழுமிய மருதநிலஞ் சூழ்ந்த அசையாத குடியிருப்புக்களில் வாழ்ந்தனர். நெறபொலி திகழ் களத்தில் சென்று உழவர்களைப் பொருநர் முதலிய கலைவலலோர் பாடு தலும் அவர்களுக்கு நெல்லை வழங்குதலும் மரபு என்ற கருத்தி னைக் குறிப்பிட்டு, மேலும் இவ்வுழவர் இனத்தைச் சிறப்பித்துக் கூறும் வகையில்

**தொல்பசி அறியா துளங்கா இருக்கை**
**மல்லற் பேரூர் மடியின் மடியா**
**வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி (பெரும். 253-55)**

எனவரும் அடிகளில் தொன்றுதொட்டு வறுமையால் வநத பசி அறியாத நிலையான குடியிருப்பினை உடைய வளப்பமுடைய பெரிய ஊர்களில் வாழ்பவர் என்றும், தம்தொழிலில் சோம்பியிரா தவர் உழவர்கள் எனற கருத்தையும் காணலாம்.

தூய்மை செய்யப்பட்ட நெல்லை நெற்கூடுகளில் இட்டு வைப்பா. அந்நெறகூடுகள் ஏணிக்கும் எட்டாத அளவு மிகநெடிய வடிவுடன் மேல்பகுதி திறந்து நெல்லைக் கொட்டுவதற்கு ஏற்றாற் போல இருக்கும். அக்கூடுகள் புரிசுற்றியும் சுற்றாமலும் மலை போல் அமைக்கப்படும். கூடுகள் உள்ள நெல்லின் அளவைக் குறிக்கப் புள்ளிகள் இடுவர்.

**ஏணி எய்தா நீள்நெடு மார்பின்**
**முகடுதுமித்து அடுக்கிய பழம்பல் உணவின்**
**குமரி மூத்த கூடோங்கு நல்லில் (பெரும். 245-47)**

**செவ்வி சேர்ந்த புள்ளி வெள்ளரை**
**விண்டுப் புரையும் புணர்நிலை நெடுங்கூட்டுப்**
**பிண்ட நெல்** **(நற். 26: 2-4)**

## மீண்டும் பயிரிடல்

நன்செய்யில் விளைந்த நெல்லை அறுவடை செய்தபின்னர் அதனுடைய அடிப்பகுதி எஞ்சி நிற்கும். இதனை அரிகால் என்பர். நிலத்தை நன்றாக ஆழ உழும்பொழுது அரிகால் வேரொடு பெயர்ந்து நீங்கிவிடும். அவ்வாறு உழப்பட்ட வயல் அரிகால் மாறிய வயல் எனப்படும். நெல்லறுத்த வயலில் மறுபடியும் உழுத ஈரமுடைய சேற்றில் மீண்டும் பயிர்செய்வர். இதனை நற்றிணை

**அரிகால் மாறிய ஆங்கண் அகல்வயல்**
**மறுகால் உழுத ஈரச் செறுவின்** *(210: 1-2)*

என்றது. இவ்வாறு மீண்டும் பயிரிடும்பொழுது பயறுகள் விதைத்தல் மரபு. இதனை,

**'அரிகால் பெரும்பயறு நிறைக்கும்'** எனவரும் ஐங்குறுநூற்றுப் பாடலடியால் (47:3) உணரலாம். இவ்வாறு மாற்றுப் பயிர்முறை முறையிலும் பண்டைத் தமிழர் பயிரிட்டு ஆண்டு முழுவதும் உணவுப் பொருள்களை விளைவித்து வந்தனர். 'விவசாயத் துறையில் மாற்றுப்பயிர் வேளாண்மை முறையைக் (Rotation of crop system) கையாண்டு அதன் மூலம் நிலத்தின் செழுமையைக் காக்கின்ற முறையை உலகுக்கு வழங்கிய பெருமை பண்டைய ரோமானியர்களைச் சாரும்.'

## நெல் வகைகள்

சங்க இலக்கியத்தில் சிலவகை நெல்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் ஐவனநெல், தோரைநெல், மூங்கில்நெல் போன்றவை குறிஞ்சி, முல்லை நிலங்களிலும், வெண்நெல், செந்நெல் என்பன மருதநிலத்திற்குரியனவாகவும், ஒருசார் நெய்தல் நிலத்தில் விளையும் நெல்வகைகளாகும்.

## ஐவன நெல்

குறிஞ்சி நிலத்தில் விளையும் நெல். இதனை மலைநெல் என்பர். மலைச்சாரலிலுள்ள காடுகளைத் தீயிட்டுக் கொளுத்திச் செய்த புன்செய்க் கொல்லையில் ஐவனநெல்லை விதைப்பர். மலையருவியினையுடைய பரந்த நிலத்திலும் இந்நெல்லைப் பயிரிடுவர். இக்கருத்துக்களை,

**துறுகல் அடுக்கத்து வில்லோர் மாற்றி**
**ஐவனம் (ஐங். 267: 2-3)**

**அருவிப் பரப்பில் ஐவனம் வித்தி (குறுந். 100:1)**

எனவரும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

## மூங்கில் நெல்

புல்லிய இலையையுடைய மூங்கிலில் நெல் விளையும். இது வெண்மையான நிறமுடையதாக இருக்கும். இதனை வெதிர்நெல் என்றும் வழங்குவர்.

**புல்லிலை வெதிர நெல்விளை காடே (அகம். 397:15)**

**பைதறு நெடுங்கழை பாய்தலின் ஒய்யென**
**வெதிர்படு வெண்ணெல் வெவ்வறைத் தாஅய்**
**உகிர்நெரி ஓசையிற் பொங்குவன பொரியும்**
**(அகம். 267:10-12)**

மூங்கில் நெல் வெப்பமான பாறைமீது உதிர்ந்து பொரியும். பொரியும் ஓசைக்கு நகத்தை நெரிக்கின்ற ஓசை உவமையாகக் கூறப்பட்டது.

## தோப்பி நெல்

களர்நிலத்தில் விளையும் நெல்வகையாகும். ஈந்தினது சிவந்த விதையைப் போன்று மேட்டு நிலத்தில் விளைவது. தோப்பி என்ற நெல்கொண்டு கள் அடுவர். இது வீட்டிலேயே சமைக்கப்படும் கள்ளாகும்.

**இல்லடு கள்ளின் தோப்பி பருகி (பெரும். 142)**

### *தோரை நெல்*

இந்நெல் வகையும் மேட்டு நிலப்பகுதியில் விளைவதாகும். இது குறுகிய கதிர்களை உடையது. பருவ மழையில் விதைத்த நெல் அம்மழை நீரைக்கொண்டே அழகிய குலைகளோடு முற்றி விளையும். இக்கருத்துகளை

**நறுங்காழ் கொன்று கோட்டின் வித்திய**
**குறுங்கதிர்த் தோரை (மது:286-7)**

**புயல் புனிறு போகிய பூமலி புறவின்**
**அவல்பதம் கொண்டன அம்பொதித் தோரை**
**(மலை. 120-21)**

என்ற பாடலடிகள் விளக்குவன.

### *சாலிநெல்*

பொருநராற்றுப் படையில் ஆற்றுநீர் வளத்தால் மிகுந்த விளைவைத் தரும் ஒருவகை நெல்லாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. காவிரி பாயும் சோழ நாட்டில் ஒரு வேலி நிலத்தில் ஆயிரங்கலம் நெல் விளையக் கூடிய (சாலி) நெல்லைப் பயிர் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர்.

**சாலிநெல்லின் சிறைகொள் வேலி**
**ஆயிரம் விளையுட் டாகக்**
**காவிரி புரக்கு நாடு (பொருந. 246-48)**

### *முடந்தை நெல்*

நீர் நிரம்பிய வயலில் விளையக்கூடியது. நென்மணியின் கனத்தைத் தாங்கமாட்டாது தாள் சாய்ந்து வளைந்து கிடக்கும் நெல்லை முடந்தை நெல் என்றனர்.

**முடந்தை நெல்லின் கழையமல் கழனி (பதி.32)**

### வெண்ணெல்

வெண்ணெல் பயிரிடக் குளத்துநீர் பயன்படுத்தப்பட்டது.

**குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்**

**(புறம்.33:5)**

வெண்ணெல் விளைந்த ஊர் பெறற்கரிய ஒன்றாகக் கருதப் பட்டு வந்துள்ளது.

**வெண்ணெல் வைப்பின் நல்நாடு (அகம். 201:13)**

### செந்நெல்

செந்நெல்லை மருதநிலக் கழனியில் விளைவிப்பர். நெல் வகைகளில் சிவந்தநெல் சிறந்தது. அதிலும் இந்நெல் பழைய தாயின் உயர்தரமான நெல்லாகக் கருதப்படும்.

**செந்நெலஞ் செறுவிற் கதிர்கொண்டு (ஐங்.27:1)**

**பழஞ்செந்நெல் (அகம்.126:11)**

### புன்செய்ப் பயிர்களும் பயிரிடுமுறையும்

புன்செய்ப் பயிர்களைப் பருவம் பார்த்துப் பயிர்செய்தல் இன்றி யமையாதது. குறிஞ்சியும் முல்லையும் நீர்வளம் குறைந்த பகுதி களாதலின் பருவமழையை எதிர்நோக்கியே பயிர்த்தொழில் செய்யப்பட்டது. புன்செய்ப் பயிர்களாகிய தினை, வரகு ஆகிய வற்றைக் கார்கால மழையின் ஈரம் புலருமுன் விதைப்பர். இப் பருவத்தில் உழுந்து, பயறு, அவரை போன்றனவும் செழித்து வளரும். பருவமறிந்து பயிர் செய்தனர் என்பது,

**பன்மர உயர்சினை மின்மினி விளக்கத்துச்**
**செல்மழை இயங்கக் காணும் (நற். 44:10-11)**

என்ற அடிகள் உணர்த்துவன. குறிஞ்சி நிலமக்கள் பருவமழை தொடங்குமுன் மரங்களை வெட்டிக் கொளுத்தி விளைநிலம் உண் டாக்குவர். சந்தனம், அகில் போன்ற நறுமண மரங்களே யாயினும் வெட்டிவிட்டு உழுவர். இதனை,

நறுங்காழ் கொன்று கோட்டின் வித்திய (மது. 286)
முதைபுனங் கொன்ற ஆர்கலி உழவர் (குறு.155:1)

என்ற பாடலடிகள் உணர்த்துவன.

பெருமழை பெய்ததும் மறுநாள் விடியற் காலையில் ஏரைப் பூட்டிக் கீழ்மண் மேலும், மேல்மண் கீழும் புரளுமாறு நன்கு உழுவர். அவ்வாறு செம்மையாக உழப்பட்ட செம்மண் நிலம் ஊனைக் கிழித்து விட்டது போன்று காட்சியளிக்கும்.

பேருறை தலைஇய பெரும்புலர் வைகறை
ஏரிடம் படுத்த இருமருப் பூழிப்
புறமாறு பெற்ற பூவல் ஈரத்து
ஊன்கிழித் தன்ன செஞ்சுவல் நெடுஞ்சால்
வித்திய மருங்கின் விதைபல நாறி (அகம்.194:1-4)

இவ்வாறு உழப்பட்ட நிலத்தில் எருவிடுவர். இதனை,

விதையர் கொன்ற முதையல் பூழி
இடுமுறை நிரப்பிய (நற்.121:1-2)

என்ற பாடலடிகள் உணர்த்தி நின்றன.

சில நேரங்களில் கிழங்குகளை அகழ்ந்து உண்ணுதற் பொருட்டு பன்றிகள் தோண்டிய நிலத்தில் மழை பெய்ததும் உழாமலே தினையை விதைப்பர்.

கொழுங்கிழங்கு மிளிரக் கிண்டி, கிளையொடு
கடுங்கண் கேழல் உழுத பூமி
நல்நாள் வருபதம் நோக்கி, குறவர்
உழாது வித்திய பரூஉக்குரற் சிறுதினை (புறம். 168:3-6)

தினைப் பயிர்கள் வளர்ந்தபின் மழைத்தூறல் விழும்போதே களை எடுப்பர். களை எடுக்கும்போது பாம்பு முதலிய உயிரினங்களால் ஊறு நேரிடாது இருக்கப் பறையறைவர். மழை நின்று ஈரம் காய்ந்து விட்டால் களைக் கொட்டால் களைகளை நீக்குவர்.

கோடுடைக் கையர் துளர்எறி வினைஞர் (அகம். 184:13)

## பயிர்க் காத்தல்

புன்செய் நிலத்து விளைந்த திணைப்பயிரைக் காவல் காத்த செய்தியைக் குறிப்பிடும் பாடல்கள் பல சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. நிலம் முழுமையும் பார்வையில் படும்படி பரண்களை உயரமான இடத்தில் அமைப்பர்.

**களிற்றுத் துப்பு அஞ்சா புலியதள் இதணத்து**
**சிறுதினை வியன்புலம் காப்பின** (நற். 351:8-9)

பரணில் நின்றுகொண்டு இளமகளிர் கவண், குளிர், தட்டை ஆகிய கருவிகளின் துணையால் பயிர்களைக் கவர வரும் பறவை களை ஓட்டுவர். காவலர் புனத்தை அழிக்க வரும் யானையை விரட்டக் கொள்ளிக் கட்டையை எறிவர்.

**பிடிக்கை அமைந்த கனல்வாய்க் கொள்ளி**
**விடுபொறிச் சுடரின் மின்னி** (அகம். 73:15-16)

அம்பு எய்தும் விரட்டுவர் என்பது,

**ஏனல் காவலர் மாவீழ்த்துப் பறித்த பகழி** (நற். 13:3)

என்றதாலும்; பன்றியை அடார் என்ற பன்றிப் பொறி வைத்துப் பிடிப்பர் என்பது,

**தினைவுண் கேழல் இரிய, புனவன்**
**சிறுபொறி மாட்டிய பெருங்கல் அடார்** (நற். 119:1-2)

என்றதாலும் புலனாகும்.

இவை அன்றி விலங்குகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாக்க வேலி அமைத்தலும் உண்டு. அந்தந்த நிலத்தில் வளரும் மரஞ் செடி கொடிகளைக் கொண்டே வேலியை அமைப்பர். இதனை வாழ்முள்வேலி என்றனர்.

**வாழ்முள் வேலிச் சூழ்மிளைப் படப்பை** (பெரும். 126)

இதுவன்றி முள்ளை வெட்டிக் கொணர்ந்து கட்டும் வேலியும் அமைக்கப்பட்டது. இதனை இடுமுள்வேலி என்று குறித்தனர்.

**இடுமுள்வேலி எருப்படு வரைப்பு** (பெரும். 154)

*அறுவடை*

கார் காலத்தில் விதைக்கப்பட்ட புன்செய்ப் பயிர்கள் வேங்கை மரங்கள் மலரும் பருவத்தில் அறுவடை செய்யப்பட்டன. அகன்ற பெரிய தினைப்புனங்களில் இரவு நேரத்திலும் அறுவடை செய்வர். அப்பொழுது விலங்குகள் ஊறு செய்யாதிருக்க இரவிலும் தொண்டகப் பறையறைந்து அறுவடை செய்வர்.

**சிறுதினை விளைந்த வியன்கண் இரும்புனத்து**
**இரவுஅரி வாரின் தொண்டகச் சிறுபறை**
**பானாள் யாமத்துங் கறங்கும்** (குறு. 375 : 3-5)

கதிர்களுடன் கூடிய தினை, வரகு ஆகியவற்றைத் தாளுடன் அரிவர். அவ்வாறு அறிந்தவற்றைப் பாறைகளின் மேல் குவித்து வைப்பர். பின்னர் வரகு, தினை ஆகியவற்றைத் தாம்படிக்க எருது அல்லது யானையைப் பயன்படுத்துவர்.

**மென்தினை நெடும்போர் புரிமார்**
**துஞ்சுகளிறு எழுப்பும் தம்பெருங்கல்நாடு**
**(நற். 125:11-12)**

மிகவும் குறைந்த அளவு விளைச்சல் எனின் இளைஞர்கள் காலால் மிதித்துத் தானிய மணிகளைப் பிரித்தெடுப்பர்.

**எருதுகால் உறாஅது இளைஞர் கொன்ற**
**சில்வினை வரகின் புல்லென் குப்பை (புறம். 327:1-2)**

இவ்வாறு பிரித்தெடுத்த தினை, வரகு போன்றவற்றைப் பாறை களிலும் மான்தோலிலும் பரப்பிக் காயவைப்பர்.

**இருங்கல் வியலறை செந்தினை பரப்பி (நற் 344:12)**

இத்தானியங்கள் நன்றாகக் காய்ந்த பிறகு இவற்றைத் தொகு கூடுகளில் இட்டுவைப்பர்.

**கருங்கால் வேங்கைச் செஞ்சுவல் வரகின்**
**மிகுபதம் நிறைந்த தொகுகூட்டு ஒருசிறை**
**(அகம். 397:6-7)**

## *பல்வேறு பயிர்கள் பயிரிடல்*

தினைப்புனங்களில் தினையொடு கலந்து பருத்தியையும் விதைப்பர். அத்தினை முதிர்ந்து கொய்யப்பட்ட பின்னர் பருத்தி விளைய அதனைக் கொள்ளுதல் மலைவாணர் இயல்பு.

**பரீஇ வித்திய ஏனல்** (குறுந். 72:4)

தினைக்கதிர் அரிந்த பிறகு அதன் அடியில் மீண்டும் கிளைத்துக் கதிர் உண்டாகும். அதனை மறுகால் என்பர்.[9] தினைக் கதிர்களை அரிந்தவுடன் அவரையை விதைப்பர். இந்த அவரை வளர்ந்து சிறுதினை மறுகாலில் படர்ந்து காய்க்கும்.

**பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகால்**
**கொழுங்கொடி அவரை பூக்கும்** (குறுந். 82: 4-5)

புன்செய் விளைச்சலில் ஒருநிலப் பகுதியில் ஒருவகை பயிரை மட்டும் விளைவிக்காமல் பல்வேறு பயிர்களையும் விளைவித்தனர். ஒரு பகுதியில் தினை, மற்றொரு பகுதியில் எள், பிறிதொரு பகுதியில் வரகு எனவும் விளைவித்துள்ளனர் என்பதை,

**சிறுதினை கொய்யக் கவ்வை கறுப்பக்**
**கருங்கால் வரகின் இருங்குரல் புலர** (மது. 271-2)

என்ற பாடலடிகளால் உணரலாம்.

## *தினைப்பயிர்*

சங்க இலக்கியப் பாடல்களில் புன்செய் வேளாண்மை பற்றிய குறிப்புகளே பெருமளவு காணப்படுகின்றன. அதிலும் தினை பற்றிய பல்வேறு செய்திகள பலபாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. தினை என்னும் பயிர்வகை குறிஞ்சி நிலத்தின் சிறந்த விளைபொருளாகும். தினையின் வகைகளாகச் சிறுதினை, செந்தினை ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் சிறுதினை

9. குறுந்தொகை. 82. உ. வே. சா. உரை. ப. 172.

என்பது நன்றாகக் கிளைத்து வளரும் என்பது, 'கிளைமலி சிறு தினை' நற். 25:6 எனறதாலும்; சிறுதினை பொன்னிறமாய் இருககும் என்பதை,

**புனவன் துடவைப் பொன்போற் சிறுதினை** (குறுந்.*133:1*)

என்றதாலும உணரலாம்.

செந்தினையின் தாள் கரும்பைப் போன்றிருக்கும் என்பதைக் குறுந்தொகை,

**கரும்புமருண் முதல பைந்தாள் செந்தினை** (*198:2*)

என்கிறது.

பருவ மழையை எதிர்நோக்கி விளைவிக்கப்பட்ட தினையை விட நீர்பாய்ச்சி விளையும் தினை முன்னர் விளையும்.

**கொய்யா முன்னுங் குரல்வார்பு தினையே**
**அருவி யான்ற பைங்கால் தோறும்**
**இருவி தோன்றின பலவே** (அகம். *28: 3-5*)

*வரகு*

வரகு என்னும் புன்செய்ப் பயிர் செம்மண்ணையுடைய முல்லை நிலத்தில் பயிராகும். கார் காலத்தில் செழித்து வளரும்.[10] சிவந்த மேட்டு நிலத்தில் கார்கால மழையின் ஈரத்தில் பலமுறை புழுதி மயங்க உழுது வரகு விதைபபர். வரகு தன் இலை தழைத்துப் பெருகி, மெல்லிய மயிலினது ஈன்றணிய பேடையைப் போன்று ஓங்கி, கரிய தண்டு நீண்டு, எல்லாம் ஒரே நேரத்தில் சூல் விரிந்து, ஒரே சீராய் கதிரினது அடியும தலையும் ஒழியாமல் செழுமையாக மிகக் காய்க்கும். இக்கவின்மிகு காட்சியைப் புற நானூற்றுப் பாடலொன்று,

---

10. செவ்விகொள் வரகின் செஞ்சுவல் கலித்த —குறுந். 282:1.
..............செந்நிலப் பெருவழுதி
வானம் வாய்த்த வாங்குகதிர் வரகு —முல்லை. 97-8

**கார்பெயல் கலித்த பெரும்பாட் டீரத்துப்**
**பூழி மயங்கப் பலவுழுது வித்திப்**
**பல்லி யாடிய பல்கிளைச் செவ்விக்**
**கருந்தாள் போகி ஒருங்குபீள் விரிந்து**
**கீழு மேலும் எஞ்சாமைப் பலகாய்த்து**
**வாலிதின் விளைந்த புதுவர கரிய** (120:2-9)

எனக் கூறுகிறது.

வரகினைக் கதிரோடு கூடிய தட்டைகளினின்றும் பிரித்தெடுக்க எருதுகளை மிதிக்க விடுவர். கதிர்களினின்றும் உதிர்ந்த வரகினை அகன்ற பாறையிற் குவித்து மகளிர் தூற்றி எடுப்பர்.

**கவைக்கதிர் வரகின் கால்தொகு பொங்கழி**
**கவட்டிடப் பொருத பல்சினை உதிர்வை** (அகம். 393:5-6)

வரகானது புறாவின் முட்டை போன்று இருக்கும் என்பதை

**புறவுக் கருவன்ன புன்புல வரகு** (புறம். 34:9)

என்றும்; நெடுங்கொத்தை உடைய பூளைப்பூப் போன்று இருக்கும் என்பதை

**நெடுங்குரல் பூளைப் பூவி னன்ன**
**குறுந்தாள் வரகு** (பெரும். 193-4)

என்றும் வருணிக்கப்பட்டுள்ளன.

## *உழுந்து*

'நன்கு மழை பெய்த கார்ப்பருவத்தின் இறுதியில் விதைத்து வளர்ந்த உழுந்து முன்பனிப் பருவத்தில் காய்பிடிக்கும். உழுந்தின் காய் மயிர்க்கால் உடையதாகவும், இலைகள் அகன்றதாகவும் இருக்கும்.

**இரும்பனிப் பருவத்த மயிர்க்காய் உழுந்தின்**
**அகலிலை அகல வீசி** (நற். 89: 4-5)

உழுந்தின் தோலைப் பிரிக்க நன்றாகத் துவைப்பர் என்பது,

**'உழுத்தினுந் துவ்வாக் குறுவட்டா நின்னில்'**

என்ற மருதக்கலி (29:27) பாடலடியாலும், பண்டை நாளில் உழுந்தை உடைப்பதற்கென்றே கழுந்துள்ள தடியைப் பயன்படுத்தியுள்ளனரென்பது, 'உழுந்துடைக் கழுந்தில்', என்ற குறுந்தொகைப் (384:1) பாடலடியாலும் அறியலாம்.

## *கொள்*

கரம்பை நிலத்தில் கொள் விளையும். நிலத்தை நன்கு உழுது கொள் விதைப்பர் (கொள்ளுழு வியன்புலத்து உழைகா லாக புறம். 105:5). இடமகன்ற பெரிய நிலங்கள்தோறும் கழுதையேர் பூட்டி நன்றாக உழுது வெள்வரகும் கொள்ளும் விதைத்தல் பண்டையோர் முறையாகும்.

**இருங்களந் தோறும் வெள்வாய்க் கழுதைப்**
**புல்லினம் பூட்டி, வெள்ளை வரகும்**
**கொள்ளும் வித்தும் வைகல் உழவ** (புறம்.392)

## *பயறு*

சங்க இலக்கியத்தில் பயின்றுவரும் பயறு என்ற சொல் பயற்றம் பயிரைக் குறிக்கும்[11]. பயறு பின்பனிக் காலத்தில் முதிர்வது. பழங்கொல்லைகளில் முளைத்துக் கிடக்கும் கொடிசெடிகள் மண்ணில் புதையும்படி நன்கு உழுவர். உழுத அம்மண்ணில் மேலும் எருவிட்டுப் பயற்றை விதைப்பர். அப்பயிர் நன்கு தழைத்து வளரும்.

**முதைபடு பசுங்காட்டு அரிற்பவர் மயக்கிப்**
**பகடுபல பூண்ட உழவுவுறு செஞ்செய்**
**இடுமுறை நிரப்பி ஆகுவினைக் கலி.த்துப்**
**பாசுஇலை அமன்ற பயறு** (அகம். 262:1-4)

பயறு காய்க்குங்கால், கைவிரல்கள் ஒன்று சேர்ந்து இருப்பது போல் குவிந்து இருக்கும். பின்னர் விரிந்து காய்க்கும்.

---

11. அரிகாற் பெரும்பயறு நிறைக்கும்-ஐங். 47:3.

......................கூம்பிப்
பற்றுவிடு விரலிற் பயறுகாய் ஊழ்ப்ப (அகம். 339: 3-4)

பூவொடு கூடிய பயற்றங் கொத்தினைக் காஞ்சிமரப் பூங்கொத்துகளுக்கு உவமை கூறுவது உண்டு.

பயறுபோல் இணர பைந்தாது படீஇயர்
உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினைக்
காஞ்சி.................. (குறு. 10: 2-4)

## எள்

இதுவும் தினை, வரகு போன்றே கார்காலத்தில் பயிரிடப்படும். கார்ப்பருவ மழை தொடங்கியதும் விதைத்துக் கூதிர்காலத் தொடக்கத்தில் அறுவடை செய்வர். போதிய அளவு பருவமழை பெய்து விளையும் எள் ஒரு கைப்பிடிக்குள் ஏழுகாய் மட்டுமே கொளளும் அளவிற்குப் பருத்து நெய்மிக்கனவாய் நனகு விளையும்.

நீலத் தன்ன விதைப்புனம் மருங்கின்
மகுளி பாயாது மலிதுளி தழாலின்
அகளத் தன்ன நிறைசுனைப் புறவில்
கௌவை போகிய கருங்காய் பிடியேழ்
நெய்கொள ஒழுகின, பல்கவர் ஈர்எள் (மலை. 102-6)

எள்ளின் தோடுகள் நீலமணி போன்ற நிறமுடையவை. இளங்காயாக இருக்கும்போது போதியமழை பெய்யாவிடின் மகுளி எனற நோய் தாக்கும் இதனை அரக்கு என்றுங் கூறுவர். மகுளி நோய் விழுந்த எள்ளின் நெய் கசப்புச்சுவை உடையதாக இருககும்.

கார்காலக் கடைநாளில் எள் முற்றும் நிலையில் இருக்கும். அப்பொழுது அளவுக்கு அதிகமாக மழை பெய்யுமானால் எளளின் உள்ளீடு உருகிவிடும. காய் மட்டும் உருவம் கெடாமல் இருக்கும். உளளீடு இல்லாத இத்தகைய காயைச் சிதட்டுக்காய் என்பர்.

பழமழை பொழிந்தெனப் பதனழிந் துருகிய
சிதட்டுக்கா யெண்ணின் சில்பெயற் கடைநாள்
(குறுந். 261:1-2)

## தென்னை

சங்கப் பாடல்களில் வரும் தாழை, தெங்கு என்ற சொற்கள் தென்னை மரத்தைக் குறிப்பன. நீர்வளஞ் சான்ற மருதநிலப் பகுதியில் தென்னை நன்கு வளர்ந்ததற்கான குறிப்பு காணப்படு கிறது.

ஒலி தெங்கின் (பதி. 13:7)

தாழைத் தண்டலை (பொருந. 181)

சங்கத் தமிழர் தென்னை மரங்களுக்கிடையே பாக்கு மரங்களை வைத்து வளர்த்தனர் என்ற குறிப்பு பெரும்பாணாற்றுப்படையில்,

மழைவீழ்ந்தன்ன மாத்தாட் கமுகின்
புடைசூழ் தெங்கின் முப்புடைத் திரள்காய் (363-4)

என வந்துள்ளது.

## அவரை

குறிஞ்சி நிலப்பகுதியில் விளைவது. பெரும்பாலும் அவரை தினைப்புனத்தில் பயிரிடப்பெறும். தினையரிந்த தாளின்மேல் அவரைக்கொடி படரும். அவரையின் மலர் வெண்ணிறமுடையது. அதன் மலர்கள் உதிர்ந்து கிடத்தல் தயிர் சிதறிக் கிடத்தலைப் போன்று காட்சி தரும். தினையரிதாள்தோறும் அரிவாளை ஒக்கும் வளைந்த காயையுடையனவாய் அவரை காய்க்கும்.

கொய்பதம் உற்றென குலவுக்குரல் ஏனல்
விளைதயிர்ப் பிதிர்வின் வீயுக் கிருவிதொறும்
குளிர்புரை கொடுங்காய் கொண்டன அவரை (மலை.108-10)

பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகாற்
கொழுங்கொடி அவரை பூக்கும் (குறுந். 82:4-5)

சிறுதினை கொய்த இருவி வெண்காற்
............காய்த்த அவரை. (ஐங். 286:1-2)

என்ற பாடலடிகள் தினையரிந்த தாளின்மேல் அவரை படர்ந்து காய்த்தலுண்டு என்ற கருத்தினை விளக்குவன.

## பருத்தி

நீர்வளம் குறைந்த வறட்சி மிகுந்த இடங்களில் பருத்தி விளையும். தினைப்புனத்தில் தினையின் இடையிடையே பருத்தியை விதைத்தலும் உண்டு.

**பரீஇ வித்திய ஏனல்** (குறுந். 72:4)

தாழியில் விதையிட்டும் பருத்திச் செடியினை வளர்ப்பர். இதனை

**தாழிமுதற் கலித்த கோழிலைப் பருத்தி** (129:7)

என்ற அகநானூற்றுப் பாடலடியால் அறியலாம்.

கோடைக் காலத்தில் பருத்தி நல்ல விளைவைத் தரும். அக் காலத்தில் பறிக்கப்பட்ட பருத்தியினின்றும் கொட்டையை நீக்கிப் பஞ்சாக்குவர்.

**கோடைப் பருத்தி வீடுநிறை பெய்த**
**மூடைப் பண்ட மிடைநிறைந் தன்ன** (புறம். 393:12-13)

பண்டைத் தமிழர் நெசவுத தொழிலில் சிறப்புற அடிப்படை மூலதனமாகப் பருத்தி விளங்கியது. தமிழகத்தில் பருத்தி விளைவும் மிகுதியாக இருக்கும் எனபது

**பருத்தி வேலிச் சீறூர்** (299:1)

**பன்னல் வேலியிப் பணைநல்லூர்** (345:20)

என்ற புறநானூற்றுச் சான்றுகளால் அறியலாம்.

## கரும்பு

நீர்வளமும் நிலவளமும் நிறைந்த மருதநிலப்பரப்பில் கரும்பு விளைவிக்கப்பட்டது. இடமகன்ற வயல்களைப் பாத்தி பாத்தி யாகப் பிரித்துக் கரும்பை நட்டனர். ஒவ்வொரு பாத்தியின் பரப்பளவு ஒரு பெரிய யானையின் காலடியின் அளவாக இருந்தது என்பதை,

**கரும்புநடு பாத்தியன்ன பெருங்களிற்றடி** (262:7)

என்ற குறுந்தொகைப் பாடலடி உணர்த்தும்.

இவ்வாறு நடப்படும் கரும்பு சில வேளைகளில் வளர்ச்சி குன்றிப் போதல் உண்டு. அழிந்து போதலும் உண்டு. இக் குறைகள் வராமல் பயிரிட்டனர்.

**குறை அறை வாரா ........தீங்கழைக் கரும்பு (மலை. 119)**

கரும்பு முற்றி வளர்ந்து அறுவடைக்கு உரிய சமயம் என்பதை அறிவிப்பன அதன் மலர்களே. அதன் பூக்கள் மலர்ந்துள்ள காலத்தில் கரும்பில் சாறு மிகுந்திருக்கும் என்பது பண்டைத் தமிழர் கொள்கையாகும்.

கரும்பின் மலர்கள் சங்க இலக்கியத்தில் 'வெண்பூ' என்றும் 'வான்பூ' என்றும் பெரிதும் புகழப்பட்டுள்ளன. கரும்புகள் பருத்தும், கணுக்கள் திரண்டும், மிக உயர்ந்தும் வளர்ந்தன. கரும்பு இன்ன காலத்தில் விளையக்கூடியது என்று குறிப்பிடப் படவில்லை. நீர்வளம் மிக்கிருந்தால் ஆண்டு முழுதும் தொடர்ந்து பயன்தரக்கூடிய பயிராய் விளங்குவது கரும்பு. அறுவடைக்குப் பின்னும் அதன் கட்டையே மீண்டும் பயிராக வளரும். இவ்வாறு ஓரிருமுறை பயிர் செய்த பிறகு அடியோடு அக்கட்டைகளை அகழ்ந்தெடுத்து மீண்டும் கரும்புப் பயிரிடுவதுமுண்டு.

**காலமன்றியும் கரும்பறுத்து ஒழியாது**
**அரிகால் அவித்து (பதி. 30:14)**

இவ்வாறு அறுவடை செய்யப்பட்ட கரும்புகள் உறுதியாகவும் பருத்தும் இருந்தன. நெல்லை விளைவிக்கும் உழவர்கள் கள்ளைக் கொண்டு செல்லும் வண்டிகள் சேற்றில் ஆழ்ந்து விடுமாயின் கரும்புகளை வரிசையாக அடுக்கி, அக்கரும்புகளின் மீது வண்டியை விடுவார்கள். வண்டியின் சுமையைத் தாங்கும் அளவிற்குக் கரும்புகள் உறுதிவாய்ந்தவையாக இருந்தன.

கரும்பு ஆண்டு முழுமையும் பயன்தரும் பயிராக இருந்தமையின் நாடெங்கிலும் கரும்பாலைகள் இருந்தன. கரும்பாலையின் ஒலி ஊர்தோறும் ஒலித்துக் கொண்டே இருக்கும். அவ்வோசையை

**கரும்பின் எந்திரம் சிலைப்பின் (புறம். 322:7)**

**கரும்பின் எந்திரம் களிற்றெதிர் பிளிற்றும் (ஐங்.55)**

எனச் சங்கப்பாடல்கள் கூறுகின்றன. கரும்பு கழைக் கரும்பு, கழனிக் கரும்பு, கார்க் கரும்பு (பட். 9) என்ற பெயர்களால் குறிப்பிடப்பட்டுள்ளன.

## மிளகும் மஞ்சளும்

சங்க காலத்தில் பொருளாதாரப் பெருக்கத்திற்கு ஆக்கம் தரும் வகையில் மிளகு குறிஞ்சிநில மலைப்பகுதியில் விளைந்தது. மிளகு கரிய கொடிகளையும், கொத்தாகக் காய்க்கும் பசிய காய்களையுமுடையது.

**மைபடு சிலம்பிற் கறி (பரி. 16:2)**
**கருங்கொடி மிளகின் காய்த்துணர்ப் பசுங்கறி**
**(மலை. 521)**

பலா மரத்தின் மேல் படர்ந்து விளையுமாறு மிளகுக்கொடியை வளர்ப்பர். பலா மரத்தின் நிழலில் மெல்லிய இலையையுடைய மஞ்சளைப் பயிரிடுவர்.

**பைங்கறி நிவந்த பலவின் நீழல்**
**மஞ்சள்..................... (சிறுபாண். 43-44)**

சேம்பையும் மஞ்சளையும் விதைத்துவிட்டு, வளர்ந்த பின்பு பன்றிகள் கிழங்ககழாமல் காப்பதன் பொருட்டுப் பறை கொட்டுவர்.

**சேம்பு மஞ்சளும் ஓம்பினர் காப்போர் (மலை. 343)**

மதுரைக் காஞ்சி எனும் பத்துப்பாட்டு நூலில் மலைநிலத்தின் விளைபொருள்களைக் கூறுகையில், 'மணமுள்ள அகில் சந்தன மரங்களை அழித்துத் திருத்திய மேட்டு நிலத்தில் விதைத்த சிறிய கதிர்களையுடைய தோரை நெல்லும், நீண்ட தாளினையுடைய வெண் சிறு கடுகும், ஐவனம் என்னும் வெண்ணெல்லோடு பிணக்கங் கொண்டு வளருமாறு செய்து, இஞ்சி, மஞ்சள், பசிய மிளகுக்கொடி ஆகியவற்றையும் விளைவிப்பர்'.[12] இவ்வாறு

---

12. மதுரைக் காஞ்சி, 286—89.

ஒரே இடத்தில் அந்நில வளத்திற்கேற்ற பல்வேறு பயிர்களைப் பயிரிட்டுப் பலனடைய அக்கால மக்கள் அறிந்திருந்தனர் என்பதை உணரலாம். விவசாயத் துறையில் மாற்றுப் பயிர் வேளாண்மை முறையைக் (Rotation of crop system) கையாண்டு அதன்மூலம் நிலத்தின் செழுமையைக் காக்கின்ற முறையை உலகுக்கு வழங்கிய பெருமை பண்டைய ரோமானியர்களைச் சாரும்.

## பயிர்த்தொழிலுக்கு வேண்டிய கருவிகள்

சங்க காலத்தில் பயிர்த்தொழில் செழிப்புடன் வளம்பெற உழவர் சமுதாயத்தின் தளர்விலா உழைப்பே மூலதனமாக அமைந்தது. மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டவைகளுக்கு கால்நடைகள் பயன்படுத்தப்பட்டன. வேளாண்மையோடு இயை புடைய தொழிலாக உழவர்களே கால்நடைகளை வளர்த்துக் காத்தனர். உழவு வேலைகள் யாவற்றுக்கும் கால்நடைகள் இன்றி யமையாதன. உழுதல், களத்தில் போர் அடித்தல், விளைந்த தானியங்களை ஏற்றிச் செல்லல் முதலான வேலைகட்கு இவை பயன்பட்டன. ஆடு, மாடு இவற்றின் சாணம் எருவாகப் பயன் பட்டது.

பயிர்த்தொழிலுக்குப் பயன்பட்ட கருவிகளான கலப்பை, உருளை முதலியவற்றை வைக்கத் தனிக்கொட்டில்கள் இருந்தன.

குறுஞ்சாட் டுருளையொடு கலப்பை சார்த்தி
நெடுஞ்சுவர் பறைந்த புகைசூழ் கொட்டில்
(பெரும். 188-9)

### கலப்பை

பயிர்த்தொழிலின் முதல் செயலான நிலத்தைப் பண்படுத்தும் உழுதற்றொழிற்குப் பயன்பட்ட இன்றியமையாக் கருவி 'கலப்பை' எனபதாகும். இக்கருவி 'நாஞ்சில்' என்ற சொல்லாலும் குறிக்கப் பட்டுள்ளது. இந்நாஞ்சிலின் அமைப்பு பெண் யானையின் வாயை ஒத்து வளைந்தும், அதில் பொருத்தப்பட்டுள்ள பெருங்கொழு உடும்பின் முகம் போன்றும் தோற்றமுடையது. இக்கலப்பை கொண்டு வறண்ட நிலத்தையும் உழுதனர்.

பிடிவாய் அன்ன மடிவாய் நாஞ்சில்
உடுப்புமுக முழுக்கொழு மூழ்க ஊன்றி (பெரும். 199-200)

## தளம்பு

நிலத்தை நன்றாக உழுத பின்னர் சமமாக இருத்தற் பொருட்டுத் தளம்பு என்னுங் கருவிகொண்டு சேற்று வயலைச் சமப்படுத்துவர். 'மலங்குமிளிர் செறுவில் தளம்பு தடிந்திட்ட' (புறம். 61:3.)

## ஏற்றமும் கிழாரும்

வயல்களுக்கு நீரைப் பாய்ச்சுவதற்குச் சில இறைப்புக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. குளத்திலும், கிணற்றிலும் உள்ள நீரை ஏற்றம் வைத்து இறைத்தனர். அவ்வேற்றத்தில் அகன்ற வாயையுடைய 'ஆம்பி' என்ற கருவி பொருத்தப் பட்டிருக்கும். இதனைப் பன்றிப்பத்தர் என்ற சொல்லாலும் குறிப்பிடுவர்.

ஏற்றமொடு வழங்கும் அகலாம்பி (மது.90)

நீரிறைக்கப் பயன்படும் மற்றொன்று கிழார் எனப்படும்.

மென்தொடை வன்கிழார் (மது.92)

மெத்தென்ற கட்டுக்களையுடைய பூட்டைப் பொறி என்றுங் கூறுவர்.

## துளர்

வயலில் வளரும் களைகளைக் கையால் பிடுங்கி எறிவர். ஈரமின்றிக் காய்ந்து விட்ட களைகளைத் துளர் என்ற கருவியால் களைவர்[13].

---

13. • அகநானூறு, 184:13

## குளிர், தட்டை, தழல்

புன்செய்ப் பயிர்களாகிய தினை வரகு ஆகியவை நன்றாகச் செழித்து வளர்ந்ததும், அவற்றிலுள்ள மணிகளை உண்ணவரும் பறவைகளை விரட்டக் குளிர், தட்டை ஆகிய கருவிகளைப் பயன்படுத்துவர். **குளிர்** என்பது கிளிகளை ஓட்டுவார் மூங்கிலை வீணைபோல் கட்டித் தெறிக்குங் கருவி என்பர் தஞ்சைவாணன் கோவை உரை ஆசிரியர். **தட்டை** என்பது தட்டப்படுவதனால் அப்பெயர் பெற்றது. மூங்கிலைக் கண்ணுக்குக் கண் உள்ளாக நறுக்கிப் பலவாகப் பிளந்து, ஓசை உண்டாக ஒன்றிலே தட்டப் படுவது (குறிஞ்சிப்.43). **தழல்** என்பது கையால் சுற்றும் பொழுது தன்னிடத்துப் பிறக்கும ஓசையால் கிளி முதலியவற்றை ஓட்டுங் கருவியாகும். சிலர் இதனைக் கவண் என்றுங் கூறுவர்.

**தழலை வாங்கியும் தட்டை ஒப்பியும்**
**குறமகள் காக்கும் ஏனல்** (அகம். 188:11-12)

**தழலுந் தட்டையுங் குளிரும் பிறவும்**
**கிளிகடி மரபின** (குறிஞ்சிப். 43-44)

என்ற சான்றுகளினின்றும் அறியலாம்.

## கணை, ஞெகிழி, அடார்

தினைப்புனங்களில் கிளிபோன்ற பறவைகளே அன்றி விலங்கு களும் பயிரைக் கவர்ந்துண்பன. விலங்குகள் புகுந்துவிட்டால் அவற்றைக் **கணை** எய்து விரட்டுவர். யானை போன்ற விலங்கு களைக் கொள்ளிக்கட்டையினால் விரட்டுவர். இக்கொள்ளிக் கட்டை **ஞெகிழி** என்ற சொல்லால் சங்க இலக்கியத்தில் குறிக்கப் பட்டுள்ளது. பன்றியைப் பிடிக்கப் பெரிய கல்லாலான ஒரு பொறியை வைத்திருப்பர். அப்பொறி **அடார்** என்ற சொல்லால் வழங்கப்பட்டது.

**ஒளிதிகழ் ஞெகிழியர் கவணையர் வில்லர்**
**களிறென ஆர்ப்பவர் ஏனல் காவலரே** (நற். 393:4-5)
**சிறுபொறி மாட்டிய பெருங்கல் அடார்** (நற். 119:3)

### கிணை, தண்ணுமை

விளைந்த நெல்லை அறுவடை செய்யப் புகுமுன் வயலில் கூடு கட்டி வாழும் பறவைகளை விலக்கிச் செல்ல தண்ணுமை என்னும் பறையை முழக்குவர்.

**வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇப்**
**பழனப் பல்புள் இரிய (நற்.350)**

### குயம், வாள்

விளைந்த நெற்கதிர்களை அறுக்க வளைந்து காணும் அரிவாளைப் பயன்படுத்தினர்.

**கூனிக் குயத்தின் வாய்நெல் அரிந்து (பொரு.242)**

**நெல்லரி தொழுவர் கூர்வாள் (நற். 26:2)**

### குதிர், தொடுகூடு

நன்செய் விளைவாகிய நெல்லைச் சேமித்து வைக்கும் இடம் கூடு, நெடுங்கூடு என்றும், புன்செய்ப் பயிராகிய தினை. வரகு ஆகியவற்றைச் சேமித்து வைக்கும் இடம் குதிர் என்றும், தொடுகூடு என்றும் வழங்கப்பட்டுள்ளதைச் சங்கப் பாடல்களினின்றும் அறிய முடிகிறது.

### வேளாண்மையில் இசை

நன்செய், புன்செய்ப் பயிர்களைப் பயிரிடுகையில் முறையே நிலத்தை உழும்போதும், நீர் இறைக்கும்போதும், விளைந்த பயிர்களைக் காவல் காக்கும்போதும், தூற்றும் பொழுதும், நெல்லை உரலிலிட்டு உலக்கையால் குற்றும் பொழுதுமெனப் பயிர்த் தொழிலோடு இயைந்து இசைப்பது இசையாகும். நன்றாக உழுத நிலத்தில் நீர்பாய்ச்ச வேண்டும். நீரினை முகந்திறைப் போர் வரிசையாக நின்று இறைக்கின்றனர். அப்பொழுது அவர்கள் செய்யும் தொழிலில் சோர்வடையாதிருக்கப் பாடிக் கொண்டே நீரிறைக்கின்றனர். இதனை மதுரைக்காஞ்சி,

**நீர்த்தெவ்வு நிரைத்தொழுவர்**
**பாடு சிலம்பும் இசை (89-90)**

என்றது.

நெல், தினை முதலியனவற்றை இளமகளிர் பாடிக்கொண்டே மாறிமாறிக் குற்றுதல் வழக்கம், இது வள்ளைப்பாட்டு அல்லது உலக்கைப் பாட்டு எனப்படும். இதனை மலைபடுகடாம்,

**தினைகுறு மகளிர் இசைபடு வள்ளையும் (343)**

என்றது.

கழனியில் உழுகின்றவர் எழுப்பிய ஏர்மங்கலப் பாட்டானது இடமெங்கிலும் ஒலிக்கின்றது.

**கழனி உழவர் கலிசிறந் தெடுத்த**
**கறங்கிசை (அகம். 266: 17-18)**

இவ்வாறாக இசை உழுதொழிலுக்குப் பல்வேறு நிலைகளில் பயன்பட்டது.

## வேளாண்மையில் உவமை

தெரிந்த ஒன்றைக் கொண்டு தெரியாத ஒன்றை விளக்குவது உவமை என்போம். சங்க இலக்கியப் பாடல்களில் இயற்கைப் பொருள்களே பெருமளவு உவமையாகக் கூறப்பட்டுள்ளன. பயிர்த்தொழிலுக்கு உரியவை உவமையாகப் பயன்படுத்தப்பட்டுள் ளமைக்கு ஓர் உயரிய உவமையைச் சான்றாகக் காணலாம்.

தலைவியைப் பிரிந்து வினைமேற் சென்ற தலைவன் ஒருவன் தான் குறித்துச் சென்ற பருவங் கடந்து புறப்படுகின்றான். அவன் கடந்து செல்ல வேண்டிய தூரமோ நெடுந்தூரம். எனவே அவன் மிக விரைவாகச் செல்ல வேண்டும். அந்நிலையில் அவனது உள்ளத்தில் தான் முன்னர் கண்ட காட்சி ஒன்று நினைவுக்கு வருகிறது. அவன் புன்செய் நிலத்திற்கு உரிய ஓர் உழவன், அவனிடம் இருப்பதோ ஓர் ஏர். அவன் மழை பெய்ததும், ஈரம் புலர்வதன்முன் தன் நிலத்தில் பயிரிட வேண்டி மிக வேகமாக உழுதான்.

**ஆடமை புரையும் வனப்பின் பணைத்தோள்
பேரமர்க் கண்ணி இருந்த ஊரே
நெடுஞ்சேண் ஆரிடை அதுவே நெஞ்சே
ஈரம் பட்ட செவ்விப் பைம்புனத்து
ஓர்ஏர் உழவன் போலப்
பெருவிதுப்பு உற்றன்றால் நோகோ யானே.** (குறுந். 131)

இப்பாடலில் பிரிந்து சென்ற தலைவன் தலைவியைக் குறிப்பிட்ட காலத்தில் வந்தடைய விரைந்து வந்தமைக்கு ஓர் ஏர் உழவன் செயல் உவமையாகக் கூறப்பட்டது. ஓர் ஏர் உழவன் என்ற உவமை பல நுண்ணிய கருத்துக்களை உள்ளடக்கியதாய் உள்ளது. உழவர்களில் சிலர் ஓர் ஏரே வைத்து உழவு செய்தனர் என்பதும், பல ஏர்களை வைத்து உழவுத்தொழில் செய்தவர்களும் இருந்தனர் என்பதும், ஓர் ஏர் உழவன் பருவத்தில் விதைத்துவிட வேண்டும் என்று மிக வேகமாக உழுதான் என்பதும், ஓர் ஏர் கொண்டு உழுமளவிற்கே நிலம் உரிமையாக இருந்தது என்பதும் அவ்வுவமையால் உணர முடிகின்றது. இவ்வாறு சங்க இலக்கியப் பாடல்களில் உழவுத் தொழில் தொடர்பான பல உவமைகள் காணப்படுகின்றன. ஒவ்வோர் உவமையிலும் பல கருத்துகள் பொதிந்துள்ளன.

## உருவகத்தில் உழுதொழில்

சங்க இலக்கிய, அக, புறப் பாடல்களில் வேளாண்மை உவமைகள் அழகுற, நயம்படப் போற்றப்பட்டுள்ளதைப் போலவே சில அரிய உருவகக் காட்சிகளும் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் போர்க்களத்தை ஏர்க்களமாக உருவகித்தல் புறநானூற்றில் பயின்றுவரும் துறையாக அமைந்துள்ளது. இதனை ஏர்க்கள உருவகம் என்று கூறியுள்ளனர். யானைகள் மேகங்களாகவும், வீரரின் வாள் மின்னலாகவும், குதிரைகள் வீசும் காற்றாகவும், அம்புகள் மழையாகவும், போர்க்களம் வயலாகவும், தேர்கள் ஏர்களாகவும், வேலும் கணையும் விதைகளாகவும், தலை சாய்த்த பிணங்கள் பசுமையான பயிராகவும், பேய்கள் பற்றிய பிணக்குவியல் நெற் போர்வையாகவும், நரிக்கூட்டமும் கழுகுகளும் அப்பிணக் குவியலைக் களத்திலே போட்டு மிதிக்க, பூதங்கள் காவல் செய்ய, என

இப்பல்வகைக் காட்சிகளோடு போர்க்களம் ஏர்க்களமாக உருவகிக்கப்பட்டுள்ளது.

சங்க இலக்கியப் பாடல்களினின்றும் பண்டைத் தமிழர் எங ஙனம் தமது பயிர்த் தொழிலைத் திட்டமிட்டுச் செயற்படுத்தினர் என்பதை அறிய முடிகின்றது. இப்பாடல்களில் நன்செய்ப் பயிர்த் தொழில் குறிப்புகளைவிடப் புன்செய்ப் பயிர்களைப் பற்றிய செய்திகளே மிகுதியாய் காணப்படுகின்றன. உழவு, உழவர் என்ற சொற்கள் பயிர்த்தொழிலையும் அதைச் செய்வோரையும் உணர்த்தப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பண்டைக் காலத்தில் வழக்கிலிருந்த பயிர் வகைகள் என்னென்ன, அவை பயிர் செய்யும் முறை, காலம், இடம் எவை என்பதையும் அவற்றின் தோற்றம், தன்மை, பயன் ஆகியவை குறித்தும் பல குறிப்புகள் பரவலாகக் காணப்படுகின்றன. அவற்றைத் தொகுத்துப் பார்க்கையில் நம் முன்னோர் அக்காலத்திலேயே உழவுத் தொழிலில் எத்தகு மேன்மையுற்றிருந்தனர் என்பது புலப்படும்.

நிலங்களை நன்செய், புன்செய், விடுநிலம் எனப்பகுத்திருந்தனர். பண்பட்ட நன்செய் விளைநிலங்களைப் பருவமழை தொடங்குவதற்கு முன்னரே நன்கு உழுது வைக்கும் பழக்கத்தினை மேற்கொண்டிருந்தனர். நீர்வளம் உள்ள மருதநிலப் பரப்பில் ஆண்டு முழுதும் தொடர்ந்து பயிரிடப்பட்டது. ஒவ்வொரு முறை பயிரிடும் பொழுதும் நிலத்தைத் திருத்தி விரிவுபடுத்தினர். ஒரே பருவத்தில் ஒரே நிலத்தில் இரண்டு அல்லது மூன்று பயிர்களைப் பயிரிட்டுப் பயனடைய அறிந்திருந்தமை பயிர்த்தொழிலில் அவர்கட்கிருந்த அனுபவத்தை நன்கு புலப்படுத்தும். உழுதொழில் முறைப்படி செய்வதற்கான பயிரிடு முறைகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. உழுதொழிலுடன் சார்புடைய கால்நடை வளங் குறித்தும் கூறப்பட்டுள்ளது. எருதுகளை உழவிற் பழக்கிப் பயிர் செய்து அவற்றிற்கு வேண்டிய உணவினைத் தந்து பாதுகாக்கும் உழவர்களைப் 'பகடு புறந்தருநர்' எனப் புலவர் பெருமக்கள் போற்றினர்.

# நெசவுத் தொழில்

மக்கள் சமுதாயத்திற்கு உணவினை அடுத்து இன்றியமையாது வேண்டப்படுவது ஆடையாகும். விலங்குகளைப் போலன்றி உடலை மறைத்தற்குரிய உடையினை அணிந்து, மானத்துடன் வாழும் முறை மக்கள் வாழ்க்கையின் சிறப்பியல்பாகும் நாகரிகம் வளராத மிகப் பழங்காலத்தே மக்கள் தழை, இலை ஆடைகளையும், மரப் பட்டைகளையும், மான், புலி முதலியவற்றின் தோலினையும் உடுத்து வாழ்ந்தனர். நாளடைவில் அந்நிலை மாறியதும் மக்கள் தங்கள் நுண்ணறிவின் திறத்தால் பருத்தியின் பஞ்சினை நூலாக நூற்று, ஆடையாக நெய்து, அணியத் தொடங்கிய காலமே மனிதனின் வரலாற்றில் ஒரு புதிய திருப்பமாகும். அப் புதிய முயற்சியின் விளைவால் தொடங்கிய தொழிலினையே நாம் நெசவுத் தொழில் என்று பெருமையுடன் கூறுகின்றோம்.

'இது வீட்டுத் தொழில்களில் முக்கியமானது. பண்டைத் தொழில்களுள் ஒன்று. விவசாயத்துக்கு அடுத்தது. மக்கள் நாகரிகம் அடையத் தொடங்கியதும் கையாண்ட முதல் கைத் தொழில்' என்று கலைக்களஞ்சியம் குறிப்பிடுகின்றது.[1] தொல் பொருள் வரலாற்று அறிஞர்கள் இந்நெசவுத் தொழில் புதிய கற் காலத்தில் ஆரம்பமாயிற்று என்பர். ஆடையைப் பற்றிய குறிப்புகள் தொல்காப்பியத்தில் காணப்படுவதால் இந்நெசவுத் தொழிலின் தொன்மையை நாம் நன்கு அறிய முடிகின்றது.

தொல்காப்பியப் பொருளதிகாரம் (249-2)

**கூழை விரித்தல் காதொன்று களைதல்**
**ஊழணி தைவரல் உடைபெயர்த் துடுத்தலோ**
**டூழி நான்கே இரண்டென மொழிப**

எனக் குறிப்பிட்டுள்ளது.

1. கலைக்களஞ்சியம் - தொகுதி-4; ப. 215.

சங்க கால இலக்கியங்கள் மிகத் தெளிவாக நெசவுத் தொழிலின் வளர்ந்த நிலையைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. நெசவுத் தொழிலுக்குப் பருத்தி மிகவும் இன்றியமையாத ஒருமூலப் பொருளாக விளங்கியது. தமிழகத்தில் பருத்தி விளைவும்மிகுதியாக இருந்திருக்கும் என்பது 'பருத்தி வேலிச் சீறூர்' (299:1); 'பன்னல் வேலியிப் பணைநல்லூர்' (345:20) என்ற புறநானூற்று அடிகளி னின்றும் அறியலாம். 'இப்பருத்தியே அன்றி இலவமரம், கோங்குமரம் முதலிய மரங்களிலிருந்து வேண்டிய பஞ்சு சேகரித்து நெசவுத் தொழிலுக்குப் பயன்படுத்தினர்.[2]' சங்க இலக்கியப் பாடல்களில் பல இடங்களில நெய்தல் தொழில் பற்றிப் பேசப் படுகின்றன. பருத்தி, பட்டு ஆகிய பொருள்களைக் கொண்டு துணிகள் நெய்யப்பட்டன.

பருத்திப் பஞ்சை அதனுடைய கொட்டையிலிருந்து பிரித் தெடுக்க வில்லினைப் பயன்படுத்தினர் என்பதை அகநானூற்றுப் பாடலடியாலும், நற்றிணைப் பாடலடியாலும் அறியலாம்.

**வில்லெறி பஞ்சின் வெண்மழை தவழும் (அகம். 133-5)**

**வழிதுளி பொழிந்த இன்குரல் எழிலி**
**எஃகுறு‡ பஞ்சிற் றாகி (நற். 247:3-4)**

பின்னர், பருத்திக் கொட்டையை நீக்கித் தூய்மை செய்யும்போது பஞ்சின் புறத்தோலினையும் எஞ்சி நிற்கும் கொட்டையையும், தூசினையும் நீக்குவதற்காக நன்றாகப் புடைத்தெடுப்பர். இக் கருத்து,

**சிறையும் செற்றையும் புடையுநள் எழுந்த**
**பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்து (புறம் 326:4-5)**

---

2. அ. அப்துல் மஜீத். ஆய்வுக்கொத்து. ஆராய்ச்சிப் பேரவை. சென்னை 29. 1973. ப. 140.

‡ எஃகுதல் — வில்லால் அடித்தல்.
பாரம் — பருத்தி: இது பருத்திவாணிபர் அந்நெறியிற் சென்று கூவலருகில் தங்குழி ஆண்டு அவ்வித்துதிர்ந்து முளைத் திருப்பது.

இங்கு சிறை—பஞ்சியின் புறத்தோலையும், செற்றை—தூசியையும் குறிப்பன.

மகளிர் பருத்திப் பஞ்சினைச் செப்பஞ் செய்து நுண்ணிய நூலாக நூற்பதில் கைத்திறம் பெற்று விளங்கினர். இப்பெண்கள் **பருத்திப் பெண்டிர்** என அழைக்கப்பட்டனர். மேலும் கணவரை இழந்த மகளிர் இத்தொழிலில் பெரிதும் ஈடுபட்டிருந்தனர் என்பது

**ஆளில் பெண்டிர் தாளில் செய்த**
**நுணங்கு நுண் பனுவல் (நற். 353:1-2)**

என்னும் பாடலடிகளால் தெரிகின்றது. இப்பெண்டிர் இரவு நேரத்திலும் நூல் நூற்றனர் என்பது **பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்து** என்ற அடியால் புலப்படும். இவ்வாறு பெண்கள் நூற்று இழைத்துத் தந்த நூலைப் பாவாக விரித்துத் தறியில் நெய்து ஆடையாகக் கொடுக்கும் கடமை ஆடவர் தொழிலாய் அமைந்தது.

நுண்மையான நூலைக் கொண்டு நெய்யப்பட்ட ஆடையினுடைய இழைகளின் வரிசைகளைக் காண்பதற்கு இயலாத வகையில் நுட்பமாக நெய்யப்பட்டிருந்தது.

**பாம்புரி யன்ன வடிவினை காம்பின்**
**கழைபடு சொலியி னிழையணி வாரா (புறம். 383:10-11)**

**நோக்கு நுழை கல்லா நுண்மைய (பொருந. 82)**

என்ற பாடற் குறிப்புகள் மேற்கூறிய கருத்தை வலியுறுத்துவன.

மிக உயர்ந்த மெல்லிதான துணிகளும் நெய்யப்பட்டன. அவற்றிற்குத் **துகில்** என்பது பெயர்.

**(எ-டு) புகை விரிந்தன்ன பொங்கு துகில் (புறம். 398:20)**

தறி நெய்து அறுக்கப்பட்டமையால் **அறுவை** என்றும், நெய்த உடையினைச் சுருக்கமின்றி மடித்து மடித்து விற்று வந்தமையால் **மடி** என்ற பெயரும் வழங்குவதாயிற்று.

இங்ஙனம் நெய்யப்பட்ட துணிகளுக்கு நிறம் ஊட்டினதற்குச் சான்றாக, நம் தமிழகத்தில் அரிக்கமேடு என்ற இடத்தில் நடந்த

அகழ்வாய்வின் மூலம் மஸ்லின் துணிகளுக்குச் சாயம் தோய்க்கப் பயன்பட்ட செங்கற்களால் ஆன இரண்டு தொட்டிகள் கண்டு பிடிக்கப்பட்டன அவற்றின் காலம் கி.பி. முதல் நூற்றாண்டு எனக் கணக்கிடப்பட்டுள்ளது. சங்க இலக்கியப் பாடல்கள் சில வற்றில் பல்வேறு வண்ண ஆடைகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. காட்டாக, நீலநிறத் துணிகள்—நீலமென் சேக்கை-(கலி. 72-1) என்றும் செந்நிறத் துணிகள்—துவர்செய் ஆடை (நற். 33); கோபத் தன்ன தோயா பூதுகில் (திருமுருகு.15) என்றும் வருமிடங்களைக் கூறலாம். ''நீலநிறத் துணிகளும், செந் நிறத் துணிகளும் இருந்தனவென்று இலக்கியங்கள் வாயிலாக அறி கிறோம். இத்துணிகளுக்கு நிறம் எவ்வாறு ஊட்டப்பெற்றதென்று அறிய வேண்டும் பண்டைக் காலத்தில் வண்ணம் தயாரிக்கக் காடுகளில் முளைத்திருக்கும் செடிகளின் தழைகளும், மரப்பட்டை களும், அவுரிச் செடிகளும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். அவுரிச் செடிகள் நம் நாட்டிலிருந்து மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. வண்ணம் தயாரிக்கப்பயன்படுவதால்தான் இச் செடிகள் மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன எனக் கருத இடமுண்டு''.[3]

ஹெரடோடஸ் என்னும் யவன ஆசிரியர் நம்நாட்டு பஞ்சைப் பற்றி பேசும்போது 'மரங்களில் வளரும் பஞ்சு' என்றும், அஃது ஆட்டுரோமங்களால் உண்டாக்கும் கம்பளிகளிலும் மேலானது' என்றுங் கூறுகிறார்.[4]

இவ்வாறு திறமையுடன் நெய்யப்பட்ட ஆடைகளின் சிறப் பினைச் சங்க இலக்கியப் பாடல்கள் பின்வருமாறு புகழ்ந்து பாடு கின்றன. சில சான்றுகள்:

1. அரும்பி மலர்ந்த பகன்றையின் புதுப்பூப்போன்ற அகல மடிக்கப்பட்ட ஆடை என்ற கருத்தமைய,

**போதுவிரி பகன்றைப் புதுமல ரன்ன**
**அகன்றுமடி கலிங்கம்** (புறம். 393: 17-18)

---

3. ஆய்வுக்கொத்து. ப. 144.
4. மு. இராகவையங்கார். ஆராய்ச்சித் தொகுதி. ப. 152.

2. மூங்கிலின் உட்புறத்தே உள்ள தோல் போன்றது என்பதை,

**கழைபடு சொலியி னிழையணி வாரா**
**ஒண்பூங் கலிங்கம்** (புறம். 383: 10-11)

என்றும்,

3. பாலாவியைப் போன்றது என்ற பொருளமையை,
**ஆவியன்ன அவிர்நூற் கலிங்கம்** (பெரும். 469)
என்றும்,

4. பாம்பு உரித்த தோல் போன்றது என்ற பொருளமைய,
**பாம்புரி யன்ன வடிவின** (புறம். 383:10)
என்றும் பாடப்பட்டுள்ளன.

இங்ஙனம் மென்மையாக நேர்த்தியுடன் நெய்யப்பட்ட ஆடைகளுக்கு மேலும் அழகூட்டும் வகையில் நேரிய கரைகள் அமைத்து அதில் அழகிய பூவேலைப்பாடுகளும் செய்தனர். இக்கருத்தினை

**.....................நேர்கரை**
**நுண்ணூல் கலிங்கம் உடீஇ** (புறம். 392: 14-15)

**கொட்டைக் கரைய பட்டுடை** (பொருந. 155)

(பட்டுடையின் கரைகளில் திரளமுடிந்த முடிகள் அழகுபெற அமைக்கப்பட்டிருந்ததை இவ்வடி உணர்த்தும்.)

**வான்பூங் கலிங்கம்** (புறம். 383: 12;397:15)

**நீலக் கச்சை பூவார் ஆடை** (புறம்.274)

**புன்பூங் கலிங்கம் (சிறிய பூக்கள் அமைந்தஆடை)** (நற்.90)

என்ற பாடற்குறிப்புகள் உணர்த்தவல்லன.

பண்டைத் தமிழர் பஞ்சைப் பயன்படுத்தி நெய்த ஆடைகளே அல்லாமல் பட்டுநூலைப் பயன்படுத்திப் பட்டாடை நெய்தனர். மேலும் மரப்பட்டையில் உள்ள நாரினை எடுத்துப் பின்னி மலைவாழ் குறவர் ஆடையாகப் பயன்படுத்தினர் என்பதை,

**மரனாருடுக்கை மலையுறை குறவர்** (நற். 64:4)
என்ற பாடலடியால் அறியலாம்.

பொன் இழைகளாலும் ஆடைகள் நெய்யப்பட்டுள்ளன என்பதைப் 'பொன்புனை உடுக்கையோன்' என்ற பரிபாடல் (14:18) மூலமறியலாம்.

## தைக்குந் தொழில்

சங்க காலத்தமிழர் நேர்த்தியான ஆடையை நெய்வதில் வல்லவர் என்பதைக் கண்டோம். அந்த ஆடைகளில் சிறியனவும், பெரியனவுமான பூ வேலைப்பாடுகள் செய்யப்பட்டமைக்கான சான்றுகளும் உள்ளன. இத்தகைய சிறந்த ஆடைகள் தைப்ப தற்கு தையற்காரர்கள் இருந்திருத்தல் வேண்டும். அரசியல் அலுவலரும் உயர்குடிப் பெண்டிரும் சட்டையும் கச்சும் அணிந் திருந்தனர் என்பதற்கான குறிப்புகள் காணப்படுகின்றன சான்று:

**...............படம்புக்குப்**
**பொருகணை தொலைச்சிய புண்தீர் மார்பின்**
**விரவுவரிக் கச்சின் (பெரும். 69-71)**

நீராடுவதற்குத் தனி உடை உடுத்தனர். அது **புட்டகம்** எனப் பட்டது.

**புட்டகம் பொருந்துவ புனைகு வோரும் (பரிபாடல். 12:17)**

இவற்றை நோக்க அக்காலத்தில் தையல் தொழில் சிறப்புற்றிருந் தமை புலனாகும்.

உயர்குடி மக்கள் மெத்தென்ற படுக்கைகள் தயாரித்து அதில் பள்ளிகொண்டனர் நெடுநல்வாடை என்னும் சங்கப் பாடலில் அரசமாதேவிக்குரிய அணைகள் அன்னப்பேட்டின் தூவியால் ஆனவை; கட்டிலின்மீது படுக்கை விரிக்கப்பட்டிருந்தது என்னும் செய்திகள் அக்காலத்தில் மெத்தைகளும் தலையணைகளும் தயா ரிக்கும் தொழில் உயர்நிலையில் இருந்ததைப் புலப்படுத்தும்.

**மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்படத்**
**துணைபுணர் அன்னத் தூநிறத் தூவி**
**இணையணை மேம்படப் பாயணை யிட்டு**
**(நெடுநல். 131-33)**

# தச்சுத் தொழில்

இயற்கை தந்த செல்வம் பலவகையான உரம்வாய்ந்த மரங்கள். தகுதியுள்ள மரங்களை அறுத்து வீடமைத்தற்கும், வண்டி, தேர் முதலியன செய்தற்கும் வழிகண்ட பெருமை தச்சர் என்னும் தொழிலாளர்க்கே உரியதாகும். மக்கள் சுமந்து செல்லு தற்குரிய சுமையை எளிதிலே எடுத்துச் செல்வதற்கு ஏற்ற வண்டி களையும், மக்கள் விரைந்து செல்லக்கூடிய தேர் முதலிய ஊர்திகளை உண்டாக்கியதும் தச்சுத் தொழிலின் நுண்ணுணர்வே யாகும்.

தச்சு என்பது ஒன்றையும் மற்றொன்றையும் பொருத்தி இணைப்பதாகும். இத்தச்சுத் தொழிலைச் செய்வோர் தச்சர் எனப்பட்டனர். கல்தச்சுத் தொழில் செய்வோர் கல்தச்சர் எனவும், மரத்தச்சு செய்வோர் மரத்தச்சர் எனவும் வழங்கப் பட்டனர். தச்சுத் தொழிலியற்றியதால் தச்சர் எனப்பட்டனர். இவ்விருவகைத் தச்சர்கட்கும் கம்மாளர் என்ற பெயரும் உண்டு. மரத்தொழில் செய்து வந்த தச்சன் சங்க காலத்து இலக்கிய வழக்கில் **மரங்கொல் தச்சன்** என வழங்கப்பட்டுள்ளான். மரங் கொல் என்பது மரத்தை வெட்டுதல் எனப் பொருள்படும். இவ் வழக்கினை மரங்கொல் தச்சன் என்னும் புறநானூற்றுப் (206) பாடலடியால் அறியலாம்.

சங்க கால இலக்கியங்களில் திறமை வாய்ந்த தச்சர்களைப் பற்றிய குறிப்புகள் வருகின்றன. இவர்கள் தச்சுத் தொழிலைக் குலத்தொழிலாகக் கொண்டனர். தச்சர்கள் தம் மக்களை இளம் வயதிலேயே தொழிலில் நன்கு பழக்கி வைத்தனர். பொம்மைத் தேர் செய்து விளையாடியவர்கள் பின்னர்ப் பெருந்தச்சர்களா கின்றனர்.

**தச்சச் சிறார் நச்சப் புனைந்த**
**ஊரா நற்றேர்** (பெரும். 248-49)

**மரங்கொல் தச்சர் கைவல் சிறாஅர்**
**மழுவுடைக் காட்டகத்து** (புறம். 206: 11-12)

தமிழ்நாட்டுத் தச்சர்கள் மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களையும், வசதிக்குத் தேவையான வண்டிகளையும், தேர்களையும் செய்து கொடுத்தனர். நால்வகைப் படைகளில தேர்ப்படையும் ஒன்றாக இருந்ததால் தேர் செய்வது அன்றைய தச்சர்களின் தலையாய கடமையாக இருந்திருத்தல் வேண்டும். செந்தமிழும் நாப்பழக்கம் என்பது போல, தேர்களைப் பெருமளவு செய்து அதில் சிறந்த தேர்ச்சி பெற்றிருத்தல் கூடும். ஒரு நாளில் எட்டுத் தேர்களைச் செய்யவல்ல தச்சர்கள் முற் காலத்தில் இருந்தனர் என்பதை,

**வைகல் எண்டேர் செய்யும் தச்சன்** (புறம். 87)

என்ற பாடலடியால் அறியலாம்.

கண்ணைக் கவரும் வண்ணம் நேர்த்தியான தேர்கள் செய்யப் பட்டதை,

**கண்ணோக் கொழிக்கும்**
**பண்ணமை நெடுந்தேர்** (234)

என்ற அகநானூற்றுப் பாடல் புலப்படுத்தும். இவர்கள் திறப் பாட்டிற்குச் சான்றாக, சகடம் ஒன்றின் விரிவான விளக்கத்தைப் பெரும்பாணாற்றுப்படையால் அறியலாம். திரண்ட வட்டையில் ஆரக்கால்கள் செருகி அமைக்கப்பட்ட சக்கரங்கள், முழுமரத்தில் கடைந்தெடுக்கப்பட்ட குடங்கள் மத்தளங்கள் போன்றுள்ளன. ஆர்கள் குடத்திற்கும், வட்டைக்கும் இடையில் பொருத்தப் பட்டிருந்தன. அச்சு மரத்தின் மேலே நெடியவாய் இரண்டு பக்கத்தும் நெடுகக் கிடக்கின்ற பருமரங்கள் இரண்டினையும் நெருங்கத் துளைத்துக் குறுக்கே ஏணிபோலக் கோத்தப் பார் அமைக்கப்பட்டுள்ளது. அதன்மேலே ஆரைப் புல்லாலான கூண்டு அமைக்கப்பட்டுள்ளது.

**கொழுஞ்சூட் டருந்திய திருந்துநிலை யாரத்து**
**முழவி னன்ன முழுமர வுருளி**
**எழூஉப்புணர்ந் தன்ன பரூஉக்கை நோன்பார்**

**மாரிகுன்ற மழைசுமந் தன்ன**
**ஆரை வேய்ந்த வறைவாய்ச் சகடம்** (பெரும் 46-50)

இக்குறிப்புகள் தேர், சகடம் முதலியன அமைக்கும் தச்சர்களின் திறப்பாட்டைக் காட்டுவன.

மரங்கொல் தச்சர் எனப்பட்ட இவர்கள் திறமையோடு கலை நுணுக்கம் தெரிந்தவர்களாகவும் இருந்தனர். சங்க இலக்கியப் பாடலான நெடுநல்வாடையில் நக்கீரனார் அரண்மனை மதில் கதவு, வாயிலின் நிலைக்கால் அமைப்பு, வாயில் நெடுநிலை ஆகியவற்றைக் குறித்துக் கூறுகையில் தச்சர்களின் தொழில் மேம்பாடு துலங்கப் பாடுகின்றார்.

**ஒருங்குடன் வளைஇ ஓங்குநிலை வரைப்பில்**
**பருஇரும்பு பிணித்துச் செவ்வரக் குரீஇ**
**துணைமாண் கதவம் பொருத்தி இணைமாண்டு**
**நாளொடு பெயரிய கோளமை விழுமரத்துப்**
**போதவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத்துத்**
**தாளொடு குயின்ற போரமை புணர்ப்பிற்**
**கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்ந்து**
**ஐயவி அப்பிய நெய்யணி நெடுநிலை** (79-86)

என்றனர்.

மிகப்பெரிய அரண்மனை வாயிற்கதவுகளை இணைமாண்பு படப் புணர்த்தல் அரிதாகலின் கைத்தொழில் வல்ல தச்சன் பொருத்துகின்றான். நெடுநிலைக் கதவுகளாதலின் பருவிரும்பு வேண்டிற்று. அதாவது இரும்பாலாகிய ஆணி, பட்டம் முதலியவற்றால் ஒன்றாய் இணைக்கின்றனர். மரத்தால் ஆகிய கதவாகலின் செவ்வரக்கு பூசி மேடுபள்ளமின்றிச் செய்கின்றனர். இக்கதவுகள் தொழில் திறனும் திண்மையும் வாய்ந்தவை. இக் கதவுகளை ஒன்றோடு ஒன்று இணைக்கும் பொழுது சேர்க்கும் இடம் தோன்றாமல் ஒரே மரத்திற் செய்தாற் போன்று தோன்றுவதால் இரட்டையாய் மாட்சிமைப்பட்ட கதவு எனும் பொருளில் ‘இணைமாண்டு’ என்றனர். இக்குறிப்பு அக்காலத்திய தச்சர்களின் தொழில் திறனைக் காட்டுவதாகும்.

இவ்வாறு ஒன்றைப் போன்று மற்றொன்றும் அமைந்த இரட்டைக் கதவுகளைப் பொருத்தி அமைத்து, நல்ல நாளில் வெட்டி அப்புறப்படுத்திய வலிவு அமைந்த சிறந்த மரத்தினால் செய்த அரும்பு மலர்கின்றது போன்ற குவளைப் பூவின் உருவமும், புதுமையாகச் செதுக்கிய பெண்யானை வடிவமும் பொருந்திய நிலைக்கால்களை அமைத்து, பூட்டும் தாழோடு செறிந்து பொருந்துதல் அமைந்த கோவையுடன் கைத்தொழில் வல்ல தச்சன் முடுக்குதலின் குற்றமற்று வெண்சிறுகடுகு அப்பியவாறு பொருந்தி இருக்கும் நெய்ப்பூச்சு அமைந்த நெடியநிலை என்றும் அக்காலத்திய தச்சர்களின் செய்தொழில் திறம் தோன்றப் பாடி யுள்ளார்.

நெடுநல்வாடைப் பாட்டில் அரசமாதேவியின் கட்டில் வனப்பைப் பின்வருமாறு கூறுகின்றார். 'நாற்பதாண்டு வயது நிரம்பியதும், முரசம் போன்ற கால்களை உடையதும், புகர் பொருந்திய நெற்றியை உடையதும், போரிலே விழுப்புண் பட்டு இறந்ததுமாகிய யானையினது தாமே வீழ்ந்த தந்தங்களைச் சீரும் செம்மையும் பொருந்தக் கைத்தொழில் வல்ல தச்சன் கூரிய உளி யால் செதுக்கிச் செய்த பெரிய இலைத் தொழிலின் இடையே வைத்து, தொங்கும் இயல்புடைய மகளிரின் பருத்த நகிலைப் போல, பக்கங்கள் திரண்டிருந்த குடத்தை உடையவாய், நடு விடம் திரண்டு உள்ளிப் பூண்டின் வன்மையுடைய முதல்போல் குடத்தின்மேல் பொருத்திக் கால்களை அமைத்துப் பெரிய அளவு எய்திய பெரிய பெயருடைய பாண்டில் என்னும் வட்டக்கட்டில்'[1] அமைக்கப்பட்டிருந்தது.

சிறுபாணாற்றுப்படையில் உமணர்கள் வளர்த்த குரங்குக் குட்டிக்கு உளியால் குடைந்து செய்த மரத்தாலான மணி மாலையை அணிவித்தனர் என்ற குறிப்பு காணப்படுகிறது.

**நறவுவா யுறைக்கு நாகுமுதிர் நுணவத்**
**தறைவாய்க் குறுந்துணி யயிலுளி பொருத**

1. நெடுநல்வாடை, 115-135

**கைபுனை செப்பங் கடைந்த மார்பிற்**
**செய்பூங் கண்ணி செவிமுத றிருத்தி**
**.........................வந்த........... மந்தி** (51-56)

சங்க காலத்தில் பொருளாதார நலனைப் பெருக்கும் வகையில் வாணிபம் சிறந்த நிலையில் விளங்கியது. இவ்வாணிபத்திற்குத் தேவையான படகுகள், கப்பல்கள் கட்டும் தொழிலில் தச்சர்கள் சிறந்து விளங்கினர். மேகத்தால் சூழப்பட்ட மலை போலக் கடலால் சூழப்பட்டு அசையும் இயல்பினை உடைய பெரிய கப்பல்கள் அவை.

**ஆடியற் பெருநாவாய்**
**மழை முற்றிய மலைபுரைய** (மது. 83-84)

**வெளில் இளக்கும் களிறு போலத்**
**தீம்புகார்த் திரைமுன்றுறைத்**
**தூங்கு நாவாய்** (பட். 173-75)

மேற்காட்டப்பட்ட சில சான்றுகளே சங்க காலத் தச்சர்களின் கலை நுணுக்கத்தோடு கூடிய தொழில் திறனைக் காட்டப் போதுமானவை எனலாம்.

# மட்கலத் தொழில்

புதிய கற்கால மனிதன் பயிர்த்தொழில் செய்யவும், விலங்குகளைப் பழக்கவும், நெசவு முதலிய தொழில்களைக் கற்கவும நேர்ந்தது. மக்கள் உணவுப் பொருள்களைச் சேமித்து வைக்க மண்பாண்டங்களைச் செய்து கொண்டனர். இவர்களுக்கு முன் வாழ்ந்த மக்கள் விலங்குகளின் தோலினாலாகிய பைகள், தாவரக் கனிகளின் ஓடுகள், போன்றவற்றைப் பயன்படுத்தினர்.

மட்பாண்டங்கள் முதலில் சுரை ஓடுகள், கூடைகள் முதலியவற்றைப் பார்த்துச் செய்யப்பட்டன. பல ஆதிவாசிகள் மட்பாண்டங்கள் செய்வதற்குக் கூடைகளை அச்சாகப் பயன்படுத்

தினர். பல பழைய மட்பாண்டங்களில் கூடைகளின் அடையாளங்கள் காணப்படுகின்றன.

மட்பாண்டங்கள் தண்ணீர், உணவுப் பொருள்கள் முதலியவற்றைச் சேமித்து வைக்கவும், உணவு சமைக்கவும், சாப்பிடவும் உதவும். இவை மரம், தோல், முதலிய பொருள்களால் செய்த பண்டங்களைவிடத் தூய்மையாகவும், நெருப்பில் எரியாமலும் இருக்கின்றன. தண்ணீரில் கரையாமலும், அதிக வெப்பத்தினால் தாக்கப்படாமலும் இருப்பதனால் இவை உடைந்து போகும் தன்மையுள்ளனவாயிருந்தும் சிறப்பாகக் கையாளப்படுகின்றன.

மட்பாண்டங்கள் எளிதில் உடைந்துபோகும் தன்மையுடையவையாதலின் தொல்பொருள் ஆராய்ச்சியாளருக்குப் பண்டைக் கால நாகரிகங்களின் சிறந்த கூறுகளை ஆராய்வதற்குச் சிறந்த சான்றுகளாகும். உடைந்துபோன மட்பாண்டங்களின் துண்டுகள் சிறப்பாகக் கிடைக்கும் இடங்கள் புதைந்துபோன நகரங்களுக்கு அடையாளங்களாக உள்ளன. பழைய நாகரிகங்களின் காலம், கூறுகள், ஒன்றுக்கொன்றுள்ள ஒற்றுமை, வேற்றுமை ஆகியவை எல்லாம் இவ்வோட்டுத் துண்டுகளால் நிறுவப்படும். புதுச்சேரிக்கருகில் உள்ள அரிக்கமேடு என்னுமிடத்தில் கிடைத்த சில அரிட்டைன் (Arretine) ஓடுகள் ரோமிலிருந்து கொண்டுவரப் பட்டவை என்றும், இவற்றோடு கிடைத்த மற்ற ஓடுகளும், மணிகளும் கி.பி. முதல் நூற்றாண்டில் ரோம வணிகர்களும், தொழிலாளர்களும் தென் இந்தியாவில் வாணிகச் சாலைகளும், தொழிற்சாலைகளும் நிறுவி வாணிபம் செய்து வந்ததற்குச் சான்றுகள் என்றும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் நிறுவியிருக்கின்றனர்[1].

பண்டைத் தமிழரின மட்கலத் தொழில் திறமையை அறிய நமக்குத் துணைபுரியும் நூல்கள் சங்ககால இலக்கியங்களே ஆவன.

---

1. கலைக்களஞ்சியம், தொகுதி எட்டு, ப. 43. தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை-1961.

உலோகப் பாத்திரங்கள் மிகக் குறைந்த அளவில் வழக்கத்தில் இருந்த காலம் சங்ககாலம். அப்பொழுது பொதுமக்கள் நலங் கருதி எல்லா வகையான பாத்திரங்களும் மண்ணால் செய்யப் பட்டிருத்தல் வேண்டும். எனவே மட்கலத் தொழிலும் அக்காலத் தொழில்களில் சிறந்த இடத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். மட்கலத் தொழில் செய்வோர் **கலஞ்செய்கோ** எனப்பட்டனர். வேட்கோ எனப்படுவாரும இவர்களேயாவர். இவர்கள் மக்கள் **வேட்கோச்சிறார்** எனப்பட்டனர்.

**வேட்கோச் சிறார் தேர்க்கால் வைத்த** (புறம். 32:8)

அதிக அளவில் மண் பாத்திரங்க செய்யச் சக்கரங்கள் பயன் படுத்தப்பட்டன

**வனைகலம் திகிரியின் குமிழி சுழலும்**
**துணைசெலல் தலைவாய் ஓவிறந்து வரிக்கும்**
(மலைபடு. 474 75)

'குயவன வனைகின்ற மட்கலத்தில் சக்கரம்போலக் குமிழி சுழன்று தோன்றும் விரைந்த செல னையுடையவாய் ஒழிவின்றி ஓடும் ஆறு' என்பது பொருளாம். நீரின்கட் சுழலுக்கு உவமை யாகக் குயவன் மட்கலஞ் செய்யும் உருளையின் சுழற்சி கூறப் படுகிறது.

மட்கலஞ் செய்யும் பொழுது அவர்கள் முழுக்கவனத்துடன் அதில் ஈடுபட்டனர் என்பது, சோழமன்னன் நெடுங்கிள்ளி தனது நாட்டை எந்த அளவு வளநாடாக்கினான் என்பதைக் கூறுமிடத்து,

**வேட்கோச் சிறார் தேர்க்கால் வைத்து**
**பசுமட் குரூஉத்திரள் போலவன்**
**கொண்ட குடுமித் தண்பனை நாடே** (புறம். 32: 8-10)

என்பதனின்றும் புலப்படும்.

மட்கலங்களைச் சுட அமைக்கப்பட்ட பெரிய சூளைகளிலிருந்து மிகுந்த புகை எழுந்தது என்று சில குறிப்புகள் காணப்படுகின்றன.

**இருள்திணிந் தன்ன குருஉத்திரள் பருஉப்புகை**
**அகலிரு விசும்பின் ஊன்றுஞ் சூளை**
**நனந்தலை மூதூர்க் கலஞ்செய் கோவே (புறம். 228: 2-4)**

**கலஞ்சுடு புகை (அகம். 308:6)**

வீடுகளில் பயன்படும் சிறிய கலன்களோடு இறந்தோரை வைத்துப் புதைக்கும் பெரிய தாழிகளும் இவர்களால் செய்யப் பட்டன.

*சான்றுகள்*

**தாழிக் குவளை வாடுமலர் சூட்டி (அகம். 165:11)**
**தாழியும் மலர்பல அணியா (அகம். 369:6)**
**கவிசெந் தாழிக் குவிபுறத் திருந்த (புறம். 238:1)**

**வியன்மலர் அகன்பொழில் ஈமத்தாழி**
**அகலிதாக வனைமோ (புறம். 256:5-6)**

மேற்குறிப்பிட்டவையன்றி அக்காலத்திய மட்கலத் தொழிலாளர்களின் திறமையைப் பறைசாற்றும் வகையில் அமைந்த சில குறிப்புகளைக் காண்போம்.

பெரும்பாணாற்றுப்படையில் செங்கல்லால் செய்யப்பட்டு உயர்ந்த புறப்படை வீட்டைச் சூழ்ந்த மதில் என்ற பொருளில்,

**தாமரை பொகுட்டிற் காண்வரத் தோன்றிச்**
**சுடுமண் ஓங்கிய நெடுநகர் (404-5)**

என்றும்,

**இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் (அகம் 167:13**
(சுடுமண், இட்டிகை என்பன செங்கலைக் குறிப்பன

என்று அகநானூற்றுப் பாடலிலும் வருவதைக் காணலாம் இவற்றால் பண்டைக்காலத்தே செங்கல்லால் வீடுகட்டும் வழக்க முண்மையை அறியலாம்.

பூக்கிண்ணங்கள் செய்யப்பட்டன என்பதை,

**தாழிக் குவளை வாடுமலர் சூட்டி** (அகம். 165:11)
**தாழியும் மலர்பல அணியா** (அகம் 369:6)

என்ற அடிகளால் அறியலாம்.

பல்வேறு அளவுள்ள மண்பானைகள் வழக்கில் இருந்தன. அவை பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| **குழிசி** | — | முரவுவாய்க் குழிசி | (பெரும். 99) |
| | | கயிறு பிணிக் குழிசி | (அகம். 77:7) |
| **சாடி** | — | நனைமுதிர் சாடி | (புறம். 297:6) |
| **கலன்** | — | பெருங்கண் குறுமுயல் கருங்கலன் | (புறம். 322:5) |
| **கன்னல்** | — | தொகுவாய்க் கன்னல் | (நெடுநல்.63) |
| **தசும்பு** | — | சுடுமண் தசும்பின் | (நற். 84:6) |
| | | தயிர்கொடு வந்த தசும்பு | (புறம். 33:3) |
| **மண்டை** | — | கவிழ்ந்த மண்டை | (புறம். 103:3) |
| | | இமிழிசை மண்டை | (கலி. 106:2) |
| | | (மட்கலனாதலின் மண்டை எனப்பட்டது.) | |

இவ்வாறு செய்யபபட்ட பல்வேறு விதமான மட்கலன்கள் மக்களது விருப்பத்திற்கு ஏற்றவாறு செந்நிறமாகவும், கருநிற மாகவும் செய்யப்பட்டன.

**செந்தாழிக் குவிபுறத் திருந்த** (புறம். 228:1)
**பெருங்கட் குறுமுயல் கருங்கலன்** (புறம். 322:5)

மக்கள் உணவு சமைக்க மண்ணால் செய்யப்பட்ட பாத்திரங் களைப் பயன்படுத்தினர் என்பது,

**முரவுவாய்க் குழிசி முரியடுப் பேற்றி** (பெரும்.99)

**மான்றடி புழுக்கிய புலவுநாறு குழிசி** (புறம். 168:9)

முல்லைநில மக்கள் பால், தயிர் வைக்க மண்ணால் ஆன பானைகளைப் பெரிதும் பயன்படுத்தினர். **தசும்பு** எனப்பட்ட

மட்கலம் பால், தயிர் வைப்பதற்கன்றி **கள்** நிறைத்து வைப்ப தற்கும் பயன்படுத்தப்பட்டது. பதிற்றுப்பத்தில் ஒரு பாடலில், கள் நிறைத்து வைக்கும் தசும்புகளை மலர்மாலையாலும, இஞ்சி மாலையாலும், அலங்கரித்து மண்மேல் வைப்பர். இப்பானை களின் மேற்புறத்தைச் சந்தனத்தால் பூசி வைப்பர் என்ற குறிப்பு காணப்படுகிறது.

**இஞ்சிவீ விராய பைந்தார் பூட்டிச்**
**சாந்துபுறத் தெறிந்த தசும்புதுளங் கிருக்கை**
**தீஞ்சேறு விளைந்த மணிநிற மட்டம்** (பதிற்று. 42:10-12)

அகநானூற்றுப் பாடல் ஒன்றில்,

**கயிறுபிணிக் குழிசி ஓலை கொண்மார்**
**பொறிகண் டழிக்கும் ஆவண மாக்களின்** (77:7-8)

எனக் கூறப்பட்டிருப்பதனின்றும் ஊராண்மைக் கழக உறுப் பினரைத் தேர்ந்தெடுக்கும் குடவோலை முறைக்கும் பானை பயன் படுத்தப்பட்டதை உணரலாம்.

மேலும் புளியங்காய், நெல்லிக்காய் முதலிய ஊறுகாய்கள் வைக்கப்பட்ட மிடா, 'காடி வைத்த கலன்' (பெரும். 56) எனப் பட்டது. உணவுப் பண்டமான அப்பம் சுடுவதற்கும் மண்ணா லாகிய அகன்ற சட்டி பயன்படுத்தப்பட்டது. இது **அகல்** எனப் பட்டது. புறத்தே கரிபடிந்து கரிய சட்டியாகக் காணப்பட்டதை **காரகல்** கூவியர் பாகொடு பிடித்த' (பெரும். 377) என்ற பாடலடி உணர்த்தும். நீண்ட உருவமும், சிறுத்த வாயையும் உடையதாய்ச் செய்யப்பட்ட கலன் **குப்பி எனப்பட்டது.** குவிந்த வாயையுடைய நீருண்ணும் மண் பாத்திரம் **தொகுவாய்க் கன்னல்** எனப் பெயர் பெற்றது (நெடுநல. 66). நீர் பெய்து வைக்கும் ஒருவகைப் பாத்திரம் **குறுநீர்க் கன்னல்** (முல். லை. 57) எனப்பட்டது. கன்னல்-நாழிகை வட்டில். நீரிட்டு ஒரு சிறுதுளை வழியாக அந்நீரைச் சிறிது சிறிதாகக் கசியவிட்டு அந்நீரினை அளந்து காணும் கருவியாகலின் நாழிகை வட்டிலைக் குறுநீர்க் கன்னல் என்றனர். கூதிர் காலத்தில் குளிரைப் போக்க விரிந்த வாயையுடைய பெருந்தாழிகளில் நெருப்பை வளர்த்து அதன் வெம்மையை நுகர்வர். இதற்குப் பயன்பட்ட மட்கலன் [illegible] எனப்பட்டது.

**பகுவாய்த் தடவிற் செந்நெருப்பயர (நெடுநல்.66)**

இங்ஙனம் பல்வேறு நிலைகளிலும் தேவைக்கேற்ற வகையில் மண் பாத்திரங்கள் பழக்கத்திலிருந்தமையை அறியும்பொழுது பண்டைத் தமிழர் மட்கலத் தொழிலில் திறமையுடையவராய்த் திகழ்ந்திருத்தல் வேண்டும் என்பதை அறிய முடிகிறது.

# கொல்லுத் தொழில்

பண்டைத் தமிழரிடையே இரும்புத் தொழில் செய்யும் கொல்லன் இருந்தான். அவன் தொழில் செய்யும் உலைக்கூடம் இருந்தது. அவன் வைகறையில் வேலை செய்யத் தொடங்கினான். அவன் இரும்படித்த ஓசை கேட்டு மாடத்து உறங்கிய புறவின் சேவல் அஞ்சி உறக்கத்திலிருந்து விழித்தது. இத்தகைய காட்சி ஒன்று பெரும்பாணாற்றிப்படையில்,

**கருங்கைக் கொல்லன் இரும்புவிசைத் தெறிந்த**<br>
**கூடத் திண்ணிசை வெரீஇ மாடத்து**<br>
**இறையுறை புறவின் செங்காற் சேவல்**<br>
**இன்துயில் இரியும் (437:40)**

எனச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

ஒருவகையில் கொல்லுத் தொழிலைத் தச்சுத்தொழிலின் ஒரு பகுதியாகக் கருதலாம். சங்ககாலப் பொருளியல் வாழ்வில் கொல்லரும் தச்சரும் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தனர் என்பதை உணரலாம். மேலும் பயிர்த்தொழிலுக்கு வேண்டிய கருவிகளை இவர்கள் செய்தனர். ஓர் அரசனுக்குத் துணையாய் அமைபவர் படைவீரர்கள். அவர்கள் தம் ஆற்றலை வெளிப் படுத்தத் துணைபுரிவன போர்க்கருவிகள். இக்கருவிகளை வடித்துத் தருபவர் கொல்லர்கள் ஆவர். இவர்களின் ஆற்றல் பண்டைத் தமிழ் மக்கட்குப் பெருமளவு பயன்பட்டுள்ளது.

கொல்லன தொழில் புரிந்த இடத்தைப் புறப்பாடல் **கொற்றுறை** எனக் குறிக்கிறது. அதற்கு உ. வே. சாமிநாத ஐயர் அவாகள் உரை எழுதும் பொழுது ‘பணிக்களரி ஆகிய குறிய

கொட்டில்' என்றுங் குறிப்பிடுகிறார். ஒடிந்தது, மழுங்கியது ஆகிய போர்க்கருவிகளைச் செப்பனிட்டதோடு புதிய கருவிகளும் இங்குச் செய்யப்பட்டன. ஏழு ஊர்களில் உள்ள மக்கட்குச் செய்ய வேண்டிய பொதுவான கொற்றொழிலுக்கு ஓர்கொட்டில் இருந்த நிலையைக் குறுந்தொகை,

**ஏழூர்ப் பொதுவினைக் கோரூர் யாத்த**
**உலைவாங்கு மிதிதோல்** (172: 5-6)

எனக் குறிப்பிட்டுள்ளது 'கொல்லர்கள் ஊர்தொறும் உழவர் முதலியோர்க்கு வேண்டிய கருவிகளை அவ்வப்போது செய்து கொடுத்து ஆண்டு முடிவில் ஊதியம் பெறும் வழக்கமும் அவர்கள் ஊரவர்க்குப் பொதுத்தொழில் செய்வோர் ஆகிய வழக்கமும் இன்றுங் காணப்படுகின்றன. ஏழூர்க்குத் தொழில் பொதுவிற் செய்ய வேண்டிய கொல்லுலையில் துருத்தி இடையறாது இரவு பகல் இயங்கியது.'[1]

அந்நாளில் போர்ப்படைக்குப் பயன்படும் வேல் முதலிய கருவிகளைத் திருத்தமாக வடித்துத் தருதல் கொல்லனின் தலையாய கடமையாகக் கருதப்பட்டதைப் புறநானூறு, 'வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே' (312) எனக் கூறுகிறது.

சங்க இலக்கியப் பாடல்களில் கொல்லனது உலைக்களக் காட்சி பல்வேறு நிலைகளில் உவமைகளாகக் காட்டப் பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளது. காட்டாக சிலவற்றைக் காணலாம். புறநானூற்றுப் பாடலொன்றில் மருத்துவன் தாமோதரனார் என்னும் புலவர் பிட்டங்கொற்றன் என்னும் படைத்துணைவனுடைய வண்மையையும், போர் வன்மையையும் புகழுமிடத்துக் கொற்றன் பகைவர்க்குக் கொல்லன் கூடத்தாலெறியும் உலைக்கல் போலும் வல்லாண்மை உடையவன் என்னும் பொருளமைய,

**இரும்புபயன் படுக்குங் கருங்கைக் கொல்லன்**
**விசைத்தெறி கூடமொடு பொரூஉம்**
**உலைக்கல் லன்ன வல்லா ளன்னே** (170:15-17)

என வியந்து பாடியுள்ளார்.

---

1. குறுந்தொகை, பொ. வே. சோமசுந்தரனார் உரை ப 248,

கொல்லன் உலைக்களத்தில் இரும்பைச் சம்மட்டியால் அடிக்கும்பொழுது தீப்பொறி சிதறுவது மழைக் காலத்து இரவில் மின்மினி மொய்த்த புற்றினைக் கரடி ஒன்று அடித்து உடைக்க, அப்பொழுது மின்மினிப் பூச்சிகள் சிதறி ஓடுவது போலக் காணப்படுகிறதாம்.

**பொன்னெறி பிதிரிற் சுடர வாங்கிக்**
**குறும்பி கொண்டும் பெருங்கை ஏற்றை**
**இரும்புசெய் கொல்லெனத் தோன்றும் நாடன்** (அகம். 72)

கொல்லனது உலைக்களத்து அடிக்கும் இரும்பின் பொறி சிதறுமாறு போலச் சிறிய பலகாயையுடைய வேங்கையின் மலர்கள் உதிர்கின்ற மலை என்ற பொருளமைய நற்றிணைப் பாடலொன்று,

**.................... கொல்லன்**
**எறிபொறிற் பிதிரில் சிறுபல் காய**
**வேங்கை வீயுகும் ஓங்குமலை** (நற். 13:5-7)

எனக் கூறுகிறது.

கற்பாறையின் வெம்மைக்கு- 'உலைக்கல் அன்ன பாறை' (குறுந். 12:1) என்றும்; நெஞ்சுக்கு— 'உலைவாங்கு மிதிதோல் போல நெஞ்சே' (குறுந். 172:6) என்றும் உவமைகளாகக் கூறப்பட்டுள்ளன. கதிர்கள் முற்றி வளைந்திருத்தல் கொல்லன் கரியை எடுக்கும் குறடு வளைந்திருத்தலோடு ஒப்பிடப்பட்டு 'கரிக்குறட் டிறைஞ்சிய செறிகோட் பைங்குரல்' (குறுந். 198:4) எனப்பட்டது.

கொல்லர்கள் தோலாலான துருத்தியைக் காலால் மிதித்துத் தீயுண்டாக்கினர். அவர்கள் குறட்டினைப் பயன்படுத்தினர் என்பது,

**.........மென்றோல்**
**மிதியுலைக் கொல்லன் முறிகொடிற்றன்ன** (பெரும்.206-7)

என்றதாலும், கொல்லர்கள் இரும்பைக் காய்ச்சிச் சம்மட்டியால் அடித்தனர் என்பது,

**கருங்கைக் கொல்லன் இரும்பு விசைத்து எறிந்த** (பெரும்.437 என்றதாலும் அறிய முடிகிறது.

இரும்பினால் விளக்குகள் செய்யப்பட்டதை நெடுநல்வாடை 'இரும்பு செய் விளக்கின்' (42) என்றதாலும், இரும்பை மெல்லிய தகடாகச் செய்தனர் என்பது 'இரும்பு வடித்தனன' (பெரும். 222) என்றதாலும் அறியலாம்.

இவையல்லாமல் உழுகொழு, குயம் (அரிவாள்), கத்திரிகை (பொருந. அடி. 117, 29,242), யானைக் கொடுந்தொடி (பெரும். 436) யானையை அடக்கும் தோட்டி (திருமுருகு. 78), இரும்புத் தகடு (பெரும். 222)' கவைமுட்கருவி (குத்துக்கோல்), மத்திகை (சம்மட்டி) (முல்லை. 35, 59), நிலம் அகழும் உளி, வளைவுக்கத்தி தொடலைவாள் (மது. 635, 636, 637), ஊசிகள் (அகம். 199:8), பெரிய கோடரியான நெடுங்கை நவியம் (புறம். 36-7) படைக் கருவிகள் நெடுவேல் (புறம். 1801:3), (புறம். 312:3) போன்ற பல்வேறு வகையான இரும்பாலான பொருட்கள் அக்காலத்து நிலவிய கொல்லர் தொழிலை நன்கு விளக்குவன. இரும்பைப் பொருளாகக் கொண்டு தொழில் செய்த மக்கள் கருங்கைக் கொல்லர் என்றே பல பாடல்களில் சிறப்பித்துக் கூறப்பட்டுள் ளனர். கடினமான தொழில் செய்பவராதலின் இவ்வாறு குறிப் பிடப் பெற்றிருக்கலாம்.

# உலோகத் தொழில்
## (அ)
## பாத்திரத் தொழில்

பண்டைத் தமிழர் பல்வகை உலோகங்களைப் பயன்படுத்தித் தங்களுக்குத் தேவையான பொருட்களைச் செய்வதில் சிறப்புற்றி ருந்தனர். இரும்பு, பொன் ஆகிய உலோகங்களைக் கொண்டு தொழில் செய்யும் கொல்லர்கள் இருந்தது போலவே வெண்கலம், செம்பு முதலிய உலோகங்களை உருக்கும் திறம் பெற்று, அவற்றால் மக்கள் பயன்படுத்துவதற்குரிய பல்வகையான பொருட்களையும் செய்யவல்ல வன்தொழிலாளர்கள் ஊர்தோறும்

தங்களுக்குரிய தொழில் வகைகளைப் பெருக்கி இருந்தனர். வெண்கலத்தை உருக்கிக் கலங்கள் முதலியன செய்பவர் கஞ்சகாரர் என்றும், செம்பினால் கலம் செய்வார் செம்பு கொட்டிகள் என்றும் அழைக்கப்பட்டனர். செம்பு, வெள்ளி, பொன் ஆகிய உலோகங்களைக் கொண்டு (பாத்திரங்கள்) கலன்கள் செய்யப்பட்டதற்கான சில சான்றுகளைச் சங்க இலக்கியப் பாடல்களில் காணலாம்.

நற்றிணைப் பாடலொன்றில் கம்மியன் செம்பால் செய்து கடைந்து வைத்த பானை எனப்பொருள்பட 'கம்மியர் செம்புசொரி பானை' (153:2) என்ற குறிப்பு காணப்படுகிறது மேலும் மதுரைப் புறஞ்சேரியில் இருந்த சமணப்பள்ளியின் சுவர்கள் செம்பினாற் செய்தாற் போல உறுதிபெற்றிருந்தன (மது. 485); மதுரைக் கடைத்தெருவில் செம்பு நிறுத்து வாங்கப்பட்டது (பெரும் 514); பாண்டியன் அரண்மனை அந்தப்புரத்து நெடுஞ்சுவர்கள் செம்பிட்டுச் செய்தாற் போன்றே உறுதியும் வேலைப்பாடும் பெற்றிருந்தன (நெடுநல். 112) போன்ற சான்றுகளினின்றும் செம்பு என்ற உலோகம் பழக்கத்திலிருந்தமையையும் அதைப் பயன்படுத்தி பொருள் செய்யவல்ல தொழில்திறம் வல்ல கம்மியர் இருந்தமையையும் அறியலாம்.

செல்வந்தர் இல்லங்களில் அன்றாடத் தேவைக்கும் பொன்னாலும், வெள்ளியாலும், பாத்திரங்களைப் பயன்படுத்தினர். வயிரக்கற்கள் இழைத்த கலன்களும் வழக்கில் இருந்தன. கரிகாலன் அரண்மனையில் இருந்த பணிப்பெண்டிர் அரசனுக்கும் அவனுடைய விருந்தினர்க்கும் பொற்கலத்தில் கள்ளை ஊற்றிக் கொடுத்தனர். 'பொலங்கல நிறைய' (பொருந. 86); பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பொலங்கலத்தில் மணங்கமழ் தேறலைப் பருகினான் (மது 779-80); நல்லியக்கோடன் அரண்மனையில் பாணர் போன்ற விருந்தினர்க்கும் பொற்கலம் உண்கலமாகப் பயன்பட்டது பல்வேறு சுவையுடைய உணவு வகைகளைக் கோள்கள் சூழ இருந்த இள ஞாயிற்றை இகழும் தோற்றமுடைய பொன்னாலியன்ற உண்கலன் களிலிட்டு வழங்கினான். இதனைச் சிறுபாணாற்றுப்படை

**....... .. .... பல்வேறு அடிசில்**
**வாணிற விசும்பில் கோண்மீன் சூழ்ந்த**

**இளங்கதிர் ஞாயிறு எள்ளுந் தோற்றத்து**
**விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி (241-44)**

எனப்பாடுகிறது. வயிரக் கற்கள் இழைத்த கலன்கள் இருந் தமையை 'மணிசெய் மண்டை' என்ற அகநானூற்றுப் பாடல் அடியால் (105:5) உணரலாம்.

வெள்ளியாலான கலம் உண்கலமாகவும் பயன்பட்டது. சிறிய வெள்ளிக்கலங்கள் குழந்தைகள் உண்ணப் பயன்பட்டன. பெரிய வெள்ளிக்கலன்கள் பெரியவர் உணவுண்ணப் பயன்பட்டன. திரையன் அரண்மனையில் இவ்வெள்ளிக் கலங்கள் இருந்தன. (பெரும். 477-80); முல்லை மலர்கள் வெள்ளியின் நிறத்தை ஒத்தவை (மது 280) பாண்டியனது அரண்மனைச் சுவரில் வெள்ளியை ஒத்த சாந்து பூசப்பட்டது. (நெடுநல். 110)

மேற்கூறப்பட்டவற்றினின்றும் சங்க காலத் தமிழர் செம்பு, வெள்ளி, பொன் ஆகிய உலோகங்களைக் கொண்டு பல பொருள் களைச் செய்து பயன்படுத்தினர் என்பது தெரிகிறது. இவை இத்தமிழ் நாட்டில் பண்டுதொட்டே கிடைத்து வந்தன என்பதைப் பல்லவபுரம், ஆதிச்சநல்லூர் முதலிய இடங்களில் கிடைத்த புதைபொருள்களைக் கொண்டு நன்கறியலாம்.[1]

## அணிகலத் தொழில்

அழகுக்கு அழகு செய்வன அணிகள். அணிதலால் அணியாம். தொன்றுதொட்டுப் பழக்கத்திலிருப்பது. தொடக்க காலத்தில் இயற்கையோடு இணைந்து வாழ்ந்த மக்கள் தழையாடை அணிந்தது போல வண்ண மலர்கள் கொடி இலை ஆகியவற்றால் தம்மை அணிசெய்து கொண்டார்.

**சாயிழை பிண்டித் தளிர்காதிற் றையினாள்**
**(பரிபா. 11;95)**

---

1. Stone Age in India P. T. S. Ayyangar, P. 48.

ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர் (புறம். 63:12)

பின்னர் நெய்தல்நிலக் கரைகளில் கிடைத்த கிளிஞ்சல்கள் கடலில் கிடைத்த முத்து, பவளம், சங்கு முதலியன அணிகளாகப் பயன் பட்டன. அடுத்த நிலையாக வெள்ளி, பொன் முதலிய உலோ கத்தால் அணிகளைச் செய்துகொண்டனர். கல் இழைத்த பொன் அணிகளைச் செய்யத் தொடங்கினர். படிப்படியாக அணிகலத் தொழிலில் தமிழரின் கைத்திறன் கண்களைக் கவரும் வகையில் சிறப்புற்றது. மக்கள் நிலை, சூழல் ஆகியவற்றிற்கு ஏற்றவாறு அணிகள் செய்யப்பட்டன. ''மலர் அணியும் வழக்கம் குறிஞ்சி நிலத்திலும், ஐம்படைத்தாலி அணியும் வழக்கம் முல்லை நிலத்திலும், பலகறை, முத்து, பவளம் அணியும் வழக்கம் நெய்தல் நிலத்திலும், மருதங்காய், மிளகுமாலை, மண்ணாற் செய்த உருண்டை மணிமாலை போன்றவைகளும், பளிங்கு போன்ற பல வண்ணக் கற்கள் கோத்த மாலைகளும் காப்பு, தடை, தாலி போன்ற நூல் அணிகள் அணியும் வழக்கம் மருத நிலத்திலும் அரும்பியிருக்கலாம் என்று எண்ணப்படுகிறது.'[1]

பழங்காலச் சமுதாயத்தில் பொதுமக்கள் அணிந்த அணி களிலும் அரசாண்ட மன்னனது முடி மிகநுண்ணிய வேலைப்பாடு கொண்டது. அரசமாதேவியர் அணிந்த அணிகலன்களும் சீரிய வேலைப்பாட்டுடன் சிறப்புற்றிருந்தன. வணிகப் பெருமக்கள் வீடுகளிலும் சிறந்த விலையுயர்ந்த அணிகலன்கள் பயன்படுத்தப் பட்டன. பெண்களும் ஆண்களும் தங்கள் இயற்கை அழகு மேலும் பொலிவுறும் வகையில் பல்வேறு விதமான அழகிய வேலைப் பாட்டுடன் கூடிய அணிகலன்களை அணியத் தொடங்கினர். அணிகளுக்கு ஏற்ற பெயர்கள் தரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இவற்றிற்கான ஆதாரங்கள் பல சங்க இலக்கியங்களில் காணப் படுகின்றன. அவற்றின் துணைகொண்டு பழந்தமிழரின் அணிகலத் தொழில் எந்த அளவு மேம்பட்டிருந்தது என்பதைக் காண்போம்.

---

1. ப. 64.

## அணிகலன் செய்யப்பட்ட முறை

சங்க இலக்கியப் பாடல்களில் பல குறிப்புக்கள் பொன் வேலை பற்றியும், பொற்கொல்லர் திறமை பற்றியும் காணப்படுகின்றன. பொற்கொல்லர் அணிகள் செய்யப் பயன்படுத்திய கருவிகளுள் **அரம்** என்ற கருவி பயன்படுத்தியமைக்கான பல சான்றுகள் கிடைக்கின்றன. சான்று :

**வாளரந் துமித்த வளை** (அகம்: 24:1-2)

**அரம்போழ்ந் தறுந்த இலங்குவளை** (மது. 316)

பொன் அணிகலன் செய்யும்பொழுது அரக்கால் செய்த கருவில் அமைத்து கொல்லன் உலையில் வைத்து ஊதிச்செய்வது

**... .......................... ..... மெழுகு ஆன்று**
**ஊதுலைப் பெய்த பகுவாய் தென்பணி** (குறுந். 155:3-4)

என்பதால் புலப்படும்.

சிலம்பு, கிண்கிணி, கழல், வளை, கழுத்திலணியும் மாலைகள் போன்ற அணிகலன்கள் செய்யும்போது பகுதி, பகுதியாகச் செய்யப்படும். பிறகு அவரவர் விருப்பத்திற்கு ஏற்ற வகையில் உருவமும் அளவும் அமையுமாறு பொருத்தப்படும். இவ்வாறு ஓர் அணிகலன் செய்யும்போது அவ்வணிக்குரிய உருக்களைப் பொருத்தும்போது பற்றவைத்தல் (Soldering) வேண்டும். பற்ற வைக்கும் முறைக்கும் ஐங்குறுநூற்று உரையில் 'நன்றாக இணைக்கப்பட்ட வளை' என்ற பகுதி சான்றாக அமைகிறது.[2]

---

2. 'இறைகே ழெல்வளை நீங்கிய நிலையே,-ஐங். 140:3 சந்து பொருந்தி விளங்கும் வளைகள் நெகிழ்ந்து வீங்கும் இம் மெலிவினைக் காண்பாய-க-ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை. ஐங்குறுநூறு. முதல் தொகுதி. அண்ணாமலை பல்கலைக் கழகம். 1961. ப. 36.

கிண்கிணி என்ற காலணியும், தனித்தனி பகுதிகளாகச் செய்யப்பட்டு பிறகு ஒன்றாகப் பொருத்தப்படும். இப்பகுதிகளை இணைக்கப் பற்றவைக்கும்போது (Metalic Powder) பயன் படுத்தப்படும். இவ்வாறு பொடியூதிப் பற்றவைக்கப்பட்ட இடங்கள் நிறத்தில் மாறுபடும். இது அணிகலன்களின் முழு அழகைக் குறைவுபடுத்தும். இவ்வாறு பொடியூதிப் பற்றவைக்கப்பட்ட இடங்கள் நிறத்தில் மாறுபடும். இது அணிகலன்களில் முழு அழகைக் குறைவுபடுத்தும். பற்ற வைத்த இடங்கள் தெரியாமல் ஓர் அணிகலன் முழுதும், ஒரே நிறமுடையதாய் அமைய அவ்வணி கலனைப் பொற்கொல்லர் ஊதுலையில் சிறிது நேரமிட்டு பின்னர் வெளியிலெடுத்து உடனே அதன்மேல் நீர் ஊற்றுவர். அப்படிச் செய்வதன் மூலம் அந்த அணிகலனில் பற்றவைத்த இடங்கள் தெரியாமல் ஒரே நிறமுடையதாய் ஒளிவிட்டும் பிரகாசிக்கும்.

**காலவை, சுடுபொன் வளைஇய வீரமை சுற்றொடு**
**பொடியழற் புறந்தந்த செய்வுறு கிண்கிணி (கலி. 85:1-2)**

(இதன் பொருள் :- 'நின்காலில் கிடக்கின்றவை, சுடு பொன்னாலே வளைத்த இரண்டாய் அமைந்த காற்சரியோடே பண்ணுதலைத்தான் உறுகின்ற பொடிமூடு தழலாலே நிறம் உண் டாக்கப்பட்ட சதங்கை'. நச்சினார்க்கினியர் உரை.)

பொன், வெள்ளி முதலியவற்றை உருக்கி வார்க்கும் அச்சுப் பொறிகள் இருந்தன. **வெள்ளி உருக்குறு கொள்கலம்**
**(நற். 124:7)**

ஒன்றை அழித்து மற்றொரு அணிகலன் செய்யும் பழக்கம் இருந்தது.

போரில் வெற்றி பெற்ற மன்னன் தன்பகை மன்னர்களின் மணிமுடியை அழித்து அப்பொன்னைக்கொண்டு அணிகலன் செய்தனர். பதிற்றுப்பத்து எனும் நூலில் பகை மன்னர்களது ஏழு முடிகளை அழித்துச் சேரமன்னன் பொன்னாலாகிய மாலை செய்து கொண்டான் என்பது எழுமுடி கெழீஇய திருஞெம ரகலத்து(16:17) என்றும், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பகை மன்னரது முடிகளைக் கொண்டு வீரக்கழல் செய்து கொண்டான் என்பது—

..............கடந்தட்டவர்
முடிபுனைந்த பசும்பொன்னின்
அடிபொலியக் கழறைஇய வயவேந்தே (புறம். 40:2-5)

என்றும்,

பகைமன்னர்களது யானைகளுக்கு அணிவிக்கப்பட்ட ஓடைப் (முகபடாம்) பொன்கொண்டு பொற்றாமரைகள் செய்து தன்னைப் பாடிவரும் பாணர்களுக்குப் பரிசிலாகக் கொடுத்தான் என்பது—

ஒன்னார் யானை ஓடைப் பொன்கொண்டு
பாணர் சென்னி பொலியத் தைஇ
வாடாத் தாமரை சூட்டிய (புறம். 126:1-3)

என்றதால் அறியலாம்.

அணிகலன் உடைந்துவிட்டால் அதனைப் பொற்கொல்லனிடம் கொடுத்துப் புதுப்பிக்கும் முறையும் அக்காலத்தில் வழக்கில் இருந்தது. நற்றிணையில் அமைந்த ஒருபாடல் இம்முறையைத் தெளிவுபட விளக்குகின்றது. ''பகற்போதில் என் தலைவி நின்னொடு கூடி அலவனாட்டி விளையாடியதால் அவள் காற்சிலம்பு உடைந்தொழிந்தது. அதனைக் கம்மியன்பால் தந்து புதுப்பிக்கலாம். எனின அவன் அச்சு அமைத்ததற்காகத் துறைக்குச் சென்று சிறிது மண்கொணர வேண்டும். ஆகவே நீயே அத்துறைக்குச் சென்று மண்கொண்டு வருக'' என்றாள். வரைபொருளாகக்காற்சிலம்பு கொணர்ந்து தந்து நீ வரைந்து கோடல் வேண்டும் என்ற குறிப்புத் தோன்ற இங்ஙனம் தோழி தலைவனிடம் கூறுகின்றாள். இந்தச் சந்தர்ப்பத்தில் ஆசிரியர் உலோச்சனார்,

உறுவினைக் கசாவா உலைவில் கம்மியன்
பொறியறு பிணைக்கூட்டும் துறைமண் கொண்டு......
வம்மோ. (நற். 365)

என்றார். செய்யும் தொழிலில் சிறிதளவும் சோர்வுபடுதல இன்மையால் கெடுதலில்லாத கம்மியன் உருக்குப்பொறி சிதைந்தவிடத்து இணைத்துச் சந்து ஊதிக் கூட்டுதற்கு மண்கட்ட

வேண்டும். அங்ஙனம் கட்டுதற்குத் துறையிலுள்ள மண்ணைக் கொண்டு வந்து தருக என்பதாகும். உருக்கி அமைக்கப்படும் அளவில் பெரிதாயினும், செயலருமை நினைந்து சோர்வெய்தாத வன்மை சிறந்த கம்மியன் என்றற்கு உறுவினைக்கு அசாவா உலைவில் கம்மியன் என்றார். பொன், வெள்ளி முதலியவற்றை உருக்கி வார்க்கும் அச்சு அல்லது பொறி வார்க்கப்படும் பொருளுக்கு ஏற்ப மண்ணால் செய்து கொள்ளப்படுவது. வார்ப்புத் தொழில் நிகழுமிடத்து இந்த அச்சில் எந்தப்பகுதியேனும் சிதையின் வேறு மண்ணை எடுத்து அச்சிதைவிடத்து அணைத்துக் கொள்வது இயல்பாதலின், பொறியறுபு இணைக்கூட்டும் மண் என்றார். களிப்பும், உலர்ந்த வழி வெடிக்காத பண்பும் உடைய மண்ணே வார்ப்பச்சுக்கட்கு வேண்டப்படுவது. அஃது எல்லாவிடத்து மின்றிச் சிற்சில நீர்த்துறைகளிலே காணப்படும். அது பொன், வெள்ளி முதலியவற்றை இட்டு உருக்கும் மூசைகட்கும் வார்ப்பு அச்சுகட்கும் பயன்படுவது பற்றி அதனைக் கம்மியர் உருக்குமண் என்பர். சிலம்பு, வார்ப்புப் பொறிகளில் உருக்கி வார்த்துச் செய்யப்படும். அது உடைந்தவழி பற்ற வைப்புக்கு இடந்தராமையின் மீட்டும் உருக்கி வார்ப்பதே செயற்பாலது.''[3]

## தொழிற்றிறம்

சங்க கால மக்கள் பொன், வெள்ளியால் ஆகிய அழகிய தொழிற்றிறம் விளங்கும் அணிகலன்கள் செய்வதில் தேர்ந்திருந்தனர். அதுமட்டுமன்றி விலையுயர்ந்த கற்களையும் வைத்து இழைத்து அணிகள் செய்வதிலும் வல்லவராயிருந்தனர். புறநானூற்றுப் பாடல் ஒன்றில் பொன், பவளம், முத்து, வயிர மணிகள் ஆகியவற்றை இணைத்து அழகிய உயரிய அருங்கலன் செய்ததற்கான சான்று காணப்படுகிறது.

**பொன்னுந் துகிரு முத்து மன்னிய**
**மாமலை பயந்த காமரு மணியும்**

---

3. நற்றிணை. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை விளக்கவுரை, அருணா பப்ளிகேஷன்ஸ். சென்னை. 17. 1968. ப. 1377

**இடைபடச் சேய வாயினுந் தொடைபுணர்ந்து**
**அருவிலை நன்கலம் அமைக்கும் (புறம். 28 1-4)**

பொன் வேறாகவும், மணிகள் வேறாகவும் எளிதில் பிரிந்து சிதறாதபடி பதித்துச் செய்யப்பட்ட அணிகலன் 'இழை' என்ற பெயரால் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம். (எ. கா.) இலங்கிழை, பாசிழை.

பொன்னில் வயிரமணிகள் வைத்திழைத்துச் செய்யப்பட்ட கழுத்தணிகள் கட்டப்பட்ட திறமும், அவற்றினின்றும் கிளர்ந் தெழும் ஒளி அழகும் சங்கப் பாடல்கள் பலவற்றுள் காணலாம்.

**திருமணி பொருத திகழ்விடு பசும்பொன்**
**வயங்குகதிர் வயிரமோடு உறழ்ந்துபூண் சுடர்வர**
**(பதிற்று. 16:15-16)**

திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் முருகக் கடவுள் அணிந் திருந்த மணிமுடியின்' தொழிற்றிறனின் கவினை,

**ஐவேறு உருவில் செய்வினை முற்றிய**
**முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி**
**மின்னுறழ் இமைப்பிற் சென்னிப் பொற்ப (திருமுரு. 83-85)**

சங்கப் பாடல்களில் கூறப்படும் அணிகலன்கள் அழகுடன் தொழிற்றிறம் விளங்குவதாயும் அமைந்திருந்தன. அவற்றுள்ளும் சில எடுத்துக்காட்டுகள் பொற்கொல்லர்களின் நுட்பமான தொழில் மேன்மையைப் போற்றுவதாய் அமைந்துள்ளன. சான்றாகச் சில :

**செய்வினை பொலிந்த செறிகழல் (ஐங். 389:1)**
**நுண்வினை இழை (நற். 138:8)**
**புனைவினைப் பொலிந்த பொலநறுந் தெரியல்(புறம். 29:3)**
**கைவினைப் பொலிந்த காசமை பொலங்காழ்மேல்**
**(கலி. 85:3)**

போன்ற இவை பொற்கொல்லர்களின் நுட்பமான வினைத் திறனை வெளிப்படுத்தும் வண்ணம் அமைந்தவை.

பொற்கொல்லன் புதுக்கம்பியிற் கோக்குமாறு உகிரால் பற்றி யிருக்கும் உருண்டையான பொற்காசுகள் வேப்பம்பழத்தைக் கவ்விக் கொண்டிருக்கும் கிளிமூக்கைப் போன்றிருக்கிறது என்னும் (குறு. 67:1-4) அள்ளூர் நன்முல்லையார் கூற்று பொற்கொல்ல னின் பணியைக் குறிக்கிறது.

மதுரை மாநகர வீதிகளில் பல்வேறு தொழிலாளர்கள் உளர். அவரவர் தங்கள் தொழிலில் திறம் படைத்தவர்கள்.

**கோடுபோழ் கடை நருந் திருமணி குயினருஞ்**
**சூடுறு நன்பொன் சுடரிழை புனைநரும்**
**பொன்னுரை காண்மரும் கலிங்கம் பகர்நரும்**
**செம்புநிறை கொண்மரும் வம்புநிறை முடிநரும்**
**(மது. 511-14)**

என்ற பாடல் வரிகள் பல்வேறு தொழிலாளர்களின் நிலையைக் காட்டுகின்றன. அழகிய பொன்னணி செய்பவர்கள், பொன்னின் மாற்று காண்கின்றவர்கள் இருந்தமையை இப்பகுதியால் அறிய முடிகின்றது.

## புடமிடல்

அணிகலத்திற்குரிய பொன் இயற்கையாகத் தூயதும், புட மிடப்பட்டுத் தூயதாக்கப் பெற்றதும் என இருவகை. இவற்றுள் இயற்கையாகத் தூயது 'ஓட்டற்ற பொன்' எனப்படும்''[4] புடமிடப் பட்டது மாற்றுயர்ந்த பொன் எனப்படும். பத்தரை மாற்றுத் தங்கம் சிறந்ததெனக் கூறுவது உலக வழக்கு. 'சுடச் சுடரும் பொன்' என்றார் வள்ளுவரும். எனவே தீயினில் பெய்து தூய்மை செய்யப்பட்ட பொன்னும் சிறப்புடையது.

**சான்று : சுடுபொன் ஞெகிழத்து முத்தரி சென்றார்ப்ப**
**(பரி. 21:18)**

**சுடுநீர் வினைக்குழையின் ஞாலச் சிவந்த**
**(பரி.12:87)**

---

4. ஞா. தேவநேயப் பாவணர். பண்டைத் தமிழர் நாகரிகமும், பண்பாடும். ப. 61.

## பேழை

பொன்னும் மணியுங் கொண்டு செய்யப்பட்ட அணிகலன்கள் பாதுகாப்புடன் இருக்கத்திறந்து மூடக்கூடிய அமைப்புடன் நகைப் பேழைகளும் இருந்ததற்கான சான்று குறுந்தொகையில் காணப் படுகிறது.

**பொன்பெய் பேழை மூய்திறந் தன்ன (233:3)**

## ஊர்கள்

பண்டைக் காலத்தில் அணிகலன் செய்வதில் பெயர்பெற்று விளங்கிய ஊர்களாகப் பதிற்றுப்பத்தில்,

**கொடுமணம் பட்ட வினைமாண் அருங்கலம்**
**பந்தர்ப் பயந்த பலர்புகழ் முத்தம் (74:5-6)**

என இரண்.டு இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதாவது கொடுமணம் என்னும் ஊரினிடத்தே செய்யப்பெற்ற தொல் வினையால் மாட்சிமை கொண்ட அரிய பல அணிகலன்களையும், பந்தர் என்னும் ஊரிடத்தே பெற்றதும், பலரும் சிறந்ததெனப் புகழ்வதுமான முத்துக்களையும் கொண்டு அழகுபடுத்தினர் என்றதனின்றும் கொடுமணம், பந்தர் என்ற இரண்டு ஊர்களும் அணிகலத்தொழிலில் புகழ்பெற்றிருந்தமையை உணரலாம்.

## சங்க இலக்கியங்களில் இடம்பெறும் அணிகலன்கள்

பண்டைத் தமிழர் முடிமுதல் அடிவரை எல்லா உறுப்புக் களிலும் அணிகள் பல பூண்டனர். அவர்கள் தாம் ஈட்டிய, தேடிக் குவித்த பொன்னையும் பொருளையும் பல்வகை அணிகலன் களாகச் செய்து அணிந்தனர். ஆடவரும் மகளிரைப் போலவே அணிகள் பல அணிந்தனர்.

## தலையணி

அக்காலத்தில் மகளிர் கூந்தலில் பல்வகைக் கலன்களை அணிந்தனர். வாடும் மலர் மாலைகளை அணிந்தவர் வாடாப் பொன்னரி மாலைகளையும் கூந்தலில் சூடினர்.

புனையிருங் கதுப்பகம் பொலியப் பொன்னின்
தொடையமை மாலை விறலிய மலைய (பெரும்.485)

தொய்யகம் என்பது ஒரு தலைக்கோலம்— 'தொய்யகம் தாழ்ந்த கதுப்புப்போல' (கலி. 28:6) தெய்வவுத்தி என்பது இன்னொரு தலைக்கோலம். இதனைச் சீதேவியார் என்றுங் கூறுவர்.

தெய்வவுத்தியொடு வலம்புரி வயின்வைத்து (திருமுருகு.23)

சுரிதகம் என்பது மற்றொரு தலைக்கோலம். வெளிவட்டம் பெரிதாகவும், அதற்கு உள்ளடங்கிய வட்டங்கள் அதனினும் சிறிது சிறிதாக வந்து ஒரு செம்மணிக் கல்லில் முடிவது போல அமைகின்ற இயல்புடைமையிற் சுரிதகம் என இவ்வணி பெயர் பெற்றிருக்க வேண்டும். நற்றிணைப் பாடல் ஒன்று இதனை அழககாகக் கூறுகிறது.

கைவல் வினைவன் தையுபு சொரிந்த
சுரிதக உருவின வாகிப் பெயரிய
கோங்கம் குவிமுகை அவிழ (நற். 86:5-7)

முஞ்சம், பிறை என்பன இளஞ்சிறுவர்கள் அணியும் தலையணிகளாவன.

(எ.கா) ............... புதல்வர்
கயந்தலை முச்சிய முஞ்சமொடு தழீஇ (பரி. 16:7-8)

மெய்பெறா மழலையின் விளங்குபூண் நனைதரப்
பொலம்பிறையுட்டாழ்ந்த புனைவினை யுருள்கலன்
(கலி. 81;2-3)

வீரர் பொன்னாலாகிய தும்பைப் பூவினை சூடினர் என்பது,
பொலம்பூந் தும்பைப் பொறிகிளர் தூணி (பதிற். 45:1)
எனவரும் பாடலடி சான்று பகர்கின்றது.

## கழுத்தணிகள்

பண்டைத் தமிழக மகளிர் கழுத்தணிகள் பல அணிந்தனர். அவை நுட்பமான வேலைத்திறனுடையவை. சில பொன்னில் செய்யப்பட்டு வைரங்கள் இழைக்கப் பெற்றிருந்தன,

**சான்று : திருமணி பொருத திகழ்விடு பசும்பொன்
வயங்குகதிர் வயிரமொ டுறழ்ந்து பூண்சுடர் வர
(பதிற். 16:15-16)**

## *கையணிகள்*

சங்க காலத்தில் ஆடவர், மகளிர், சிறுவர், யாவரும் கைகளில் கடகம், தொடி என்னும் அணிகளை அணிந்தனர். ஏழை முதல் அரசகுலப் பெண்டிர் வரை, சங்கு வளையல்களை அணிந்தனர். இவ்வளைகளை முன்கையில் அணிவர்.

**(எ கா.) வாளரம் பொருத கோணேர் எல்வளை
அகன்தொடி செறித்த முன்கை (நற். 77:9-10)**

தொடி, கடகம் என்பவைகளும் முன்கையில் அணியப்படுவன. வெள்ளியினால் செய்த வளைகளையும், முத்தினை அழுத்திச் செய்த தொடியினையும் அணிந்தனர். இவ்வளையல் பல நுண்ணிய வேலைப்பாடுகள் உள்ளனவாகச் செய்யப்பட்டிருக்கின்றன.

## *விரலணி*

கைவிரல்களில் மோதிரங்கள் அணிவது இருபாலார்க்கும் உரியது. விரலில் பகுவாய் மோதிரம் அணிந்தனர். இது மீன் வாய்திறப்பது போன்ற வடிவுடையது. இது முடக்கு மோதிரம் என்றும் கூறப்படும்.

**ான்று: வாளைப் பகுவாய் கடுப்ப வணக்குறுத்துச்
செவ்விரற் கொளீஇய செங்கேழ் விளக்கத்து
(நெடுநல். 143-44)**

சுறாமீன் வடிவத்தில் அமைந்த மோதிரத்தை அணிந்ததாகக் கலித்தொகை கூறுகிறது.

**நறாவிதழ் கண்டன்ன செவ்விரற் கேற்பச்
சுறவே றெழுதிய மோதிரந் தொட்டாள் (கலி. 84: 22-23)**

**மோசை** என்பது கைவிரலிலணியும் மற்றோரணி. இது முன்கை வளையோடு சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக்கும்.

**சான்று : ஒள்ளிழை மகளிர் இலங்குவளைத் தொடூஉம்**
**மெல்விரல் மோசை** (நற். 188:3-4)

## இடையணிகள்

சங்ககால மகளிர் இடையில் மேகலை, காஞ்சி என்பவற்றை அணிந்தனர். இவை ஆடைக்கோர் இறுக்கியாக இருந்ததுடன் இடையின் அழகையும் காட்டியது. இன்றும் இடையணி அணியும் பழக்கம் வழக்கிலுள்ளது. இவை பல முத்துவடங்கள் தொங்க விடப்பட்டுப் பட்டையாக அமைக்கப்படுவன. ''இருகோவை முதல் முப்பத்திரண்டு கோவை ஈறாக இயன்ற மேகலைகள் உண்டு. இவற்றில் பதினாறு வடங்கொண்ட மேகலை கலாபம் என்றும், பதினெட்டு வடங்கொண்டது பருமம் என்றும், முப்பத்திரண்டு வடங்கொண்டது விரிசிகை என்றும் கூறப்படும்.''[5]

கைத்தொழிலாலே பொலிவு பெற்ற பொன்மணிகள் இடையிடையே அமைக்கப்பட்ட மேகலைகள் அணிந்தனர். அதனோடு பவழ வடமும் அமைந்த மேகலை அணிவதும் உண்டு.

**சான்று : கைவினைப் பொலிந்த காசமை பொலங்காழ்மேல்**
**மையில் செந்துகிர்க் கோவை அவற்றின்மேல்**
**(கலி. 85:3-4)**

மேகலையோடு பாண்டில் எனப்படும் அணியையும் சேர்த்து அணிந்தனர். பாண்டில் பொன்னால் வட்டமாகச் செல்லப்படுவதோர் அணிவகை. இதனைச் சுற்றி மணிகள் கோத்து மேகலையோடணிதல் பண்டை மரபு.

**பொன்செய் பாண்டில் பொலங்கல நந்த (ஐங்.316-1)**

---

5. இரா. வேலம்மாள், தமிழ் இலக்கியத்தில் அணிகலன்கள், கேரளப் பல்கலைக் கழகம். 1968. பக். 61.

## காலணிகள்

சிலம்பு, கிண்கிணி என்பன மகளிரணியும் காலணி வகைகள். சிலம்பு பெரும்பாலும் வெள்ளியால் செய்யப்பட்டது. பொன்னால் செய்யப்படுவதுமுண்டு. சிலம்பினுள் இரத்தினக் கற்களையும், முத்துக்களையும் பரலாக இட்டுச் செய்வர்.

சான்று : **அரிபெய்து பொதிந்த தெரிசிலம்பு** (அகம். 321:15)

**முத்தரி பொன்சிலம்பு ஒலிம்ப** (நற். 110:45)

நடக்கும்பொழுது சிலம்புவதால் இவ்வணி சிலம்பு எனப்பட்டது. மகளிர் காலிலணியும் மற்றோர் அணி கிண்கிணி. இது அங்காந்த தேரையின், தவளையின் வாய் வடிவத்தில் செய்யப்பட்டிருந்தது.

**தேரைவாய்க் கிண்கிணி ஆர்ப்ப** (கலி. 86:9)
**தவளைவாய பொலஞ்செய் கிண்கிணி** (குறு. 148:2)

இவை தவிர பாடகம், பரியகம் என்னும் காலணிகளையும் அணிந்தனர் மகளிர்.

ஆடவர் காலில் அணிசெய்வது கழல். பூத்தொழிலும் அரும்பு வேலைப்பாடும் உடைய கழல்கள் அணிந்தனர். இக்கழல் பொன்னால் செய்யப்பட்டது. (பொலங்கழல்—புறம்.3) கழல்கள் அழகாகத் திருத்தமுறச் செய்யப்பட்டன.

சான்று : **செய்வினை பொலிந்த செறிகழல்** (ஐங். 389)
**பூம்பொறி கழற்கால்** (புறம். 259:7)
**திருந்து கழற் காளையொடு** (ஐங். 382:3)

போரில் வென்ற பகை மன்னரது முடிகளை அழித்து அப்பொன்னால் கழல் செய்தணிதல் வேந்தர் இயல்பு என்பதை,

**முடிபுனைந்த பசும் பொன்னின்**
**அடிபொலியக் கழல்தைஇய வல்லாளனை** (புறம் 40:3-4)

எனும் அடிகளால் காட்டுவர் ஆவூர் மூலங்கிழார்.

அக்கால மக்கள் தாம் அணிகள் அணிந்து மகிழ்ந்ததோடு, தம்மோடு தொடர்புடைய தெய்வங்கள், கருவிகள், விலங்குகள் ஆகியவற்றிற்கும் அணிபல அணிவித்து மகிழ்ந்தனர்.

## வெள்ளி

பொன்னுக்கு அடுத்த நிலையில் உயர்ந்ததும், வேலைக்குத் தரமானதுமான உலோகம் வெள்ளியாகும். காலில் அணியப் படும் தண்டை, சதங்கை, சிலம்பு போன்ற அணிகள் வெள்ளியால் செய்யப்பட்டன. மகளிர் பொற்றொடி அணிவதோடு வெள்ளி வளையையும் அணிந்திருந்தனர் என்பதை

> **நீர்த்திரள் கடுக்கு மாசில் வெள்ளிச்**
> **சூர்ப்புறு கோல்வளை செறிந்த முன்கை**
> (அகம். 142:16-17)

'என்றதால் உணரலாம். வெள்ளியை நன்கு ஆய்ந்தெடுத்துத் தன்மையறிந்து பயன்படுத்தினர் என்பதை 'நீர்த்திரள் கடுக்கு மாசில் வெள்ளி என்றதால் அறியலாம். முத்துக்களுக்கும், மணிகளுக்கும் துளையிடல், சாணைபிடித்தல், மாசு நீக்கக் கழுவுதல் போன்ற தொழில்கள் நடைபெற்றன.

> **தோளா முத்தின் தெண்கடல் பொருநன்** (அகம்: 137-13)

பண்டைத் தமிழகத்தில் மக்கள் விரும்பிய பொன் அணிகலன்கள் செய்வதற்குரிய பொன் வளமும் இருந்தது அருந்தொழில் வினைஞர்களும் இருந்தனர். ஏராளமாகப் பொன் கிடைத்த தனால் பொன்னாலேயே காசடிக்கப்பட்டது. அதனால் காசிற்கு மட்டுமன்றி மற்ற உலோக வகைகளுக்கும் பொன் என்பது பொதுப்பெயராயிற்று, வெண்பொன் வெள்ளியையும், செம்பொன் செம்பையும், கரும்பொன் இரும்பையும் குறித்தது. சங்க கால மக்கள் பொன் வகைகளைத் தெரிந்து பயன்படுத்தினர் என்பதைச் செம்பொன், பசும்பொன், ஆடகப் பைம்பொன் என அடைமொழி சேர்த்து வழங்கியதிலிருந்தே உணரலாம். தமிழ்நாட்டில் பொன் வேலை செய்வோரைப் பொற்கொல்லர், பொன்செய் கம்மியன் (நற்.158) என்றழைத்தனர். செயலூர் இளம்பொன் சாத்தன்

கொற்றனார், தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார், பொன்னாகன், காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மகனார் நப்பூதனார் போன்ற சங்ககாலப் புலவர்கள் சிலரது பெயர்களே அக்காலத்தில் பொன்வேலை குறிப்பிடத்தக்க சிறப்புப் பெற்றிருந்தது என்பதைச் சுட்டுகின்றன.

மிகப்பழங்காலந்தொட்டே பிறநாட்டோடும், கடல்கடந்த வெளிநாடுகளோடும் தமிழர் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். பிறநாடுகளிலிருந்து அணிகலன்களைக் கலங்களில் கொணர்ந்த செய்தியையும் இலக்கியம் கூறுகின்றது.

**அருங்கலந் தரீஇயர் நீர்மிசை நிவக்கும்**
**பெருங்கலி வங்கந் திசைதிரிந் தாங்கு** (பதிற். 52:3-4)

தமிழகத்தின் பல்வேறு திசைகளினின்றும் வந்த பொன்னும், மணியும், முத்தும், பவழமும் வினைவல்ல கம்மியரின் கைகளிலே மிளிர்ந்தன. வடமலையினின்றும் வந்த பொன், குடகடலினின்றும் கொண்டு வந்த பவழம், தென்திசையினின்றும் கிடைத்த மணி, விஞ்சைமலை வெள்ளி, இமயமலைப் பிறந்த வயிரவகை ஆகியவற்றைக் கொண்டு பொன்வினைஞர்கள் பல்வேறு அணிகலன்களைச் செய்தனர். பிறநாடுகளிலிருந்து வந்த வினைவலரும் தமிழகத்தில் இருந்தனர்.

மேற்கூறப்பட்டவற்றினின்றும் அணிகலன் செய்யும் தொழில் ஓர்அருங்கலையாக விளங்கியதையும் பொற்கொல்லரின் வினைத்திறம், நுட்பம், இவற்றை நோக்கின், பண்டைத் தமிழகத்து அணிகலன் செய்தொழில் சிறந்த கலையாகப் போற்றப்பட்டதையும், அத்தொழில் சிறப்பாக நடைபெற்றதையும் உணரலாம்.

## தோல் தொழில்

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த பண்டைத் தமிழர் தோலின் பயனறிந்து, வாழ்க்கைக்குத் தேவையான பயன்படு பொருளாகத் தோலைப் பதப்படுத்திப் பயன்படுத்திய முறைகளை அறியச் சங்கப் பாடல்கள் பெரிதும் துணை செய்வன. சங்கப் புலவர்கள் பலவிடங்களில் தோலை உவமையாகப் பயன்படுத்தி

யுள்ள பாடல்களின் வாயிலாகத் தோலின் நிறம், தன்மை, பயன் ஆகியவற்றை அறிய முடிகிறது. அவர்கள் தோலுக்கு வழங்கிய வேறு பெயர்களான அதள், பச்சை, உரிவை, உரி, சருமம் போன்ற பெயர்களையும் அறிய முடிகின்றது.[1] விலங்குகளின் தோலைக் கொண்டு அவற்றின் திண்மை, உறுதிக்கேற்ற வகையில் பயன்படு பொருளாக ஆக்கினர்.

சங்க இலக்கியப் பாடல்களினின்றும் காதலும், வீரமும் இரு ஒழுக்கங்களாகப் போற்றப்பட்டன என்பதை அறிவோம். சங்க இலக்கியப் புறப்பாடல்கள் பல அக்காலத்து வாழ்ந்த மன்னர் களின் வென்றிச் சிறப்பைக் கூறுவன. போர்மேற் செல்பவர்கள் பகைவர்களின் தாக்குதலினின்றும் தங்களைக் காத்துக் கொள்வ தற்குத் தோலால் ஆகிய **கேடகத்தை** மிகுதியாகக் கொண்டு செல்வர். இக்கேடகம் என்பது கேடயம், கிடுகு, பலகை, பரிசை, தோல் என்று வேறு பெயர்களாலும் குறிக்கப்பட்டுள்ளது. எனினும் தோலால் செய்யப்பட்ட இக்கேடகம் பெருமளவு வழக்கில் இருந்ததால் தொல்காப்பியத்திலும், சங்கப் பாடல்கள் பலவற் றுள்ளும் தோல் என்ற பெயராலேயே குறிக்கப்பட்டது போலும்.

**சான்று : ஈண்டிய மழையென மருளும் பஃறோல்** (புறம். 17-34)

போரில் ஈடுபடும் வீரர்கள், தேர் செலுத்துவோர் ஆகியோர் கைவியர்த்தலால் ஏந்திய படை நெகிழாமல் இருக்கும் பொருட்டுக் **கைச்சரடு** அணிவர். இது உடும்பின் தோலால் செய்யப்படுவது.

**சான்று : உடும்புசெய் பாணி நெடுந்தேர் வலவர் (புறம்.333)**

போர்வீரர்கள் திண்ணிதாய்க் காம்பொடு செறிக்கப்பட்ட வாட்படை, வேற்படை ஆகியவற்றைப் புலித்தோலால் செய்த **உறை**யிலிட்டு வைப்பர்.

---

1. உழை **அதள்** மது.310
   மின்னேர் **பச்சை** புறம்.308
   நல்லேற்று **உரிவை** அகம்.334
   தைப்பமை **சருமத்தில்** பரி. 21:3

போர்க்காலத்தில் அவற்றை உறையினின்றும் எடுத்துப் போருக்குரிய வகையில் செம்மை செய்வர். இக்கருததை,

**திண்பிணி எஃகம் புலியுறை கழிப்ப** (பதி. 19:4)

**தோல்செறிப்பினின் வேல்கண்டவர்** (புறம். 96 10)

எனவரும் பாடலடிகளால் அறியலாம்.

போர்த்தொழிலில் ஈடுபடும் வீரர்கள் தங்கள் உடலை வாள், வேல் ஆகியவற்றின் தாக்குதலினின்றும சாக்துக் கொள்ளக் **கவசம்** அணிவர், இக்கவசத்தை **மெய்புதை** அரணம் என்றும் சொல்வர். இது இரும்பினால் செய்யப்ப [illegible] ால் செய்யப் படும். இக்கருத்தை ஏணிச்சே [illegible] பாடிய புறநானூற்றுப் பாடலால் அறியலாம்.

**புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய**
**எய்கணை கிழித்த பகட்டெழின் மார்பின** (புறம். 13:2-3)

இங்கு 'புலிநிறக் கவசம்' என்றது புலித்தோலால் செய்யப் பட்ட மெய்புகு கருவி அல்லது கவசத்தைக் குறித்தது புலித் தோலில் உள்ள வரியுடன இணைப்பும் கலந்து அழகு செய்தலின் அதனைப் 'பூம்பொறி' என்றார். புலிநிறக் கவசத்தைப் புலிப் பொறிப் போர்வை என்றுங் கூறுவர்.

போரிலே விழுப்புண் பட்டிறந்த வீரர்க்குக் கல்நட்டுப் பலியிடும் பொழுது, அக்கல்லைச் சூழ வேல்களை வரிசையாக நட்டு உட்புற மாகத் தோல்களை (கேடகம்) வேய்ந்து அரண் செய்வர். இப் பழக்கமிருந்ததைக் 'கிடுகு நிரைத்து எஃகூன்றி' எனவரும் பட்டினப்பாலை(78) அடியால் அறியலாம். அதைப் போலவே கேடகங்களைக் கொண்டு பாசறைக்கு அரண் அமைக்கும் பழக்க மிருந்ததையும் அறியலாம்.

போரினை முறைப்படி வழிநடத்திச் செல்ல போர்முரசு மிக இன்றியமையாத ஒன்றாகும். இப்போர் முரசு வன்மையான, மயிர் நீக்கப்படாத தோல்களால் செய்யப்பட்டதை அறிய முடி

கிறது.[2] இப்போர் முரசங்களும் இதையொத்த பிற தோலாலான இசைக் கருவிகளும் நன்றாகத் தோல் வார்களால் இழுத்துக் கட்டப் படல் வேண்டும் என்ற குறிப்புகளும் காணப்படுகின்றன.

**சான்று : விசித்துவினை மாண்ட மயிர்க்கண் முரசம்**
**(புறம். 63:7)**

வன்மை ஒலியைத் தருவதற்கேற்ற வகையில் போர்முரசங் களுக்கு மேற்கூறிய வகையில் தோல்களைப் போர்த்தினர். அதைப் போலவே மென்மையான ஒலியைத் தரவல்ல பல தோற்கருவி களும் செய்யப்பட்டன. இதற்கு மான் தோலைப் பயன்படுத்தினர். முழவு, பதலை, ஆகுளி, சிறுமுழா, கிணைப்பறை, தடாரி, துடி, தண்ணுமை போன்ற தோற்கருவிகள் செய்யப்பட்டன.

**சான்று : மான்தோல் சிறுபறை கறங்க (மலை. 321)**

## *யாழின் போர்வை*

சங்க கால இசைவாணர்கள் யாழ் என்னும் இசைக்கருவிக்குப் பாதுகாப்பாகத் தோலைப் போர்வையாகப் போர்த்தியமைக்கான சான்றுகள் பல உள்ளன. போர்க்கருவிகளுள் ஒன்றான கேடகம் அதைச் செய்யப் பயன்பட்ட தோல் என்ற பெயராலேயே பெரும் பாலும குறிப்பிடப்பட்டுள்ளது போலவே யாழ்க்குப் போர்வை யாகத் தோல் பயன்படுத்தப்பட்டது எனவரும் இடங்களி லெல்லாம் **பச்சை** என்ற சொல்லாலேயே குறிப்பிடப்பட்டுள்ளது நோக்குதற்குரியது. யாழின் போர்வையாகப் பயன்படுத்திய தோலைக் காட்டிடத்துக் குமிழினுடைய பழத்தினது நிறத்தை ஒப்பத் துவரூட்டிக் கைத்தொழிலால் பொலிவு பெறச் செய்தனர்.

**சான்று : கானக் குமிழின் கனிநிறங் கடுப்பப்**
**புகழ்வினைப் பொலிந்த பச்சையொடு**
**(சிறுபாண். 225-26)**

---

தோல்செறிப்பு=தோல் உறை

2. புறம். 288:1-4.

## பைகள்

அக்காலத்தில் தமிழர் தோலால் பல்வேறு பயன்படு பொருளைச் செய்ய அறிந்திருந்தனர். போர்க்கருவிகள், இசைக் கருவிகள் ஆகியவை செய்யப் பயன்படுத்தியதைப் போலவே பல்வேறு தோல் பைகள் செய்யவும் அறிந்திருந்தனர். மீன் பிடிக்கும் பாண்மகன் தூண்டிற் பொன்னில் கோத்து வைத்தற் பொருட்டு இறைச்சியைத் தோற்பையிலிட்டுத் தோளிலே தாங்க விட்டிருப்பான். முல்லைநிலக் கோவலர் கழுவோடே சூட்டுக் கோலையும் தோற்பையிலிட்டுச் சுருக்கிக் கட்டிச்செல்வர். கள்ளினைத் தோற்பையில் இட்டு வைத்ததற்கான குறிப்பு பெரும் பாணாற்றுப்படை, மதுரைக் காஞ்சி ஆகிய நூல்களில் காணப் படுகின்றது.[3]

## ஊதுலைக் கருவி

கொல்லன் பட்டறையில் பயன்படுத்தப்பட்ட ஊதுலைக்கருவி தோலால் செய்யப்பட்டது. இது மெல்லிய தோலால் செய்யப் பட்டது.

**மென்தோல் மிதியுலை** (பெரும். 206-7)

**ஊதுலை விசைவாங்கு தோலின் வீங்குபு** (அகம். 96)

நீர்விளையாட்டிற்குச் செல்லும் மகளிர் புழுகுநெய் உள்ளிடப்பட்ட துருத்தியை எடுத்துச் செல்வர். 'நெய்ம்மாண் சிவிறியர்' எனப் பரிபாடலில் (6:34) வந்துள்ளது. இதுவும் தோலால் ஆனது.

சங்க கால மக்களிடையே தோலால் செய்யப்பட்ட செருப் பணியும் வழக்கம் இருந்ததைப் பலபாடல்கள் உணர்த்துகின்றன.

---

3. பச்சூன் பெய்த சுவல்பிணி பைந்தோல் (பெரும். 283)
கழுவொடு சுடுபடை சுருக்கிய தோற்கண் (கலி. 106:1)
நீலப் பைங்குடந் தொலைச்சி நாளும்
பெருமகிழ் இருக்கை (பெரும். 382.83)

செருப்பு என்ற காலணி தொடுதோல்,[4] அடிபுதை அரணும், அடையல் என்ற சொற்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. செருப்பினை எப்படிச் செய்தனர் என்பதற்கான குறிப்பு பரிபாடலில் காணப்படுகிறது. முதல்நிலையாகத் தைப்பதற்கென அமைந்த தோலின் மேற்புறத்தைத் தாமரை மலரின செந்நிறத்தைக் கொண்ட துவர்நீர்த்துறையில் முழுதும் மறைய அழுத்திப் பதப் படுத்துவர். முழுதும் மயிர்செறிந்திருக்கும் முதுகு பக்கத் தோலிடத்தே, வரிகள் மிக்க பாம்பினது தோலைக் கீறிச்செய்த வாரைப் போல விளங்கும் மயிற் பீலிகளின அழகிய மென்மையான பிளவுகளாலே அழகுபடுத்துவர். இவ்வாறு செய்தமைத்த அடையல் என்னும் செருப்பு என்ற கருத்தமைய,

**தைப்பமை சருமத்தில் தாளியை தாமரை**
**துப்பமை துவர்நீர்த் துறைமறை அழுத்திய**
**வெரிநத் தோலொடு முழுமயிர் மிடைந்த**
**வரிமலி யரவுரி வள்புகண் டன்ன**
**புரிமென் பீலிப் போழ்புனை அடையல்**

எனப் பரிபாடல் (21: 2-7) சித்திரித்துள்ளது.

## படுக்கை

ஆட்டின் தோல், மான்தோல், புலித்தோல் ஆகியவை படுக்கையாகப் பயன்படுத்தப்பட்டன

## தோளணி

வேள்வி செய்வோன் மான்தோலைத் தூய்மை செய்து போர்த்திக்கொள்ள, அவன் மனைவி அத்தோலை வட்டமாக அறுத்து, அதனைச் சுற்றிலும், உள்ளிடத்தும் முத்தாலும், மணியாலும் அலங்கரித்து அதைத் தோளணியாகச் செய்து அணிவாள்.

---

4. தொடுதோல் அடியர், (மது. 636.)
அடிபுதை அரணம் எய்தி... (பெரும் 69 )
செருப்புடை அடியர்... (அகம்: 129:12.)

இச்செய்தி பதிற்றுப்பத்துப் பாடலில்

**புள்ளி யிரலைத் தோல்ஊன் உதிர்த்துத்**
**தீதுகளைந் தெஞ்சிய திகழ்விடு பாண்டில்**
**பருதி போகிய புடைகிளை கட்டி**
**எஃகுடை இரும்பின் உள்ளமைத்து வல்லோன்**
**சூடு நிலையுற்றுச் சுடர்விடு தோற்றம்**
**விசும்பாடு மரபிற் பருந்தூ றளப்ப**
**நலம்பெறு திருமணி கூட்டு நற்றோள் (74:10-16)**

என மிகவிரிவாகக் கூறப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்டவற்றினின்றும் பண்டைத் தமிழர் தோலின் பயனறிந்து பல்வேறு நிலைகளில் பயன்படுத்தியதை அறிய முடிகின்றது, போர்க்கருவிகள், இசைக்கருவிகள், அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படும் பொருள்கள், அணிகலன்கள் எனப் பல்வேறு வகைகளாகத் தோலின் தன்மைக்கு ஏற்றவாறு பயன் படுத்தினர். பெருமளவிலும், பல்வேறு விதமாகவும் தோல் பொருட்கள் செய்யப்பட்டதால் தோலைப் பதப்படுத்தித் தொழில் செய்த வினைஞர்களும் பலராக இருந்திருத்தல் வேண்டும்.

# 2. நிலஞ்சார் தொழில்கள்

## *கால்நடை பேணல்*

முல்லை நிலத்தில், அஃதாவது நீர்வளமும், நிலவளமும் குறைந்த புன்செய் நிலப்பகுதியில், மக்கள் ஆடு, மாடு வளர்ப்பதைப் பெருந்தொழிலாகக் கொண்டிருந்தனர். அந்நாளில் பசுக்களையே பெருஞ்செல்வமாகக் கருதினர். ஓர் அரசன் மற்றொரு அரசனின் செல்வத்தைக் கவர்ந்து கொள்ள விரும்பினால் முதலில் அவன் நாட்டம் பசுக்கள் மீதே விழும். இதை நிரை கவர்தல் என்னும் போர் முறையால் அறியலாம். முதல் நிலையில் பயிர்களை விளைவிப்பது மட்டுமின்றிக் கால்நடைகளை வளர்ப்பதும் வேளாண்மைத் தொழிலின் ஒரு கூறாயிருந்தது. நாளடை

வில் முல்லைநிலத்தார்க்குரிய தொழிலாய் அமைந்தது. இவ்வாறு ஆடு, மாடுகள் மேய்த்தலைத் தொழிலாகக் கொண்ட மக்கள் ஆயர், கோவலர், இடையர் என்ற பெயரால் அழைக்கப்பட்டனர். வலிய கையை உடைய இடையன் ஆடுகின்ற தலையையுடைய ஆட்டின் தொகுதியை மேய்க்கச் செல்வான். மேற்கூறப்பட்ட கருத்துக்களைப் பின்வருந் தொடர்கள் விளக்குவன.

**புல்லினத்து ஆயர் (கலி. 110:1)**
**ஆடுடை இடைமகன் (நற். 266:3)**
**கொல்லைக் கோவலர் (நற் 266:1)**
**ஆடுதலைத்துருவின் தோடுதலைப் பெயர்க்கும்**
**வன்கை இடையன் (நற். 169:6-7)**

இவர்கள்தம் தொழிலன்றி வேறு தொழில் அறியாதவராதலின் கல்லாக் கோவலர் (அகம். 74) எனப்பட்டனர்.

பெரிய இருள்நீங்கும் விடியற்காலத்து, தொழுவத்திலுள்ள அகன்ற தலையையுடைய காரெருமையின் மிக இனியபால் நிரம்பக் கறந்துகொள்ளும் பொருட்டு அகன்ற கன்றுகளைத் தொழுவத்து நிறுத்திவிட்டு ஊரிலுள்ள மாடு மேய்க்கும் இளஞ்சிறுவர்கள் அவ் வெருமைகளின் மேலேறிக்கொண்டு தனியே மேய்த்து வருவதற்குச் செல்வர்.

**சான்று: மன்ற எருமை மலர்தலைக் கார்ஆன்**
**இன்தீம் பால்பயங் கொண்மார் கன்றுவிட்டு**
**ஊர்க்குறு மாக்கள் மேற்கொண்டு கழியும்**
**பெரும்புலர் விடியல் (நற். 80:1-4)**

பால்விலை கூறி விற்கும் இடையன் கால்நடைகளை மேய்க்கச் செல்லும்பொழுது உறியுடனே தீக்கடைகோல் முதலாய கருவிகளை இட்டு வைத்த தோற்பையை ஒருசேரச் சுருக்கிட்டுப் பனையோலைப் பாயோடு முதுகிற்கட்டி எடுத்துச் செல்வான். இவன் தான் மேய்த்துச் செல்லும் சிறிய தலையையுடைய ஆட்டின் தொகுதி மயங்கிப் பிறபுலம் புகாது அவ்விடத்திலேயே தங்கும்படி **வீளை** எனப்படுகிற வாயைக் குவித்தூதும் அழைத்தலாகிய குறிப்

பொலியை எழுப்புவான். அவ்வோசை அறிந்த ஆட்டினமும் அங்கேயே தங்கும். இதனை நற்றிணை,

பாணி கொண்ட பல்கான் மெல்லுறி
ஞெலிகோற் கலப்பை அதனொடு சுருக்கிப்
பறிப்புறத் திட்ட பால்நொடை இடையன்
நுண்பஃ றுவலை யொருதிற நனைப்பத்
தண்டுகால் வைத்த வொடுங்குநிலை மடிவிளி
சிறுதலைத் தொழுதி யேமார்த் தல்கும் புறவு. (142:2-7)

எனக் கூறுகிறது.

பலவாகிய ஆநிரைகளை உடையவரான முல்லைப் பூக் கண்ணியை அணிந்த கோவலர்கள் புல்மிகுதியாக உள்ள பரந்த நிலத்திலே பரவலாக மேயவிடுவர்.

முல்லைக் கண்ணிப் பல்லான்கோவலர்
புல்லுடை வியன்புலம் பல்லா பரப்பி (பதி. 20:21-22)

கன்றுகளோடு கூடிய கறவைப் பசுக்களையுடைய பலவாகிய ஆநிரைகளை வளமான முல்லைநிலப் பரப்புகளில் மேயவிட்டு, கோவலர் வேய்ங்குழலை வாயின்கண் வைத்து முல்லைப்பண் இசைப்பர்.

....................கன்றொடு
கறவைப் பல்லினம் புறவுதொறுகளக்
குழல்வாய் வைத்தனர் கோவலர் (அகம். 354:3-5)

ஆநிரைகளை மேய்க்கும் பொழுது அவை நீருண்ணக் கோவலர் தம்கையிலுள்ள கோலால் சிறிய பத்தலைத் தோண்டுவர்.

கல்லாக் கோவலர் கோலிற் றோண்டிய
வானீர்ப் பத்தல் (ஐங். 304:1-2)

இவ்வாறு மேய்க்கப்பட்ட ஆநிரைகளை மாலைநேரம் வரும் பொழுது திரும்பவும் மனைநோக்கிச் செலுத்துவர். அவ்வாறு மனைநோக்கிச் செல்லும் ஆநிரைகளை அகநானூறு,

**தாம்பசை குழவி வீங்குசுவரை மடியக்**
**கனையலங் குரல காற்பரி பயிற்றிப்**
**படுமணி மிடற்ற பயநிரை யாயம்**
**கொடுமடி யுடையர் கோற்கைக் கோவலர்**
**கொன்றையங் குழலர் பின்றைத் தூங்க**
**மனைமனை படரும் நனைதகு மாலை (54:7-12)**

எனச் சித்திரித்துள்ளது.

மாலைப் பொழுதில் மனையிடத்தே கட்டப்பட்டிருக்கின்ற தம் கன்றுகளை நினைந்து பால் சுரந்து பருத்த மடியை உடையன வாய், மணிகள் ஒலிக்க ஆக்கள் விரைந்து படரினும் கோவலர் மெத்தென இயங்கி இசையூதிப் பின்னே செல்வர். இதே கருத் தமைய முல்லைப்பாட்டில்,

**கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர**
**இன்னே வருகுவர் தாயர் (15-16)**

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

[illegible] காலத்தைச் சித்திரிக்கையில் கோவலர் நிலை [illegible] மாகத் தீட்டப் பெற்றுள்ளது.

**ஆர்கலி முனைஇய கொடுங்கோற் கோவலர்**
**ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்**
**புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்**
**நீடிதழ்க் கண்ணி நீரலைக் கலாவ**
**மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்**
**கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க**
**(நெடுநல். 3-8)**

கடியகுளிர் வாட்டும் கூதிர்காலமே ஆயினும் இடையர்கள் தம் ஆநிரை மேய்க்கும் தொழிலைத் தவறாது செய்வர். மழையால் ஏற்பட்ட வெள்ளத்தை வெறுத்த இடையர்கள் எருது, பசு, ஆடு என்னும் மூன்று வகைப்பட்ட நிரைகளையும் தாம் பயின்ற இடத்தைவிட்டு நீங்கிச்சென்று மேடாக இருக்கும் முல்லைநிலப் பகுதியில் மேய விடுவர். கோவலர் தம் நிரைகள் மேய்தற்குத்

தக்க இடங்களை நாடி அந்த இடத்திற்கு அவற்றைக் கொண்டு செல்லுதல் வழக்கம். முல்லைநில மக்களின் வாழ்வின் திறங் கண்டோம். இனி குறிஞ்சி நில மக்களின் வாழ்வியல் தொழில்கள் எவை என்பதைக் காண்போம்.

## வேட்டையாடுதல்

ஆதிகாலத்தில் மனிதன் விலங்கோடு விலங்காக வாழ்ந்த காலத்தே விலங்கைத் தாக்கி வீழ்த்தி வாழ முற்பட்ட நிலையில் வேட்டைத்தொழில் தோன்றி இருத்தல் வேண்டும். அன்று தொடங்கி இத்தொழில் காலந்தோறும் வளர்ந்து வேட்டைக் கலையாகப் போற்றுமளவிற்குச் சிறந்து விளங்குகின்றது. இக் காலகதில் காட்டில் வேட்டைக்குச் சென்று வேட்டையாடுதல் ஒரு கலையாகப் போற்றப்படுகிறது. இக்கலை வீரத்தின் விளைவு என்று கூறலாம்.

சங்ககாலத்தில் வேட்டைத்தொழில் சிறப்பாகப் போற்றி வளர்க்கப் பெற்றுள்ளது. வேட்டைக்குச் செல்வோர் அதற்குத் தேவையான கருவிகளுடன் செல்லுதலும், காட்டில் எல்லாத் திசைகளிலும் அலைந்து வேட்டையாடுதற்குரிய விலங்குகள் உள்ள இடத்தை அறிதலும், சரியான இடமறிந்து வலை விரித்தலும், பதுங்கிய இடத்திலிருந்து விலங்கை வெளிப்படச் செய்தலும், வலையில் சிக்கியவுடன் அஞ்சாது பாய்ந்து தாக்கு தலும் வேட்டைத்தொழிற் கூறுகளாகும்.

வேட்டைக்குச் செல்வோர் சென்ற காட்சியைக் கபிலர்,

**செம்பொறிக் கேற்ற வீங்கிறைத் தடக்கையின்**
**வண்ண வரிவில் ஏந்தி அம்புதெரிந்து**
**நுண்வினைக் கச்சைத் தயக்கறக் கட்டி**
**இயலணிப் பொலிந்த ஈகை வான்கழல்**
**துயல்வருந் தோறுந் திருந்தடிக் கலாவ**
**முனைபாழ் படுக்குந் துன்னருந் துப்பிற்**
**பகைபுறம் கண்ட பல்வேல் இளைஞரின்**
**உரவுச்சினஞ் செருக்கித் துன்னுதொறும் வெகுளும்**

**முளைவா ளெயிற்ற வள்ளுகிர் ஞமலி**
**திளையாக் கண்ண வளைகுபு நெறிதர** (குறி.123-32)

எனக் குறிஞ்சிப்பாட்டில் சித்திரித்துள்ளார்.

## பார்வை

வேட்டைக்குப புறப்பட்டுச் சென்ற வீரர்கள், பறவைகளையும், விலங்குகளையும் வேட்டையாடும் பொருட்டு வலையை விரித்துக் கட்டுவர். அவ்வாறு வலைவிரித்த பின்னர், பிற பறவை இனத்தை அல்லது விலங்கினத்தை வளைத்துக்கொண்டு வருமாறு பார்வை பறவை அல்லது விலங்கைச் செலுத்துவர். அத்தகைய பார்வைப் பறவையின் சூழ்ச்சியால் துணையினின்று நீங்கிச் சென்ற **கணந்துள்** என்னும் பறவை ஓரிடத்தே தனித்திருந்து கூவிய காட்சியினைக் குடவாயிற் கீரத்தனார் என்பார்,

**படுவலை வேட்டுவன் பார்வையின் ஒரீஇ**
**நெடுங்காற் கணந்துளம் புலம்புகொள் தெளவிளி**
**(நற்.212:1-2)**

எனக் குறிப்பிடுகிறார். புலவர் வீரை வெளியனார் என்பவர், ஒரு பார்வை விலங்கினைக்குறித்து,

**கைம்மான் வேட்டுவன் கனைதுயின் மடிந்தெனப்**
**பார்வை மடப்பிணை தழீஇப் பிறிதோர்**
**தீர்தொழில் தனிக்கலை திளைத்துவிளை யாட**
(புறம். 320:3-5)

என்றனர். இங்குப் பார்வை மடப்பிணை என்றது பிற மான் களைப் பிடிப்பதற்காகப் பயிற்சி கொடுக்கப்பட்ட இளமானைக் குறிக்கும். தினையுணங்கலைப் பரப்பிக் கண்ணி வைத்து, அவற்றை உண்ணும் கோழியையும், இதலையும், புறா முதலிய வற்றையும் பிடித்தல் மரபு.

## வேட்டையாடல்

புறநானூற்றுப் பாடலொன்றில் கோப்பெருஞ்சோழன் என்பான் உயர்ந்தது உள்ளுவோன் வெற்றியும், சிறியது கருது வோர் தோல்வியும் பெறுவர் என்ற கருத்தமைய,

யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே (214:4-5)

என வேட்டைத் தொழிலின் தன்மைகளை ஒப்பிட்டுக் கூறியுள்ளதைக் காணலாம்.

வேட்டைக்குச் செல்வோர் தனித்துச் செல்லாது, பலர் சேர்ந்து வேட்டை நாயுடன் செல்வதே வழக்கம். அவ்வாறு சென்று வேட்டையாடும்பொழுது அவர்கள் பிரிந்து செல்லவும் நேர்தலுண்டு. அவர்கள் பிரிந்து சென்று வேட்டையாடிய பின்னர், மீண்டும் எல்லோரும் ஒன்று சேரவும், வேட்டை நாயை அழைப்பதற்கும் ஊது கொம்பினை ஊதுதல் வழக்கம். இதனை,

ஊதல் வேண்டுமாற் சிறிதே வேட்டொடு
வேய்பயில் அழுவத்துப் பிரிந்தநின்
நாய்பயிர் குறிநிலை கொண்டகோடே (அகம். 318:13-15)

என்னும் அகநானூற்றுப் பாடல் அடிகளால் அறியலாம்

சங்க இலக்கியப் பாடல்களில் வேட்டையாடிய பல்வேறு நிகழ்ச்சிகள் அழகுறச் சித்திரிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். வேங்கையினது பொன்னிறமுடைய பூங்கொத்துக்களைத் தலையில் அணிந்துகொண்டு, வளைந்த மூங்கிலால் இயன்ற வலியவில்லினைத தோளில் மாட்டிக்கொண்டு, இனிய பழத்தையுடைய பலாவினது இனிய சுளையினின்றும் விளைந்த மதுவினை, சீழ்க்கை ஒலியுடன் பாயும் அம்பினையுடய இளமையுடைய மறவர்களோடே பருகி, தனக்கு இயல்பான ஓடும தன்மையில தவறுதல் இல்லாத ஆற்றல் வாய்ந்த வேட்டை நாய்கள் பின்தொடர்ந்து வரும்படி வேட்டையாடச் சென்ற குறவனானவன், காட்டிலுள்ள புதர் குருதியோடு அசைந்தாட, முள்ளம் பன்றியைக் கொன்று வீழ்த்தியதனைக் கபிலர்,

தீம்பழப் பலவின் சுளைவிளை தேறல்
வீளை அம்பின் இளையரொடு மாந்தி
ஒட்டியல் பிழையா வயநாய் பிற்பட
வேட்டம் போகிய குறவன் காட்ட
குளவித் தண்புதல் குருதியொடு துயல்வர
முளவுமாத் தொலைச்சும் (அகம். 182:3-8)

என்றனர். கலித்தொகையில் காணப்படும் ஒரு பாடலில் பாலை பாடிய பெருங்கடுங்கோ என்பார் பின்வருமாறு பாடியுள்ளார்.

வெள்ளைக் கொம்பை உடைய யானையை அலைத்து ஓட்டும் கானவர், கொல்லையிலிருந்து துரத்த எறியும் கவண் கற்கள் பூக்களை உதிர்க்கும் எனவும்; வேட்டைநாய் ஒருமானைப் பிடிக்க, அம்மான் அதற்கு அஞ்சாமல், வேடர்க்குப் பயன்பட்டது எனவும் கூறுகின்றார்.

**இலங்கொளி மருப்பின் கைம்மா உளம்புநர்**
**புலங்கடி கவணையின் பூஞ்சினை உதிர்க்கும்**
**கொலைவெம் கொள்கையொடு நாய்அகப் படுப்ப**
**வலைவர்க்கு அமர்ந்த மடமான் (பாலைக்கலி. 22)**

குறுந்தொகைப் பாடலொன்றில், 'மாட்சிமைப்பட்ட வில்லையுடைய வீளையொலியை உடையோராய்க் கற்களை வீசி எழுப்பி, அகன்ற இடத்தையுடைய காட்டிடத்துத் தன் இனத்தினின்றும் பிரிந்த துன்பத்தையும் இளமையையுமுடைய பெண்மான் நேரே இருப்ப அதனை அறியாது கலைமானைக் கொல்லும் வன்கண்மை உடையவர் வேடர்கள்' (குறுந். 272:2-5) எனப்பட்டுள்ளது.

விலங்குகளின் உயிர்நிலை அறிந்து அதன்கண் அம்பெய்து கொல்லுதல் வேடர் இயல்பு என்பது,

**இரும்புவடித் தன்ன கருங்கைக் கானவன்**
**விரிமலர் மராஅம் பொருந்திக் கோல்தெரிந்து**
**வரிநுதல் யானை யருநிறத் தழுத்தி (அகம் 172:6-8)**

'இரும்பினை உருக்கி வார்த்தாற்போன்ற வன்மை வாய்ந்த கையை உடைய குறவன் மலர்ந்த மலர்மிக்க வெண்கடப்ப மரத்தினைச் சார்ந்து நின்று, தகுதியான அம்பினை ஆராய்ந்தெடுத்து, வரிகளைக்கொண்ட நெற்றியையுடைய யானையினது ஊடுருவுதற்கரிய அதன் மார்பிலே ஊடுருவிப் போம்படி எய்து கொன்று வீழ்த்தினான்' என்பதால் அறியலாம்.

சங்க இலக்கிய அகப்பாடல்களில தலைவியின கண்களுக்கு வேட்டை ஆடும்பொழுது வேட்டுவர் விலங்கினைக் கொன்று பறித்த குருதி தோய்ந்த அம்பு உவமையாகக் கூறப்பட்டுள்ள தைக் காணலாம்.

சான்று : ஏனல் காவலர் மாவீழ்த்துப் பறித்த
பகழி யன்ன சேயரி மழைக்கண் (நற்.13:3-4)

கொடுவில் கானவன் கோட்டுமா தொலைச்சிப்
பச்சூன் பெய்த பகழி போலச்
சேயரி பரந்த வாயிழை மழைக்கண் (நற். 75:6-8)

இவ்வாறாகச் சங்க இலக்கியப் பாடல்களில் வேட்டையாடல் பற்றிய செய்திகள் அனைத்தும அழகுற விளக்கப்பட்டுள்ளதைக் காணலாம.

## ஆறலை கள்வர்

சங்க நூல்களில் வருணிக்கப்படும் பாலைநிலம் அருஞ்சுரம் என்றும், கடுமையான காட்டுவழி என்றும், காய்ந்த தலையினை யுடைய பருந்தினது உளிபோன்ற வாயையுடைய பேடை, காய்ந்த உச்சியைக கொண்ட ஓமை மரத்தினது அழகிய கவட்டின் கண் ஏறித் தனிமையுறக் கூவும் நிலம் காய்ந்த காட்டுநெறி என்றும, கடுங்கதிர் ஞாயிறு கல் பிளக்குமாறு காயும் வழி என்றும, என்றும புனகண் யானையொடு புலிவழங்கு வழி என்றும் பலவேறு விதமாகக் கூறப்பட்டுள்ளது.

பாலைக்கு நிலம் இல்லை என்பர். ஆயின் நிலக்கலப்பே அதற்கு நிலமாகும். முல்லையும் குறிஞ்சியும் திரிந்து பாலை யாதலையே பலரும் கூறுவர். இங்கு வாழ்ந்தோர் கொலைக் கஞ்சாத வழிபறிக் கொள்ளைக்காரர். அவர்கள் ஆநிரைகளைத் திருடுவர். பாலைநிலம் வழியாகச் செல்லும் வழிப்போக்கர்களிட மிருந்து உடைமைகளைப் பறித்து அவர்களது துன்பங்களைக் கண்டு மகிழ்வர் இச்செயல்களையே தம் தொழிலாகக் கொண்ட வர்கள் அவர்கள் ஆறலைகள்வர் எனப்பட்டனர். அவர்களைப் பற்றிய சில குறிப்புகள சங்கப் பாடல்களில பினவருமாறு காணப் படுகின்றன.

சான்று : வழங்குநர் இன்மையின் வெளவுநர் மடிய
(அகம்.1:14)

இலைமாண் பகழிச் சிலைமாண் இரீஇய
அன்பில் ஆடவர் (நற்.352:1-2)

செந்தொடை பிழையா வன்கண்[*] ஆடவர்
அம்புவிட வீழ்ந்தோர் (புறம்.3:20-21)

இங்ஙனம் மறமே செய்து திரியும் தொழிலர் ஆறலைகள்வர் எனினும் அவர்களுக்கும் உணர்வுகள் உண்டு என்பதைப் பொருநராற்றுப்படை பாடலடிகள் புலப்படுத்துகின்றன. ஆறலைகள்வர் யாழினின்றும் எழும் இன்னோசை கேட்டு, தம்கொலைத் தொழிலுக்குரிய படைக்கலங்களைக் கைவிட்டு மறநெறியினின்று நீங்கி அருள்நெறிப் படர்வர்.

ஆறுஅலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை (பொருந:21-22)

## மீன் வேட்டம்

நெய்தல் நிலத்துப் பரதவ மக்கள் கடலில் மீன்பிடித்தலைத் தலையாய தொழிலாகக் கொண்டிருந்தனர். எனினும் முத்துச் சிப்பிகள் நிறைந்த கடற்பகுதிகளையொட்டி வாழ்ந்தவர்கள் முத்துக்குளிக்கும் தொழிலிலும், சங்கெடுக்கும் தொழிலிலும் ஈடுபட்டிருந்தனர். இவர்களுள் ஒருசாரார் உவர்நிலத்தில் உப்பு விளைவித்தனர். இப்பரதவர்கள் மீன்வேட்டையாடுவதாலும், உப்பு விளைவிப்பதாலும் வரும் பொருளைக் கொண்டே வாழ்க்கை நடத்தினர். 'தெய்வம் உணாவே' என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு உரைகூறுகையில் நெய்தற்கு உணா-மீன் விலையும், உப்பு விலையும் என்று நச்சினார்க்கினியரும், நெய்தற்கு உணவு-உப்பு விலையும், மீன் விலையும் என்று இளம்பூரணரும் குறிப்பிட்டுள்ளமையால் அறியலாம்.

---

[*] ஆறலைகள்வர் பற்றிய பிறசெய்திகளைச் 'சங்க இலக்கியத்தில் நிலம்' என்ற இயலில் காண்க.

## மீன் பிடித்தல்

பரதவர் தூண்டிலில் சிறிய மீன்களை இரையாகக் குத்திக் கடலிலும், கழியிலும் எறிந்து மீன்பிடிப்பர். கட்டுமரங்களிலும், மரக்கலங்களிலும் சென்று ஆழ்கடலில் மீன்பிடிப்பர். கடலில் சென்று மீன்பிடிக்கத் **திமில், அம்பி, தோணி** என்ற மூன்றும் பயன்படுத்தப்பட்டமையைச் சங்க இலக்கியங்கள் மூலம் அறியலாம். சங்க இலக்கியப் பாடல்களில் மீன்வேட்டம் குறித்து மிகுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது திமிலில் வலைகளைக் கொண்டு சென்று பரதவர் கடலில் மீன்பிடிக்கும் செய்தி பெருமளவு காணப்படுகிறது. திமில் என்ற சொல் கொடுந்திமில் (அகம். 70:1) நெடுந்திமில் (அகம். 60:3); திண்திமில் (அகம். 240:5) எனப்பல அடைமொழிகளால் குறிப்பிடப்பட்டுள்ளது. திமில் என்றழைக்கப்பட்ட மீன் படகு உள்ளிடம் அகன்று இருமுனைகளும் குறுகி வளைந்து காணப்படும். அதனால் கொடுந்திமில் என்றும், பெரிய வலைகள், பெரிய மீன்கள் ஆகியவற்றைத் தாங்கும் இடமும், திண்மையும் பெற்றிருந்தமையால் நெடுந்திமில், திண்திமில் என்றும் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

அம்பி, தோணி எனப்பட்ட படகுகளும் மீன்பிடிக்கப் பயன் படுத்தப்பட்டன என்பது பின்வரும் அடிகளால் விளங்கும்.

**வாள்வாய்ச் சுறவின் பனித்துறை நீந்தி**
**நாள்வேட்டு எழுந்த நயனில் பரதவர்**
**வைகுகடல் அம்பியின் தோன்றும்** (அகம். 187:21-23)

**கடல்பாடவிந்து தோணி நீங்கி** (அகம்.50:1)

மீன்பிடிப்பதற்கு மட்டுமன்றி நீர்நிலைகளின் இருகரைகளிலும் மக்களை மாறி மாறிக் கொண்டுபோகும் பணிக்கும அம்பியும், தோணியும் பயன்படுத்தப்பட்டன என்பதை,

**உறவரும் சிறுவரும் உழைமாறு உய்க்கும்**
**அறத்துறை அம்பியின் மான** (புறம். 381:23-24)

**தோணியான் கரைசேர்க்குந்து** (புறம். 343·5)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

தமிழ்ப் பேரகராதி திமில் என்ற சொல்லுக்குக் கட்டுமரம் என்றும், 'Catamaran' மீன்படகு, மரக்கலம் என்றும் பொருள் கூறுகிறது.[1]

## கடலில் மீன் வேட்டம்

பரதவர்கள் புலர்காலையில் எழுந்து, காலத்துக்கும், கடலுக்கும் ஏற்ற வகையில் வலைகளை நிரப்பிக்கொண்டு வேட்டைமேற் செல்வர். வலைகளைப் படகுகளில் நிரப்பிக்கொண்டு, இடியெனப் பேரலைகள் முழங்கி மோதும் கடலில் அப்படகுகளைச் செலுத்துவர். மீனவர்கள் படகுகளின் இருபக்கங்களிலும் இருந்து கொண்டு கரையினின்றும் கடலுக்குள் படகை வலிவுடன் தள்ளிச் செலுத்துவர்.[2]

வன்றொழில் புரியும் வரிவலைப் பரதவ இளைஞர்கள் இறால் மீனொடு வேறு பல மீன்களையும் பிடித்துக் குவிக்கும் வேட்கை மீதூர, வேட்டைக்கு விரைவர். தங்கள் படகில் பாய்ந்தேறி, அலைகடல் நடுவே சென்று வாளரம் போன்ற வன்சுறாக்களோடு, மற்ற பெருமீன்களையும் பிடித்துப் படகில் நிறைப்பர். பெருமீன்களைத் துண்டங்களாகக் கூறுபடுத்தித் தோணிகளில் குவித்துக் கரையேறித் தங்கள் கழிசூழ் பாக்கம் சேர்வர்.

வரிவலைப் பரதவர் கருவினைச் சிறாஅர்
... ... ... ...
திமின்மேற் கொண்டு திரைச்சுர நீந்தி
வாள்வாய்ச் சுறவொடு வயமீன் கெண்டி
நிணம்பெய் தோணியர் இகுமணல் இழிதரும்
பெருங்கழிப் பாக்கம் (நற். 11:13-9

## எறியுளி

பரதவர்கள் கொல்லவல்ல கொடுஞ்சுறா மீன்களை வேட்டையாடிப் பிடிப்பதில் அஞ்சா நெஞ்சமும் ஆர்வமுங் கொண்டவர்கள்.

---

1. Tamil Lexicon. Vol. III. Part-I. P. 1880.
2 நற். 74:2

கூரிய முனையுள்ள **எறியுளி** என்னும் கருவியைச் சுறாமீன்கள் மேல் குறிவைத்து வீசி எறிந்து அவற்றைப் பிடித்துப் படகில் திணித்துப் பெருமிதங் கொள்வர்.

**கொல்வினைப் பொலிந்த கூர்வாய் எறியுளி**
**முகம்பட மடுத்த முளிவெதிர் நோன்காழ்**
**தாங்கரு நீர்ச்சுரத்து எறிந்து வாங்குவிசைக்**
**கொடுந்திமிற் பரதவர் கோட்டுமீன் எறிய**
**(குறுந்.304:1-4**

## இரவில் மீன் வேட்டம்

இப்பரதவர்கள் நள்ளிரவிலும் மீன்வேட்டைக்குச் செல்வதில் பெரிதும் ஆர்வமுள்ளவர்கள். தீப்பந்தங்களைக் கொளுத்திக் கொண்டு தங்கள் திண்ணிய திமிலில் செல்வர். விளக்கொளியைக் காணும் சிறுமீன்கள் திரண்டெழும்; அவற்றைத் தின்ன வெஞ் சுறாக்கள் விரைந்து வரும். அவற்றைப் பரதவர் பிடிப்பர். நற்றிணைப் பாடலொன்று கடுங்குளிர் வாட்டும் காரிரவில் தீப்பந்தங்களைக் கொளுத்திக் கொண்டு மீனவர்கள் தம் திண்ணிய திமிலில் ஏறித் தண்கடலில் சென்று தருக்கித் திரியும் கொடுஞ் சுறாக்களைப் பிடித்தனர் என்று குறிப்பிடுகிறது.

**கணைக்கால் மாமலர் கரப்ப மல்குகழித்**
**துணைச்சுறா வழங்கலும் வழங்கும்; ஆயிடை**
**எல்இமிழ் பனிக்கடல் மல்குசுடர்க் கொளீஇ**
**எமரும் வேட்டப் புக்கனர் (நற். 67:6-9)**

அவ்வாறு இரவில் மீன்வேட்டத்திற்குச் செல்கையில் சில சுறாமீன்கள் கட்டுக்கடங்காமல் திரிவதுண்டு; கனன்று எரியும் தீப்பந்த ஒளியால அவற்றின போக்கினைக் கூர்ந்து நோக்கித் தப்பாமல் குறிவைத்து, உறுதியாய்த் திரித்த கயிற்றில் பிணிக்கப் பட்ட எறியுளி கொண்டு தாக்கிப் பிடித்தனர். பின்னர்ப் பெரு மீன்களை நிரம்பப் பிடித்த மகிழ்ச்சியோடு கரை திரும்பினர்.

**..................நோன்புரிக்**
**கயிறுகடை யாத்த கடுநடை எறியுளித்**

**திண்திமில் பரதவர் எண்சுடர்க் கொளீஇ**
**நடுநாள் வேட்டம் போகி வைகறைக்**
**கடல்மீன் தந்து கானற் குவைஇ** (நற். 388:2-6)

சில நேரங்களில் மீன்பிடிக்கச் செல்பவர் ஏமாற்றமுற்று கரைக்குத் திரும்புதலும் உண்டு. மீனவர் கடலுக்குச் சென்று உறுதி வாய்ந்த முறுக்கிய கயிற்றால் முடிக்கப்பட்ட வலையினைக் கடலில் வீசி விரித்தனர். ஆனால் சிறிது நேரத்தில் சினச் சுறா வலையைச் சிதைத்துவிட பிடிபட்ட மீன்கள் தப்பிவிட்டன. வலையும் கிழிந்து விடுகிறது. ஏமாற்றமுற்ற மீனவர் கவலை யோடு கரைக்குத் திரும்பினர். கிழிந்த வலையினைத் தம்மனை முற்றத்திலிருந்த தாழை மரத்தில் விரித்துப் போட்டுத் தொழி லுக்குப் போகாமல் வாளாயிருந்தனர்.

**திண் திமில்,**
**எல்லுத் தொழில் மடுத்த வல்வினைப் பரதவர்**
**கூர்வளிக் கடுவிசை மண்டலிற் பாய்ந்தவுடன்**
**கோட்சுறாக் கிழித்த கொடுமுடி நெடுவலை**
**தண்கடல் அசைவளி எறிதொறும் வினைவிட்டு**
**முன்றில் தாழை தூங்கும்** (அகம். 340:18-23)

முதல்நாள் சுறாமீனானது வலையை அறுத்து மீன்வேட்டம் நடைபெறாது செய்துவிடினும் பரதவர் மறுநாள் மிக்க வலியுடனே சுறாமீனைத் தம்வேட்டையில் அகப்படப் பிடித்துக்கொண்டு வருவர். இதனின்றும் பரதவர் தம்தொழிலில் விடாமுயற்சியை உடையவர் என்பது புலப்படும்.

**கொடுமுடி அவ்வலைப் பரியப் போகிய**
**கோட்சுறாக் குறித்த முன்பொடு**
**வேட்டம் வாயாது எமர்வா ரலரே** (நற். 215:10-12)

பரதவர் ஏராளமான மீன்களைப் பிடிப்பர். அவற்றைத் தம் தோணியில் நிரப்பிக்கொண்டு வந்து கரையை அடைவர். தம்பாக்கத்தே அம்மீனைக் கொட்டிக் குவித்துப் பங்கிட்டுக் கொள்வர். இதனை அகநானூறு,

கொடுந்திமில் பரதவர் வேட்டம் வாய்த்தென
இரும்புலாக் கமழும் சிறுகுடிப் பாக்கத்துக்
குறுங்கண் அவ்வலைப் பயம்பா ராட்டி
கொழுங்கண் அயிலை பகுக்கும் துறை (70: 1-4)

என்றது.

மற்றொரு அகநானூற்றுப் பாடல், 'இளையவரும், முதியவருமாகிய பரதவ மக்கள் மீனவேட்டத்திற்குச் சென்று கடலிலுள்ள இனமாகிய மீன்களை எல்லாம் கடல் வறிதாம்படி ஒருங்கே முகர்ந்து வரும்படி வலைவீசிப் பிடிப்பர். பின்னர் அவ்வாறு பிடித்த மீன்களை, நெற்களத்தில் அறுவடை செய்த உழவர்களைப் போன்று இரந்தோர்களின் வறுங்கலன்கள் நிறைந்து வழியுமாறு வழங்குவர். எஞ்சியவற்றைத் தங்களுக்குள் பங்கீடு செய்து, விலை கூறி விற்றுக் கரையுயர்ந்த மணற்பரப்பிலே உறங்குவர்.

நெடுங்கயிறு வலந்த குறுங்கண் அவ்வலை
கடல்பாடு அழிய இனமீன் முகந்து
துணைபுணர் உவகையர் பரத மாக்கள்
இளையரும் முதியரும் கிளையுடன் துவன்றி
... ... ... ...
அயிர்திணி அடைகரை ஒலிப்ப வாங்கி,
பெருங்களம் தொகுத்த உழவர் போல
இரந்தோர் வறுங்கலம் மல்க வீசி,
பாடுபல அமைத்துக் கொள்ளை சாற்றி
கோடுயர் திணிமணல் துஞ்சும் (அகம். 30:1-11)

என்று அகநானூற்றுப் பாடல் பரதவரின் பண்பையும், தொழிற் சிறப்பையும் எடுத்தியம்புகிறது.

## கழிகளில் மீன் பிடித்தல்

பரதவர்கள் கடலில் மீன் பிடிப்பதோடு கழிகளிலும் மீன் பிடிப்பர். கழிகளிலும் சுறாமீன்கள் திரிவதுண்டு. வேறுசில மீன்களும் கழியில் நிறைய வாழும்.

.......... மல்கு கழித்
துணைச்சுறா வழங்கலும் வழங்கும் (நற். 67:6-7)

கடலில் மீன் பிடிக்கும் வலையைவிடக் கழிகளில் மீன்பிடிக்கும் வலைகள் மாறுபட்டவை. கழியில் பயன்படும் வலைகளில் நேரிய சிறு கோல்களைப் பொருத்திப் பிணைப்பர். அக்கோல் வலை மடிந்துவிடாமல் விரித்துப் பிடித்திருக்கும் விரிந்திருக்கும் வலையில் மீன்களும் இறாக்களும் சென்று சிக்கிக்கொள்ளும்.

**இருங்கழி முகந்த செங்கோல் அவ்வலை**
**முடங்குபுற இறவோடு இனமீன் செறிக்கும்.**
**(அகம். 220:16-17)**

## குலத்தொழிலில் பழகுதல்

பரதவ குடிமக்கள் தம்பிள்ளைகளைச் சிறுவயது முதற் கொண்டே தம் குலத்தொழிலில் பழக்குவர். தந்தையர் ஆழ் கடலில் சென்று மீன்களைப் பிடித்து வருவது காணும் சிறுவர்கள் தந்தையுடன் கடல் வேட்டம் செல்ல ஆர்வம் கொள்வர். தந்தையுடன் கடலில் செல்ல விரும்பும் சிறுவன் ஒருவனின் பேரார்வத்தை நற்றிணைப் பாடலொன்று பின்வருமாறு அழகுறச் சித்திரிக்கின்றது. 'கொடிய சுறாமீனை வலையிட்டுப் பிடிக்கின்ற முயற்சியையுடைய தந்தை பெரிய கடலில் வேட்டைக்குச் செல்லப் புறப்படுகின்றான். அவன் மகனும் உடன்செல்ல விரும்புகின்றான். ஆனால் தந்தை சிறுவனை உடனழைத்துச் செல்லவில்லை. அதனால் ஏமாற்றமடைந்த அச்சிறுவனது அழுகை மாற மனைக்குப் பக்கத்திலிருந்த பனை மரத்தின் நுங்கு ஒன்று கிடைக்கின்றது. (நற். 392:1-4). கடலில் மீன்களால் நிரம்பிய வலைகளைப் பெரியவர்களுடன் சேர்ந்து இளையவரும் பற்றி இழுப்பர். (அகம். 30:4); என்பன போன்ற மேற்கோள்களினின்றும் கொடுஞ் சுறாவைப் பிடிக்கவல்ல தந்தையர் தம் மைந்தரையும் குலத் தொழிலில் பழக்குவர் என்பதை உணரலாம்.

பரதவர் முழுமதி நாட்களில் மீன் வேட்டைக்குச் செல்வதில்லை. கடல் கொந்தளிப்பால் மீன்பாடும் வாய்க்காது. எனவே அந்நாட்களில் கருவுற்ற சுறாமீனின் கூரிய வாள் அரம் போன்ற கொம்பினைக் கடற்கரையிலே நட்டு, அதன்கண் தம் மனைத் தெய்வமாகிய வருணனை ஏற்றுவித்து, மலர் அணிவித்து, பனையின் கள்ளைப் படைத்து, தம் மனைவி, மக்களுடன் வணங்கி

வழிபட்டு வேண்டிய உணவு சமைத்து மனம்போல ஆடிப்பாடி மகிழ்வர்.

**திங்களும் திகழ்வான் ஏர்தரும்; இமிழ்நீர்ப்**
**பொங்குதிரைப் புணரியும் பாடுஓ வாதே**
**ஒலிசிறந்து ஓதமும் பெயரும் (நற். 335:1-3)**

**சினைச்சுறவின் கோடு நட்டு**
**மனைச்சேர்த்திய வல்அணங்கினான்**
**மடல்தாழை மலர் மலைந்தும்**
**பிணர்ப்பெண்ணைப் பிழிமகிழ்ந்தும்**
**புன்தலை இரும்பரதவர்**
**பைந்தழை மாமகளிரொடு**
**பாய்இரும் பனிக்கடல் வேட்டம் செல்லாது**
**உவவுமடிந்து உண்டுஆடியும் (பட்.84-93)**

என்ற சான்றுகளால் அறியலாம்.

## *உப்பு விளைவித்தலும் விற்றலும்*

நெய்தல் நிலமக்கள் கடற்கரையிலும், கழிக்கரையிலும் உள்ள உவர்நிலத்தில் சிறுசிறு பாத்திகள் அமைத்து அவற்றில் கடல்நீரினையும், உப்பங்கழி நீரையும் பாய்ச்சி உப்பு விளைவிப்பர். சூரியனது வெம்மையால் நீர்வற்றி உப்புப் பூத்துக் காணப்படும். மழை இல்லையெனக் கவலையுறாதவர் பரதவ மக்கள். 'மழை பெய்தாலும் பொய்த்தாலும் ஆக்கமும் ஊக்கமும் குன்றாதது எமது பழங்குடி மூதூர். பெய்தால் நெற்பயிர் செழித்து வளர்ந்து புதுவருவாயுடன் பொலியும்; மழை பொய்த்தால் கழிக் கரைகளெல்லாம் காய்ந்து அவ்வுவர் நிலத்தே வெள்ளுப்பு விளைந்து குவியும்'.

**பெயினே விடுமான் உழையினம் வெறுப்பத் தோன்றி**
**இருங்கதிர் நெல்லின் யாணர் அஃதே**
**வறப்பின், மாநீர் முண்டகத் தாஅய்ச் சேறுபுலர்ந்து**
**இருங்கழிச் செறுவின் வெள்ளுப்பு விளையும்**
**(நற். 311:1-4)**

மேலும் சில நற்றிணைப் பாடல்கள், ஒழுங்காகப் பகுக்கப்பட்ட சிறுசிறு பாத்திகளிலே கடல்நீரைப் பாய்ச்சி உப்பு விளைவித்து, மழையினை நாடாத வளமிகு எம்சிறுகுடி என்றும்; ஏர்பூட்டி உழாமல் இனிது விளையும் உப்பினை உப்பளவர் குன்றெனக் குவித்து, உப்பு வணிகரது வருகையை எதிர்நோக்கியிருப்பர் என்றும் குறிப்பிடுகின்றன.

**நேர்கட் சிறுதடி‡ நீரின் மாற்றி**
**வானம் வேண்டா உழவின்எம்**
**கானலஞ் சிறுகுடி (நற். 254:10-12)**

**உவர்விளை உப்பின் உழாஅ உழவர்**
**ஒழுகை உமணர் வருபதம் நோக்கிக்**
**கானல் இட்ட காவற் குப்பை (நற். 331:1-3)**

## விற்றல்

இங்ஙனம் நெய்தல் நிலமக்கள் உப்பு விளைவித்து அதனைப் பலவிடத்தும் சென்று விற்பர். உப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர் உமணர் என்ற சொல்லால் சங்க இலக்கியங்களில் குறிக்கப் பட்டுள்ளனர். சங்க காலத்தில் நெய்தல் நிலமக்கள் மீன்பிடித்தல், விற்றல் ஆகிய தொழில்களுடன் உப்பு விளைவித்தலையும், உப்பு விற்றலையும்கூடத் தம்தொழில்களாகக் கொண்டிருந்தனர்.

உமணர் தாம் விளைவித்த உப்பினைப் பக்கத்திலுள்ள ஊர்களுக்கும், வெளியூர்களுக்கும் சென்று விற்பனை செய்வர். வெங்கதிர் வெயிலால் விளைந்த கல்லுப்பினை ஏற்றிக்கொண்டு நீண்ட வழியிலே செலுத்தும் வண்டிகள் வரிசையாகச் செறிந்து செல்லுமாறு உப்பு வணிகர் உரப்பி ஓட்டுவர்.

**கடுவெயிற் கொதித்த கல்விளை உப்பு**
**நெடுநெறி ஒழுகை நிரைசெலப் பார்ப்போர்**
**(நற். 354:8-9)**

‡ சிறுதடி—உப்பு

இவ்வாறு உமணர் வெள்ளிய நல்லுப்பைச் சகடத்தில் ஏற்றி எருதுகளைப் பூட்டி நெடுமணல் வழியைக் கடந்து செல்லுகையில் ஆழ்மணலில் சக்கரங்கள் அடிக்கடி புதைந்துவிடும். புதைந்த சக்கரத்தை மீண்டும் தூக்கிப் பெயர்த்து முன்னோக்கிச் செலுத்துங்கால் பேரொலி எழுப்புவர்.

**........ ........ உமணர்**
**வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றிக்**
**கணநிரை கிளர்க்கும் நெடுநெறிச் சகடம்**
**மணல்மடுத்து உரறும் ஓசைக் கழனிக்**
**கருங்கால் வெண்குருகு வெரூஉம்** (நற். 4:7-11)

உப்புவணிகர் வெண்கல் உப்பினை விலைகூறி விற்றுக் கொண்டே கதிரவனின் வெம்மையால் வெடித்த குன்றுகளையும் கடந்து செல்வர். அப்பொழுது வண்டியில் பூட்டிய எருதுகளை விரைந்தோடத் தூண்டும் தாற்றுக் கோலினை ஏந்தி இருப்பர்.

**பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்**
**இருங்கழிச் செறுவின் உழாஅது செய்த**
**வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி**
**என்றூழ் விடர குன்றம் போகும்**
**கதழ்கோல் உமணர்** (அகம். 140:1-5)

## முத்துக்குளித்தல்

நெய்தல் நிலப்பகுதியில் வாழ்ந்த மக்கள் மீன்பிடித்தலையே தலையாய தொழிலாய்க் கொண்டிருந்தனரெனினும், முத்துச் சிப்பிகள் நிறைந்த கடற்பகுதிகளையொட்டி வாழ்ந்தவர்கள் முத்துக் குளிக்கும் தொழிலிலும் சங்கெடுக்கும் தொழிலிலும் ஈடுபட்டிருந்தனர்.

சங்க இலக்கியப் பாடல்களினின்றும் கொற்கை என்னும் துறைமுகம் முத்துக்குப் பெயர்போன துறையாய் விளங்கியது எனலாம். கடலில் முத்துக்கள் மிகுதியாய் இருக்கும் பகுதிகளில் அலைகள் அவற்றை அள்ளிக் கரையில் வீசும். கடற்கரை வெண் மணற் பரப்பில் அம்முத்துக்கள் ஒளிசிந்தும். இதனை,

**அலங்கு இதழ் நெய்தல் கொற்கை முன்துறை**
**இலங்கு முத்து (ஐங். 185:1-2)**

**முழங்குகடல்**
**திரைதரு முத்தம் வெண்மணல் இமைக்கும் (ஐங். 105:1-2)**

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

பெருங்கடலினின்றும் உருண்டு திகழும் முத்துக்களைத் திரட்டிக் கொண்டு வந்து பரதவர் பங்கிட்டுக் கொள்வர். இதனை அகநானூறு

**விரிதிரைக்**
**கண்திரள் முத்தங் கொண்டு ஞாங்கர்த்**
**தேன்இமிர் அகன்கரைப் பகுக்கும்**
**கானலம் பெருந்துறைப் பரதவன் (அகம். 280:11-14)**

என்கிறது.

## *சங்கெடுத்தல்*

முத்துக்களைப் போலவே சங்குகளும், வலம்புரிகளும்[3] கடலில் சில பகுதிகளில் மிகுந்திருந்தன. அவை கரையிலும் வெளிப்பட்டு வருதலுமுண்டு. சான்று: 'வலம்புரி உழுத வார்மணல்' ஐங். 193:1. வலம்புரிச் சங்குகள் மேய்ந்தமையால் அடிச்சுவடு பட்ட மணற்பரப்பு உழுததுபோல் காணும் என்பது

**துணைபுணர் எழுதரும் தூநிற வலம்புரி**
**இணைதிரள் மருப்பாக எறிவளி பாகனா**
**அயில்திணி நெடுங்கதவு அமைத்து அடைத்து அணிகொண்ட**
**எயில்இடு களிறேபோல் இடுமணல் நெடுங்கோட்டைப்**
**பயில்திரை நடுநன்னாள் பாய்ந்து உறூஉம் (135:1-5)**

என்ற கலித்தொகை பாடலால் அறியலாம்.

---

3. இலங்குஇரும் பரப்பின் எறிசுறா நீக்கி
வலம்புரி மூழ்கிய வான்திமில் பரதவர் (அகம். 350:10-11)

ஆழ்கடலில் மூழ்கிச் சங்கெடுக்கும் பொழுது தமக்கு ஊறு நேரிடா வண்ணம் கடலில் திரியும் கொல்லுந் தன்மையுள்ள சுறாக் களை விலக்கிச் செல்வர். பரதவர் அச்சந்தரும் கொடுஞ்சுறாக்கள் தம்மை அணுகவொட்டாமல் தடுத்துவிடுவர். இக்கருத்துக் குறித்து வி. கனகசபை என்பார் 'ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்' என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். அவர்கள் முத்தும் சங்கும் எடுக்கக் கடலில் மூழ்கினர். அத்துடன் மூழ்குமிடத்தில் சுறாக்கள் வராமல் தடுப்பதற்குரிய மந்திரமும் அவர்கள் அறிந்திருந்தனர்.'[4] இச்செய்தியை மார்க்கபோலோ என்ற வெனிஸ் நகர வாணிகப் பயணியும் பின்வருமாறு கூறியுள் ளார். ''இக்குடாவில் (வங்காளக்குடா) அளவிற் பெரிய மீன்கள் நிறைந்திருப்பதால், அவை முத்துக் குளிப்பவர்களை அடியோடு கொன்றுவிடும். இக்கேட்டினைத் தவிர்க்கும் பொருட்டு அவ்வணி கர்கள் தங்களுடன் மந்திரத்தால் வசியம் செய்யும் பலரை அழைத்துச் செல்வர். பார்ப்பனக் குடியைச் சேர்ந்த இரு மந்திர வாதிகள், அம்மீன்களின்மீது தாங்கள் கற்ற வித்தையை ஏவி, அதனால் மீன்களைத் தம்வயப்படுத்தி முத்துக் குளிப்பவருக்கு யாதொரு தீங்கும் நேரிடாதவாறு தடுத்துப் பாதுகாக்கின்றனர்.[5]

கடற்செல்வங்களாகிய சங்குகளையும் முத்துக்களையும் பரதவர்தம் பாக்கத்தே விலை கூறி விற்பர்.

**வளைபடு முத்தம் பரதவர் பகரும்** (ஐங். 195:5)

## *சங்குவளை செய்தல்*

கடலினின்றும் எடுத்த சங்குகளைக் கொண்டு அழகிய வளையல்களைச் செய்வர். சான்று : 'கடற்கோடு அறுத்த அரம்போழ் அவ்வளை' ஐங். 194:1

---

4. வி. கனகசபை, 1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம். தமிழாக்கம். கா. அப்பாதுரை, கழக வெளியீடு. எண். 839, 1962. ப.86.
5. வி. எஸ். வி. இராகவன், மார்க்கோபோலோ, லோடஸ் பப்ளிகேஷன், சென்னை.1, 1964. ப. 17.

**பவளம்**

கடலில் மூழ்கிச் சங்கும் முத்தும் திரட்டியது போலவே பவளமும் பரதவரால் எடுக்கப்பட்டது என்ற செய்தி பதிற்றுப் பத்தில்

**தாழ் அடும்பு மலைந்த புணரிவளை ஞரல
இலங்குநீர் முத்தமொடு வார்துகிர் எடுக்கும்**

எனக்கூறப்பட்டுள்ளது.

# 3. கைவினைத் தொழில்கள்

## ஓலைத் தொழில்

பண்டைத் தமிழர் பனை, தென்னைமர ஓலைகளைக் கொண்டு அன்றாட தேவைக்குரிய பலவிதமான பொருட்களைச் செய்ய அறிந்திருந்தனர். ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் பொருட்களைக் கொண்டு செல்லப் பயன்படும் கூடை வகைகள், படுத்துக்கொள்ளப் பயன்படும் பாய்கள், வெயில், மழை இவற்றி னின்றும் பாதுகாப்புத் தரும் வகையில் பனங்குடைகள் போன்றவைச் செய்ததற்கான சான்றுகள் சங்கப் பாடல்களில் காணப்படுகின்றன.

### குடை

மழைபெய்யுமிடத்து இடைநின்று நம்மை நனையாமல் காக்கும் 'பனையோலைக் குடைபோல' என்ற பொருளில் புறநானூற்றுப் பாடல் (290.7) 'உறைப்புழி ஓலை போல' என்றது. குடைகள் பனையோலை அல்லது தென்னை ஓலை கொண்டு செய்யப்பட்டன. அகநானூற்றுப் பாடலொன்று,

'கோடுடைத் தலைக்குடை சூடிய வினைஞர்' (194:7) எனக் கூறுகிறது. இதைத் தலையில் அணியும் ஓலைத்தொப்பியாகவும் கருதலாம்.

## கூடை

ஓலைகளைப் பயன்படுத்தி அக்காலத்தில் பலவிதமான கூடைகள் செய்தனர். அவை **வட்டி, புட்டில், குடை** எனப்பட்டன. ஓலை கொண்டு செய்யப்பட்ட இக்கூடைகள் சாதாரணமானவை, விலைகுறைந்தவை என்றாலும் அவையும் கலைத்திறனோடு செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| **சான்று :** | வராஅல் சொரிந்த **வட்டி** | (ஐங். 48:2) |
| | விதைக்குறு **வட்டி** | (குறுந். 155:2) |
| | போழிற் புனைந்த **வரிப்புட்டில்** | (கலி. 117:8-9) |
| | சோறு பொதி வெண்குடை | (அகம். 121:12) |
| | அவல் வகுத்த பசுங்குடையால் | |
| | புதல் முல்லைப் பூப்பறிக்குந்து | (புறம். 352:4) |

பனையோலையால் உட்குடைவாகச் செய்யப்படுவது பற்றி அவல் வகுத்த பசுங்குடை எனப்பட்டது.

## உண்கலம்

'வெயில்வெரி நிறுத்த பயிலிதழ்ப் பசுங்குடை' —அகம்.37:10 வெயிலில் முதுகுப்புறம் வதங்குமாறு வைத்தலின் தாம் வேண்டிய வாறே வளையும் பனையோலையால் அமைத்த பசிய குடையாகிய உண்கலத்தில் சாறு பருகுகின்றனர்.

சங்கப் பாடல்களின் வருணனைகளிலிருந்து கூடை என்பதற்குக் **கொட்டம்** என்ற பெயரும் உண்டு என்பதை அறியலாம். சான்றாக, சிறுபாணாற்றுப் படையில் முசுண்டை மலர் கொத்தாக மலர்ந்திருந்த தோற்றத்திற்கு உவமையாக 'முசுண்டை **கொட்டம்** (166) கொள்ளவும்' எனக் கூறப்பட்டுள்ளது. **கொட்டம்** என்பது பனை, ஈந்து முதலியவற்றின் ஓலையால் பின்னப்பட்ட சிறு பெட்டியைக் குறிக்கும்.

சங்க இலக்கியத்தில் **முறம்** என்றதற்கான சான்றுகள் காணப் படுகின்றன. முறத்தின் அமைப்பு யானைச்செவி போன்று இருந்தது.

முறஞ்செவி வாரணம் (புறம். 339:13; கலி. 42:2)

## ஓலைப்பாய்

சங்கப் பாடல்கள் செல்வர் மனைகளிலும், அரண்மனைகளிலும் பஞ்சணைகளும், மலர்மஞ்சங்களும் பயன்படுத்தப் பட்டதாகக் கூறினும் எளிய மக்கள் ஓலையால் பின்னப்பட்ட பாயைப் பயன்படுத்தியமையையும் குறிப்பிடுகின்றன. ஆயர்குலத்தவர் ஓலைப்பாயைப் பெரிதும் பயன்படுத்தினர். சங்கப் பாடல்களினின்றும் பண்டைத் தமிழகத்தில் கைம்மை நோன்பு மேற்கொள்ளும் மகளிர் ஓலைப்பாயும் இன்றிப் படுத்து உறங்கினர் எனவருமிடத்து பாய் குறிப்பிடப்பட்டுள்ளது.

> **பறிப்புற இடையன்** (அகம். 94:4; நற். 142:4)
> (புறம். 246:9; குறுந்: 222:1)

> **பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்**
> **உயவற் பெண்டிரேம் அல்லம்** (புறம்.246:9)

இடையர்கள் பயன்படுத்திய **பறி** என்று சொல்லப்பட்ட பாய் மழை, வெயில் இவற்றினின்றும பாதுகாப்புத் தரவும், படுத்துறங்கும் பாயாகவும் பயன்படுத்தப்பட்டது. மேற்காட்டப்பட்ட சான்றுகளினின்றும் எளியமக்களுக்குப் பெரிதும் பயன்படும் வகையில் ஓலைத்தொழில் நடைபெற்றிருத்தல் வேண்டும் என்பதை உணரலாம்.

## பொம்மை செய்தல்

குழந்தைகள், சிறுவர், சிறுமியர் விளையாடும் பொருட்களை நாம் பொம்மைகள் என்போம். கள்ளமில்லா உள்ளங்களில் மகிழ்ச்சியை அளிப்பவை இவ்விளையாட்டுப் பொருட்கள். வளரும் குழந்தைப் பருவத்தினர்க்கு உணவு உடை ஆகியவற்றோடு விளையாட்டுப் பொருட்களும் இன்றியமையாதவையாய் உள்ளன. இவர்களது வயதுக்குத் தக்கவாறு விளையாட்டுப் பொருட்கள் அமைவதைக் காணலாம். இக்காலத்தில் குழந்தைகளின் வயது, அறிவுத்திறனுக்கு ஏற்ற வகையில் பல்வேறு விதமான பொழுது போக்குக் கருவிகள் வழக்கிலிருக்கின்றன. பண்டைத் தமிழர் குழந்தைகள் விளையாடிய விளையாட்டுப் பொருட்கள் இவற்றிற்கு

முன்னோடிகளாய் அமைந்தவை. இப்பொம்மைகளும் குழந்தைகளின் விருப்பத்திற்கும், சமுதாயத்தில் அக்குழந்தைகளின் பெற்றோர்க்கு இருந்த தகுதிக்கும் ஏற்றவாறு வேறுபடுகின்றன. சிறுவர்களே அன்றி இளைஞர்களும் இளமகளிரும் பொழுது போக்கிற்காக விளையாடினர் என்பதற்கான குறிப்புகளும் சங்கப் பாடல்களில் காணப்படுகின்றன.

## கிலுகிலி

சிறு குழந்தைகளின் அழுகையைப் போக்க நாம் கிலுகிலிப் பையை ஆட்டி மகிழ்விப்போம். சங்க காலத்திலேயே இந்தக் **கிலுகிலி** வழக்கில் இருந்ததை அறியலாம. அக்காலத்தில் நெய்தல் நிலத்துக் கிடைத்த முத்துக்களை வாளின் வாய்போலும் வாயையுடைய கிளிஞ்சலின் உள்ளே இட்டுப்பொதிந்து ஆட்டுவர். அதுவே கிலுகிலி என ஓசை காரணமாய் அமைந்த பெயராயிற்று.

**சான்று : ................. நளிநீர் முத்தம்**
**வள்வாய் எருந்தின் வயிற்றகத் தடக்கி**
**கிளர்பூண் புதல்வரொடு கிலுகிலி ஆடும்**
**(சிறுபாண். 57:61)**

## மரப்பொம்மைகள் (வண்டி, தேர், முரசு, யானை)

சிறு குழந்தைகள் நடை பயில நடைவண்டிகள் செய்து கொடுப்பர். இதனை,

**கால்வழேர் கையின் இயக்கி நடைபயிற்றா (கலி. 81:8)**
**பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டும்**
**முக்காற் சிறுதேர் (பட்.24-25)**

என்ற பாடலடிகள் உணர்த்துவன. செல்வமிக்க வீடுகளின் அகன்ற முன்றிலில் இளஞ்சிறுவர்கள் குதிரை பூட்டாமல் கையால் உருட்டி வருகின்ற மூன்று சக்கரங்களையுடைய சிறிய தேர் என்பது பொருளாம். இதனையே,

**தச்சன் செய்த சிறுமா வையம்**
**ஊர்ந்தின் புறாஅ ராயினுங் கையின்**
**ஈர்ந்தின் புறூஉம் இளையோர் (குறுந். 61:1-3)**

நன்கிடைத் தேரினர் (பரி. 6:35)

போன்ற சான்றுகளாலும் அறியலாம்

குழந்தைகள் விளையாட யானைபொம்மை செய்து கொடுத்தனர் என்பது,

திகழொளி முத்தங் கரும்பாகத் தைஇப்
பவழம் புனைந்த பருதி சுமப்பக்
கவழ மறியாநின் கைபுனை வேழம்
புரிபுனை பூங்கயிற்றிற் பைபய வாங்கி (கலி. 80:4-9)
கடியரணம் பாயாநின் கைபுனை வேழம் (கலி. 86:7)

என்ற எடுத்துக்காட்டுகளினின்று யானை போன்ற பொம்மைகள் செய்வதற்கும் செல்வர்கள் பொன்னைப் பயன்படுத்தியமையை அறியலாம். அதை நிற்க வைக்கும் பலகை வயிரங்கள் பதிக்கப் பட்டவையாகவும், பவளத்தால் செய்யப்பட்டவையாகவும் கூறப் பட்டுள்ளன.

செல்வந்தர் வீட்டுக் குழந்தைகள் விளையாட முரசு போன்ற பொம்மை செய்வர். செந்நிறப் பட்டைகள தீட்டப் பெற்ற முரசின் மேல்பகுதி அழகுறத் தோன்ற அதில் பறவை வரையப் பட்டிருக்கும். அம்முரசை முதுசெல்வர் புதல்வர் தோளில் பிணித்துக்கொண்டு கோல்கொண்டு அடித்து மகிழ்வர்.

## பாவை

சிறு குழந்தைகள் ஆசையோடு மண்ணை அள்ளி உண்ப துண்டு. இக்குழந்தைகள் சிறிது வளர்ந்ததும் மண்ணில் சிறுவீடு கட்டி விளையாடுவர். அவர்கள் அறிந்த பொருட்களின் வடிவம் அமையுமாறு மண்ணில் பொம்மை செய்வர். இளம்பெண்கள் மணலில் பாவை அமைத்து விளையாடுவர். புறநானூற்றுப் பாடலொன்று மணற்பாவை பற்றிக் குறிப்பிடுகின்றது. செறிந்த மணலிடத்து வண்டற் பாவை ஒன்றை அமைத்து அதற்கு மலர் பறித்து மாலையாகத் தொடுத்து அணிவிக்கின்றனர்.

சான்றுகள் : ........ ..... திணிமணல்
செய்வுறு பாவைக்குக் கொய்பூத்தைஇ
(புறம். 243:1-2)

…… .. .. . . ..மடமங்கையர்
வரிமணற் புனைபாவை (புறம் 11:2-3)

நேரிழை மகளிர் வார்மணல் இழைத்த
வண்டற் பாவை (நற்.191:2-3)

இவ்வாறு செறிந்த மணலால் செய்த பாவைகளே அன்றி ஒரு வகையான புல்லாலும், உலோகத்தாலும் பாவை செய்யப்பட்டதற்கான குறிப்புகளும் காணப்படுகின்றன.

வல்லோன் தைஇய வரிவனப்பு உற்ற
அல்லிப் பாவை (புறம். 33:16-17)

விளையாடு ஆயமொடு ஓரை ஆடாது (நற். 68:1)

ஓரை என்பது பஞ்சாய்ப் பாறையைக் குறிக்கும்.

## கழங்கு

கழங்கு என்பது மகளிர் ஆடும் விளையாட்டு. இதற்கான குறிப்புகள் சில சங்கப்பாடல்களில் காணப்படுகின்றன. கழற்காய் கொண்டு விளையாடுவர். எனினும் செல்வந்தர் வீட்டு மகளிர் பொன்னால் கழற்காய் செய்து விளையாடினர்.

சான்று : முத்த வார்மணற் பொற்கிழங் காடும் (பெரும்.335)

..................குறுந்தொடி மகளிர்
பொலஞ்செய் கழங்கிற் றெற்றி யாடும்(புறம்.36:3-4)

## பந்து

சங்ககாலத்து மகளிர் பந்தாடுவதில் ஆர்வமுள்ளவராகக் காணப்படுகின்றனர். தம் இல்லத்து மேனிலைமாடத்தில் இள மகளிர் நூலால் வரிதலையுடைய பந்தை அடித்து விளையாடினர்.

வான்றோய் மாடத்து வரிப்பந் தசைஇ (பெரும்.333)

மேற்கூறப்பட்ட சில எடுத்துக்காட்டுகளினின்றும் இளஞ் சிறார், சிறுமியர் விளையாடுவதற்கு அவரவர் நிலைக்கு ஏற்ற

வகையில் விளையாட்டுப் பொருட்கள் பொம்மைகள் செய்யப் பட்டமையை அறியலாம். மேலும், 'வினையமை பாவையின் இயலி', எனவரும் நற்றிணைப் • பாடலடிக்கு, பின்னத்தூர் திரு. நாராயணசாமி ஐயர் இயந்திரமமைந்த கொல்லிப் பாவை போல இயங்கி என உரை எழுதியுள்ளார். இதனின்றும் தற் காலத்துள்ளது போலவே சங்ககாலத்தும் பொறியமைத்துத் தானாகச் செயல்படும் பொம்மைகளும் இருந்திருக்கலாம் என எண்ண இடமளிக்கின்றது.

## சாயப்பாக்கு தயாரித்தல்

உடலுக்கு அழகைக் கொடுக்கும் கருங்காலியைச் சீவிக் காய்ச்சி அதனைப் பசிய பாக்குடன் கலந்து சாயப்பாக்குத் தயா ரிக்கும் தொழில் நடைபெற்றது. சான்று : 'தகைசெய் தீஞ்சேற் றின்னீர்ப் பசுங்காய்' (மது.400) (தீஞ்சேறு—கருங்காலி சீவிக் காய்ச்சின இனிய களி).

## சுண்ணம் தயாரித்தல்

பலர்தொகுப இடித்த தாதுகு சுண்ணத்தார் (மது.399)

சுண்ணம் என்பது நவமணிகளும், பொன்னும, சந்தனமும், கருப்பூரமும், போன்றவற்றைப் புழுகிலும், பனிநீரிலும் நனைய வைத்து இடிக்கப்படுவதாகும். இங்ஙனம் இடிக்க வேண்டுதலின் பலர் சேர்ந்து இச்சுண்ணம் தயாரிப்பர். இதைக் குறிக்க 'பலர் தொகுப இடித்த' என்ற தொடராலும், இச்சுண்ணம் மிகவும் நுண்மையாக தாது போன்று இருந்தது என்பதை விளக்க 'தாதுகு சுண்ணம்' என்றும் கூறப்பட்டுள்ளது.

## கயிறு திரித்தல்

பழந்தமிழர் பொருட்களைப் பிணித்துக் கட்டுவதற்குக் கயிற் றினைப் பயன்படுத்த அறிந்திருந்தனர். சங்க இலக்கியப் பாடல் களில் பலவிடங்களில் கயிறு அல்லது தாம்பு பயன்படுத்தப்பட்டதற் கான சான்றுகள் காணப்படுகின்றன. கன்றுகளைத் தாம்பினால் கட்டி வைத்தனர். யானைகளைக் கயிற்றினால் பிணித்து

வைத்தனர். முல்லைநில மக்கள் தயிரைக் கடைவதற்குக் கயிற்றினைப் பயன்படுத்தினர்.

**சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்** (முல்லைப்.12)
**கயிறுபிணிக் கொண்ட ... பெருங்கையானை** (புறம்.3:10)
**மத்துக் கயிறாடா வைகற் பொழுது** (பதி. 71:16)

## உறி

முல்லைநில ஆயர் குலத்தவர் பால், தயிர், வெண்ணெய் நிரம்பிய மட்குடங்களை வைப்பதற்குக் கயிற்றினால் வலைபோல் பின்னி அதனை வீட்டுக் கூரையில் கட்டித் தொங்கவிடுவர். இது உறி என்ற பெயரால் வழங்கப்பட்டது.

**இமிழிசை மண்டை உறியொடு தூக்கி** (கலி.106:2)

அந்தணர் நீர்க் கரகங்களைக் கொண்டு செல்வதற்கு உறியைப் பயன்படுத்தினர்.

**உறித்தாழ்ந்த கரகமு முரைசான்ற முக்கோலு**
**நெறிபடச் சுவலசைஇ...... யந்தணீர்** (கலி. 9:2-4)

முல்லைநில இடையர்கள் தங்களின் புல்லினங்கட்கு மேயல் தேடி வேற்றுப்புலம் செல்லுந்தோறும் தங்கள் உடைமைகளைக் காவிலிட்டு சுமந்து செல்லல் வழக்கம். இதற்கு **உறிக்கா** என்பது பெயராயிற்று. காமரத்தின் இருதலையினும் தொங்கும் உறிகள் என்பது பொருள்.

அகநானூற்றுப் பாடல் ஒன்று(77) ஆவணங்கள் கொண்டு செல்லும் யானையைச் சுற்றி வலைபோலக் கயிற்றினால் பின்னப் பட்டிருக்கும் என்பதனைக்

**கயிறுபிணிக் குழிசி ஓலை கொண்மார்** (அகம். 77:7)

என்றதால் அறியலாம்.

குறுந்தொகைப் பாடலொன்று ஆரியன் **கயிற்றின்மேல** நின்றாடியதைக் குறிக்கின்றது.

**யார்கொல் அளியர் தாமே ஆரியர்**
**கயிறாடு பறையிற் கால்பொரக் கலங்கி** (குறுந். 7:3-4)

இதனின்றும் கயிற்றின்மேல் நின்றாடக் கூடிய அளவிற்குத் திண்மையும் உறுதியும் வாய்ந்த கயிறுதிரிப்பதில் வல்லவராய் இருந்திருத்தல்வேண்டும். இதுமட்டுமன்றிக் கடலில் மீன்களைப் பிடிப்பதற்கு வலைகளும், விலங்கு பறவைகளைப் பிடித்தற்கேற்ற வலைகளும்பின்னுவதற்கான கயிறுகளையும் திரித்தனர்.

**இரும்புலி கொண்மார் நிறுத்த வலை** (கலி. 65:24)
**வலையுறு மயில்** (கலி. 128:16)

கடலில் செலுத்தும் படகுகளைப் பிணிப்பதற்கு ஏற்ற உறுதி வாய்ந்த கயிறுகள் திரிக்கப்பட்டன.

இவ்வாறு கன்றுகளைக் கட்டி வைப்பது முதற்கொண்டு பல்வேறு நிலைகளில் மக்கள் வாழ்க்கையில் கயிறு பயன்பட்டது. அந்தந்த தேவைக்கு ஏற்ற வகையில் கயிற்றின் நீளமும், அகலமும், திண்மையும் வேறுபட்டிருத்தல் வேண்டும்.

# நூல் தொழில்

பண்டைக் காலத்தில் நூலால் பல பொருட்கள் செய்யப் பட்டன. அக்காலத்தில் அம்மன்னர்கள் பகைவரைப் பெறுதற் பொருட்டுத் தம்அரண்மனை முற்றத்தில் கொடியுயர்த்தி அதன் அருகே பந்தையும் பாவையையும் தொங்கவிட்டிருப்பர். இவ்வாறு கட்டிவைப்பதன் பொருள் பகைவரை யாம் பெண்டிர்போலக் கருதுகின்றோம். ஆண்மையாளர் இருந்தால் இவற்றை அறுமின் என்பதே ஆகும். இவ்வாறு தொங்கவிடப்படும் பந்தும் பாவையும் நூலால் செய்யப்பட்டவையாகும். இதனைத் திருமுருகாற்றுப் படை 'வரிப்புனை பந்தொடு பாவை தூங்க' (68) எனக் குறிப்பிடுகிறது.

## நூலேணி

மதுரைக்காஞ்சி எனும் நூலில் நள்ளிரவில் களவு செய்தற்கு இடம்பார்த்துத் திரிகின்ற கள்வர் பற்றிக் குறிப்பிடுகையில் அவர்கள் நூலேணியை இடையில் சுற்றியிருப்பர் என்ற குறிப்பு காணப்படுகிறது.

**மென்னூல் ஏணிப் பன்மாண் சுற்றினர் (மது.640)**

''மதிற்றலையிலே உள்ளே விழவெறிந்தால் கைபோல மதிலைப் பிடித்துக்கொள்ளும்படி இருப்பாற் சமைத்ததனைத் தலையிலே உடைய நூல்கயிற்றை உள்ளே விழ எறிந்து அதனைப் புறம்பே நின்று பிடித்துக்கொண்டு அம்மதிலை ஏறுவாராகலின் ஏணி என்றார்'' என விளக்கினார் நச்சினார்க்கினியர். இதனால் நூலால் மிகவும் திண்ணிய, உறுதியான, நீளமான ஏணி அமைக்க அறிந்திருந்தனர் என்பதை அறியலாம்.

## சிமிலி

சிமிலி என்பது **நூல்உறி**யைக் குறிக்கும். முக்காலமும் உணர வல்லாராய், கல்வியெல்லாம் நிறைந்த அறிவினை உடையோரும் ஆகிய சான்றோர் நெருங்கி நோன்பாற்றுவதற்கு வேண்டிய ஒடுங்கிய வாயையுடைய குண்டிகைகளைப் பல வடங்களையுடைய நூல் உறியிலே இட்டு வழங்குவர் எனவருமிடத்து

**ஆன்றடங் கறிஞர் செறிந்தனர் நோன்மார்**
**கல்பொளிந் தன்ன விட்டுவாய்க் கரண்டைப்**
**பல்புரிச் சிமிலி நாற்றி (மது. 481-83)**

என நூலுறி குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம். மேற்கூறிய வற்றினின்றும் நூலால் பல கைவினைப் பொருட்கள் அக்காலத்தில் செய்யப்பட்டதை உணரலாம்.

# 4. பிறதொழில்கள்[7]

## கள் தயாரிக்குந் தொழில்

பழந்தமிழ்ச் சமுதாயத்தில் மக்களிடையே கள் அருந்தும் பழக்கம் பரவலாக இருந்துள்ளது. கள் தயாரிக்கும் முறைகள், அதற்குரிய வேறு பெயர்கள், பாதுகாக்கும் முறை, கள் விற்பனை ஆகியவை பற்றிய பல செய்திகள் சங்க கால நூல்களாகிய பத்துப் பாட்டு, எட்டுத்தொகையில் காணப்படுகின்றன. இக்குறிப்புகளின் துணைகொண்டு அக்காலத்தில் 'கள்' எவ்வெவ் முறைகளில் தயாரிக்கப்பட்டது என்பதைக் காண்போம்.

## பெரும்பாணாற்றுப்படையில் இடம்பெற்றுள்ள கள் வடிக்கும் முறை:

குற்றாத கொழியலரிசியைக் களியாகத் துழாவிச் சமைத்து, அக்கூழினைப் பரந்த வாயையுடைய தட்டைக் கலத்திலே ஊற்றி ஆற்றுவர். பின் பாம்பு கிடக்கும் புற்றின்கண் புற்றாம் பழஞ் சோற்றைப் போன்று பொலிவு பெற்ற புறத்தையுடைய நல்ல நெல்லின் முளையை இடித்து அதில் சேரக் கலப்பர். கள்ளில் இனிமை மிகும் பொருட்டு இரண்டு இரவும், இரண்டு பகலும் உறுதியாகவுள்ள அகல்வாய்ச் சாடியில் பெய்து வைப்பர். அப்பொழுது கள்ளானது முதிர்ந்த நிலை பெறும். வெந்நீரின்கண் வேக வைத்து நெய்யரியால் வடிகட்டி விரலால் பதமாய் அலைத்துப்பிழிந்தெடுப்பர். அதுவே நறும்பிழி எனப்பட்டது.

**அவையா அரிசி அம்களித் துழவை**
**மலர்வாய்ப் பிழாவில் புலர ஆற்றிப்**

---

[7] மேற்கூறப்பட்ட பிரிவுகளுள் அடங்காதவை இப்பிரிவில் கூறப் பட்டன.

**பாம்புறை புற்றிற் குரும்பி யேய்க்கும்**
**பூம்புற நல்லடை யளைஇத் தேம்பட**
**எல்லையு மிரவு இருமுறை கழிப்பி**
**வல்வாய்ச் சாடியின் வழைச்சற விளைந்த**
**வெந்நீர் அரியல் விரலலை நறும்பிழி** (275-281)

கள்ளானது அரிக்கப் படுதலால் **அரியல்** என்றும்; விரலால் அலைத்துப் பிழியப்படுதலால் **பிழி** என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நெய்தல் நிலத்து பரதவ மகளிர் கள் காய்ச்சிய செய்தி ஒன்றும் சிறுபாணாற்றுப்படை எனும் நூலில் காணப்படுகிறது. நெய்தல் நில மகளாகிய நுளைமகள் கடல்நீர் கொணர்ந்து ஒதுக்கிய அகில்மர விறகாலே தீயினை எரித்துக் காய்ச்சி, அரித்து, கள் தயாரிப்பர். இதன் பழைய கட்டெளிவு பெரிதும் களிப்புடையதாக இருக்கும்.

**வீங்குதிரை கொணர்ந்த விரைமர விறகின்**
**கரும்புகைச் செந்தீ மாட்டி,**
**நுதிவேல் நோக்கின் நுளைமகள் அரித்த**
**பழம்படு தேறல் பரதவர் மடுப்ப** (சிறு. 155-59)

புறநானூற்றுப் பாடலொன்று 'தேட்கடுப் பன்ன நாட்படு தேறல்' (392) என்றது.

மூங்கிற் குழாயில் தேனை நிரப்பி முதிர்வித்துக் கள் சமைத்தலும் உண்டு. இம்முறை சங்கப் பாடலகள் பலவற்றுள் காணப்படுகிறது. 'புதுமையினையுடைய கரிய அழகிய மூங்கிற் குழாயிடத்தே பெய்து முதிர்வித்த இனிய கள்' என்ற பொருள்பட

**யாணர் கார்அணி தூம்பகம் பழுனியதீம்பிழி** (பதி.81:21)
**நீடமை விளைந்த தேக்கட் டேறல்** (முருகு.195)
**வேய்ப்பெயல் விளையுள் தேக்கள் தேறல்** (மலைபடு.171)
**திருந்தமை விளைந்த தேக்கள் தேறல்** (மலைபடு.522)

**நெடுங்கணாடமைப் பழுநிக் கடுந்திறற்**
**பாப்புக்கடுப் பன்ன தோப்பி** (அகம்.348:6-7)

**அம்பணை விளைந்த தேக்கட் டேறல்** (அகம். 368:14)

எனப் பலயிடங்களில் கூறப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. இக்கள் மிகவும் இனிய சுவையுடைமை கருதித் தேக்கட்டேறல் எனப்பட்டது. (தேம் = இனிமை; கட்டேறல் = கள்ளின் தெளிவு.)

## கள் வடித்தல்

நாரால் கள் வடிக்கப்பட்டது. நாரால் வடிக்கப்பட்டு பூக்களை யிட்டு கள் முதிர்விக்கப்படும. இக்கருத்தமைந்த பல குறிப்புக்கள் சங்கப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. சான்றுகள்:

**நாரரி நறவின் நாண்மகிழ் தூங்குந்து** (புறம். 400:14)
**நாரரி நனைமுதிர் சாடி நறவு** (புறம்.297:5)

**செம்பொறி அரக்கின் வட்டுநா வடிக்கும்**
**விளையாடு இன்நகை அழுங்காப் பால்மடுத்து**
(நற்.341:2-3)

மகளிர் முற்றத்தில் கள்ளடும் வழக்கம் முற்காலத்தில் இருந் தமையையும் அறியலாம். 'முட்டுப்பாடில்லாத பசிய கொடிகள் அசைகின்ற கள்ளுண்பார் பலரும் புகும் வாயிலிடத்து சிவந்த பூக்கள் தூவப்பட்ட புல் முதலியவற்றைச் செதுக்குதலுடைய முற்றத்தில் கள்ளைச் சமைக்கும் மகளிர் வட்டில் கழுவிய நீர் குழம்பி நிற்கின்றது' என்ற கருத்தமையப் பெரும்பாணாற்றுப்படையில்,

**பட்டின மருங்கி னசையின் முட்டில்**
**பைங்கொடி நுடங்கும் பலர்புகு வாயிற்**
**செம்பூத் தூய செதுக்குடை முன்றில்**
**கள்ளடு மகளிர் வள்ள நுடக்கிய**
**வார்ந்துகு சின்னீர்** **(336-40)**

கள் உண்பார் பலர் வந்தாலும் கள் இல்லை என்னாது வழங்கும் வாயில் என்பதைக் குறிக்க முட்டில் வாயில் என்றார். தெய்வத்தை வழிபடுவதற்காகச் செம்பூத் தூவுதல் உண்டு. இவ்வழக்க முண்மையை இவ்வாசிரியரே,

**மணற்குவைஇ மலர்சிதறிப்**
**பலர் புகுமனைப் பலிப்புதவின்**
**நறவு நொடைக் கொடியோடு (பட். 178-80)**

எனப்பாடியுள்ளதாலும் உணரலாம். இதனால் கள் விற்கும் இடத்தில் கொடிநடுதலும் உண்டு என்பதை அறியலாம். இதனை, 'கள்ளின் களிநவில் கொடி' (மது.372) எனவும், 'கட்கொடி நுடங்கும் ஆவணம்' (பதி. 98:10) எனவும்; நெடுங் கொடி நுடங்கு நறவுமலி மறுகில் (அகம். 126:10) எனவும்

**நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்**
**நறவுநொடை நல்லில் (அகம். 83:8)**

எனவும், பிற சங்கப் புலவர்கள் கூறியுள்ளதாலும் அறியலாம்.

கள் உண்பவர் இடையிடையே கறித்தற்பொருட்டு இஞ்சியும், இறைச்சி வறுவல் முதலியன உண்ணும் பழக்கமுண்டு.

**சான்று : உண்போன் தான் நறுங்கள்ளின் சிலஇட**
**(புறம்.347:1)**

தெளிந்த நறவு புலியின் கண்போலும் நிறமுடையது என்ப தைக் குறிப்பிடப் புலிக்கண் வெப்பர் என்றார்.

**....................புலிக்கண் வெப்பர்**
**ஒன்றிரு முறையிருந் துண்ட பின்னை (புறம்.269:3-4)**

இவ்வாறு செய்யப்படும் கள் களாப்பழ புளிப்புப்போலச் சுவை யுடையது. 'களவுப் புளியன்ன விளைகள்' (புறம்.328:8)

## *கள் விற்றல்*

பண்டமாற்றாகக் கள்ளை விற்கும் பழக்கம் அக்காலத்தில் இருந்துள்ளது.

**சான்று : மான்குறை யொடு மதுமறுகவும் (பொருந.216)**
**நாளா தந்து நறவு நொடை தொலைச்சி**
**(பெரும்.141)**

## கள்ளைப் பாதுகாத்தல்

கள் வைக்கப்பட்ட குடத்தின் கழுத்தில் இஞ்சியும், நறிய பூவும் கலந்து தொடுத்த மாலையைக் கட்டி, வெளிப்பக்கம் சந்தனத்தைப் பூசி, குடம் அசையுமிடத்து அதற்கேற்ற இடம் தந்து நிற்கும் இருக்கையில் வைத்துக் கள்ளை நிரப்பி, உண்பவர்களை வரிசையாக அமரச்செய்து வழங்குவர். கள்ளுண்பார் களிப்பினை மாற்ற இஞ்சியைத் தின்று பூவின் மணம் தேர்வராதலால்,

**இஞ்சிவீ விராய பைந்தார் சூட்டி** (பதி. 42:10)

என்றார்.

**சாந்துபுறத் தெறிந்த தசும்புதுளங் கிருக்கைத்**
**தீஞ்சேறு விளைந்த மணிநிற மட்டம்** (42. 11:12)

கள்ளின் தெளிவு நீலமணியின் நிறம் பெறுவதால் மணிநிற மட்டம் எனப்பட்டது.

பழந்தமிழ்ச் சமுதாயத்தில் **கள்** பலராலும் விரும்பி உண்ணப் பட்டதால் குடிசைத் தொழிலாகப் பலர் கள் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருத்தல் வேண்டும். இது கள், வெம்கள், நறவு, தேறல், பிழி, அரியல் போன்ற பெயர்களால் வழங்கப்பட்டது. இப் பெயர்கள் மணமிக்கது, தெளிந்தது, பிழியப்பட்டது, அரிக்கப் பட்டது என்ற தொழிலடிப்படையில் அமைந்த பெயர்களாவன.

## சலவைத் தொழில்

மக்கள் தூய்மையான ஆடையை உடுத்தனர். அவர்கள் அணிந்த ஆடைகள் **மாசில் தூஉடை** எனச் சிறப்பித்துச் சொல்லப் பட்டது. ஆடைகள் நன்றாக வெளுத்து உடுக்கப்பட்டன. ஆடை வெளுக்கும் தொழில் செய்வோர் **காழியர்** (அகம். 89) எனப் பட்டனர். இவர்கள் ஆடையை ஒருவகை மணலைப் பயன்படுத்தி வெளுத்துள்ளார்கள். அம்மண் உவர்மண் எனப்பட்டது.

**................. காழியர்**
**கவ்வைப் பரப்பின் வெவ்வுவர்ப் பொழிய**
**களரி பரந்த கல்நெடு மருங்கின்** (அகம்.89:7-9)

ஆடைவெளுக்கும் தொழிலில் பெண்கள் பெருமளவு உதவி செய்தனர். இப்பெண்கள் புலைத்தியர் எனப்பட்டனர். நாள் தோறும் களர் நிலத்தில் உண்டாகிய கிணற்றைத் தோண்டி ஆடைகளைத் துவைத்து வெளுக்க வைப்பர்.

**களர்படு கூவல் தோண்டி நாளும்**
**புலைத்தி கழீஇய தூவெள் அறுவை** (புறம்.311)

களர்நிலத்தில் ஊறும் உவர்நீர் ஆடையிலுள்ள அழுக்குகளைப் போக்கும் இயல்புடையது. ஆதலின் புலைத்தியர் அன்றாடம் உவர்நீர் கிடைக்கும் கிணற்றிலிருந்து நீரெடுத்து ஆடைகளைத் துவைத்தனர். மேலும் ஆடைகளை ஆராய்ந்து பார்த்து நன்றாகத் துவைத்தனர். இப்படிச் செய்வதில் சோர்வு கொள்ளாது தொடர்ந்து செய்து துணிகளை வெளுத்தனர். இவ்வாறு துவைத்த துணிகளுக்குச் சோற்றுக் கஞ்சியிட்டு உலர்த்தினர்.

**உடைஓர் பான்மையின் பெருங்கை தூவா**
**வறனில் புலைத்தி எல்லித் தோய்த்த**
**புகாப்புகர் கொண்ட புன்பூங் கலிங்கம்** (நற். 90:2-4)

**நலந்தகைப் புலத்தி பசைதோய்ந் தெடுத்துத்**
**தலைப்புடைப் போக்கித் தண்கயத் திட்ட**
**நீரிற் பிரியாப் பருஉத்திரி கடுக்கும்** (குறுந். 330:1-3)

இவற்றை நோக்குங்கால் பழந்தமிழர் ஆடைகளை வெளுக்குந் தொழிலை நன்கு அறிந்திருந்தனர் என்பது புலப்படும்.

## அட்டிற்றொழில்

இவ்வுலகில் மக்களுக்கு நிலைபெறுதற்குரியது புகழ். நிலை பெறுதற்குரிய புகழையும், அறத்திற்கு மாறுபடாத செயல்களைச் செய்தே பெறல் வேண்டும். அவ்வாறு செய்தால் மறுமைக்குப் புண்ணியமும் உண்டாகும். ஆகவே அவ்விரண்டினையும் ஒருங்கே பெறுவதற்கு ஒரே எளிய இனிய பயன்பட்ட நல்வழி விருந்தோம் புதலேயாம். அட்டிற்சாலைகள் அதனை உடையதாய் வளம் பெற்றிருக்க வேண்டும். பழந்தமிழரிடையே சாதாரண நிலை

யிலுள்ள குடிமக்கள் முதலாக அரசாளும் மன்னன்வரை விருந்தோம்பும் பண்பில் சிறந்து விளங்கினர். எளியமக்களுள் அவரவர் தத்தம் நிலப்பண்பிற்கேற்றவாறு விருந்து படைத்தனர். செல்வர்களும, வள்ளல்களும் மன்னர்களும் இன்சுவை உணவினை வரையாது வழங்கினர். இவ்வாறாக அவரவர் தகுதிக்கேற்றவாறு விருந்தோம்பற் பண்பில் சிறந்து விளங்கியமைக்கான பல சான்றுகள சங்கப்பாடல்களில் காணப்படுகின்றன. பண்டைத் தமிழர்,

**அமிழ்து அட்டு ஆனாக் கமழ்குய் அடிசில்**
**வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை,**[1]

உடையவர்கள், விருந்தோம்பும் பண்பைத் தம்வாழ்நாளின் கடமையாகவே கருதினர். இதனால் அக்காலத்தில் அட்டிற்சாலைகள் பல இருந்திருத்தல் வேண்டும். சமைக்குந் தொழில் வல்லோரும் பலர் இருந்திருத்தல் வேண்டும்.

பழங்காலத்தில், தமிழ்நாட்டு நகரங்களில் சமையற்சாலைகளின் நிலை எப்படி இருந்தது என்று அறிவதற்கு பட்டினப்பாலை எனும் நூல் உதவுகிறது. அதில் அட்டிற்சாலையின் அமைப்பிற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. இம்மைக்குப் புகழ் நிலைபெற்ற நற்சொற்கள் வளரவேண்டும். மறுமைக்குப் புண்ணியம் நிலைபெற வேண்டும். இங்ஙனம் புகழ், புண்ணியம் உண்டாவதற்கு ஏற்ற நிலையிலேதான அட்டிற்சாலைகள் நடத்தப் பெற்றன. வளம் இல்லாமல் இன்பமாக விருந்தோம்பல் செய்ய இயலாது. அதனால் அட்டிற்சாலைகள் போதுமான வளத்தோடு விளங்குதல் வேண்டும். இச்செய்யுட் பகுதியில் கூறப்பெறும் அட்டிற்சாலையின் செழுமைநிலை என்ன என்பதைக் காண்போம்.

''அட்டிற் சாலை அகலமானது; பாதுகாப்பாக வலிய மதில் சூழ்ந்தது; மதிற்சுவரில் திருமகளுருவம் எழுதியிருக்கும். அதன் வாயில், இரட்டைக் கதவுகளால் ஆனது. சோழ நாட்டுக் காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள அக்கதவுகளில் சோழன் ஆட்சி அடையாளமாகப் புலியுருவம் பொறிக்கப்பட்டிருக்கும். பேரளவாக

---

1. புறம் 10:7-8

விருந்தோம்புகின்ற வகையினால், நிரம்ப அளவில் சோறு வடிக்க நேர்ந்தது. அதனால் ஒழுகிய கொழுங் கஞ்சிநீர் ஆறுபோலத் தெருவிற் பரந்து செல்லும். அக்கஞ்சி நீரைப் பருகுவதற்கு எருதுகள் ஒன்றைஒன்று தள்ளிக்கொண்டு வந்து தம்முள் சண்டை இட்டுக்கொள்ளுதலும் உண்டு. அதனால் அந்நீர் சேறாகி உலர்ந்துவிடும். பின்பு அவ்வழியே தேர்கள் செல்லும்பொழுது புழுதி உண்டாகி, நாலாபக்கமும் பரந்து, வேறுவேறு வகையான தொழில் திறமைகளுடன் சித்திரங்கள் தீட்டப்பெற்ற வெண்ணிற மாளிகைகளிற் படிந்து அவற்றை அழுக்காக்கிவிடும். அப்போது அம்மாளிகைகளின் தோற்றம் புழுதியைப் பூசிக்கொண்ட யானை களைப் போல் காணப்படும். பண்டைக் காலத்து அட்டிற்சாலை களின் நிலை இவ்வாறிருந்தது.[2]

**சான்று :** **புலிப்பொறிப் போர்க்கதவின்**
**திருத்துஞ்சும் திண்காப்பின்**
**புகழ்நிலைஇய மொழிவளர**
**அறம்நிலஇய அகன்அட்டில்**

உயிர் வாழ்க்கைக்கு ஆக்கந்தரும் சமையற்றொழில் அக் காலத்து அட்டிற்றொழில் எனப்பட்டது. இத்தொழிலில் தமிழர் நிரம்பிய தேர்ச்சியுடையவராய்ச் சுவைக்கினிய அடிசிலை ஆக்கி விருந்தளித்தனர் என்பது சங்கச் செய்யுட்களில் பாராட்டப்பெறும் பல்வேறு சுவைமிக்க உணவின் திறத்தால் இனிது புலனாகும்.

### கூவலர்

பண்டைத் தமிழர் சிற்பக்கலை, கட்டிடக்கலை போன்ற அருங்கலைகளை அறிந்திருந்தது போலவே கூவம் அமைக்கவும் தெரிந்திருந்தனர். பயிர்களுக்கு வேண்டிய நீர்ப்பாசனத்திற் காகவும், மக்களுக்கு வேண்டிய குடிநீருக்காகவும் நீர்நிலைகள் அமைத்தனர். இவ்வாறு நீர்நிலைகள் அமைத்தல் மக்கட் சமுதாயத்தின் தலைவனாக விளங்கிய மன்னனது கடமைகளுள்

2. பட்டினப்பாலை 40-50

ஒன்றாய் அமைந்தது என்பதனைப் பட்டினப்பாலையில் வரும் 'குளந்தொட்டு வளம்பெருக்கி' என்ற பாடலடியால் அறியலாம்.

மழை வளத்தால் நீர்மிக்க காலத்தே ஆறுகள் தாங்காமல் கீழ்த்திசைக் கடலுக்குப் போகின்ற வெள்ளம் குளங்கள் கொள்ளும் படி நிறைந்தது என்பது மதுரைக்காஞ்சி எனும் நூலில்

**தாங்காது குணகடற்கு இவரும் குருஉப் புனல் உந்தி**
**நிவந்துசெல் நீத்தம் குளங்கொளச் சாற்றி (245:46)**

எனக் கூறப்பட்டுள்ளது.

பழந்தமிழர் வழிப்போக்கர்களுக்கும், கால்நடைகளுக்கும் உதவும்பொருட்டு ஆங்காங்கே கூவல் தோண்டி வைத்திருந்ததை சங்கப்பாடல்கள் குறிப்பிடுகின்றன.

மக்கள் உண்ணும் நீருக்காக கூவல் அமைக்கப்பட்டதைப் புறப்பாடல், 'அரிதுண் கூவலங் குடிச் சீறூர்' (306:2) என்ற பாடலடியாலும்; கிணறு அகழ்வதற்கு வல்வாய்க் கணிச்சியைப் பயன்படுத்தினர் என்பது

'கணிச்சியில் குழித்த கூவல்' (நற். 240:7) என்றதாலும்; நீர் இறைப்பதற்குக் கொடுவாய்ப் பத்தலையும் பயன்படுத்தி யமையை

**வல்வாய்க் கணிச்சி கூழார் கூவலர்**
**ஊறா திட்ட உவலைக் கூவல்** (21:22-23)

**கொடுவாய்ப் பத்தல்** (155:9)

என்ற அகநானூற்றுப் பாடலடிகளாலும் அறிய முடிகின்றது.

கூவல், கூவம், கேணி, கிணறு என்பன மக்கள் வழக்கிலும் இலக்கியங்களிலும் பயின்று வந்தாலும் சங்க இலக்கியங்களில் **'கூவல்,** என்ற சொல்லே காணப்படுகிறது. கூவல் எனும் சொல்லில் கிணறு எனும் பொருளுடன் 'கூவலன்ன விடரகம் புகுமின்' (மலைபடு. 366) என்ற பாடலடி காணப்படுகின்றது.

சங்கப் பாடல்களில் வரும் கூவல் பற்றிய செய்திகளைக் காண்கையில் அது ஆழமின்றி இருத்தல் புலப்படுகின்றது.

**அவர்நாட்டு உவலைக் கூவல்கீழ்**
**மான்உண்டு எஞ்சிய கலுழி நீரே (ஐங். 203)**

**கற்பாறை** நிறைந்த நிலத்தில் அப்பாறைகளை உடைத்து அரிதுமுயன்று தோண்டப்படும். சிலநேரங்களில் அதனகண் ஊறும் நீரும் நல்ல நீராகாது உவர் நீராய் அமைந்தவிடும். சான்றுகள் :

**கல்லறுத் தியற்றிய வல்லுவர்க் கூவல் (புறம். 331:1)**

**தோட்பதன் அமைந்த கருங்கை ஆடவர்**
**கனைபொறி பிறப்ப நூறிவினைப் படர்ந்து**
**கல்லுறுத் தியற்றிய வல்லுவர்ப் படுவில்**
**பாருடை மருங்கின் ஊறல் மண்டிய (அகம். 79:1-4)**

ஆடைவெளுக்கும் தொழில் செய்யும் புலைத்தி, **களர்** நிலத்தில் ஊறும் உவர்நீர் ஆடையிலுள்ள அழுக்கைப் போக்கும் இயல்புடையதுஆதலின் களர்நிலத்தை அகழ்ந்து நீர் எடுத்து ஆடை வெளுப்பாள் என்ற கருத்து புறநானூற்றில் வரும்,

**களர்ப்படு கூவல் தோண்டி நாளும்**
**புலைத்தி கழீஇய தூவெள் அறுவை**

என்றதால் அறியலாம்.

**செம்மண்** நிலத்திலும் அகழ்ந்து நீர் எடுத்தல் உண்டு. அதனைப் புறநானூறு,

**பூவற் படுவிற் கூவல் தொடீஇய**
**செங்கட் சினனீர் (319:1-2)**

செம்மண் நிலத்து மடுவில் உள்ள நீர்நிலையைத் தோண்டியதனால் உண்டாகிய சிவந்த இடத்துச் சிறிதாக ஊறியநீர் என்று கூறுகிறது. ஆனிரை நீர் உண்ண ஆயர்கள் பயிர்செய்யாது

விடப்படும் **தரிசு** நிலத்தில் கற்களை உடைத்துத் தோண்டி நீர் ஊறுகின்ற ஊற்றுக் கண்களையுடைய கிணற்றினை அமைப்பர் என்பதனை அகநானூறு 'விடுநிலம் உடைத்த கலுழ்கட் கூவல்' (321:8) என்று கூறுகிறது.

உமணர் தாம் செல்லும் வழியில் **கல்நிலத்தை** (முரம்பு) இடித்து அகன்ற இடத்திலே அகலமான விரிந்த வாயை உடைய கூவல் தோண்டுவர். இது வழிப்போக்கராகிய புதியவர் நீருண்டு இளைப்பாறுதற்கு நீர் ஊறுகின்ற இடமாய் அமையும்.

**..................முரம்பிடித்து**
**அகலிடங் குழித்த அகல்வாய்க் கூவல்**
**(அகம். 295:10-11)**

### கூவலும் பத்தலும்

**பொன்செய் கணிச்சித் திண்பிணி யுடைத்துச்**
**சிரறுசில வூறிய நீர்வாய்ப் பத்தற்**
**கயிறுகுறு முகவை (பதி. 22:12-15)**

திண்மையான வன்னிலத்தை இரும்பினால் செய்த கோடரியால் உடைத்துத் தோண்டப் பட்டபடியால் சிதறுண்டு சிறிதே ஊறிய நீர் பொருந்திய கிணறுகளில் நீண்ட கயிறுகட்டிச் சேந்தப் படும். இதில் **பத்தல்** என்பது உட்கிணறு ஆகும். மேலே அகலமாக அகழ்வது கூவல் என்றும் அதனுள்ளே குறுகிய வாயுடைத்தாய் ஆழமாய்த் தோண்டப்படுவது பத்தல் என்றும் கொள்ளலாம். பத்தல் இயல்பாகவே மிக ஆழத்திலிருப்பதுடன் நாடோறும் சுரண்டுதலால், அவ்வாழம் மிகுந்தவண்ணம் இருப்பதால், நீண்ட கயிறுகொண்டு முகத்தல் வேண்டும். எனவே நீண்ட கயிறு கொண்டு குறுமுகவையால் நீர் சேந்தப்படும் என்ற பொருள்பட **கயிறுகுறுமுகவை** எனப்பட்டது.

ஆனிரைகளுக்கு நீருட்டக் கோவலர் தாம் தோண்டிய கூவலினின்றும் பத்தலால் நீர் இறைத்துப் பல சிறு குழிகளில் நிரப்புவர். அகநானூற்றுப் பாடலில்,

**நெடுவிளிக் கோவலர் கூவல் தோண்டிய**
**கொடுவாய்ப் பத்தல் வார்ந்துகு சிறுகுழி நீர் (155:8-9)**

என வந்துள்ளது.

மற்றொரு அகநானூற்றுப் பாடலில் அகலமாகத் தோண்டப் படுவது கூவல் என்பதற்கு, 'அகலிடங் குழித்த அகல்வாய்க் கூவல்' (295:8) என்ற பாடலடி காணப்படுகிறது.

## உவலைக் கூவல்

கூழினைத் தம் உணவாகக் கொள்ளும் கிணறு வெட்டுவோர் மண்மேடாகிய வன்னிலத்தை வலிய வாயினையுடைய குந்தாலி யால் உடைந்துப் பார்ப்பர். அகழ்ந்து பார்த்தும் நீர் ஊறவில்லை என்றால் வெட்டப்பட்ட இடத்தில் தழைகளை நிறைந்து மூடி விடுவர். இக்காட்சி

**பரல்மண் சுவல முரணிலம் உடைத்த**
**வல்வாய்க் கணிச்சிக் கூழார், கூவலர்**
**ஊறாதிட்ட உவலைக் கூவல் (அகம். 21.22-23)**

எனக் காட்டப்பட்டுள்ளது.

## வேலன்

**அருங்கடி வேலன் முருகொடு வளைஇ**
**அரிக்கூ டின்னியங் கறங்கநேர் நிறுத்தி**
**கார்மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின்**
**சீர்மிகு நெடுவேட் பேணித் தழூஉப்பிணையூஉ**
**மன்றுதொறு நின்ற குரவை.... (மது.611-15)**

யாழும் முழவும் இயைந்தொலிப்பச் சிறுபறை முழங்கப் பூசைக்கு வேண்டும் பொருள்கள் பலவற்றோடே, சுடர் விளக்கை முன்னால் ஏந்திச் செல்லப் பாற்சோறு முதலிய மடையோடே மெல்ல நடந்து சென்று சூல்கொண்ட மகளிர் திருக்கோயிலில் இறைவனைக் கைதொழுது ஏத்தித் தேவராட்டியாள் மடை கொடா நிற்ப, ஒருபக்கத்தே அரிய அச்சத்தைச் செய்யும் வேலன் இத் தீங்கு நுமக்கு முருகனால் வந்ததென்று கூறுவான்.

## வேலன் வெறியாடுதல்

**வேலன் தைஇய வெறிஅயர் களனும் (திருமுருகு.222)**

வெறிஅயர் களன் என்றது வேலன் அல்லது வேன்மகன் முருகப் பெருமானுக்குக் களனிழைத்து வெறியாட்டயரும் இடம் ஆகும். பண்டைக்கால மக்கள் தமக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்ட விடத்தும், பிறகுறைகள் உண்டான பொழுதும், வேலன், கட்டு விச்சி முதலியோரிடத்துக் குறிகேட்டலும், அவர் இக்குறை தெய்வத் தானே நேர்ந்தது என்று கூறினாலும், அல்லது தெய்வத்திற்கு வெறியாட்டயர்ந்தால் தாம் உற்றதுயர் நீங்கும் என்று கருதி னாலும், எதிர்காலத்தே நிகழப்போவதனை முன்னரே அறிந்து கொள்ள விரும்பினாலும், அவ்வழி முருகப்பெருமானுக்கு வேலனைக் கொண்டு களன் இழைத்து மறியறுத்து, மலர் சிதறி, நறுமணப்புகை, சாந்தம் முதலியன கொடுத்து, வழிபாடு செய் தலும், அங்ஙனம் செய்யுங்கால் அக்கடவுள் அவ்வேலன்மேல் எழுந்தருளி ஆவனகூறி அவர் குறையைப் போக்குதலும் வழக்க மாகும். வேலன் வெறியாடுதல் அகம், புறம் இரண்டிற்கும் பொது வாகிய நிகழ்ச்சியாகும். ஆசிரியர் தொல்காப்பியனாரும்,

**வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்**
**வெறியாட் டயர்ந்த காந்தளும் (தொல். புறத். சூ.5)**

**வெறியாட் டிடத்து வெறுவின் கண்ணும்**
**(தொல். களை. சூ. 26)**

எனக் கூறியுள்ளதைக் காணலாம். இவ்வாறு வேலன் களன் அமைத்து வெறியாட்டயர்தலைச் சங்கப் பாடல்கள் பலவற்றில் காணலாம்.

**சான்று : வேலன் ஏத்தும் வெறியு முளவே (பரி. 5:15)**

## வேலன் கழங்குக் குறி பார்த்தல்

**பெய்ம்மணன் முற்றங் கடிகொண்டு**
**மெய்ம்மலி கழங்கின் வேலன் (நற். 268:8-9)**

**வணங்குறு கழங்கின் முதுவாய் வேலன்**
**கிளவியிற் றணியின் நன்று** (நற். 282:5-6)

அறிவு வாய்ந்த வேலன் மணல் பரப்பிய முற்றத்தைச் சிறப்புச் செய்து, மெய்ம்மையைக் கூறுகின்ற கழங்கிட்டுக் குறிபார்ப்பான் என்பதை மேற்கூறப்பட்ட நற்றிணைப் பாடலடிகள் உணர்த்து கின்றன.

## காரோடன்

காரோடன் என்பான் படைக்கலங்கட்குத் தோலினால் உறை தைத்துக் கொடுப்பவன். சிறுமையுடைய தோல் துன்னும் (தைக்கும்) சக்கிலியன். உறை துன்னுதலின் உறைகாரன் எனப் பட்டான். இவ்வுறைகாரரே ஆயுதங்களைக் கூர்மைப் படுத்தும் சாணைக்கல்லும் செய்வர். காரோடன் பற்றிய குறிப்பு சங்க நூல்களில் அகநானூற்றில் மட்டும் காணப்படுகிறது.

**சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய கல்** (அகம்.1:5)

தோல் துன்னுதலாகிய சிறு தொழிலையுடைய உறைகாரன், அரக்கொடு சேர்த்துச் செய்த சாணைக்கல் என்பது இதன் பொரு ளாகும். போரில் பயன்படுத்தப்படும் கேடயங்கள், கையுறைகள் போன்றவை பெருமளவு செய்யப்பட்டன. அவற்றைச் செய்த வர்களும் மேலே குறிப்பிடப்படும் சிறுகாரோடன் என்பானும் ஒரே பிரிவினரா என்பதை அறிந்துகொள்வதற்கு ஏற்ற சான்று சங்கப்பாடல்களில் காணப்படவில்லை.

## விறகு வெட்டுவோர்

**விறகுஒய் மாக்கள் பொன்பெற் றன்னதோர்** (புறம். 70:17)

விறகு விற்போர் காட்டுப்பகுதிகட்குச் சென்று விறகுகளை வெட்டி ஊருக்குக் கொண்டு சென்று விற்றுப் பொருள் பெறுவர். இப்பழக்கம் பண்டை நாளில் இருந்தமை மேற்கூறிய புறப்பாடல் அடியால் அறியலாம்.

## யானைப்பாகன்

யானையை அடக்கி ஆள்பவன் அல்லது செலுத்துபவன் யானைப் பாகன் எனப்பட்டான். அவன் வன்கண்மையையுடைய கொலை

யானையாலே காவலையுடைய கணைய மரத்தை முறித்து இரும்பாற் செய்யப்பட்ட அங்குசத்தால் முன்னர்க்கடாவி, அது செய்யும் வினையைப் பின்வேண்டுமளவிலே பிடிக்கவும் செய்வான். அவனைத் தோட்டியான், தோட்டி, யானைப்பாகன் என்பர். யானையை அடக்கப் பயன்படும் அங்குசம் **தோட்டி** எனப்படும்.

**சான்று :** **கடுங்கண்ண கொல்களிற்றால்**
**காப்புடைய எழுமுருக்கிப்**
**பொன்னியல் புனைதோட்டியான்**
**முன்புதுரந்து சமந்தாங்கவும்** (புறம். 14:1-4)

**தோட்டியாக மீட்டாங்கு** (அகம். 286:9)

**..............தோட்டி ஏவலின்**
**தோட்டி தந்த தொடிமருப் பியானை** (பதி. 38:5-6)

'யானைப்பாகன் தோட்டியாற் குறிப்பிடுகின்ற குறிப்புகட்குத் தவறாமல் தொடியாகிய பூண்செறிந்தபடியே நின்று தம்மால் எழுப்பப்படும் ஒள்ளிய புழுதித் துகள்கள தீப்பொறிகளைப் போல நாற்புறமும் சிதறக் காட்டிடத்தே எழுந்த நாடனைத்தும் காணு மாறு விளங்கும் காட்டுத் தீயைப் போலும் கொடியதான சினத் தீயைக் கைவிட்டு, அப்பாகரது ஏவலைப் பொருந்தியமைந்த வலிமையினையும், போர்த்தொழிலையும் விரும்பும் இயல்பினை யுடைய யானைகள்' என்ற கருத்தமைந்த பாடலொன்று பதிற்றுப் பத்தில் காணப்படுகிறது. இதனின்றும் திறம் வாய்ந்த யானைப் பாகர்கள் அக்காலத்திலிருந்தமை புலப்படும்.

**தோட்டி நீவாது தொடி சேர்பு நின்று**
**பாகர் ஏவலின் ஒண்பொறி பிசிரக்**
**காடுதலைக் கொண்ட நாடுகாண் அவிர்சுடர்**
**அழல்விடுபு மரீஇய மைந்தின்**
**தொழில்புகல் யானை** (பதி. 40:27-31)

## தேர் ஓட்டுபவன்

சங்க இலக்கிய அகப்புறப் பாடல்களில் **தேர்** பெருமளவு பயன் படுத்தப்பட்டமைக்கான குறிப்புகள் பல காணப்படுகின்றன. தேரை ஓட்டுபவன் வலவன் என்றும் பாகன்என்றும் அழைக்கப்பட் டான்

சான்று : முள்ளிட்டு ஊர்மதி வலவநின்
புள்ளியற் கலிமாப் பூண்ட தேரே (ஐங். 481:3-4)
வல்விரைந்து கடவுமதி பாக (ஐங் 482:2)

## வலவன் தேரைத் தடுத்து ஓட்டுதல்

சல்லென ஆரவாரம் செய்யும் விரைந்த தலைவனது தேரைப் பாகன் தடுத்தலை 'வலவன் தாங்கவும் நில்லாது கழிந்த கல்லென் கடுந்தேர்' (குறுந். 311) என்றதாலும், அகநானூற்றுப் பாடல் ஒன்று,

**கார்பயம் பொழிந்த நீர்திகழ் காலை**
**நுண்அயிர் பரந்த தண்ணயம் மருங்கில்**
**நிரைபறை யன்னத் தன்ன விரைபரிப்**
**புல்லுளைக் கலிமா மெல்லிதிற் கொளீஇய**
**வள்பொருங் கமையப் பற்றி முள்கிய**
**பல்கதி ராழி மெல்வழி யறுப்பக்**
**காலென மருள ஏறி நூலியல்**
**கண்ணோக்கு ஒழிக்கும் பண்ணமை நெடுந்தேர்**
**வல்விரைந்து ஊர்மதி நல்வலம் பெறுந** **(234:1-9)**

என்றதாலும் அறியலாம். இப்பாடலில் தேர் நடத்துதலிலே சிறந்த வெற்றியைப் பெறுகின்ற தேர்ப்பாகன் என்பதை, 'நல்வலம் பெறுந' என்ற தொடரால் குறிப்பிட்டனர். தேர்வலவன் தேரைச் செலுத்தும் இலாவகத்தை,

**வென்வேல் இளையர் இன்புற வலவன்**
**வள்புவலித் தூரின் அல்லது முள்ளுறின்**
**முந்நீர் மண்டிலம் ஆதி ஆற்றா**
**நன்னால்கு பூண்ட கடும்பரி நெடுந்தேர் (அகம். 104:3-6)**

என்றதாலும் அறியலாம். நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேரைச் செலுத்துவதில் வல்லவன் **வலவன்.**

## துடியன்

துடியன் என்பான் பாணன், பறையன் எனவரும் குடிவகைகளுள் ஒரு குடியினன்.

**துடியன் பாணன் பறையன் கடம்பனென்று**
**இந்நான் கல்லது குடியு மில்லை (புறம். 335:7-8)**

பொதுவகையில் பல குடிகள் இருக்கின்றன எனினும், மறங்கிளர் வித்துப் புகழ்பாடிச் சிறப்பெய்துவித்தலின் நால்வர் குடியினையும் ஒன்றாகக் கருதினர்

போர்க்காலங்களில் போர்மறவர்க்கு அவர்தம் தலைவரிடும் பணியைத் துடிகொட்டித் தெரிவிப்பது துடியனது தொழிலாகும்.

**துடியெறியும் புலைய (புறம்.287)**

துடிகொட்டுவோன் பசிய தழை விரவித்தொடுத்த தலைமாலை அணிவது உண்டு. சான்று: 'உவலைக் கண்ணித் துடியன் வந்தென' (புறம். 269:6)

மன்னன் பகைப்புலத்துப் பொருதுகொணர்ந்த பொன்னையும் பொருளையும துடியன பாணன் முதலாயினார்க்குப் பரிசிலாக வழங்கியமையின் அவர்கள் வறுமையின்றி இனிது வாழ்ந்தனர்.

## இழிசினன்

கட்டில் பிணிக்கும் புலைமகனைப் புறநானூற்றுப் பாடலொன்று இழிசினன் என்று குறிப்பிடுகின்றது. இவன் வாழும் ஊரில் விழா தொடங்கிற்றாக அவ்விழாவிற்கு உதவப் போகவும்; தன் மனைவி பிள்ளைப் பெறுதலைப் பொருந்தினவளாக அவள் உடல்நோய்க்கு உதவப் போகவும் வேண்டி, சூரியன் மறையும் பொழுதும் நெருங்கவே விரைந்து செயல்படுகின்றான். விழாவிற்கு உதவுதலும், மனைவிக்கு உதவுதலும் இழிசினனுக்குக் கடமையாதலின் அவன் உள்ளத்தே விரைவு தோன்றல் உறுதி. சூரியன் மறைதல் தையல் வேலைக்கு இடையூறாதலின், அஃது அவன் விரைவினை மிகுதிப்படுத்திற்று. சான்று

**சாறுதலைக் கொண்டெனப் பெண்ணீற் றுற்றெனப்**
**பட்ட மாரி ஞான்ற ஞாயிற்றுக்**
**கட்டி ணிணக்கும் இழிசினன் கையது**
**போழ்தூண்டு ஊசியின் விரைந்தன்று மாதோ**
**(புறம். 82:1-4)**

# 5. அறிவுசார் தொழில்கள்

## அந்தணர்

பழந்தமிழ்ச் சமுதாயத்தில் அமைந்த பிரிவுகளெல்லாம் தொழில் காரணமாகத்தான் அமைந்துள்ளன. இச்செய்தொழில் பிரிவுமுறை அச்சமுதாயத்தின் உயர்ந்த நிலையை, நாகரிகத்தின் மேன்மையை வெளிப்படுத்துகின்றது. பெரும் பிரிவினராகிய நால்வகைத் தொழிலரில் அந்தணர் என்பார் முதன்மை பெற்று விளங்குகின்றார். மனித சமுதாயத்துக்கும், மன்னுயிர்கட்கும் தம் வாழ்க்கையை அர்ப்பணித்த அவ்வந்தணர் பெருமக்கள் பலர் இருந்துள்ளனர். அந்தணர் என்பார் மன அமைதி பெற்றவர் களாயும், தந்நலம் துறந்தவர்களாகவும், பிறர் நலத்துக்கென்றே தாம் வாழ்பவர்களாகவும், மன்னன் முதல் மக்கள் வரையுள்ள எல்லோராலும் போற்றி மதிக்கப்படுபவர்களாகவும் உள்ளவர். அவர்களை அறவோர், அருளாளர், ஆன்றோர், சான்றோர், மறையோர் என்றும் பலபடப் புகன்றுள்ளனர் இத்தகு பெருமை வாய்ந்த அறவோரின் 'தோற்றத்தையும், சிறப்பியல்புகளையும் திருமுருகாற்றுப்படையில் விரிவாகக் காணலாம்'.[1]

## அந்தணர் தொழில்கள்

**ஓதல் வேட்டல் அவைபிறர்ச் செய்தல்**
**ஈதல் ஏற்றல் என்றுஆறுபுரிந் தொழுகும்**
**அறம்புரி அந்தணர் வழிமொழிந்து ஒழுக. (பதி. 24:6-8)**

ஓதல், வேட்டல், ஈதல், ஏற்றல், ஓதுவித்தல், வேட்பித்தல் எனப்பட்ட இவ்வாறு தொழிலையும் வழிவழியாக வருத்தமின்றிக் கற்றுப் பயின்று வருதலின் அந்தணரை ஆறுபுரிந்தொழுகும் அந்தணர் என்றார் ஆசிரியர். அவர்தம் உள்ளத்தே அறநூல் களின் முடிபொருளையே விரும்பா நிற்கின்றனர் என்பார் 'அறம்புரி அந்தணர்' என்றார். உலகியற் பொருளையும் அதற்

1. திருமுருகு : சீரை தைஇய (176-188).

குரிய அறநெறிகளையும் உள்ளவாறு உணர்த்தும் உரவோராதலின், அந்தணர் வழிமொழிந்தொழுகுதல் அரசர்க்குக் கடனாதல் பற்றி 'அந்தணர் வழிமொழிந்தொழுக' என்றார்.

அந்தணர்க்குரிய அறுதொழிலினும் ஓதல் தலைசிறந்தமையின் இவர்கள் ஓதல் அந்தணர் எனப்பட்டனர். வைகறைப் பொழுதில் அந்தணர் வேதம் ஓதுவர். இவ்வுண்மையை,

**ஓதல் அந்தணர் வேதம் பாட** (மது: 655)

**பூவினுட் பிறந்தோன் நாவினுட் பிறந்த**
**நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப**
**ஏமவின்துயில் எழுதல்** (பரி.தி 27)

என்பவற்றால் அறியலாம். மேலும் ஓதல் முதலிய தொழில் ஆறும் அந்தணர் குலத்தவர்க்கு உரியவாகலின், அறவோராகிய அந்தணர் இம்மைக்குரிய உழவு, வாணிகம் போன்ற தொழில்களைச் செய்யாமைபற்றி அறுதொழில் அந்தணர் எனப்பட்டனர் என்றல் சிறப்பாய் அமையும். இவர்கள் தீயை வழிபட்டனர் என்பது

**அறுதொழில் அந்தணர் அறம்புரிந் தெடுத்த**
**தீயொடு விளங்கும்** (புறம். 397:20-21)

என்றதாலும்,

அந்தணர்கள் நாட்டு நலம் கருதி, மக்கள் நலங் கருதி வேதங்களை ஓதியும், வேத நூல்களில் விதிக்கப்பட்ட முறைப்படி வேள்வி செய்தலும் உண்டு. இவ்வந்தணர்கள் நல்ல பல நூல்களைக் கேட்டு அறிவு நிரம்பிய வேள்வி செய்தலை உடையவர் என்பது,

**கேள்வி முற்றிய வேள்வி அந்தணர்** (புறம். 361:4)
**கேள்வி அந்தணர் அருங்கடன் இறுத்த வேள்வி**
(பெரும். 315)

என்றதாலும் அறியலாம்.

அந்தணர்களின் இன்றியமையாத தொழில் உலக மக்களின் துன்பங்களைப் போக்கி அருள் சுரந்து ஓம்புவதாகும். இவற்றைத் தவிர இடையிடையே எப்பொழுதாகிலும் மன்னனின் வேண்டு கோளுக்கிணங்கி, மன்னன் நாட்டைவிட்டு வெளியே செல்லுங்கால் நாடாளும் தொழிலும் அந்தணாளர்க்கு உரியதாகும். இதனைத் தொல்காப்பியனார்,

**அந்தணாளர்க் கரசுவரை வின்றே**

என்பதால் தெளிய வைத்துள்ளார். மதுரைக் காஞ்சி எனும் நூலில் அந்தணர் இருப்பிடங் குறித்துக் கூறுகையில் அவர்களது இயல்பு கூறப்பட்டது. 'வேதங்களை அவற்றின் பொருள் தமக்கு விளங்குமாறு ஓதி, அவை கூறிய ஒழுக்கங்களைக் மேற்கொண்டு நிலவுலகத்திலேயே வீட்டின்பம் கைவரப் பெற்றவராய், அறத்தி னின்றும் ஒருகாலும் தப்பாது எல்லா உயிர்களிடத்தும் அருள் நிரம்பிய நெஞ்சினை உடையவராய் விளங்கும் அந்தணர்கள் எனப்பட்டனர். (மது. 468-474) அந்தணர்கள் தொழில்கள் அனைத்தும் நாட்டின் நலத்தையும், மக்களின் ஆக்கத்தையும் கருதிச் செய்யப்பட்டனவாகவே அமைந்துள்ளன.

## அந்தணர் பிறதொழில் செய்தல்

யாகம் செய்தலைத் தம் கடமையாகப் பேணாத ஊர்ப்பார்ப்ப னர் கூர்மையான அரத்தால் சங்குகளை அறுத்து வளை செய் தனர். இதனை,

**வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த வளை** (24:1) என்ற

அகநானூற்றுப் பாடலடியால் அறியலாம்.

## அரசர்

அரசாட்சி என்பது மக்களுக்காக அமைக்கப்படுவது பிறர் பொருட்டே அரசன் வளமுள்ளவனாகவும், அதிகாரமுள்ளவனாக வும் விளங்குகின்றான். அரசன் பகைத்துப் போர் செய்தலும், அன்புடன் உறவாடுதலும் பொதுநலத்தின் பொருட்டேயாகும். உலகில் வாழும் ஒவ்வொருவருக்கும் ஒருநிலை இருக்கின்றது. அந்

நிலை கொண்டு செய்ய வேண்டிய கடமை இருக்கின்றது. இவ்வுண்மையை அறிந்து நடந்து கொள்ளுதல் வேண்டும். மக்களுள்ளும் அரசன் தன் கடமையை அறிவது இன்றியமையாததாகும்.

பொதுவாக உலகத்துக்கு நெல்லும், நீருமே உயிர் என்று எல்லாருங் கருதுகின்றனர். ஆனால் நாட்டில் ஆங்காங்கு நீர் நிலைகள் எடுப்பித்து வளம் பெருக வழிசெய்து, பகை, கொள்ளை முதலியவற்றால் மக்கள் அச்சங் கொள்ளாமல் அமைதியாக வாழ்க்கை நடத்தவும், பிணி, தீச்செயல் முதலியவற்றால் அவர்கள் தம் காரியங்கள் கெடாமல் முயற்சியுடையராயிருக்கவும், இவற்றிற்கெல்லாம் அடிப்படையாகத் தேவையுள்ள பொதுஅறிவு, கலையறிவுகளை அவர்கள் பெருக்கிக் கொள்ளவும் பலவிதமான ஏற்பாடுகளும், சட்டங்களும் செய்துவைத்து அரசன் அரசாட்சி செய்தால்தான் மக்களுக்கு நெல்லும், நீரும் கிடைக்கும். மோசிகீரனார் என்னும் புலவர் நன்றாய் ஆழ்ந்து சிந்தித்து,

**நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்**
**அதனால் யான் உயிர் என்பது அறிகை**
**வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே.** (புறம். 186)

எனப் பாடியுள்ளார்.

அரசனது தொழிலே உலகுக்கு அளி செய்தலாகும். அதற்கு மயக்கந் தீர்ந்த அறிவும், நடுநிலைமையும் முறை வேண்டுவார்க்கும் குறை வேண்டுவார்க்கும் எளிதாகவும் இனிதாகவும் இடந்தரும் பண்பும், உதவும் உள்ளமும், நல்லமைச்சர் முதலிய ஆட்சிக் குழுவினரும் அரசனுக்கு வேண்டும். உலகத்தார்க்கு இங்ஙனம் நலஞ்செய்யும் உள்ளொளி நிகழ்ச்சியே அரசோச்சுதலாகும். அரசன் அத்தாணி மண்டபத்தில் அமைச்சர் முதலிய அரசியல் சுற்றங்களின் நடுவே ஒளியோடு இருந்து ஆட்சி புரியும் இயல்பு பெரும்பாணாற்றுப்படையில் பின்வருமாறு சித்திரிக்கப்பட்டுள்ளது.

**குணகடல் வரைப்பின் முந்நீர் நாப்பண்**
**பகல்செய் மண்டிலம் பாரித் தாங்கு**
**முறைவேண்டு நர்க்கும் குறைவேண்டு நர்க்கும்**

**வேண்டுப வேண்டுப வேண்டினர்க் கருளி,**
**இடைத்தெரிந் துணரும் இருள்தீர் காட்சிக்**
**கொடைக்கடன் இறுத்த கூம்பா உள்ளத்து**
**உரும்பில் சுற்றமோடு இருந்தோன் (பெரும். 441-47)**

## *சிறந்த ஆட்சி முறை*

நாட்டில் மக்கள் கவலையின்றித் தத்தங் கடமைகளைச் செய்து நலம்பெறல் வேண்டும். அதற்கு நாட்டில் அமைதி நிலவ வேண்டும். அதற்குப் பகையரசரால் நாட்டுக்கு நலிவு இல்லாத படி மன்னன் வீரத்தோடும், அருளோடும் ஆட்சி செய்தல் வேண்டும். அரசன் தன்னை மதியாத வேற்றரசரை வீரத்தால் அஞ்சச் செய்தல் வேண்டும். தன்னை மதிக்கும் நட்பரசரை மேன் மேலும் தனது அளியினால் தழுவிச் செல்லுதல் வேண்டும். இங்ஙனம் அரசன் வீரமும் அருளும் உடையவனாய் ஆட்சி செய் தால், நாட்டில் எப்பொழுதும் அமைதி நிலைபெற்றிருக்கும். புற நானூற்றில் குறுங்கோழியூர் கிழார் என்னும் புலவர் சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் மன்னது ஆட்சியையும் நாட்டையும் புகழ்ந்து பாடியுள்ள பாடலில்,

**சோறுபடுக்குந் தீயோடு**
**செஞ்ஞாயிற்றுத் தெறலல்லது,**
**பிறிதுதெறல் அறியார்நின் நிழல்வாழ் வோரே,**
**திருவில் அல்லது கொலைவில் அறியார்**
**நாஞ்சில் அல்லது படையும் அறியார்,**
**திறன்அறி வயவரொடு தெவ்வர் தேயஅப்**
**பிறர்மண் உண்ணும் செம்மல்நின் நாட்டு**
**வயவுறு மகளிர் வேட்டுணி னல்லது**
**பகைவர் உண்ணா அருமண் ணினையே (புறம். 20:7-15)**

எனப் போற்றியுள்ளார். இங்ஙனம் பகைவர் உண்ணாத அரிய மண்ணினையுடையவன் எனினும் தன்னைச் சினப்பித்தால் சேர மன்னன் சும்மா இரான். போரின் கூறுபாடுகளை அறியும் தம் வீரரோடு பகைமன்னர் அழியும்படி அவர் நாட்டினை உடனே கவர்ந்து கொள்வன். அத்தகைய தலைமைப்பாடுடையவன் அவன்.

மன்னனது வெற்றிக்குக் காரணம் அவனது நாற்படை வலிமை யன்று. அறமுறைமையே ஆகும். அறம் என்பது நடுநிலைமை; அதாவது நம்மவரென்று அவரது தீமைக்கு ஆக்கமும், அயலவ ரென்று அவரது நன்முயற்சிக்கு அழிவும் சூழாதிருத்தல். வீரமும், மென்மையும் கொடையும் உரிய விடங்களிற் புலப்படுத்தித் தனது கடமையைக் காத்தலாகும். இதனால் நாடு வளமும் பெறும். எனவே மன்னன் என்பான் புலவர் மருதனிளநாகனார் கூறியுள்ளது போல

**அறநெறி முதற்றே அரசின் கொற்றம்; அதனால்,**
**நமரெனக் கோல்கோடாது**
**பிறரெனக் குணங்கொல்லாது**
**ஞாயிற்றன்ன வெந்திறல் ஆண்மையும்**
**திங்க ளன்ன தண்பெருஞ் சாயலும்**
**வானத் தன்ன வண்மையும் மூன்றும்**
**உடையை யாகி இல்லார் கையற** **(புறம். 35)**

அரசோச்சுதல் வேண்டும்.

குடிமக்களுக்கு மேன்மேலும வளம் உண்டாக்கிக் கொடுத்து அரசன் அவர்களிடம் அன்புடன் திறைபெறுதல் வேண்டும. மக்கள் தமது திறைப்பொருளைத் தாமே அன்புடன் செலுத்தும்படி அரசன் நடந்துகொள்ள வேண்டும். மேலும், அவர்கள் பகுதி பகுதியாக எளிதிற் செலுத்தவும் இடங்கொடுக்க வேண்டும். தன் நாட்டு மக்கள் மேன்மேலும் வளமாகவும், நலமாகவும வாழ்வதற்கு, தான் இன்னும் என்னென்ன செய்யலாம என்று ஆராய்ந்து நல்ல வசதி களை அவர்களுக்கு உண்டாக்கிக் கொண்டிருகக வேண்டும். இத்தகு அறிவுள்ள அரசனது ஆட்சியில் குடிமக்கள் மேன்மேலும் வளமுறுவதனால், அரசனுக்கு அவன் உண்டாக்கிக் கொடுக்கும் புதிய வழிகளில் பல புது வரிகள் கிடைக்கவும் இடமிருக்கின்றது. குடிமக்களும் அவ்வழிகளைக் கடைப்பிடித்து முயற்சியோடு தழைக்கவும் இடமிருககின்றது.

**அறிவுடை வேந்தன் நெறிஅறிந்து கொளினே**
**கோடியாத்து நாடுபெரிது நந்தும்** **(புறம். 184:5-6)**

ஆதலால் அறிவுடைய வேந்தன் மேற்காட்டியபடி முறையறிந்து கொண்டால், குடிமக்கள் கோடி கோடியாகத் திறைப்பொருளை உண்டாக்கிக் கொடுத்து தாமும் தழைப்பர்.

அரசியல் இனிதாக நடைபெற அரசன் அறிஞர்களோடு தொடர்புடையனாய் இருத்தல் வேண்டும். அரசியலுக்கு ஆக்கமெல்லாம் அறிஞர்களாலேதான் உண்டாகின்றன. ஆதலால் அறிவியல், அரசோடு மிக்க தொடர்புடையது. அந்நிலையறிந்து அரசன் அறிஞர்களைப் பொருள் செய்து ஒழுக வேண்டும். அரசியலுக்கு உதவக்கூடிய அறிஞர்களாகச் சங்ககாலப் புலவர்கள் விளங்கினார்கள். இக்கருத்து, புறநானூற்றுப் பாடலொன்றில் பெருந்தலைச்சாத்தனார் மூவன் என்னும் சிற்றரசனிடம, 'பெரும! புலவரும் அரசருமாகிய நமக்குள் உள்ள நெருங்கிய அணுக்கத்தை நின் திருவோலக்க இருக்கை விரைவில் காண்பதாக' எனும் பொருள்பட,

> ......... பெரும! நம்முட்
> குறுநணி காண்குவ தாக, நாளும்
> ... ... ... ...
> செருவஞ் சேஎய்!நின் மகிழிருக் கையே
> (புறம். 209:14-19)

எனக் கூறியுள்ளதனின்றும் உணரலாம். மேற்கூறப்பட்டவற்றினின்றும் சிறந்த முறையில் ஆட்சி செய்த அரசர்கள் அக்காலத்தில் அரசாண்டனர் என்பதை உணரமுடிகிறது. அரசர்க்கு உறுதுணையாய் ஆன்றோர் பலர் உடனிருந்து வழிநடத்தினர். குடிமக்கள் அவர்கள் அரசு நிழலில் பேரமைதியுடன் விளங்கினர் என்பதும் பெறப்படுகின்றது.

## அமைச்சர்

ஒரு நாடும் மன்னனும் புகழுற வேண்டுமெனில் நல்லமைச்சன் தேவை என்பது தமிழ்ச் சான்றோரின் முடிபு. நாட்டையாளும் மன்னனின் அருகிலேயே எப்போதும் இருப்போராக உள்ளவர்கள் அமைச்சரும் படைத்தலைவருமே ஆவர். இவர்களுள்ளும் அமைச்சரே அரசனுக்கு முதன்மைத் துணையாக உள்ளவர். அமைச்சரே படைக்குத் தலைமைபூண்டு போர் புரியப் போதலும் உண்டு.

அமைச்சரே தூது போதலும் உண்டு. அமைச்சரே காலக் கணிதர் தொழிலையும் புரிதலுண்டு.

அமைச்சர் தொழில் மேற்கொள்வார்க்கு ஆன்ற குடியிருப்பு இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் இயற்கை நுண்ணறிவும், ஆன்ற நல்லொழுக்கமும், நூற்பயிற்சி முறையும், உலகியல் உணர்வும் நன்கு அமையக்கூடும். இயற்கையாகப் பெற்ற நுண்ணறிவோடு, நூலறிவும் அமையப் பெற்று, நல்ல அறவொழுக்கம் உடையவராகவும் அமைச்சர் இருத்தல் வேண்டும். அரசருக்குரிய அறங்களை அறிந்தவராகவும், தாம் கற்ற கல்வித் திறத்தால் நிறைநதமைந்த சொற்களை உடையவராகவும், எக் காலத்திலும் செயல்படக்கூடிய திறம் வாய்ந்தவராகவும் அமைச்சர் இருத்தல் வேண்டும். மன்னன் நாட்டைவிட்டு வெளியிடங்களுக்குச் செல்ல வேண்டிய காலங்களில் மன்னனுடைய ஆணைப்படி நாட்டை ஆளும் திறமையும், அறமுறையும், போர்த்திறனும் உடையவராய் இருத்தலோடு மனத்திண்மையும் உடல்வலிமையும் உள்ளவராயும் அமைச்சர் இருத்தல் வேண்டும். இவ்விடத்து ஓர் அமைச்சர்க்குரிய இயல்புகளாகக் கம்பநாடர் பாடிய பாடலைக் குறிப்பிடலாம்.

**தம்முயிர்க்குறுதி எண்ணார் தலைமகன் வெகுண்டபோதும்**
**வெம்மையைத் தாங்கிநீதி விடாதுநின் றுரைக்கும் வீரர்**
**செம்மையில் திறம்பல் செல்லாத் தேற்றத்தார் தெரியும் காலம்**
**மும்மையும் உணரவல்லார் ஒருமையே மொழியும் நீரார்**

நாட்டின் நிலைகளையும் மன்னனின் நிலையையும் அறிந்து, இன்னது செய்தால் நலம் பயக்கும், இன்னகாலத்தில், இன்ன வகையில் செய்தால் நலம் பயக்கும் என்று ஆராய்ந்து அரசனிடம் சொல்லிச் செய்வதே அமைச்சரின் தலையாய கடமையாக அமையும்.

சங்ககால இலக்கியங்களுள் ஒன்றான மதுரைக்காஞ்சி எனும் நூலில் மாங்குடி மருதனார் காவிதிமாக்களாகிய அமைச்சர் பற்றி, 'அரசன்பால் உள்ள அமைச்சர் என்பார், அரசனிடம் உள்ள நல்லனவற்றையும், தீயனவற்றையும் ஆராய்ந்து, அவனை நன்

னெறியில் நடக்கச் செய்வர். நல்லன அல்லாத தவற்றைக் கைவிடச் செய்வர். அன்பையும் அறத்தையும் குன்றாமல் காவல் செய்வர். அரசனைக் குடிகளிடம் அன்புடன ஒழுகச் செய்வர் நீதியை அற நெறியினின்றும் பிறழாமல் காப்பர். தாமும் பழிப்பிற்கு இடமானவற்றைச் செய்யார் போற்றத்தக்க நல்ல செயல்களையே செய்வர். சிறந்த புகழையும் பெறுவர். இத்துணைச் சிறப்புடைய அமைச்சர்களே **காவிதி** என்னும் பட்டத்தையும் பெற்ற மக்களாவர்' என்று பாராட்டியுள்ளார்.

**நன்றும் தீதும் கண்டாய்ந் தடக்கி**
**அன்பும் அறனும் ஒழியாது காத்துப்**
**பழிஒரீஇ உயர்ந்து பாய்புகழ் நிறைந்த**
**செம்மை சான்ற காவிதி மாக்களும் (மது.496-99)**

காவிதிப்பட்டம் பெற்றமைக்கு அறிகுறியாகக் காவிதிப்பூ என்னும் பொற்பூ வழங்குதல் மரபு. இங்குக் கூறப்படும் காவிதிமாக்கள் பாண்டி நாட்டு மன்னரால் சிறப்புக் குறித்து வழங்கப்படும் காவிதிப் பட்டம் பெற்றவரும், முடியுடை வேந்தர்க்கு மகட்கொடை உரியரும் பெருநிதிக்கிழாரும் ஆகிய வேளாளர் என்க, என்று நச்சினார்க்கினியர் உரை கூறியுள்ளார்.[1]

கலித்தொகை பாடலொன்றில், நாடு புரக்கும் தொழில் செய்பவன் அரசன். அவன்தன் தொழிலைச் செவ்வனே செய்து முடித்தற்குத் துணைபுரிபவர்களுள் அமைச்சரும் ஒருவராவர். பிறர்க்கும் இம்மண்ணுலகம் பொது என்னும் மொழி இன்றாக அறிவாகிய சொல்லுதலை இயல்பாகவுடைய அமைச்சர் என்ற பொருளமைய

**பொதுமொழி பிறர்க்கின்றி முழுதாளுஞ் செல்வர்க்கு**
**மதிமொழி யிடன்மாலை வினைவர் போல்வல்லவர்**
**(கலி. 68:1-2)**

எனக் கூறுகிறது.

---

1. பத்துப்பாட்டு, இரண்டாம் தொகுதி, கழக வெளியீடு. 558, ப. 128

அமைச்சர் தொழில் மெய்ம்மை நெறியினின்றும் வழுவாது போற்றப்பட்டது. இளஞ்சேரல் இரும்பொறை என்னும் அரசனிடம், மையூர்கிழான் என்னும் வேளிர்குலத் தலைவன் அமைச்சராக இருந்தான். அவனது சிறப்பினைக் கூறுகையில் ஆசிரியர் பெருங்குன்றூர்கிழார், மெய்ம்மை பொருந்திய அமைச்சியல் மரபுகளில் வழுவாதவனாகிய மையூர்கிழான் என,

**மந்திர மரபின் தெய்வம் பேணி**
**மெய்யூர் அமைச்சியல் மையூர் கிழானை** (பதி. 9:10-11)

எனப் போற்றினர்.

## ஒற்றர்

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிகழும் நிகழ்ச்சிகளையும், இயக்கங்களையும் அறிந்து ஆளுந்தலைவனுக்கு உணர்த்த ஒற்றர் அவசியம். பழங்காலத்திலிருந்து இன்றளவும் ஒற்றாடல் தொழிலைப் புரிவோர் இருந்து வருகின்றனர். ஒன்றைக் காண்பதற்கு எவ்வாறு இரண்டு கண்கள் தேவையோ, அதுபோல நாட்டை ஆளுதற்கு இருகண்களாக ஒற்றரையும், நீதி நூலையுங் கூறியுள்ளார் வள்ளுவர்.

நாட்டிலுள்ள நிலைகளை, மக்களின் நிலைகளை ஒற்றர்களின் மூலம் அரசு புரிபவன் அறிவானேயானால், அவன்மீதும் அரசின் மீதும் மக்கள் நம்பிக்கை வைத்துப் போற்றுவார்கள். பிறநாடுகளிலும் ஒற்றாடச் செல்வோர், பிறர் அறியாவண்ணம் உடை உடுத்தியும், பேசியும், நடித்தும் ஒழுகி வந்தாலும், சிலபோது பிறரால் அறிய நேரிடுவதுண்டு. இந்நிலையில் துன்பத்தைத் தாங்கிக் கொள்ளத் துணிந்தும், உயிரைவிடத் துணிந்தும் ஒற்றர்கள் தம் தொழிலைச் செய்பவர்களாக உள்ளனர்.

உறையூரிலாண்ட நெடுங்கிள்ளி என்னுஞ் சோழ அரசன் இளந்தத்தன் என்னும் புலவர் ஒருவரை ஒற்றன் என்று கருதிக் கொல்லப்புக்கமை புறநானூறு (பாடல். 47) கூறும்; கோவூர்கிழார் என்னும் புலவர் கிள்ளிக்கு உண்மையை எடுத்துக்கூறி அவ்விளந்தத்தனைக் காத்தார்.

பொதுவாக அரசன் ஒரு செய்தியை அறிந்துவர மூன்று ஒற்றர்களை அனுப்பி வைத்தல் வேண்டும். அம்மூவருமே ஒருவருக்கொருவர் ஒற்றர் என்பது தெரியாத வண்ணம் அனுப்புதல் வேண்டும். மூன்று ஒற்றர்களும் அறிந்து வந்த செய்தி ஒத்திருக்குமானால் உண்மையெனக் கொள்ளலாம். இவ்வாறாகத் தம் அறிவையும் திறமையையும் பயன்படுத்திப் பணி செய்த ஒற்றர்களைப் பற்றிய சில குறிப்புகள் சங்க நூல்களில் காணப்படு ன்றன.

**சான்று : ஒற்றுச்செல் மாக்களின் ஒடுங்கிய குரல்**

**(அகம். 313:1)**

''பழந்தமிழரசர் வேவுபார்ப்பாரைப் பெரிய எண்ணிக்கையில் ஏவல்கொண்டனர். அவர்களுக்கு ஒற்றர் என்பது பெயராயிற்று. அவர்கள் தொழில் ஒற்று அல்லது வேய் எனப்பட்டது. 'ஒற்றினாகிய வேயே' (தொல். பொருள். 58) வேய் என்பது ஒற்றருடைய அறிக்கை; ஒற்று என்பது அவர்கள் ஆற்றும் தொழில் என்பதே அவற்றிடையே உள்ள நுண்ணிய வேறுபாடு.''[1]

## தூதுவர்

தூது என்னுந் தொழில் மிகவும் நல்லியல்பையுடைய ஒரு தொழிலாகும். பண்டைய முடிமன்னர்களின் அரசவை வளர்த்த செய்தொழில்களுள் ஒன்று தூது. இருநாடுகட்கிடையில் பகை உண்டாகிவிடுமானால், இருநாடுகளும் போர்தொடுத்து உயிர்கட்கும் பொருள்களுக்கும் பெருத்த அழிவு உண்டாதல் இயல்பு. அந்த அழிவை நீக்க வேண்டிச் சான்றோர்கள் இருநாட்டு மன்னர்பாலும் சென்று அறநெறியில் அறிவுரை மொழிந்து, இரு மன்னர்களையும் சமாதானப்படுத்தி அமைதியான முறையில் நாடுகளைக் காவல் புரியச் செய்வது வழக்கமாயிற்று. ஈண்டு தொண்டைமானிடம் தூது சென்ற ஒளவையாரின் அரும்பணி குறிப்பிடத் தக்கது.

---

1. சங்க கால வாழ்வியல். டாக்டர், ந. சுப்ரமண்யன், பாவை பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை-14. 1986. ப. 124.

இத்தொழில் செய்யத் தொடங்கப்பெற்ற காலத்தில் இதனைச் செய்தோர் சான்றோர்களாகவே இருந்துள்ளனர். நாளடைவில் தான் அரசியலில் இத்தொழிலுக்கென்று சிலரை நியமிக்கும் வழக்கம் உண்டாயிற்று. தூதுக்கென்று தனித்தொழிலரை அரசில் நியமிக்கப் பெற்றிருந்தாலும், சிலசமயம் அமைச்சரே அத்தொழிலைச் செய்யும் வழக்கமும் இருந்தது.

தூதனாக இருப்பவன் அரசனிடமும் மற்றவரிடமும் அன்பு கொண்டு, அரசனுக்கு நன்மையானவற்றை ஆராய்ந்து அறியும் அறிவினையும், வேற்று அரசரிடம் சென்று தூது உரைக்கும் காலத்தில் ஆராய்ந்து முறைப்படி சொல்லும் சொல்வன்மை யினையும் பெற்றிருத்தல் வேண்டும்.

## கோவூர்கிழார் தூது

இவர் சங்க காலப்புலவர்களுள் ஒருவர். இவர் ஒருகுடியில் தோன்றியவர்களாகிய நலங்கிள்ளி நெடுங்கிள்ளி இருவரிடமும் தூது சென்று அறிவுரை கூறி அவர்களுக்கிடையே இருந்த பகை யுணர்ச்சியைப் போக்கிப் போரைத் தவிர்த்தவர். புறநானூற்றில் வரும் இருபாடல்கள் இவரது சொல்வன்மையையும் அதன் பயனையும் அழகுற எடுத்தியம்புகின்றன.

**சான்று :** **அறவை யாயின் நினதெனத் திறத்தல்**
**மறவை யாயிற் போரொடு திறத்தல்**
**அறவையு மறவையு மல்லை யாகத்**
**திறவா தடைத்த திண்ணிலைக் கதவின்**
**நீண்மதில் ஒருசிறை ஒடுங்குதல்**
**நாணுத்தக வுடைத்திது காணுங் காலே (புறம்.44)**

**ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே**
**இருவீர் வேற லியற்கையு மன்றே, அதனால்**
**குடிப்பொரு ளன்றுநுஞ் செய்தி கொடித்தேர்**
**நும்மோ ரன்ன வேந்தர்க்கு**
**மெய்ம்மலி யுவகை செய்யுமிவ் விகலே (புறம்.45)**

சங்கப் பாடல்களில் அகம், புறம் எனப்பட்ட இருதிணை களிலும் தூது பற்றிய செய்தி காணப்படுகிறது. புறப்பாடல்களில்

அரசர்கள் போர் குறித்த செய்திகளைச் சொல்ல தூதுவரை அனுப்புவர். ஒருகால் ஒரு மன்னன் போர் குறித்து வீரர் பலரும் வந்து தொகுமாறு தூது விடுத்தான். தூதுவன் கூறிய செய்தியைக் கேட்டு வீரர் பலரும் திரண்டு வந்தனர். இக்குறிப்பு புறநானூற்றுப்பாடலில்,

**வருகதில் வல்லே வருகதில் வல்லேயென**
**வேந்துவிடு விழுத்தூ தாங்காங் கிசைப்ப**
**(புறம். 284:1-2)**

என வருகிறது.

அதியமான் நெடுமான் அஞ்சி என்ற குறுநில மன்னன் காலத்தே தொண்டை நாட்டை ஆண்ட தொண்டைமான் என்பான் அதியமான்பால் பகைமை கொண்டான். தன்னிடத்து படைவலி மிக்கிருப்பதாக எண்ணி, அவ்வேந்தன் செருக்குற்றான். அவனது அறியாமையை அறிந்த அதியமான் போரின் கொடுமையையும், அதனால் அவன் வலியிழந்து கெடுவதன் உறுதியையும், அதனால் நாட்டுக்கும், நாட்டு மக்கட்கும் நேரும் கேட்டையும் தெரிந்து கொள்ளுமாறு அறிவித்தற்கு ஔவையார் என்னும் தன் மதிப்பிற்குரிய புலவரை அவன்பால் தூதுவிட்டான். ஔவையார் அவனிடம் சென்றார். தொண்டைமான் தன் படைப்பெருமையை அவருக்குக் காட்ட எண்ணி, அவரைத்தன் படைகலக் கொட்டிலுக்கு அழைத்துச் சென்று காட்டினான். அவன் கருத்தறிந்த ஔவையார் அதியமான் படைக்கலங்களைப் பழிப்பது போலப் புகழ்ந்தும், தொண்டைமான் படைக்கலங்களைப் புகழ்வது போலப் பழித்தும்,

**இவ்வே பீலி யணிந்து மாலை சூட்டிக்**
**கண்திரள் நோன்காழ் திருத்திநெய் அணிந்து**
**கடியுடை வியநகர் அவ்வே யவ்வே**
**பகைவர்க் குத்திக் கொடுநுதி சிதைந்து**
**கொற்றுறைக் குற்றில மாதோ (புறம். 95: 1-5)**

என்று நுட்பமாய்ப் பொருளுணரும் வகையில் பாடுகின்றார்.

ஐங்குறுநூற்றுப் பாடலொன்றில் பிரிவின்கண் ஆற்றாளாகிய தலைமகளை 'தலைவன் போன காரியம் இடையூறின்றி முடித்து

வருதல் தெளிந்தேன்' எனத் தோழி சொல்லி ஆற்றுவிக்கின்றாள். இப்பாடலில் குறிப்பிடப்படும் தலைவன் தன் வேந்தனுக்குத் தூதனாகித் தலைவியைப் பிரிந்து செல்கிறான். இதனை ஐங்குறுநூறு

**வேந்துவிடு விழுத்தொழில் எய்தி ஏந்துகோட்டு**
**அண்ணல் யானை அரசுவிடுத் தினியே**
**எண்ணிய நாளகம் வருதல் (ஐங். 466:1-3)**

எனக்கூறுகிறது. இப்பாடலில் தூதாகச் செல்லும் தொழில் **விழுத்தொழில்** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. விழுத்தொழில் என்றது இங்கு சீர்மையுஞ் சிறப்புங் குறித்து நின்றது. தூது போதல் உயர்குடிப் பிறப்பும், அன்பு, அறிவு, ஆராய்ந்த சொல் வன்மையுமாகிய மூன்றும் உடைமையையும், கல்விவன்மையும், தூய்மையும், வாய்மையும் இன்னோரன்ன பிறவுமாகிய நற்பண்புடைமையும் ஒருங்கமைந்த சிறப்பினையுடையார் செய்யுந் தொழிலாகலான் தூதுத்தொழில் அச்சிறப்பினைத் தொழில் மேலேற்றி விழுத்தொழில் எனப்பட்டது. 'ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன (அகத்.26) என்ற தொல்காப்பிய நூற்பாவாலும் அறியலாம். மேலும் விழுத்தொழில் எய்தி என்று கூறப்பட்டது தூதாகச் சென்றதன் பயனை அடைந்து என்பதனைக் குறிக்கும். மேலும் பகை வேந்தனால் பரிசு பல நல்கிச் சிறப்பிக்கப்பட்டும் வருவர் என்பது ஏந்து கோட்டு அண்ணல் யானை அரசு விடுத்து வருதல் என்றதாலும் அறியலாம்.

ஐங்குறுநூற்றில் மற்றொரு பாடலில், 'அரசன் மேற்கொண்ட போர்த்தொழில் நிகழா வண்ணம் மழை பெய்யத் தொடங்கியது. இதனால் வேந்துவிடு விழுத்தொழிலாகிய தூது செல்லுதலும் இல்லையாயிற்று', எனத் தலைவன் தலைவியிடம் சொல்வதாய் (ஐங். 428) அமைந்துளது.

பதிற்றுப்பத்துப் பாடலொன்று, பெருஞ்சேரல் இரும்பொறையை அரிசில்கிழார் பாடியது. தூதுவரின் அஞ்சாநெஞ்சத்தையும், மாண்பையும் கூறுகிறது.

**ஒடிவில் தெவ்வர் எதிர்நின்று உரைஇ**
**இடுக திறையே புரவெதிர்ந் தோற்கென**
**அம்புடை வலத்தர் உயர்ந்தோர் பரவ (80:9-11)**

''நூர்மைக் காக்கும் பாதுகாவற் பணியை மேற்கொண்டோனாகிய எம் இறைவனுக்கு நீரும் திறைஇட்டுப் பணிவீராக'' என்று சொல்லி, உயர்ந்த பண்புடையாராகிய நின்தூதுவர் நின்னுடைய அருங்குணங்களை எல்லாம் எடுத்துப் பாராட்டிக் கூறுவர் எனறார் ஆசிரியர். இங்கு தூதுவரைச் சிறந்த வலிமையாளர் என்றும் உயர்த்த ஆற்றலுடையவர் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

## அந்தணன் தூது

அக்காலத்தில் தூதுரைப்பதற்கு அந்தணரும் சென்றனர் என்பதனைப் புறப்பாடல் ஒன்று கூறுகிறது. ஒருசமயம் இருபெரு வேந்தரிடையே போருக்குரிய பகை மூண்டது. இருவரும் போர்க் கெழாதவாறு பார்ப்பானொருவன் தூதாகச் சென்றான். தூது போந்த பார்ப்பான் இரவில் வேந்தனைக்கண்டு போரைக் கைவிடற்கு வேண்டுவன பலவும் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தான். வேந்தனும் உடன்பட்டுப் போரைத் தவிர்த்தான்.

ஓலைகொண்டு செல்லும் தூதுவராக அந்தணர் இருந்ததை 'தூதுஓய் பார்ப்பான் மடிவெள் ஓலை' (அகம். 337) என்னும் அகநானூற்றுப் பாடலடியாலும் அறியலாம்.

தூதுத்தொழில் அரசியலிலும், போர்ச்சூழலிலுமே பெருமளவு நிகழுமெனினும் அகவாயில்களாகத் தூது செல்வதும் உண்டு. எனவே அகத்தூது, புறத்தூது என வேறுபடுத்திக்காண இயலும். இல்வாழ்க்கை அளவில் நலம் புரிய அமைந்த தூதே, நாடுகளுக் கிடையில் நலம் பயப்ப உதவியது என்றுங் கூறலாம். அகவாழ்வில் பிரிந்தாரைச் சேர்க்கவும், புறவாழ்வில் பிரிந்து பகைமை பூண்ட நாடுகளை இணைக்கவும் அமைந்த ஒரு தொழிலே தூது என்னுந் தொழில். இத்தொழில் சிறப்புற நடைபெற விளைத்திட்பமும் சொல்திறனும் இன்றியமையாத கூறுகளாம்.

## புரோகிதர்

சங்க இலக்கியக் குறிப்புகளினின்றும் தொடக்க காலத்தி லிருந்து அரசவையில் அந்தணர்கள் முக்கியமான நிலைமை வகித்து வந்தமையை அறிய முடிகின்றது, அந்தணர் அறவுரைக்கு

அரசர் அடங்கி நடக்கவேண்டும் என்பது பொதுவான ஓர் அறிவுரை யாக இருந்தது.

**அறம்புரி அந்தணர் வழிமொழிந் தொழுகி** **(பதி.24:8)**

அந்தணர்க்கு உரியவான ஆறு ஒழுக்கங்களைப் புரிந்தவராக ஒழுகிவருகின்ற, அறத்தொடு பொருந்தியவற்றை விரும்பிச் செய்யும் அந்தணர்களது சொல்லுக்கு அவ்விதமே என்று கூறி அவ்வாறே நடந்து வருவர். அந்தணர்கள் மட்டுமே அரசனது புரோகிதர்களாயினர். புரோகிதனை **ஆசான்** அல்லது **கரும வினைஞர்** என்றனர்.

சேரநாட்டில் புரோகிதர் என்ற சொல் **புரோசு** என்று வழங்கப் பட்டது. சேரமன்னன் பல்யானைச் செல்கெழுகுட்டுவற்கு நெடும் பாரதாயனார் என்னும் பெயரிய புரோகிதர் ஒருவர் இருந்தார். அவர் உலகைத் துறந்து காட்டில் தவவாழ்க்கை மேற்கொண்டார். சேரமன்னனும் உயர்ந்த கேள்விஞானத்தைப் பெற்றவரான நெடும்பாரதாயனார் முன்னின்று வழிகாட்ட, தன் இல்லத்தைத் துறந்து, துறவு பூண்டு காட்டிற்குச் சென்று தவமியற்றினான்.

பதிற்றுப்பத்து எனும் நூலின் ஏழாம் பத்தில் கூறப்படும் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்ற சேரமன்னன், 'புகழ்தல் பொருந்திய பெரிய வேள்விகளை இயற்றுவித்தவன்; அவற்றைச் செய்வித்த பொழுதிலேயே அறத்துறைப்பட்ட பலவான தான தருமங்களையும் செய்தவன். மாயவண்ணன் என்பானை மனம் பொருந்தத் தன்குருவாகப் பெற்று, அவனுக்கு உயர்ந்த திறமான நெல்விளைதலையுடைய **ஒகந்தூரை** இறையிலியாகத் தந்தவன்; அந்தத் தனது புரோகிதனைக் காட்டிலும் தான் அறவொழுக்கங் களிலும், சாத்திர ஞானங்களிலும் மேம்பட்டவனாகி, அவனையே மயங்கச் செய்தவன்' எனக் கபிலரால் புகழப் பெற்றுள்ளான். இதனின்றும் அறநெறிப்படி பெரிய வேள்விகளைச் செய்து வைக்கும் புரோகிதர்கள் அக்காலத்தில் இருந்தமையை உணரலாம்.

**சான்று :** **ஏத்தல் சான்ற இடனுடை வேள்வி**
**ஆக்கிய பொழுதின் அறத்துறை போகி**
**மாய வண்ணனை மனனுறப் பெற்று அவற்கு**

**ஒத்திர நெல்லின் ஒகந்தூர் ஈத்துப்**
**புரோசு மயக்கி (பதி. 7: பதிகம்.6-10)**

பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பதிகத்தில் புரோகிதனைப் பற்றிய ஒரு குறிப்புக் காணப்படுகிறது. ஒன்பதாம் பத்தில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள சேரமன்னன், 'மெய்மை பொருந்திய அமைச்சியல் மரபுகளில் வழுவாதவனாகிய மையூர்கிழானைக் குற்றமற்ற வேள்விகளியற்றும் புரோகிதனாக அவரினும் சிறந்தோனாக மாற்றினான்'. மையூர் கிழான் சேரமன்னனுக்கு அமைச்சனாகவும், குல குருவாகவும் வீற்றிருந்த சிறந்த கல்வி உடையோன். மேற்கூறப்பட்ட பதிகத்தில்,

**மெய்யூர் அமைச்சியல் மையூர் கிழானைப்**
**புரையறு வேள்விப் புரோசு மயக்கி (9-10)**

என்ற அடிகள் காணப்படுகின்றன. இங்குப் 'புரோசு மயக்கி என்றது புரோகிதரினும் சிறந்தோனாக, வேள்வித் தலைவனாகச் செய்து என்பதாகும். இங்ஙனம் காணப்படும் சில குறிப்புக்களினின்றும் அரசவையில் புரோகிதர் என்பார் மதிப்பிற்குரியராய்ப் போற்றப்பட்டிருந்தமை புலனாகும்.

## காவலர்

காக்கும் தொழில் செய்பவர் காவலர் எனப்பட்டனர். இரவுப் பொழுதில் வீடுகளைக் காக்கும் காவலர் இருந்தனர். இச் செய்தியை அகநானூறு,

**அருங்கடிக் காவலர் சோர்பதன் ஒற்றிக்**
**கங்குல் வருதலும் அரியை (அகம். 2:14-15)**

எனக்குறிப்பிடுகின்றது.

இக்காவலர்கள் தம்தொழிலில் சிறிதும் சோர்விலாதவராவர். இடையாமத்து ஊர்க்காவலர் கையில் விளக்குடன் செல்வர். இரவுப் பொழுதில் சிறிதும் உறங்காமல் காவல் காப்பர்.

**யாமங் காவலர் அவியா மாறே (குறுந். 375:6)**

**யாமங் கொள்பவர் சுடர்நிழற் கதூஉம் (புறம். 37:9)**

**கடியுடை வியன்நகர்க் காவலர் துஞ்சார் (நற். 255:3)**
**நன்மனை நெடுநகர்க் காவலர் (அகம். 22:16:; 102:12)**

பண்டைநாளில் இரவுப்பொழுதில் காவலர் சுற்றிச் சுற்றிக் காவல்புரியும் வழக்கமுண்டு.[1] யாமத்தே காவலர்கள் ஊரைக் காத்து எச்சரிக்கும் முறையும் இருந்துவந்துள்ளது. 'இரவு வேளையில் காவலர்கள் யாமந்தோறும் ஊரைச் சுற்றிக் காவல் காத்து வந்தனர். ஒவ்வொரு யாமத்தும் அக்காவலர் ஒலிமிக்க பெருமணி அடித்து, ஓசையெழுப்பி, கதவுகளை நன்கு தாழிட்டுக் காத்துக் கொள்வீராக! என மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துக் காவல் புரிந்தனர் என்ற செய்தி, அந்நாளில் காவலர்கள் யாமந் தோறும் மணியடித்து உணர்த்தி, விழிப்புறச் செய்து காவல்புரியும் சிறந்த பழக்கம் இருந்துள்ளது'. இதனை நற்றிணை,

**..................அதன்தலை**
**காப்புடை வாயில் போற்று, ஓ' என்னும்**
**யாமம் கொள்பவர் நெடுநா ஒண்மணி**
**ஒன்றுஎறி பாணியின் இரட்டும் (நற். 132:7-10)**

எனக் குறிப்பிடுகிறது.

ஊர்க்காவல் எந்த அளவு சிறப்புறக் கண்ணுங்கருத்துமாகக் காக்கப்பட்டது என்பது, அன்பராயினார்க்கன்றி மாறுகொண்ட வேந்தராயினார்க்குக் கனவின் கண்ணும் சென்று சேர்தற்கு இயலாத காவலையுடைய அகன்ற நகர் (புறம். 390:5-6) என்றதால் அறியலாம்.

## காவலரின் பண்பு

மதுரைக்காஞ்சி எனும் நூலில், மதுரை மாநகரின் நள்ளிரவு நிகழ்ச்சிகளைக் கூறுகையில் ஆசிரியர் ஊர்காவல் செய்வோரின் தோற்றத்தையும், அவர்களது ஊக்கத்தையும், திறமையையும் அழகாகச் சித்திரித்துள்ளார். ''கரிய பெண் யானையின் மேந் தோலை ஒத்த கரிய இருள் சூழ்ந்த நேரம். அவ்வேளையில்

---

1. காவலர் கடுகினும். குறிஞ். 240

கல்லையும் மரத்தையும் வெட்டும் வன்மையுடைய கூர்மை பொருந்திய வாளையுடையராய், காலிற் செருப்பணிந்தவராய், தொடையிடத்தே தெரியாமற் கிடக்கும்படி அழுத்தின கூரிய முனையினையுடைய குறுகிய பிடியமைந்த உடைவாளையும், நீலநிறக் கச்சினையும் உடையராய், மெல்லிய நூலால் செய்த ஏணியை அரையிலே பலவாய் மாட்சிமைப்படச் சுற்றிய சுற்றினை யுடையவராய், நிலத்தினை அகழும் உளியினை உடையவராய் ஊர்காவலர் தோற்றமளிப்பர்.

இக்காவலர்கள், இரவுப் பொழுதில் களவு செய்வதற்கு இடம் பார்த்துச் சுழன்று திரியும் விழுத்தகண் இமைக்கும் அளவில் மறை கின்ற கள்வர் பதுங்கியிருக்கும் இடத்தை அவர் தம்மையறியாத வாறு சென்றறிவர்.

இவர்கள் வலிய களிற்றை இரையாக்கப் பார்க்கும் வலிய புலியைப் போலத் துயில் கொள்ளாத கண்ணையுடையராய், தம் உயிர்க்குத் தீங்கு விளையும் என்று அஞ்சுதலில்லாத கோட்பாட்டை உடையராய், களவியற்றொழிலை அறிந்தவர்களாலே கள்வரைக் காண்டலில் இவர் வல்லுநர் எனப் புகழப்பட்ட ஆண்மையை உடையவராய், பொருட் செறிவினையுடைய நூலின் வழியைத் தப்பாத மிக நுண்ணிதாக நுணுகிய ஆராய்ச்சியின் தெளிவினை யுடையராய் ஊர்காத்தல் தொழிலைச் செய்வர்.

இவர்கள் தங்களிடம் தப்பக் கருதி முயல்வார்க்கும் தப்புவதற்கு அரிய அம்பினையுடையராய், தேர் ஓடும் தெருவில் நீர் திரண்டு ஒழுகும்படி மழை பெய்த மிகப்பெரிய இரவின் நடுநாளாகிய பொழுதினும், சோர்வு இல்லாதவராய் விருப்பத்தோடே எழுந்து உலாவுதலால், தெய்வங்கள் வழங்குதற்குரிய செயலற்ற இருட் போதிலும் மக்கள் அச்சமின்றிச் செல்வர்.

**வயக்களிறு பார்க்கும் வயப்புலி போலத்**
**துஞ்சாக் கண்ணர் அஞ்சாக் கொள்கையர்**
**அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர் செறிந்த**
**நூல்வழிப் பிழையா நுணங்குநுண் தேர்ச்சி**
**ஊர்காப் பாளர் ஊக்கருங் கணையினர்**
**தேர்வழங்கு தெருவின் நீர்திரண் டொழுக**

**மழையமைந் துற்ற அரைநா ளமயமும்**
**அசைவிலர் எழுந்து நயம்வந்து வழங்கலிற்**
**கடவுள் வழங்குங் கையறு கங்குலும்**
**அச்ச மறியா தேம மாகிய**
**மற்றை யாமம் பகலுறக் கழிப்பி** (மது. 643-53)

துஞ்சாக் கண்ணும், அஞ்சாக கொள்கையும் ஊர்காக்கும் தொழிற்கு இன்றியமையாதன. அஞ்சாமை ஈண்டு மறைந்திருக்கும் கள்வரானும், பேய், அணங்கு முதலியவற்றானும், தமக்குத் தீங்கு நேருமோ என்று அஞ்சாதிருத்தலாகும். செறிந்த நூலறிவு என்றது களவு செய்தற்குரிய நூலும், கள்வரைக் கண்டு பிடித்தற்குரிய காவல் நூலும் என இருவகை நூலையும் கற்ற அறிவினைக் குறிக்கும். இக்காவலர் எத்தகைய இடையூறு நேரிடினும் தம்கடமையில் தவறாதவர். இத்தகைய சிறந்த காவலரை உடைமையின் மதுரைமாநகர் அச்சமறியாது என்றனர்.

பண்டைத் தமிழ் மன்னர்கள் யவனர், மிலேச்சர் முதலிய பிறநாட்டினரையும் தம் அரண்மனையில் அகப்பணி செய்வதற்கு வைத்துக் கொள்வர். அரண்மனையின் உள்ளறையாகிய பள்ளியறையில் சட்டையணிந்த ஊமையராகிய மிலேச்சர் காவலராகப் பணியாற்றினர். இதனை முல்லைப்பாட்டு,

**எழினி வாங்கிய ஈரறைப் பள்ளியுள்**
**உடம்பி னுரைக்கு முரையா நாவின்**
**படம்புகு மிலேச்சர் உழைய ராக** (64-66)

எனக்குறிப்பிட்டுள்ளது.

## மெய்க்காப்பாளர்

நாடுகாக்கும் மன்னனுக்கு எந்த நேரத்திலும், எந்தவிதமான தீங்கும் நேரிடாதவாறு உறுதுணையாய் உடனிருந்து காக்கும் மெய்க்காப்பாளரும் இருந்தனர் என்பதற்கான சான்று முல்லைப் பாட்டில் காணப்படுகின்றது.

**நெடுநா வெண்மணி நிழத்திய நடுநாள்**
**அதிரல் பூத்த வாடுகொடிப் படாஅர்**

சிதர்வர லசைவளிக் கசைவந் தாங்குந்
துகின் முடித்துப் போர்த்த தூங்க லோங்குநடைப்
பெருமூ தாள ரேமஞ் சூழ (முல்லை. 50-54)

இவ்வாறாகக் காண்கையில் பழந்தமிழர் சமுதாயத்திலும் மக்களையும் மன்னனையும் பாதுகாக்க வேண்டிய ஒருநிலை இருந்துள்ளது என்பதையும், இவர்கள் அச்சமின்றி வாழக்கூடிய வகையில் சிறந்த முறையில் தம் காவற்பணியை நிறைவேற்றிய காவலர்களும் இருந்துள்ளனர் என்பதையும் அறியமுடிகின்றது.

## அறங்கூறவையத்தார்

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி (குறள். 118)

என்ற வள்ளுவரின் வாக்கிற்குச் சான்றாய்த் திகழ்ந்தவர் அறங்கூறவையத்தாராவர். இவர்களைப் பற்றிய அரிய செய்தி மதுரைக் காஞ்சி எனும் நூலில்,

அச்சமும் அவலமும் ஆர்வமு நீக்கிச்
செற்றமும் உவகையும செய்யாது காத்து
ஞெமன்கோ லன்ன செம்மைத் தாகிச்
சிறந்த கொள்கை அறங்கூ றவையமும் (மது. 489-92)

எனச் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. அதாவது வழக்கிடுவார் உள்ளத்தில் இவர் நடுக் கூறுவார்கொல், கூறார்கொல்! என்னும் ஐயத்தான் எழும் அச்சத்தையும், தோற்றுழி அவர்க்குளதாம் வருத்தத்தையும், அவர் தோற்குமாறு தொடர்தற்குக் காரணமான பற்றுள்ளத்தையும் போக்குபவராய், வழக்குத் தொடர்ந்தோருள் ஒருவரிடம் பகைமையும், ஒருவரிடம் உவகையும் செய்யாமல், தாம் தம்முடைய நெஞ்சினைப் பாதுகாத்துத் துலாக்கோல் போன்ற நடுநிலையுடையராய், அறத்தையே மேற்கொண்டு, அதனை வழக்கிட்டோர்க்கு விளங்கக் கூறும் சான்றோராவர். முன்னே தான் சமமாக நின்று, பின்தன்கண் வைத்த பாரத்தை வரையறுக்கும் துலாக்கோல் போன்று முன்னே பகைமையும் உவகையும் செய்யாது தன்னை நடுநிலைக்கண் நிறுத்திப் பின்னர்

பகை, நொதுமல், நட்பென்னும் மூன்றுதிறத்தாருக்கும் ஒப்ப வுரைக்கும் செப்பமுடைய அறங்கூறவையமாகும். பண்டைத்தமிழ் மன்னர்கள் இத்தகைய சிறந்த அறங்கூறவையங்களை நிறுவி அவற்றால் அறங்கெடாது போற்றியதை மேற்கூறிய மதுரைக் காஞ்சி பாடலடிகளால் உணரலாம்.

இத்தகைய சிறந்த கொள்கையை எப்போதும் கடைப்பிடித் தொழுகுவார். அவை சங்க கால மன்னர்கள் ஆட்சியில் இருந் ததை,

**உறந்தை அவையத்து அறம் நின்று நிலையிற்று**
**(புறம். 39:8)**

**மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து**
**அறங்கெட வறியா தாங்கு (நற் 400:7-8)**

**அறங்கெழு நல்லவை (அகம். 93:5)**

**வீறுசால் அவையத்து ஆர்ப்பினும் பெரிதே (அகம் 256:21)**

எனவரும் சங்கப் பாடலடிகள் உணர்த்துகின்றன.

அக்காலத்தில் தத்தம் ஊரில் நிகழ்ந்த குற்றங்களை அறிந்த ஊர்மன்றத்தினர் குற்றம் செய்தவரைத் தண்டித்தனர். கள்ளூர் என்ற ஊரில், நெறிதவறிய ஒருவனை செய்த தவற்றினை, அவ்வூர் மன்றத்தினர் கேட்டறிந்து, அக்கொடியவனை மரக்கிளையில் பிணித்துச் சான்று கூறுவாரைக் கொண்டு அக்குற்றத்தைக் கண்டு பிடித்து அக்குற்றத்திற்குத் தண்டனையாக அவனை நீற்றறையில இட்டுத் தீக்கொளுவுவார், அவ்வூர் மக்கள் காணும்படி நீற்றைப் பெய்தனர். அது கண்ட அவ்வூர் மக்கள் இஃது இக்குற்றத்திற்குத் தகுந்த தண்டனையேயாகும் என்று மகிழ்ந்து ஆரவாரித்தனர். இக்குறிப்பு அகநானூற்றுப் பாடலொன்றில் பின்வருமாறு காணப் படுகிறது.

**............பெரும்பெயர்க் கள்ளூர்த்**
**திருநுதற் குறுமகள் அணிநலம் வவ்விய**
**அறனி லாள னறியே னென்ற**
**திறனில் வெஞ்சூள் அறிகரி கடாஅய்**
**முறியார் பெருங்கிளை செறியப் பற்றி**

**நீறுதலைப் பெய்த ஞான்றை**
**வீறுசால் அவையத் தார்ப்பினும் பெரிதே**
**(அகம்.256:15-21)**

## *அறிவர்*

அறிவர் எனபவர் யார்? தொல்காப்பியப் புறத்திணையியல் பதினாறாம் நூற்பாவில் அறிவன் பற்றிய குறிப்பு காணப் படுகிறது.

**மறுவில் செய்தி மூவகைக் காலமும்**
**நெறியின் ஆற்றிய அறிவன் தேயம்**

இந்நூற்பாவிற்கு, 'காமம், வெகுளி, மயக்கம் இல்லாத ஒழுக லாற்றினை இறப்பும், நிகழ்வும், எதிர்வும் என்னும் மூவகைக் காலத்திலும் வழங்கும நெறியான் அமைந்த முழுதுணர்வுடை யோன் பக்கமும்' என்று நச்சினார்க்கினியர் உரை கூறியுள்ளார். அதாவது இல்லற வாழ்க்கையைத் துறந்து தவம் செய்யும் முனிவர் என்று கூறுகின்றார்.

இந்நூற்பாவிற்கு இளம்பூரண அடிகள் உரை, 'குற்றமற்ற செயலையுடைய மழையும், பனியும், வெயிலுமாகிய மூவகைக் காலத்தினையும் நெறியினால் பொறுத்த அறிவன்' என்பதாகும். அறிவன் என்றது கணிவனைக் குறிக்கும். மூவகைக் காலமும் நெறியினால் ஆற்றலாவது பகலும் இரவும் இடைவிடாமல் ஆகாயத்தைப் பார்த்து ஆண்டு நிகழும் வில்லும், மின்னும், ஊர் கோளும், தூமமும், மீன்வீழ்வும், கோள்நிலையும், பிறவும் பார்த்துப் பயன் கூறல் ஆதலான் மூவகைக் காலமும் 'நெறியின் ஆற்றிய அறிவன்' என்றார். சான்று

**புரிவின்றி யாக்கைபோற் போற்றுவ போற்றிப்**
**பரிவின்றி பட்டாங் கறியத்—திரிவின்றி**
**விண்ணில் உலகம் விளைவிக்கும் விளைவெல்லாங்**
**கண்ணி உரைப்பான் கணி**

இவ்வாறு இளம்பூரணர் அறிவன் என்பதற்குக் கணிவன் என்று பொருள் கூறுகிறார். இதுவன்றி வேறுசில தொல்காப்பிய நூற்பாக்களும் அறிவரைக் கூறுகின்றன. அவை:

**தோழி தாயே பார்ப்பான் பாங்கன்**
**பாணன் பாட்டி இளையர் விருந்தினர்**
**கூத்தர் விறலியர் அறிவர்**
**யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப**
**(தொல். பொருள். கற்.52)**

**பாணன்..................**
**யாணஞ் சான்ற அறிவர் கண்டோர்**
... ... ... ...
**தொன்னெறி மரபிற் கற்பிற் குரியர்**
**(தொல். பொருள். செய். 182)**

இந்நூற்பாக்களினின்றும் அறிவன், அறிவர் என்பவர் இல்லறவாழ்க்கையில் இருக்கும் **கணிவர்** என்பதும், கணவன் மனைவியருக்குள் ஊடல் முதலிய நிகழ்ந்தால் அவர்களுக்கு அறிவுரை கூறி இல்லறநெறியில் நிறுத்தினர் என்பதை உணரலாம். இவர்கள் திருமணம் நடத்தக்கூடிய நாளைக் கணித்துக் கூறினார் என்பதை,

**நெறியறி செறிகுறி புரிதிரி பறியா அறிவனை முந்துறீஇத்**
**தகைமிகு தொகைவகை யறியுஞ் சான்றவர்**

எனக் குறிஞ்சிக் கலிப்பாடல் *(39)* குறிப்பிடுகின்றது.

## *ஆசிரியர்*

ஓராசிரியனின் தொழில் நூல் முதலியன கற்பித்தலாகும். வினையின் நீங்கிய விளங்கிய அறிவினையுடையாராகிய சான்றோரே இவ்வுலகிற்கு அறம் முதலிய நாற்பொருளையும் உணர்த்த வல்லாராவர். அவர் ஆணையாகிய நூல்வழியே உலகம் இயங்கும். அத்தகைய சான்றோர் மதுரைக்காஞ்சி எனும் பாட்டில் தொல்லாணை நல்லாசிரியர் எனப்பட்டனர். அச்சான்றோர் தாம்பெற்ற இன்பத்தைப் பிறரும் மகிழ எடுத்துரைப்பர்.

**தொல்லாணை நல்லாசிரியர்**
**புணர்க்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின் *(மது. 761-62)***

அகத்தியனாரை உள்ளிட்ட பழைய ஆணையை உடைய மெய் யுணர்ந்த சான்றோர்கள் தம்முள்ளே புணர்ந்து நுகரும் மெய்ப் பொருள் இன்பத்தை அவர் அருளாலே தாமும் உணர்ந்து நுகர்த லாகும். கண்ணன் எப்பொருளும் தானாயிருக்கிறபடியைக் காட்டி கீதையை அருளிச் செய்து எல்லோரையும் போதித்தாற்போல எல்லாரையும் போதிக்கவல்லவர் ஆசிரியர். எல்லா நிலங்களையும் தன்னிடத்தே காட்டின பெருஞ்செல்வத்தையுடைய மாயோனைப் போலத் தொல்லாணையை உடையவர் நல்லாசிரியர் என்ற வாறாம்.

பட்டினப்பாலை என்ற மற்றொரு பாடலில் பட்டினத்தில் உயர்த்திய பல்வேறு கொடிகளின் சிறப்பினைக் கூறுகையில் இந் நூல் ஆசிரியர் பல்வேறு கேள்விகளையும் விரும்பிக் கேட்டலோடு நூற்றுறை முற்றக் கற்றமைந்த பழைய ஆணையினையுடைய நல்ல ஆசிரியர்கள் வாதுசெய்தலைக் கருதி உயர்த்திய அச்சந்தரும் கல்விக் கொடியைக் குறிப்பிட்டுள்ளார்.

**பல்கேள்வித் துறைபோகிய**
**தொல்லாணை நல்லாசிரியர்**
**உறழ்குறித் தெடுத்த உருகெழு கொடியும்** (பட். 169-71)

இது கல்வி குறித்து நல்லாசிரியர் பட்டி மண்டபத்தே உயர்த்திய கொடியைக் குறிக்கும்.[1] கல்வி கேள்விகளில் வல்லுநர் அல்லா தார்க்கு இக்கொடி அச்சம் விளைவித்தலின் 'உருகெழு கொடி' என்றார். ஆணை என்றது அவ்வச்சமய முதல்வரின் கட்டளை வடிவான மெய்ந்நூல் விதி ஆகும். மேற்கூறிய பாடலடிகள் மூலம் பூம்புகாரில் பட்டி மண்டபம் இருந்ததையும், அங்கு வாதிட்டோர் பல்கேள்வித் துறைபோகிய தொல்லாணை நல்லாசிரியர் ஆதலையும் உணரலாம்.

---

1. 'பலவாகிய நூற்கேள்விகளில் துறைபோகக் கற்றமையானே தொன்று தொட்டுப் பிறரை ஏவுவதற்கு, உரிமைவாய்ந்த நல்லாசிரியராயுள்ளார் வழக்கிட்டுப் பிறர்க்கு மெய்ப் பொருள்நாட்டிய அச்சந்தருங்கொடி' என்பது மறைமலை அடிகளாரின் விளக்கமாகும். பட்டினப்பாலை ஆராய்ச்சி யுரை. ப. 40.)

கலித்தொகையின் பாடலொன்றில்,

**கற்பித்தான் நெஞ்சழுங்கப் பகர்ந்துண்ணும் விச்சைக்கண் (149:4)**

என வந்துள்ளது. நூல் முதலியன கற்பித்தல் ஆசிரியர் தொழில். தன்கைப் பொருளை அக்கல்விப் பொருட்டுக் கைமாறாகக் கொடுத்தல் உண்டு.

## ஆவணமாக்கள்

ஆவணமாக்கள் என்போர் பிரமாணம் செய்து வைப்போராவர். இவர்களைப் பற்றிய குறிப்பு சங்க இலக்கிய அகநானூற்றுப் பாடலொன்றில் காணப்படுகிறது.

**குடிபதிப் பெயர்ந்த சுட்டுடை முதுபாழ்க்**
**கயிறுபிணி குழிசி ஓலை கொண்மார்**
**பொறிகண் டழிக்கும் ஆவண மாக்கள் (அகம்.77:6-8)**

'ஊர்மக்கள் தாம்தாம் விரும்பிய தலைவர் பெயர் பொறித்திடப்பட்ட குடவோலைகளைக் கொள்ளும் பொருட்டுக் கயிற்றாலே வரிந்து கட்டப்பட்ட குடங்களின் கண்ணே, நடுவரால் பொறிக்கப்பட்ட இலச்சினையை ஆராய்ந்து பார்த்து அழித்துக் குடங்களினூடிருந்து அவ்வோலைகளைக் கையிட்டு ஒவ்வொன்றாக வெளியில் எடுக்கின்ற ஆவணக்களரியாளர் என்பது இதன் பொருள். இதனின்றும் பண்டைக் காலத்தே இத்தமிழகத்தில் ஊராட்சியாளரைத் தேர்ந்தெடுத்தற்கு ஊர்மக்கள் தாம்தாம் விரும்பிய தலைவர் பெயரை ஓலையில் எழுதிச் சுருள் செய்து குடத்தினுள் இடுதலும், நடுவர் அக்குடங்களை மூடிப் பின்னர்க் கயிற்றால் வரிந்துகட்டி இலச்சினையிடுதலும், பின்னர் ஆவணக்களரியாளர் அவ்விலச்சினையை ஆராய்ந்து பார்த்து அதனை அழித்துக் குடத்துள்ளிருந்து ஓலைச்சுருள்களை வெளியிலெடுத்துப் பிரித்து நோக்கித் தெரிந்தெடுப்பர் என்பதை உணரலாம்.

ஊராட்சி மன்ற உறுப்பினர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஊரின் ஒவ்வொரு பகுதியினரும் தம் பகுதிக்குரிய ஒருவரை ஓலைமூலம் தேர்ந்தெடுத்தனர். வாக்காளரின் ஓலைகள்

குடத்தினுள் இடப்பெறும். அக்குடத்தின் மேல் அரசாங்க முத்திரை வைக்கப்படும். ஆவண மாக்கள் அம்முத்திரையை நீக்கி ஒவ்வோர் ஓலையாகப் படிப்பர். இச்செய்தியை மேற்கூறிய அகநானூற்றுப் பாடல் விளக்கும். இத்தேர்தல் முறை பிற்காலச் சோழர் ஆட்சியிலும் இருந்ததை அறியலாம்.

## கணியன்

சோதிடம் என்பது நாள், கோள் நிலைகளை அடிப்படையாக கொண்டு அவற்றால் ஏற்படக்கூடிய இன்ப துன்பங்களை முற்படக் கணித்துக் கூறுவதாகும். இது ஒரு கலைத் தொழிலாகப் பழங் காலந்தொட்டு வளர்ந்து வந்திருக்கின்றது. சோதிடத்தைப் பண்டைத் தமிழர் **கணியம்** என்றும், சோதிடத் தொழில் புரிந் தாரைக் **கணியர்** என்றும் அழைத்தனர். கணியன் என்றால் நாள்கோள் நிலையைக் கொண்டு வருங்கால நன்மை தீமைகளைக் கணிப்பவன் என்பது பொருள்.

சங்க காலத்து வாழ்ந்த கணியப் புலவர்களால் கணித்துக் கூறப்பட்ட பலன்கள் மிகப் பலவாகும். சங்க கால இலக்கியங்கள் வாயிலாக, அவற்றுள் சிலவற்றை நாம் அறிய முடிகின்றது. நன்மை விளையும் காலத்தைக் கணித்தறிந்து, அந்த நல்ல வேளையில் வினைகளைச் செய்யத் தொடங்குவது அக்காலத்தில் பெருவழக்கமாக இருந்தது. நல்ல நாளும் வேளையும பார்த்துச் செய்வதில் அவர்கள் பெருநம்பிக்கை உடையவர்களாயும் இருந் தனர். நாளேரடித்தல், குடைநாட்கோள், வாள்நாட்கோள் என்பவை இவற்றைத் தெரிவிக்கின்றன.

பண்டைத் தமிழருடைய விழாக் காலங்கள், சூரியனால் ஏற் படும் பருவ காலங்களையும், சந்திரனால் உண்டாகும் பருவ காலங் களையும் பொறுத்து அமைவனவாக இருந்தன.

கூடலூர் கிழார் என்னும் சங்கப் புலவர், ஒரு விண்வீழ் கொள்ளியைக் கண்டு, கோச்சேரமான் யானைக்கண்சேய் மாந் தரஞ்சேரலிரும்பொறை இன்னநாளில் இறப்பான் என்று கணித் தறிந்து கூறியபடி மன்னன் இறந்துள்ளான். இக்கருத்தமைந்த பாடல் பின்வருமாறு:

ஆடியல் அழற்குட்டத்து
ஆரிருள் அரையிரவில்
முடப்பனையத்து வேர்முதலாக்
கடைக்குளத்துக் கயங்காயப்
பங்குனி உயர் அழுவத்து
தலைநாள்மீன் நிலைதிரிய
நிலைநாள்மீன் அதன்எதிர்ஏர்தரத்
தொன்னாள்மீன் துறைபடியப்
பாசிச் செல்லா தூசி முன்னாது
அளக்காத்திணை விளக்காகக்
கனைஎரி பரப்பக் காலெதிர்பு பொங்கி
ஒரு மீன் விழுந்தன்றால் விசும்பி னானே
அதுகண்டு, யாமும் பிறரும் பல்வேறு இரவலர்
பறைஇசை அருவி நன்னாட்டுப் பொருநன்
நோயிலன் ஆயினன்று மற்றில்லென
அழிந்த நெஞ்ச மடியுளம் பரப்ப
அஞ்சினம் எழுநாள் வந்தன்று இன்றே
மைந்துடை யானை கைவைத்து உறங்கவும்
திண்பிணி முரசம் கண்கிழிந்து உருளவும்
காவல் வெண்குடை கால்பிரிந்து உலறவும்
காலியற் கலிமாக் கதிஇன்றி வைகவும்
மேலோர் உலகம் எய்தினன் (புறம்.229)

மேடராசி பொருந்திய கார்த்திகை நாளின் முதற்காலின்கண் நிறைந்த இருளையுடைய பாதி இரவில், முடப்பனை போன்ற வடிவுடைய அனுட நாளின் அடியின் வெள்ளி (முதல் நட்சத்திரம்) முதலாகிய குளம் போன்ற வடிவுடைய புனர்பூசத்துக் கடையின் வெள்ளி எல்லையாக விளங்க, பங்குனி மாதத்து முதற் பதினைந்தில் உச்சமாகிய உத்திரம் அவ்வுச்சியினின்று சாய, அதற்கு எட்டாம் மீனாகிய மூலம் அதற்கு எதிரே எழ, அந்த உத்திரத்துக்குமுன் சொல்லப்பட்ட எட்டாம் மீனாகிய மிருகசீரிடம் தாழ, கீழ்த்திசையிற் செல்லாமலும் வடதிசையில் செல்லாமலும் கடலால் சூழப்பட்ட பூமிக்கு விளக்காக முழங்காநின்ற தீப்பரக்கக் காற்றால் பிதிர்ந்து வானத்தினின்றும் ஒரு மீன் வீழ்ந்தது. அது கண்டு யாமும் பிறருமாகிய பல்வேறு வகைப்பட்ட இரவலர்,

பறையொலி போன்ற ஒலி பொருந்திய அருவியையுடைய மலை நாட்டுக்கு வேந்தனாகியவன் நோயையுடையன் அல்லனாகப் பெறின் அழகிது என இரங்கிய நெஞ்சத்துடன் மடிந்த உள்ளம் பரப்ப யாம் அஞ்சினேம்; அஞ்சியபடியே ஏழாம்நாள் வந்ததாகலின் இன்று யானை கையை வைத்துத் துஞ்சவும், திண்ணிய வாரால் பிணிக்கப்பட்ட முரசம் கண்கிழிந்து உருளவும், வெண்கொற்றக் குடை கால் துணிந்து உலறவும், காற்றுப் போன்ற இயலையுடைய மனம் செருக்கிய குதிரைகள் கதி இன்றிக் கிடக்கவும், தேவருலகம் அடைந்தான் எனக் கூடலூர் கிழார் கூறுகின்றார்.

பங்குனி மாதத்தில் கார்த்திகை நட்சத்திரம் நிகழும் நாளில் சட்டி அல்லது சப்தமி திதியாக இருக்குமாதலால் பாதி இரவில் இருள் நிறைந்திருக்கும்எனக் கூறியது பொருத்தமுடையதாகும். அந்த மீன் கிழக்கும்செல்லாது வடக்கும் செல்லாது வீழ்ந்ததாகலிற் கேடு பயக்கும் என்பதனை நன்கு அறிந்திருந்தமையால் 'பாசிச் செல்லாது ஊசிமுன்னாது' எனக்கூறி வருந்தினார். பங்குனித் திங்களில் நட்சத்திரம் வீழ்தல் மன்னர்க்கு அழிவு காட்டும் என்பதனை அறிந்து, 'பங்குனி உயர் அழுவத்து ஒரு மீன் விழுந்தன்றே' எனக்கூறி இரங்கினார். 'ஆடுகயல் தேன்தனுச் சிங்கத் தெழுமீன் விழுமேல் அரசழிவாம்' என்பது கோள்நூல் வாக்கு. இதனை நன்கு தெளிந்து கூடலூர் கிழார் கூறினார்.

பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்பார், காவிரியாற்றின் தனிச்சிறப்பினைக் கூறமுற்பட்டு, உலக நிலை வானின்று வழங்கிவரும் தன்மையினை விளக்குகின்றார். அதன் மூலமாக விண்மீன்கள் நிலையினையும் அவற்றால் உலகம் நிலைபெறுதலையும், உலகம் நிலை பெறுதற்குக் காரணம் மழை என்பதனையும், அம்மழை வரவினை அறிவிக்கின்ற வெள்ளி மீனாகிய சுக்கிரன் தென்திசை நோக்கிச் செல்லுமானால் மழை வளம் குறையும் என்பதையும் கூறித் தெளிவுப்படுத்துகின்றார்.

**வசையில் புகழ் வயங்கு வெண்மீன்**
**திசை திரிந்து தெற்கு ஏகினும்** (பட். 1-2)

வெள்ளி எனும் கோளினை, வானியல் ஆய்வாளர் **மழைக்கோள்** எனக் கண்டனர். அதனை இப்புலவர் **வெண்மீன்** என்றனர்.

## பிறவகைக் கணியம்

பழங்காலத்தில் நிமித்தம் பார்த்தல், விரிச்சி, கட்டுப்பார்த்தல், கழங்கு பார்த்தல் என 'வேறுவகைச் சோதிடங்களும் பழக்கத்தில் இருந்துள்ளன சங்க காலத்து மக்கள் இவற்றைக் கொண்டு நன்மை தீமைகளை அறிந்து வாழ்ந்தமையைச் சங்க நூல்கள் உணர்த்துகின்றன.

மன்னன் போர்புரியச் செல்லும்போது நற்சொல், காக்கை கரைதல் முதலியவற்றால் நிமித்தம் பார்ப்பது வழக்கம். விரிச்சி என்பது நற்சொல். வினை கருதிச் செல்வார் நற்சொல் நிமித்தம் பார்த்துச் செல்வது வழக்கம்.

கட்டுவிச்சி என்னும் வெறியாடுபவளால் முறத்தில் நெல்லை வைத்து எண்ணிப் பார்த்து நன்மை தீமையை அறியும் பழக்கம் இருந்தது. இது கட்டுப் பார்த்தல் எனப்பட்டது.

வெறியாடுபவனாகிய வேலனால் கழங்கு பார்த்த நிமித்தங்களையும் சங்ககால அகத்திணை இலக்கியங்கள் உணர்த்துகின்றன

கணியன் பூங்குன்றனார் என்பவர் சங்க காலத்து வாழ்ந்த ஒரு சிறந்த புலவர். இவர் தமது வானநூற் புலமையினைக் கொண்டு செய்துவந்த தொழில் கணியத்தொழிலாகும். கணியக் கலைத்தொழிலை இவர் மேற்கொண்டு வாழ்ந்தாலும் அவ்வப் போது கவிபுனைந்து இருவகைக் கலைகளையும் இனிது பேணினர்.

இவற்றினின்றும் சங்ககால அரசவையில் இன்றியமையாத அலுவலர்களில் சோதிடரும் ஒருவராம் என்பதை அறியலாம். நல்லோரைகளிலும், நற்சகுனங்களிலும் ஆழ்ந்த நம்பிக்கை இருந்தமையால், அரசர்கள் சோதிடர்களைத் தமது அவையில் நிரந்தரமாக வைத்திருந்தனர். சோதிடரைக் கணி என்றும் தலைமைச் சோதிடரைப் பெருங்கணி என்றும் கூறினர். அரச காரியங்களைச் செய்வதற்குப் பொருத்தமான காலத்தைக் கணித்துக் கூறுதல் இவர்களது பணியாகும். அவர்கள் குறித்த

நாளும், நல்லோரையும் அரசர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அதற்கேற்ப அரசர்கள் செயலாற்றினர்.

## நாழிகைக் கணக்கர்

ஒரு நாளில் அமையும் பொழுதைக் கணக்கிட்டுக் கூறுவார் நாழிகைக் கணக்கர் எனப்பட்டனர். பண்டைத் தமிழர் எங்ஙனம் ஒரு நாளின் பொழுதைக் கணக்கிட்டனர் என்பதற்கான சில சான்றுகள் சங்க இலக்கியப் பாடல்களில் கிடைக்கின்றன. நெடுநல்வாடைப்பாட்டில் பொழுதறியும் முறையை நக்கீரர்,

**................ மாதிரம்**
**விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்**
**இருகோல் குறிநிலை வழுக்காது குடக்கேர்**
**பொருதிறஞ் சாரா அரைநாள் அமயத்து**
**நூலறி புலவர் நுண்ணிதிற் கயிரிட்டுத்**
**தேஎங் கொண்டு தெய்வ நோக்கி** **(73-77)**

எனக்குறிப்பிட்டுள்ளார். திசைகள் எல்லாம் விரிந்து செல்லும் ஒளிக்கதிர்களைப் பரவச் செய்த அகன்ற இடத்தை உடைய ஞாயிறு (ஞாயிற்றின்நிலை அல்லது காலம் தெரியுமாறு பொருந்திய) இரண்டு கோல்களின் நிழல் குறிக்கின்ற காலநிலை தவறாது ஞாயிற்றின்நிலை மேற்கே ஏறி ஒரு பக்கத்தைச் சாரப் போகாத அரைநாள் நண்பகல் அல்லது சரியான உச்சிப்பொழுதில் எனப்பொருளமையும்.



இரண்டு கோல்கள் தென்புறம் ஒன்று வடபுறம் ஒன்றாக ஒன்றற்கொன்று சிறிது தூரத்தில் நிற்குமாறு ஊன்றப்படும். இவ்வாறு நிறுத்திய வற்றின் குறுக்கே இடைவெளி விட்டு, வேறு இருகோல்கள் நெடுமட்டமாக அல்லது படுமட்ட மாக, ஊன்றிய கோல்களின் மேல் படும்போது அவற்றின் நிழல்கள் காலையில் ஒன்றை விட்டு ஒன்று அகன்று நிற்கும். பொழுது செல்லச் செல்ல, ஞாயிறு உயர உயர, இவ்விரு நிழலும் குறுகிக் கொண்டே வரும். சரியான நண்பகலில் இவ்விரு நிழலும் ஒன்றன் மேல் ஒன்று

பொருந்தி ஒரே நிழலாகத் தோன்றும். ஞாயிறு இறங்க, இறங்க, இந்நிழல்கள் அகன்று அகன்று செல்லும். இந்நிழல்களின் நிலையாலும் இவற்றின் இடைவெளியைக் கொண்டும் பொழுது காண்பர்.

பத்துப்பாட்டுள் ஒன்றான முல்லைப்பாட்டில்,

**பொழுது அளந்தறியும் பொய்யா மாக்கள்**
**தொழுது காண்கையர் தோன்ற வாழ்த்தி**
**எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்நின்**
**குறுநீர்க் கன்னல் இனைத்தென்று இசைப்ப (55-58)**

என நாழிகை அளந்தறிவாரைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. நெடுநல்வாடையில் சூரிய ஒளியின் துணைகொண்டு பொழுதறிந்து கூறுமுறை காணப்பட்டது. முல்லைப் பாட்டில் கூறப்பெறும் நாழிகைக் கணக்கர் இருள் நிறைந்த இரவுப்பொழுதிலும் நன்கு அறிந்து பிழையில்லாமல் கூறுவர். எனவே இவர்கள் பொழுதளந்தறியும் பொய்யா மாக்கள் எனப்போற்றப்பெற்றனர். இங்ஙனம் பொழுதறிந்து நுவலும் நாழிகைக் கணக்கரும், அதனை அறிகருவியாகிய நாழிகை வட்டிலும பண்டைக் காலத்து வழக்கில் இருந்தமையைப் புலப்படுத்தும்.

நீரிட்டு ஒரு சிறு துளை வழியாக அந்நீரைச் சிறிது சிறிதாகக் கசியவிட்டு அந்நீரினை அளந்து காணும் கருவியாகலின் நாழிகை வட்டில் குறுநீர்க் கன்னல் எனப்பட்டது. கன்னல்—நாழிகை வட்டில். இந்நாழிகை வட்டிலைக் குறித்து அகநானூறு,

**குறுநீர்க் கன்னல் எண்ணுநர் அல்லது**
**கதிர்மருங் கறியா தஞ்சுவரப் பாஅய் (43.6-7)**

எனக்குறிப்பிட்டுள்ளது.

## புலவர்

**நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்**
**எல்லோரும் உவப்பது; அன்றியும்**
**நல்லாற்றுப் படூஉம் நெறியுமா ரதுவே (புறம். 195)**

கல்வி, கேள்வி, ஒழுக்கம் ஆகியவற்றில் சிறந்து விளங்கியவர் புலவர் பெருமக்கள். மக்களையும் மன்னனையும் நல்வழிப் படுத்தலே புலவர்களது தொழிலாகும். கொடை வள்ளல்களும் அரசர்களும் புலவர்கள் கூறும் அறிவுரை கேட்டு அதன்வழி ஒழுகினர்.

புலவர்கள் வறுமையால் வாடினும் தம்மதிப்பை இழக்க மாட்டார்கள், மன்னன் தவறு செய்த காலங்களில். அவர்கள் உளம்திருந்தப புலவர்கள் அறநெறி கூறினர். சோழன் நலங் கிள்ளியும் நெடுங்கிள்ளியும் போர்புரியமுற்பட்டபோது, அப்போரை நிறுத்தக் கோவூர்கிழார் கூறிய அறிவுரைகள் படிக்கப் படிக்க இன்பம் பயப்பன. (புறம். 45); மலையமான் மக்களைச் சோழ வேந்தன் யானைக்கிட்டுக் கொல்ல நினைத்த பொழுதும், இளந் தத்தன் என்ற புலவனை ஒற்றன் என்று தவறாகக் கருதிச் சோழ மன்னன் கொல்லக் கருதியபோதும் கோவூர்கிழார் குறுக்கிட்டுப் பேசிய நல்லுரைகள் புலவர் பெருந்தன்மைக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். சோழன் குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவள வனும் வெள்ளி அம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் ஒருங்கிருந்த காட்சியைக் கண்ட புலவர் காரிக்கண்ணனார் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார். ''நீங்கள் இருவரும் இன்று போலவே என்றும் உள்ளம் கலந்து வாழ்வீர்களாக' (புறம். 58) என்று வாழ்த்தினார். இப்பாடலில், ஒற்றுமையைப் புலவர் வற்புறுத்திக் கூறியிருக்கும் முறை மிகவும் பயன்தருவதாகும்.

இப்புலவர்கள் மன்னரும், வள்ளல்களும் கொடுக்கும் பரிசிலை அன்பின்றிக் கொடுத்தாலும், காலந்தாழ்த்துக் கொடுத்தாலும், நேரிற்காணாது பிறர்வாயிலாகக் கொடுத்தாலும், குறையக் கொடுத்தாலும் பெறுவதில்லை, அதேசமயம் பாரிவள்ளல் இறந்த போது கபிலரும்; ஆய்வேள் இறந்தபோது ஏணிச்சேரி முடமோசி யாரும்; அதியமான் இறந்தபோது ஔவையாரும் வருந்திப் பாடிய பாக்கள் மன்னர்களிடமும் வள்ளல்களிடமும் புலவர்கள் கொண்டி ருந்த நட்பையும், மதிப்பையும். செய்ந்நன்றியையும் நன்கு உணர்த்துவனவாகும்.

## மருத்துவர்

இக்காலத்தைப் போலவே பழந்தமிழ்ச் சமுதாயத்தில் நோய் தீர்க்கும் மருத்துவர் இருந்தனர். அவர்களைப் பற்றி அறியச் சங்க இலக்கியக் குறிப்புகள் சில பயன்படுகின்றன. அக்காலத்தில் மருத்துவர்களை **அறவோன்** (நற். 136) என்றும், **மருத்தன், மருத்துவன்** (கலி. 17:20-21; 137:24-25; புறம். 173:11) என்றும் அழைத்தனர். எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பரி பாடலில் தேவமருத்துவராகிய **தாமா** இருவரைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

**தாமா இருவர்** (பரி. 3-8)
**மருந்துரை இருவர்** (பரி 8-5)

நற்றிணைப் பாடலொன்று மருத்துவனின் இயல்பைக் குறிக் கின்றது. ஒரு மருத்துவன் என்பான், நீக்குதற்கரிய நோயைப் பெற்றவர்களுக்கு அவர்கள் கேட்ட உணவைக் கொடுக்காமல், அவர்பிணி தணிவதற்குரிய மருந்தை ஆராய்ந்து கொடுத்தல் வேண்டும். அத்தகு அறநெறி உடையவன் என நற்றிணை மருத்துவனைப் புகழ்ந்து கூறும். இம்மருத்துவனை அறவோன் என்று அழைப்பது குறிப்பிடத்தக்கது.

**மருந்தாய்ந்து கொடுத்த அறவோன்** (நற். 136:3)

சங்க இலக்கியங்களுள் ஒன்றான கலித்தொகையில்,

**திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய**
**மருந்துபோல் மருந்தாகி மனனுவப்ப** (17:20-21)

**இன்னுயிர் போத்தரு மருத்துவ ராயின்**
**யாங்காவாது கொல்** (137:24-25)

எனவரும் பாடலடிகளில் மருத்துவன் பற்றிய குறிப்பு அமை கிறது. இத்தகைய சங்க இலக்கியப் பாடற் பகுதிகளின்றும் அக் காலத்திய மருத்துவர் நோயுற்றவர்க்கு என்ன நோய் உள்ளது என்பதை ஆராய்ந்து அறிந்து அந்நோய் குறைவதற்குப் பொருத்த மான மருந்தைக் கொடுத்தனர் என்பதும், நோயால் பீடிக்கப்பட்ட

வர்க்கு உணவு விஷயத்தில் கட்டுப்பாடுகளை விதித்தனர் என்பதும் புலப்படும். மேலும் நோயுற்றாரைப் பிழைக்க வைக்கும் ஆற்றல் உள்ளவராயும் இருந்தனர்.

மருத்துவத் தொழிலையுடைய மருத்துவர் தாமோதரனார், மருத்துவர் நல்லச்சுதனார் போன்ற புலவர்களும் அக்காலத்தில் இருந்துள்ளனர்.

போரில் ஈடுபடும்போது கூர்மையான வாள்பட்டு உடலில் குருதி வழிய இரணம் ஏற்படும்பொழுது குருதி வருவதைத் தடுக்கவும், புண்பட்ட இடத்தில் வேறு தூசி முதலியன படாமல் இருக்கவும் இக்கால மருத்துவர்கள் செய்வது போலவே அக்காலத்திலும் குருதி வழியும் புண்களில் பஞ்சு வைத்துத் துணியால் கட்டும் பழக்கம் இருந்திருத்தல் வேண்டும். இக்கருத்தைப் புறநானூற்றுப் பாடல்,

**கதுவாய் போகிய துதிவா யெஃகமொடு**
**பஞ்சியுங் களையாப் புண்ணர்** (புறம்.353:15-16)

என்றது.

## அறுவை மருத்துவம்

அறுவை மருத்துவமுறை சங்கத் தமிழருக்குப் புதிதன்று. அறுவை மருத்துவம் செய்வார் **சல்லியக்கிரியை செய்வார்** எனப் பட்டனர். இத்தகைய சல்லியக் கிரியையில் வல்ல ஒரு மருத்துவரின் மகன் சல்லியக் குமரனார் எனப் பெயர்பெற்றார். அறுவை மருத்துவம் செய்தவுடன் அறுவை செய்யப்பட்ட உடற்பாகத்தை ஊசியின் துணைகொண்டு தைக்கப் பெற்றதைப் பதிற்றுப்பத்துப் பாடல் ஒன்று படம் பிடித்துக் காட்டுகின்றது. போரில் ஏற்பட்ட பிளவுபட்ட காயத்தைத் தையலிடும்பொழுது நெடிய வெண்மையான ஊசியானது தசையில் புகுந்து குருதியில் தோய்ந்து பின் வெளிவரும் காட்சியானது மீன்கொத்திப் பறவை நீரில் வாழும் மீனைக் கொத்தி எழும்போது அதன் அலகு எவ்வாறு நீரில் சென்று மீளுமோ அவ்வாறு காட்சியளிப்பதாக அப்பாடல் அமைகிறது.

**மீன்றேர் கொட்பிற் பனிக்கய மூழ்கிச்**
**சிரல்பெயர்ந் தன்ன நெடுவெள் ளூசி**
**நெடுவசி பரந்த வடு** (பதி. 42:2-4)

நெடுவெள்ளூசியை நெட்டை என்பதோர் கருவி என்பாரு முளர்.

தமிழ்நாட்டு மருத்துவர்கள் மூலிகைகள், பூக்கள், மரப்பட்டைகள், இலைகள், வேர்கள்' கிழங்குகள் போன்றவற்றின் துணை கொண்டு இயற்கை வழியே மருத்துவத்தைத் தொடங்கினர் என்பதை இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

**மருந்து கொண் மரத்தின்** (புறம். 180:5)
**மரஞ்சா மருந்து கொள்ளார் மாந்தர்** (நற். 226)

அவர்கள் சித்த வைத்திய முறையையும் அறிந்திருந்தனர் என்பது குறுந்தொகை(130) பாடலால் அறியவியலுகிறது.

# II போர்த் தொழில்

பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தில் வீரமும், காதலும் இரு கண்களாகப் போற்றப்பட்டன. மக்களின் புறவாழ்வில் மேற்கொள்ளப்பட்ட தொழில்கள் அவர்கள் அகவாழ்வு சிறக்கப் பயன்பட்டன. மக்களின் தலைவனாகத் திகழ்ந்த மன்னனின் தொழில் தனது நாட்டையும் மக்களையும் அறநெறி வழுவாது பாதுகாத்தலாகும், சிலநேரங்களில் தந்நாட்டு மக்களைப் பிறநாட்டு மன்னன் தாக்குதலினின்று காப்பாற்ற வேண்டிய சூழல் ஏற்படும். அந்நிலையில் போர்த்தொழிலில் மன்னன் ஈடுபட வேண்டி நேரிடும் பண்டைக் காலத்தில் மன்னர்கள் தம்மின் மிக்கார் எவருமில்லை என்ற பெருமிதவுணர்வோடு தம் அரண்மனை முற்றத்தில் மகளிர் விளையாடும் பந்தையும் பாவையையும் போரை விரும்பிக் கட்டின நெடியகொடியின் அருகே கட்டித் தொங்க விடுவர். பந்தும் பாவையும தொங்கவிடுதலின கருத்து பகைவரைப் பெண்டிர் போலக் கருதுதலாகும். ஆண்மையுடையார் இருப்பின் இவற்றை அறுமின் என்னுங் குறிப்பை உணர்த்துவன வாகும். இக்கருத்தை நக்கீரரின் திருமுருகாற்றுப் படையில் வரும்,

**செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி**
**வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்**
**பொருநர்த் தேய்த்த போரரு வாயில் (67:69)**

என்றதால் உணரலாம்.

## முன் அறிவிப்பு

அறநெறிநின்று அரசோச்சும் பண்பும் அதற்கேற்ற வீரமும் உடைய மன்னர் தாம் போர்த்தொழில் தொடங்குமுன், பசுக்களும், பசுவினது இயல்புடைய பார்ப்பனரும், மகளிரும், நோயுடையாரும், தென்திசைக்கண் வாழ்வோராகிய நுங்குடியில் இறந்தோர்க்குச் செய்தற்கரிய கிரியையைப் பண்ணும் பொன் போலும் பிள்ளையைப் பெறாதவரும், பாதுகாப்பான இடத்தைச் சென்று அடையுங்கள். எம்முடைய அம்பை விரையச் செலுத்தக் கடவேம் என அறிவிப்பர். சான்று :

**ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்**
**பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்**
**தென்புல வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும்**
**பொன்போல் புதல்வர்ப் பெறாஅ தீரும்**
**எம்அம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினென**
**அறத்தாறு நுவலும் பூட்கை (புறம். 9:1-6)**

போருக்குப் புறப்படுமுன் வீரர்களும் மன்னர்களும் சூளுரைத்தனர். அவற்றைக் காப்பதும் அவர்கள் கருத்து. இதற்கு வஞ்சினங்கூறல் அல்லது ஒன்றுமொழிதல் என்பது பெயர். (பதி.41)

## போர் ஆயுதங்கள், படைகள்

போருக்குப் பயன்படக் கூடிய கருவிகளை ஓரிடமாகப் பாதுகாத்து வைக்கப் படைக்கலக் கொட்டில்கள் இருந்தன. ஔவையார் அதியமான் நெடுமான் அஞ்சியின் போர் செய்யும் ஆற்றலைச் சிறப்பித்துப பாடிய பாடலொன்று புறநானூற்றில் காணப்படுகிறது. அதில் அவன் படைச்சிறப்பினைக் கூறுகையில் போர்க்கருவிகள், படைகள் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார்.

'போரைச் செய்தற்குப் புடை பெயர்ந்து உறை கழித்த வாட்கள்; வேல்கள் பகைவரது காவலையுடைய அரணை அழித்தலால் உரு இழந்தன; களிறுகள் அப்பகைவர் களிற்றுத் திரளொடு பொருது அழித்தலால் தொடி கழிந்துள்ளன; குதிரைகள் போர்களக் குருதியில் தோய்ந்து குளம்புகள் மாறுபட்டுள்ளன. பகைவர் எறிந்த அம்புகளால் கேடயங்கள் துளையுண்டன. அம்புகள் கழல் பாண்டில் வடிவில் இருந்தன. (புறம். 97:1-16) இப்பாடல் குறிப்பினின்றும் போரில் பயன்பட்ட கருவிகள், படைகள் ஆகியன வற்றை அறியமுடிகின்றது.'

## போர் முரசு

போர்க்குரிய முரசுகள் அதற்கேற்ற வகையில் சிறப்புற அமைக்கப்படும். மண்ணைக் குத்திக் கொள்வதால் வரிவரியாகக் கீறப்பட்ட மிக்க கூரிய கோட்டினையுடைய பெருமை பொருந்திய நல்ல ஆனேறு இரண்டினைத் தம்முள் போர்செய்ய விடுத்து வெற்றிபெற்ற ஏற்றினுடைய தோலை மயிர் சீவாது போர்த்துத் திண்ணிதாய் இழுத்துக்கட்டிப் போர்முரசைச் செய்வர்.[1]

போர்முரசு வைப்பதற்கென்று தனியாக முரசுக் கட்டில் இருக்கும். குற்றந்தீர வலித்துப் பிடித்த வாரையுடைய கருமரத் தால் செய்யப்பட்ட முரசினை இதன்மேல் வைத்திருப்பர். முரசுக் கட்டிலின்மேல எண்ணெயினது நுரையை முகந்தாற் போன்ற மெல்லிய பூக்கள் தூவப் பெற்றிருக்கும். இம்முரசிற்கு மயிலினது தழைத்த நெடிய பீலியால் தொடுக்கப்பட்ட ஒள்ளிய பொறியை உடைத்தாகிய நீலமணி போலும் நிறத்தையுடைய மாலையைப் பொற்றளிரையுடைய உழிஞையுடனே பொலிவு பெறும்படி அணிவிப்பர். முரசுறை கடவுட்குக் குருதிப்பலி தரும் மரபுண்டு. இக்கருத்தமையப் புறநானூற்றில்,

**மாசற விசித்த வார்புறு வள்பின்**
**மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை**
**ஒலிநெடும் பீலி ஒண்பொறி மணித்தார்**

---

1. புறம். 288.

பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை யுருகெழு முரசம் (50:1-5)

எனக் கூறப்பட்டுள்ளது.

இத்தகைய மரியாதைக்குரிய போர் முரசம் போர்க்காலங்களில் போர்க்களத்தில் முழக்கப்படும்.

முரசுடைப் பெருசமந் ததைய (பதி. 34:10)

முரசின் முழக்கம் வீரரைப் போர்க்கட் செலுத்தும் குறிப்புடையது என்பதனைப் பதிற்றுப்பத்து,

கடுஞ்சிலை கடவுந் தழங்குகுரன் முரசம்
அகலிரு விசும்பின் ஆகத் ததிர (பதி. 68:3-4)

என்றது.

இதில் வில்வீரரை ஏவும் முரசு முழக்கம் என்றற்குக் கடுஞ்சிலை கடவும் எனக் கூறப்பட்டது. போர்க்களத்தில் கடல் போன்ற சேனைகளுக்கு நடுவே கடிய முழக்கத்தை உடைய முரசு காற்றால் மோதப்பட்ட கடல்போலக் கடிதாய் முழங்குகின்றது. இதனை,

கடல்போல் தானைக் கடுங்குரன் முரசம்
காலுறக் கடலிற் கடிய உரற (பதி. 69:3-4)

என்ற பாடலடிகள் உணர்த்துவன.

போர் நிகழ்கையில் படையெடுத்து முன்னேறிச் செல்லுமாறு வீரரை ஏவுதற்கு முரசு முழக்கித் தெரிவிப்பர். இதனை,

எடுத்தேறு ஏய கடிப்புடை அதிரும்
போர்ப்புறு முரசங் கண்ணதிர்ந் தாங்கு (பதி. 84:1-2)

என்றதால் அறியலாம். இவ்வாறு போர்த்தொழிலில் போர் அறிவிக்க, படைகளுக்கு அறிவிக்க வேண்டிய விதிமுறைகளைத் தெரிவிக்க, போர் வெற்றியைக் கொண்டாட எனப் போர்முரசம் போர்த் தொழிலுக்குப் பெருமளவு பயன்பட்டது.

## போர் மறவர்

போர்த் தொழிலில் ஈடுபடும் வீரர்கள் போர்த்தொழிலில் கூறப்படும் அறத்துறை மாறாத வீரராயிருப்பர். இவர்கள் 'மாறா மைந்தர்' எனப்பட்டனர். போர் மேற்கொண்டு செல்லும் வீரர்கள் அல்லது மறவர்கள் அடங்கிய படை காலாட் படை எனப்படும். இவ்வணியில் முன்னே பல போர்களைச் செய்து வெற்றி பெற்று மேம்பட்ட ஆடவர்கள் முன் நிற்பர். அதையடுத்துத் தூசிப் படைதங்கும். அரசனைச் சூழ்ந்துவரும் பெரிய சேனை வீரர் மூலப்படை எனப்படும்.

போரிடச் செல்லும் வீரர்கள் போர்ப்பூ அணிதல் மரபு. சான்றாக வெள்ளிய பனந்தோட்டிலே கட்டிய ஒள்ளிய குவளைப்பூவை உடையராய் வாளினது வாயால் வடுப்பட்ட மாட்சிமை பொருந்திய தழும்புகளை உடைய உடம்பினராய் இடிபோலத் தாக்கும் வல்லமை உடையவர். இவர்கள் தாம் சூடிய போர்க் கண்ணிக்கு ஒப்பப் போர்வினை செய்யக் கருதும் பண்புள்ளவர்.[2]

அக்காலத்தில் வாழ்ந்த போர் வீரர்கள் போர் என்று கேட்பின் விரும்பி உடனெழுவர். வீரக்கழலை அணிந்த அப்போர் மறவர்கள் பகைப்புலம் காடு நடுவே கிடந்த நாடெனினும், தொலை தூரத்தில் இருந்தாலும் போக முடியாது என்று கருதமாட்டார்கள்.

**போரெனில் புகலும் புனைகழல் மறவர்**
**காடிடைக் கிடந்த நாடுநனி சேய**
**செல்வேம் அல்லேம் என்னார்** (புறம். 31·9-11)

போர் வீரனைப் பற்றிக் கூறவந்த பொன்முடியார், "போர்க் களத்தே மின்னும் வாளொடு களிறுகளைக் கொன்று போரில் வென்று மீண்டு வருதல் காளைக்குக் கடனே" என்றனர்.[3]

இவர்கள் குறிதப்பாது அம்பு செலுத்தவல்லவர்கள்.

---

2. பதி:51
3. புறம். 312

கெடலருந் துப்பின் விடுதொழில் முடிமார்
வினைவல் அம்பின் விழுத்தொடை மறவர்
(அகம். 105:11-13)

### கூளிப்படை

கொள்ளை வல்சிக் கவர்காற் கூளியர்
கல்லுடை நெடுநெறி போழ்ந்து சுரனறுப்ப
ஒண்பொறிக் கழற்கால் மாறா வயவர் (பதி 19:1-3)

போர் மேற்கொண்டு காலாட்படை பகைப்புலம் நோக்கிச் செல்லும். கல்லும் முள்ளும் நிறைந்த நாடுகடந்து செல்லும் படைவீரர்க்கு முன்னே கூளிப்படை செல்லும். போர் மறவர் வருந்தாது விரைந்து செல்வதற்கேற்ற நல்லவழி அமைத்துத் தருவர். இவர்கள் பகைப்புலத்தே சென்று சூறையாடிப் பெற்ற பொருள்களைக் கொண்டு உண்பன உண்டு வாழும் இயல்பினர் என்றற்கு **கொள்ளை வல்சி** என்றும்; தம்மைப் பின்னே தொடர்ந்து வரும் தானைக்கு நெறியமைக்கும் தொழிலால் எங்கும் தங்காது மேற்சென்று கொண்டே இருப்பதால் **கவர்காற் கூளியர்** என்றுங் கூறினார். எனவே இக்கூளிப் படையினர்க்குப் பகைப்புலத்தைச் சூறையாடுவதும், வழி அமைத்தலும் தொழிலாகும். இக்கூளிப் படையைப் புறநானூற்றுப் பாடலொன்று,

கூர்நல் அம்பில் கொடுவிற் கூளியர்
கொள்வது கொண்டு கொள்ளா மிச்சில் (புறம்-23)

என்றது. 'இக்கூளிப்படை இக்காலத்தே பயனீர் (pioneers) என்றும் சாப்பர், மைனர் (Sappers and miners) என்றும் வழங்கும்.[4]

### யானைப் படை

போர்ப்பயிற்சி நன்குடைய யானைகளைக் கொண்டு யானைப் படை அமைப்பர். யானைகள் சிறந்த முகபடாத்தையும், விளங்கு

---

4. பதிற்றுப்பத்து. ஒளவை துரைசாமிப்பிள்ளை உரை. ப

கின்ற பட்டத்தையும் அணியப் பெற்றனவாய், மணங்கமழும் மதத்தாலே சேறுண்டான நறிய தலையினை உடையவாய், மலையென்று கண்டோர் மருளும் உயர்ந்த தோற்றத்தினை உடையவாய், போர்த் தொழிலிலே பயின்ற திறமையோடு வெகுளி மிக்குப் போர்க்களத்தே பகைவீரர்களைக் கொன்று செருக்கித் திரிவன. போர்த்தொழில் வல்ல யானைகளைப் பதிற்றுப்பத்து **வினைநவில் யானை (82); தொழில்நவில் யானை (84)** எனச் சிறப்பித்துப் பாடியுள்ளது.

## குதிரைப் படை, தேர்ப்படை

சங்க கால இலக்கியங்களுள் ஒன்றான மதுரைக்காஞ்சி எனும் நூலில் குதிரைப்படை, தேர்ப்படை, இவற்றினிடையே போர்மறவர் ஆகிய முப்படைகளின் செயல் அழகுற வருணிக்கப்பட்டுள்ளது விரைந்து செல்லும் குதிரைகளால் எழுந்த துகள் வெயிலை மறைத்தலானே அப்போர்க்களம் இருண்டு கிடத்தலையும், இதனிடையே திண்ணிய தேர்ப்படை காற்றுச் சுற்றி அடிப்பது போன்று விரைந்து சுழலுதலையும், இவற்றினிடையே வாட்போரில் வல்ல வீரர்கள் தம்தோளாலே வாள்வீசிப் பகைவரைக் கொன்று குவித்து வெற்றி பெறுதலையும் மதுரைக்காஞ்சி

**வினைநவின்ற போர்யானை**
**சினஞ்சிறந்து களனுழக்கவும்**
**மாவெடுத்த மலிகுரூஉத்துகள்**
**அகல்வானத்து வெயில்கரப்பவும்**
**வாம்பரிய கடுந்திண்தேர்**
**காற்றெனக் கடிதுகொட்பவும்**
**வாள்மிகு மறமைந்தர்**
**தோள்முறையான் வீறுமுற்றவும்** **(47-54)**

எனச் சித்திரித்துள்ளது. இவ்வாறாகப் போர் நடைபெறும்பொழுது காலாட்படை, யானை, குதிரை, தேர் என நால்வகைப் படைகள் போரில் பங்கு கொண்டன.[5]

---

5. களிறுபரந் தியலக் கடுமா தாங்க
ஒளிறுகொடி நுடங்கத் தேர்திருந்து கொட்ப
எஃகு துரந்தெழுதருங் கைகவர் கடுந்தார் (பதி.49:4-6)

போரில் வெற்றி பெற்ற மன்னனும் அவனது படைவீரரும் வெற்றியைக் கொண்டாடுவர். இதனை அகநானூற்றுப் பாடலொன்று

**உடனியைந் தெழுந்த இருபெரு வேந்தர்**
**கடல்மருள் பெரும்படை கலங்கத் தாக்கி**
**இரங்கிசை முரசம் ஒழியப் பரந்தவர்**
**ஓடுபுறங் கண்ட ஞான்றை**
**ஆடுகொள் வியன்களத் தார்ப்பு (116:15-19)**

எனக் கூறுகிறது.

இருபக்கத்துப் படையினர் போரிடுகையில் வெற்றி பெற்றவர்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தோடு தமது வெற்றியைக் கொண்டாடுவர். காட்டாக, 'மலர்ந்த பூமாலையையும், மைகொண்டு அழகு செய்த யானையையும் மறத்தன்மை மிகுந்த போர்த் தொழிலையும் உடைய பாண்டிய மன்னனுடைய ஒருநாளும் ஒழிதலில்லாத திருவிழாக்களையுடைய மதுரை நகரத்தின் பக்கத்திலுள்ளபோர்க்களத்திலே, தம்முள் ஒருங்குகூடித் தன்மேல் போரிடுதற்குஎழுந்து வந்த சேரனும் சோழனுமாகிய இரண்டு முடி மன்னர்களும் அவருடைய கடல் போன்ற பெரிய படைகளும் கலக்கம் எய்தும்படி அவரோடு போர்செய்து, முழங்குகின்ற தமது போர் முரசங்களைக் கைவிட்டு நாற்றிசையினும் பரவி அம்மன்னர் தம்படைகளோடு ஓடுங்கால் அவர் தம்மைப் புறங்கண்டபொழுது, பாண்டிய மன்னன் வெற்றிகொண்ட அகன்ற அப்போர்க் களத்தின் கண்பெருத்த மகிழ்ச்சி ஆரவாரமெழுகின்றது.' தோல்வியுற்ற மன்னனது முரசங்களையும், வெள்ளிய குடைகளையும் கைப்பற்றிக் கொள்வதுண்டு.

**சான்று : எழுவர் நல்வல மடங்க வொருபகல்**
**முரசொடு வெண்குடை அகப்படுத் துரைசெல**
**(அகம். 36:20-21)**

## விழுப்புண்பட்டு இறந்தமை கண்டு மகிழ்தல்

சங்க காலத்து மக்களிடையே காதலும் வீரமும் இருகண்களாகப் போற்றப்பட்டன. அன்புநிறைந்த இல்லற வாழ்வை

எந்த அளவு போற்றி வாழ்ந்தனரோ அதேபோல் போர் மூளும் பொழுது ஒவ்வொரு குடும்பத்திலுள்ள ஆண்மகனும் பேரார்வத்தோடு போரில் பங்கு பெறச் செல்வான். இம்மறப் பண்பிற்குச் சான்றாக ஒக்கூர் மாசாத்தியார் பாடிய புறநானூற்றுப் பாடல் ஒன்றைக் காண்போம். சிறந்த மறக்குடியில் பிறந்த பெண் ஒருத்தி முன்னாளில் உண்டாகிய போரின்கண் இம்மறக்குடி மகளுடைய தந்தையானவன் யானையைக் கொன்று தானும் வீழ்ந்து மாண்டான். நேற்று இவளுடைய கணவன் பெரியவாகிய ஆநிரைகளைக் கவர்ந்து செல்லாதவாறு பகைவரைக் குறுக்கிட்டு நின்று போரிட்டு அவ்விடத்தே மாண்டான். இன்றும் போர்க்கெழுமாறு வீரரை அழைக்கும் பறையொலி கேட்டு, மறப்புகழில் விருப்பங்கொண்டு, அறிவு மயங்கி வேற்படையைக் கையிலே கொடுத்து, வெண்மையான ஆடையை எடுத்து அணிவித்து அலங்கரித்து, இந்த ஒரு மகனையல்லது இல்லாதவளே ஆனாலும் போர்க்களம் நோக்கிச் செல்வாயாக எனச்சொல்லித் தன் மகனை விடுக்கின்றாள் (புறம்.279). அந்த அளவு மறப்புகழில் ஆர்வமுள்ளவராய் அக்கால மக்கள் இருந்தனர். போரில் ஈடுபட்டுப் புகழுடன் விழுப்புண்பட்டு இறந்தமை கண்டு மகிழ்ந்தனர்.

> **.................முதியோள் சிறுவன்**
> **களிறெறிந்து பட்டனன் என்னும் உவகை**
> **ஈன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர்** (புறம். 277:2-4)

போரில் இறவாது மரணம் அடைந்தவரை வாளால் பிளந்து அடக்கம் செய்வர் என்ற செய்தி புறநானூற்றில் (93வது பாடல்) கூறப்படுகிறது. போரிலின்றி நோயினால் இறந்த உடலை அவர் வாளாற் படாத குற்றம் அவரிடத்தினின்றும் நீங்க வேண்டி, அந்தணர் அவ்வுடலை நல்ல பசிய தருப்பைப் புல்லிலே கிடத்தி, தமது ஆண்மையே பற்றுக் கோடாக, நல்ல போரிலே இறந்து பட்ட மேம்பட்ட வீரக்கழலினையுடைய வேந்தர் செல்லும் உலகத்திலே செல்க என்று வாளால் பிளந்து அடக்கம் செய்வர். மேற்கூறிய கருத்துக்களினின்று அக்காலத்திய மக்கள் போர்த் தொழிலில் ஈடுபடுவதைப் பெருமைக்குரிய கடமையாகக் கருதினர் என்பது புலப்படும்.

## புறப்புண் நாணல்

இருதிறத்தார் போரிடுகையில் பகைவனது படைக்கலனால் எதிர்பாரா வகையில் புறப்புண் பட்டாலும் அதற்காக வருந்தி உயிர் நீப்பர். அகநானூற்றுப் பாடலொன்றில் இக்கருத்தமைந்த வரலாற்றுச் சான்றொன்று காணப்படுகிறது. புகழ்க்க படைகளை உடைய கரிகாற் சோழனொடு வெண்ணி என்னும் ஊரின பக்கத்தே அமைந்த போர்க்களத்திலே போரிட்டபொழுது பட்ட புறப்புண்ணிற்குப் பெரிதும் நாணமுற்ற சேரலாதன் என்னும் சேரமன்னன் தான் தோற்ற அப்போர்க்களத்திலேயே வாளேந்திய கையோடு உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்தான். எதிர்பாரா வகையில் ஏற்பட்ட புண்ணே எனினும் அதற்காகப் புறப்புண் பட்ட பழிதீர இருந்து உயிர் விடுகின்றான. அக்காலத்திய போர் மறவர் போரிலே விழுப்புண்பட்டால் எவ்வளவு பெருமிதங் கொண்டனரோ அதே போலப் புறப்புண் எதிர்பாரா வகையில ஏற்பட்டாலும் அதற்காக நாணி உயிர்நீக்கவும் துணிவர் என்பதை அறிகிறோம். இவ்வாறாகப் பழந்தமிழ்க் குடியில போர்த்தொழில் பேரீடுபாட்டுடன் போற்றப்பட்டதை மேற்கூறப்பட்ட சான்றுகளினின்றும் அறியலாம்.

உழைப்பும் மானமும் வீரவாழ்வின் இரு சிறப்பியல்புகள். வியர்வை சிந்த உழைத்தலும் அது மாட்டாதவிடத்துக் குருதி சிந்தப் போரிடலும் மக்களின் கடமைகளாம். முற்காலத்தில் அத்தகைய சிறந்த வீரர்கள் வாழ்ந்து கடமையாற்றியதன் விளைவே சங்க காலத்து வாழ்ந்த புலவர்களை உணர்ச்சிமிகு புறப்பாடல்கள் பல பாடக் காரணமாய்த் திகழ்ந்திருக்கலாம்.

# III வாணிகம்

**உழவு தொழிலே வரைவு வாணிபம்**
**வித்தை சிற்பம் என்றித்திறத் தறுதொழில்**
**கற்கும் நடையது கரும பூமி**

புண்ணிய பூமி என்று போற்றப்படும் இந்தியாவுக்குப் பரத கண்டம், பாரதவர்ஷம் என்ற பெயர்கள் முன்னாள் முதல்

வழங்குவது போலவே அதற்குக் 'கர்மபூமி' என்னும் பெயரும் வழங்கப்பட்டது. கர்மபூமி என்பதற்குப் பல்வேறு பொருள்கள் கூறப்பட்டாலும் ''உயர்ந்த தொழில்களையே செய்தற்குரிய பூமி'' எனப் பொருள் காணுதலே முன்னோர் கருத்துடன் பொருந்துவதாகும். பண்டைத் தமிழர் இக்கருத்தனையே கூறி இருக்கின்றனர் என்பது மேற்கூறிய திவாகர நூற்பாவால் விளங்கும். திவாகரர் கூறிய கருத்தே, கர்மபூமி என்பதன் பழம்பொருள் என்பதற்கு வேறொரு எடுத்துக்காட்டினையுங் காணலாம். சமண மதத்திற்குரிய புனிதநூலாகிய ஸ்ரீபுராணத்தில், ஆதிதீர்த்தங்கரரது நாளில் நிகழ்ந்த சிறப்புகளைக் கூறுமிடத்து,

''பகவான் ஜனங்கட்கு ஜீவனோபாயமாக உழவு, தொழில், வரைவு, வாணிபம், வித்யா, சில்ப மென்னும் ஷட்கர்மங்களையும் உபதேசித்தருளி'' என்றதாலும் ''பரதக்ஷேத்திரம் ஷட்கர்மங்களாலே பிரவர்த்தித்தலின் போகபூமி என்னும் பெயர் தவிர்ந்து, **கர்மபூமி** என்னும் பெயர் பெற்றது'' என்றதாலும் பரதகண்டத்திற்குக் 'கர்மபூமி' என்ற பெயர் வழங்கப்பட்டமையும், அரிய ஆறு தொழில்கள் இன்னவை என்பதையும் நன்கு உணர்ந்து கொள்ள முடிகிறது.

இக்கர்மபூமிக்குரிய அறுவகைத் தொழில்களிலே உழவும் வாணிபமுமே தலைசிறந்தன என்பது அறிஞர்க்கெல்லாம் ஒத்த கருத்தாகும். ஒருநாட்டின் மேம்பாட்டிற்கு இவ்விரண்டு தொழில்களும் ஒருங்கு செழித்திருத்தல் இன்றியமையாததாகும். இவ்வகையில் பழந்தமிழகம் இவ்விரண்டு தொழில்களும் குறைவறப் பெற்றிருந்தது என்பதற்கு எண்ணிறந்த சான்றுகள் உள்ளன.

**இருவகையான் இசை சான்ற**
**சிறுகுடிப் பெருந்தொழுவர்**

எனப் பாடுகிறது சங்க இலக்கிய மதுரைக்காஞ்சி எனும் நூல். இப்பாடலடிகளுக்கு உரை ஆசிரியர் நச்சினார்க்கினியர் உலகத்துத் தொழில்களில் மேலாகச் சொல்லும் உழவு, வாணிகம் என்கின்ற இரண்டு தொழில்களும் பண்டை நாளில் சிறப்புற்றிருந்தன என்று கூறுகிறார். இதன்மூலம் தமிழ்நாட்டில் வாணிகம் எத்தகைய அளவிற்கு உயர்வாகக் கருதப்பட்டுப் போற்றப்பட்டது என்பதை

அறியலாம். சங்க இலக்கியப் பாடல்களில் வாணிக வளத்தைக் குறித்து எண்ணற்ற சான்றுகள் உள்ளன. சங்ககால மக்களின் வாணிகம் அவர்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தது. அவர்கள் வாழ்ந்த நிலத்திற்கு ஏற்பத் தொழில் மாறுபட்டு, அதனால் வாணிகம் வேறுபட்டுக் காணப்படுவதை அவர்களின் தொழில் முறையைப் பற்றி அறியும்பொழுது தெரிய வருகின்றது. ஒருநாட்டின் வாணிக நிலை என்னும்போது அதை உள்நாட்டு வாணிகம் வெளிநாட்டு வாணிகம் என்ற இரண்டு நிலைகளில் பிரித்தறியலாம்.

## உள்நாட்டு வாணிபம்

பண்டை நாளில் வாணிகம் **'பண்ட மாற்று'** முறையில் அமைந்திருந்தது. மக்கள் வாழ்க்கைக்குத் தேவையாகத் தம்மிட முள்ள பொருள்களைக் கொடுத்து இல்லாத பொருளைப் பிறரிட மிருந்து பெறுதல் பண்டமாற்று என வழங்கப்படும். நானிலங் களில் வாழ்ந்த மக்கள் தத்தம் நிலங்களில் கிடைத்த பொருள் களைக் கொண்டு சென்று மற்ற நிலங்களிலுள்ள உணவுப் பொருள் முதலியவற்றைப் பண்டமாற்று முறையில் பெற்று வந்தமை சங்க இலக்கியப் பாடல்களில் பலயிடங்களில் கூறப்பட்டுள்ளது.

உள்நாட்டு வாணிகத்தைப் பற்றி அறியும்பொழுது மக்கள் நிலத்திற்கு நிலம் மாறுபட்டதால் போக்குவரத்திற்குச் சாதனங்கள் தேவைப்பட்டன. பொருள்களை ஏற்றிச் செல்ல வண்டிகள், எருதுகள், கழுதைகள் நிலத்தில் செல்லும்பொழுது பயன்பட்டன. உள்நாட்டு வாணிகத்திற்குத் தோணி அம்பி, பஃறி எனக் கூறப் பட்ட படகுகள் பயன்படுத்தப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

நெய்தல் நிலத்திலிருந்து உப்பு மூட்டைகளை எடுத்துச் செல்ல எருதுபூட்டிய வண்டிகள் பயன்பட்டதை,

> **நோன்பகட்டு உமணர் ஒழுகையொடு வந்த**
> **(சிறுபாண். 55)**

என்ற பாடலடியால் அறியலாம். அவ்வண்டிகளை உமணப் பெண்டிர் ஓட்டிச் செல்வர். அவ்வண்டிகளின் அச்சு முறியாமல் உப்பு வணிகர் இருபுறமும் பார்த்து நடப்பர், என்பதைப் பெரும் பாணாற்றுப்படை (64-65) தெரிவிக்கின்றது.

## கழுதைகள்

எருதுகளைப் போன்று கோவேறு கழுதைகளையும் கொண்டு வண்டிகளை இழுக்கப் பயன்படுத்தினர், அவை அத்திரி என்ற பெயரில் அழைக்கப்பட்டன. அதனைப் பூட்டி இழுத்துச் சென்ற செய்தியினை

**கொடிநுகம் நுழைந்த கணைக்கால் அத்திரி (அகம்.350)**

என்றதாலும் மேலும் நீண்ட காதுகளையுடைய கழுதைகளைப் பயன்படுத்திய செய்தியை,

**நெடுஞ்செவிக் கழுதை குறுங்கால் ஏற்றை**
**புறநிறைப் பண்டத்துப் பொறை (அகம்.343)**

என்றதாலும் அறியலாம்.

மிளகு மூட்டைகளைக் கழுதையின் மீது ஏற்றிச் செல்லும் பொழுது அவை சுளைகளை உடைய பலாப்பழ அளவிற்கு இருந்ததாகவும், கழுதைகள் நேரான காதினையும், குறிசுட்ட உரமான முதுகையும் உடையவாக இருந்தன என்றும் பெரும்பாணாற்றுப் படை(71-81) குறிப்பிடுகின்றது.

உள்நாட்டு வாணிகத்திற்குப் படகைப் பயன்படுத்தினர் என்பதை,

**வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி**
**நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி (28-30)**

என்ற பட்டினப்பாலை அடிகளால் அறியலாம்.

பண்டைத் தமிழகத்தில் உள்நாட்டு வாணிகத்தில் பண்டமாற்று செய்யப்பட்ட பொருள்கள் எவை எவை என்பதைப் பின் வருமாறு காணலாம். பண்டமாற்று முறையில் **நெல்** முக்கிய தானியமாகக் கருதப்பட்டது. உப்பின் மதிப்பு நெல்லின் மதிப்பிற்கு ஈடாக இருந்திருக்கலாம் என்பதை,

**நெல்லும் உப்பும் நேரே ஊரீர் கொள்ளீரோ (அகம்.390)**
**நெல்லின் நேரே வெண்கல் உப்பு (அகம்.140)**

உப்பை மாறி வெண்ணெல் தரீஇய (குறுந். 269:5)
உமணர் தந்த உப்புநொடை நெல் (நற்.254:6)

என்ற அடிகளானும், நற்றிணைப் பாடலொன்று 'மருதநிலத்தின் கணுள்ள உப்பு வணிகர் தமது நாட்டில் விளைந்த வெளிய நெல்லை வண்டிகளில் ஏற்றிச் சென்று கொடுத்து அந்நெல்லின் விலையாக நெய்தல் நிலத்தில் விளைந்த உப்பைப் பெற்றுக் கொண்டுபோய் விலைகூறி விற்பர்' (183. 1-4) எனக்குறிப்பிட்டுள்ளதாலும் அறியலாம்.

## பண்டமாற்று செய்யப்பட்ட பிறபொருள்கள்

நெய்தல் நிலத்து மீன்களைக் கொடுத்து நெல் பெறுதல்.

1. வலைவல் பாண்மகன் வாலெயிற்று மடமகள்
   வராஅல் சொரிந்த வட்டியுள் மனையோள்
   யாண்டுகழி வெண்ணெல் நிறைக்கும் (ஐங். 48:1-3)
2. சின்மீன் சொரிந்து பன்னெல் பெறூஉம் (ஐங். 49:2)
3. பசுமீன் நொடுத்த வெண்ணெல் (அகம் 340:14)
4. மீன்நொடுத்து நெற் குவைஇ (புறம்.343:1)

தேறல் விற்று நெல் பெற்றதை,

நறவு நொடை நெல்லின் (அகம். 61:10)

மான்தசைக்கும் தயிருக்கும் ஈடாக வெண்ணெல் பெற்றதை,

மான்தசை சொரிந்த வட்டியும் ஆய்மகள்
தயிர்கொடு வந்த தசும்பு நிறைய
ஏரின் வாழ்நர் பேரி லரிவையர்
குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்
முகந்தனர் கொடுப்ப உவந்தனர் பெயரும் (புறம்.33:2-6)

கெடிறுமீனுக்கு ஈடாகப் பயறு பெற்றதை,

முள்ளெயிற்றுப் பாண்மகள் இன்கெடிறு சொரிந்த
அகன்பெரு வட்டி நிறைய மனையோள்
அரிகாற் பெரும்பயறு நிறைக்கும் (ஐங்:47.1-3)

வாளைமீனுக்கு விலையாகக் கழற்காய் போன்ற பெரிய முத்துகளையும் நல்ல அணிகலன்களையும் பெற்றதை,

............ ...கணைக்கோட்டு வாளைக்கு
கழங்கு உறழ் முத்தமொடு நன்கலம் பெறூஉம்
(அகம்.126:8)

கள்ளுக்கு விலையாக முத்துச் சிப்பிகளைக் கொடுத்ததை,

பன்மீன் கொள்பவர் முகந்த இப்பி
நாரரி நறவின் மகிழ்நொடைக் கூட்டும் (அகம். 296:8-9)

கள்ளுக்கு விலையாக யானைவெண்கோட்டினைக் கொடுத்ததை

வேந்தூர் யானை வெண்கோடு கொண்டு
... ... ... ...
அருங்கள் நொடைமை தீர்ந்தபின் மகிழ்சிறந்து
(பதி. 68:9-11)

கள்விலைக்கு ஈடாகப் பகைவரது ஆன்களைப் (பசுக்களை) பற்றிக் கொணர்ந்து கொடுத்தலை,

கேளா மன்னர் கடிபுலம் புக்கு
நாளா தந்து நறவு நொடை தொலைச்சி (பெரும்.140:41)

நிறுத்த ஆயந் தலைச்சென் றுண்டு (புறம்.258:3)

யானைக்கோட்டினை விற்று உண்ணும் உணவைப் பெறுதலை,

கடுங்கண் வேழத்துக் கோடு நொடுத்து உண்ணும்
(குறுந் 100:4)

நெய்விலைக்கு ஈடாக எருமை பெறுதலை,

................ ... ஆய்மகள்
நெய்விலை கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை நல்லான் கருநாகு பெறூஉம் (பெரும். 162-65)

குறிஞ்சி நிலத்தோர் தேனுங் கிழங்குங் கொடுத்து மீன்நெய்யும் நறவும் பெறுதலை,

**தேனெய்யொடு கிழங்குமாறியோர்**
**மீனெய்யொடு நறவு மறுகவும் (பொருந. 214-15)**

இனிய கரும்பையும் அவலையும் விற்று அவற்றிற்கு மாறாக மானினது தசையும் கள்ளும் பண்டமாற்றாகப் பெறுதலை,

**தீங்கரும்போ டவல்வகுத்தோர்**
**மான்குறையொடு மதுமறுகவும் (பொருந. 216-17)**

பாலை விற்று உணவினைப் பெறுதலை,

**பாலொடு வந்து கூழொடு பெயரும் (குறுந். 221:3)**

போரிலே கிடைத்த பொருள்களை விலையாகக் கொடுத்துக் கள் பெறுதலை,

**அரும்பறை வினைஞர் புல்லிகல் படுத்துக்**
**கள்ளுடை நியமத்து ஒள்விலை கொடுக்கும்**
**(பதி.75:9-10)**

என்றும், வரும் இலக்கியச் சான்றுகளினின்றும் பண்டமாற்று முறையால் பண்டைத் தமிழ மக்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களைப் பெற்று வாழ்ந்ததை உணரலாம். தமிழகத்தைப் போலவே தொடக்ககால நிலையில் பிறநாடுகளிலும் உள்நாட்டு வாணிகத்தைப் பொறுத்த வரையில் பண்டமாற்று முறையே பின் பற்றப்பட்டதை அறியலாம். மக்கள் வாழ்வியலில் படிப்படியே வளர்ச்சியடைய, அதற்கேற்பத் தேவைகளும் பெருகின. தேவை களை நிறைவு செய்யப் பிறநாட்டினரோடுப் பழகி வாணிபஞ் செய்யவேண்டிய சூழல் உருவாயிற்று. அதன் விளைவாக வெளி நாட்டு வாணிகம் என்னும் முறை பெருமளவில் மக்களவாழ் நாடு களிடையே தோன்றியது.

## வெளிநாட்டு வாணிபம்

'நாடென்ப நாடா வளத்தன' என்று வள்ளுவர் நாட்டின் குறிக்கோளைக் கூறியிருப்பினும், ஒரு நாடு தன் மக்களுக்கு வேண்டிய யாவற்றையும் பெற்றிருத்தல் முடியாது. எனவே ஒரு

நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கும், ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கும் பொருள் பரிமாற்றம் நிகழ வேண்டியிருந்தது. அதற்குப் போக்குவரத்து அமைக்கப்பட வேண்டியிருந்தது. இந்நிலை தொடர்ந்து ஒழுங்காக நடைபெறச் செய்வதுதான் வாணிகம். ஒரு நாட்டின் பொருளாதார வளத்திற்கு முதுகெலும்பாக விளங்குவது வாணிகமாகும்.

தற்காலப் பொருளாதார வல்லுநர்கள் பொருளாதாரத்திற்கும் வாணிகத்திற்கும் உள்ள தொடர்பைக் கீழ்வருமாறு குறித்துள்ளனர். 'வாணிகம் நாட்டின் சாதன வளங்களின் பெருக்கத்திற்குத் துணைபுரிகின்றது... அது சந்தைகளை விரிவடையச் செய்து, அதன் வாயிலாகச் சிறப்புத் தொழில் தேர்ச்சியை ஊக்குவித்து, ஏற்றுமதிப் பயிர்கள் உள்நாட்டுத் தேவைக்கான விளைவு இரண்டின் உற்பத்தியையும் அதிகரிக்கச் செய்கின்றது. மேலும் வியாபாரப் பயிர்களை உற்பத்திச் செய்கின்றவர்கள், உற்பத்தி செய்யக் கூடியவர்கள் இவ்விருசாராரின் கவனத்துக்கும், புதிய புதிய பண்டங்களைக் கொண்டு வருவதுடன், அவர்கள் அப் பண்டங்களை வாங்கிக் கொள்ளும் சாத்தியத்தையும் ஏற்படுத்தித் தருகின்றது. வாணிகம் உற்பத்திக்கும், உற்பத்தி ஆற்றல் பெருக்கத்திற்கும் ஊக்கமளிப்பதாகும். அவை சிறப்பாக வியாபாரப் பயிர்களை விளைவித்தற்குரிய நிலப்பரப்பை விரிவாக்கும் தன்மையது. அவ்வாறே மூலதனக்குவிப்பிற்கும் தூண்டுதலளிக்கின்றது.'

தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கடல்கடந்து சென்றனர். அங்ஙனம் சென்றதோடு அந்நிய நாடுகளில் வாழவும், அங்குள்ளார்க்கு வழிகாட்டவும் தொடங்கினர். எகிப்து, சிற்றாசியா, மெசபடோமியா மண்ணினின்றும் இன்று தோண்டியெடுக்கப்படும் புதை பொருள்கள் பர்ஷியா, மெசபடோமியா, சிற்றாசியா, சிரியா, பாலஸ்தீனம், எகிப்து, கிரீஸ், உரோம் முதலிய மேலைநாடுகளோடு தமிழர்கள் மிகப்பழைய காலத்திலிருந்தே வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதை உறுதி செய்யவல்ல நல்ல சான்றுகளாம் என உலகப் பேரறிஞர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். மேலும் பண்டைத் தமிழர் சுமத்ரா, சாவகம், மலையா, சீனம் முதலான கீழ்த்திசை நாடுகளோடு வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர்.

## தமிழகமும் எகிப்தும்

தமிழ்நாட்டு வாணிகர், மெசபடோமியப் பள்ளத்தாக்கோடு நில்லாமல் கிறிஸ்து பிறப்பதற்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலத்திலிருந்தே அவர்கள் சோமாலிலாந்து, எகிப்து முதலான வடஆப்பிரிக்க நாடுகளோடும் வாணிகம் செய்தனர். எகிப்து நாட்டு மக்களுக்கும், தமிழகத்து வணிகர்க்கும் நடைபெற்ற இவ்வாணிகத்தில் இடையே தரகர்களாய் இருந்து துணைபுரிந்தவர் **அரபிய நாட்டு** வணிகராவர். தமிழ்வணிகர் பர்ஷியா வளைகுடாவோடு, ஏடன் நகரத்தோடு நின்றுவிட்டனர். ஆங்கு அவர்கள் கொண்டு குவித்த பொருள்களை, அங்கிருந்து எகிப்து முதலான நாடுகளுக்குக் கொண்டு சென்றவர் அராபியராவர்.

பருவக்காற்றின் பயனறிந்த பண்டைத் தமிழர், தம் கலங்களில் மலைபடுபொருள்களாகிய மிளகு, ஏலம், இலவங்கம், இஞ்சி, அகில், சந்தனம், தந்தம், கருங்காலி, தேக்கு முதலியவற்றையும், முத்து, பூனக்கண் முதலான மணிகளையும், நூலும், பட்டும் கலந்து நெய்யப்பெற்ற சோழநாட்டு உறையூர்ப் பூந்துகில்களையும் நிரப்பிக்கொண்டு, வடகிழக்குப் பருவக்காற்று வீசும் காலத்தே புறப்பட்டு, செங்கடல் நுழைவாயிற்கண் உள்ள ஏடன் சென்றடைவர். ஆங்குத் தமிழ் வாணிகரிடமிருந்து அப்பொருள்களைப் பெற்றுக் கொண்ட அராபிய வணிகர், எகிப்து நாட்டின் தலைசிறந்த துறைமுகமாகிய அலக்சாண்டிரியா, சிரியா நாட்டு தலைநகரான டமாஸ்கஸ், ஈராக் நாட்டின் தலைநகரான பாக்டாட், சிற்றாசியா முதலான இடங்கட்குக் கொண்டு சென்று விற்றுவிட்டு, அவற்றிற்கு ஈடாக, ஆங்குத் தாம் வாங்கிக் கொணர்ந்த, பொன்னிழையால் புனையப்பெற்ற விலையுயர்ந்த ஆடைகள், டமாஸ்கஸ் நகரத்துப் புகழ்பெற்ற பட்டாடை, வேலைப்பாடமைந்த கண்ணாடிப் பொருள்கள், பன்னீர், அத்தர் போன்ற நறுமணப் பொருள்கள் எனப் பல விலையுயர்ந்த பொருள்களையும், பொன்னையும் தமிழ்நாட்டு வணிகர்க்கு அளிப்பர். அவற்றைத் தம் கலங்களில் ஏற்றிக்கொண்ட தமிழ் வணிகர், தென்மேற்குப் பருவக் காற்று வீசும் காலத்தே புறப்பட்டுத் தமிழகம் வந்து சேர்வர். 'கிறிஸ்து பிறப்பதற்கு 2600 ஆண்டுகட்கு முன்னரே, நறுமணப் பொருள்கள், சிறுத்தைப்புலி, தந்தம், நூலாடை, கருங்

காலி, அரிசி முதலான பொருள்களை எகிப்து நாட்டு அரசர்கள் விரும்பி வாங்கிப் பயன்கொண்டனர்.'

'கி.மு. 1580-1350இல் எகிப்து நாடாண்ட அரசர்கள் தந்தம், தந்தத்தால் செய்யப்பெற்ற மேசை பெட்டி, உருவச்சிலை முதலான பொருள்களைத் தமிழகத்தின் மேற்பாற் பகுதியினின்றும் பெற்று மகிழ்ந்தனர்'. இங்ஙனம் எகிப்து நாட்டு மக்களும், மன்னர்களும் விரும்பி வாங்கிய இப்பொருள்கள் எல்லாம், தமிழ்நாட்டு வணிகர் ஏடன்போலும் இடைநிலங்களில் அராபிய வணிகரிடம் பண்ட மாற்றிக் கொடுத்த பொருள்களே.

'பண்டைய எகிப்தியர்கள் வாணிப நிறுவனங்கள் பலவற்றின் பயனை நன்கு உணர்ந்திருந்தனர். 'சொத்துரிமைப் பத்திரங்கள், உயில்கள், ஒப்பந்தங்கள், கடன் கொடுக்கல், வாங்கல், வட்டி வசூலித்தல் போன்றவற்றை அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். நாணயப் பழக்கம் அவர்களிடையே இல்லை எனினும், பொருள் களுக்குப் பதிலாகத் தங்கம் அல்லது செம்பு மோதிரங்களைத் தரு கின்ற பழக்கம் காணப்பட்டது. இத்தகைய மோதிரப் பணப்புழக்கம் பண்டைய நாகரிகங்களில் எகிப்தில் மட்டுமே வழக்காற்றில் இருந்துவந்தது. ஆனால், அதில் ஈடுபட்டவர்கள் பெரும் வணிகர்களேயன்றி சாதாரண மக்கள் அல்லர். பண்டங்கள் வாங்கும்போது தராசில் அவற்றை நிறுத்துப் பார்த்து வாங்கும் பழக்கத்தை எகிப்திய வணிகர்கள் மேற்கொண்டனர். பொருள் களை நிறுத்து வாங்கும் வணிகர்களின் படம் எகிப்திய பண்டைய சின்னங்களில் மிகுதியும் காணப்படுகிறது'.[1]

## தமிழகமும் பாலஸ்தீனமும்

கி. மு. பத்தாம் நூற்றாண்டில் மன்னன் சாலமன் காலத்தில் அவனுக்குரிய கலங்கள், மூன்றாண்டிற்கு ஒருமுறை பொன், வெள்ளி, யானைத்தந்தம், சந்தனமரங்கள் வாலில்லாக் குரங்கு, மயில்கள் முதலான பொருள்களை வாரிக்கொண்டு வந்து வழங்கும் என்றும், அரண்மனை, வீடுகள், சந்தனமரங்களால் அமைக்கப்

---

1. பண்டைக்கால நாகரிகங்களின் வரலாறு. ப. 51.

பெற்றன என்றும், அரசனது அரியணை தந்தத்தால் ஆக்கிப் பொன்னிழைக்கப்பட்டது என்றும் அந்நாட்டு வரலாற்று நூல்கள் கூறுகின்றன. மன்னன் சாலமன் பெற்ற அப்பொருள்கள் எல்லாம், தமிழ்நாட்டினின்றும் சென்றனவே என்பதில் ஐயமில்லை. தமிழ் வணிகர் தமிழ்நாட்டுப் பொருள்களையே அல்லாமல், அவற்றின் தமிழ்ப் பெயர்களையும் அங்குக் கொண்டு சென்று வழங்கினர். **அகில்** என்ற தமிழ்ச்சொல் **அகல்** என்றும்; **தோகை** என்ற சொல் **துக்கி** என்றும் இவ்வாறே வேறுபல சொற்களும் ஏற்றவாறு திரிந்து அந்நாட்டு மொழியில் இடம் பெற்றுள்ளன. இவற்றினின்றும் தமிழர் பாலஸ்தீன மக்களோடும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பது புலனாகும்.

## தமிழகமும் அசிரியாவும்

யூப்ரடஸ் பள்ளத்தாக்கில் விளங்கிய அசிரியா நாட்டோடும் தமிழர்கள் உறவு மேற்கொண்டிருந்தனர். கி.மு. 850-இல் அரசாண்டிருந்த அந்நாட்டு அரசன் **ஷல்மனேசர்** என்பான் கல்லறைமீதுவாலில்லாக் குரங்கு, யானை இவற்றின் உருவங்கள் வரையப்பட்டுள்ளன. பொன்னும், பொற்கலனும், முத்தும், மணியும், பன்னிற ஆடையும், பல்வேறு நறுமணப் பொருள்களும் ஆங்குச்சென்று விலையாயின. கி. மு. 700இல் அரசாண்ட அரசன் ஒருவன், தான் கட்டிய அரண்மனைத் தோட்டத்தில் இந்நாட்டுப் பருத்திச் செடிகளை நட்டுப் பேணி வளர்த்தான். பருத்திச் செடிக்கு அந்நாட்டு மக்கள் அளித்த பெயர் **மயிர் விளையும் மரங்கள்** என்பதாகும். நம்நாட்டு மிளகையும் இலவங்கத்தையும் அந்நாட்டு மக்கள் விரும்பி வாங்கினர். கி. மு. 600-இல் பாபிலோனியாவே ஆசிய நிலப்பரப்பின் வாணிக நிலையமாய்த் திகழ்ந்தது. உலகின் பல்வேறு பகுதியைச் சேர்ந்த வணிகர் குலமக்களாகிய யவனர், யூதர், மிலேச்சர், தமிழர், சீனர் அனைவரும் அந்நகரில் வாழ்ந்து வந்தனர். அன்று அந்நகரில் குடியேறிய தமிழ் வணிகரின் வழிவந்தோர் கி.பி. ஏழாம் நூற்றாண்டிலும் ஆங்குக் காணப்பட்டனர்.

## தமிழகமும் கிரேக்கமும்

கி.மு. 538-இல் கிரேக்கர்கள் பாபிலோனியா நகரை வென்று அழித்தனர். கிரேக்கப் பெருவீரனாகிய அலெக்சாண்டர் எகிப்தை

வென்று, அவ்வெற்றியின் நினைவுச் சின்னமாய், அலெக்சாண்டிரியா என்ற பெயருடைய பெருநகர் ஒன்றைக் கண்டான். அன்று முதல் அந்நகரே வாணிக நிலையமாய் விளங்கியது. சூயஸ் கால்வாய் கலம் செல்வதற்கு ஏற்றவாறு செப்பம் செய்யப் பெற்றது. துறைமுகப் பட்டினங்கள் பல எழுந்தன. எகிப்து அரசினரும் வாணிக வாழ்விற்கு ஆக்கம் அளித்துப் போற்றினர். இதனால் தமிழ்நாட்டு வணிகர், பாரசீக வளைகுடாவிற்குச்செல்வது விடுத்துச் செங்கடற்குச் செல்வாராயினர். இதுவரை வாணிகத் தரகராய் வாழ்ந்த அராபிய வாணிகர் இடத்தையும் கிரேக்கர் பற்றிக் கொண்டனர். இந்நிலை உலகில் கி.பி. முதலாம் நூற்றாண்டு வரை தொடர்ந்து சென்றது.

இஞ்சியும், எண்ணெய்யும், தேங்காயும், தேக்கும், கிரேக்கரால் விரும்பி வாங்கப் பற்றன. இவ்வாணிகத் தொடர்பின் விளைவாய்த் தமிழ்ச் சொற்கள் சில அந்நாட்டு மக்களிடையே சென்று வழங்கலாயின. காட்டாக **அரிசி** என்ற தமிழ்ச்சொல், **ஒரய்ஸ்** என்றும், **கருவாப்பட்டை** என்ற சொல் **கார்பியன்** என்றும், **இஞ்சிவேர்** என்னுஞ்சொல் **ஜிக்கிபெரோஸ்** என்றும்; **வயிடூரியம்** என்ற சொல் **பெரியலொஸ்** என்ற வடிவிலும் அந்நாட்டு மொழிகளில் இடம் பெற்றுள்ளன.

## தமிழரும் ரோமானியரும்

ரோமானிய வரலாற்றில் முதற் பேரரசராகக் கருதப்படுபவர் அகஸ்டஸ் மன்னராவார். அப்பேரரசர் காலத்தில் அநேக இந்திய தூதர்கள் நிலமார்க்கமாக ரோமாபுரியை அடைந்தனர். ரோம் நாட்டு வணிகர்கள் இந்தியவிற்குச் சென்றனர். கி. மு. முதல் முதல் நூற்றாண்டின் இறுதிக் காலத்தே பேரரசன் அகஸ்டஸ் தமிழகத்தோடு தன்னாடு கொண்டிருந்த வாணிக உறவினைப் பலவகையில் வளர்க்க முயன்றான். தமிழ்நாட்டுத் தூதுவர் நன்கு வரவேற்கப்பட்டனர். இதனால் தமிழர் வாணிகம் அங்கு வளரத் தொடங்கியது.

ரோமானியர்களுக்கு வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள்கள் மிக எளிய விலைக்குக் கிடைத்தமையால் ரோமானியப்

பெருநிலக்கிழார்கள் பலர் உணவுப் பண்டங்களுக்குப் பதிலாக நன்கு விலைபோகக் கூடிய மதுபானம், ஆலிவ் எண்ணெய், செங் கற்கள், பானைகள், உலோகக் கருவிகள் முதலியவற்றைப் பெரிதும் உற்பத்தி செய்தனர்.

இங்ஙனம் ஏற்றுமதி செய்யப்பட்ட பல பொருள்களை ஏராள மாக உற்பத்தி செய்யக்கூடிய பல தொழிற்சாலைகள் ஆங்காங்கே நிறுவப்பட்டன. மேலும் வன்மைமிக்க கப்பற்படை ரோமப் பேரரசைக் கட்டிக் காத்ததனால் மத்தியத் தரைக்கடலின் ஊடே பயணம் செய்த வணிகக் கப்பல்களைக் கொள்ளையடிக்கும் கூட்டத் தினர் இல்லாது ஒழிந்தனர். நிலமார்க்கமாக பயணஞ் செய்த வணிகர்களை வழிப்பறி செய்யும் கூட்டமும் இல்லாது ஒழிந்தது. ரோமப் பேரரசில் நிலவிய ஒழுங்கும் கட்டுப்பாடும் வாணிப வளர்ச்சிக்கு ஒரு பெரும் துணையாய் அமைந்தது. மற்றும் ரோமப் பேரரசில் பல அகன்ற பாதைகள் நாடெங்கும் அமைக்கப் பட்டன.

ரோம்நாட்டு மக்கள் நாகரிக வாழ்வில் கொண்ட வேட்கையின் விளைவால், வகைவகையாக வனப்பூட்டும் வெளிநாட்டு வாணிகப் பொருள்கள் வரம்பின்றி வந்து குவிந்தன. அவற்றிற்கு ஈடாகப் பொருள்கள் தரமுடியாத ஒருநிலை உருவானபோது ஆட்சியாளர் பொற்காசுகளை வழங்கினர். ‘அன்றுமுதல் பொருளுக்குப் பொருள் என்ற பண்டமாற்று முறை மாறிக் **காசுக்குப் பொருள் பொருளுக்குக் காசு** என்ற புதுமுறை புகுந்தது’. எண்ணற்ற ரோம நாணயங்கள் வெளிநாடுகளில் சென்று வழங்கலாயின.

பிளினி என்பவர் தம் குறிப்பில் இந்திய தேசம் ‘‘ஆண்டு தோறும் உரோம ராஜ்யத்திலிருந்து 976, 979 பௌன் கவர்தற் குரிய பண்டங்களை ஏற்றுமதி செய்துவர அப்பண்டங்கள் அந்நிய நாடுகளில் நூறுமடங்கு அதிக விலைக்கு விற்கப்பட்டன’’ என்று கூறியிருக்கின்றார்.

தமிழகத்திலிருந்து பொருள் ஏற்றிச் சென்ற வணிகர் தம் கலங்கள் நிறைய பொன்னும், வெள்ளியும் தவிர வேறு பொருள் களை ஏற்றி வந்திலர். யானைத் தந்தமும், எருமை நெய்யும்,

விலங்கின் தோலும், ஆமை ஓடும், பஞ்சும், பட்டும் தமிழகத்தை விட்டு உரோம நாட்டு வாணிக வீதிகளில் சென்று குவிந்தன.

உரோமப் பேரரசின் பெருவளத்தை வற்றச் செய்த பொருள்களுள் கொற்கை முத்தே முதலிடம் பெற்றுள்ளது. முத்தை அடுத்து, தமிழகத்தின் செல்வம் தழைக்கச் செய்த பொருள் மிளகு. ரோம நாட்டிற்குச் செல்லும் தமிழ்க் கலங்கள் பாதிக்கு மேலாக மிளகையே கொண்டு சென்றன. மிளகோடு இஞ்சியும், இலவங்கமும் சென்றன. உறையூர் சேலைகளும் உயர்ந்தவகைப் பஞ்சும் ரோமர்களால் விரும்பி வாங்கப்பட்டன.

ஆசிரியர் பிளைநி, தேங்காய் எண்ணெய், வாழைப் பழங்கள், அரிசி, சோளம், புளி, வெற்றிலை, பாக்கு முதலான உண்ணும் பொருள்களும் சென்று விலையாயின என்று கூறுகிறார். தமிழ் நாட்டு வணிகர் இவற்றிற்கு ஈடாகப் பெரும்பாலும் பொற்காசுகளையே பெற்று வந்தனர். பவழம், ஒருவகை மது, ஈயம், தகரம் முதலான பொருள்களையும் ஒரோவழி வாங்கி வந்தனர்.

தமிழர் ரோமானியரோடு நடத்திய இவ்வாணிகத்தின் விளைவாய் ரோமானியர் பலர் தமிழகத்திற்கு வந்தனர். வாணிகத்தின் பொருட்டு வந்த அவர்கள், காலஞ் செல்லச் செல்ல தமிழகத்திலேயே தங்கிவாழ்ந்தனர். மேற்குக் கடற்கரை நகரமாகிய முசிறியில் தங்கள் நாட்டு மன்னன் அகஸ்டசுக்குக் கோயில் ஒன்று கட்டி வழிப்பட்டனர்.

## தமிழரும் அராபியரும்

தமிழ் வணிகர், பர்ஷிய வளைகுடாவோடு நின்றிருந்த காலத்தே, அவர் கொணர்ந்த பொருள்களை எகிப்து முதலான தொலை நாடுகளுக்குச் சென்று விற்றுப் பொருள் சேர்க்கும் தரகராய் விளங்கியவர் அராபியரே. ஆனால் தமிழ் நாட்டுக் கலங்கள் பர்ஷிய வளைகுடாவை மறந்து, செங்கடல் நோக்கிச் சென்றவுடனே, அராபியர் இடத்தைக் கிரேக்கர்களும், ரோமானியரும் பற்றிக் கொண்டனர். பண்டைக் காலத்தில் தமிழர்க்கும் அராபியர்க்கும் இருந்த வாணிக உறவு அற்று விட்டது. அதன்பின்னர் மீண்டும் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் தமிழர், அராபியர் வாணிகம் தொடர்ந்தது.

## யவனர்

'சங்க காலத்தில் தமிழகத்தோடு வாணிகம் செய்து வந்த ஐரோப்பியர் யவனர் எனப்பட்டனர். இச்சொல் 'ஐ ஓனிஸ்' என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து திரிந்து வந்தது வடமொழிக் கவிதையிற் பெரும்பாலும் கிரேக்கரை உணர்த்தவே இச்சொல் வழங்குகிறது''[2] என டாக்டர் சு. வித்யானந்தன் தம் நூலில் குறிப் பிடுகின்றார்.

''தமிழ் நாட்டில் மலிந்திருந்த யவனர்கள் என்பவர்கள் கிரேக்கம், அரேபியா, எகிப்து முதலிய மேனாடுகளிலிருந்து வந்த வர்களே. இவருள் கிரேக்க யவனர் இங்கு வந்து வியாபாரஞ் செய்தவராயினும், சங்க நாளிலும் அதன் பின்பும் தமிழகத்தில் மிகுதியாகத் தங்கினவர் சோனகர் என்னும் யவனர் ஆவர். இஃது அரேபியா என்று கருதப்படுகிறது. தமிழர்கள் சோனகரை யவனர் என்னும் பெயரால் அழைத்து வந்தனர் என்பது, 'சோனகர் யவனர்' என்னும் திவாகரத்தாலும், பத்துப்பாட்டில் யவனர் என்னுஞ் சொல் வருமிடமெல்லாம் உரையாசிரியர் நச்சினார்க் கினியர் 'சோனகர்' என்றே உரை கூறிப் போதலாலும் விளங்கத் தக்கது'', என மு. இராகவையங்கார் அவர்கள் தமது ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றில் குறித்துள்ளார்.

தமிழர் ரோமானியரோடு நடத்திய சிறந்த வாணிகத்தின் விளைவாய் ரோமானியர் பலர் தமிழகத்திற்கு வந்து நிலையாக வாழவும் தலைப்பட்டனர். வெளிநாட்டினின்றும் வந்த அவர் களைத் தமிழர் யவனர் என்று அழைத்தனர். யவனர் பலர் கூடி வாழ்ந்த இடங்களையும், தச்சு முதலாம் தொழில் வல்ல யவனர் களையும், அன்னார் இயற்றிய யவனப் பாவை, யவனப் பேழை,

---

2. டாக்டர். சு. வித்யானந்தன். தமிழர் சால்பு. ப. 235
யவனம்—ஐம்பத்தாறு தேசங்களுள் ஒன்றும் கிரீசு, அரேபியா முதலிய மேலைநாடுகளுள் ஒன்றாகக் கருதப்படுவதுமாகிய நாடு. 'அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்'. (மணி. 19,108)
—தமிழ் லெக்ஸிகன். தொகுதி 6. ப.3395.

யவன மஞ்சிகை முதலாம் அரிய வேலைப்பாடமைந்த பொருள்களையும் பழந்தமிழ் நூல்கள் அறிந்து பாராட்டின. உடற்கட்டும் உள்ள உரனும் உடைய யவனர்களைத் தமிழ் அரசர்கள் தம்மையும், தம் அரண்களையும் காக்கவல்ல காவலராய் அமைத்தனர். 'கடிமதில் வாயில் காவலிற் சிறந்த அடல்வாள் யவனர்' என அவர் காவல் வன்மையைப் பழந்தமிழ் மக்கள் பாராட்டியுள்ளனர்.

வாணிகப் பொருள்களைப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பட்ட பொருள்கள், அங்கிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் என இரண்டாகப் பிரிக்கலாம்.

## ஏற்றுமதி செய்யப்பட்டவை

தமிழ்நாட்டினின்றும் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள் இவையெனச் சங்க இலக்கியமான மதுரைக்காஞ்சி கூறுகின்றது. ஒலிக்கும் கடலில் கிடைக்கும் ஒளியுடைய முத்துக்களும், வாளரத்தால் கீறியறுத்துச் செய்யப்பட்ட அழகிய சங்குவளைகளும், பரதர் தந்த பல்வேறு பண்டங்களும், கரிய கழியிடத்துப் பாத்தியில் விற்கும் தித்திப்புக் கூட்டிப் பொறித்த புளியோடே ஆண்டு விளையும் வெள்ளிய உப்பும்; மீனின் உணங்கற்றுணிகளும் ஆகியவற்றை ஏற்றுமதி செய்வர். இவற்றுடன் அருங்கலன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இதனை,

**முழங்குகடல் தந்த விளங்குகதிர் முத்தம்**
**அரம்போழ்ந் தறுத்த கண்ணேர் இலங்குவளை**
**பரதர் தந்த பல்வேறு கூலம்**
**இருங்கழிச் செறுவில் தீம்புளி வெள்ளுப்புப்**
**பரந்தோங்கு வரைப்பின் வன்கைத் திமிலர்**
**கொழுமீன் குறைஇய துடிக்கண் துணியல்**
**விழுமிய நாவாய் பெருநீர் ஒச்சுநர்**
**நனந்தலைத் தேயத்து நன்கலன் உய்ம்மார்**
**புணர்ந்துடன் கொணர்ந்த புரவியொ டனைத்தும்**
**வைகல் தோறும் வழிவழிச் சிறப்ப (ம. காஞ்சி. 315-24)**

அருங்கலன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதைப் பதிற்றுப்பத்தில்

**அருங்கலி தரீஇயர் நீர்மிசை நிவக்கும்**
**பெருங்கலி வங்கம் திசைதிரிந் தாங்கு (52:3-4)**

எனவரும் பாடலடிகளால் அறியலாம்.

பிறமொழி இலக்கியங்களின் துணைகொண்டு நம்நாட்டின் ஏற்றுமதி இறக்குமதியைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டியுள்ளது. அவற்றுள் ஒரு சில சான்றுகளைப் பின்வருமாறு காணலாம்.

## பறவைகளும் விலங்குகளும்

இந்தியப் பறவைகளும், விலங்குகளும் தரைவழியாக ரோம் நாட்டிற்குச் சென்றன. கிளி, குரங்கு தவிர மற்ற பறவைகளையும் விலங்குகளையும் கண்காட்சியில் வைப்பதற்காக வரவழைத்தனர். வேட்டைநாய், யானைகள், சிங்கம், காண்டா மிருகம், கோதுமை நிறமுள்ள ஒரு விஷப்பாம்பு, சிறிய மலைப் பாம்பு ஆகியவை எடுத்துச் செல்லப்பட்டன. இந்திய யானைத் தந்தங்கள் கடல் வழியாகவும், தரை வழியாகவும் ரோம் நாட்டிற்கு அனுப்பிவைக்கப்பட்டன.

## மிளகு

இந்தியாவிற்கும், ரோம் நாட்டிற்குமிடையே நடந்த வாணிபத்தில் மிளகு வியாபாரம் குறிப்பிடத்தக்கது. மலபார் துறைமுகங்களான முஜிரிஸ், நெல்கிண்டா, டிண்டிங் ஆகியவற்றிலிருந்து மிளகு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகி வந்தது. மிளகைத் தவிர சுக்கு, ஏலக்காய் ஆகிய பொருள்களும் ரோம் நாட்டிற்கு அனுப்பப்பட்டன. கிரேக்க வணிகர்கள் தங்கத்திற்குப் பதிலாக எவ்வாறு நம்நாட்டு மிளகை வாங்கினார்கள் என்பது தமிழ் இலக்கியத்தில் கூறப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டு உறையூர் சேலைகளும், உயர்ந்த வகைப் பஞ்சும் ரோம் நாட்டு மக்களால் விரும்பி வாங்கப்பட்டன. மசூலிப்பட்டினத்தில் ஒருவகையான நல்ல மஸ்லின் துணிகள் தயாரிக்கப்பட்டன. லத்தீன் மொழிகளில் இவற்றை **வெண்டஸ் டெக்ஸ் டைல்ஸ்** அதாவது காற்றைப் போன்ற துணி அல்லது **நேபுலா** என்ற பெயரால் அழைத்து வந்தார்கள்.

இவ்வாறாக நம்நாட்டுப் பறவைகள், விலங்குகள், பிற பொருள்கள் வெளிநாடுகள் பலவற்றிற்கும் ஏற்றுமதி செய்யப் பட்டன. இவற்றோடு இந்திய அடிமைகள் ரோமப் பேரரசு நிறுவப்படுவதற்கு முன்னரே ரோமநாட்டிற்குச் சென்றிருந்தனர். அங்கு இந்திய யானைப்பாகர்களும், சோதிடர்களும் இருந்தனர் என்பதற்கான குறிப்புகளும் காணப்படுகின்றன.

## இறக்குமதி

பல்வகைப் பண்டங்கள் வெளிநாடுகளினின்றும் இறக்குமதி செய்யப்பட்டதற்கான சான்று சங்க இலக்கியமான நற்றிணையில்,

**வேறுபல் நாட்டிற் கால்தர வந்த**
**பலவுறு பண்ணியம் இழிதரு நிலவுமணல் (31:8-9)**

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**.................வளிதரு வங்கம்**
**பலவேறு பண்டம் இழிதரு பட்டினத்து (536-37)**

என இக்கருத்தை மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது.

யவனர்கள் அன்ன விளக்கினையும், பாவை விளக்கினையும் தமிழகத்திற்குத் தந்தனர் என்பது

**.............. யவனர்**
**ஓதிம விளக்கின் உயர்மிசை (பெரும். 315-16)**

**யவனர் இயற்றிய வினைமாண் பாவை**
**கையேந்து ஐயகல் (நெடுநல். 101-02)**

எனவரும் பாடலடிகள் குறிப்பிட்டுள்ளன.

யவனர்கள் சேரநாட்டின் துறைமுகப் பட்டினமாய் விளங்கிய முசிறிக் துறைமுகத்தில் கப்பல்களில் வந்து பொன்னைத் தந்து மிளகைப் பெற்றுச் சென்றனர். இதனை,

**யவனர் தந்த வினைமாண் நன்கலம்**
**பொன்னொடு வந்து கறியொடு பெயரும் (149. 10-11)**

என்ற அகநானூற்றுப் பாடலடிகளால் அறியலாம்.

மத்தியதரைக் கடலிலிருந்து எடுக்கப்பட்ட பவழம், பார்பரி கோன், பருகச்சம், நெல்கிண்டா, முஜிரிஸ் துறைமுகங்களுக்கு வந்தன என்று பெரிப்ளிஸில் கூறப்பட்டிருக்கிறது. பவழம் மிகவும் அதிகமாக இந்தியாவிற்கு வந்ததால், மத்தியதரைக்கடலில் அவை கிடைப்பது அரிதாகிவிட்டது என்று பிளிநி கூறுகிறார். ரோம் நாட்டிலிருந்து சுத்தம் செய்யப்படாத கண்ணாடிப் பண்டங்கள் முஜிரிஸ், நெல்கிண்டா துறைமுகங்களுக்கு வந்தன. இவைகளைக் கொண்டு முகம்பார்க்கும் கண்ணாடி, கண்ணாடிப் பாத்திரங்கள் ஆகியவை செய்யப்பட்டன.

## பண்டைக்காலத்திய கப்பல்

பண்டைத் தமிழர் கடல் வாணிகத்தில் தலைசிறந்து விளங் கினர். கடல் வாணிகம் சிறப்புற்று ஓங்குதற்குத் துணையாகக் கப்பலோட்டும் மாலுமிகள் ஆழ்கடலிலும் அச்சமின்றிச் சென்றனர். அவ்வாறு செல்வோர்க்குப் 'பெருநீரோச்சுநர்' என்னும் பட்டம் அளித்துப் பாராட்டினர். மேலும் கப்பல், வங்கம், கலம், நாவாய் போன்ற சொற்கள் அந்நாளில் வழக்கிலிருந்த கடல் வாணிகத்தின் சிறப்பைக் காட்டுவன.

**வளிவழக் கறுத்த வங்கம் (புறம். 368:9)**
**கடலே கால் தந்த கலன் எண்ணுவோர் (புறம். 386:14)**
**அருவினை நாவாய் தோன்றும் பெருந்துறை (நற். 295:6)**

கலம், வங்கம், நாவாய் என்பன பண்டங்களை ஏற்றி நெடுந் தொலைவு கடலில் செல்வதற்குப் பயன்பட்ட பெரிய மரக்கலங் களாயிருத்தல் கூடும். மேலும் இவை துறைமுகச் சார்புடைய இடங்களோடு தொடர்புடையனவாகவே இலக்கியங்களில் குறிப் பிடப்பட்டுள்ளன.

**இரங்கு நீர்ப் பரப்பின் கானலம் பெருந்துறை**
**தனம் தரும் நன்கலன் (அகம். 152:6-7)**

மதுரைக்காஞ்சிப் பாடலில் கடல் வாணிகத்திற்குப் பயன் படுத்தப்பட்ட கப்பலின் நிலை அழகுற ஆசிரியரால் வருணிக்கப் பட்டுள்ளது. 'கரிய பெரிய கடலிடத்தே எழுந்திரைகளைக்

குறுக்கே பிளவுபடுமாறு, கடிய காற்றாலே ஓடித் துறையைச் சேரும் பொருட்டு நெடிய கொடியை உச்சியிலே உடையவையாய்ப் பாய்விரிக்கப்பட்டு, இனிய ஓசையை உடைய முரசம் முழங்கா நிற்ப, பொன்மிகுதற்குக் காரணமான சிறந்த சரக்குகளை நாட்டிலுள்ளார் நுகரும்படி ஏற்றிக் கொணர்ந்து, நன்றாக இறக்குதலைச் செய்யும், அசையும் இயல்பினையுடைய பெரிய மரக்கலங்கள் முகிலால் சூழப்பட்ட மலைபோலக் கடலால் சூழப்பட்டு நிற்கும்' என்ற கருத்தமைய.

**பேஎநிலை இய இரும்பௌவத்துக்**
**கொடும்புணரி விலங்குபோழக்**
**கடுங்காலொடு கரைசேர**
**நெடுங்கொடிமிசை இதைஎடுத்து**
**இன்னிசைய முரசு முழங்கப்**
**பொன்மலிந்த விழுப்பண்டம்**
**நாடார நன்கிழிதரும்**
**ஆடியற் பெருநாவாய்**
**மழை முற்றிய மலைபுரைய** (76-84)

என்ற பாடலடிகள் காணப்படுகின்றன. இதனின்றும் மரக்கலத்தின் மிசைக் கொடியுயர்த்துதல் மரபென்பதும்; மரக்கலம் இயங்கும்பொழுது அதில் முரசம் முழங்குதலுண்டு என்பதும் தெரிகின்றன. மரக்கலங்கள் நீர்மேல் நிற்றலால் அசைந்த வண்ணம் இருப்பன. இதனால் ஆடியல் பெருநாவாய் என்ற பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளது. அயல்நாட்டினின்றும் வரும் கப்பல்களில் நாட்டிலுள்ள மக்கள் நன்கு துய்க்குமாறு சிறந்த சரக்குகள் நிறைந்து கிடத்தலும் காணப்படுகிறது.

## துறைமுகங்கள்

### காவிரிப்பூம்பட்டினம்

இது தமிழ்நாட்டின் ஒப்பற்ற துறைமுகப்பட்டினம். இக் காவிரிப்பூம்பட்டினம் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கடற்றுறையாகும். கடற்கரை வாணிகத்தில் தலைசிறந்த தமிழ்நாட்டுத் துறைமுகங்களில் தலையாயது, அது காவிரியாறு கடலோடு

கலக்குமிடத்தில் அமைந்த துறையாகையால் புகார் என்றும் பொருத்தமுற வழங்கப்பெற்றது.

அக்காவிரிப்பூம்பட்டினத்தில், கடல்கடந்த நாடுகளினின்றும், மரக்கலங்களில் நிமிர்ந்து விரைந்தோடுவதில் சிறந்த நிகரற்ற குதிரைகள் வந்திறங்கின. மலைநாடுகளினின்றும். கணக்கற்ற ஊர்திகளில் கறிமிளகு மூடைகள் வந்திறங்கின. மேருமலையிலே பிறந்த மின்னொளிர் மணியும் பொன்னும் மிகுதியாய் வந்திறங்கின. மேற்றிசை மலைகளில் விளைந்த மணமிக்க மரங்களான சந்தனக் கட்டைகள், கொற்கை முத்துக்கள், குணகடல் பவளங்கள் கங்கைப் பொருள்கள், காவிரிப் பொருள்கள், ஈழப் பொருள்கள் இன்னபிறவும் வரையறையின்றி வந்திறங்கி நிரம்பி வழிந்தன. (பட். 185:193) காவிரிப்பூம்பட்டினம் போல முசிறி, தொண்டி, கொற்கை முதலிய துறைமுகப்பட்டினங்களும் பண்டைத் தமிழகத்தில் சிறப்புற்று விளங்கின.

## முசிறி

மேற்குக் கடற்கரைப் பகுதியில் சேரநாட்டின் துறைமுகப் பட்டினமாக விளங்கியது. சேரநாட்டில் மிகுதியாக விளையும் மிளகு ஏற்றுமதியில் புகழ்பெற்று விளங்கியது. இங்குப் பெருமளவு விளைந்த மிளகினை வாங்குவதற்குச் சுள்ளி என்னும் பேரியாற்றினது கரையிலமைந்த முசிறித் துறைமுகப் பட்டினத்திற்கு யவன வணிகர்கள் வேலைப்பாடமைந்த சிறந்த மரக்கலன்களில் வந்து மிகுந்த பொன்னைத் தந்து மிளகைப் பெற்றுச் சென்றனர். இதனை அகநானூறு,

**சுள்ளிஅம் பேரியாற்று வெண்ணுரை கலங்க**
**யவனர் தந்த வினைமாண் நன்கலம்**
**பொன்னொடு வந்து கறியொடு பெயரும்**
**வளங்கெழு முசிறி** (149:8-11)

என்றும், புறநானூறு,

**மனைக் குவைஇய கறிமூடையால்**
**கலிச்சும்மைய கரைகலக்குறுந்து**
**கலந்தந்த பொற்பரிசம்**

**கழித்தோணியால் கரைசேர்க்குந்து**
**மலைத்தாரமுங் கடற்றாரமும்**
**தலைப்பெய்து வருநர்க்கீயும்**
**புனலங் கள்ளின் பொலந்தார்க் குட்டுவன்**
**முழங்குகடன் முழவின் முசிறி** **(343:3-10)**

என்றும் குறிப்பிடுகின்றன.

## தொண்டி

மேலைக் கடற்கரையில் சேர நாட்டில் உள்ள துறைமுகம். இங்கு, 'நண்டுகளும், இறாக்களும், ஏனைய கொழுமீன்களும், கோட்டு மீன்களும் பல்கிப் பெருகியதும், மணங்கமழ் பாக்கத்தை உடையதுமான வளமிகு கடற்றுறை (ஐங். 172, 179, 180) என இத்தொண்டித் துறைமுகத்தின் சிறப்பினைப் புலவர் பலரும் புகழ்ந்து பாடியுள்ளனர்.

## கொற்கை

தென்பாண்டி நாட்டிலுள்ள புகழ் வாய்ந்த தொன்மைத் துறைமுகப் பட்டினமாகும். தமிழகம் மேலை நாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டு ஈட்டிய பெரும்பொருளில் மிகப் பெரும் பகுதி கொற்கை முத்தினால் கிடைத்ததே எனலாம். கொற்கை முத்தால் புகழ்பெற்று விளங்கியதைச் சங்க இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. சான்றாக ஒரு சில பின்வருமாறு:

**கொற்கை முன்துறை இலங்குமுத்து உறைக்கும் (ஐங்.185)**

**முத்துபடு பரப்பின்**
**கொற்கை முன்றுறை** **(நற். 23:5-6)**

**புகழ்மலி சிறப்பின் கொற்கை முன்றுறை**
**அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து** **(201:4-5)**

'பரதவ நாட்டிலுள்ள முக்கிய நகரமான கொற்கை, முத்துக் குளிப்புத் தொழிலுக்கு உரிய ஒரு நடுவிடம். இந்நகர மக்களில் பெரும்பாலோர் முத்துக் குளிப்போராகவும், சங்கறுப்போராகவுமே

இருந்தனர். முத்துக் குளித்தல் பாண்டிய நாட்டின் அரசியல் வருவாயில் ஒருபெரும் பகுதியாக இருந்த காரணத்தினாலேயே பட்டத்து இளவரசர் அங்கேயே தங்கியிருப்பது வழக்கமாயிருந்தது.

முன்பு கடற்கரையில் இருந்த இந்நகரம் இப்போது ஐந்துகல் தொலைவில் உள்நாட்டில் உள்ளது. கடல் கொற்கையிலிருந்து பின் வாங்கிய பின் கடற்கரையில் காயல் என்ற ஒரு புதிய வாணிகக் களம் உண்டாயிற்று. இதுவே பன்னிரண்டாம் நூற்றாண்டில் மார்க்கபோலோ வருகைதந்தபோது, வளமான கடல் துறை முகமாய் இருந்தது. சில நாட்களில் காயலும் கடலிலிருந்து மிகு தொலைவாகி விட்டது'[3] என்றும் வி. கனகசபை கூறுகின்றார். இக்கொற்கையைப் பிறநாட்டு அறிஞர்கள் **கோரகே** என்றும் **கோல்கே** என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

சோழநாட்டில் அமைந்த மற்ற துறைமுகங்கள் பொதுகையும் (பாண்டிச்சேரி) ஸோபத்மாவுமாகும். பாண்டிச்சேரிக்கு அருகிலுள்ள அரிக்கமேட்டில் குடைத்துள்ள புதை பொருள்களிலிருந்து கி. பி. முதலாவது நூற்றாண்டில் அது சிறப்பு மிக்க துறைமுகமாக இருந்தது என்று தெரியவருகிறது. ஸோபத்மா என்பது தமிழ் இலக்கியத்திலுள்ள ஸோபட்டினம் அல்லது சென்னைக்கும் பாண்டிக்குமிடையேயுள்ள மரக்காணமாக இருக்கலாம் என்று ஊகிக்கிறார்கள்.

'இந்திய வணிக நெறிகள்' என்னும் நூலில் தமிழகத்தின் சில துறைமுகங்கள் குறித்துக் குறிப்பிடப்பட்டுள்ளது, 'தமிழகத்தின் முதல் துறைமுகமாக **நௌரா** (கண்ணனூர்) இருந்தது. இதற்குப் பிறகு டிண்டிஸ் (பொன்னாணி) துறைமுகம் வருகிறது. மலபாரிலுள்ள முஜிரிஸ் துறைமுகம் கொடுங்களூர் என்பது. நெல்லிக் கொண்டா என்பது திருவாங்கூரிலுள்ள கோட்டயத்திற்குப் பக்கத்தில் இருந்திருக்க வேண்டும். நெல்லிக்கொண்டாவிற்குப் பிறகு **பக்ரே** என்னுமிடமிருந்தது. இந்த இடம் தற்காலத்து

3. 1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம். கழக வெளியீடு. 1962' ப. 44.

ஆல்வாய் என்னும் இடத்திற்கருகிலுள்ள பொற்காடு என்று கூறுகிறார்கள்.'[4]

## கலங்கரை விளக்கம்

கி. பி. முதலாவது நூற்றாண்டில் கடல் பயணம் செய்தவர்கள் மிகவும் குறைவு. அக்கால சமஸ்கிருத, பௌத்த இலக்கியங் களிலிருந்து கடல்வழிகாட்டிகள் விண்மீன்களின் உதவியைக் கொண்டே கப்பல்களை ஓட்டிச் சென்றார்கள் என்பது தெரிகிறது.

எனினும், இரவில் கப்பல்கள் திசைமாறிச் செல்லாமல் இருக்கும்பொருட்டு தற்போது காணப்படும் கலங்கரை விளக்கத் தைப் போன்று சங்க காலத்தில் துறைமுகக் கடற்கரையில் கலங்கரை விளக்கம் இருந்ததைப் பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது.

**இரவின் மாட்டிய விலங்குசுடர் ஞெகிழி**
**உரவுநீர் அழுவத்தோடு கலங்கரையும்**
**துறைபிறக் கொழியப் போகி** (349-51)

கலங்கரை விளக்கம் இருக்கும் கட்டிடம் ஏனைய கட்டிடங்களினும் உயர்ந்திருந்தது, இரவில் கலங்கரை விளக்கம் ஏற்றப்பட்டதைக் குறிக்க இரவின் மாட்டிய என்ற தொடராலும், மற்ற விளக்கு களைவிடப் பெரிதும் ஒளியுடையது என்பதைக் குறிக்க 'இலங்கு சுடர்' என்ற தொடராலும் குறிப்பிட்டனர்.

## பண்டசாலை

வாணிபத்தின் பொருட்டு ஏற்றுமதி செய்யவேண்டிய பொருள் களையும், இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களையும் வைக்கப் படும் இடம் பண்டசாலை எனப்பட்டது. சிறந்த காவலையுடைய பண்டசாலை இருந்ததைப் பற்றிப் பட்டினப்பாலை குறிப்பிடு கின்றது. மேலைநாடுகளிலிருந்து பலபண்டங்கள் கப்பல் வழியாக வந்து காவிரிப்பூம்பட்டினத்தில் இறக்குமதி செய்யப்பட்டன. பல

4. மோதி சந்திரர், இந்திய வணிக நெறிகள், ப. 217.

பண்டங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. வெளி அனுப்பப் பண்ட சாலையில் குவிந்து கிடக்கும் மூட்டைகள் மேல் சோழ மன்னனு டைய புலிமுத்திரை இடப்பெற்ற பண்டங்கள்தான் வெளியேற முடியும். இதனைப் பட்டினப்பாலை,

**நீரினின்று நிலத்தேறவும்**
**நிலத்தினின்று நீர்பரப்பவும்**
**அளந்தறியாப் பலபண்டம்**
**வரம்பறியாமை வந்தீண்டி**
**அருங்கடிப் பெருங்காப்பின்**
**வலியுடை வல்லணங்கினோன்**
**புலிபொறித்துப் புறம்போக்கி**
**மதிநிறைந்த பலபண்டம்** **(129-36)**

எனக் குறிப்பிடுகிறது.

பெரும்பாணாற்றுப்படையில் பட்டினச் சிறப்பைக் கூறுகையில் பண்டசாலை பற்றிய குறிப்பு அமைந்துளது. 'பாலபோலும் வெள்ளிய நிறத்தினையும், தலையாட்டத்தினையும் உடைய குதிரைகளுடனே வடதிசைக்கண் உள்ள நுகரப்படும் பொருள் களைக் கொண்டு வந்து தருகின்ற மரக்கலங்கள் சூழ்ந்து கிடக் கின்ற கடற்பக்கத்தினையும், வணிகர் வாழும் பற்பல தெருக்களை யும் தொழில் செய்வோரால் காககப்படும் மிகவும் உயர்ந்த பண்ட சாலைகளையும உடைய பட்டினம் என்ற கருத்தமைய,

**சிலதர் காக்குஞ் சேணுயர் வரைப்பின்** **(324)**

என வந்துள்ளது. **சிலதர்** என்ற சொல் தொழில் செய்வோரைக் குறித்தது. காக்கும் வரைப்பென்றதனால் அது பண்டசாலை எனப் பொருள் கூறப்பட்டது.

இவ்வாறே பண்டசாலை இருந்ததற்கான குறிப்பு பதிற்றுப் பத்து எனும் நூலிலும் காணப்படுகிறது. 'இனிதாக ஒலித்தலைச் செய்யும் அலைகள் ஒலி செய்கின்ற கடல் வழியாக வந்த நல்ல கலன்களாகிய செல்வம் தொகுக்கப்பெற்றுக் கிடக்கும் பண்ட சாலைகள் பொருந்திய நல்லநாடு எனவருமிடத்தில்

**இன்னிசைப் புணரி இரங்கும் பௌவத்து**
**நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர்** (பதி. 55:3-4)

எனப்பட்டது. பந்தர் என்ற சொல் இங்குப் பண்டசாலையைக் குறித்தது.

## *வரி விதித்தல்*

பண்டைக் காலத்தே ஒரு நாட்டின் பொருள் மற்றொரு நாட்டில் கொண்டு செல்லப்படும் பொழுது வழிகளிலே மன்னர்கள் சுங்கங்கொண்ட வழக்கம் இருந்தமையைச் சங்க இலக்கியப் பாடல்களால் அறியலாம். சுங்கம் என்பது உல்கு என்ற சொல்லால் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்காலத்தில் வரி' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றோம்.

சங்க நூலாகிய பெரும்பாணாற்றுப்படையில் சுங்கம் கொள்ளும் இடத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

**அணர்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்**
**உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்**
**வில்லுடை வைப்பின்** (80.82)

என வருகிறது. வணிகர் கூட்டம் தம் வாணிபப் பொருள்களை ஒத்த எடையை உடையனவாகப் பொதிந்த சுமைகளை இரு புறமிட்ட வடு அழுந்தின, வலிமையினை உடைய முதுகினையும், நிமிர்ந்து நிற்கும் செவியினையும் உடைய கழுதைகளையுடைய திரளோடே செல்கின்ற சுங்கம் கொள்ளுதலையுடைய பெரிய வழிகளில் கவர்த்த வழியைப் பாதுகாக்க விற்படைகள் இருந்தன என்பது இதனால் அறியப்படுகின்றது.

உல்கு செய்வோரின் தொழில் திறங்குறித்துப் பட்டினப்பாலை, 'கடற்கரை தெருவின்கண் நல்ல அரசனுடைய பொருளைப் பிறர் கொள்ளாமல் காவல் செய்தலையுடைய பழைய புகழுடைய சுங்கம் கொள்ளும் தொழில் செய்வோர், ஞாயிற்றின் தேர்பூண்ட குதிரைகள் போன்று நாள்தோறும் ஒரு சிறிதும் சோம்பியிராது சுங்கங் கொள்வர் எனக் குறிப்பிடுகின்றது.

**வேலாழி வியன்தெருவின்**
**நல்லிறைவன் பொருள்காக்கும்**
**தொல்லிசைத் தொழில்மாக்கள்**
**காய்சினத்த கதிர்ச்செல்வன்**
**தேர்பூண்ட மாப்போல**
**வைகல்தோறும் அசைவின்றி**
**உல்குசெயக் குறைபடாது (பட். 116-25)**

உல்கு செய்வார் தலைமுறை தலைமுறையாகப் பயின்று வல்லவர் ஆதலால் தொல்லிசைத் தொழிலின் மாக்கள் எனப்பட்டனர். இத்தகைய உண்மை ஊழியர்களைக் கொண்ட அரசுதான் சிறப் படைய முடியும் என்ற கருத்தும் பெறப்படும்.

## நாணயங்கள்

சங்க காலத்தில் வாணிபம் பண்டமாற்று முறையில் நடை பெற்றதற்கான குறிப்புகளே காணப்படுகின்றன. தற்காலத்தில் உள்ளதுபோல் நாணயங்கள் பயன்படுத்தப்பட்டனவா என்பதற் கான தெளிவான இலக்கியச் சான்றுகள் இல்லை எனலாம். பிறநாடுகளுடன் நடந்த வாணிகத்தில் பொன்னையே நாணய மாகக் கொடுத்தனர் எனக்கருதக்கூடிய இலக்கியச் சான்றுகளே காணப்படுகின்றன.

**(எ.கா.) பொன்னொடு வந்து கறியொடு பெயரும் (அகம். 149:10)**

**கலந்தந்த பொற்பரிசம் (புறம். 343:5)**

சங்கப் பாடல்கள் சிலவற்றில் பொற்காசுகள் குறிக்கப் பட்டுள்ளன. அகப்பாடல் ‘பளிங்கின் துளைக்காசு’ (315:12) எனத் துளையினையுடைய பளிங்குக் காசினைப் பற்றிக் குறிப்பிட, காசுகள் பொன்னாற் செய்யப்பட்டன என்பதை ‘பொலஞ் செய் காசு என்று (அகம். 363:8) குறிப்பிடுகிறது.

காசுகளின் வடிவத்தைப் பற்றிப் புலவர் வெண்ணாகனார் பாடலிலிருந்து அவை நெல்லிக்காயின் வடிவம் போன்று உருண்டு, அவ்வளவு சிறுத்துத் தட்டையாக இருக்க வேண்டும் என்று தெரி

கிறது. காவன் பூதனார் என்ற புலவரின் அகப்பாடல் மூலம் காசுகள் உகாமரத்தின் பழம் போல மஞ்சள் நிறமாக இருக்க வேண்டும் என்று தெரிகிறது. யவனர்கள் தங்கியிருந்த சேரிகளில் புகார், மதுரை போன்ற இடங்களில் காசுகள் செய்யும் தங்கசாலை இருந்தது.

வெளிநாட்டு நாணயங்கள் வழங்கப்பட்டமைக்கான இலக்கியச் சான்றுகள் இல்லை எனினும் வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கின்றன.

"சோப்பு என்பவர் தென்னாட்டில் கண்டெடுக்கப்பட்ட நாணயங்களைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார். இவற்றுள் தைபேரியசு (Tiberius) கலிகுலன் (Caligula) குளோடியசு (Cladius) நேரோ (Nero) ஆகியோர் காலத்துக்குரியன பல. வெசுப்பாசியன் (Vespasian) தைத்தசு (Titus) ஆகியோர் காலத்துக்குரிய நாணயங்கள் மிகச்சிலவே இந்தியா முழுவதும் கண்டு எடுக்கப்பட்டன. தொமிசியன் (Domition) திரேசன் (Trajan) கேத்திரியன் (Hadrion) முதலிய மன்னர் காலதது நாணயங்களும் பல இடங்களில் உள்ளன. இவர்களுக்குப் பின்பு கொமோடசு (Commodus) காலத்து நாணயங்களே கிடைத்துள்ளன. இம்மன்னர் யாவரும் கி.பி. முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர்."[5]

மேலும் 'தெற்கே வைகை ஆற்றங்கரையிலும், மேற்கே கோயம்புத்தூர்ப் பக்கங்களிலும் பழைய ரோம நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் டாக்டர் வித்தியானந்தன் கூறுகிறார்.[6]

## முத்து

பண்டைக் காலத்தில் வாணிகம் செழிக்கக் காரணமாயிருந்த தலையாய பொருள் முத்தாகும். இம்முததினைக் குறித்து அயல நாட்டு அறிஞர்கள் குறிப்பிடும் சில கருத்துக்களைக் காணலாம.

5. தமிழர் சால்பு. ப. 40.
6. ,, ,, ப. 235.

'கங்கைப் பிரதேசத்தின் வழியாக எடுத்துச் செல்லப்படும் முத்துக்கள் சிறந்த ரகத்தைச் சேர்ந்தனவல்ல. விலையில் குறைந்தவை. நிறமும் செந்நிறம். வெண்மை நிறங்கொண்ட முத்தே உயர்ந்தது. இவ்வகை முத்துக்கள் மன்னார்வளைகுடாவிலும், கொற்கைத் துறைமுகத்திலும் முகிழ்ந்தெடுக்கப்பட்டன. முத்து என்பது தமிழ்ச்சொல்லே. மற்ற மொழிகளில் இப்பகுதியை ஒட்டியே பலபெயர்களால் வழங்கப்படுகின்றன. பரல் என்ற ஒருவகை முத்தின் பெயரே ஆங்கிலத்தில் பெர்ல் (Pearl) என்றாயிற்று. முத்து அக்காலத்தில் மிகச்சிறந்த வாணிகப் பொருளாகக் கருதப்பட்டது.' (பெரிப்ளூஸ். ப. 285)

தென்தமிழ்க் கடற்கரைகளில் முத்து முகிழ்ந்தெடுக்கப்படுகிறது. மன்னார்குடாவின் முத்துக்கள் சிவப்பு நிறமாகவும், கொற்கை முத்து வெண்மையாகவும இருந்தன.' (பெரிப்ளூஸ். ப. 242)

இந்திய வணிகநெறிகள் என்னும் நூலில் ஆசிரியர் மோதி சந்திரர் முத்து பாண்டிய நாட்டிலுள்ள கொற்கையிலிருந்து எடுக்கப்பட்டதாகவும் அவை குற்றவாளிகள் மூலம் எடுக்கப்பட்டன என்றும் கூறுகிறார். இக்கருத்து பெரிப்ளஸிலும், பிளினி எழுதிய நூலிலும் குறிக்கப்பட்டுள்ளது என்றுங் கூறுகிறார்.[7]

## அங்காடிகள்

பல்வேறு பொருள்களை வைத்து வாணிகஞ் செய்யும் கடைத்தெரு அங்காடி எனப்பட்டது. பெரிய நகரங்களில் அங்காடிகள் இருந்தன. நாட்காலத்தில் நாளங்காடியும், இரவுக் காலத்தில் அல்லங்காடியும் நடைபெற்றன. மதுரைக் காஞ்சி எனும் நூலில் மதுரை நகரத்து அங்காடிகள் பற்றிய விரிவான செய்திகளும்; நற்றிணை என்னும் நூலில் அகன்ற அங்காடியினைப் பற்றிய குறிப்பும் காணப்படுகின்றன. அந்நாளில் அங்காடிகள் நியமம் என்ற சொல்லாலும் அழைக்கப்பட்டன.

---

7. இந்திய வணிக நெறிகள். ப. 280.

## அடையாளக்கொடி

விற்பனைக்குரிய கடைகளில் ஒவ்வொரு விற்பனைப் பொரு ளுக்கும் கொடி நாட்டப் பெற்றிருந்தது. இதனைப் பட்டினப் பாலை,

**நறவு நடைக் கொடியோடு**
**பிற பிறவும் நனிவிரைஇப்**
**பல்வேறு உருவிற் பதாகை** (180-82)

எனக் குறிப்பிடுகின்றது.

கள் விற்றலைக் குறித்துக் கட்டின கொடிகளும், ஏனைப் பண்டங்கள் விற்றலைக் குறித்துக் கட்டின கொடிகளும் மிகச் செறிந்து, இங்ஙனம் பலவாய் வேறுபட்ட வடிவமும் வண்ணமு முடைய கொடிகள் இருந்தன என்று மதுரைக்காஞ்சி, பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

**கள்ளின் களிநவில் கொடியொடு நன்பல**
**பல்வேறு குழூஉக் கொடிப் பதாகை நிலைஇ** (373-74)

மதுரை மாநகரில் விளங்கிய கடைத்தெருக்களையும் அவற்றி னின்றும் எழுந்த ஆரவாரங்களையும் மதுரைக்காஞ்சியின் ஆசிரியர் அழகுற வருணிக்கின்றார். 'நல்ல பெரிய இல்லங்கள் கரைகள் போல் அமைய அவற்றிடையே ஆறுகிடந்தாற் போன்றிருக்கும் பெரிய தெருக்களிலே அங்காடிகள் விளங்கின. பண்டங்களைக் கொள்ளும் பொருட்டு வந்த பல்வேறு மொழிகளையும் பேசும் மாந்தர் கூட்டத்தின் ஆரவாரத்தினையும், ஓவியத்தில் வரைந்து வைத்தாற் போன்று காணப்படும் பல்வேறு பண்டங்களையும் உடையதாய் விளங்கும் இரண்டாகிய பெரிய அங்காடித்தெரு' என்ற கருத்தமைய,

**சில்காற் றிசைக்கும் பல்புழை நல்லில்**
**யாறுகிடந் தன்ன அகல்நெடுந் தெருவில்**
**பல்வேறு குழாஅத் திசையெழுந் தொலிப்ப**
**... ... ... ...**
**ஓவக்கண் டன்ன இருபெரு நியமத்து** (358-365)

என்று கூறுகிறார். இங்கு 'இரு பெரு நியமம்' என்றது நாளங்காடி, அல்லங்காடி என்ற இரண்டு கடைத்தெருக்களையும் குறிப்பன.

## நாளங்காடி

மதுரை மாநகரத்து நாளங்காடியானது 'முகில் கொள்ளுதலால் குறையாதும், ஆறுகள் புகுதலால் மிகாமலும் கிடக்கும் கடல் போன்று மதுரை மாநகரத்து நாளங்காடியில் உள்ள பண்டங்கள் மக்கள் கொள்ளக் கொள்ளக் குறையாமலும் வணிகர்கள் மேலும் மேலும் கொண்டுவரக் கொண்டுவர நிறைவுறாமலும்' இருந்ததாம். இதனை மதுரைக்காஞ்சி ஆசிரியர்

**மழைகொளக் குறையாது புனல்புக மிகாது**
**கரைபொரு திரங்கு முந்நீர் போலக்**
**கொளக் கொளக் குறையாது தரத்தர மிகாது**
**நாளங் காடி நனந்தலைக் கம்பலை (மது. 424-30)**

எனப்பாடியுள்ளார்.

## பண்டங்களைத் திரிந்து விற்போர்

மதுரை மாநகரின் கடைத்தெருவில் மக்கட்குப் பயன்படும் பண்டங்களைத் திரிந்து விற்பர். அவ்வாறு விற்கப்பட்ட பண்டங்கள் இனியவாய் இருக்கும் **தீம்புழல்** என்ற பண்ணிகாரம், வீரமத்தளத்தினது வலிய கண்ணைப் போன்று உருண்ட கூடைகளிலே இட்டுவைத்த மணமுள்ள மலர்கள், பலவகையாக விரித்து வைத்த ஒன்றற்கொன்று மாறுபட்ட பூமாலைகள், இடிக்க வல்லார் பலரும் திரண்டு இடித்த பூந்தாதுக்கள் போலும் சுண்ணம், உடலுக்கு அழகைக் கொடுக்கும் இனிய களிக்கலந்த இனிய நீரினையுடைய பசிய பாக்குடன் வெற்றிலை, சங்கு சுடுதலால் உண்டான சுண்ணாம்பு போன்றவையாகும். இப்பொருட்களை விற்பவர் நால்வகைப் படையும் வழங்கும் தெருக்களில் திரிந்து விற்பர். இவர்கள் படை வழங்கும்போது அஞ்சி ஒதுங்கி நின்று, அவை போயின பின்னர் மீண்டும் பண்டம் விற்றுத் திரிவர்.

நரைத்த கூந்தலினையுடைய முதுமகளிர் மயில்போன்ற மடமகளிர் மாந்தரொடு திளைக்குமாறு, பலவகையான செப்புகளில் அவர் விரும்புவனவும், கண்டார் விழையும் வடிவமைந்தனவுமாகிய தின்பண்டங்களையும், மணமிக்க மலர்களோடே ஏந்திக்கொண்டு வீடுகள் தோறும் சென்று விற்பர். இக்கருத்தினை மதுரைக் காஞ்சி,

**தீம்புழல் வல்சிக் கழற்கால் மழவர்**
**பூந்தலை முழவின் நோன்றலை கடுப்பப்**
**பிடகை பெய்த கமழ்நறும் பூவினர்;**
**பலவகை விரித்த வெதிர்பூங் கோதையர்;**
**பலர்தொகுபு இடித்த தாதுகு சுண்ணத்தர்;**
**தகைசெய் தீஞ்சேற் றின்னீர்ப் பசுங்காய்**
**நீடுகொடி இலையினர் கோடுசுடு நூற்றினர்**
**இருதலை வந்த பகைமுனை கடுப்ப**
**இன்னுயிர் அஞ்சி இன்னா வெய்துயிர்த்து**
**ஏங்குவனர் இருந்தவை நீங்கிய பின்றைப்**
**பல்வேறு பண்ணியந் தழீஇத்திரி விலைஞர்** (395-405)

**............... .........தொன்முது பெண்டிர்**
**... ... ... ..**
**மயிலிய லோரும் மடமொழி யோரும்**
**கல்லா மாந்தரொடு நகுவனர் திளைப்பப்**
**புடையமை பொலிந்த வகையமை செப்பிற்**
**காம ருருவிற் றாம்வேண்டு பண்ணியம்**
**கமழ்நறும் பூவொடு மனைமனை மறுக** (409:23)

எனப் பாடுகிறது.

## அல்லங்காடி

மதுரை மாநகரின் விளங்கிய நாளங்காடியைப் போன்றே அந்திக் காலத்தும் கடைகள் இருந்தன. இதனை அல்லங்காடி என்றனர். மதுரைக்காஞ்சியின் ஆசிரியர் அல்லங்காடியின் ஆரவாரத்தினை,

வாலிதை எடுத்த வளிதரு வங்கம்
பல்வேறு பண்டம் இழிதரும் பட்டினத்
தொல்லென் இமிழிசை மானக் கல்லென
நனந்தலை வினைஞர் கலங்கொண்டு மறுகப்
பெருங்கடற் குட்டத்துப் புலவுத்திரை யோதம்
இருங்கழி மருவிப் பாயப் பெரிதெழுந்து
உருகெழு பானாள் வருவன பெயர்தலிற்
பல்வேறு புள்ளின் இசையெழுந் தற்றே
அல்லங்காடி அழிதரு கம்பலை (536-44)

எனக் குறிப்பிடுகின்றார்

பல்வேறு பண்டங்கள் மரக்கலங்களில் வந்திறங்கும் துறைமுகப் பட்டினத்தின்கண் எழுகின்ற ஓசையைப் போன்று, அகன்ற இடத்தையுடைய அயல்நாட்டு வணிகர் ஈண்டுச் செய்த அணி கலனகளை விலைபேசி வாங்குவதால் உண்டாகும் ஓசையோடு மேலும் கலன் கொள்ளும் பொருட்டு உலாவுதலால் எழுந்த ஆரவாரமும் இயைந்து, பெரிய கடலிடத்தே பெருகும் ஓதம் கழிகளிடத்தே நள்ளிரவிலே பெருகிப் பாய்ந்து மீளுங்கால் ஆண்டு வாழும் பறவைகளும குழீஇ எடுத்த ஓசையை ஒப்ப எழுந்தது, அல்லங்காடியின் ஆரவாரம். இங்கு இந்நூலாசிரியர் பல்வேறு நாட்டினின்றும் வந்தவர் பல்வேறு மொழிகளைப் பேசுதலால் பல்வேறு வகைப்பட்ட பறவைகள் ஒருங்குகூடி ஆரவாரித்தலை உவமை கூறினார்.

## பிற வாணிகர்

மதுரைக் காஞ்சியினின்றும் பிற சங்கப் பாடல்களாலும் அறிய வரும் வேறுசில வணிகர்கள் பின்வருமாறு:

கலிங்கம் பகர்நர் (மது.518) —புடைவைகள் விற்போர்;

செம்புநிறை கொண்மர் (மது. 514)—செம்பு நிறுக்கப்பட்டதை வாங்குவோர்:

பூவும் புகையும் ஆயும் மாக்கள் (மது:515)பூக்களையும் சாந்தையும் நன்றாக ஆராய்ந்து விற்பவர்;

அப்ப வாணிகர் :

**நல்வரி இறாஅல் புரையு மெல்லடை**
**அயிருருப் புற்ற ஆடமை விசயங்**
**கவவொடு பிடித்த வகையமை மோதகந்**
**தீஞ்சேற்றுக் கூவியர்** (மது. 624-27)

**மீன் விற்போர்** : வயமீன் முகந்து
கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்
(மது. 225-56)

**உப்பு விற்பவர்** : இருங்கழிச் செறுவின் வெள்ளுப்புப் பகர்நர்.
(மது. 1.7)

**கள் விற்போர்** : கள்ளோர் களிநொடை நுவல (மது. 66')

**நெல் விற்போர்** : பகர் விரவு நெல் (மலை. 413)

**மலர் விற்போர்** : பார்வல் வெருகின் கூரெயிற் றன்ன
வரிமென் முகைய நுண்கொடி யதிரல்
மல்ககல் வட்டியர் கொள்விடம்
பெறாஅர்
விலைஞர் ஒலித்த தலைவேய் கான்மலர்
(அகம். 301:1-4)

அருவிலை நறும்பூ (பட். 198)

**தானியம் விற்பவர்** : கூலம் பகர்நர் (பதி. 13:21)

**வளையல் விற்போர்** : சிறியவும் உளஈண்டு விளைஞர்கை
வளையே (குறுந். 117-6)

**முத்து விற்போர்** : வளைபடு முத்தம் பரதவர் பகரும்
(ஐங். 195:1)

**ஊன் விற்போர்** : விலைஞர் குரம்பை மாஈண்டவும் (பட்.198)

**பல்வேறு பொருள்கள் விற்போர்** : ...................... பகாஅர்
பண்டம் நாறும் (அகம். 181:22-23)

அளவை : நாழி என்பது முகத்தலளவையின் பெயராக வழங்கப்பட்டது. நாழி கொண்ட நறுவீ முல்லை. (முல். 9)

நெல் அளப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட ஓர் அளவையைப் பதிற்றுப்பத்து,

நெல்லின் அம்பண அளவை (பதி.. 66.7-8) என்கிறது.

பை : பண்ட வாணிகர் பைகளில் பொருளைக் கொண்டு சென்றனர் என்பது, 'பகர்வர் பக்கின் தோன்றும்' என்ற ஐங்குறுநூற்றுப் பாடலடியால் அறியலாம்,

## பண்டைக்கால வணிகர் இயல்பு

வணிகர்க்கு முக்கியமாக வேண்டப்படுங் குணங்களாக கடைச் சங்க நூலாகிய திவாகரத்திலே பின்வருமாறு கூறப்படுகின்றன.

**தனிமை யாதல், முனிவிலன் ஆதல்,**
**இடனறிந்து ஒழுகல், பொழுதொடு புணர்தல்,**
**உறுவது தெரிதல், இறுவ தஞ்சாமை,**
**ஈட்டல், பகுத்தல் — என்றிவை எட்டும்**
**வாட்ட மில்லா வணிகரது இயற்குணம்**

அந்நாளில் 'தனிமையாதல்' என்னுங் குணம் வணிகர்க்கு உரியதாக முன்பு கருதப்பட்டது. 'கூட்டு வர்த்தக முறையில், இக் காலத்துப் போல எண்ணிறந்த வசதிகள் முன்பு ஏற்படாமையால் அது நீக்கப்பட்டது போலும். ஆயினும் அக்கூட்டு வியாபாரம் முன்னிகழ்ந்ததே என்பதும், அக்கால இயல்புக்கு அது பெரும்பாலும் ஒவ்வாதாயிற்று என்பதும் தனிமையாதல் என ஒன்றை எடுத்துக் கூறுதலானே உய்த்தறியப்படும். மனு முதலிய நீதி நூல்களில் சொல்லப்படும் பதினெட்டு வியவகார பதங்களில் 'கூடிமேம்படல்' அஃதாவது கூடியிலாபம் சம்பாதித்தலும் ஒன்றாக இருத்தலால், முற்காலத்தே அவ்வியாபார முறைமை தழுவப்பட்டிருத்தல் வேண்டும். இனி, தனிமையாதல் என்பது

கூட்டு வியாபாரத்தை விலக்காது, வாணிபத் தொழிலில் சுவேச்சை உடையதனால் என்பதைக் குறிக்கும் எனினும் அமையும்.'[8]

சங்க காலத் தமிழர் சமுதாயத்தில் வணிகர் சிறப்பிடம் பெற்றனர். தமிழகம் இவர்களது வாணிகத் தொழிலால் செல்வச் செழிப்புற்று விளங்கியது. வணிகர்களும் செல்வந்தர்களாய் வாழ்ந்தனர். இவர்கள் நூலோர் தமக்கோதிய அறநெறியி னின்றும் தவறாது, இல்லற நெறியினும் பிறழாது இருந்தனர். பருந்துகள் இளைப்பாறி இருந்து பின்னர் உயரப் பறக்கும் அளவு உயர்ந்ததும் ஆகிய சிறபத்தொழிலால் மாட்சிமைப் பட்டதுமாகிய இல்லங்களில் வாழ்ந்தனர். இவர்கள் பல்வேறுபட்ட பண்டங்க ளோடே உணவுப் பொருள்களும் மிக்கு அழகுபெற்று மலை யிடத்தும், நிலத்திடத்தும், நீரிடத்தும், பிற இடங்களிலும் தோன்றுதலையுடையனவும் பலவாய் வேறுபட்ட அழகுடையனவு மாகிய மணி, பொன், முத்து முதலியவற்றைப் பண்டமாற்றாகப் பெற்று அயல்நாட்டினின்றும் கொணர்ந்த பண்டங்களை விற்பர். (மது. 500-06

பழந் தமிழகத்தில் சமன்செய் வாணிகம் நடைபெற்றது (Balanced Trade) எனலாம். ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள் களும், இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களும் வெவ் வேறானவை என்றாலும், மதிப்பு ஒன்றாக இருந்தது. இதனைப் பட்டினப்பாலை எனும் நூலின் ஆசிரியர் காட்டும் உவமையால் அறியலாம்.

**வான்முகந்தநீர் மலைப்பொழியவும்**
**மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவும்**
**மாரிபெய்யும் பருவம்போல**
**நீரினின்று நிலத்தேற்றவும்**
**நிலத்தினின்று நீர்பரப்பவும்**
**அளந்தறியாப் பலபண்டம்** **(126-31)**

---

8 இராகவ அய்யங்கார், The Tamilian Antiquary. Vol I. ப. 76.

அதாவது கார்காலத்தில் கடலின் நீரை முகந்து கொண்டு வந்து மேகங்கள் மலைநிலத்தி மழையாகப் பொழிதலும், ஆறுகள் மலையின்கண் நீரைக் கொணர்ந்து கடலிலே சேர்த்தலும் ஒரே சமயத்தில் நிகழ்தல் போல, காவிரிப்பூம்பட்டினத்திலும் ஏற்றுமதியும் இறக்குமதியும் நடக்கின்றன. வான் முகந்த நீர் மலை பொழிதல் போல நீரினின்று நிலத்தேறவும் (இறக்குமதி செய்யப் பட்ட பொருள்கள், மலைப்பொழிந்த நீர் கடற்பரப்புதல் போன்று நிலத்தினின்று நீர்பரப்பவும் (ஏற்றுமதி, என இயைத்துக் காணின் தன்மையால மாறுபடினும், மதிப்பால் அவை ஒத்தவையே என்பது புலப்படும்.

தமிழர் வெளிநாட்டினருடன் சிறப்புற வாணிகம் செய்தனர். பல்வேறு இடங்களினின்றும் பெறுதற்கரியனவும், பெரியனவுமாகிய பொருள்கள் நிலம் நெளிய வந்து குவிந்து கிடக்கும் காவிரிப்பூம்பட்டினத் துறைமுகக் காட்சியைப் புலவர் கடியலூர் உருத்திரக்கண்ணனார்,

> நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
> காலின் வந்த கருங்கறி மூடையும்
> வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
> குடமலைப் பிறந்த ஆரமும் அகலிலும்
> தென்கடல் முத்துங் குணகடல் துகிரும்
> கங்கை வாரியும் காவிரிப் பயனும்
> ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
> அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி (பட். 185-92)

எனப் பாடியுள்ளார்.

காவிரிப்பூம்பட்டினத்தில் வாணிகத்தின் பொருட்டு பல்வேறு நாட்டவர் கூடுவர். இதனைப் பட்டினப்பாலை ஆசிரியர்,

> மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
> புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
> முட்டாச் சிறப்பின் பட்டினம் (216-18)

உலகிலுள்ள பல்வேறு மக்கள் கூட்டங்களோடும், பல்வேறு நாட்டிலும் சென்று பழகியதன் காரணமாகப் பல்வேறு அறிவுகளும்

நிரப்பிய சுற்றத்தையுடைய சான்றோர் திருவிழாக் கொண்டாடுவ தொரு பழைய ஊரிலே சென்று கூடினாற் போன்று, பலநாட்டி லும் சென்று பலமொழிகளையும் பேசுகின்ற பிறநாட்டு வணிகர் பலரும் வந்துகூடித் தன்கண் வாழும் மக்களோடே உள்ளங் கலந்து மகிழ்ந்து உறையும் காவிரிப்பூம்பட்டினம்' என்றனர்.

சங்க கால வணிகர்கள் அறநெறியைக் கடைப்பிடித்தே வாணிகம் செய்தனர். காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த வணிகர்கள் தமக்குக் கிடைக்கும் இலாபத்தை வெளிப்படையாகக் கூறிப் பண்டங்களை விற்பனை செய்வர். பிறர் பொருளை மிகுதியாகக் கொள்ளாமலும்; தம்முடைய பண்டங்களைக் குறைத் துக் கொடாமலும் விற்பனை செய்வர். இவர்கள் நெடிய நுகத்தில் தைத்த பகலாணி போல நடுவுநிலை என்னும் குணம் நிலைபெற்ற நன்னெஞ்சினை உடையவர்கள். தம்குடிக்குப் பழியாம் என்று அஞ்சி உண்மையே பேசுபவர். இவ்வாறு அறநெறி தவறாது முறையே தொன்றுதொட்டு ஈட்டிய பொருளினை உடையவர். இதனைப் பட்டினப்பாலை,

**நெடுநுகத்துப் பகல்போல**
**நடுவுநின்ற நன்னெஞ்சினோர்**
**வடுவஞ்சி வாய்மொழிந்து**
**தமவும் பிறவும் ஒப்ப நாடிக்**
**கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங்**
**குறைகொடாது**
**பல்பண்டம் பகர்ந்து வீசும்**
**தொல்கொண்டித் துவன்றிருக்கை** (206-12)

எனவும்,

புறநானூற்றுப் பாடலொன்று,

**இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்**
**அறவிலை வணிகன்** (134:1-2)

எனவும் கூறுகின்றன.

பண்டைக் கால மன்னர்கள் வணிகர் குடியினைப் பேணிய தோடு அவர்கள் வாணிபத்தின் பொருட்டுச் செல்லும் வழிகளில்

பாதுகாப்பிற்காக வீரர்களை நிறுத்தினர். கழுதைகள் மேலேற்றி மிளகு மூட்டைகளைக் கொண்டுபோவோருடன் வம்பலர் வழங்கும் பெரிய வழியிலுள்ள கவர்த்த வழிகளைக் காவல் செய்வோரைப் பற்றி பெரும்பாணாற்றுப்படை,

> அணர்ச்செவிக் கழுதைச் சாத்தோடு வழங்கும்
> உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும் (80-81)

எனக் கூறுகிறது மேலும் வணிகர்களே தாம் செல்லும் வழிகளைப் பாதுகாக்கும் பொறுப்பினை ஏற்றிருந்தனர்.

வாணிகத்தின் பெருமையை நன்குணர்ந்து அதனைத் தம் தொழிலாகக் கொண்டு வாழ்ந்த புலவர்கள் பலர் அக்காலத்தில் இருந்தனர். அறுவை வணிகன் இளவேட்டனார், மதுரைப் பண்ட வாணிகன் இளநத்தனார், மதுரைப் பெருங்கொல்லனார், உறையூர் இளம்பொன் வாணிகன் சாத்தன் கொற்றனார் போன்ற புலவர்களது பெயர்களே அவர்தம் தொழிலை உணர்த்துவனவாக உள்ளன.

# IV கலையியல் தொழில்கள்

உள்ளத்திற்கு உவகை அளிக்கும் நுட்பமான தொழில்களைக் கலை என்ற சொல்லால் வழங்குதல் மரபு. ஓவியம், சிற்பம், கட்டடம், இசை, நடனம் என்பன நுண்கலைகள் எனப்படும். இவற்றின் அருமைப்பாடு நுண்ணிதாக உணரப்படுதலின் இவை இப்பெயர் பெற்றன. இவை வளர்ச்சி பெற்றுள்ள நாடே நாகரிக நாடு என்பர் அறிஞர். இத்துறையில் சங்ககாலத் தமிழகம் சிறந்திருந்தது என்பதைச் சங்க நூல்கள் இனிது உணர்த்துகின்றன.

'கலையில் செயல், பயன், திறமை, அழகு, சுவை என்ற அம்சங்கள் உள்ளன. பயன் அம்சம் அதிகப்படுமானால் அது கம்மியம் என்ற பிரிவில் அடங்கும்.'[1]

1. கலைக் களஞ்சியம், தொகுதி 4. ப 338.

கலை கலையாகவே போற்றப்பட்டாலும் வாழ்வின் வளம் பெறச் சிலநேரங்களில் அவரவர் அறிந்த கலை தொழிலாகப் பயன்பட்டது. அதுவே கலைத்தொழில் எனப்பட்டது. மேலும் கலையும் தொழிற்றிறனும் ஒன்றோடு ஒன்று இயைந்து இருப்பவை. இவ்வாறு இணைந்து இயங்குவதால்தான் எக் காலத்து வழக்கில் தோன்றிய நுண்கலைகளாக இருப்பினும் அவை என்றும் போற்றப்படுகின்றன. இந்த அடிப்படையில் பழந்தமிழ்ச் சமுதாயத்தில் வழக்கிலிருந்த எழில்மிகு கலையியல் தொழில்கள் குறித்துப் பின்வருமாறு காண்போம்.

## ஓவியத் தொழில்

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த பண்டைத் தமிழர் தாம் சுவைத்த முருகியல் இன்பத்தை ஓவியமாகத் தீட்டி மகிழ்ந்தனர். ஒன்றினைப் போலச் செய்தல் என்ற எண்ணம் இவர்களைத் தம் உள்ளங்கவர்ந்த வண்ண மலர்கள், மரஞ்செடி கொடிகள், பறவை, விலங்கு, வானம் போன்றவற்றின் உருவங்களை வரைந்து பார்த்து அவ்வவற்றிற்குரிய வண்ணங்களையும் கொடுக்கத் தூண்டியது. தாம் பார்த்து மகிழ்ந்த இயற்கைக் கோலங்களை, குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளைச் சங்கத் தமிழ்ப்புலவர்கள் சொல் லோவியமாகப் புனைந்தனர். அப்பாடல்களின அழகு என்றும அழியாதது. அத்தகைய சிறந்த பாவலர்கள் வாழ்ந்த காலத்தில் கண்கவர் ஓவியந் தீட்டிய ஓவியர்களும் வாழ்ந்திருப்பர் என்பது உறுதி.

சங்கத் தமிழ் இலக்கியங்களில் ஓவு, ஓவம், ஓவியம என்ற சொற்கள் காணப்படுகின்றன.

| | |
|---|---|
| ஓவுக் கண்டன்ன | (மது 365) |
| ஓவச் செய்தியின் | (அகம் 5:20) |
| ஓவத் தன்ன வினைபுனை நல்லில் | (பதி. 61:3) |
| வினை ஓவத்து | (பட்.49) |
| ஓவியங் கடுப்ப | (நெடுநல். 147) |

"காட்சிகளைக் கண்ணாற்கண்டது போலவே ஒவ்வு லோடு (ஒப்புமையியைபோடு) கலைப்பொருளையும் உருவாக்கியதனால், அஃது ஓவு, ஓவம், ஓவியம் என்ற பெயர்கள் பெற்றது "[2]

ஓவியம் என்பதை நாம் சித்திரம் என்ற சொல்லாலும் குறிப்பிடுவோம். சித்திரம் என்பது வடசொல். சித்திரம் வரைபவர் சித்திரக்காரர் எனப்பட்டனர். சித்திரம் என்பதற்கு வியப்பைத் தருவது என்பர். சங்கத் தமிழ் இலக்கியமாகிய மதுரைக்காஞ்சி எனும் நூலில் சித்திரம் தீட்டுவோர் **கண்ணுள் வினைஞர்** எனப் பட்டனர்.

**எவ்வகைச் செய்தியும் உவமங் காட்டி**
**நுண்ணிதின் உணர்ந்த நுழைந்த நோக்கிற்**
**கண்ணுள் வினைஞரும் பிறருங்கூடி (மது. 516:18)**

'கூரிய அறிவுடையார்க் கன்றி ஓவியத் தொழில் இயற்ற வாராமையின நுழைந்தநோக்கின் கண்ணுள் வினைஞர் என்றார். நுழைந்த நோக்காவது, பொருளின் இயல்புகளை நுணுகிக் காணும நோக்கு. நோக்கினார் கண்ணுள் தம் தொழிலை நிறுத் தலின் கண்ணுள் வினைஞர் என்றார்', என்பர் நச்சினார்க் கினியர்.[3] பலவகைப்பட்ட தொழில்களையும் ஒப்புக்காட்டி நுட்ப மாக உணர்ந்த கூர்மையான ஓவியத் தொழிலாளர்கள் இவர்கள். கண்ணுள் வினைஞர் எனப் போற்றப்பட்ட ஓவியர் தம் உள்ளத்தை ஈர்த்த காட்சியை அப்படியே உயிருடையதுபோலத் தோன்றுமபடி தம கலையாற்றலால ஓவியமாக எழுதும் திறம் பெற்றிருந்தனர். இதனைக் கலித்தொகை,

**................ புலனுடை மாந்தர்**
**தாவுயிர் செய்த பாவை போல (22:4-5)**

---

2. அழகுக் கலைத்திறன், செ வைத்தியலிங்கன், செல்ல முத்தகம் வெளியீடு. பரங்கிப்பேட்டை, 1970. ப. 79.

3. பத்துப்பாட்டு. கழக வெளியீடு 45. சென்னை-1, 1970 ப. 134.

என்றதால் உணரலாம். தொன்றுதொட்டுப் பழக்கத்தில் இருந்து வரும் ஓவியத் தொழில் சங்க காலத்தில் வளர்ச்சியடைந்திருந்தது என்பதற்குச் சங்கப்பாடல்களே சான்று பகர்வன. ஓவியம் என்பது சுவர், மரம், துணி, உலோகம், தோல் போன்ற ஏதாவது ஒன்றன்மேல் கோடுகளால், நிறத்தால் உருவங்களை எழுதும் தொழிலாகும்.

## எழுத்துநிலை மண்டபம்

எட்டுத்தொகையுள் ஒன்றாகிய பரிபாடல் என்ற நூலில் பத்தொன்பதாவது பாடலில் ஆசிரியரால் ஓர் ஓவியக் கண்காட்சியே காட்டப்படுகிறது. மக்கள் தத்தமக்கேற்ற ஆடை அணிகலன் பூண்டு முருகக்கடவுள் உறையும் திருப்பரங்குன்றம் நோக்கிச் செல்கின்றனர். அவர்களுள் சிலர் அக்குன்றத்துள்ள சித்திரச் சாலைகளிற் சென்று அங்குள்ள சித்திரங்களைக் கண்டு மகிழ்ந்தனர். அவர்களுள் சிலர் துருவசக்கரத்தைப் பொருந்தி வரும் சூரியன் முதலிய கிரகங்களின் நிலைமையை விளக்கும் சித்திரத்தைக் கண்டனர். தம் மனைவியர் சில சித்திரங்களைச் சுட்டி வினாவக் கணவர்கள் 'இவள் இரதி, இவன் காமன்' என்று விடை கூறினர் வேறொரு இடத்திலுள்ள சித்திரத்தைப் பார்த்து இவ்வுருவம் பூனை உருவெடுத்த இந்திரனது. இவள் அகலிகை; இவன் கௌதமன். இவன் கோபித்தலால் அகலிகை கல்லுருவான வாறிது' என்று சிலர் கூறினர். இங்ஙனம் திருப்பரங்குன்றத்தில் முருகனின் திருக்கோயிலின் பக்கத்திலுள்ள இடம் பல சித்திரச் சாலைகளை உடையதாய் அழகோடு விளங்கியது.

**என்றூ ழுறவரும் இருசுடர் நேமி**
**ஒன்றிய சுடர்நிலை உள்படு வோரும்**
**இரதி காமன் இவளிவன் எனாஅ**
**விரகியர் வினவ வினாவிறுப் போரும்**
**இந்திரன் பூசை யிவளக லிகையிவன்**
**சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு**
**ஒன்றிய படியிதென்று உரைசெய் வோரும்**
**இன்ன பலபல எழுத்துநிலை மண்டபம் (பரி. 19:46-53)**

இப்பாடலில் பற்பல சித்திரம் நிற்றலையுடைய மண்டபம் என்ற பொருள்பட எழுத்துநிலை மண்டபம் எனக் கூறப்பட்

டுள்ளது. பரிபாடலில் மற்றொரு பாடலில் திருப்பரங்குன்றிலுள்ள சித்திரச்சாலையானது காமவேளது படைக்கொட்டிலை ஒக்கும் என்ற பொருள்பட

> ... ...............நின்குன்றத்து
> எழுதெழில் அம்பலங் காமவேள் அம்பின்
> தொழில் வீற்றிருந்த நகர் (பரி. 18:27-29)

எனக் கூறப்பட்டுள்ளது. புறநானூற்றுப் பாடலொன்று(59) பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனைப் புகழ்வது. இதனின்றும் ஓவியங்கள் வரையப்பெற்ற மாளிகை சங்க காலத்தில் இருந்திருத்தல் வேண்டும் என்பதை உணரலாம். மாடங்களில் கருத்தமைந்த கண்கவர் ஓவியங்கள் வரைந்து அழகுபடுத்துவது அந்நாளில் இன்றியமையாத ஒன்றாய் இருந்திருத்தல் வேண்டும். இக்கருத்தைப் பிற்காலத்துத் தோன்றிய நன்னூல் இலக்கணம்,

மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும் (பொதுப் பாயிரம். 55) என்றதால் வலிவு பெறுகிறது.

பரிபாடல் ஒன்றில் ஒரு பெண் யானை புலிமுகமாடத்து வரைந்து வைத்த வேங்கையைக் கண்ட அளவிலேயே அதனை உண்மையான புலி என்று கருதி வெருவியதாகக் கூறுகிறது.

> மடப்பிடி................ ...
> .................. .. எழில்மாடத்துக்
> கைபுனை கிளர்வேங்கை காணிய வெருவுற்று
> (பரி. 10:42-46)

மேற்கூறிய பாடலடிகளினின்றும் சங்கத் தமிழர் நிலவுலகில் தாம் கண்டு மகிழ்ந்த இயங்கும், இயங்காப் பொருள்களை ஓவியமாகத் தீட்டி மகிழ்ந்ததோடு, தாம் வாழ்ந்த காலத்து வழக்கிலிருந்த தெய்வங்களையும் ஓவியமாக வரைந்து மகிழ்ந்தனர். அத்தகைய ஓவியங்கள் வரையப்பட்ட மண்டபங்கள் எழுத்து நிலை மண்டபம், எழுதெழில் அம்பலம் எனக் குறிப்பிடப்பட்டதையும் அறியலாம். இங்கு எழுத்து என்ற சொல் ஓவியத்தையும்; எழுது என்ற சொல் வரைதலையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம்.

சித்திரமாடங்கள் நகரங்களில் தனியே சிறப்புற்று விளங்கிய தேரோடு மன்னரது அரண்மனைகளிலும் செல்வந்தர் இல்லங்களிலும் சுவர்களில் கண்கவர் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. பட்டினப் பாலை எனும் நூலில் கரிகால் சோழனது பட்டினத்துச் சிறப்புக் களைக் கூறிவருகையில் ஆசிரியர் அரண்மனை சுவர்களில் ஓவியங்கள் வரையப்பட்டிருப்பதை, 'வினையோவத்து வெண் கோயில்' எனக் கூறுகிறார். நெடுநல்வாடையில் அரசமா தேவியின் கருப்பக்கிருகத்தின் தோற்றம் ஆசிரியர் நக்கீரரால் வருணிக்கப்படுகிறது. அதில் காட்சிக்கினிய நன்றாகிய அந்த இல்லின் நெடுஞ்சுவர் செம்பினால் செய்தது போன்ற தொழிற் றிறன் அமைந்தது. அச்செஞ்சுவரிலே வடிவழகினை உடைய வாகிய பலபூக்களையுடைய ஒப்பில்லாத பூங்கொடியை ஓவியமாக எழுதியிருந்தது என்ற கருத்தமைய,

**செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்**
**உருவப் பல்பூ ஒருகொடி வளைஇ**
**கருவொடு பெயரிய காண்பின் நல்லில்**
**(நெடுநல்-112::14)**

என்றனர்.

## மணலில் வரைதல்

மகளிர் கலைத்திறனோடு மணலில் ஓவியம் வரைந்து விளை யாடுவர். இவ்வாறு வரைதல் நிலையாக இருக்காது எனினும் ஓவியம் வரையும் ஆற்றல் பெருக வழியாக அமைதல் கூடும். பரிபாடல் (7) ஒன்றில் இளம்பெண்கள் வையை ஆற்றங்கரை மணலில் எழுதிய பாவைகளை ஆற்று வெள்ளம் சிதைக்க அதனால் அவர்கள் அழுதனர் எனக் கூறப்பட்டுள்ளது.

**மாதர் மடநல்லார் மணலின் எழுதிய**
**பாவை சிதைத்த தெவழ** **(பரி-7:25-26)**

புறநானூற்றுப் பாடலடிகளில் பேதை மகளிர் மணலில் பாவை எழுதி அதற்கு மலர் அணிவிப்பர் என்ற கருத்துக் காணப்ப கிறது. சான்று : **வாலிழை மடமங்கையர்**

வரிமணல் புனைபாவைக்குக்
குலவுச்சினைப் பூக்கொய்து (புறம். 11:2-4)

..................திணிமணல்
செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்
தண்கய மாடு மகளிரொடு (புறம். 243:1-3)

## சுவரோவியம் தீட்டுதல்

சுவரோவியங்கள் நெய்யோவியங்களாகவும் (Oil Paintings), சுதையோவியங்களாகவும் (Frescoes) செய்வதுண்டு. சுதை ஓவியம் என்பது சுவரில் சுதை பூசி அது உலராமல் ஈரமாயிருக்கும் போதே ஓவியம் தீட்டுவதாகும். ஏனைய நாடுகளைப் போலவே தமிழ் நாட்டிலும் முதன் முதலாக எழுதப்பட்ட ஓவியம் சுவரோவியங்களே. ஓவியங்கள் பெரும்பாலும் சுவர்களிலே எழுதப்பட்ட படியினாலேதான், 'சுவரை வைத்தல்லவோ சித்திரம் எழுத வேண்டும்' என்னும் பழமொழி உண்டாயிற்று. தமிழ் நாட்டில் சுவர் ஓவியங்கள் எழுதப்பட்ட மாளிகைகள் சித்திர மாடங்கள் என்று பெயர் பெற்றன. சேர, சோழ, பாண்டியர்களின் அரண் மனைகளிலே ஓவியங்கள் எழுதப்பட்ட சித்திர மாடங்கள் இருந்தன. புறநானூறு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, முதலிய நூல் களிலே சுவரோவியங்களைப பற்றிய குறிப்புகள் காணப்படு கின்றன. அரண்மனைகளிலும், மாளிகைகளிலும் அல்லாமல் கோயில்களிலும் ஓவியங்கள் எழுதப்பட்டன. மதுரைக்கு அருகில் இருக்கிற திருப்பரங்குன்றம் என்னும் குன்றின் மேல், பண்டைக் காலத்தில் முருகன் கோவிலில் ஓவியங்கள் எழுதப்பட்ட ஓவியச் சாலையை எழுதெழில் அம்பலம் என்றும் எழுத்துநிலை மண்டபம் என்றும் அழைத்தனர்.

நெடுநல்வாடையில் புலவர் நக்கீரர் வருணிக்கும் கருவொடு பெயரிய காண்பின் நல்லில்லில் வரையப்பட்ட ஓவியங்கள் சுதை ஓவியங்களேயாகும்.

எழுதணி கடவுள் போகலின் புல்லென்று
ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்திணை
(அகம். 167:15-16)

**காழ்புனைந் தியற்றிய வனப்பமை நோன்சுவர்ப்**
**பாவையும் பலியெனப் பெறாஅ (அகம். 369:7-8)**

(அழகு அமைந்த வலிய சுவரின்கண்ணுள்ள பாவைகளும் பலி யென எதனையும் கொண்டில.)

நற்றிணைப் பாட்லொன்று எவ்வகையிலும் குற்றங்காண முடியாத அளவிற்குத் தெளிவான ஓவியம் சுவரில் எழுதப்பட் டின்னமை நக் கூறுகிறது.

**... .....................புனைசுவர்ப்**
**பாவையன்ன பழிதீர் காட்சி (நற். 252:6-7)**

(சுவரில் அலங்கரித் தெழுதிய பிரதிமை போன்ற குற்றம் தீர்ந்த காட்சி என்பது பொருள்.)

இவ்வாறான பல சான்றுகளைக் காணுகையில் சங்கத் தமிழர் கோயில், அரண்மனை, மாடமாளிகை, இல்லங்கள் எனப்பட்ட தாம் பழகும், வாழும் இடங்களில் உள்ளத்தைக் கவரும் வகையில் சுவரோவியங்கள் எழுதி அழகுபடுத்துவதில் தனிஆர்வம் செலுத்தி யிருத்தல் வேண்டுமெனத் தெரிகிறது. இவர்கள் சுவர்களில் ஓவியங்கள் எழுதியதைப் போலவே கிழிகளிலும் ஓவியம் எழுதும் ஆற்றல் பெற்றிருந்தனர் என்பதற்கான சான்றுகளும் சங்கப் பாடல்களில் காணப்படுகின்றன.

## துணிகளில் சித்திரம் தீட்டுதல்

நெடுநல்வாடை எனும் பாட்டில் அரசமாதேவியின் கட்டிலின் ஒப்பனைத் திறனைக் கூறுகையில் ஓர் ஓவியக் காட்சியும் இடம் பெறுகிறது.

**..................வயமான்**
**வேட்டம் பொறித்து வியன்கட் கானத்து**
**முல்லைப் பல்போது உறழப் பூநிரைத்து**
**மெல்லிதின் விரிந்த சேக்கை (நெடுநல். 128-31)**

இவ்வடிகள் கட்டிலில் விரிக்கப்பட்ட மெல்லிய போர்வையில் தீட்டப்பெற்ற ஓவியத்தைக் குறிக்கிறது. அப்போர்வையில் அரிமா

வேட்டையாடுதல் போன்றும், அகன்ற இடத்தையுடைய காட்டிடத்தே மலர்ந்த முல்லை முதலிய பல வேறுபட்ட மலர்களின் உருவங்களையும் நிரம்ப வரையப்பட்டிருந்தது. அரசமாதேவி அமர்ந்திருந்த கட்டிலின் பக்கத்தே மற்றோர் எழில்மிகு ஓவியக் காட்சி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. புதிதாகப் பண்ணப்பட்ட மெழுகு வழித்த மேற்கட்டி(துணி)யது. அக்கிழியின்மேல் ஓவியம் தீட்டப்பெற்றுள்ளது. அதில் திண்ணிய நிலையினையுடைய கொம்பினையுடைய மேடராசி முதலாக ஏனைய இராசிகள் வானிடத்தே திரிதலைப் போன்றும், ஞாயிற்றோடே மிகவும் மாறுபாடுடைய திங்களின் ஓவியத்தோடே உரோகிணியின் ஓவியம் அருகே நிலைத்துள்ளது போன்றும் வரையப்பெற்றிருந்தது. திங்கள் மண்டிலமாகிய வட்டத்துள்ள திங்களை ஆடவனாகவும், உரோகிணியை அவன் மருங்கமைந்த மடந்தையாகவும் ஓவியம் வரையப்பட்டிருந்தது என்பர்.

**புதுவ தியன்ற மெழுகுசெய் படமிசைத்**
**திண்ணிலை மருப்பின் ஆடுதலை யாக**
**விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலல் மண்டிலத்து**
**முரண்மிகு சிறப்பிற் செல்வனொடு நிலைஇய**
**உரோகிணி (159-63)**

இப்பகுதியைப் படிக்கையில் தற்காலத்தில் நாம் நம் வீடுகளிலும், அலுவலகம் போன்ற பொது இடங்களிலும் அந்தந்த இடத்திற்குப் பொருத்தமான ஓவியங்களை வைத்திருப்பது போலவே பண்பார் பண்டைத் தமிழரும் இடத்திற்குப் பொருத்தமான ஓவியங்களைச் சுவர்களில் தீட்டியோ அல்லது கிழிகளில் வரைந்தோ நிறுத்தியிருந்தனர் என்பது அக்காலத்திலேயே ஓவியத்தொழில் பெற்றிருந்த அருமை பெருமைகளை உணர முடிகின்றது.

பட்டினப்பாலையில் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பட்டினத்தில் உயர்த்திய பல்வேறு கொடிகளின் சிறப்பினைக் கூறி வருகையில் தெய்வக் கொடிகளும், வீரக் கொடிகளும். கல்விக் கொடிகளும் இருந்ததாகக் கூறுகிறார். வீரக் கொடிகளைக் கூறுகையில், 'ஊன்றிய துகிற்கொடி' என்றதால் துணியில் கொடி அமைக்கப்பட்டதை அறியலாம். இத்துணிக் கொடிகளில் ஒவ்வொன்றிற்கும்

வேறுபாடு காட்ட அடையாளச் சின்னம் ஏதேனும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். திருமுருகாற்றுப்படையில் முருகக் கடவுளது பெருவிழா நிகழ்கையில் வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ (219) எனக் கோழிக்கொடி உயர்த்தப்பட்டதைக் கூறுகிறார். மேலும் கலித்தொகைப் பாடலில்,

**வானுற ஓங்கிய வயங்கொளிர் பனைக்கொடி (104:7)**

எனவும்;

**சுறாஅக் கொடியன் (142:42)**

எனவும் வருவதாலும் அறியலாம்.

## *துகிலிகை*

ஓவியம் எழுதுவோர் பாதிரி மலரையொத்த தூரிகையைப் பயன்படுத்தினர். இதனை நற்றிணை,

**ஓவமாக்கள் ஒள்ளரக்கு ஊட்டிய**
**துகிலிகை யன்ன துய்த்தலைப் பாதிரி (நற். 118:7-8)**

என்கிறது.

## *தோலில் சித்திரம் வரைதல்*

பறை போன்ற தோற்கருவிகள் எழிலுடன் விளங்கத் தோற்பகுதியின் மேல் ஓவியங்கள் வரையப்படுதலுண்டு.

**சான்று : சிறுதோள் கோத்த செவ்வரிப் பறையின்**
**கண்ணகத் தெழுதிய குரீஇப் போல (நற். 58:2-3)**

## *தொய்யில்*

பண்டைத் தமிழர் தாம் கண்டு மகிழ்ந்த காட்சிகளைச் சுவர்களிலும், கிழிகளிலும், தோலிலும் ஓவியங்களாகத் தீட்டினர். ஓவியக்கலையில் சிறப்புற்றிருந்த சங்க காலத்தில், சந்தனம் போன்ற நறுமணக் கலவையால் மகளிரின் நெற்றியில், தோள்களில், மார்பில், இலை, கொடி, மலர் போன்ற ஓவியங்களை அழகுற எழுதுவர். இக்கலை **தொய்யில் எழுதுதல்** என்று

சொல்லப்படும். இதனை இளம் பெண்களுக்கு அவர்களது தோழியர் அல்லது பெண் உறவினர் எழுதிவிடுவர். காதல் தலைவனால் ஒரு பெண்ணிற்கு அவளது திருமணத்திற்குப்பின எழுதப்படும். கரும்பு மன்மதனது வில்லாகக் கருதப்படுவதால் பொதுவாகக் கரும்பின் வடிவ அமைப்பே மகளிரின் தோள்களிலும், மார்பிலும் வரைந்து விடப்படும்.

சான்று : **பெருந்தோள் தொய்யில் வரித்தும் (அகம் 389:6)**
**வேய்த்தோள் கரும்பெழுதித் தொய்யில் செய்தனை**
**கலி 76:15)**

**.................. தன்முகத்து**
**எழுதெழில் சிதைய அழுதனள் (அகம். 176:21)**

பண்டைக் காலத்திலேயே மகளிர் தங்கள் விரல் நகங்களில், கன்னங்களில், பாதங்களில் அழகிற்காக செந்நிறக் குழம்பால் வர்ணம் பூசிக்கொள்வர்.

**உகிரும் கொடிறும் உண்டசெம் பஞ்சியும் (பரிபா. 6:17)**
**அஞ்செஞ் சீறடிப் பஞ்சி ஊட்டியும் (அகம். 389:7)**

இவ்வாறாக அக்காலத்தில் இளம் பெண்டிர் தங்களது இயற்கை அழகிற்கு மேலும் அழகூட்டுவது போல் முகம், மார்பு, தோள் ஆகியவற்றில் தொய்யில் எழுதியும், நகம், பாதங்களில் செம்பஞ்சுக்குழம்பினால் வண்ணமூட்டியும் ஒப்பனை செய்து கொள்வதில் தனியார்வங் கொண்டிருந்தனர். ஒப்பனை செய் வதில் வல்ல மகளிரும் அக்காலத்தில் இருந்தனர்.

## செதுக்குச் சித்திரம்

'செதுக்குச் சித்திரம் என்பது கல், மரம், உலோகம் போன்ற பொருள்களின்மீது உருவங்களைச் செதுக்குவதாகும். உலோகத்தில் செதுக்குவதாயின், சித்திரத்தைக் குடைவாக்கிச் செதுக்கி, அதைச் சுற்றியுள்ள பகுதியைப் புடைப்பாக விடுவார்கள். மரத்தில் செதுக்குவதாயின், சித்திரம் புடைப்பாக இருக்கும்படிச் செதுக்கு வார்கள். அதைச் சுற்றியுள்ள பகுதி குடைவாகச் செதுக்கப்படும். இவ்வகையில் செதுக்குச் சித்திரம்தான் உலகத்தில் தோன்றிய

முதற்கலையாய் இருக்கலாம் என்று தோன்றுகிறது'[4]. இதற்குச் சான்றாகப் பட்டினப்பாலையில் வரும் 'புலிப் பொறிப் போர்க்கதவு' (40) என்ற அடியைக் கூறலாம். சோழர்களின் அடையாளச் சின்னம் புலி. சோழ மன்னன் கரிகால்வளவனின் நாட்டுப் போர்க் கதவில் சோழ மன்னர்க்குரிய இலச்சினையாகிய புலி அடையாளம் பொறிக்கப்பட்டதையே மேற்குறிப்பிட்ட பாடலடி உணர்த்தும்.

மற்றொரு பாடலாகிய நெடுநல்வாடையில் நக்கீரர் மன்னனது அரண்மனை வாயிலின் நிலைக்கால் கைவல் கம்மியனால் சிறந்த மரத்தினால் அமைக்கப்பட்டு அதில் குவளைமலர் உருக்கள் பொறிக்கப்பட்டிருந்தன எனப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**நாளொடு பெயரிய கோளமை விழுமரத்துப்**
**போதவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத்துக்**
**கைவல் கம்மியன் முடுக்கலின் (நெடுநல். 82-85)**

பொதுவாக, சிறப்பாக ஓர் ஓவியம் அமைய வேண்டுமெனின் ஓவியனுக்குச் சில தகுதிகள் தேவை. 'உலகப் பொருள்களைக் கூர்ந்து நோக்கும் திறன், கற்பனை உள்ளம், அளவுகள் பற்றிய அறிவு, உள்ளமும் கையும் ஒன்றிச் செல்லும் பயிற்சி, வண்ணக் கலவையிலும், தூரிகை அமைப்பிலும், தேர்ந்த தெளிவு; நல்லொழுக்கம், நூற்புலமையுடன் அமைந்த கலையீடுபாடு, மெய்ப் பாட்டுணர்வு முதலியன ஓவியப் புலவனுக்கு அமைந்துவிடின், தெய்வீக ஓவியங்களை உருவாக்கி விடுவான்.'[5]

## சிற்பத் தொழில்

உயிரோட்டமுள்ள சிற்பங்கள் வடிப்பதில் சங்ககாலத் தமிழர் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தனர். மண், மரம், சுதை, கல், பளிங்கு, தந்தம், பித்தளை, வெண்கலம், பொன் போன்ற உலோகங்கள் ஆகியவற்றால் சிற்பங்கள் செய்யப்பட்டன. திவாகர நிகண்டில்,

---

4. கலைக்களஞ்சியம். தொகுதி. 5. ப. 163.
5. அழகுக் கலைத்திறன். ப. 70-71.

**கல்லும் உலோகமும் செங்கலும் மரமும்**
**மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்**
**கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை**
**பத்தே சிற்பத் தொழிற்கு உறுப்பாவன** (12)

எனக் கூறப்பட்டுள்ளது.

சிற்பம் அமைக்கத் திவாகரத்தில் கூறப்பட்ட அடிப்படைப் பொருள்கள் சங்க காலத்தும் பயன்படுத்தப்பட்டதை அறியலாம்.

## நடுகல்

சிற்பத் தொழிலின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் அடிப்படையாய் அமைவது நடுகற்களே எனலாம். நடுகல் என்பது போரிலே உயிர் கொடுத்துப் புகழ்கொண்ட மறவரின் பீடும் பெயரும் உலகத்தார் அறியும் பொருட்டுக் கல்லிலே எழுதி (பொறிக்கப்பட்டு) மரத்தின் நிழலிலே நடுவர். வீரர்கள் போர்க் களத்தில் தம்திறல் தோன்றப் போரிட்டு உயிர்நீத்தகாலை அவர்க்குக் கல்நட்டுத் தெய்வமாகக் கொண்டு மாலை அணிவித்து, போற்றுதல் பண்டைத் தமிழர் வழக்கம். இதனை,

**காட்சி, கால்கோள், நீர்ப்படை நடுகல்**
**சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல்** (தொல் புறத். 5)

என்னுந் தொல்காப்பிய விதியானும்,

நடுகல்லில் பீடும் பெயரும் பொறித்ததை,

**கைவினை மாக்கள் கலுழக்க ணோக்கிழந்து**
**செய்வினை வாய்ப்பவேசெய்த மைத்தார்—மொய்போர்**
**மறவர் பிணம்பிறக்கி வாள்வாய்த்து வீழ்ந்தோன்**
**பெரும்பெயர்சூழ் கன்றேற் பெரிது**

என்றதாலும் அறியலாம்.

புறநானூற்றுப் பாடலொன்றில் கல் நாட்டியதை,

**அணிமயிற் பீலிசூட்டிப் பெயர்பொறித்**
**தினி நட்டனரே கல்லும்** (புறம். 204:3-4)

என்றும்;

நடுகல்லிற்குப் பந்தல் அமைத்தனர் என்பதை,

**படஞ்செய் பந்தர்க் கன்மிசை அதுவே (புறம் 260:25)**

என்றும்; நடுகல்லிற்குப் பலியூட்டினர் என்பதை,

**இல்லடு கள்ளின் சில்குடிச் சீறூர்ப்**
**புடைநடு கல்லின் நாட்பலி யூட்டி**
**நன்னீ ராட்டி நெய்ந்நறைக் கொளீஇய**
**மங்குன் மாப்புகை மறுகுடன் கமழும்**
**அருமுனை இருக்கை (புறம். 329:1-5)**

என்றும்; பாடப்பட்டுள்ளதால் அறியலாம். இவ்வாறு போரிலே பகைவரை எதிர்த்துப் பொருதுப் போரிட்டு மடிந்த மறவர்க்கு நடுகல் வைத்து வழிபட்டமை பின்னர் தெய்வச் சிலைகள் அமைத்து வழிபாடு செய்வதற்கு வழிகோலியிருக்கலாம். அகநானூற்றில் 'அருஞ்சமங் கடந்து படிமம் வவ்விய (149:12) எனவரும் அடியிலுள்ள படிமம் என்ற சொல்லுக்கு ந. மு. வேங்கடசாமி நாட்டார் படிமம் என்றது முசிறியிலிருந்ததோர் தெய்வ விம்பம் போலும் என உரை எழுதியுள்ளனர்.

## உலோகத்தாலான சிலை

நெடுநல்வாடையில், யவனர் பண்ணின தொழில் மாட்சிமைப் பட்ட பாவை தன் கையிலே ஏந்தியிருக்கின்ற அகல் விளக்கு என்ற பொருளமைய;

**யவனர் இயற்றிய வினைமாண் பாவை**
**கையேந் தையகல் நிறையநெய் சொரிந்து (101-103)**

என்றும்; முல்லைப்பாட்டில், பாவை விளக்கிற் பரூஉச்சுடர் அழல (85) என்றும் கூறப்பட்டுள்ளன. இப்பாடல்களில் கூறப்படும் கையில் அகல் விளக்கேந்தி நிற்கும் தோற்றத்திலுள்ள பாவையின் உருவம் வெண்கலத்தால் செய்யப்பட்டிருக்கலாம். இக்காலத்திலும் இதே போன்ற உருவ அமைப்பிலுள்ள பாவை விளக்குகள் பழக்கத்திலிருப்பதை அறிவோம்.

## பொன்னால் பாவை அமைத்தல்

சங்க இலக்கியப் பாடல்கள் சிலவற்றினின்றும் பொன்னால் பாவை போன்ற உருவம் அமைக்கும் வழக்கம் இருந்ததை அறியலாம்.

சிவந்த தன்மையுடைய கிளிச்சிறை என்னும் பொன்னால் செய்த பாவை—**செந்நீர்ப் பசும்பொன் புனைந்த பாவை**

(மது. 410) எனவும்;

**தாவில் நன்பொன் தைஇய பாவை** (அகம். 212:1)

எனவும்;

**பொன் செய்பாவை** (அகம். 127:6)

எனவும் வருவதைக் காணலாம்.

அரசனைப் பிழைத்தவர் தம் நிறையுள்ள பாவை செய்து தண்டமாக இறுத்தல் மரபு. நன்னன் என்னும் சிற்றரசன் ஒருவன் ஆற்றங்கரையிலிருந்த தன்தோட்டத்தில் அரிதின் வளர்ந்த மாமரத்தின் காயொன்று அவ்வாற்றிலே வீழ்ந்து மிதந்துவர, அதனை ஆற்றிற்கு நீராடச் சென்ற பெண்ணொருத்தி எடுத்துத் தின்றாள். அதுகண்ட காவலர் அவளை நன்னன் முன்கொண்டு நிறுத்த, அவன் அவளுக்குக் கொலைத்தண்டம் விதித்தான்; அதனை அறிந்த அவள் தந்தை அவளது நிறைக்கேற்ற பொன்னாற் செய்த பாவையையும், எண்பத்தொரு களிற்றையும் தண்டமாகக் கொடுப்பதாகக் கூறவும் நன்னன் அதற்கு உடம்படாமற் கொலை புரிவித்தான்.[1] இதனைப்

**பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்**

(குறுந். 292:4)

என்ற குறுந்தொகைப் பாடலடி புலப்படுத்தும்.

## கடவுள் படிமம் செய்தல்

அந்நாளில் மக்களிடையே தாம் வழிபடும் கடவுளர்க்கு உருவம் அமைத்து வழிபாடு செய்யும் பழக்கமிருந்திருக்கிறது. சான்றாக மதுரைக்காஞ்சியில்,

---

1. குறுந்தொகை மூலமும் உரையும். உ. வே. சா. பதிப்பு. ப. 544.

**வல்லோன் றைஇய வரிப்புனை பாவை**
**முருகியன் றன்ன உருவினை யாகி (723-24)**

எனவரும் பாவடிகளில் வல்லோன் என்ற சொல் சிற்பத்துறை வல்ல கலைஞனைக் குறிக்கும். பாவை என்றது முருகனுக்குரிய திருவுருவைக் குறிக்கும். சிற்பத்துறை வல்லோனால் செய்து எழுதிக் கைசெய்த பாவையிடத்தே முருகனை அதிட்டிப்பர்.

## தந்தத்தில் சிற்பத்தொழில்

யானைத் தந்தத்தைச் செதுக்கியும், கடைந்தும் பல்வேறு கைத்தொழில் விளங்கும் பொருள்கள் செய்தனர். நெடுநல் வாடையில் புலவர் நக்கீரர் அரசமாதேவியின் கட்டிலை வருணிக்கையில் அழகிற்காகத் தந்தத்தால் ஆன இலைகளைச் செய்தமைத் தமையை மிகத் தெளிவாக விளக்குகின்றார். நாற்பதாண்டு நிரம்பியதும், முரசம் போன்ற கால்களை உடையதும், போர்த்தொழிலிலே புகழப்பட்டதும், உயர்ந்த அழகினையும், புகர்நிறைந்த நெற்றியினை உடையதும், போரில் விழுப்புண் பட்டிறந்ததுமாகிய ஆண்யானையிடமிருந்து தாமே வீழ்ந்த தந்தங்களின் பக்கங்களைச் செதுக்கி, சீரும் செம்மையும் பொருந்தக் கைத்தொழில் வல்ல தச்சன் கூரிய உளியால செய்த பெரிய அல்லது இரட்டையாக அமைந்த இலைச்சிற்பம் போன்று செய்த உருக்களைக் கட்டிலிற் பொருத்துவர்.

யானையினது வெளிய தந்தத்தால் கடைந்து துலாக்கோல் செய்வர் என்பது—

**யானை வான்மருப் பெறிந்த வெண்கடைக்**
**கோல்நிறை துலாஅம் (புறம்,39:2 3)**

என்ற நப்பசலையார் பாடலால் அறியலாம். மேலும்,

**கோடு கடைந்தன்ன கொள்ளை வான்பூ (அகம்.331:2)**

என்றதாலும் யானையின் தந்தத்தைக் கொண்டு தொழில் வல்லார் கலைத்திறனோடு பல்வேறு பொருட்களைச் செய்தனர் என்பதை அறியலாம்

## கட்டடத் தொழில்

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவையாகக் கருதப் படுபவை உணவு, உடை, உறையுள்ீ என்பவையாகும். மனிதன் பாதுகாப்புடன் வாழத் தனக்கொரு இருப்பிடம் அமைக்க எண்ணிய எண்ணம் கட்டடக்கலையின் தோற்றத்திற்கு வித்திட்டது. கட்டடக்கலை சமுதாயத்தின் பிறகலைகளும், தொழில்களும் நடைபெற இடமளிப்பது. எனவே கட்டடக்கலை மனித வாழ்க்கை நடைபெற அவ்வாழ்க்கைக்குத் தேவையான பிறதொழில்கள் சிறப்புற அடிப்படையாய் அமைவது. பண்டைநாளில் ஆற்றங் கரையோரத்தில் வாழ்ந்த மனிதன் மருதநில நாகரிக காலத்தில் தனக்கென வீடுீஅமைத்து வாழத தொடங்கினான். முதல் நிலையில் இவ்வீடுகளின் அமைப்பு அவரவர் வாழ்ந்த நிலத்திற்கு ஏற்ற வகையில் அமைந்தன. இவை நாளடைவில் ஒவ்வொரு குடும்பத்திற்கு ஏற்ற வகையிலும் ஊராரின் பிற தேவைகளுக்கு ஏற்ற வகையிலும் கட்டடங்களாக உருவெடுத்தன. காட்டாக, மக்களுள் அவரவர் செல்வநிலைக்கு ஏற்றவகையில் அமைந்த இல்லங்களும், மக்கள் தலைவர்கள், அரசர்கள் வாழ்வதற்கேற்ற மாடமாளிகைகளும் அரண்மனை, மாடங்கள், மன்றங்கள் போன்ற பொது இடங்களும், மக்கள் வழிபாடு செய்ய கோயில்களும் தோன்றின. Mr. J. D. Gondhalekar says, 'Architecture demands the working in collaboration of many creative minds and the ego is thus soft pedalled. So it is a community art'.[1]

சங்க இலக்கியப் பாடல்களினின்றும் பழந்தமிழர் பல்வேறு விதமான கட்டடங்களை அமைத்து வாழ்ந்தனர் என்பதையும், அவை சிறந்த கலைத்திறனோடு தேவைக்கு ஏற்றவகையில் வசதிகள் நிரம்பப்பெற்றவையாய் அமைந்திருந்தன என்பதையும் அறியலாம். வைக்கோல் முதலிய சிறுபுல்லால் வேயப்பட்ட சிறுகுடில் முதலாக, அண்ணாந்து நோக்க இயலாதபடி உயர்ந்து தோன்றும் எழுநிலை மாடம் ஈறாகப் பலதிறப்பட்ட கட்டிடங்

1. An article 'Why Art' by Mr. J..D. G, in the Illustrated Weekly dated 17.2.63.

களையும் திறம்பட அமைக்கும் கட்டடத் தொழிலிற் சங்க காலத் தமிழ் மக்கள் சிறந்து விளங்கினர்.

சங்கத் தமிழரிடையே நாகரிகம் வளரவளர கட்டிடங்கள், மண், செங்கல், மரம், சுண்ணாம்பு, உலோகம் ஆகியவற்றைக் கொண்டு அழகுபெறக் கட்டியுள்ளனர். சங்ககாலத்தில் செங்கற் கட்டிடங்கள் சிறப்புற்று விளங்கின. செங்கற் கட்டிடக் கோயிலைச் சங்கநூல் ''சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டம்'' எனக் குறிக்கின்றது. சுடுமண் என்றது செங்கல்லைக் குறிப்பதாகும். சங்க காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள் செங்கற் கட்டடங் களையும், மரவிட்டங்களையும் கொண்டு சுவர்மீது சுண்ணம் பூசப்பெற்றுப் பொலிவுடன் இருந்தன. இச்செங்கற் கட்டிடக் கோயில்கள் அவ்வப்போது செப்பனிடப் படாவிடில் சிதைந்து அழிந்துவிடும் என்பதனைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்னும் சங்கப் புலவர்,

**இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென**
**மணிப்புறாத் துறந்த மரஞ்சேர் மாடத்து**
**எழுதணி கடவுள் போகலிற் புல்லென்று**
**ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்றிணை (அகம்.167)**

எனும் பாடற்பகுதியால் உணர்த்துகின்றார்.

## கட்டட வகைகள்

பத்துப்பாட்டுள் ஒன்றாகிய பெரும்பாணாற்றுப்படையில் மக்கள் அவரவர் வாழ்ந்த நிலத்திற்கு ஏற்ற வகையில் வீடுகட்டி வாழ்ந்தது குறிப்பிடப்பட்டுள்ளது. பெரும்பாணாற்றுப்படையில் எயினர் என்பார் வாழ்ந்த குரம்பை விவரிக்கப்பட்டுள்ளது அது 'நீண்ட அடியினையுடைய இலவமரத்தின் பஞ்சினையுடைய அழகிய பசியகாய், முதிர்ந்து முதுகிலே விரிந்து பஞ்சு தோன்றினாற் போன்ற வரியை முதுகிலே உடைய அணிலோடே எலியும் திரியாதபடி, ஆற்றின் அறலையொத்த முதுகினையும், கொழுவிய மடலினையும் உடையதும், வேல்போலும் நுனி பொருந்தியதுமாகிய ஈந்தின் இலையாலே வேயப்பட்ட நெடிய

முகட்டினையும், எய்ப்பன்றியின் முதுகுபோன்ற புறத்தினையும் உடைய குடிலாக'[2] அமைந்து விளங்கியது.

**கோவலர் இருக்கை**

முல்லைநில ஆயர்கள் வாழ்ந்த இருப்பிடம் கழிகளாலே கட்டப்பட்ட சிறிய குடிலாக இருந்தது. அவை ஆடுகள் தின்னும் பொருட்டுத் தம்பால் தழைகளைக் கட்டின குறிய கால்களை யுடைய குடில்கள். வரகு வைக்கோற் கற்றையால் குடிலை வேய்ந்திருப்பர். கழியாற் செறித்துக் கட்டப்பட்ட கதவினை யுடையவை.[3]

## நெய்தல்நிலக் குடியிருப்பு

வேழக் கோலை நிரல்படச் சார்த்தி வெள்ளிய மரக் கொம்பு களை இடையிடையே கலந்து தாழை நாராலே கட்டித் தருப்பைப் புல்லாலே வேயப்பட்ட குறிய இறப்பையுடைய குடில்[4]களில் நெய்தல் நிலமக்கள் வாழ்ந்தனர்.

மேற்கூறப்பட்ட சான்றுகளின் மூலம் பழங்காலத்தில் மூங்கில், வைக்கோல், மரம், கல், களிமண் போன்றவை வீடுகட்டப் பயன் பட்டன என்பதை அறியலாம்.

## கட்டடப் பணி தொடங்கும் முறை

கட்டடப் பணிகள் தொடங்கப்பட்ட முறையினைச் சங்க நூலினின்றும் அறியலாம். புலவர் நக்கீரர் தாம்பாடிய நெடுநல் வாடை எனும் நூலில் தெளிவாகக் கட்டடத் தொழில் தொடங்கப் பட்ட முறையினைக் கூறுகிறார். இப்பகுதியினின்றும் கட்டடம் தொடங்கக் குறிப்பிட்ட, நாள், நேரம், திசை ஆகியவற்றைக் குறித்து அறியமுடிகின்றது.

''திசைகளிலே விரிந்த கதிர்களைப் பரப்பின அகன்ற இடத்தையுடைய ஞாயிற்று மண்டிலம் நிலத்தே இரண்டிடத்து

---

2. பெரும். 83-88
3. ,, 147-154
4. ,, 263-265

நாட்டப் பெற்ற இருகோல்களின் நிழலும் சாயாதபடி தாரைபோக ஓடுகின்ற இயக்கம் நிகழ்வதாகிய சித்திரைத் திங்கள் பத்து நாட்களின் மேலும் இருபதாம் நாளினுள்ளும் அமைந்த யாதாமொரு நாளின் பதினைந்து நாழிகை அளவிலே சிற்பநூல் அறிந்த தச்சர் கூரிதாக நூலை நேரே பிடித்து, திசைகளைக் குறித்துக் கொண்டு அத்திசைகளில் நிற்கும் தெய்வங்களையும் குறைவரப் பார்த்து அரசர்கள் வாழ்வதற்கு ஏற்ப மனைகளையும், வாயில் களையும் மண்டபங்களையும் பிறவற்றையும் கூறுபடுத்தி அமைக் கின்றனர்.''

**நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்**
**தேஎங் கொண்டு தெய்வ நோக்கிப்**
**பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து**
**(நெடுநல். 72-79)**

ஈண்டு நூல் என்றது சிற்பநூல், வானநூலாகியவற்றைக் குறிக்கும். மனைக்கு நூலிடுவோர் கணிதத்திற்குத் தவறு வராமல் இட வேண்டுதலின் நுண்ணிதிற் கயிறிட்டு என்றார். இப் பாடலடிகளுல் வரும் பெரும்பெயர் மன்னன் என்றது தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைக் குறிக்கும். ஆதலின் சிற்பநூலில் கூறப்பட்டவாறு முடிமன்னர்க்குப் பொருந்தக்கூடிய வகையில் மனையும், மன்றமும், நாளோலக்க மண்டபமும், கருவூலமும் இன்ன பிறவும் ஆகிய பலவற்றையும் முன்னர்க் கூறுபடுத்திக் குறித்துத் திருமுளைச் சார்த்துச் செய்து கொண்டு இப்பகுதிகளைக் கட்டத் தொடங்குவர்.

## அரண்மனை முன்றில்

சிற்பநூல் வல்லாரால் சிறப்புறக் கட்டப்பட்ட அரண்மனையின் முன்றிலைக் குறித்துப் புலவர் நக்கீரர், 'வெற்றி குறித்து உயர்த்திய கொடியோடே யானைகள் சென்று புகும்படி உயர்ந் தனவும், மலையை நடுவே வெளிதாகத் திறந்தாற் போன்றனவு மாகிய கோபுர வாயில்களையும், திருமகள் நிலைபெற்ற அழகிய அரண்மனை முன்றிலையும்; அன்னங்கள் தாவித் திரியும் வாயில் முன்னிடங்களையும் உடையதாய் அமைந்தது என்றனர்.

நிலவின் பயன் துய்க்கும் நீண்ட வெண்ணிறம் பொருந்திய நிலாமுற்றத்தில், மழைநீர் கீழே இறங்கும் வகையில் பொருத்தப் பட்டிருந்த நீர்த் தூம்பு (துவாரம்) மகரமீனின் பிளந்த வாயைப் போன்று அமைந்திருந்தது.

இதனை,

**நிலவுப் பயன்கொள்ளும் நெடுவெண் முற்றத்துக்**
**கிம்புரிப் பகுவாய் அம்பணம் நிறையக்**
**கலந்துவீழ் அருவி (நெடுநல். 95-97)**

என்றனர்.

## கருப்பக் கிருகம்

அரண்மனையில் அமைந்த கருப்பக்கிருகம், மலைகளைக் கண்டாற் போன்ற உயர்ச்சியை உடையது. பலவிடங்களிலும் வெள்ளியை ஒத்த, விளங்குகின்ற சாந்து பூசப்பட்டுள்ளது. நீலமணியைக் கண்டாற் போன்ற கருமையினையும், திரட்சி யினையும் உடைய திண்ணிய தூண்கள் காணப்பட்டன. செம் பினாலே பண்ணினாலொத்த நெடிய சுவரிலே வடிவழகினை யுடையவாகிய பலபூக்களையுடைய ஒப்பில்லாத பூங்கொடியை ஓவியமாக எழுதி இருந்தனர். இத்தகு காட்சிக்கு இனிய நன்றாகிய இல்லம் என நக்கீரர் வருணித்துள்ளார். (நெடுநல் 108-114)

மேலும் மலையை ஒத்த பெரிய இல்லங்கள் கட்டித் தமிழ் மக்கள் வாழ்ந்தனர் என்பதனை,

**குறும்பல் குழுவிற் குன்றுகண் டன்ன**
**பருந்திருந்து உகக்கும் பன்மாண் நல்லில் (501-502)**

என்ற மதுரைக் காஞ்சி பாடலால் அறியலாம். இத்தகைய பெரிய இல்லங்களில் ஒன்றற்கொன்று அணித்தாகத் தொடுக்கப்பட்ட படிகளையுடைய நெடிய ஏணிகள் சார்த்தப்பட்ட சுற்றுத் திண்ணைகளையும், பலகட்டுக்களையும், சிறுவாயிலையும், பெரிய வாயிலையும், நீண்ட இடைகழிகளையுமுடைய மேகம் தவழும்படி உயர்ந்த மேன்மாடங்கள் அமைக்கப்பட்டன. இதனைப் பட்டினப்பாலை,

**குறுந்தொடை நெடும்படிக்கால்**
**கொடுந்திண்ணை பஃறகைப்பில்**
**புழைவாயில் போகிடைகழி**
**மழைதோயும் உயர்மாடத்து** (பட். 142-44)

எனக்குறிப்பிடுகிறது.

மழைதோயும் மேகம் உயர்மாடம் என்றது மேனிலை மாடத்தின் உயரத்தைச் சிறப்பித்துச் சொல்லியதாகும். இத்தகைய மாடத்தில் தென்றற் காற்று வரும் சாளரங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இதனை 'வளிநுழையும் வாய்' என்றனர். நெடுநல் வாடையிலும், வேனிற் பள்ளித் தெள்வளி தரும் நேர்வாய்க் கட்டளை' (நெடுநல். 11-12) என்றார். இவற்றால் பண்டை நாள் தமிழ்மக்கள் சிறந்த முறையில் இல்லங்கள் அமைத்து வாழ்ந் தமையை உணரலாம்,

## அகழி

நகரின் பாதுகாப்பிற்காக நெடிதுயர்ந்த, திண்ணிய, பொறிக ளமைந்த மதிற்சுவரை அமைத்தது போலவே, ஆழ்ந்து அகன்ற அகழியையும் ஓர் அரணாக அமைத்தனர்.

**மண்ணுற ஆழ்ந்த மணிநீர்க் கிடங்கின்** (மது. 335)

மண்ணுள்ள அளவும் ஆழ்ந்த நீலமணி போலும் நீரையுடைய அகழியது. ஆழ்ந்த நீர்நிலை தெளிந்து நீலநிறமாகத் தோன்றுதல் இயல்பு. இதனைப் பதிற்றுப் பத்து, 'கோள்வல் முதலைய குண்டுகண் அகழி' என்றது. அகழியில் வீழ்ந்தார் நீந்திக் கரை யேற முடியாதபடி பற்றிக் கொல்ல வல்ல முதலைகள் வாழ்தற் கேற்ற மிகுந்த ஆழமும் அகலமும் உடைமை பற்றிக் 'குண்டுகண் அகழி' எனப்பட்டது. இதனையே புறநானூறு,

**கராஅங் கலித்த குண்டுகண் அகழி**

என்றது.

## கற்சிறை

வேகமாக வருகின்ற ஆற்று வெள்ளத்தைத் தடுத்துத் தாங்கு மாறு கல்லணை அமைக்கப்பட்டதற்கான சான்று மதுரைக்காஞ்சி

யில் 'வருபுனல் கற்சிறை' (725) என வருகிறது. இதே தொடர் தொல்காப்பிய புறத்திணை இயல் நூற்பாவொன்றில்,

**வருவிசைப் புனலைக் கற்சிறை போல (தொல்-புறம் சூ.8)**

எனவருதல் காணலாம்.

### சுருங்கை

**நெடுமால் சுருங்கை நடுவழிப் போந்து**
**கடுமாக் களிறணத்துக் கைவிடுநீர் போலும்**
**நெடுநீர் மலிபுனல் நீள்மாடக் கூடல்**
**கடிமதில் பெய்யும் பொழுது (பரி. 20:104-107)**

பண்டைத் தமிழர் அழகான வீடுகளிலும், மாடமாளிகை களிலும் வாழ்ந்ததற்கான குறிப்புகள் பல சங்கப் பாடல்களில் காணப்படுவதைப் போலவே அவை எந்த அளவு கலைத்திறனோடு அமைக்கப்பட்டிருந்தன என்பதற்கான சான்றுகளும் உள்ளன. இத்தகைய இல்லங்களும், மாடங்களும், அரண்மனைகளும் சிறப்புற சுகாதார வசதி கொண்டவை என்பதற்கான சான்றுகளும் சில காணப்படுகின்றன.

மக்கள் அக்காலத்தில் கழிவுநீரை அப்புறப்படுத்த அறிந் திருந்த நிலை அவர்களது நாகரிகத்தைப் புலப்படுத்தும் வாயில் களுள் சிறந்த ஒன்றாய் அமைவது. பண்டைத் திராவிட நாகரிக மான சிந்துவெளி, ஹரப்பா, மொகஞ்சதாரோ நகரங்களிடையே **கரந்துபடை** எனப்படும் புதைசாக்கடைகள் இருந்தன. இல்லங் களிலிருந்து கழிவுநீரைப் புதைசாக்கடை வழியாக வீட்டிற்கு வெளியே கொணர்ந்து, அவ்வாறு அங்குள்ள பல இல்லங்களின் கழிவுநீரை ஒன்றாகத் திரட்டி ஊருக்கு வெளியே கொண்டு செல்லும் அமைப்பு அக்காலத்தில் இருந்தது.

செங்கல்லால் கட்டப்பட்ட சுருங்கைகள் அன்றி, கருங்கல்லைத் தோண்டியும் இத்தகைய கால்வாய்கள் அமைத்திருந்தனர். இதனை மதுரைக் காஞ்சியில்,

**கல்லிடித் தியற்றிய இட்டுவாய்க் கிடங்கின்**
**நல்லெயில் (730-31)**

எனக் கூறப்பட்டுள்ளதால் அறியலாம்.

இவ்வாறு வெளியேறும் நீர் அகழியில் விழும் காட்சிக்கு எடுத்த யானைத் துதிக்கை உவமையாகக் கூறப்பட்டுள்ளதை பரிபாடலில் காணலாம். மேலும் தெருவில் சென்ற கரந்துபடைகள் அல்லது புதைசாக்கடை வீதியின் நடுவில அமைந்திருந்ததாகவும் தெரிகிறது. பொதுவாகச் சுருங்கை என்னுஞ் சொல் நீர் அடியில் செல்லும் அமைப்பிற்குக் கூறப்பட்டது. சுருங்கை = கரந்துறை; 'ஒழுகுநீர் புகுகை ஒருத்தரும் அறியாதபடி மறைத்துப்படுத்த வீதி வாய்த்தலை' என்பர் அரும்பத உரையாசிரியர்.[5]

## புரம்

''மன்னன் தன் தலைநகரை நாற்புறம் நோக்கவும், தொலைவில் பகைவர் வரவைக் காணவும், பகைவர் முற்றுகை யிட்டு உழிஞைப் போரை நடத்துங்கால் நொச்சிப் போரைக் கண்காணிக்கவும் தக்க வகையில், அவன் அரண்மனைமேல் எழுநிலை கொண்ட ஓர் உயர்ந்த தேர் போன்ற கட்டிடம் கட்டப் படுவதுண்டு. அதற்குப் **புரம்** என்பது பெயர். புரம் என்பது உயர்ந்த கட்டடமான மேல் மாடம் என்று பொருள் குறிக்கும். அந்தப்புரம் என்னும் பெயரே பின்னர் அரண்மனையையும் அதன் சூழலையும் குறித்து, அதன் பின்னே மன்னனையும் குறித்து கோபுரம் என வழங்கப்பட்டது. 'கோ; என்பது மன்னனையும் புரம் என்பது அரண்மனையையும் குறித்தன''[6]

இவற்றினின்றும் பண்டைத் தமிழர் எளிய அமைப்பினை உடைய குடில்கள் முதலாகக் கலைத்திறனோடு விளங்கும் வான ளாவிய எழுநிலை மாடம் ஈறாகப் பல்வேறு அமைப்புகளைக் கொண்ட கட்டடங்கள் கட்டுவதில் கைதேர்ந்திருந்தனர் என்பது வெள்ளிடைமலை. இதைத் தொடர்ந்து ஊர்களிலும் நகரங் களிலும் சென்று தம்மிடத்திலுள்ள அருங்கலைகளாகிய ஆடலை யும், பாடலையும் தம் வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்த பாணர், கூத்தார் போன்றாரது வாழ்வியல் நிலையைக் காண்போம்.

---

5. சிலப். 14:65
6. ஆயகலைகள் அறுபத்து நான்கு. ப. 36.

## பாணர்

பாணர்களைப் பற்றிச் சங்க இலக்கிய நூல்களில் நிறைய செய்திகள் கிடைக்கின்றன. பாணர்கள் இசைவளம் பெற்றிருந்த தோடன்றி இயல்வளமும் பெற்றுத் திகழ்ந்தனர். பாணர்கள் பாடுவதிலும், இசைகருவிகள் இசைப்பதிலும் கூத்துக் கலையிலும் ஈடுபாடுகொண்டு அவற்றின் வளர்ச்சியிலும் தம்பெரும் பொழுதைக் கழித்தனர். சிறுபான்மையினர் வேறுபல தொழில்களைச் செய் தனர். கலைத்துறையில் ஈடுபட்டவர்களைக் குறிப்பாக வேந்தர் களும், குறுநில மன்னர்களும், வள்ளல்களும் ஆதரித்தனர். இவர்கள் தம் கலைத் திறனால் பொன்னும் பொருளும் பெற்றாலும் அவற்றைத் தமக்கெனப் பாதுகாவாது அவ்வப்பொழுதே எல்லோர்க்கும் வழங்கி வாழ்வித்தனர். பாண்குடி, பாண்சேரி, பாண்கடன் என்ற சொற்களுக்குப் பாண் வேர்ச்சொல்லாகும்.

பாணர் இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் என மூவகையோர் எனத் தொல்காப்பியப் பொருளதிகார உரையில் நச்சினார்க்கினியர் கூறியுள்ளார்.[1]

பண் இசைப்போர் **பாணர்** எனத் தொழிலாகு பெயராய் அமைந்தது எனலாம். இவர்களுள்' மண்டை என்னும் பாத்திரத்தை வைத்திருப்பவர் மண்டைப்பாணர் ஆவர்' என்பர் டாக்டர். இராச மாணிக்கனார்[2]

பாணர்களில் சிலர் பொன்னணி பூண்டு செல்வச் செழிப்புடன் வாழ்ந்தனர். எனினும் வறுமையில் உழல்பவர்களாகவே பாணர் வாழ்ந்தனர் என்பதற்கான சான்றுகள் பல உள்ளன. சான்றாக,

**கையது கடன்நிறை யாழே; மெய்யது**
**புரவலர் இன்மையின் பசியே; அரையது**
**வேற்று இழை நுழைந்த வேர்நனை சிதாஅர்**
**ஓம்பி உடுத்த உயவல் பாண! (புறம்.69)**

---

1. தொல். பொருல். 91. நச்சினார்க்கினியர் உரை.
2. பத்துப்பாட்டு ஆராய்ச்சி. ப. 42.

என்ற பாடலைக் காணலாம். இப்பாணர்கள் வறுமையில் வருந்துபவர்களாக இருந்தபோதிலும் சமுதாய மக்களால், மன்னர்களால் போற்றப்பட்டனர். நிரம்ப ஓதிய புலமையும், வாய்மையும், துறைபல முற்றிய அறிவும் இசை அறிவும், வரும்பொருள் உரைக்கும் உணர்வும் சொல்வன்மையும் உடையவர் பாணர்கள் என்பதைத் 'துறைபல முற்றிய பைதீர் பாணர்' (மலைபடு. 40) என்பன போன்று வருஞ்சான்றுகளால் அறியலாம். கலைவல்ல பாணர்கள் தம் திறமையை மதியாதவரைக் கண்ணெடுத்தும் பாரார்; மண்ணளவும் மதியார். இவர்தம் வாழ்க்கைச் சிறப்பினை,

**வள்ளியோர்ப் படர்ந்து புள்ளின் போகி**
**நெடிய என்னாது சுரம்பல கடந்து**
**வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்**
**பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி**
**ஓம்பாது உண்டு கூம்பாது வீசி**
**வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை**
**பிறர்க்குத் தீதறிந்தன்றோ இன்றே திறப்பட**
**நண்ணார் நாண அண்ணாந் தேகி**
**ஆங்கினி தொழுகின் அல்லது ஓங்குபுகழ்**
**மண்ணாள் செல்வம் எய்திய**
**நும்மோ ரன்ன செம்மலும் உடைத்தே** **(புறம்.47)**

எனவரும் பாடலால் அறியலாம்.

## அரசியல் பணி

பாண்குடியைச் சார்ந்தவர் சிலர் அரசுத்துறையிலும் பணியாற்றினர் என்பதைப் பதிற்றுப்பத்தும், புறநானூறும் கூறுகின்றன. காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் என்பார் பதிற்றுப்பத்து எனும் நூலில் ஆறாம்பத்தைப் பாடியவர். அவர் பாட்டை ஏற்று மகிழ்ந்த ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் அவருக்குப் பெரும்பரிசில்கள் வழங்கியதோடு அவரைத் தமது அரசவைப் புலவராகவும், அமைச்சராகவும் ஏற்றுக் கொண்டான். ஒருசமயம் சேரலாதன் ஆடுகளமகளிர் ஆடல்பாடல்களில் பெரிதும் ஈடுபட்டு இருப்பதைக் கண்ட நச்செள்ளையார், சேரலாதனிடம் எத்தகு தீமை உண்டாகும் என்பதை நயமாக எடுத்துரைக்கின்றார்.

அறிவிற் சிறந்த ஔவையாரும் அதியமான் பொருட்டுத் தொண்டைமானிடம் தூது சென்றார். இருவருக்கும் நேரவிருந்த போரினைத்தம் நாவன்மையால் த த்து நிறுத்தினார். அதியமானும் ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்து பல்லாண்டு வாழச் செய்தான். அக்காலத்தில் அரசர்கள் பாணர்களை எத்துணை மேம்பாட்டுடன் மதித்தனர் என்பதற்கு இவை சான்றாய் அமைவன.

தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்துள்ளும் பாணர்கள் வேந்தர்களிடம் பணிசெய்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்காலையே மன்னனைத் துயிலெழுப்புவோர் பாணர்களில் ஒரு சாரார் ஆகிய **சூதர்** என்பதைத்

**தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்**
**சூதர் ஏத்திய துயிலெடை நிலையும் (தொல். புறத்.36)**

என்னும் நூற்பா உணர்த்தும்

பாணர்கள் போர்த்தொழிலிலும் ஆர்வமுடையவராய்ப் போர் மறவர்களோடு பாசறையிலும் பிறவிடங்களிலும் இருந்து ஊக்கம் ஊட்டியும், வீரம் விளைவித்தும் உள்ளனர்.

## பாணரும் மீன்பிடித்தலும்

பாணர்களில் ஒருசாரார் மீன்பிடிக்கும் தொழிலையும் செய்தனர். இதனைப் புறநானூறு,

**..................சிறுசின்**
**மீன் சீவும் பாண்சேரி (புறம் 348)**

அதாவது சிலவாகிய சிறுமீன்களைப் பிடித்துண்ணும் பாண்சேரியை உடைய தழும்பன் என்பானின் ஊர் என்பது பொருள். சிறுவலை கொண்டு மீன்பிடிக்கும் செயலை '**மீன்சீவுதல்**' என்றனர். இதே தொடர் மதுரைக்காஞ்சியிலும் 'மீன சீவும பாண்சேரியொடு' (269) எனவருகிறது.

பெரும்பாணாற்றுப்படையில் நெய்தல் நிலமக்களின் விருந்தோம்பும் சிறப்பைக் கூறுமிடத்து ஆசிரியர் கடியலூர் உருத்திரங்

கண்ணனார் பாண்மகன் ஒருவன் தூண்டில் கொண்டு மீன்பிடிக்கும் செயலை விளக்கமாகக் கூறுகிறார்.

**பச்சூன் பெய்த சுவல்பிணி பைந்தோல்**
**கோள்வல் பாண்மகன் தலைவலித் தியாத்த**
**நெடுங்கழைத் தூண்டில் நடுங்க நாண் கொளீஇக்**
**கொடுவாய் இரும்பின் மடிதலை புலம்பப்**
**பொதியிரை கதுவிய போழ்வாய் வாளை (283-87)**

பச்சிறைச்சியிட்டு வைத்த தோற்பை தொங்கவிடப்பட்ட தோளினை யுடைய, மீனைத் தப்பாமல் பிடிக்கவல்ல பாண்மகன் தலையில் வலிமையாகக் கட்டிய நீண்ட மூங்கில் கோலாகிய தூண்டில் நடுங்கும்படிக் கயிற்றில் கோக்கப்பட்ட வளைந்த வாயினையுடைய தூண்டிலினது வளைந்தமுள் இரையின்றித் தனிக்கும்படி, அத் தூண்டில் இரும்பு மறையப் பொதிந்த இரையைக் கௌவி அகப் படாதுபோன அங்காந்த வாயையுடைய வாளைமீன் என்பது இப் பகுதியின் பொருள்.

'மீன்பிடிக்கும் தொழிலில் பாண்மகன் மட்டுமல்லாது பாண் மகளும் ஈடுபடுவாள் என்பதை அகநானூற்றுப் பாடலொன்று கூறுகிறது. கயிறு கட்டப்பட்ட நுண்ணிய தூண்டிற் கோலினால் மீன்பிடிக்கின்ற பாணரது மகள் தானே நீரடைகரையின்கண் அகப் படுத்திய வராஅல் மீனைத் தன்தந்தைக்கு வஞ்சிமரத்தின் விறகினால் சுட்டு உண்பித்தாள்' எனும் பொருள்பட,

**நாண்கொள்நுண் கோலின் மீன்கொள் பாண்மகள்**
**தான்புனல் அடைகரைப் படுத்த வராஅல்**
**நாரரி நறவுண் டிருந்த தந்தைக்கு**
**வஞ்சி விறகிற் சுட்டுவா யறுக்கும் (அகம்.216:1-4)**

பாணர்கள் மீன்பிடிக்கும் தொழிலை உடையராதலையும், அவர் மருதநிலத்து வாழ்வோராதலையும் அகநானூறு,

**தலைநாள் மாமலர் தண்டுறைத் தயங்கக்**
**கடற்கரை மெலிக்குங் காவிரிப் பேரியாற்று**
**அறல்வார் நெடுங்கயத் தருநிலை கலங்க**

**மாலிரு ணடுநாட் போகித் தன்னையர்**
**காலைத் தந்த கணைக்கோட்டு வாளை** (216.4:8)

என்றும், மதுரைக்காஞ்சி,

**குருகு நரல மனைமரத்தான்**
**மீன்சீவும் பாண்சேரியொடு**
**மருதஞ் சான்ற தண்பனை** (மது 268:70)

என்றுங் குறிப்பிட்டுள்ளன.

'அக்காலத்தில் பாணரும் பாடினியரும் நாளும் இன்னிசை யால் நற்றமிழ் இலக்கியத்தைப் போற்றி வளர்த்தனர்', என்பர் பேராசிரியர் க. த. திருநாவுக்கரசு அவர்கள்.[3] பாணர் போர்க் களத்தில் களவழிப்பா, பரணி முதலியன பாடுதல் மரபு. போர்க் களம் சென்று போர் நிகழும்போது அதைப் பார்த்த வண்ணம் அந்நிகழ்ச்சிகளைப் பாணர் பாடுதல் வழக்கம். குறுந்தொகைப் பாடலொன்று இதற்குச் சான்றாகிறது. 'விற்படையைக் கொண்ட படைகளையுடைய விச்சியர்களுக்குத் தலைவன். அரசர்களோடு போர்செய்த காலத்தில் பாணர் சிங்க நோக்குப் போல் இருபடை களையும் பார்த்துப் பாடிய தன்மை ஆரவாரம் மிக்க குறும்பூரி லுள்ளார் செய்த முழக்கத்தினும் பெரிய முழக்கத்தை உடைய தாயிற்று' என்பது பரணர் கூற்று.

**வில்கெழு தானை விச்சியர் பெருமகன்**
**வேந்தரொடு பொருத ஞான்றைப் பாணர்**
**புலிநோக் குறழ்நிலை கண்ட**
**கலிகெழு குறும்பூர் ஆர்ப்பினும் பெரிதே** (குறுந் 328:5-8)

போர்க்களத்தில் வீரர்கள் விழுப்புண் பட்டு வீழ்ந்து கிடக்கும் போது அவர்களைச் சுற்றிப் பறவைகளும், நரிகளும் வட்டமிடுவது உண்டு. அந்நிலையில் வீரர்களைக் காப்பாற்றப் பாணர்கள் இன்னிசை இசைத்தல் மரபு என்பதை நெடுங்களத்துப் பரணர் என்னும் புலவர் பாடியுள்ள புறப்பாட்டால் அறியலாம்.

**சிறாஅஅர் துடியர் பாடுவல் மகாஅஅர்**
**தூவெள் ளறுவை மாயோன் குறுகி**

---

3. திருக்குறள் நீதி இலக்கியம். ப. 127.

**இரும்புட் பூசல் ஓம்புமின் யானும்**
**விளரிக் கொட்பின் வெண்ணரி கடிகுவென் (புறம்.291)**

## *யாழ்ப்பாணர்*

யாழ்ப்பாணர்களில் சிறுபாணர், பெரும்பாணர் என இருவகையினர் இருந்தனர். சங்க இலக்கிய நூலாகிய சிறுபாணாற்றுப் படை,

**பொன்வார்ந்தன்ன புரிஅடங்கு நரம்பின்,**
**இன்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ**

உள்ள சிறுபாணனை ஆற்றுப்படுத்தியதாகவும்; பெரும்பாணாற்றுப்படை 'இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி' எனப் பெரும்பாணனைக் குறித்தும் குறிப்பிட்டுள்ளன. இத்தகு யாழ்ப் பாணர்கள் யாழைத் தம் வழிபடும் தெய்வமாகவே போற்றினர். இவர்கள் எங்கு சென்றாலும் யாழைத் தம்கையிலேயே வைத்திருப்பது வழக்கம். இதனால் யாழுக்குக் **கைவழி** என்னும் பெயரே வழங்கலாயிற்று. இதனைப் புறநானூறு,

**..................காலை**
**கைவழி மருங்கின் செவ்வழி பண்ணி**
**வரவு எமர் மறந்தனர் (புறம்.149)**

## *பாணரின் மக்கள்தொண்டு*

பாணர்கள் மக்கட் சமுதாயத்தில் இல்லற வாழ்க்கை இனிதே நடைபெறவும் உதவினர். தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் குறித்த காலத்தில் திரும்ப வராதபோது அவர்களிடம் தூது சென்று தலைவியின் ஆற்றாமையைப் பாணர் எடுத்துரைப்பதும், அன்னாரை விரைந்து வினைமுடித்து வரும்படி வற்புறுத்துவதும் உண்டு. தொல்காப்பியர் கூறியுள்ள இலக்கண விதிப்படி, பாசறையில் தங்கியிருக்கும் தலைவனிடம் சென்று அவனை விரைந்து வருமாறு சொல்வதும் பாணரின் பணியாகும்.

**நிலம்பெயர்ந் துரைத்தல் வரைநிலை உரைத்தல்**
**கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை உரிய(தொல்.1115)**

சங்க இலக்கியங்களுள்ளும் இதற்கான சான்றுகளைக் காணலாம்.

நினக்கியாம் பாணரே மல்லேம் எமக்கு
நீயுங் குருசிலை யல்லை மாதோ
நின்வெங் காதலி தன்மனைப் புலம்பி
ஈரிதழ் உண்கண் உகுத்த
பூசல் கேட்டு மருளா தோயே (ஐங்.480)

தொல்காப்பியச் செய்யுளியலில் கூறியவண்ணம் கற்புவாழ்வில் கூற்றிற்குரிய பாணன் தலைவியின் ஊடல் தீர்க்கும் வாயில்களாவர் என அறிகிறோம்.

## பாணர் செய்த பிறதொழில்கள்

பாணர்களுள் ஒரு சிலர் வேட்டையாடியும், யாழுக்கு நரம்பமைத்தும், தோற்கருவிகளுக்குத் தோல் அமைத்தும் தந்தனர். மற்றும் சிலர் பனைமரத்து நாரினையும் பனங்குருத்தையுங் கொண்டு பலபொருள்களைச் செய்து அவற்றை விற்று வாழ்க்கை நடத்தினர் என்பதை அறிகிறோம்.

நாரும் போழும் செய்துண்டு ஓராங்குப்
பசிதினத் திரங்கிய இரும்பேர் ஒக்கற்கு (புறம்.370)

முழாஅரைப் போந்தை அரவாய் மாமடல்
நாரும் போழும் கிணையொடு சுருக்கி
ஏரின் வாழ்நர் குடிநிறை புகாஅ
ஊழிரந் துண்ணும் உயவல் வாழ்க்கை (புறம்.375)

''முழவு போன்ற அடியினை உடைய பனையின் அரம்போலும் கருக்குப் பொருந்திய பெரிய மடலினின்று எடுத்த நாரினையும், பனங்குருத்தையும் கிணையொடு சேர்த்துக்கட்டி, உழுதுண்டு வாழ்வோர் இல்லங்கட்குச் சென்று முறையே, அவர் நல்கிய உணவை இரந்துண்ணும் வருத்தம் பொருந்திய வாழ்வை உடைய எம்மை'' எனப் பொருள்படும் பாடற் பகுதியினின்றும் பாண்குடி மக்களின் வாழ்க்கை நிலையினை ஒருவாறு உணரமுடிகின்றது.

## பொருநர்

பண்டைத் தமிழ் இலக்கியப் பொருள் வகைகளில் ஆற்றுப் படை என்பது ஒன்றாகும். பசியால் வாடும் கலைஞனையும் அவனது சுற்றத்தையும், வரையாது வழங்கும் வள்ளலிடம் போகச் சொல்லி வழிகாட்டுவதாக அமைவன ஆற்றுப்படை நூல்கள். அவ்வாறு வழிகாட்டுவதற்கு உரியவர் கூத்தர், பாணர், பொருநர், விறலி என நால்வர் ஆவர்.

**கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**
**பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்**
**சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்**
**(தொல். பொருள். புறத், 36)**

பாணருக்குப் பாணரும், கூத்தருக்குக் கூத்தரும், பொருநருக்குப் பொருநரும் விறலிக்கு விறலியும் வழிகாட்டுவது வழக்கம். சங்க இலக்கியத்தில ஆற்றுப்படை பொருளில் அமைந்த பாடல்கள் சில புறநானூறு, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு ஆகிய நூல்களில் காணப்படுகின்றன. ஆற்றுப்படைக்குரிய கலைஞர்கள் வாழ்க்கை முறையிலும் தொழில் துறையிலும் சில வகைகளில் வேறுபட்டவர். எனினும் அவர்கள் அனைவரும் கலையையே தம் தொழிலாகக் கொண்டதில் ஒன்றுபட்டவர்கள்.

பொருநர் என்போர் திறம்படப்பாடி நடிப்பவர். இவர்கள் தடாரி, கிணை ஆகிய தோற்கருவிகளை இசைத்துப் பாடினர். பொருநருள் ஏர்க்களம் பாடுநர், போர்க்களம் பாடுநர், பரணி பாடுநர் என இவர்கள பலராம். இவர்கள் போர்க்களஞ் சென்று வீரர்க்கு உற்சாகம் ஊட்டினர். முரசுகொட்டி வஞ்சிபாடினர்.

**ஒருகண் மாக்கிணை தெளிர்ப்ப வொற்றி**
**வாடா வஞ்சி பாடினே னாக** *(புறம்.394:7-9)*

பாசறையில் காலையில் கிணைகொட்டி, மன்னரைத் துயில் எழுப்பினர். துயில் நீங்கிய வேந்தன் இவன் நம்மை மறவாது நினைந்து வந்த பரிசிலனாவான் என்று சொல்லி, நெய்மிகச்

சொரிந்த பொரித்த தாளிதத்தையுடைய நெடிய சூட்டிறைச்சியும், கள் தெளிவும், பாம்பினது தோல்போன்ற வெள்ளிய பூவேலை செய்யப்பட்ட ஆடையும், மழைபோன்ற வண்மையுடையனாதற்கு ஏற்ப வழங்கி, வறுமை நீங்கப் பெறற்கரிய கலன்கள் பலவும் கொடுத்து அருளினான்.

கிணைப்பொருநன் வேந்தன் முன்றிலில் விடியற்காலத்தே சென்று நின்று தன்னுடைய கிணைப்பறையைக் கொட்டி அவ் வேந்தர்களின் வஞ்சி முதலாகவுள்ள மறத்துறைகளைப் பாடுவது இயல்பு. அங்ஙனம் பாடுவோர் தொடக்கத்தில் வேந்தர்க்குத் துயிலெடைப் பாட்டைப்பாடி, அவர் துயிலுணருங்கால் அவர் செவிப்பட அவர்தம் மறமாண் புகழ்களை எடுத்தோதி மகிழ்ச்சி அடையச் செய்வர்.

பொருநர் முழவின் வாய்போன்ற அடியினையுடைய பனையின் அரம்போலும் கருக்குப் பொருந்திய பெரிய மடலி னின்றும் எடுத்த நாரையும் பனங்குருத்தையும் கிணையொடு சேர்த்துக் கட்டி, ஏரால் உழுதுண்டு வாழ்வோர் மனையின்கட் சென்று முறையே அவர் நல்கும் உணவை இரந்துண்ணும் வாழ்வை உடையவர்.

**முழா அரைப் போந்தை யரவாய் மாமடல்**
**நாரும் போழுங் கிணையொடு சுருக்கி**
**ஏரின் வாழ்நர் குடிநிறை புகாஅ**
**ஊழிரந் துண்ணும் உயவல் வாழ்க்கை** (புறம்.375:4-7)

பொதுவாகப் பொருநர் என்ற பெயர் போர்செய்யும் வீரர்கட்கும், போர்க்கள ஏர்க்களங்களைப் பாடும் பொருநர்க்கும் பொதுப் பெயராய் அமைவது. எனவே போர்செய்யும் பொருநரின் நீக்கு தற்கு மற்றவர் **பொராஅப் பொருநர்** எனப்பட்டனர். சான்று : 'பொராஅப் பொருநரேம்' (புறம். 386:19)

சங்க இலக்கிய நூல்களில் பொருநர் எனப்பட்டவரின் பெயரால் அவர்தம் வாழ்க்கை நிகழ்வுகளை விளக்கவல்லதாக முடத்தாமக் கண்ணியார் என்பவரால் பாடப்பட்ட பொருநராற்றுப் படை என்ற ஒரு நூலே உள்ளது. இப்பாடலின் தொடக்கமே

பொருநரின் பண்பை விளக்குவதாய் அமைந்துள்ளது. இவர்கள் பேரூர்களில விழவுக் களந்தோறும் சென்று பாடுதலும், அவ்வூர் மக்களாற் போற்றி உண்டி முதலிய வழங்கப்படுதலும் உடையார் என்பதும், விழவுக் களங்களில் விரும்புதற்குரிய சுவையையுடைய சோறு கிடைக்கப்பெறினும், அதனால் தன்பால் நிலையுற்ற வறுமை அகற்றப்படாமையின், வறுமை முற்றிலும் ஒழித்தலைக் கருதி அங்ஙனம் மிககு வழங்கும் வள்ளலை நாடி வேறு இடம் நோக்கிச் செல்வர் என்பதும்

**அறாஅ யாணர் அகன்றலைப் பேரூர்ச்**
**சாறுகழி வழிநாட் சோறுநசை யுறாது**
**வேறுபுல முன்னிய விரகறி பொருந (பொரு.1-3)**

என்ற பாடலடிகளால் அறியமுடிகின்றது. வினையை ஆராய்ந் தறிந்து அதறகுரிய நெறியை மேற்கொளவராதலின் ஆசிரியர் இவர்களை **விரகறி பொருநர்** எனறு சிறப்பித்துச் சொல்லி யுள்ளார்.

## கூத்தர்

பண்டைத் தமிழகத்தில் இசைக்கலைவல்ல பாணர்கள் இருந் தமை போனறே கூத்துக்கலை வல்ல கூத்தர் இருந்தனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நானிலங்களிலும் அவ்வந்நிலத்திற்குரிய கூத்தர் வாழ்ந்தனர். சங்க நூல்கள் கூத்தர்கள் குறித்தும் அவர்கள் நடத்திய கூத்துக்கள் குறித்தும் குறிப்பிடுகின்றன.

## கூத்தர் இயல்பு

கூத்தர் தம் கூத்துக்கலையையே தொழிலாகக் கொண்டு வாழ்பவராவர். கூத்தர்கள் தமக்கென ஓரூர் இல்லாதவர் நாள் தோறும் கூத்தாடி அதற்கு வரும கூலியாகிய எளிய உணவினை உண்பவர். நீரில் வாழுகின்ற முதலையானது கொட்டாவி விட்டாற் போன்ற அமைப்புடைய, பாயால் வேயப்பட்டு அறுத் தமைத்த வாயையுடைய வண்டியில் ஏறி ஊர் ஊராகச் செல்வர். இவர்கள் இனிய இசை பிறக்கும் தெளிந்த கிணை

என்னும் பறையை முழக்குவர். கொத்தாக உள்ள எருக்க மலர் களால் தொடுக்கப்பட்ட கண்ணிகள் கூத்தர்களது தலையை அழகு செய்தன. காட்டுத் தீயின் ஒளியில் அக்காட்டின்கண் ஆவிரைச் செடியில் விளங்குகின்ற மலராலே தொடுத்த மாலைகள் பெண் களின் மார்பிடத்து அசைந்து விளங்கும். பிடியும், களிறும் ஒரு சேரப் பிளிறினாற் போலக் குறிய தூம்பும், நெடிய தூம்பும், முழவும், ஒருங்குகூடி முழங்கவும், கார்காலத்து மேகம் முழங்கும் போது நீரினமேல் ஒலிக்கின்ற தேரைகளின் ஒலியைப் போலத் தாளம் அமைத்துக் கொண்டு, சிலவாகிய அரித்தெழுகின்ற ஓசை யையுடைய சிறிய வேறுபல இசைக் கருவிகளோடு பல ஊர் களுக்குஞ் சென்று கூத்தாடுவர். கூத்தாட்டம் முடிந்த உடனே விரைந்து தலைப்பினைச் சுருக்கிக் கட்டிய பலவாகிய நொகுதியை யுடைய இசைக்கருவிகள் இட்ட பைகளை உடையவராய் மிகப் பெரிய சுற்றத்தார் சூழ வேறொரு ஊருக்குச் செல்வர்.[1]

## கூத்தர் ஆடல்

கழைக்கூத்தர் ஆடுமிடம் ஆடுகளம் எனப்படும். அவர்கள் ஆடும்பொழுது பறை முழக்குவர். இடையிடையே தங்கள் வித்தைச் சிறப்பைக் கூறுங்கால் பறை முழக்காமல் விட்டு மீண்டும் முழக்குவர். இதனை,

**வாடல் உழுஞ்சில் விளைநெற்று அந்துணர்**
**ஆடுகளப் பறையின் அரிப்பன ஒலிப்ப (அகம்.45:1-2)**

கழைக்கூத்தர் பிள்ளைகள் மூங்கில் ஏறி ஆடுவர். இதனை,

**கடும்பறைக் கோடியர் மகாஅ ரன்ன**
**நெடுங்கழைக் கொம்பர் கடுவன் உகளினும்**
**(மலை. 236-37)**

என்ற பாடலடிகளினின்றும் உணரலாம்.

கூத்தர் திருவிழா நாளில் மன்றத்தில் நாடகமாடுவர். அந் நாடகத்தை, ஆடல், பாடல் முதலியவற்றை மன்றத்திலிருந்து

1. அகம். 301:9-14.

மக்கள காண்பர். கூத்தாடத் தொடங்குவதற்கு முன்னால் மலர் தூவிக் 'கடவுளை வாழ்த்துதல் கூத்தர் மரபு. நாடக நூலறிவு நன்கு வாய்த்த கூத்தர் **முதுவாய் கோடியர்** எனப்பட்டனர்.

**அருவிலை நறும்பூத் தூஉய்த் தெருவின்**
**முதுவாய்க் கோடியர் முழவொடு புணர்ந்த**
**திரிபுரி நரம்பின் தீந்தொடை யோர்க்கும்**
**பெருவிழா ...... ...... ......** **(பட். 252-55)**

இவர்கள் கோடியர் (சிறு. 109) பல்லியக் கோடியர் (சிறு. 125) எனப்பட்டனர்.

## *இயவர்*

தோற்கருவியாளன், வாத்தியக்காரன் இயவர் எனப் பட்டனர்.

**தட்டைத் தண்ணுமைப் பின்னர் இயவர்**
**தீங்குழல் ஆம்பலின் இனிய விமிரும்** **(ஐங். 215:3-4)**

**புன்புறப் பேடை சேவல் இன்புற**
**மன்னர் இயவரி னிரங்குங் கானம்** **(ஐங். 425:1-2)**

**கம்புள் இயவன் ஆக** **(அகம். 365:3)**

இங்கு இயவன் என்ற சொல் குழலை ஊதுகின்ற குயிலுவன் (இசைக்கருவி வாசிப்பவன்) என்ற பொருளில் வந்தது. **இயவர்** என்ற சொல் வாத்தியக்காரரைக் குறித்ததென்பது, 'இயவரும் அறியாப் பல்லியங் கறங்க' (புறம். 336:6) (வாச்சியக்காரராலும் அறியப்படாத பலபல வாச்சியங்கள் முழங்க என்பது இதன் பொரு ளாகும்) என்றதனின்றும் அறியலாம்.

## *வயிரியர்*

வயிரியர் என்ற சொல் பாணர், கூத்தர் போன்ற பாடல், ஆடல் வல்ல கலைஞர்களைக் குறிக்கும். இவர்கள் நரம்புக் கட்டுக்கள் குலையாத யாழை உடையவர். இவர்கள் முதற்கண் ஊர்மன்றத்தைச் சென்றடைந்து பாடிய பின்னர், தெருக்களின் பக்கங்களிலும் பாடிச்செல்வர். இதனைப் பதிற்றுப்பத்து

**மன்றம் போந்து மறுகுசிறை பாடும்**
**வயிரிய மாக்கள்** (பதி.23:5-6)

**அழியா விழவின் இழியாத் திவவின்**
**வயிரிய மாக்கள் பண்ணமைத் தெழீஇ**
**மன்ற நண்ணி மறுகுசிறை பாடும்** (29.7-9)

''வயிரை இசைக்கக் கூடிய கலைஞர்களே வயிரியர் என்று அழைக்கப்பெற்றிருக்க வேண்டும். போர்க்களத்தில் வயிரியர் வயிரெடுத்து இசைத்தனர்,

அகநானூற்றில் ஒரு பாடல்,

**புன்னை குறைத்த ஞான்றை வயிரியர்**
**இன்னிசை ஆர்ப்பினும் பெரிதே** (அகம்.45:11-12)

இதனின்றும் வயிரியர் போர்க்களம் பாடுவோர் என்பது அறியத் தக்க செய்தியாக உள்ளது.[1]

## அகவரும் பிறரும்

அகவர் என்னுஞ் சொல் பாடுவார், அழைத்துப் பாடுவார், சூதர், பாணர் எனப் பல பொருள்படும். வைகறையில் பாடும் பாணர் என்பாருமுளர். '**அகவுநர்**' தொல்காப்பியத்தில் குறிக்கப் பெறாதவர். அகவர் என்னுஞ்சொல்லின் அடியாகப் பிறந்தது தான் அகவுநர், அகவலன், அகவன்மகள் முதலியனவாகும்.

சூதர், மாகதர். வேதாளிகர் என்போர் பிறவகைப் புகழ் பாடிகள். சூதரும், அகவரும் ஒருவரே போலும். அவர்களுக்கு அரசன் தேரும், பரியும் பரிசில் அளித்தனன்.

''சூதர் என்போர் அரசன் கோயிலில் கட்டியங்கூறுதல், புகழ் பாடுதல் போன்ற முக்கியமான அலுவல்களையேற்ற கலப்புச் சாதியினர்'' என்றார் க. அ. நீலகண்ட சாஸ்திரி. வடமொழி யாளர் மரபின்படி, ''சூதர் க்ஷத்ரியத் தந்தைக்கும், பார்ப்பனத்

---

1. தமிழர் இசை. டாக்டர். ஏ. என். பெருமாள்.ப. 164.

தாய்க்கும் பிறந்தவர். அவர் தொழில் குதிரை ஏற்றம், தேரோட்டுதல். மாகதர் (மகதத்தோடு தொடர்புடையவர்) வைசியத் தந்தைக்கும், பார்ப்பனத் தாய்க்கும் பிறந்து வாணிபத்தை மேற்கொள்பவர். ஆதலால் அவ்விருவருமே பிரதிலோம ஜாதியினர்.[2]

முரசொலிக்கு ஏற்றவாறு ஆடியவர்கள் வேதாளிகர் எனப்பட்டார். அரசனது அவையில் கண்ணுளர் (ஆட்டக்காரர்கள்) குயிலுவர் (ஒத்து ஊதுபவர்கள்) நகைப்புலவர்கள் எப்பொழுதும் உடனிருந்தனர். நகைப்புலவர் என்னும் விதூடகர்களை மன்னன் எப்போதும் தன் பக்கலில் வைத்திருந்தார். இவ்வகைப் புகழ் பாடுவோர் மன்னர்களோடு போர்க்களத்திற்குச் சென்றனர். அங்கும் மன்னனைப் புகழ்ந்து துதிபாடினர். மன்னன் இன்பச் சுவை நல்கும் அறிவினராகிய நகைப்புலவர்களது வறுமை நீங்க பரிசில்கள் தந்து மகிழ்வான். சான்று: 'நகைப்புல வாணர் நல்குர வகற்றி' (புறம். 387).

# இசைக் கருவிகள் செய்தல்

இசையின் தோற்றுவாய் தமிழகத்தில் எத்துணையோ ஆயிரம் ஆண்டுகட்கு முந்திய காலத்தது. பண்டைய பாண்குலத்தவர் இசைத்தொழில் வல்லவர்களாய்த் திகழ்ந்தனர். இசைக்கு இன்னோசையூட்டப் பல்வேறு இசைக்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. சங்க காலத் தமிழகத்தில் இசைக்கருவிகள் பல வழக்கிலிருந்தன. அதனின்றும் பண்டைய தமிழ் மக்கள் இசைக்கருவிகள் செய்வதில் சிறந்து விளங்கினர் என்பதை அறியலாம். இசைக் கருவிகள் இயங்கள் என்ற சொல்லால் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்விசைக் கருவிகள் தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி என நால்வகைப்படும். முரசு, பறை, துடி முதலியன தோற் கருவிகள்; குழல், வங்கியம் முதலியன துளைக்கருவிகள்; யாழ்-நரம்புக்கருவி; உலோகத்தாலான தாளவகைகள் கஞ்சக்கருவி களாகும்.

2. சங்ககால வாழ்வியல், டாக்டர். ந. சுப்ரமணியன். ப. 132

சங்க இலக்கியங்களான புறநானூறு, பத்துப்பாட்டு முதலிய நூல்களிலிருந்து இசைக் கருவிகளைப் பற்றி அறியமுடிகின்றது. இசைக்கருவிகளைச் செய்தவர் யார்? அதற்கென்று தனிப்பட்டறை இருந்ததா போன்றவற்றை அறியமுடியவில்லை. எனினும் சில சான்றுகளின் மூலம் இசைக்கருவிகள் எவ்வாறு செய்யப்பட்டன என்பதைக் காணலாம்.

புறநானூற்றில் யாழ் எளிய இசைக் கருவியாகவே கூறப்பட்டுள்ளது. யாழ் என்னும் இசைக்கருவி பாணர்களால் பெரிதும் பயன்படுத்தப்பட்ட ஒன்றாகக் காணப்படுகிறது. இந்த யாழ் அன்று கொன்றை, கருங்காலி ஆகிய இரு மரங்களைக் கொண்டு செய்யப்பட்டது. புறநானூற்றில் கூறப்படும் யாழ் களாம்பழம் போன்ற கரிய காம்பில் செய்யப்பட்டது; வளைந்த கம்பில் செய்யப்பட்டது. நரம்புகளால் கட்டப்பட்டது என்னும் வருணனைகளைக் காணலாம்.

சான்று: வணர்கோட்டுச் சீறியாழ்க்
கைவார் நரம்பின் பாணர் (புறம். 302:5-6)

பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
மின்னேர் பச்சை மிஞிற்றுக்குரல் சீறியாழ்
நன்மை நிறைந்த நயவரு பாண (புறம். 308:1-3)

புறநானூற்றுப் பாடல்களில் எளிய இசைக்கருவியாகக் காணப்படும் யாழ்வருணனை பத்துப்பாட்டில் விரிவடைந்த ஒன்றாகக் காணப்படுகிறது. யாழ் பல உறுப்புக்களைக் கொண்ட சிக்கலடைந்த கருவியாக விவரிக்கப்படுகிறது. பத்துப்பாட்டு நூல்களுள் பொருநராற்றுப்படையில் யாழின் அமைப்பு மிகவிரிவாகக் கூறப்பட்டு அதனை இயக்கும் முறையும் கூறப்பட்டுள்ளது.

குளப்புவழி யன்ன கவடுபடு பத்தல்
விளக்கழல் உருவின் விசியுறு பச்சை
எய்யா விளஞ்சூற் செய்யோள் அவ்வயிற்
றைதுமயி ரொழுகிய தோற்றம் போலப்
பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை
அளைவாழ் அலவன் கண்கண் டன்ன
துளைவாய் தூர்ந்த துரப்பமை யாணி

**எண்ணாள் திங்கள் வடிவிற் றாகி**
**அண்ணா வில்லா அமைவரு வறுவாய்ப்**
**பாம்பணந் தன்ன வோங்கிரு மருப்பின்**
**மாயோள் முன்கை ஆய்தொடி கடுக்கும்**
**கண்கூ டிருக்கைத் திண்பிணித் திவவின்**
**ஆய்தினை யரிசி யவைய லன்ன**
**வேய்வை போகிய*விரலுளர் நரம்பிற்**
**கேள்வி போகிய நீள்விசித் தொடையல்**
**மணங்கமழ் மாதரை மண்ணி யன்ன**
**அணங்குமெய்ந் நின்ற அமைவரு காட்சி**
**ஆறலை கள்வர் படைவிட வருளின்**
**மாறுதலை பெயர்க்கு மருவின் பாலை**
**வாரியும் வடித்தும் உந்தியும் உறழ்ந்தும்**
**சீருடை நன்மொழி நீரொடு சிதறி (4-24)**

தமிழகத்தின் ஐவகைப்பட்ட நிலங்களுக்கும் பண்ணும், யாழும் பறையும் வகுத்திருப்பதை நோக்கும் பொழுது அக்காலத்தில் தமிழகம் முழுதும் இசைக்கலை பரவி இருந்தது என்பதும், எல்லா நிலமக்களும் இசை உணர்வு உடையவராய் இருந்தனர் என்பதும் பெறப்படும். மேற்கூறப்பட்ட பாலையாழ் பற்றிய வருணனை யைப் பொருநராற்றுப்படை தருகிறது. இவ்யாழ் மணப் பெண்ணை ஒப்பனை செய்தாற் போன்ற அழகுடையது ஆறலை கள்வரும் அதன் ஓசை கேட்பின் தம் கைப்படையை நழுவவிட்டுத் தங்கொடுஞ் செயலையும் மறக்கச் செய்யும் இன்னிசையை வெளிப் படுத்தவல்லது. யாழின் இன்னோசையையும், அமைப்பையும் நோக்கும்போது யாழ் என்ற இசைக் கருவி செய்யப்பட்டதன் தொழில் வளர்ச்சியையும், திறமையையும் புலப்படுத்துகின்றன.

## துளைக் கருவிகள்

தானாகவே காடுகளில் விளைந்து முற்றியுள்ள மூங்கில்களில் தும்பிகள் துளையிட்டு அதனூடே காற்று செல்கின்ற பொழுது ஏற்படும் ஒலியை மக்களறிவினால் கண்டுணர்ந்த இயற்கை முறை மையை நன்குணர்ந்த கபிலர் குறிஞ்சிமுறை பாடுங்கால்,

**ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கில்**
**கோடை யவ்வளி குழலிசை யாக (அகம்.82)**

என்று குறித்துப் பாடினார். குறிஞ்சி நில மூங்கில்களில் இயல்பாகவே துளைகளை இட்டவை வண்டினங்களில் ஒரு வகையான தும்பிகளே என்பதை முல்லையுங் குறிஞ்சியும் முறைமை திரிந் தாங்கு பாலையென்பதோர் படிவங் கொண்டறிந்து பாலை பாடிய எயினந்தை மகனார் இளங்கீரனார்,

**ஆடமைத் தும்பி குயின்ற அகலா அந்துளை**
**கோடை முகத்தலின்** (அகம்:225)

எனத் தெளிவுறப் பாடியுள்ளார்.

அவ்வாறே தும்பிகளால் இயல்பாகத் துளைக்கப்பட்ட மூங்கில் களின் வழிஎழும் ஓரோவழி ஒலி வகைகளை, அன்றாடம் கானில் ஆநிரைகளை மேய்க்கச் சென்று திரும்பும் முல்லை நிலத்து ஆயர் பெருமக்கள், நன்கு செவிப்புலனால் கேட்டு கேட்டு ஓர்ந்தோர்ந்து, உணர்ந்து அதன் நினைவின் விளைவாக, தாங்களும் சின்னஞ்சிறு மூங்கில் துண்டுகளை நறுக்கி எடுத்து. முதலில் வாய் வைத்து ஊதும் ஊது துளை மட்டுமுள்ள சிறிய பெரிய கருவிகளாக்கினர். அவையே பின்னர் தூம்பு வகைகள் எனக் கூறப்பெற்றன. அவை கழைவளர் தூம்பு எனச் சிறப்பிக்கப் பெற்றன. தூம்பு என்ற கருவியின் அல்லது அச்சொல்லின் பொருளை உள்ளுப் பொய் யானது துளை, குறுவங்கியம், நெடுவங்கியம், பெருவங்கியம் எனவும் தூம்பு என்ற கருவி ஒன்று இளி என்ற பண்ணோசையை உடையது என்றும், இன்னும் பலவிடத்தும் ஒல்லும் வகையில் சங்ககாலப் புலவர்களால் நன்கு தெளிவுறுத்தப் பெற்றன.

பின்னர் அவ்வாய மாக்கள் தூம்பினை ஊதி ஊதிப் பழகிய காலத்து, கருவியைப் பிடித்துள்ள கைவிரல்களை வைத்து அடைத்துவிடத் தக்கவாறு விரலுளர் துளையுள்ள கருவிகள் பலவற்றையும் ஆக்கி ஊதி மகிழ்ந்தனர். தமிழகத்தில் முல்லை நிலத்து ஆயர்களே முதன்முதல் குழற் கருவியைக் கண்டனர் என்னும் வரலாற்றினை, பெரும்பாணாற்றுப்படையில் 'செந்தீத் தொட்ட கருந்துளைக் குழல்' என எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

இயல் நான்கு

# மகளிர் தொழில்கள்

அன்பு, அமைதி, ஆற்றல் முதலிய பண்புகளும், இயற்கை அழகும் உடையவர் மகளிர். மனை வாழ்க்கையினை நடத்தும் பணியினை நிகழ்த்தற்கு ஏற்ற வகையில் மகளிர் தம் இல்லிலிருந்தே கல்வி பயின்றனர். அவர்கள் கற்ற கல்வி வாழ்வாங்கு வாழும் பயனுள்ள கல்வியாய் அமைந்திருந்தது. ஆடலும், பாடலும் அழகும் அமைந்து தாம் கற்று வல்ல கலைத்திறத்தால் மனை வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி மகிழ்வளிக்கும் திறன்பெற்றிருந் தனர். அமுதனைய உணவமைக்கும் அட்டிற்றொழில் பழகுதல், நறுமணப் பொருள்கள் தயாரித்தல், மாலை தொடுத்தல், ஓவியம் வரைதல் போன்றவை மகளிர் சிறப்பாகப் பயிலுதற்குரிய கலை களாக இருந்தன. கணவனது வாழ்க்கைக்குத் துணையாய் நின்று அன்பினால் ஒன்றி வாழும் மகளிர் வாழ்க்கைத் துணை எனப் பாராட்டப் பெற்றனர். இல்லத்தில் கணவனையும், குழந்தை களையும் பேணிக்காத்தலும், வரவுக்குத் தக்கபடி குடும்பச் செல வினை அமைத்துக் கொள்ளுதலும், விருந்தினரைப் போற்றலும் மனைவியின் நற்குண நற்செய்கைகளாவன. 'மனைக்கு விளக்கம் மடவார்' என மகளிர் சிறப்பிக்கப் பெற்றனர். 'வினையே ஆட வர்க்கு உயிரென' வினைமேற்கொள்ளல் ஆடவர் கடமையாகக் கூறப்பெற்றாலும் மகளிரும் தாம் வாழ்ந்த நில இயல்பிற்கு ஏற்ற வகையில் தொழில் செய்வதில் ஈடுபட்டிருந்தனர். தம் வாழ்க் கைக்கு, தங்குடும்பத்திற்கு வேண்டிய பொருளீட்டுவதில் ஆர்வமும், முயற்சியும், உழைப்பும் உடையவராய்ப் பொறுப்புணர்ச் சியுடன் வாழ்ந்துள்ளனர். பழந்தமிழ்ச் சமுதாயத்தில் மகளிர் தம் முயற்சியால் மேற்கொண்ட வினைகளையும் அவற்றின் திறன் களையும், பயனையும் பின்வருமாறு காண்போம்.

## ஆய்மகள்

முல்லைநில மக்களின் வாழ்க்கையையும், அதில் பெண்கள் ஆநிரைகளைக் காக்கும் திறன் பற்றியும் கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்னும் புலவர் அழகிய ஓவியம் தீட்டிக் காட்டி யுள்ளார்.

விடியற்காலத்தில் நன்றாக உறைந்திருந்த தயிரைக் காந்தள் மென்விரலால் கரைத்துக் கடைகின்றாள் ஓர் ஆய்மகள். வெண் ணெய்யைத் திரட்டி எடுத்து வேறு ஒரு பாத்திரத்தில் வைத்துக் கொண்டாள். மோர்ப் பானையை மென்மையாகச் சும்மாட்டின் மீது வைத்துத் தலையில் சுமந்து சென்று அருகிலுள்ள ஊர்களில் அன்றாடம் விற்று வருகிறாள். இது அவளது தொழில்.

**நள்ளிருல் விடியல் புள்ளெழப் போகிப்**
**புலிக்குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி**
**... ... ... ...**
**உறையமை தீந்தயிர் கலக்கி நுரைதெரிந்து**
**புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட் டிரீஇ**
**நாள்மோர் மாறும்** (பெரும். 155:60)

ஆய்மகள் மோர்விற்று அதற்கு ஈடாகப் பிறபொருள்களைப் பெற்றுத் தன் சுற்றத்தாரை உண்பித்தாள் என்பது,

**...... . ......ஆய்மகள்**
**அளைவிலை உணவின் கிளையுடன் அருத்தி**
(பெரும்.165-66)

எனவருமடியால் அறியலாம். அவள் தான் விற்கும் நெய்க்கு ஈடாகப் பொன் பெறாமல், நன்கு பால் கொடுக்கும் பசுக்களையும், எருமைகளையும் வாங்கித் தனது பால்பண்ணையைப் பெருக்கிக் கொண்டாள். இதனை,

**நெல்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்**
**எருமை நல்லான் கருநாகு பெறூஉம்** (பெரும்.169:70)

என்ற அடிகளால் உணரலாம்.

இக்கருத்துக்களினின்றும் முல்லைநில மக்களிடையே மகளிர் தம் சுற்றத்தினரைக் காக்கும் கடமையிலும் அதற்குப் பொருள் வரும் வாயில்களைப் பெருக்குவதிலும் திறமையுடன் பாடுபட்டனர் என்பது பெறப்படும்.

## தினைப்புனங்காத்தல்

மலையும் மலைசார்ந்த இடமுமாகிய குறிஞ்சி நிலத்தின் முக்கிய விளைபொருள் தினையாகும். தினைக்கதிர்கள் முற்றி அறுவடைக்குரிய பருவத்தில் கதிர்களைப் பறவைகள் உண்ண வரும். அங்ஙனம் பறவைகளால் தீங்கு ஏற்படாதவாறு குறிஞ்சி நிலத்து இளமகளிர் தினைப்புனத்தைக் காவல் காப்பர். இச் செய்தியைக் குறிப்பிடும் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்கள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

புனங்களில் கதிர்களைப் பறவைகள் கவர்ந்துண்ணாவண்ணம் காவல்காக்கக் குறிஞ்சி நிலத்து இளமகளிரை அவர்தம் பெற்றோரே அனுப்பி வைப்பர். நற்றிணையில், ‘மலையிடத்திலுள்ள சிறிய தினைப்புனத்தை நாடிவரும் சிவந்த வாயையுடைய பசுங்கிளி களின் கூட்டத்தை ஓட்டும் பொருட்டு, தலைவியைக் கிளிகடி கருவி யாகிய தட்டையை எடுத்துக் கொண்டு அத்தினைப் புனத்திற்குச் செல்க’ என்று தலைவியின் அன்னையே அனுப்பி வைப்பாள் என்று ஒரு பாடல் பகர்கின்றது.

...................... வரையகச் சிறுதினைச்
செவ்வாய்ப் பாசினங் கடீஇயர் கொடிச்சி
அவ்வாய்த் தட்டையொ டவணை யாகென
ஏயள்மன் யாயும் நுந்தை வாழியர்
அம்மா மேனி நிரைதொடிக் குறுமகள்
செல்லாயோ................................ (நற். 134:3-8)

தந்தை வித்திய மென்றினை பைபயச்
சிறுகிளி கடிதல் பிறக்கியா வணதோ
குளிர்படு கையள் கொடிச்சி செல்கென (நற்.306:1-3)

நற்றிணையின் மற்றொரு பாடலில், பஞ்சுநுனிபோன்ற தலையை யுடைய அப்பொழுதீன்ற தினைக்கதிர்களெல்லாம் பால்நிறைந்து

முற்றித் தலைசாய்ந்து மேலேயுள்ள தோடுகள் அலைதல் கொண்டன. அவற்றை நோக்கி இனி உண்ணத்தகுமென்று கருதி அக்கதிர்களைக் காய்து கொண்டு போக வேண்டி துறுகல் மீது சிவந்த வாயையுடைய பசிய கிளியின் கூட்டங் கூடி கவர்ந்து கொண்டு போய்விடுமாதலின் நீ அங்கே சென்று கிளி ஓட்டுந் தட்டையைப் புடையிலுள்ள குற்றியிலே புடைத்து ஒலி எழுப்பிக் கவண்கல்லும் வீசுக எனத் தலைவிக்கு அவள் தந்தை கூறுகின்றான்.

**துய்த்தலைப் புனிற்றுக்குரல் பால்வார் பிறைஞ்சித்**
**தோடலைக் கொண்டன ஏனல் என்று**
**துறுகல் மீமிசைக் குறுவன குழீஇச்**
**செவ்வாய்ப் பாசினங் கவருமின்று அவ்வாய்த்**
**தட்டையும் புடைத்தனை கவணையும் தொடுக்கென**
**எந்தைவந் துரைத்தனன் (நற். 206:1-6)**

இங்ஙனம் தினைப்புனங்களில் கதிர்களை உண்ணவரும் கிளிகளை மட்டுமன்றி பிற பறவைகளையும் விரட்டியதற் ரன குறிப்புகளும் காணப்படுகின்றன.

## எயிற்றியர்

பாலைநிலத்து வாழ்ந்த மகளிர் எயிற்றியர் எனப்பட்டனர். இப்பெண்டிருள் மான்தோலாகிய படுக்கையிலே பிள்ளையொடு முடங்கிக்கிடக்கும் பிள்ளையை ஈன்ற எயிற்றி ஒழிய ஏனைய பெண்டிர் போய், திரட்சியினையுடைய சீரிய கோலினையுடைய உளிபோலும் வாயையுடைய பாரைகளாலே கரிய கரம்பு நிலத்தைக் குத்திக் கிளறிப் புழுதியை அளைந்து நுண்ணிய புல்லரிசியினை வாரிக் கொண்ட வெள்ளிய பல்லையுடைய எயினமகளிர் விளா மரங்களின் நிழலையுடைய தம்வீட்டு முற்றத்தே தோண்டப்பட்ட நிலவுரலிலே அப்புல்லரிசியை இட்டு சிறிய வலிய உலக்கையால் குற்றி எடுப்பர்.

**'ஈத்திலை வேய்ந்த......**

**... ... ... ...**

இரும்புதலை யாத்த திருந்துகணை விழுக்கோல்
உளிவாய்ச் சுரையின் மிளிர மிண்டி
இருநிலக் கரம்பைப் படுநீறாடி
நுண்புல் அடக்கிய வெண்பல் எயிற்றியர்
பார்வை யாத்த பறைதாள் விளவின்
நீழல் முன்றில் நிலவுரற் பெய்து
குறுங்காழ் உலக்கை ஓச்சி (பெரும். 88-97)

மகளிர் உரலில் நெல் முதலியவற்றை இடிக்கும் போது அதனால் உண்டாகும் அயர்வு தோன்றாதிருக்கும் பொருட்டுப் பாடுதல் இயல்பு. இங்ஙனம் பாடும் பாட்டு வள்ளைப்பாட்டு எனப்படும்.

## மீன் விற்றல்

கடலும் கடல்சார்ந்த நிலப்பகுதி நெய்தல் நிலம் எனப்பட்டது. இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் கடலில் கலம் செலுத்தி மீன் பிடித்தலைத் தம் தொழிலாகக் கொண்டவர். கடலிலுள்ள மீன்களை எல்லாம் பிடித்துவிட்டனரோ என்று எண்ணக்கூடிய அளவிற்கு ஏராளமான மீன்களைப் பிடித்துத் தங்கள் பாக்கத்தே குவித்துவிடுவர். இவ்வாறு பரதவர் பிடித்து வரும் மீன்களைப் பரதவகுலப் பெண்டிர் ஊருக்குள் எடுத்துச் சென்று விற்றுவிட்டு அதற்கு ஈடாகத் தமக்குத் தேவையான பிறபொருளைப் பெற்று வருவர். இக்கருத்தினை அகநானூற்றுப் பாடலொன்று,

ஓங்குதிரைப் பரப்பின் வாங்குவிசைக் கொளீஇ
திமிலோன் தந்த கடுங்கண் வயமீன்
தழையணி அல்குல் செல்வத் தங்கையர்
விழவு அயர் மறுகின் விலையெனப் பகரும். (320:1-4)

எனக் கூறுகிறது. ஓங்கி உயர்ந்தெழும் அலைகடலில் தம்படகிற் சென்று தம்தமையன்மார் வேட்டையாடிப் பிடித்துவந்த வன்சுரு மீன்களைத் தங்கையர், விழாக் கோலங்கொள்ளும் வீதிகளில் சென்று விலை கூறி விற்றுவருவர்.

மீன்பிடிக்கும் தொழிலில் பாண்மகன் மட்டுமல்லாமல் பாண் மகளும் ஈடுபடுவாள் என்பதை அகப்பாட்டு ஒன்று அறிவிக்

கின்றது: 'கயிற்றினைக் கொண்ட நுண்ணிய தூண்டிற் கோலால் மீன்பிடிக்கும் பாணரது மகள் புனலை அடுத்த கரையில் வரால் மீனைப் பிடிப்பாள்.

**நாண்கொள்நுண் கோலின் மீன்கொள் பாண்மகள்**
**தான்புனல் அடைகரைப் படுத்த வராஅல் (அக.216:1-2)**

மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்ட பாணர்குடியில் பிறந்த பாண்மகள் ஆடவரால் பிடிக்கப்பட்ட மீனை எடுத்துச் சென்று விற்றுவருவர். பண்டமாற்று வழக்கத்திலிருந்த அக்காலத்தில் மீனுக்குப் பதில் முத்துக்களையும் அணிகலன்களையும் பெற்று வருவதும் பழநெல் பெற்று வருவதும் வழக்கிலிருந்தது.

மலை உச்சியிலிருந்து வீழ்ந்த, வெள்ளத்தால் பூத்த மலர் தண்ணிய துறையில் விளங்க, கடற்கரையைக் கரைக்கும் காவிரியின் மடுவில் நிலை கொள்ளாத நீர்கலங்குமாறு, நள்ளிர வில் சென்று பிடித்துத் தன்தமையன்மார் விடியலில் கொணர்ந்த திரண்ட கோடுகளை உடைய வாளை மீன்களை அஞ்சொற் பாண்மகள் நெடிய கொடிகள் பறக்கும் கள் மிக்க தெருவில் பழைய செந்நெல்லை வாங்க மறுத்துக் கழங்கு போன்ற பெரிய முத்துக்களையும் அணிகலன்களையும் பெறுவாள்.

**.......... தன்னையர்**
**காலைத் தந்த கணைக்கோட்டு வாளைக்**
**கவ்வாங்கு உந்தி அஞ்சொல் பாண்மகள்**
**நெடுங்கொடி நுடங்கு நறவுமலி மறுகில்**
**பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளாள்**
**கழங்குறழ் முத்தமொடு நன்கலம் பெறூஉம்......**
**(அகம். 126:7-12)**

பாண்மகள் விற்பனைக்குக் கொண்டுவந்த மீனுக்கு விலை யாகப் பழைய நெல்லும் பெரும்பயறும் பெறுதல் உண்டு. பாண் மகள் வரால்மீன் கொண்டு வந்த வட்டி நிறைய இல்லக்கிழத்தி பழைய நெல்லைக் கொடுத்ததை,

**வலைவல் பாண்மகன் வாலெயிற்று மடமகள்**
**வராஅல் சொரிந்த வட்டியுள் மனையோள்**
**யாண்டுகழி வெண்ணெல் நிறைக்கும் (ஐங்:48:1-3)**

எனவும்;

பாண்மகள் கொண்டுவந்த இனிய கெளுத்தி மீன் பெய்த அகன்ற பெரிய வட்டி நிறைய இல்லக்கிழத்தி அரிகாலில் விதைத்துப் பெறும் பயறினைக் கொடுத்ததை,

முள்ளெயிற்றுப் பாண்மகள் இன்கெடிறு சொரிந்த
அகன்பெரு வட்டி நிறைய மனையோள்
அரிகாற் பெரும்பயறு நிறைக்கும் (ஐங். 47:1-3)

எனவும் ஐங்குறுநூற்றுப் பாடல்கள் குறிப்பிட்டுள்ளன,

### மீன் உணக்கல்

பரதவர்கள் பிடித்துவந்த மீன்களுள் விற்றது போக எஞ்சியவற்றையும், விற்பனைக்குரிய காலங்கடந்து பிடித்தவற்றையும் பரதவ மகளிர் உப்பிட்டு உலர வைப்பர். இக்கருத்தமைந்த பாடல்கள் சில சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

விடியற் காலத்தே கடலில் சென்று வலைவீசி மீன்களைப் பிடிப்பதில் வல்லவராகிய பரதவர் தாம் வலைவீசிப் பிடித்த மீன்களை நுண்மணல் பரப்பாகிய நெய்தல் நிலத்தில் உலரவைப்பதற்காகப் பரப்புவர்.

நாள்வலை முகந்த கோள்வல் பரதவர்
நுணங்குமணல் ஆங்கண் உணங்கப் பெய்ம்மார்
(அகம். 300:1-2

இவ்வாறு பரந்த பெருங்கடலினிடத்தே பரதவர் பிடித்து வந்த மீன்களும் இருங்கழியில் முகந்து வந்த இறாக்களும் நிலவொளி போலும் எக்கர் மணலில் நன்முக உலர்ந்து, பாக்கம் எங்கிலும் புலால் நாற்றம் பரவி வீசும். இதனை,

பெருங்கடல் பரதவர் கோள்மீன் உணங்கலின்
இருங்கழிக் கொண்ட இறவின் வாடலொடு
நிலவுநிற வெண்மணல் புலவப் பலவுடன்
எக்கர் தோறும் பரிக்கும் (320:1-4)

எனவரும் குறுந்தொகைப் பாடலால் அறியலாம்.

பரதவ மகளிர் நிணம் மிகுந்த பெரிய மீன்களைத் துண்டங் களாகத் துணித்து உப்பிட்டு, வெண்மணல் பரப்பில் அவற்றைப் பரப்பி வெயிலில் உலர்த்தி, பறவைகள் அவற்றைக் கவராமல் காவல் காத்துச் சேமித்து வைப்பர்,

**உரவுக்கடல் உழந்த பெருவலைப் பரதவர்**
**மிகுமீன் உணக்கிய புதுமணல் ஆங்கண் (நற். 63:1-2)**

**நிணச்சுறா அறுத்த உணக்கல் வேண்டி**
**இனப்புள் ஒப்பும் (நற்: 45:6-7)**

எனவரும் பாடடிகள் மேற்கூறிய கருத்தை விளக்குவன.

## உப்பு விற்றல்

நெய்தல் நிலமகளிரின் மற்றொரு தொழில் உப்பு விற்றல். உப்பு வணிகர் உமணர் என்ற சொல்லால் குறிப்பிடப்பட்டுள்ளனர். உவர் நிலத்தில் விளையும் உப்பினை வண்டிகளில் ஏற்றிச் சென்று மற்ற இடங்களில் வாழும் மக்களுக்கு விற்பர். உமணர்கள் உப்பு விற்கப் போகையில் தம் குடும்பத்தோடு செல்வர். உப்பு வண்டி களை உமணப் பெண்டிர் ஓட்டிச் செல்வர். உப்பு வணிகரின் இளம் பெண்கள் ஊருக்குள் சென்று உப்பினைக் கூவிவிற்பர். 'உமணரின் இளமகளொருத்தி உப்பு விற்கப் புறப்பட்டாள். ஒரு வீதியின் மருங்கே தன்கையிலுள்ள ஒளிவளை கலகலவென்றொலிக்க வீசி நடந்தாள்; கல்லுப்பினைத் தருவேன். அதற்கு ஈடாக நெல்லினைக் கொடுங்கள்' என்று மென்குரலில் விலைகூறிச் சென்றாள். இதனை அகநானூற்றுப் பாடல்கள்.

**உமணர் காதல் மடமகள்**
**சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி**
**நெல்லின் நேரே வெண்கல் உப்பு எனச்**
**சேரி விலைமாறு கூறலின் (அக. 140:5-8)**

**நெல்லும் உப்பும் நேரே ஊரீர்**
**கொள்ளீரோவெனச் சேரிதொறும் நுவலும் (அக.390:8-9)**

எனக் கூறி நின்றன.

## வரைவின் மகளிர்

பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தில் பரத்தை ஒழுக்கம் வெகுவாகப் பரவிக் கிடந்தது. இவ்வொழுக்கத்தை மேற்கொள்ளும் மகளிர் பரத்தையர், வரைவின் மகளிர், கணிகையா என்ற பெயர்களால் இலக்கியங்களில் குறிப்பிடப் பெற்றுள்ளனர். இம்மகளிரின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் உகந்த சூழ்நிலை சமுதாயத்தில் நிலவி இருந்தது.

**பாணன் கூத்தன் விறலி பரத்தை யாணம**
**சான்ற அறிவர் கண்டோர்**

என்ற தொல்காப்பிய நூற்பா பரத்தை சமுதாயத்தில் பெற்றிருந்த இடத்தினைத் தெரிவிக்கின்றது. சங்க இலக்கியப் பாடல்களில் கற்புத் திணையில் மூன்றில் ஒரு பங்குப் பாடல்கள் பரத்தமைப் பற்றியதாக இருத்தலின் சங்ககாலத்தில இப்பரத்தமை பெற்றிருந்த இடம் நன்கு விளங்குகின்றது. அதற்குக் காரணம் சமுதாய மனப்பான்மையும் தேவையுமாகும். கணிகையர் பரத்தமையைத் தொழிலாகக் கொண்ட ஒரு தனிக்கூட்டத்தவர். அவர்களை இரு வகைப்படுத்திக் கூறலாம். இக்குலத்தைச் சார்ந்த மகளிருளளும் ஒரு சிலர் ஒரு தனிப்புரவலர் மீது அன்பு கொண்டு அவரோடு வாழ்க்கை நடத்தினர். அவர்கள் காதற்பரத்தையர் அல்லது காமக்கிழத்தியர் எனப்பட்டனர். வேறுசிலர் பரத்தமைத் தொழிலை நம்பியே வாழ்க்கை நடந்தியவர் அவர்கள் எந்த ஒரு புரவலனுடனும் தனியன்பு கொண்டவரல்லர். அவர்களைச் சேரிப்பரத்தையர் அல்லது காமக்கணிகையர் என்றனர்.

இப்பரத்தையர் தமக்கு இயல்பாய் அமைந்த எழிலோடு மேலும் அழகுறத் தம்மை ஒப்பனை செய்து கொள்வர். இதனை மதுரைக் காஞ்சி பின்வருமாறு சித்திரிக்கின்றது. 'நீர் திரண்டாற் போன்ற வெள்ளிய பூக்களால் கட்டப்பட்ட மாலைகளைக் கொண்டையிலே அணிந்து அழகிய திரண்ட தொடி ஒளிரும்படி கையை வீசி நடந்து, குவளை முதலிய புதுமலர்களின் மணம் தெருவெங்கும் கமழும்படி பலருடன் புணர்நததமையால் கலைந்த ஒப்பனைகளைப் பின்னும் அழகுற ஒப்பனை செய்துகொண்டு செங்கழுநீர் மலர்களையும் ஏனைய மணமலர்களையும் சூடியிருந்தனர்.

இம்மகளிர் தம்மைப் புணர்வோரின் நுண்ணிய அணிகலன்கள் உடைய மார்பைத் தழுவி, இடையிடையே வஞ்சனையுடைய பொய்வார்த்தைகளைப் பேசி, அன்புடையார் போல முயங்கின முயக்கத்தை அவர் பொருள்தருமளவும் மறைத்து, வெகுதூரத்திலுள்ள ஊரினரும், அருகிலுள்ள ஊரினருமாய்த் தம்முடைய வடிவழகினை விரும்பி வந்த பல்வேறு செல்வங்களையுடைய இளைஞரை அவருடைய செல்வமெல்லாம் கெடும்படியாகக் கவர்ந்து கொண்டு, மலர்களில் மதுவுண்டு, தாதற்ற வறும்பூத் துறக்கும் வண்டுகளை ஒப்பத் தம்மை நுகர்ந்தோருடைய நெஞ்சு கலக்கமுறும்படி அவரிடத்து இனிய கூட்டத்தைக் கைவிட்டு, பழமரமுள்ள இடத்தைத் தேடிச்செல்லும் பறவைபோல, கொழுத்த செல்வரும் பிறரும் கூடியுள்ள செல்வமிக்க இல்லங்களிலே சென்று, அங்குப் பொற்றொடி முதலியவற்றை அணிந்த இளமையுடையராய்ச் சுடர் விளக்கின் ஒளியிலே பலரும் நெருங்கி, விண்ணிடத்தே விரும்பியாடும் தெய்வமகளிர் வருத்துமாறு போல, தம்மைக் கண்டோருடைய நெஞ்சை வருத்திப் பொருள் வாங்கும் தன்மையுடையவர் இவ்வரைவின் மகளிர். இவ்வாறு சிறந்த ஆடையுடன் கவர்ச்சியான இழை அணிந்து ஆடலிலும் பாடலிலும் சிறந்து விளங்கினர் அக்காலத்துப் பொதுமகளிர். விழாக்கள் நடைபெறும் இடங்களில் மிகுதியும் காணப்படுவர். இவர்கள் இசைக் கருவிகளை இசைக்குத் திறனையும் மதுரைக் காஞ்சி அழகுறக் கூறுகிறது.

புறநானூற்றுப் பாடலொன்று, வலிமையும் திறமையுமுடைய வேந்தர்பால் நிலமகள் தங்குவது போல விலைமகளிர் எனப்படும் பரத்தையர் பொருளுடையாரைச் சார்ந்திருப்பர் எனவருமிடத்து நிலமகளை விலைமகட்கு ஒப்பக் கூறுகின்றது.[1]

---

1. ......... .. வயல்விசும்பு கமழ்
நீர்திரண் டன்ன கோதை பிறக்கிட்டு
ஆய்கோல் அவிர்தொடி விளங்க வீசிப்
போதவிழ் புதுமலர் தெருவுடன் கமழ
மேதகு தகைய மிகுநல மெய்திப்..... மகளிர்
(ம. கா.561-83)

**விலைநலப் பெண்டிரில் பலர்மீக் கூற**
**உள்ளேன் வாழியர் யானெனப் பன்பாண்**
**நிலமகள் ... ... ... ... ... ...** **(புறம். 365:8-10)**

இவ்விடத்துப் பரத்தையர்தம் பரத்தமைத் தொழிலால் பொருள் பெற்று வாழ்வு நடத்தும் வாழ்க்கையர் எனும் பொருள்படும்படி 'விலைநலப் பெண்டிர்' என்ற சொல்லால் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம்.

சமுதாயத் தேவையே பண்டைப் பரத்தமைக்குக் காரணமாகும். எனினும் இத்தொழிலில் ஈடுபட்ட மகளிர் தம்மிடம் வந்த வரது 'பொருளை எல்லாம் கவர்ந்து கொண்டார்கள் என்றோ அதனால் ஆடவர் வறுமை அடைந்தனர் என்பதற்கான குறிப்போ தொல்காப்பியம், சங்க இலக்கிய மருதநிலப் பாடல்களில் காணப் படாமையினின்று பரத்தையரின் பண்பு விளங்கும்.

## அரியல் பெண்டிர்

கள்ளானது அரித்து எடுக்கப்படுவதால் அரியல் எனப்பட்டது. அதனைக் காய்ச்சி விற்கும் பெண்டிர் அரியல் பெண்டிர் எனப்பட்டனர். பெண்கள் கள் காய்ச்சினர் என்பதற்கான ஆதாரம் பெரும் பாணாற்றுப் படையில்,

**கள்ளடு மகளிர் வ—ள நுடக்கிய**
**வார்ந்துகு சின்னீர்** **(339-40)**

என வருமடியில் காணப்படுகிறது.

பரதவ மகளிர் கள் காய்ச்சிய செய்தி ஒன்று சிறுபாணாற்றுப் படையில் காணப்படுகிறது. பேரலைகள் ஓர் அகில் மரத்தினை அடித்துக் கொண்டு வந்து கரையில் ஒதுக்கிவிட்டன. ஒட்டகம் உறங்குவது போலக்கிடந்த அம்மரத்தினைக் கொண்டுவந்து விறகாக்கி, பெரிய தோளினையும் மூவல் போன்ற கண்களையுமுடைய நுளைமகள் கள்ளடுகின்றாள். அவள் வடித்தெடுத்த புளித்துக் களிப்பேறிய கள்ளினைப் பரதவர் உண்டு மகிழ்ந்தனர்.

**ஒங்குநிலை ஒட்டகம் துயில்மடிந் தன்ன**
**வீங்குதிரை கொணர்ந்த விரைமர விறகின்**

கரும்புகைச் செந்தீ மாட்டி, பெருந்தோள்
நுதிவேல் ஞோக்கின் நுளைமகள் அரித்த
பழம்படு தேறல் பரதவர் மடுப்ப... (154-59)

கள் விற்கும் பெண்ணொருத்தி தன்னிடையில் பானையில் கள்ளைச் சுமந்து வந்து போர்வீரர்களுக்குக் கொடுக்கின்றாள். இதனை அகநானூற்றுப் பாடலொன்று,

அரியல் பெண்டிர் அல்குற் கொண்ட
பகுவாய்ப் பானைக் குவிமுனை சுரந்த
வரிநிறக் கலுழி ஆர மாந்திச்
செருவேட்டுச் சிலைக்கும் செங்கண் ஆடவர் (157:1-4)

எனக்குறிப்பிட்டுள்ளது. பண்டைத் தமிழகத்தில் மகளிருள் ஒரு சாரார் 'கள்' தயாரித்து விற்கும் தொழிலிலும் ஈடுபட்டிருந்ததைக் காணமுடிகிறது.

## புலைத்தி

பண்டைக் காலத்திய மக்கள் தூய்மையான ஆடை உடுத்தனர். இதற்குப் பெருந்துணையாய் இருந்தவர் ஆடை வெளுக்கும் தொழிலில் ஈடுபட்ட பெண்களே ஆவர். இப்பெண்டிர் புலைத்தி (புறம் 311) புலைத்தியர் என்ற சொல்லால் அழைக்கப்பட்டனர் என்பதைச் சங்க இலக்கியச் சான்றுகளினின்றும் அறியலாம். இப் பெண்கள் நாள்தோறும் களர் நிலத்தில் அமைந்த கிணற்றைத் தோண்டி, அங்குக் கிடைக்கும் நீரால் ஆடைகளை வெளுப்பர். களர்நிலத்து ஊறும் உவர்நீர் ஆடையிற் பற்றிய மாசுகளைப் போக்கும் தன்மையுடையதாதலின் புலைத்தி களர்படு கூவல் தோண்டி ஆடைவெளுக்கும் தொழில் செய்தனர்.

களர்படு கூவற் றோண்டி நாளும்
புலைத்தி கழீஇய தூவெள் ளறுவை (புறம் 311)

மேலும் இப்புலைத்தியர் தம்தொழிலை அதிக கவனத்தோடு செய்தனர். ஆடைகளை நன்றாக ஆராய்ந்து பார்த்து அழுக்கு நீங்க நன்றாக வெளுத்தனர். இப்படிச் செய்வதில் சோர்வு

கொள்ளாது தொடர்ந்து செய்தனர். இவ்வாறு துவைத்த துணிகளுக்குச் சோற்றுக் கஞ்சியிட்டு உலர்த்தினர்.

**உடைஓர் பான்மையிற் பெருங்கை தூவா**
**வறனில் புலத்தி எல்லித் தோய்ந்த**
**புகாப்புகர் கொண்ட புன்பூங் கலிங்கம் (நற். 90:2.4)**

**பசைவிரல் புலைத்தி நெடிதுபிசைந் தூட்டிய**
**பூந்துகில் (அகம்.387:6-7)**

**பசைகொன் மென்விரல் பெருந்தோட் புலைத்தி**
**(அகம். 34: 11)**

எனவரும் சங்க இலக்கியப் பாடலடிகள் புலைத்தியரின் தொழில் செய்யும் பாங்கினை விளக்குகின்றன.

## பருத்திப் பெண்டிர்

சங்க காலத் தமிழர்கள் பருத்தி நூல் நெசவில் தலை சிறந்திருந்தனர். நெசவுத் தொழிலுக்கு அடிப்படையான பருத்தி தமிழகத்தில் மிகுதியாகக் கிடைத்தது. ஆடவர் நெசவினை மிக நேர்த்தியாகச் செய்யப் 'பெரிதும் உதவியவர்கள் பெண்களேயாவர். ஆடை நெய்யப் பயன்பட்ட பருத்தியை வில்லாலடித்து அதிலுள்ள கொட்டையும் கோதும் நீககித் தூய்மை செய்வர்' இக்கருத்துக்களைப் புறநானூறு, நற்றிணைப் பாடல்கள் வாயிலாக அறியலாம்.

**எஃகுறு பஞ்சிற் றாகி (நற். 247:4)**

**வில்லெறி பஞ்சி (நற்.299:7)**

**சிறையும் செற்றையும் புடையுந ளெழுந்த**
**பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்து (புறம்.326;4-5)**

இப்பாடலில், சிறையைப் பருத்தியின் புறத்தோலாகவும், கொட்டையும் தூசியும் செற்றையாகவும் கொண்டு இவற்றைப் புடைத்து நீக்குவது தோன்றப் புடையுநள் எனப்பட்டது. இரவுப் பொழுதிலும் இவ்வேலையைச் செய்தனர் என்பது சிறுதீ விளக்கத்து எனவரும் தொடராலும் உணரலாம்.

இத்தொழிலைச் செய்த பெண்டிர் பருத்திப் பெண்டிர் எனப் பட்டனர். இங்ஙனம் நூல் நூற்பது பெண்களுக்குரிய தொழிலாய் அமையினும் கைம்பெண்களே பெரிதும் இத்தொழிலைச் செய்தனர் என்பதையும் அறிய முடிகின்றது இதனை நற்றிணை,

**ஆளில் பெண்டிர் தாளில் செய்த**
**நுணங்கு நுண்பனுவல் (351:1-2)**

எனக் குறிப்பிடுகிறது. ஆளில் பெண்டிர் என்ற தொடர் 'பொருள் தேடிவந்து பாதுகாக்குங் கணவனை இழந்த கைம்மை மகளிரைக் குறிக்கும்.' இவர்கள் தொழில் செய்து உண்ணுமாறு முயன்று நுண்ணிய பஞ்சினை நூற்றனர்.

## ஏவன் மகளிர்

இம்மகளிர் அரசன்பால் வரும் விருந்தினரை அரசன் கருதியபடி உபசரிக்கும் பணிசெய்வர். இவர்கள் அன்பால் முகமலர்ந்து விருந்தினரை வரவேற்று உபசரிப்பர். இவர்கள் எழில்மிக்க நங்கையராய்க் காணப்பட்டனர் இவர்களது கூந்தல் கருமையால் முகிலோ எனக் கண்டோர் மருளும் வண்ணமிருந்தது. சிறந்த அணிகலன்களால் தம்மை அழகுபடுத்தியிருந்தனர். செயற்கை அணிகலன்களுக்கு மேலான அழகினைத் தரும் இன்னகை முகத்துடன் காணப்பட்டனர். இவர்கள் வரும் விருந்தினர்களுக்கு குற்றமற்ற பொன்னாற் செய்த வட்டில் நிறையும்படி கள்ளினைப் பலமுறை வார்த்துத் தருவர். இக்கருத்தினைச் சங்கப் பாடல்கள் பலவற்றில் காணலாம்.

**......... ... மகிழ்செய் மாடத்து**
**இழையணி வனப்பின் இன்னகை மகளிர்**
**போக்கில் பொலங்கல நிறையப் பல்கால்**
**வாக்குபு தரத்தர (பொருந.84-87)**

**இலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய**
**மணங்கமழ் தேறல் மடுப்ப நாளும் (மது.779-80)**
**ஒண்தொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து (புறம்.56)**

எனவரும் பாடலடிகளின் மூலம் மேற்கூறிய கருத்தை உணரலாம்.

## கொண்டி மகளிர்

கொண்டிமகளிர் என்ற சொல் பரத்தையர் என்ற பொருளிலும் பிறநாட்டிலிருந்து கொள்ளையிட்டுக் கொணர்ந்த பெண்டிரைக் குறிக்கவும் சங்க இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பண்டைநாளில் அரசர்கள் போரில் வெற்றிபெற்ற பொழுது, தம் பகை நாட்டுறையும் மகளிரைச் சிறைபிடித்து வந்து, அம் மகளிரைக் கற்பழித்தல் போன்ற தீங்கேதும் செய்யாது திருக் கோயில் திருப்பணி செய்வித்துக் காப்பர். இத்தகைய பெண்டிரைப் பற்றிய குறிப்பொன்று பட்டினப்பாலையில் காணப்படுகின்றது.

> கொண்டி மகளிர் உண்டுறை மூழ்கி
> அந்தி மாட்டிய நந்தா விளக்கின்
> மலரணி மெழுக்க மேறிப் பலர்தொழ
> வம்பலர் சேக்கும் கந்துடைப் பொதி (பட்.246-49)

மன்னர்கள் தம்பகைவர் மனையோராய்ப் பிடித்து வந்த மகளிர், ஊரார் பலரும் நீருண்ணும் துறையிலே மூழ்கி, அந்தி மாலைப் பொழுதிலே மலரால் அழகு செய்யப்பட்ட, மெழுகிய இடத்திலே ஏறிச்சென்று உள்ளூரார் பலரும் தொழுது செல்வனவும், புதிதாய் வந்தார் தங்குதற்குரியனவுமாகிய கடவுட்டறி நடப்பட்ட அம்பலங்களில் அவியாத விளக்கினை ஏற்றும் பணியைச் செய்வர். பண்டை நாளில் அம்பலங்களே இறை வணக்கஞ் செய்யுந் திருக்கோயில்களுமாவன. இரவு வருமுன்னரே இப்பெண்டிர் விளக்கேற்றுவர். அவ்விளக்குகள் இரவு முழுதும் அணையாது எரிதலின் நந்தா விளக்கு எனப்பட்டது.

## அகவன் மகளிர்

மக்கள் எக்காலத்தவராயினும் தங்கள் வாழ்வில் நடைபெறும், நடைபெறக் கூடியவற்றின் நன்மை தீமைகளை அறிவதில் ஆர்வமுள்ளவராயிருப்பர். அதற்குக் குறிசொல்வோரை நாடுவது உண்டு. பண்டைத் தமிழரின் வாழ்வியலை அறியத் துணை செய்யும் சங்க இலக்கியப் பாடல்களில் குறிசொல்வோரைக் குறிக்கும் இடங்களும் அமைந்துள்ளன. குறுந்தொகைப் பாடல் ஒன்றில் குறிசொல்லும் பெண்ணைப் பற்றிய செய்தி அழகுறக் கூறப்பட்

டுள்ளது. குறிசொல்பவள் கட்டுவிச்சி எனப்படுவாள். குறுந்தொகை கட்டுவிச்சியை அகவன்மகள் என்ற பெயரால் குறிப்பிடுகின்றது. அகவன்மகள் என்றால் அழைக்கும் மகள் என்பது பொருள். அகவன்மகள் குறி சொல்லும் பொழுது தெய்வங்களையும், குறிசொல்லப்படுவோர் குலத்தோரையும் அழைத்துப்பாடுதல் பற்றி அகவன் மகள் என்பது அவளுக்குப் பெயராயிற்று.

> **அகவன் மகளே அகவன் மகளே**
> **மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்**
> **அகவன் மகளே பாடுக பாட்டே**
> **இன்னும் பாடுக பாட்டே அவர்**
> **நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே** (குறுந் 23)

எனப்பாடியுள்ளார் ஔவையார். இப்பாட்டில் கூறப்படும் கட்டுவிச்சி வயது முதிர்ந்தவளாகக் காட்டப்படுகிறாள், சங்குமணிக் கோவை போன்ற நெடிய கூந்தலையுடைய கட்டுவிச்சி என்றதன் மூலம் கட்டுவிச்சியின் மூப்பையும் அழகையும் ஆசிரியர் புலப்படுத்துகின்றார். இவள் குறிசொல்லும் செய்திகளைப் பாட்டாகப்பாடி கூறுவாள் என்பது பாடுக பாட்டே என்ற தொடர் உணர்த்தி நிற்கும்.

## கட்டிற் கேட்டல்

கட்டு என்பது சேரியின் முதுபெண்டாக்க் குறிசொல்லும் மாதரை வீட்டிற்கு அழைத்து வந்து, முறத்திலே பிடிநெல்லை இட்டு எதிரே தலைமகளை நிறுத்தித் தெய்வத்திற்கு வழிபாடு செய்து, அந்நெல்லை நான்கு நான்காக எண்ணி எஞ்சியவை ஒன்றிரண்டு மூன்றளவும் முருகணங்கெனவும் நான்காயின் பிறிதொரு நோயெனவும் கூறப்படும். முருகணங்கென்று கூறின் உடனே வேலனை அழைத்து வெறிக்களந்திருத்தி முருகக் கடவுளுக்கு விழாநடத்தி ஆண்டுக் கழங்குக் குறி பார்ப்பது.[1] இதனை

---

1 நற்றிணை. நாராயணசாமி ஐயர் உரை. ப. 387.

செம்முது பெண்டிரொடு நெல்முன் நிறீஇக்
கட்டிற் கேட்கும் (நற்.288:6-7)

எனவரும் பாடலடியால் அறியலாம்.

## விரிச்சி கேட்டல்

விரிச்சி கேட்டல் என்பது நற்சொல் கேட்டல் என்பதாகும். அதாவது ஏதேனும் ஒரு காரிய நிகழ்ச்சியை இது நன்றாய் முடியுமோ? தீதாய் முடியுமோ? என்று ஐயுற்றார் மக்கள் அருகி வழங்கும் ஊர்ப்புறத்தே சென்று தெய்வத்தைத் தொழுது, அங்கு அயலிலுள்ளார் அப்பொழுது பேசுகின்ற சொல்லைக் கூர்ந்து கேட்பர். அவ்வாறு கேட்கும் பொழுது, ஆண்டு அயலார் மொழி நன்மொழியாகப் பிறக்குமேல் தம் காரியம் நன்மையாய் முடியும் என்றும், தீயசொல்லாய் இருக்குமேல் தீமையாய் முடியும் என்றும் துணிவர். இங்ஙனம் விரிச்சி கேட்கும் பழக்கம் பண்டைக் காலத்தில் இருந்ததை,

படையியங் கரவம் பாக்கத்து விரிச்சி (புறத்.சூ:3)

எனவரும் தொல்காப்பிய நூற்பாவாலும், சங்க இலக்கியச் சான்று களினின்றும் அறியலாம் பத்துப்பாட்டில் முல்லைப்பாட்டில் பெருமுது பெண்டிர் விரிச்சி கேட்டல் கூறப்பட்டுள்ளது.

அருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை இனவண்டு ஆர்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவிழ் அலரி தூஉய்க்கை தொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப (முல். 7-10)

அரிய காவலை உடைய பழைய ஊர்ப்பக்கத்தே போய், யாழினது ஓசையையுடைய இனமான வண்டுகள் ஆரவாரிக்கும்படி நெல்லி னோடே நாழியிடத்தே கொண்ட நறிய பூக்களையுடைய முல்லையின் அரும்புகளில் அப்பொழுது மலர்வனவாகிய புதிய பூக்களைச் சிதறித் தெய்வத்தைக் கையாலே தொழுது, பெரிதும் முதிர்ந்த பெண்டிர் நற்சொல் கேட்டு நிற்பர் என்பதாகும். இதே கருத்தினை, 'நெல்நீர் எறிந்து விரிச்சி யோர்க்கும்' எனப் புறநானூறும் குறிப்பிடுகிறது.

மேற்கண்ட எடுத்துக்காட்டுகளினின்றும் தம்வாழ்வில் நிகழும் நன்மை தீமைகளை அறிய விழையும் மக்களுக்கு நற்பண்புள்ள வயது முதிர்ந்த பெண்டிர் சிலர் குறிசொல்வதை அறிய முடிகிறது. பெரும்பாலும் முதுபெண்டிரே இத்தொழிலைச் செய்திருத்தல் வேண்டும்.

## பூவிலை மடந்தை

இந்நாளில் நாம் காண்பது போலவே பண்டைக்காலத்திலும் அவ்வப் பருவத்திற்கேற்ற புத்தம்புது மலர்களை வட்டிகளில் ஏந்தித் தெருக்கள் தோறும் திரிந்து இளமகளிர் பூ விற்றனர். இக் காட்சியினை நற்றிணை, புறநானூறு போன்ற இலக்கியங்கள் சித்திரித்துள்ளன. காட்டாக நற்றிணை,

**..............துய்த்தலைப் பாதிரி**
**வாலிதழ் அலரி வண்டுபட ஏந்திப்**
**புதுமலர் தெருவுதொறும் நுவலும்**
**நொதும லாட்டிக்கு (118:8-11)**

எனக் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். பூ விற்கும் பெண், மேற் புறத்தில் நுண்ணிய பஞ்சினையுடைய பாதிரியின் வெளிய இதழை யுடைய மலர்களை வண்டுகள் மொய்க்கும்படி வட்டியிலேந்தித் தெருக்கள் தோறும் விலைகூறிச் செல்வாள் எனக் கூறுகிறது. பாதிரிமலர்கள் விற்பதாகக் கூறப்படுவதால் அது வேனிற் காலத்தை உணர்த்தும்.

நற்றிணை காட்டும் மற்றொரு பூவிலை மடந்தை கார் காலத்தில் மலரும் குருக்கத்தி, சிறுசண்பகம் முதலான மலர்களைக். கடகப்பெட்டியில் வைத்து கையிலெடுத்துக் கொண்டு விலைக்குக் கொள்ளீரோ எனக் கூறிச் செல்கின்றார்.

**துய்த்தலை யிதழ பைங்குருக் கத்தியொடு**
**பித்திகை விரவுமலர் கொள்ளீ ரோவென**
**வண்டுசூழ் வட்டியள் திரிதருந்**
**தண்டலை உழவர் தனிமட மகளே (97.6-9)**

இப்பாடலில் குறிப்பிடப்பெறும் பூ விற்பவள் உழுதுண்ணு மக்களின் இளமகளாவாள்.

புறநானூற்றுப் பாடலொன்று பூ விற்கும் மகளிர் பூ விற்பவரே யானாலும் சூழ்நிலை அறிந்து இல்லங்களில் சென்று மலர்விற்பர் என்ற அரிய கருத்தைக் கூறுகின்றது.

**குறும்பர்க் கெறியும் ஏவல் தண்ணுமை**
**நாணுடை மாக்கட் கிரங்கு மாயின்**
**எம்மினும் பேரெழில் இழந்து வினையெனப்**
**பிறர்மனை புகுவள் கொல்லோ**
**அளியள் தானே பூவிலைப் பெண்டே** (293:2-6)

வீரர்களைப் போருக்கு அழைக்கும் தண்ணுமை ஒலிகேட்டபின் பூவிலைப்பெண்டு, போர் தொடங்கிவிட்டது; இனி ஆடவர் மனைக்கண் இருக்கமாட்டார்கள். அதனால் இம்மனை மகளிர் தன்னிடம் பூக்களை வாங்கமாட்டார் என்று கருதிப் பிறர் இல்லங்களுக்குச் செல்கிறாள். எனவே அவளது மலர் விற்பனையின் அளவு குறைவுபடும் என்பது தோன்ற அளியள்— (இரங்கத்தகும் நிலையினள் என்ற சொல்லால் குறிப்பிடப்படுகின்றாள். ‘‘பிறர் மனை என்றது போர்க்கு ஆகாரென விலக்கப்பட்ட பார்ப்பனர், நோயுற்றார், மகப்பெறாதார் முதலாயினோர் மனையைக் குறிக்கும். மறக்குடி மகளிர் பூ விற்கும் பெண்களுக்கு நல்ல நன்கலங்களை வீறுபட வழங்கும் இயல்பினர். அவர் பூவை விலக்கியது பூவிலைமடந்தைக்குப் பெருவருத்தத்தைச் செய்ததென அறிக அவளது வருத்தத்தை அவள் கூறும் பூவிலை ஒலியே எடுத்துக் காட்டுதலால் அளியள் எனப்பட்டாள்.’’[1]

## பண்ணியமும் பூவும் விற்றல்

அந்நாளில் வயது முதிர்ந்த, நல்ல வனப்பினையுடைய பழமை மூத்த பெண்டிரும் மலர் விற்பனை செய்தனர். அவர்கள் தமது நரையினையுடைய கூந்தலை நன்றாகக் கோதி வெள்ளிய சங்கைப் போலக் காட்சி தருமாறு பின்னே முடிந்து விட்டிருந்தனர். இம்முது பெண்டிர் பல்வேறு வகையான செப்புகளில் கண்டார்

---

1. புறநானூறு, இரண்டாம் பகுதி கழகவெளியீடு, ப.188.

விரும்பும் தின்பண்டங்களை மணமிக்க மலர்களோடே ஏந்திச் சென்று இல்லந்தோறும் விற்பர். இதனை மதுரைக்காஞ்சி,

நன்னர் நலத்தர் தொன்முது பெண்டிர்
... ... ... ...
புடையமை பொலிந்த வகையமை செப்பில்
காமர் உருவிற் றாம்வேண்டு பண்ணியம்
கமழ்நறும் பூவொடு மனைமனை மறுக (409-23

எனப் பாடுகிறது.

## அடுமகள்

சங்க இலக்கியப் பாடல்களினின்றும் அடுதொழில் செய்யும் மகளிரும் இருந்ததை அறியலாம். பண்டைக் கால மகளிர் விருந்தோம்பும் பண்பு மிக்கவராய் வரும் விருந்தினர்க்கு அரிய பல உணவு வகைகளைச் சமைத்து விருந்தோம்பினர். இப்பெண்டிருள் சமைக்கும் கலையையே தாம் செய்யக்கூடிய தொழிலாக மேற்கொண்டு வாழ்ந்த மகளிரும் இருந்துள்ளனர். இப்பெண்டிர் அடுமகளிர் எனப்பட்டனர். புறநானூற்றுப் பாடலொன்று அடுமகள் சமைத்த பாங்கினைப் பின்வருமாறு பாடுகிறது.

அடுமகள் முகந்த வளவா வெண்ணெல்
தொடியாண் உலக்கைப் பரூஉக்குற் றரிசி
காடி வெள்ளுலைக் கொளீஇ நீழல்
ஓங்குசினை மாவின் தீங்கனி நறும்புளி
மோட்டிரு வராஅற் கோட்டுமீன் கொழுங்குறை
செறுவின் வள்ளை சிறுகொடிப் பாகற்
பாதிரி யூழ்முகை யவிழ்விடுத் தன்ன
மெய்களைந் தினனொடு விரைஇ......
மூழ்ப்பப் பெய்த முழுவவிழ்ப் புழுக்கல் (399:1-9)

'சோறாக்கும்பெண் முகர்ந்து கொணர்ந்த வெண்ணெல்லைக் குற்றி எடுத்த அரிசி கொண்டாக்கிய சோற்றைக் காடி நீர்பெய்த வெள்ளுலையில் பெய்துகொண்டு மாங்கனிகளைப் பிசைந்து செய்த நறிய புளிக்குழம்பும், கரிய பெரிய வரால் இறைச்சியும், கோட்டையுடைய சுறா மீனினது துண்டமாகிய கொழுவிய இறைச்சியும்,

வயல்களிற் படர்ந்த வள்ளைக்கீரையும், சிறுகொடியாகிய பாகற் காயும், பாதிரியின் முதிர்ந்த அரும்பினது இதழை விரித்தாற் போன்ற தோலை நீக்கி இனமாகியவற்றோடு கலந்து மென்மை யுண்டாக மூடும்படியாகப் பெய்த முழுத்த சோறு'' என்பதாகும்.

## பாசறையில் வினை

பெண்டிர் பாசறையில் வினை இயற்றுவதும் உண்டு. போர்த் தலைவர்களுக்கு வேண்டியவற்றைச் செய்யும பணிப் பெண்களாக இருந்தனர். பாசறையில் இரவுப் பொழுது வருமுன்னர் விளக் கேற்றி வைத்தனர். இதனை முல்லைப்பாட்டு, 'பாசறையினுள்ளே தொடியணிந்த முன்கையினையும், கூந்தல் அழகாக விழுந்து கொண்டிருக்கும் சிறுபுறத்தையுமுடைய பெண்கள் உளர். அப் பெண்டிர் நெய்யுமிழ் கலத்தினராய் நெடும் விளக்குகளை ஏற்று கின்றனர். பிறகு மங்கலாக எரிவனவற்றைத் தூண்டிவிடுகின்ற னர்,' என்ற கருத்தமைய

> குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத்து
> இரவுபகற் செய்யுந் திண்பிடி ஒள்வாள்
> விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர்
> நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇக்
> கையமை விளக்க நந்துதொறு மாட்ட' (முல்லை. 45-49)

எனப்படுகிறது.

## செவிலித்தாயர்

செவிலித்தாய் பற்றிய குறிப்பு சங்க இலக்கிய அகப்பாடல் களில் காணப்படுகிறது. செவிலித்தாய் என்பாள் நற்றாயின் தோழியாகவும், தலைவியின் உயிர்த் தோழிக்குத் தாயாகவும் இலக்கண நூல்களில் கூறப்படுகின்றாள். அவள் தலைவியினிடம் பேரன்பு கொண்டு பாதுகாத்தும், அவளுக்கு வேண்டிய உணவு கொடுத்தும், இரவு நேரத்தில் தன் அருகே துயிலச் செய்து காவல் புரிந்தும் தலைவி தலைவனுடன் உடன்போகிய காலத்து வருந்தித் தேடிச் சென்றும், அவளுடைய இல்வாழ்க்கையைக்கண்டு இன்புற்றும் ஒழுகுகின்றாள். பொதுவாகத் தலைவியைக் குழந் தைப் பருவத்திலிருந்து கண்ணுங்கருத்துமாய்ப் பேணிக்காக்கும்

பொறுப்பு செவிலித்தாய் என்பவளுக்கு உரிய தொழிலாய் அக் காலச் சமுதாயம் கருதியிருத்தற்கூடும்.

குழந்தைப் பருவத்திலுள்ள தலைவியைச் செம்முது பெண் டாகிய செவிலித்தாய் உண்ண உணவும், பாலுங் கொடுத்து வளர்த்ததலை நற்றிணை,

**பிரசங் கலந்த வெண்சுவைத் தீம்பால்**
**விரிகதிர்ப் பொற்கலத் தொருகை யேந்திப்**
**புடைப்பிற் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்**
**உண்ணென்று ஓக்குபு புடைப்பத் தெண்ணீர்**
**முத்தரிப் பொற்சிலம் பொலிப்பத் தத்துற்று**
**அரிநரைக் கூந்தல் செம்முது செவிலியர்**
**பரீஇ மெலிந்தொழியப் பந்த ரோடி**
**ஏவன் மறுக்குஞ் சிறுவிளை யாட்டி** **(110:1-8)**

என்றும், அகநானூறு

**மணிசெய் மண்டைத் தீம்பால் ஏந்தி**
**ஈனாத் தாயர் மடுப்பவும் உண்ணாள் (105:5-6)** என்றும்

கூறுவதால் அறியலாம். பெறாது பெற்ற தாயராயிருந்து தலைவி யைப் பேணிக் காக்கும் பணியைச் செய்தலால் செவிலியர் ஈனாத் தாயர் எனக் குறிப்பிடப் பெற்றனர்.

செவிலித்தாயால் வளர்க்கப்படும் தலைவி காதல்வயப்பட்டு தன்னில்லத்தார் அறியாவண்ணம் தலைவனுடன் போதல் உண்டு. தலைவியைப் பேணிக்காக்கும் தொழிலைச் செவ்வனே செய்யும் செவிலித்தாய் தலைவியைக் காணாதது அறிந்து தேடிச் சென்றாள். அவ்வாறு செல்லும் வழி கொடிய பாலைவனமாயினும், செல்லும் வழி நெடுந்தூரமாக அமையினும் தன்துயர் பாராது தேடிச் சென் றாள். இதனைக் குறுந்தொகை

**காலே பரிதப் பினவே; கண்ணே**
**நோக்கி நோக்கி வாளிழந் தனவே** **(44:1-2)**

என்றது. முதுமையை உடையளாதலினாலும், பாலைநிலம் நடத் தற்கு அரியது ஆதலினாலும் நடந்து நடந்து செவிலிக்குக் கால் கள் ஓய்ந்தன.

தலைவனுடன் தலைவி சென்றதை அறிந்த செவிலித்தாய் 'என்மகள் போனவழி இன்பத்தைத் தருவதாக அமைக' என்று தெய்வத்தைப் போற்றி வேண்டுவதும் உண்டு. நம்மைப் பிரிந்து தலைவனோடு தலைவி சென்ற பாலைநிலம் சூரியன் வெயில் வீசாமல், மரத்தின் நிழல் பொருந்தி, மலையினிடத்தேயுள்ள சிறிய வழியில் மணல் மிகப்பரவப் பெற்று, குளிர்ந்த மழை பெய்த தாகுக என வேண்டுவாள்.

**ஞாயிறு காயாது மரநிழற் பட்டு**
**மலைமுதற் சிறுநெறி மணன்மிகத் தாஅய்த்**
**தண்மழை தலையின் றாக நந்நீத்துச்**
**சுடர்வாய் நெடுவேற் காளையொடு**
**மடமா அரிவை போகிய சுரனே. (குறுந். 378:1-5)**

## விறலியர்

சங்க காலச் சமுதாயத்தில் தாம் கற்ற கலையைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்த கலைஞர்கள் இருந்தனர். தம் உள்ளக் குறிப்புப் புறத்தே வெளிபபடுமாறு திறமையுடன் (விறல்பட) ஆடும் மகளிர் வாழ்ந்தனர். அவ்வாடல் மகளிரை அக்காலத்தில் விறலியர் என அழைத்தனர். விறலியர் என்போர் பாணருடனும், கூத்தருடனும் சென்று வள்ளல்களிடமும், மன்னர்களிடமும் நடனமாடிக் காட்டிப் பரிசு பெற்று வரும் தொழிலுடையவர். ஒன்பான் சுவைகளும் புறத்தே புலப்படுமாறு நடிக்கும் திறன் வாய்நத விறலியர் பலர் இருந்தனர் என்பதைச் சங்க நூல்கள் வாயிலாக அறிய முடிகின்றது. பண்டைய மன்னர்கள் விறலியரின் ஆடல் பாடல்களைப பாராட்டிப் பொன்னரி மாலையையும், சிறந்த அணிகலன்களையும் பரிசளித்தனர். புலவர் கோவூர்கிழாரின் பாடலினின்றும் விறலியர் நல்ல அழகுடையவராய் இருந்தனர் என்பதும் இவ்விறலியர்க்குச் சோழன் நலங்கிள்ளி மாட மதுரை அல்லது வஞ்சி மாநகரமே வேண்டுமாயினும் தரவல்லவன் என்பதும் அறியமுடிகின்றது

**பூவா வஞ்சியுந் தருகுவன்.. ...**
**ஒண்ணுதல் விறலியர் பூவிலை பெறுகென**
**மாட மதுரையுந் தருகுவன் (புறம் 32:2-5**

கோவூர் கிழாரின் பாடல்களிலிருந்து அக்காலத்தே மன்னர்களிடம் விறலியர் பெற்றிருந்த பெருஞ்சிறப்பினை உணரமுடிகின்றது.

சங்க நூல்களில் விறலியர்—கூத்தி, ஆடுமகள், ஆடுகளமகள் என்ற பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளனர். விறலியர் யாழ் வாசித தாற் போன்று இசைபாடும் சிறப்பினையும், நலம் சிறக்க ஆடும் பாங்கினையும் பெற்றிருந்தனர். இம்மகளிர் ஆடற்கூத்தியர்க்கி யன்ற கடமைகள் அனைத்தையும் நன்கு அறிந்தவர். மன்னன் அவையில் நடக்கும் முறையையும் அறிந்தவர். இனிய மிடற்றுப் பாடலைப் பாடவல்லவர். தொன்றுதொட்டு நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த முறையில் பிறழாதவர். இவர்கள் பாடி ஆடத் தொடங்குமுன் கடவுளை வாழ்த்துதலை மரபாகக் கொண்டிருந்தனர்.

இதனை மலைபடுகடாம்,

**மழையெதிர் படுகண் முழவுகண் இருப்ப**
**கழைவளர் தூம்பின் கண்ணிடம் இமிர**
**மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்**
**நரம்புமீ திறவாது உடன்புணர்ந்து ஒன்றிக்**
**கடவ தறிந்த இன்குரல் விறலியர்**
**தொன்றொழுகு மரபில் தம்மியல்பு வழாஅது**
**அருந்திறற் கடவுட் பழிச்சிய பின்றை**
**விருந்திற் பாணி கழிப்பி** **(532-39)**

எனப் பாடியுள்ளதனின்றும் அறியலாம்.

யாழ் நரம்பின் இசையுடன் ஒன்றாய் இயைந்து செல்லும் இனிய மிடற்றால் பாடும் விறலியர்க்குப் பெண் யானைகள் பரி சளிக்கப்பட்டன. இதனை,

**ஆடுசிறை யறுத்த நரம்புசேர் இன்குரல்**
**பாடு விறலியர் பல்பிடி பெறுக** **(பதி. 43:21-22)**

என்பதாலும், ஊர்களில் விழாக்களத்தில் அதிர்த்தெழுகின்ற ஓசை யைக் கூட்டுதலுடைய இனிய இசைக்கருவிகள் மிகுதியாக ஒலிப்ப ஆடுமகள் கழாய்க் கயிற்றிலே ஏறி ஆடுவாள் என்பதனை,

**சாறுகொள் ஆங்கண் விழவுக்களம் நந்தி**
**அரிக்கூட் டின்னியங் கறங்க ஆடுமகள்**
**கயிறூர் பாணி** (குறிஞ். 192-94)

என்பதாலும், நாடக அரங்கில் விறலியின் பின்நின்று மத்தளம் வாசிக்கப்படும் என்பதனை,

**ஆடுமயில் முன்ன தாகக் கோடியர்**
**விழவுகொள் மூதூர் விறலி பின்றை**
**முழவன்................** (அகம். 352:4-6)

என்பதாலும் அறிய முடிகின்றது.

விழா நாட்களில் கூத்தாட்டு அரங்கத்தில் புகுந்து ஆடுகின்ற கூத்தியர் தோற்றம் கபிலரால் அகநானூற்றுப் பாடலொன்றில் அருமையாக வருணிக்கப்பட்டுள்ளது. 'மூங்கிலில் வண்டுகளால் துளைக்கப்பட்ட துளையின் பக்கத்தே மேல்காற்றினால் எழுகின்ற இசையே அழகிய வேய்ங்குழலின் இசையாகவும், அருவியின் நீர்வீழ்ச்சியினால் எழுகின்ற ஓசையே மத்தளங்களின் செறிந்த முழக்கமாகவும், கூட்டமாகிய கலைமான்கள் தாழ ஒலிக்கும் கடிய ஓசையே பெருவங்கியம் என்னும் துளைக்கருவியின் இசையாக வும், மலைச்சாரலில் உள்ள வண்டுகளின் இசையே யா சையாக வும், இவ்வாறு கேட்பதற்கு இனியவாகிய பல்வேறு இசைகளை யும் கேட்டு ஆரவாரம் மிகுந்து 'குரங்குகளாகிய நல்ல அவையினர் வியப்புற்றுப் பார்க்கும்படி, மூங்கில்கள் வளர்தற்கிடனான பக்க மலைகளில் அங்கும் இங்கும் உலாவிக் கூத்தாடுகின்ற மயில் களுக்கு ஒப்பாகக் கூத்தியர் வருணிக்கப்பட்டுள்ளனர்'.

## *பாடினி*

பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தில் வாழ்ந்த விறலியர்கள் ஆடு வதில் வல்லவராய்த் திகழ்ந்தது போலவே பாடினி என்ற பெயரால் அழைக்கப்பட்ட பாண்குல மகளிர் இனிய இசைபாடுவதில் வல்லவ ராயிருந்தனர். இம்மகளிர் போர் முனையில் வெற்றிகொண்டு வாகை சூடி மன்னன் வரும்போது அவனது வெற்றியைப் பாடிப் புகழ்வர். அரசன் படையெடுத்துப் போகும்போது பாடினி படை யெடுப்பைப் பாடுவதும், அரசன் பாசறையில் தங்கியிருக்கும்போது

பாடினி அவன் வேற்படையைப் புகழ்ந்து பாடுதலும் உண்டு. மேலும் பாடினியர் போர்க்களத்திற்குச் சென்று புண்பட்டுத் துன்புறும் வீரர்களுக்கு இசைபாடி அத்துன்பத்தை மறக்கச் செய்தனர்.

**சான்று : உரவுக் களிற்றுப் புலாஅம் பாசறை**
**நிலவி னன்ன வெள்வேல் பாடினி**
**முழவின் போக்கிய வெண்கை (பதிற்று. 61:15-16)**

## பெண்பாற் புலவர்கள்

பண்டைத் தமிழ்ச் சமுதாய மகளிர் தம்வாழ்க்கைக்குத் தேவையான தொழில்களில் ஈடுபட்டது போலவே அறிவுசார் துறையில் ஈடுபட்ட பெண்பாற் புலவர்களும் இசைபட வாழ்ந்திருந்தனர். சங்க காலப் பெண்புலவர்களில் ஔவையார் தலைமை பெற்றவர். இவர் இளமையிலேயே கவிநலம் வாய்க்கப் பெற்றவர். பாண் குடியைச் சேர்ந்தவர். பெரும் வேந்தர்களின் புகழ்களை எல்லாம் இசைத்து இசைபட வாழ்ந்தவர். பேராசிரியர் ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை ''காக்கையூர்ப் பாடினியான நச்செள்ளையாரும், ஔவையாரும் பாண்மகளிருள் நல்லிசைப் புலமை பெற்ற மெல்லியற் சான்றோராவர். அவர்கள் முறையே ஆடுகோட் பாட்டுச் சேரலாதனாலும், அதியமான் நெடுமான் அஞ்சியாலும் சிறப்பிக்கப் பெற்ற திறத்தைப் பதிற்றுப் பத்தும், புறநானூறும் தெரிவிக்கின்றன'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் வாழும் மக்கள் அனைவரிலும் ஔவையாரின் பெயரைக் கேட்டறியாதார் இருக்க முடியாது. அதியமான் ஒருகால் நெடிது வாழச் செய்யும் நெல்லிக்கனியைப் பெற்று, அதனை இவர்க்குத் தந்து நெடிது வாழச் செய்தான். அதியமானின் நெடுமனைக்கண் இனிதிருந்து அவ்வப்போது இவர் அவனைப் பலபாட்டுக்கள் பாடிச் சிறப்பித்துள்ளார். அதியமான் பகைவரை வென்ற செய்திகளை நன்கு எடுத்துக் கூறியுள்ளார். அதியமான் பொருட்டு ஔவையார் தொண்டைமானிடம் தூது சென்றுள்ளார். அதியமான் மகன் பொகுட்டெழினி என்பான் பிறந்த காலை முதல், அவன் அரசனாய் விளக்கம் எய்துங்காறும் ஔவையார் இருந்திருக்கின்றார்.

காக்கையூர்ப் பாடினியார் எனும் பெண்பாற்புலவரும் சிறந்த புலவராய் விளங்கியவர். வீரச்சுவையும் காதற்சுவையும் விளங்க உரைக்கும் இவர் பாடல்கள் மிகச்சிறந்து விளங்குகின்றன.

அள்ளூர் நன்முல்லையார் தமிழில் நல்லிசைப் புலமைநிறை மெல்லியலாருள் ஒருவர். இவரின் நற்றமிழ்ப் புலமையை உணர வேண்டுமெனின் அகநானூற்றில் இவர் பாடிய பாடல்களையும் குறுந்தொகையில் இயற்றியுள்ள இன்கவிகளையும் கற்றுணர வேண்டும்.

குறமகள் இளவெயினி என்றொரு புலவர். இவர் ஏறைக் கோனைத் தலைவனாகக் கொண்ட குறமக்களுள் ஒருவராகலின் இளவெயினியார் எனக் குறிக்கப்படுகின்றார். இவர் இளமையி லேயே புலமைநலம் வாய்க்கப் பெற்றவர் (புறம்.157). பண்டைக் காலத் தண்டமிழ்ப் புலவருள் தாயங் கண்ணியார் என்பவர் ஒருவர். இவரது பாடல் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது.

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனின் பட்டத்தரசி பெருங்கோப் பெண்டு என்பார். அரசியேயானாலும் இவரும் ஒரு பெரும் புலவராய் விளங்கியவர் (புறம். 246). பெருங்கோழி நாய்கன்மகள் நக்கண்ணையார் என்பவரும் சிறந்த புலவர். இவர் பாடியதாக அகத்திலொன்றும், நற்றிணையிலிரண்டும், புறத்தில் மூன்றுமாக, ஆறுபாட்டுக்கள் உள்ளன.

## பேய்மகள் இளவெயினி

இவர் குறவர் குடியிற் பிறந்தவர். இவர் சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோவைப் பாடியுள்ளார். போர்க்களத்துப் பிணந்தின்னும் பேய்மகளிரை வியந்து பாடிய சிறப்பால் இளவெயினியார்க்குப் பேய்மகள் என்னும் சிறப்புப் பெயரமைந்ததாகல் வேண்டும். இளவெயினி என்பது இவர் இயற்பெயர்.

## பொன்முடியார்

சங்ககாலத்துப் பெண்பாற் புலவர் பெருமக்களுள் இவரையும் ஒருவராகக் கருதுவர். மறக்குடியில் பிறந்து நல்லிசைப்புலமை பெற்றுச் சான்றோரினத்துள் ஒருவராய் மறச்செயல்களைப் பாராட்டிப் பாடும் பண்புமிக்கவர்.

**மாறோக்கத்து நப்பசலையார்**

பாண்டிய நாட்டின் கொற்கை நகரைச் சூழ்ந்த பகுதி மாறோக்கம் என்பது. அந்நாட்டு மகளிருள் புலமையிற் சிறந்தவர் நப்பசலையார். இவரால் பாடப்பட்ட அரசர்கள் மூவர். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், மலையமான் திருமுடிக் காரி, மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன் என்போர்.

**வெண்ணிக் குயத்தியார், வெறிபாடிய காமக்கண்ணியார்** போன்ற வேறுசில சிறந்த பெண்பாற் புலவர்களும அக்காலத்தில் வாழ்ந்திருந்தனர். பழந்தமிழ்ச் சமுதாயத்தில் ஆண்பாற் புலவர் களுக்கு நிகரான சிறந்த பெண்பாற் புலவர்கள் இருந்தனர். இவர்கள் மக்களாலும், வள்ளல்களாலும், மன்னர்களாலும் போற்றப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டனர்.

# நிறைவுரை

**கருமமும் உட்படா போகமும் துவ்வாத்**
**தருமமுந் தக்கார்க்கே செய்யா — ஒருநிலையே**
**முட்டின்றி மூன்று முடியுமேல் அஃதென்ப**
**பட்டினம் பெற்ற கலம். (நாலடியார்: 250)**

கல்வியறிவு, ஒழுக்கங்களாகிய தகுதியுடையோர் பொருள்வரவுக்குக் காரணமான தொழில் முயற்சிகளில ஈடுபடுவர். ஈடுபட்டுச் செல்வத்தைப் பெருக்குவர். அதன் துணை கொண்டு இம்மை இன்பங்களை அனுபவித்து மனநிறைவு கொள்வர். அத்துடன் மறுமைப் பயனாகத் தகுதியுடையார்க்கு அறமுஞ் செய்வர். முயற்சியும், இன்பமும், அறமுமுடையனாய் வாழ்தலே அறிவுடைமையாகும் இக்கருத்திற்கு விளக்கமாய்த் திகழ்ந்தவர் பண்டைத் தமிழர்.

வரலாற்று முற்காலத்திலிருந்து பல்வேறு கைத்தொழில்கள் புகழ்மிக்க தொழில்களாகத் திகழ்ந்து வந்துள்ளன. இதற்கு

மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய இடங்களில் அகழ்ந்தெடுக்கப் பட்ட பொருள்கள் சான்றாக உள்ளன. பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியமும் சங்க கால நூல்களாகிய பாட்டும் தொகையும் தமிழரின் வாழ்வியலைச் சித்திரிக்கும் கருத்துக் கரு வூலங்களாகத் திகழ்கின்றன. அவற்றின் துணைகொண்டு பண்டைத் தமிழர்தம் வாழ்வை வளப்பெறச் செய்த தொழில்கள் எவை? அவற்றின் செய்முறைகள், பயன் ஆகியவை மேற் கூறப்பட்ட இயல்களில் விளக்கப்பட்டுள்ளன. இவற்றினின்றும் பண்டைத் தமிழர் தமது அறிவுக்கும், ஆற்றலுக்கும், சூழலுக்கும் ஏற்றவாறு தொழில் செய்து வாழ்ந்தனர் என்பதும், தொழிற் றிறமே மக்களது உயிராற்றலாகக் கருதப்பெற்றது என்பதும் பெறப்படுகின்றன.

தனிமனிதத் தேவைதான் அவன் வாழும் சமுதாயத் தேவை யாகின்றது. இந்த அடிப்படையில் அரும்பி மலர்ந்து பயன் தருவதே ஒவ்வொரு தொழிலுமாகும். 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' என்றார் வள்ளுவர். உணவினை நிறைய விளைவிக்கும் ஆற்றல் பெற்றவர் உழவர்கள். வாழ்க்கைக்கு வேண்டும் ஏனைய பொருள்கள் எல்லாவற்றையும் ஆக்கித்தர வல்லவர் பிறதொழி லாளர்கள். தம் முயற்சியால் தம்நாட்டிலுள்ள பொருள்களைப் பிறநாட்டிற்கு அனுப்பியும், பிற நாட்டிலுள்ளவற்றைத் தம் நாட் டிற்குக் கொண்டு வந்தும், கடல்வழியாகவும், நிலவழியாகவும் வாணிகஞ் செய்து பொருளீட்டுவார் வணிகர். இவர்கள் எல்லாம் தத்தம் தொழில்களில் தளராது உழைத்து வந்தமையால் தமிழர் வாழ்வு நாகரிக முறையில் நலம் பெற்றுத் துலங்கியது. பயிர்த் தொழிலும், நெசவு, தச்சு முதலிய கைத்தொழில்களும், வாணிக மும் ஆகிய இவையே பொருள் வருவாய்க்குரிய தொழில்களாகவும் விளங்கின. எனினும் இத்தொழில்களில் நாட்டம் கொள்ளாமல் அறிவால், உள்ளத்து உணர்வால் மேற்கொள்ளற்குரிய அறிவுத் துறையில் ஈடுபட்டு உழைப்பவர் புலவர், பாணர் போன்றார். இவர்கள் தாம் கற்றுவல்ல கலைத்திறத்தால் மக்களுடைய மனப் பண்புகளை வளர்த்தலைத் தம்முடைய நோக்கமாகக் கொண்டு வாழ்ந்தனர். எனவே தெள்ளிய அறிவினராகிய கலைத் தொழில் வல்லார்க்குப் பொருட்செல்வம் ஈட்டுவதில் ஈடுபடமுடியாத நிலை அமைந்தது. அதனால் இவர்களுக்கு உணவும் உடையும் பிறவும் வழங்கிப் போற்றுவது மக்களது கடமையாகக் கருதப்பட்டது. இவ்

விருவேறு வகையான இயல்பினைத் திருவேறு; தெள்ளியராதலும் வேறு எனவரும் வள்ளுவர் வாய்மொழியால் அறியலாம். என்றாலும் இவ்விரு இயல்புகளை ஒருசேரப் பெற்று வாழ்ந்த பெருமக்கள் பலர் பண்டைத் தமிழகத்தில் வாழ்ந்திருந்தனர் என்பதைச் சங்கப்பாடல்கள் உணர்த்துகின்றன.

தமிழகம் மட்டுமன்றி பண்டைக் காலத்தில் உலகெங்கும் உழவுக்கு அடுத்த நிலையில் கைத்தொழில்களே முக்கியத் தொழில்களாக இருந்தன. இயந்திரங்களின் உதவியுடன் செய்யப்படும் தொழில்முறை தோன்றும் வரையில் கைத்தொழில்கள் உலகச் செல்வாதாரத்தின் மூலநாடியாக இருந்து வந்தன.

அக்காலத்தில் கைத்தொழில் வல்லார் குறைந்த மூலதனத்தைக் கொண்டு தம் எளிய கருவிகளையும் திறமையையும் பயன்படுத்தித் தத்தம் இருப்பிடத்திலேயே தொழில் செய்தனர். தொழிலில் ஏற்படும் உயர்வுக்கும் தாழ்வுக்கும் தொழிலாளியே பொறுப்பானவன். தொழிலாளிக்குத் தன் ஆக்க வேலையில் ஆர்வமும் அக்கறையும் உண்டு. அவனுக்கு அவனுடைய மனைவி, மக்கள் உடனிருந்து உதவினர். தொழிலாளியின் தனிமுயற்சி, உழைப்பு, பொறுப்பு இவற்றுடன் அவனது குடும்பத்தினரின் கூட்டுழைப்பு ஆகியவை பண்டைத் தமிழர் தொழில்களின் தனிப்பண்புகளாக விளங்குகின்றன.

காலப்போக்கில் மாறுதல்கள் ஏற்பட்டன. தேவைகள் மிகுந்தன. வேண்டிய பொருட்களை எல்லாம் உடனுக்குடன் மனித ஆற்றலால் செய்து முடிக்க முடியாதென்பதை உணர்ந்தனர். இதன் விளைவாகக் குறைந்த நேரத்தில் மிகுந்த பொருளை உற்பத்தி செய்யக்கூடிய இயந்திர சாதனங்களையும், கருவிகளையும, அவற்றை இயக்கக்கூடிய வழிவகைகளையும் கண்டறிந்தனர். இவ்வாறாக இயந்திரத் தொழில்முறை தோன்றியது. இதன் வளர்ச்சியாக, செல்வந்தர்கள் தம்பணத்தை முதலீடு செய்து தொழிற்சாலைகள் நிறுவினர். முன்னர்த்தம் தொழிலுக்குத் தாமே உரியவராய்த் தம்பொருளைக் கொண்டு தாம் வாழும் இடங்களிலேயே சுதந்திரமாய்த் தொழில் செய்துவந்த தொழிலாளிகள் இப்போது தொழிற்சாலை என்ற தனியிடத்தில் முதலாளிக்காக, முதலாளியின் கருவிகளைக் கொண்டு வேலை செய்து அன்றாட

ஊதியமோ, மாத ஊதியமோ பெறும் தொழிலாளிகள் ஆயினர். எனவே இயந்திரத் தொழில்முறை தோன்றியதும் தொழிலுக்கு உரியவர் வேறு, அதைச் செய்பவர் வேறு என்ற வேறுபாடு ஏற்பட்டது. தொழிலுக்கெனத் தனியிடம் ஏற்பட்டது. பொருள்கள் பெருமளவில் உற்பத்தி செய்யப்படும்நிலை ஏற்பட்டது. தொழிற் சங்கங்கள் நிறுவப்பட்டன. இன்றைய தொழில் துறையில் மனிதனின் உடலும் உள்ளமும் ஒன்றாகச் செயல்பட வேண்டியது இன்றியமையாதது. இக்கால நடைமுறை வழக்கில் எந்த முயற்சி சமுதாயத்தின் தேவையை நிறைவு செய்கிறதோ, நல்ல பண் பாட்டினை உருவாக்குகிறதோ அது ஆக்கவளமுள்ள உழைப்பாகக் கொள்ளப்படுகிறது.

எனினும் இத்தகைய புதிய மாறுதல்களால் பண்டைய மரபுத் தொழில் முறை அடியோடு மறைந்து விடவில்லை. கிராமங்களில் இன்றும் கொல்லர், தச்சர், பாய் கூடை பின்னுவோர் முதலிய பரம்பரைத் தொழிலாளர் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களைச் செய்து வருகின்றனர். பயிர்த்தொழில் அன்று போலவே இன்றும் இன்றியமையாத தொழிலாகப் பேணப் படுகிறது.

தொழில்கள் பண்டைத் தமிழரிடையே பெற்றிருந்த சிறப்பு, ஒவ்வொரு மனிதனும் செய்யும் தொழிலே தெய்வம் என வாழ்ந்த நிலையை வகையுறக் காட்டவல்லது. தனிமனித வளர்ச்சி சமுதாய வளர்ச்சியாகலான் அதே போக்கில் பண்டைத் தமிழகத்தில் நல்வித்துக்களாக விதைக்கப்பட்ட ஒவ்வொரு தொழிலும் இக் காலத்தில் ஆல்போல் தழைத்து வளம்பெற்றிருப்பதைக் காணலாம். இனி வருங்காலத்திலும் உலக வாழ்க்கை பல்லாற்றானும் சிறப் புறக் காரணமானவை தொழில்கள். தொழிலில்லா நிலையில் இல்வாழ்க்கை இயக்கமின்றி, 'மரப்பாவை சென்று வந்தற்று' எனக்கூறும் வகையில் அமைவதை நடைமுறையில் நாம் காண் கிறோம் இதைச் சிந்தித்து முதலாளி தொழிலாளி என்ற கருத்து வேறுபாட்டிற்கு இடந்தராமல், வளமான வாழ்வமைய வழிவகுக்கும் தொழில்களைக் கண்ணுங்கருத்துமாய் வளர்த்து நிலைநிறுத்துதல் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும்.

உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?

# சொல்லடைவு

(எண் - பக்க எண்)


அகல் 91
அகவர் 283
அகவன் மகளிர் 302
அகழி 268
அகில் 219
அங்காடிகள் 237
அச்சு 1[illegible]2
அட்டிற்சாலை 155
அட்டிற்றொழில் 153
அடார் 58, 71
அடிபுதை அரணம் 116
அடியோர் 5, 6, 10
அடையல் 116
அடையாளக்கொடி 238
அண்ணல் 6
அணிகலத்தொழில் 97
அத்திரி 212
அந்தணர் 5, 6, 7 165
அம்பி 127, 211
அமைச்சர் 171
அரக்கு 64
அரசர் 5, 7, 8, 167
அரசியல்பணி 272
அரண் 113
அரண்மனை 266
அரம் 99
அரிகால் 53
அரிசி 220
அரியல் 149
அரியல் பெண்டிர் 298
அல்லங்காடி 240
அவரை 65
அளவை 243
அறங்கூறவையத்தார் 185
அறிவர் 187
அறிவுசார் தொழில்கள் 39
அறுதொழில் 166
அறுவடை 51, 59
அறுவை 78
அறுவை மருத்துவம் 199
ஆசான் 1[illegible]0
ஆசிரியர் 188
ஆட்சிமுறை 169
ஆம்பி 70
ஆய்மகள் 22, 289
ஆயர் 6
ஆயுதங்கள் 201
ஆவணமாக்கள் 190
ஆளில்பெண்டிர் 301
ஆறலைக் கள்வர் 32, 33, 125
இசைப்பாணர் 271
இஞ்சி 68
இஞ்சிவேர் 220
இட்டிகை 89

இடும்பர்வேலி 58
இடையணிகள் 108
இதை 42
இயவர் 282
இலவமரம் 77
இழிசினன் 164
இறக்குமதி 30, 226
இன்னா வைப்பு 31
உண்கலம் 139
உணா 4
உப்பு வணிகர் 31, 134, 213
உப்பு விற்பவர் 242
உப்பு விற்றல் 295
உமணப்பெண்டிர் 211
உமணர் 134
உல்கு செய்வோர் 235
உலக்கைப் பாட்டு 73
உலோகத் தொழில் 95
உவர்நீர் 157
உவலைக் கூவல் 159
உழத்தியர் 24
உழவர் 6, 24
உழவியல் முறைகள் 47
உழவுத் தொழில் 6, 10, 40
உழுகொழு 95
உழுதல் 47
உழுந்து 62
உளி 85
உறி 145
உறிக்கா 145
உறை 112
ஊசிகள் 95
ஊதுலைக் கருவி 115
ஊர்க்காவலர் 181
ஊராட்சி 190
எயிற்றியர் 291
எயினமறவர் 33
எயினர் 6
எருமை 49
எருவிடுதல் 49
எழுத்துநிலை மண்டபம் 250
எள் 64
எறியுளி 128
ஏவன்மகளிர் 301
ஏற்றம் 70
ஏற்றுமதி 30, 224
ஐந்திணை 2
ஐம்படைத்தாலி 98
ஐவனநெல் 54
ஒற்றர் 174
ஓலைத்தொப்பி 138
ஓலைத் தொழில் 138
ஓலைப்பாய் 140
ஓவம் 248
ஓவியத்தொழில் 248
ஓவியம் 248
ஓவு 248
கஞ்சகாரர் 96
கட்டடத் தொழில் 263
கட்டடப்பணி 265
கட்டடவகை 264
கட்டு 303
கட்டுப் பார்த்தல் 194
கட்டுவிச்சி 194, 303
கடம்பன் 164
கடியுண் கடவுள் 21
கடைசியர் 24
கடையர் 24

கண்ணுள் வினைஞர் 249
கண்ணுளர் 284
கண்ணேணி 20
கணந்துள் 122
கணந்துள் பறவை 33
கணிகையர் 296
கணியம் 191
கணியன் 191
கணிவர் 188
கணை 71
கத்திரிகை 95
கப்பல் 227
கம்மியன் 101
கயிறுகுறு முகவை 158
கயிறு திரித்தல் 144
கர்மபூமி 210
கருங்கலன் 90
கருப்பக்கிருகம் 267
கருப் பொருள் 34, 35
கரும்பு 66
கரும வினைஞர் 180
கருவாப் பட்டை 220
கலங்கரை விளக்கம் 232
கலஞ்செய்கோ 88
கலப்பை 69
கலன் 90
கலிங்கம் 241
கலையியல் 247
கவசம் 113
கவர்காற் கூளியர் 205
கழங்கு 143
கழங்கு குறிபார்த்தல் 160
கழங்கு பார்த்தல் 194
கழனி 43
கழுத்தணிகள் 106
கழுதைகள் 21
கழுதையேர் 63
கள் 148
கள் வடித்தல் 150
கள் விற்றல் 151
கற்சிறை 268
கற்பாறை 157
கன்னல் 90
காத்தல் 50
காரகல் 91
காரோடன் 161
கால்நடை பேணல் 117
காலணிகள் 109
காவலர் 58, 181
காளை 32
காற்சரி 100
கானம் 42
கானவர் 10
கிடுகு 112
கிண்கிணி 100
கிணறு 156
கிணை 72
கிலுகிலி 141
கிழங்கு அகழ்தல் 10
குடவோலை 91, 190
குடை 138, 139
குடைநாட்கோள் 191
குதிர் 72
குதிரைப்படை 206
குந்தாலி 159
குப்பி 91
குயம் 51, 72
குயவன் 88

குயிலுவர் 284
குலத்தொழில் 132
குழிசி 90
குளிர் 71
குறத்தி 10
குறிஞ்சி 4, 19
குறிஞ்சி நிலம் 42
குறுநீர்க் கன்னல் 91
கூடை 139
கூத்தர் 5, 280
கூத்தர் ஆடல் 281
கூலம் விற்போர் 242
கூவம் 156
கூவல் 156
கூவலர் 155
கூளம் 52
கூளிப்படை 205
கெடிறுமீன் 213
கேடகம் 112
கேணி 156
கைச்சரடு 112
கைத்தொழில்கள் 38
கையணிகள் 107
கைவினை 138
கைவினைத் தொழில்கள் 39
கொட்டம் 139
கொட்டில் 93
கொடிச்சி 10
கொடுமணம் 105
கொண்கன் 25
கொண்டிமகளிர் 302
கொல்லர்கள் 92
கொல்லுத்தொழில் 92
கொல்லை 42
கொலைவில் ஆடவர் 33
கொலைவில் எயினர் 33
கொள் 63
கொள்கலம் 100
கொள்ளை வல்சி 205
கொற்றுறை 92
கோங்குமரம் 77
கோடியர் 282
கோரை 49
கோழிப்பண்ணை 41
சக்கிலியன் 161
சங்குவளை 137
சங்கெடுத்தல் 136
சமன்செய் வாணிகம் 244
சல்லியக் கிரியை 199
சலவைத் தொழில் 152
சாடி 90
சாயப்பாக்கு 144
சாலிநெல் 55
சித்திரம் 249
சிதட்டுக்காய் 64
சிதலர் 233
சிமிலி 147
சிலம்பன் 10
சிற்பக்கலை 155
சிற்பத்தொழில் 258
சிற்பநூல் 266
சிறை 78, 300
சுங்கம் 234
சுடுமண் 89
சுண்ணம் 144
சுதையோவியம் 253
சுரிதகம் 106
சுருங்கை 269

சுவரோவியம் 253
சூதர் 273
சூளை 88
செங்கல் 89
செதுக்குச் சித்திரம் 257
செந்தாழி 90
செந்நெல் 56
செம்பு 241
செம்பு கொட்டிகள் 96
செம்புலம் 21
செம்மண் 157
செய்தி 4, 5
செருப்பு 116
செற்றை 78, 300
சேர்ப்பன் 25
சோனகர் 223
ஞெகிழி 71
தச்சர் 82
தச்சுத்தொழில் 82
தசும்பு 90
தட்டை 71
தண்ணுமை 51, 72
தந்தம் 262
தரிசு நிலம் 158
தழல் 71
தளம்பு 49, 70
தாதெரு 49
தாமா 198
தாழி 89
திமில் 127
திமிலர் 25
தினைப்பயிர் 60
தினைப்புனங்காத்தல் 290
தீம்புழல் 239
துகிலிகை 256
துடவை 42
துடியன் 163
துருத்தி 93, 115
துளர் 70
துளைக்கருவிகள் 286
துளைக்காசு 235
துறைமுகங்கள் 228
துறைவன் 6, 25
தூது 176
தூதுவர் 175
தூதுவன் 177
தெய்வம் 4
தெய்வவுத்தி 106
தென்னை 65
தேர் ஓட்டுபவன் 162
தேர்ப்படை 206
தேனழித்தல் 10
தைக்குந்தொழில் 81
தொகுவாய்க் கன்னல் 91
தொடலைவாள் 95
தொடுகூடு 72
தொடுதோல் 116
தொண்டகப் பறை 59
தொய்யகம் 106
தொய்யில் 256
தொழில் 37
தொழில் மழை 45
தோட்டி 95, 162
தோணி 127, 211
தோப்பிநெல் 54
தோரைநெல் 55
தோல் 112
தோல்தொழில் 111

தோளணி 116
தோற்பை 115
நகைப்புலவர் 284
நடுகல் 259
நவமணி 144
நவியம் 95
நறவு நொடை 213
நறும் பிழி 148
நாஞ்சில் 69
நாணயங்கள் 235
நாளங்காடி 239
நாளேரடித்தல் 191
நாழிகைக் கணக்கர் 195
நாற்று நடுதல் 50
நிமித்தம் பார்த்தல் 194
நியமம் 239
நிலஞ்சார் தொழில்கள் 39
நீர் நிலை 44
நீர்பாய்ச்சுதல் 49
நுளைத்தியர் 25
நுளையர் 6
நூல் உறி 147
நூல் தொழில் 146
நூலேணி 147
நெசவுத் தொழில் 76
நெட்டை 200
நெடுவேல் 25
நெய்தல் 4, 25, 49
நெய்யோவியம் 253
நெல் 212
நெல் வகைகள் 53
நெல் விற்போர் 242
நெற் பொலி 52
நெற்போர் 52
பச்சை 114
பட்டறை 115
படுக்கை 116
படைகள் 201
பண்டசாலை 232
பண்டமாற்று 211, 213
பணிக்களரி 92
பத்தல் 158
பந்தர் 105
பந்து 143
பயறு 63, 213
பயிர்க்காத்தல் 58
பயிர் செய்தல் 41
பயிர்த்தொழில் 39
பரதவர் 132
பரதவர்கள் 30
பரிசை 112
பருத்தி 66
பருத்திப் பெண்டிர் 78, 300
பலகை 112
பவளம் 138
பவழம் 227
பழனம் 43
பற்றவைத்தல் 99
பறி 140
பறையன் 164
பன்றிப் பத்தர் 70
பனை யோலை 138
பஃறி 211
பாணர் 5, 271, 277
பாத்திரத் தொழில் 95
பாய் 140
பார்வை 122
பால் பண்ணை 41

பாலை 4, 31
பாவை 142
பிழி 149
பிறதொழில்கள் 39
பிறை 106
புட்டகம் 81
புட்டில் 139
புடமிடல் 104
புரம் 270
புரோகிதர் 179
புரோசு 180, 181
புலம்பன் 25
புலவர் 196
புலிநிறக் கவசம் 113
புலைத்தி 299
புலைத்தியர் 153
புறப்புண் 209
புன்செய்ப் பயிர் 56
புனவன் 10
பூட்டைப்பொறி 70
பூம்பொறி 113
பெருந்தேன் 21
பெரும்பயறு 53
பேழை 105
பை 243
பைகள் 115
பொடியூதி 100
பொம்மை 140
பொருநர் 5, 278
பொருப்பன் 10
பொற்காசுகள் 104, 235
பொற்கொல்லர் 99
பொற்கொல்லன் 104
பொறி 102
பொன்னரி மாலை 105
போக பூமி 210
போர்த் தொழில் 200
போர்மறவர் 204
மகிழ்நன் 6
மகுளி 64
மகுளிநோய் 64
மஞ்சள் 68
மட்கலத்தொழில் 86
மட்பாண்டங்கள் 87
மடி 78
மண்டை 90, 145
மண்டைப் பாணர் 271
மணலில் வரைதல் 252
மத்திகை 95
மரங்கொல் தச்சன் 82
மரத்தச்சர் 82
மரப்பொம்மை 141
மரம் வளர்த்தல் 41
மருத்தன் 198
மருத்துவர் 198
மருதங்காய் 98
மருதம் 4, 21
மலர் விற்போர் 242
மலைத்தேன் 21
மலை நெல் 54
மழைக்கோள் 193
மறவர் 32
மறுகால் 60
மாகதர் 284
மால்பு 20
மிலேச்சர் 184
மிளகு 68, 225
மிளகுக்கொடி 68

மிளகு மாலை 98
மிளகு மூட்டை 212
மீண்டும் பயிரிடல் 53
மீன் உணக்கல் 294
மீன் சீவுதல் 273
மீன் நெய் 214
மீன் பிடித்தல் 127, 131
மீன் விற்போர் 242
மீன் விற்றல் 292
மீன் வேட்டம் 126, 128
முஞ்சம் 106
முடக்கு மோர்ரம் 107
முடந்தை நெல் 55
முத்து 214, 236
முத்துக் குளித்தல் 135
முத்துச் சிப்பி 214
முதை புனம் 42
முப்போகம் 46
முரம்பு 158
முல்லை 4, -1
முறம் 139
மூங்கில் நெல் 34
மூசை 102
மெய்காப்பாளர் 184
மெய்புதை அரணம் 113
மோசை 108
யவனர் 223
யாழ்ப்பாணர் 271, 276
யானைப் படை 205
யானைப் பாகன் 161
வட்டி 139
வணிகர் 5, 9, 11
வணிகர் கூட்டம் 234
வயிரியர் 282
வரகு 61
வரி விதித்தல் 234
வரைவின் மகளிர் 296
வலவன் 163
வள்ளைப் பாட்டு 73
வளையல் 242
வாணிகம் 209
வார்ப்புத் தொழில் 102
வாழ்முள்வேலி 58
வாழ்வியல் தொழில்கள் 83
வாள் 72
வாள்நாட்கோள் 191
வான்பூ 67
விடலை 6, 31
விரலணி 107
விரிச்சி 194
விரிச்சி கேட்டல் 304
விலைஞர் 242
விலைநலப் பெண்டிர் 298
விழுத்தொழில் 178
விழுப்புண் 207
விளைநிலம் 42
விற்றல் 134
விறகு வெட்டுவோர் 161
விறலி 278
வினைவலர் 5, 6, 10
வீளை 118
வீளையொலி 124
வெண்ணெல் 56
வெண்பூ 67
வெண்மீன் 193
வெதிர்நெல் 54
வெள்ளி 110
வெற்பன் 6
வெறி அயர்களன் 160
வெறியாடுதல் 190
வேட்கோச்சிறார் 88
வேட்டுவர் 6
வேட்டை நாய் 124
வேட்டையாடல் 122
வேதாளிகர் 284
வேலன் 159
வேளாண் 40, 41
வேளாண் மாந்தர் 40
வேளாண்மை 40
வேளாண்மையில் இசை 7
வேளாளர் 5, 6, 9, 40
வைக்கோல் 52
வைசியன் 9

# பிழைதிருத்தம்

| பிழை | திருத்தம் | பக்கம் |
| --- | --- | --- |
| மனையே | மணையே | 7 |
| வினைவல | வினைவலர் | 10 |
| கடற்கரை | கடற்கரைப் | 16 |
| ணெடுவரை | னெடுவரை | 21 |
| பெருஞ்சினத்தில் | பெருஞ்சினத்தால் | 27 |
| புறம். 338.2 | புறம் 338.1 | 49 |
| நீர் ந்தெவ்வு | நீர்த்தெவ்வு | 50 |
| தோயாபூதுகில் | தோயாப்பூந்துகில் | 79 |
| மாரிகுன்ற | மாரிக்குன்ற | 84 |
| செலனை | செலவினை | 88 |
| போலவன் | போலவவன் | 88 |
| விறலிய | விறலியர் | 106 |
| செல்லப்படுவதோர் | செய்யப்படுவதோர் | 108 |
| ஒலிம்ப நற்.110:45) | லிப்ப(நற். 110:5 | 109 |
| வேய்பவில் | வேய்பயில் | 12 |
| பாறை | பாவை | 143 |
| களாப்பழ | களாபபழப் | 151 |
| ஊவலல | உவலல | 156 |
| நிறைந்து | நிறைதது | 159 |
| படைகல | படைக்கல | 177 |
| சோர்பதள் | சோர்பதன் | 181 |
| பெய்ககாப்பாளர் | பெய்காப்பாளர் | 184 |
| கயிரிட்டு | கயிறிட்டு | 195 |
| குடைத்துள்ள | கிடைததுள்ள | 231 |
| மலைநிலத்தி | மலைநிலத்தில் | 245 |
| அகலிலும் | அகிலும் | 245 |
| பாட லடிகளுல் | பாடலடிகளுள் | 266 |

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | சமயச் சொல்லகராதி | ... 35-00 |
| 2. | தொல்காப்பியம்-உரியியல் | ... 20-00 |
| 3. | மங்கலதேவி கண்ணகி கோட்டம் | ... 15-00 |
| 4. | தமிழில் கதைப்பாடல் | ... 25-00 |
| 5. | வாத்திய மரபு | ... 20-00 |
| 6. | குத்பு நாயகம் ஆய்வுரை | ... 15-00 |
| 7. | உ. வே. சா. ஒரு தமிழ் வாழ்வு | ... 15-00 |
| 8. | தமிழ் தந்த வ. உ. சி. | ... 15-00 |
| 9. | தொல்காப்பியம்-எச்சவியல் | ... 45-00 |
| 10. | மறைமலையடிகளார் தனித்தமிழ்க் கொள்கை | ... 15-00 |
| 11. | உலக முதன்மொழி தமிழ் | ... 12-00 |
| 12. | மகாமதிப்பாவலர் | ... 11-00 |
| 13. | உ. வே. சா. இலக்கணப் பதிப்புகள் | ... 12-00 |
| 14. | தமிழர் கூத்துக்கள் | ... 25-00 |
| 15. | செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார் | ... 15-00 |
| 16. | மருந்து செய்முறைகள் | ... 45-00 |
| 17. | அகலமும் ஆழமும் | ... 12-00 |
| 18. | தமிழ் நாவல்கள் (அகர வரிசை) | ... 40-00 |
| 19. | தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் | ... 35-00 |
| 20. | எண்பத்திரண்டில் தமிழ் | ... 90-00 |
| 21. | தமிழர் திருமணம் | ... 25-00 |
| 22. | மொழி பெயர்ப்பியல் | ... 10-00 |
| 23. | நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள் | ... 15-00 |
| 24. | செங்கை மாவட்ட ஊர்ப்பெயர்கள் | ... 25-00 |
| 25. | விவிலியம்-திருக்குறள்-சைவசித்தாந்தம்-ஓர் ஒப்பாய்வு | ... 20-00 |
| 26. | டாக்டர் உ.வே.சா. காப்பியப் பதிப்புகள் | ... 10-00 |
| 27. | தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வு | ... 10-00 |
| 28. | இனிக்கும் இராசநாயகம் | ... 12-00 |
| 29. | பாவாணரும் தனித்தமிழும் | ... 50-00 |
| 30. | இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்-தொகுதி-2 | ... 22-00 |
| 31. | தமிழர் இசை | ... 70-00 |
| 32. | இளங்கோவின் இலக்கிய உத்திகள் | ... 12-00 |
| 33. | வர்மசூத்திரம் | ... 10-00 |
| 34. | தமிழ் இலக்கியக் கொள்கை-தொகுதி-9 | ... 20-00 |
| 35. | தொல்காப்பியம்-வினையியல் | . 20-00 |
| 36. | தன்வந்தரி குழந்தை வாகடம் | ... 14-00 |
| 37. | தொல்காப்பியம்-பெயரியல் | ... 12-00 |
| 38. | தமிழரின் தாயகம் | ... 10-00 |
| 39. | தொல்காப்பியம்-விளிமரபு | ... 6-00 |
| 40. | தொல்காப்பியம்-வேற்றுமை மயங்கியல் | ... 12-00 |
| 41. | இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்-தொகுதி-1 | ... 12-00 |
| 42. | உ. வே. சா. சங்க இலக்கியப் பதிப்புகள் | ... 10-00 |
| 43. | இஸ்லாம் வளர்த்த தமிழ் | ... 15-00 |
| 44. | திராவிட மொழி இலக்கியங்கள் | ... 35-00 |
| 45. | தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள் | ... 12-00 |
| 46. | தமிழ்ச்சுவடிகள் அட்டவணை | ... 6-00 |
| 47. | Tamilnadu-Bengal Cultural Relations | ... 35-00 |
| 48. | Tamil Verse in Translation | ... 40-00 |
| 49. | Education & Vocation (Heritage of the Tamils) | ... 50-00 |
| 50. | Tolkappiyam—Phonology & Morphology) | ... 25-00 |
| 51. | Heritage of the Tamil - Temple Aris | ... 50-00 |
| 52. | Karaikkal Ammaiyar | ... 6-00 |
| 53. | Siddha Medical Manuscripts in Tamil | ... 8-00 |
| 54. | A Tamil Reader . vol 1 & 2 | ... 65-00 |